
# 1970 அவ்யக்த முரளி



**<u>பொருளடக்கம் - 40</u>**

**18.01.1970 சம்பூர்ண வில் (அர்ப்பணம்) செய்வதினால் வில் பவரின் (மனோபலம்) பிராப்தி!**

**22.01.1970 கடைசி பாடம் -மனோபாவங்களை அறிதல்!**

**23.01.1970 சேவையில் வெற்றி பெறுவதற்கான யுக்திகள்!**

**24.01.1970 பிராமணர்களின் முக்கிய தொழில் சமர்ப்பணம் செய்வது, செய்விப்பது!**

**25.01.1970 நினைவுச்சின்னத்தை நிலையாக வைப்பதற்கான விதி!**

**26.01.1970 நினைவு யாத்திரையின் சம்பூர்ண ஸ்திதி!**

**02.02.1970 ஆன்மீக சக்தியை பகுத்தறிவது!**

**05.03.1970 ஜலம் ஊற்றுவது எனில் உறுதிமொழி எடுப்பது! (சிவ ஜெயந்தி)**

**23.03.1970 உண்மையான ஹோலி கொண்டாடுவது என்றால் நடந்தவற்றை நடந்து முடிந்ததாகக் கருத வேண்டும்!**

26.03.1970 மகாரதியின் சிறப்பு மற்றும் கடமை!

02.04.1970 சம்பூர்ண ஸ்திதியின் அடையாளங்கள்!

05.04.1970 அனைத்து கருத்துகளின் சாரம் -பிந்து!

14.05.1970 சமர்ப்பணத்தின் ஆழமான பொருள்!

21.05.1970 வேறுபாடுகளை அகற்றுவதற்கான வழி!

28.05.1970 தாவி முன்னேறிச் செல்வதற்கு ஒளியாக (லேசாக) ஆகுங்கள்!

29.05.1970 சமீப ரத்தினங்களின் அடையாளங்கள்!

07.06.1970 திவ்ய மூர்த்தி ஆவதற்கான விதி!

11.06.1970 உலகத் தலைவர் ஆவதற்கான சாதனம்!

18.06.1970 விருத்திக்கான கால அட்டவணையின் விதி!

19.06.1970 திரிமூர்த்தி ஒளிகளின் சாட்சாத்காரம்!

25.06.1970 வியக்த மற்றும் அவ்யக்த வதனத்தின் மொழியில் வேறுபாடு!

26.06.1970 காமதேனு என்பதன் அர்த்தம்!

29.06.1970 சமர்ப்பணத்தின் விசால ரூபம்!

02.07.1970 அமைதி பலத்தின் பிரயோகம்!

11.07.1970 சங்கமயுகத்தின் டிகிரி (பட்டம்) மற்றும் எதிர்காலத்தின் பிராப்தி!

24.07.1970 பிந்து ரூப ஸ்திதி (நிலை) எளிதாக எப்படி ஆவது?

27.07.1970 அவ்யக்தம் ஆவதற்கான முக்கியமான சக்திகளின் தாரணை!

30.07.1970 மகாரதி என்றால் மகான் நிலை!

06.08.1970-1 பந்தன்முக்த் ஆத்மாவின் அடையாளங்கள்!

06.08.1970-2 திருஷ்டி மூலமாக சிருஷ்டியின் படைப்பு! (டீச்சர்ஸ் டிரைனிங் வகுப்பு -தொடக்க விழா)

22.10.1970 (full) முழுமையின் அடையாளம் (flawless) குறையில்லாத நிலை!

**23.10.1970 மஹாரதி ஆவதற்கான புருஷார்த்தம்!**

**29.10.1970 தீப மாலையின் (தீபாவளி) உண்மையான ரகசியம்!**

**01.11.1970 தந்தைக்குச் சமமாக ஆவதற்கான வழிகள்!**

**05.11.1970 காலதாமதம் செய்வது ஆபத்தானது!**

**30.11.1970 வொர்க்கர்ஸின் (கடமையாற்றுபவர்களின்) அதிசயமான சர்க்கஸ்!**

**03.12.1970 மாயாவை எதிர்கொள்ள ஆசைகளை தியாகம்!**

**05.12.1970 உறுதி மொழி கொடுப்பவர்களுக்கு மாயாவின் சவால்!**

**09.12.1970 முயற்சியின் முக்கிய ஆதாரம் கேட்சிங் பவர்!**

**31.12.1970 அமிர்தவேளையில் இருந்து பரிவர்த்தனை சக்தியின் பிரயோகம்!**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

# 18.01.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா, மதுபன்

# சம்பூர்ண வில் (அர்ப்பணம்) செய்வதினால் வில் பவரின் (மனோபலம்) பிராப்தி!

இன்று எதற்காக அழைத்திருக்கிறோம்? இன்று பாப்தாதா என்ன பார்த்துக் கொண்டிருக்கிறார்? ஒவ்வோரு நட்சத்திரத்தையும் எந்த வடிவத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறோம்? நட்சத்திரங்களிலும் என்ன விசேஷத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்? ஒவ்வோரு நட்சத்திரத்தின் சம்பூர்ணத்தின் அருகாமையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நான் சம்பூர்ணத்தின் எவ்வளவு அருகில் வந்திருக்கிறேன் என்று உங்களை நீங்களே தெரிந்திருக்கிறீர்களா? சம்பூர்ணத்தின் அருகில் வந்து விட்டோம் என்று எப்படி தெரிந்து கொள்வது?. அனைத்து விஷயங்களை அனைத்து விதத்திலும், அனைத்து வடிவங்களிலும் தெரிந்து கொள்ள முடியும். இது தான் சம்பூர்ணத்தை தெரிந்து கொள்வதாகும். இன்று முழு நாளிலும் என்ன என்ன நினைவு வந்தது?

சித்திரம் (உடல்) நினைவு வந்ததா? அல்லது சரித்திரம் (மேலான நடத்தை) நினைவு வந்ததா? உடலின் கூடவே வேறு நினைவு வந்ததா? (படிப்பு நினைவு வந்தது, டிராமா நினைவு வந்தது, உடலின் கூடவே உடலற்றதும் நினைவு வந்ததா? எவ்வளவு நேரம் உடலின் நினைவில் இருந்தீர்கள். எவ்வலவு நேரம் உடலற்றதின் இருந்தீர்கள் அல்லது இரண்டின் னைவும் கலந்திருந்ததா? உடலற்றதின் கூடவே உடலை நினைவு செய்வதினால் நீங்களும் சரித்திரவான் ஆகி விடுவீர்கள். ஒருவேளை உடல் மற்றும் சரித்திரத்தை நினைவு செய்வதீர்கள் என்றால் சரித்திரத்தின் நினைவு மட்டும் தான் இருக்கும்.
எனவே உடலற்றதின் கூடவே உடல் மற்றும் சரித்திரமும் நினைவு வரட்டும். இன்றைய தினத்தில் வேறு ஏதாவது விசேஷமான

கார்ரியங்களும் செய்தீர்களா? நினைவில் மட்டும் மூழ்கியிருந்தீர்களா? அல்லது நினைவின் கூடவே வேறு ஏதாவது செய்தீர்களா? பாவம் அழிவது, இதுவே நினைவின் விளைவாகும். மேலும் விசேஷமான என்ன காரியம் செய்தீர்கள்? முழு வருடத்திற்கான உங்களுடைய சார்ட்டைப் பாருங்கள். இந்த அவ்யக்த படிப்பு இந்த அவ்யக்த அன்பு மற்றும் சக யோகத்தின் முடிவுகளை சோதனை செய்தீர்களா? இன்று அவ்யக்த அன்பு மற்றும் சகயோகத்தின் 12-மாதங்களுக்கான சோதனைத் தாள் என்ன என்று பரிசோதித் தீர்களா? பரிசோதித்த பிறகு தான் தன் மேல அதிக கவனம் வைக்க முடியும். எனவே இன்றைய தினம் நீங்களே உங்களுடைய பரீட்சைத் தாளை சோதிக்க வேண்டும். வியக்த் பாவத்தில் இருந்து அதாவது உடல் உணர்விலிருந்து அவ்யக்த பாவத்தில் அதாவது உடலற்ற உணர்வில் எதுவரை முன்னேறியிருக்கிறோம் என்பதை யும் சோதிக்க வேண்டும்.

ஒருவேளை அவ்யக்த நிலை ஆதிகரித்திருக்கிறது என்றால் தன்னுடைய நடத்தையிலும் அலௌகீகம் (உலகியல் விஷயங்களிலிருந்து விலகிய நிலை) இருக்கும். அவ்யக்த் நிலையை நடைமுறையில் எப்படி தெரிந்து கொள்வது? அலௌகீக நடத்தை மூலமாக. இவ்வுலகத்தில் இருந்து கொண்டே அலௌகீகமாக எவ்வளவு ஆகியிருக்கிறீர்கள்? இதைச் சோதிக்க வேண்டும். இந்த வருடத்தில் முதல் பரீட்சையாக எது இருந்தது. இந்த நிச்சயத்தின் பரீட்சையில் ஒவ்வொருவரும் எத்தனை எத்தனை மதிப் பெண்கள் எடுத்திருக்கிறீர்கள் என்று உங்களை நீங்களே தெரிந்திருக்கிறீர்கள். நிச்சயத்தின் பரீட்சையோ முடிந்து விட்டது. இப்பொழுது எந்தப் பரீட்சை நடக்க வேண்டும். டயீட்சையை அறிந்திருந்தும் கூட தேர்ச்சி அடைவதில்லை. சில்ருக்கு இது பெரிய சோதனை ஆனால், ஒரு சிலருக்கு இப்போது பெரிய சோதனை ஏற்படக்கூடும். அந்த சோதனையில் நிச்சயத்தின் பரீட்சை இருந்தது போலவே இப்போது எந்த மாதிரியான சோதனை ஏற்படக்கூடும்? வியக்தத்தில் இப்போது கூட உங்களுக்கு உதவி இருக்கிறது எப்படி முதலில் நிமித்தமாக இருந்த சாகார உடல் ஒரு உதவியாக இருந்ததோ அதே போல் இப்பொழுதும் டிரமாவில் நிமித்தமாகியிருக்கும் சாகாரத்திலிருந்து உங்களுக்கு உதவி இருக்கிறது. முன்பும் நிமித்தமாகத் தான் இருந்தார். இப்பொழுதும் நிமித்தமாகத் தான் இருக்கிறார்.

# 1970 அவ்யக்த முரளி

இந்த முழு குடும்பத்திற்கு சாகார உதவி மிக மிக உயர்ந்தது. அவ்யக்தத்திலோ கூடவே தான் இருக்கிறார். எவ்வளவு அன்பு இருக்கிறதோ, அவ்வளவு உதவியும் கிடைக்கிறது. அம்பின் குறைவின் காரணமாக உதவியும் குறைவாக கிடைக்கிறது. சாகாரத்தில் அன்பு என்றால் முழுக் குடும்பத்தின் மேல் அன்பு சாகாரத்தில் தனியாக வேறு எதுவும் இல்லை. பிரஜாபிதா பிரம்மா இருக்கிறார் என்றால் அவருடன் குடும்பமும் இருக்கிறது. மாலையின் மணிகளாக இருக்கிறீர்கள். இல்லையா?. மாலை யில் மணி தனியாக இருப்பதில்லை. மாலையில் நினைவு என்ற ஒரே நூலில், அன்பில் குடும்பம் அடங்கியிருக்கிறது. அப்படி மாலையில் அன்பு என்ற நூலில் உருண்டு கொண்டிருக்கிறீர்கள். தேவதை குலமோ எதிர்காலத்தில் தான் இருக்கும். இந்த பிராமண குலத்திற்கு மிகுந்த மகத்துவம் இருக்கிறது. எவ்வளவிற்கு எவ்வளவு பிராமண குலத்தின் மேல் அன்பு மற்றும் நெருக்கம் இருக்குமோ அந்த அளவே தேவி தேவத்தா ராஜ்யத்தில் நெருக்கம் இருக்கும்.

சாகாரத்தில் நிருபணமாக என்ன பார்த்தீர்கள். பாப்தாதா யாரை முன்னுக்கு வைத்தார்? குழந்தைகளை. ஏனென்றால் குழந்தைகள் இன்று தாய், தந்தையின் பெயர் புகழ்டைய முடியாது. அப்படி சாகாரத்தில் எப்படி காரியங்கள் செய்து காண்பித்தாரோ அதைப் பின்பற்ற வேண்டும். இங்கு கேள்வித்தாள் முன்பே கூறப்பட்டு விடுகிறது. நிச்சயத்தின் பரீட்சையோ முடிந்து விட்டது ஆனால் இப்பொழுது ஒவ்வொருவரின் அன்பு சகயோகம் மற்றும் சக்தியின் பரீட்சை நடக்க வேண்டும். இப்பொழுது அந்த நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது. அதில் உங்களுடைய சென்ற கல்பத்தின் சித்திரமும் பிரத்யஷம் ஆக வேண்டும். அனேக விதமான பிரச்சனைகளை மாற்று வதற்காக விரல் கொடுக்க வேண்டும். கலியுக மலையை கடந்து செல்லவே தான் வேண்டும் ஆனால் இந்த வருடத்தில் மனதின் பிரச்சனைகள், உடலின் பிரச்சனைகள், வாயு மண்டலத்தின் பிரச்சனைகள், அனைத்து பிரச்சனைகளின் மலையைத் தூக்குவதற்கு அன்பு மற்றும் சகயோத்தின் விரல் கொடுக்க வேண்டும். லௌக்கம் வரும். லௌகீக சம்மந்தத்திலோ தேர்ச்சி பெற்று விட்டீர்கள் ஆனால் இந்த அலௌகீக சம்மந்தம் மூலமாகவும் சிறு சிறு பிரச்சனைகள் வரும் ஆனால் உடலின் இந்த அனைத்து பிரச்சனைகளையும் சோதனைத்தாள் என்று புரிந்து கொள்ள வேண்டும். இவை நடைமுறையில் நடக்கும் விஷயம் என்று புரிந்து கொள்ள வேண்டும். இதை சோதனைத் தாள் என்று புரிந்து

கொள்ள வேண்டும். ஒருவேளை சோதனைத் தாள் புரிந்து அதில் தேர்ச்சி பெற்றீர்கள் என்றால் பாஸ் ஆகி விடுவீர்கள். கேள்வித்தாள் வெளிவந்த பிறகும் இப்பொழுது எத்தனை பேர் தேர்ச்சி பெறுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். பிறகு இந்த கேள்வித்தாளின் முடிவுகளைக் கூறுவோம். இந்த நேரம் தன்னுள் வில் பவர் தாரணை செய்ய வேண்டும். இப்பொழுது வில்-பவர் இன்னும் வரவில்லை தகுதிக்கேற்றபடி சக்தி இருக்கிறது.

வில் பவர் எப்படி வர முடியும்? வில் பவர் வருவதற்கான சாதனம் என்ன? வில் பவர் ஏன் குறைவாக இருக்கிறது. அதன் காரணம் என்னவென்று தெரியுமா?. நினை வின் குறை கூட ஏன் இருக்கிறது?. தந்தை வில் பவர் எப்படி வந்தது என்று சாகாரத் தில் காரியம் செய்து காண்பித்திருக்கிறார். முதல் அடியாக எதை எடுத்து வைத்தரர்?. அனைத்தையும் வில் (அர்ப்பணம்) செய்து விட்டார். வில் செய்வதில் காலம் தாழ்த்தவே இல்லை. எதுவரை உள்ளே மற்றும் வெளியே இருக்கும் தீயவைகளை முழுமையாக வில் செய்யவில்லை என்றால் அதுவரை வில் பவர் வர முடியாது. சாகார பாபா (பிரம்மா) எப்படி ஆகும். என்னவாகும் என்று ஏதாவது யோசித்தாரா என்ன? ஒருவேளை யாராவது யோசித்து யோசித்து வில் செய்தார் என்றால் அதற்கு இத்தனை பலன் கிடைப்பதில்லை. எப்படி ஒரே வெட்டில் இரண்டு துண்டு மற்றும் அப்படி ஆகாத நிலைக்கும் வித்தியாசம் இருக்கிறது. இல்லையா?

முதலில் யார் சுவீகாரம் செய்யப்படுகிறார்?. யார் முதலில் சுவீகாரம் ஆகிறாரோ அவருக்கு நம்பர்-1'ன் சக்தி கிடைக்கிறது. யார் முதலில் சுவீகாரம் ஆவ தில்லையோ அவருக்கு சக்தியும் இவ்வளவு பிராப்தி ஆவதில்லை. இந்த விஷயத்தைப் பற்றி யோசியுங்கள். பாப்தாதா நிகழ்காலத்தின் கூடவே எதிர்காலத் தையும் தெரிந்திருக்கிறார். அப்படி எதிர்கால கர்மபந்தனங்களின் கயிறுகளை பார்த்து இவ்வளவு வேகமாக ஓட வைப்பதில்லை. கர்ம பந்தன கயிறுகளை வெட்டுவது அவரவர்களுடைய கடமை யாகும். ஒருவேளை ஏதாவது ஒரு கயிறு அறுக்கப்படவில்லை என்றால் மனம் இழுக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். என்வே கயிறுகளை வெட்டுவதற்காக இன்னும் இங்கு இருக்கிறீர்கள். ஒருவேளை கயிறுகள் வெட்டப்பட்டு இருக்கிறது என்றால் யாராவது நிற்க முடியுமா? விடுபட்ட எந்த பந்தனத்திலும் ஒருவர் நிற்க முடியாது.

# 1970 அவ்யக்த முரளி

இன்றைய தினத்தில் என்ன செய்ய வேண்டும் மேலும் அடுத்த வருடத்திற்காக என்ன தயார் செய்ய வேண்டும் என்ற இந்த விஷயங்களை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். உடலற்றவரை உங்களுடைய ஜோடியாக ஆக்கி விட்டீர்கள் என்றால் உடலற்றவராக ஆவதில் உதவி கிடைக்கும். உடலற்ற நிலை ஆவதில் உதவி குறைவாக கிடைக்கிறது. வெற்றி குறைவாக தென்படுகிறது என்றால், உடலற்றவரை ஜோடியாக ஆக்கவில்லை என்று புரிந்து கொள்ள வேண்டும். யார் கடினமான விஷயத்தை சுலபமாகச் செய்தால் அதைத் தான் அதிசயம் என்று கூறப்படுகிறது. சுலபமான விஷயங்களைக் கடந்து செல்வது ஒன்றும் அதிசயம் அல்ல. கடினமானவைகளை இடந்து செல்வது தான் அதிசயம். ஒருவேளை கடினமானவைகளில் கொஞ்சமாவது ஞாடினார்கள் என்றால் என்னவாகும். ஒரு நொடியில் ஒப்பந்தம் செய்து கொள்பவர் இங்கும் மாட்டிக் கொள்வதில்லை. வேகமாக செல்பவர் எங்கும் மாட்டிக் கொள்ளவும் மாட்டார். மாட்டிக் கொள்பவர் வேகமாகச் செல்ல முடியாது. கடைசி நிலையைப் பார்த்து வேகமாகச் செல்ல வேண்டும். இப்பொழுது கூட வேகமாகச் செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஒரு ஹை ஜம்ப் ( உயரத்தாண்டுவது) மட்டும் செய்ய வேண்டும். கடைசியில் வேகமாகப் போக முடியாது. நல்லது.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 22.01.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கடைசி பாடம் -மனோபாவங்களை அறிதல்!

நீங்கள் அனைவரும் எங்கே அமர்ந்து கொண்டிருக்கிறீகள்? எதைப்பார்த்துக் கொண்டிருக்கிறீகள்? அவ்யக்த நிலையில் நிலைத்திருந்து அவ்யக்த நிலையைப் பார்க்கிறீர்களா? அல்லது சூட்சம நிலையில் சரீரத்தைப் பார்கிறீர்களா? இது சப்தம் நிறைந்த உலகம் ஆனால் சூட்சும உலகில் சப்தம் இருப்பதில்லை. எனவே தான் பாபா அனைத்து குழந்தைகளுக்கும் சப்தத்திற்கு அப்பால் செல்லும் பயிற்சியைக் கற்றுக் கொடுக்கிறார். தற்போதுள்ள நேரத்தில் ஒரு வினாடியில் சப்தத்தில் வருவது, ஒரு வினாடியில் சப்தத்திற்கு அப்பால் செல்வதற்கான பயிற்சி மிகவும் அத்யாவசியமாகும். நீங்கள் அவ்யக்த நிலையில் நிலைத்திருக்கும் நேரம் வரும். அப்போது நீங்கள், மற்றவர்களின் மனதின் ஜாடை மூலமே உணர்வுகளை அறிந்து கொள்வீர்கள். அப்போது இது பற்றி யாரிடமும் பேசவோ கேட்கவோ அவசியமிருக்காது. இது போன்ற நேரம் இப்போது வர இருக்கிறது. எப்படி பாப்தாதாவின் மூன் நீங்கள் வரும்போது பாப்தாதா உங்கள் மனதில் உள்ள எண்ணங்களையும், உணர்வுகளையும் நீங்கள் அதைப் பற்றிக் கூறாமலேயே அறிந்து கொள்கிறாரோ, அதே போன்று நீங்கள் குழந்தைகள், இந்த இறுதிப் படிப்பை படிக்க வேண்டும். எப்படி நீங்கள் வாய் மொழி மூலம் பேசுகிறீர்களோ, அதேபோல் ஆத்மாவின் உரையாடலும் நிகழ்கிறது. இதைத் தான் இதயத்தோடு இதயத்தின் உரையாடல் என்று கூறப்படுகிறது. ஆக, ஒரு ஆத்மா மற்றொரு ஆத்மாவோடு பேசுகிறது, ஆனால் எப்படி? ஆத்மாக்கள் வாய் மூலம் உரையாடுமா? எப்போது நீங்கள் ஆத்ம அபிமானி நிலையில் நிலைத்திருக்கிறீர்களோ அப்போது ஆத்மா மற்றொரு ஆத்மாவை தெளிவாகவும் சுலபமாகவும் தெரிந்து கொள்ள முடியும். இந்த உலகில் நீங்கள் எப்படி ஒருவர் மற்றொருவரின் உணர்வுகளை அவர்களைப் பற்றி பேசும் முறை மூலம் தெரிந்து கொள்கிறார்களோ அதைப்போல. இதற்காக

எந்த தாரணை தேவைப்படுகிறது? இதற்கு விசேஷமாக புத்தியின் கோடு தெளிவாக வைத்திருக்க வேண்டும். உங்கள் புத்தி அல்லது மனதில் ஏதாவது குறைபாடு இருந்தாலோ, அல்லது இந்த கோடு தெளிவாக இல்லாமல் இருந்தாலோ, உங்களால் பிறரது எண்ணங்களையும், உணர்வுகளையும் புரிந்து கொள்ள முடியாது. புத்தியின் ரேகை தெளிவாக இல்லாததால், அங்கு உங்களது சொந்த எண்ணங்கள் கலந்து விடுகிறது. எனவே தான், ஒவ்வொரு வரும், தங்களது புத்தி ரேகை தெளிவாக இருக்கிறதா என்று சோதனை செய்ய வேண்டும்.

உங்களது புத்தியில் துயரத்தை தரக்கூடிய தடைகள் ஏதாவது இருக்கிறதா? உங்கள் வாழ்க்கையில் திடத்தன்மை, அசைக்க முடியாத நிலை, களைப்பின்மை ஆகிய பண்புகளில் ஏதாவது ஒன்று குறைந்தாலும், உங்கள் புத்தியின் கோடு தெளிவாக இல்லை என்று நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். புத்தி ரேகை தெளிவாக இருக்கும்போது அந்த மனிதனின் நிலை மற்றும் மனதின் விழிப்பு நிலை எப்படி இருக்கும்? எவ்வளவு அதிகமாக புத்தியின் ரேகை தெளிவாக இருக்கிறதோ, அதாவது முயற்சியின் ரேகையும் தெளிவாக இருக்கும். உங்களது மனதின் விழிப்பு நிலையும் அதே அளவிற்கு இருக்கிறதா? உங்களது பண்புகளும் நிகழ்காலத்தில் தெளிவாக இருப்பதைப் போன்றே எதிர் காலத்திலும் தெளிவாக இருக்கும். அந்த மனிதருக்கு நிகழ்காலமும் எதிர்காலமும் ஒன்றாகவே இருக்கும். தற்காலத்தில், விஞ்ஞானத்தின் மூலம் வெகு தூரத்திலுள்ள ஏதாவது ஒருபொருளை நீங்கள் பார்க்கும்படி மிகத் தெளிவாகக் காண்பிக்க முடிகிறது. யாருடைய முயற்சி தெளிவாக இருக்கிறதோ, அவர்கள் எதிர்காலத்தின் நிகழ்வுகளை, எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் மிக அருகாமையில் பார்ப்பார்கள். தற்காலத்தில் மனிதர்கள் தொலைக்காட்சியைப் பார்க்கிறார்கள். அவர்களால் அனைத்தையும் மிகத் தெளிவாகக் காண முடிகிறது. அதில் தெரியும் அனைத்து காட்சிகளையும் அவர்களது புத்தி மற்றும் பார்வையால் தெளிவாகப் பார்க்க முடிகிறது. எந்த வகையிலும் முயற்சி செய்வது கடினமாக இருக்காது. இதைப் போலவே உங்களுக்குள் நீங்கள், எந்த அளவிற்கு இறுதி நிலைக்கு தகுதியாகி இருக்கிறீர்கள், இறுதி நிலைக்கு அருகாமையில் இருக்கிறீர்கள் என்பதை அனுபவம் செய்யுங்கள்.

# 1970 அவ்யக்த முரளி

சூரியன் முழுமையாக உதித்த பிறகு, உங்களால் எல்லாவற்றையும் மிகத் தெளிவாகக் காண முடியும். எல்லா இருளும், மங்கலானதன்மையும் நீங்கி விடுகிறது. இதைப் போலவே உங்களுக்கு சர்வ சக்திவானிடம் இடைவிடாத உறவு இருக்கும்போது உங்களால் அனைத்தையும் உங்களுக்குள் தெளிவாகக் காண முடியும். நீங்கள் நடந்து செல்லும்போது, மாயையின் இருள் அல்லது தெளிவற்றதன்மை உங்களது முயற்சியின் முன் வந்து உண்மையை மறைத்து விடுகிறது. இதை நீக்க வேண்டும். இதற்காக இரண்டு விஷயங்களை, நினைவில் கொள்ளுங்கள், அனைத்து குழந்தைகளும் இந்த அலௌகிக விழாவிற்கு வந்திருக்கிறீர்கள். எப்படி லௌகிக தந்தை தனது அன்பான குழந்தைகளை சந்தைக்கு அழைத்துச் சென்று ஏதாவது ஒரு பொருளை வாங்கிக் கொடுக்கிறார் அதுபோல் இன்று பாப்தாதா குழந்தைகளாகிய உங்களுக்கு இந்த விசேஷ சந்தையில் என்ன விசேஷமான பொருளைக் கொடுப்பார்?

இந்த இனிமையான அலௌகிக சந்திப்பின் ஞாபகார்த்தமாக பாப்தாதா உங்களுக்கு என்ன கொடுத்துக் கொண்டிருக்கிறார்? எப்போதும் மற்றவர்களுக்காக தூய்மையான, சுபமான சிந்தனையாளர்களாகி, சுப எண்ணங்களையே எண்ணுங்கள், தனது அழியாத ஆத்மாவிற்காக தூய்மையான எண்ணங்களை வையுங்கள். தனது அழிவற்ற ஆத்மாவிற்காவும், மற்றவர்களுக்வும் தூய்மையான எண்ணங்களை வையுங்கள். இந்த இரண்டு விஷயங் களையும் எப்போதும் நினைவில் வையுங்கள். தூய்மையான நேர்மறையான எண்ணங்களினால் உங்களால் உங்களது சுய ஸ்திதியை உருவாக்க முடியும். இந்த தூய்மையான நேர்மறையான எண்ணங்களினால் நிறைய பேருக்கு உங்களால் சேவை செய்ய முடியும். எனவே இங்கு வந்திருக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் இதுவே சூட்சும உலகின் அழிவற்ற பரிசாகும். குழந்தைகளின் அன்பைவிட பாப்தாதாவின் அன்பு உயர்ந்ததா? அல்லது குழந்தைகளின் அன்பு உயர்ந்ததா? சில குழந்தைகள் தங்கள் எல்லோருடைய அன்பும் பாப்தாதாவின் அன்பைவிட உயர்ந்தது என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர். சிலரது அன்பு உயர்ந்ததாக இருக்கிறது ஆனால் பொரும்பாலானவர்களின் அன்பு அப்படி இல்லை. அன்பு இருக்கிறது ஆனால் அது நிரந்தரமாக, இடைவிடாது இருப்பதில்லை. குழந்தைகளின் அன்பு தன் நிலையை

மிகவும் மாற்றிக்கொள்கிறது. பாப்தாதாவின் அன்பு இடைவிடாமல் நிரந்தரமாக இருக்கிறது. ஆகையால், இப்போது யாருடைய அன்பு உயர்ந்தது?

பாப்தாதாவிற்கு மூன்று கண்கள் இருப்பதால், குழந்தைகளைப் பார்க்கும்போது அவர்களின் மூன்று நிலைகளையும் பார்க்கிறார். அந்த மூன்று நிலைகள் என்னென்ன? நீங்கள் பாபாவை மூன்று நிலைகளில் பார்க்கிறீர்கள். நீங்கள் அனைவரும் அந்த மூன்று நிலைகளைத் தெரிந்திருக்கிறீர்கள். பாப்தாதாவும் குழந்தைகளை அவர்களின் மூன்று நிலைகளில் பார்க்கிறார். ஒன்று முயற்சி செய்யும் புருஷார்த்த நிலை, இரண்டாவது சங்கம யுகத்தின் எதிர்கால நிலை, அதாவது ஃபரிஷ்தா நிலை, மூன்றாவதாக எதிர்கால தேவதா நிலை! இந்த மூன்று நிலைகளின் காட்சியை அவர் காண்கிறார். நீங்கள் இந்த நிகழ்கால சரீரத்தைத் தெளிவாகப் பார்ப்பதைப்போல் ஒவ்வொருவரின் இந்த மூன்று நிலைகளையும் தெளிவாகக் காண முடிகிறது. இதே போன்று இந்த மூன்று நிலைகளையும் தெய்வீகப் பார்வை மூலம் தெளிவாகக் காணலாம். நீங்கள் கண்களால் பார்த்த பொருளைப் பற்றி பேசுவது எளிது. நீங்கள் கேள்விப்பட்ட பொருளைப் பற்றி பேசுவது சிறிது கடினம்; ஆனால் நீங்கள் பார்த்த பொருளைப் பற்றி பேசுவது கண்கள் அல்லது அவ்யக்த கண்கள் மூலம் ஒவ்வொருவரின் இந்த மூன்று நிலைகளைப் பற்றிப் பேசுவதும் மிகவும் எளிது. இதைப் போன்று நீங்கள் ஒருவர் மற்றவரின் மூன்று நிலைகளையும் காண முடியும். தற்சமயம் இது உங்கள் முயற்சிக்கேற்ப, உங்கள் தகுதிக்கேற்ப இருக்கிறது ஆனால் மிகக் குறைந்த நேரத்தில் உங்களது தகுதிக்கேற்ப என்ற வார்த்தை முடிவடைந்து, ஒவ்வொருவரும் உங்கள் வரிசைக்கேற்ப சம்பூரணமடைந்து விடுவீர்கள். ஆகையால் பாப்தாதா உங்கள் அனைவரது சம்பூரண முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

சம்பூர்ணமும் வரிசைக்கிரமமாக இருக்கும். நீங்கள் மாலையில் உள்ள முதல் மணி மற்றும் 108-வது மணி இரண்டையும் சம்பூரணம் என்று அழைப்பீர்களா இல்லையா? அவர்களை வெற்றி ரத்தினங்கள் என்று அழைப்பீர்களா? வெற்றி ரத்தினம் என்றால் உங்களது சொந்த வரிசை எண்ணின்படி சம்பூரணமடைவது. இந்த நாடகத்தில் அந்த

முயற்சியையும், சம்பூரண நிலையையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். இப்போது உங்களது நிலை என்ன நீங்கள் என்னவாக ஆகப்போகிறீர்கள்?

நீங்கள் கேட்டீர்கள் இல்லையா? பாப்தாதா சூட்சும வதனத்தில் அமர்ந்துகொண்டு என்ன செய்கிறார் என்று. இதைத் தான் பாபா தொடர்ந்து கவனித்துக் கொண்டும், கூடவே சூட்சுமமாக உதவி அளிக்கும் சேவையையும் செய்து கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள், பாபா முழு நேரமும் சூட்சம வதனத்தில் அமர்ந்துகொண்டு என்ன செய்கிறார்? எனக்குத் தெரியாது? ஸ்தூல உலகை விட அங்கே சேவையின் வேகம் அதி வேகமாக இருக்கிறது. ஏனெனில், இங்கே உடலின் கணக்கும் கூட இருக்கிறது. இப்போது (அவ்யக்தமாகி விட்ட) பாபா அந்த பந்தனத்திலிருந்து விடுபட்டிருக்கிறார். அவர் தனக்காக மட்டும் இருக்கவில்லை/ மற்ற எல்லா ஆத்மாக்களுக்காகவும் இருக்கிறார்.

எப்படி உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு உடலை விட்டு விட்டு மற்றொரு உடலை எடுக்கும் அனுபவம் இருக்கிறதோ, இதை போல நீங்கள் விரும்பும் போது, இந்த தேக உணர்வை விட்டு விட்டு அசரீரியாகவும், காரியங்கள் செய்ய விரும்பும்போது தேகத்தின் ஆதாரத்திலும் வரும் அனுபவம் இருக்கிறதா? நீங்கள் இப்போது இந்த அனுபவத்தை அதிகரிக்க வேண்டும். இப்போது நீங்கள் அந்த ஆடை(சரீரம்) ஆத்மாவிலிருந்து முற்றிலும் தனிப்பட்டது. ஆத்மா இந்த ஆடையை தரித்திருக்கிறது என்று அனுபவம் செய்வீர்கள். இப்போது இதை நீங்கள் மிக அதிகமாக அனுபவம் செய்யவேண்டும்.

நீங்கள் பொரும்பாலும் வீட்டிற்குத் திரும்பிவிட்டீர்கள் என்று நிரந்தரமாக நினைவில் வையுங்கள். நீங்கள் இந்த சரீரத்தை சேவையின் காரணமாக ஆதாரமாக எடுத்திருக்கிறீர்கள், ஆனால் சேவை முடிந்தவுடன் உங்களை நீங்கள் லேசாக மாற்றிக் கொள்ள முடியும். நீங்கள் வேறெங்கிருந்தாவது வேலையிலிருந்து திரும்பி வந்தவுடன் உங்களை லேசாக உணருகிறீர்கள். நீங்கள் உங்களது சீருடையைக் களைந்து விட்டு வீட்டிற்கான ஆடையை அணிந்து கொள்கிறீர்கள். இதைப் போலவே நீங்கள் இந்த சரீரம் என்ற ஆடையை ஆதாரமாக எடுத்திருக்கிறீர்கள். சேவை முடிந்தவுடன் நீங்கள் இந்த ஆடையின் (சரீரத்தின்)

சுமையிலிருந்து லேசாக ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும். உங்களில் யாரால் இந்த ஆடையிலிருந்து ஒரு வினாடியில் விடுபட முடியும்? ஆடை இறுக்கமாக இருந்தால் உங்களால் விடுபட முடியாது. முழுமையாக தடை இருக்கும்போது அதை நீக்குவது கடினம். ஆடை தளர்வாக இருந்தால் அதை சுலபமாக நீக்கமுடிகிறது. இதேபோல், உங்களது சம்ஸ்காரத்தில் லேசுத்தன்மை இல்லையேல் உங்களால் அசரீரி நிலையை அனுபவம் செய்ய முடியாது.

உங்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது நீங்கள் என்னவாக ஆக வேண்டும் என்று. எச்சரிக்கையாகவும் லேசாகவும் ஆக வேண்டும். மாயை சுலபமாக வரும் அளவிற்கு நீங்கள் தளர்வாக இருக்கக்கூடாது. சில நேரங்களில் நீங்கள் தளர்வாக (லேசாக) இருக்க வேண்டும். மற்ற நேரங்களில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எனவே நீங்கள் தளர்வாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். யார் இவ்வாறு இருக்கிறார்களோ அவர்களால் இந்த பயிற்சியைக் கடைப்பிடிக்க முடியும். பாப்தாதா மூன்று காலத்தையும் அறிந்திருப்பதால், அவர் குழந்தைகளை புதிய குழந்தைகளாகப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. நீங்கள் புதியவர்கள் என்று எப்படி சொல்ல முடியும்? ஆகையால் நீங்கள் அனைவரும் மிகப் பழமையானவர்கள். உங்களால் நீங்கள் எவ்வளவு பழமையானவர்கள் என்று கணக்கிட முடியாது. எனவே நீங்கள் உங்களைப் புதியவர்கள் என்று கருத வேண்டாம். நீங்கள் மிகப் பழமையானவர்கள். பழமையானவர்களாகிய நீங்கள் மீண்டும் உங்கள் உரிமையைப் பெறுவதற்காக வந்திருக்கிறீர்கள். இந்த அழிவற்ற போதையில் சதா நிலைத்திருங்கள். நாங்கள் முயற்சி செய்வோம், பார்க்கலாம் என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். யார் கடைசியாக வந்திருக்கிறார்களோ அவர்கள் வேகமாகப் போக வேண்டும் என்று நினைக்க வேண்டும். நீங்கள் வேகமாகப் போக வேண்டும் என்று குறிக்கோள் வைத்திருந்தால் முயற்சியும் அதன்படியே இருக்கும். ஆகையால் ஒருபோதும் நினைக்காதீர்கள், நாம் கடைசியாக வந்திருக்கிறோம். எனவே நாம் பிரஜைகளாக ஆவோம் என்று! அவ்வாறில்லை. யாரெல்லாம் இறுதியில் வந்திருக்கிறார்களோ அவர்களும் உயர்ந்த நிலையை அடையும் உரிமை பெற்றிருக்கிறார்கள். நல்லது.

# 1970 அவ்யக்த முரளி

இந்த அவ்யக்த சந்திப்பும் ஒரு சந்திப்பு தான். ஆகையால் நீங்கள் அனைவரும், நாங்கள் நிச்சயம் உயர்ந்த நிலையை அடைவோம், நாங்கள் அடையவில்லை என்றால் வேறு யார் அடைவார்கள்? என்ற இந்தளவு நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். கோடியில் சிலர் என்று எந்த ஆத்மாக்கள் எண்ணப்படுகின்றன. அப்படியே கோடியில் சிலர் நாம் ஆத்மாக்கள் நாடகத்திற்குள் இருக்கிறோம். தன்னுடைய இந்த நிச்சயத்தை மறக்கக் கூடாது. பாப்தாதா அனைத்து குழந்தைகளின் எதிர்காலத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். ஒவ்வொருவரையும் சந்திக்க வேண்டும் என்பது தான் மனவிருப்பம் ஆனால் உங்கள் அனைவரையும் போன்றே (பாப்தாதா) இந்த வியக்த உலகத்தில்... (சற்று நேரம் வருகிறார்).

பாப்தாதாவிற்கு இப்பொழுது இந்த வியக்த உலகம் கிடையாது. உங்களுடைய உலகத்திற்குத் தகுந்தாற்போல நேரத்தைக் கூட பார்க்க வேண்டியிருக்கிறது. வதனத்தில் நேரம் என்பது கிடையாது. கடிகாரம் இருப்பதில்லை ஆனால் இந்த வியக்த உலகத்தில் இந்த அனைத்து விஷயங்களையும் பார்க்க வேண்டியிருக்கிறது. எப்பொழுது அங்கு சூரியன் சந்திரன் என்பது இல்லையோ, இரவு பகல் (வேறுபாடு) -எந்த கணக்கில் இருக்கும்? இதனால் நேரத்தின் பந்தனம் அங்கு கிடையாது. ஓம் சாந்தி

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 23.01.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சேவையில் வெற்றி பெறுவதற்கான யுக்திகள்!

சேவையின் காரணத்தால் கட்டாயமாகப் பேச வேண்டியுள்ளது என்று அனுபவம் செய்கிறீர்களா? ஆனால் சேவை முற்றுப்பெறும்போது சப்தத்தில் வரும் ஸ்திதியும் முற்றுப் பெற்று விடும். (பம்பாய் பார்ட்டி, பம்பாயில் நடைபெற இருக்கும் சம்மேளத்திற்கான அறிவுரைகளை அடைந்து வருகின்றனர்). இப்போது நீங்கள் செய்துவரும் சேவையில் எந்த சிறப்பு தேவை? பல வருடங்களாக நீங்கள் சொற்பொழிவாற்றி வருகிறீர்கள் ஆனால் இப்போது, இந்த சொற்பொழிவில் எத்தகைய அவ்யக்த ஸ்திதியை நிரப்ப வேண்டும்? நீங்கள் உரையாற்றி வரும்போது இவர் அசரீரியாக, ஒலிக்கு அப்பால் இருக்கும் ஸ்திதியில் நிலைத்திருந்து பேசி வருகின்றார் என அனைவரும் அனுபவம் செய்ய வேண்டும். இப்போது இந்த சம்மேளனத்தில் இத்தகைய புதுமையைப் புகுத்த வேண்டும். மற்ற பேச்சாளர்களுக்கும், மற்றும் பிராமண பேச்சாளர்களுக்கும் இடையில் காணப்படும் வேறுபாடு தெளிவாகத் தென்பட வேண்டும். அப்போதுதான் இந்த சம்மேளனம் வெற்றி பெறும். புதியவர் ஒருவர் இந்த சபையில் பிரவேசம் செய்தாலும் இவருடைய பேச்சு புதுமையாக இருக்கிறதே என உணர வேண்டும். வாயினால் பேசும் பேச்சு காதுக்கு மட்டுமே இனிமையாக இருக்கும் ஆனால் அவ்யக்த ஸ்திதியில் நிலைத்திருந்து பேசும்போது, அது காதுக்கு மட்டும் இனிமையாக இல்லாது, மனதிற்கும் இனிமையானதாக இருக்கும். காதுக்கு இனிமையாக பேசுபவர்கள் உலகில் பலர் இருக்கின்றனர் ஆனால் மனதிற்கு இனிமையாக பேசுபவர்கள் உலகில் இதுவரை எவரும் இல்லை. தந்தை குழந்தைகளாகிய உங்களுடைய முன்னிலையில் பிரத்யட்சம் ஆகியிருக்கின்றார் ஆனால் குழந்தைகளாகிய நீங்கள் பிறகு வெளி உலகில் பிரத்யட்சம் ஆக வேண்டும். ஆகவே இந்த சம்மேளனம் சாதாரண ரீதியில் அமையக்கூடாது. இந்த சித்திரங்கள் உயிருடன் உள்ளன என அந்தக் கூட்டத்தில் அனைவரும் கூற வேண்டும். உயிருடன்

உள்ள ஒன்று உடலைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதைப் போன்றே உங்களுடைய சித்திரங்களிலும் உயிர் இருப்பது சாட்சாத்காரம் ஆக வேண்டும். எந்த சித்திரத்தில் உயிரோட்டம் உள்ளதோ, அதுவே உகந்ததாக இருக்கும். வெளிப்படையாக உள்ள கலையம்சம் பற்றிய விஷயம் அல்ல ஆனால் வெளிப்படையாக இருக்கும் கலையம்சத்துடன் கூடவே உள்ளேயும் அவ்வாறே இருக்க வேண்டும். பாப்தாதா இந்த புதுமையே காண விரும்புகிறார். குறைவாகப் பேசினாலும் அதிகமான பலனை அது உருவாக்க வேண்டும். இதுவே பிராமணரின் நியமம் ஆகும். இந்த சம்மேளனம் எவ்வாறு புதுமையானதாக இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். சித்திரங்களிலும், அவ்யக்த்த சைதன்யம் இருக்க வேண்டும். இது தொலைவிலிருந்தே உணரப் பட வேண்டும். இல்லையேல், பிரஜைகள் எவ்வாறு உருவாவர்? வெறும் வாய் மூலமாக அல்ல, ஆத்மீக ஸ்திதியின் மூலமாக உருவாகும் பிரஜைகள் தான், ஆத்மீக சுகத்தை அனுபவம் செய்ய முடியும். இதுவரை விளைந்த முடிவை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். அவ்யக்த ஸ்திதியின் அனுபவத்தின் மூலமாக உருவாகிய பிரஜைகள் ஆரம்பம் முதலே, எந்த விதமான விக்னமும் (தடை) இன்றி, சகஜமாக முன்னேறி வருகின்றனர். அவ்யக்த ஸ்திதிக்குப் பதிலாக வேறு ஏதாவது ஒன்றின் ஆதாரத்தில் உருவானவர்கள், விக்னங்கள், சிரமங்கள், மற்றும் புருஷார்த்தம் செய்வதை கடினமாக அனுபவம் செய்வதைக் காண முடிகிறது. ஆகவே இப்போது, அவ்யக்த ஸ்திதியின் அஸ்திவாரத்தினால், மிகக் குறைந்த சமயத்தில், சகஜமாக தமது குறிக்கோளை அடைகின்ற பிரஜைகளை உருவாக்க வேண்டும். தாமே எந்த அளவு சகஜமான புருஷார்த்தியாக, அவ்யக்த ஸ்திதியில் நிலைத்திருக்கின்றாரோ, அந்த அளவு மற்றவர்களையும் தமக்குச் சமமாக ஆக்க முடியும். ஆகவே இந்த சம்மேளனத்தின் (மாநாடு) முடிவைப் பார்க்க வேண்டும்! உரையின் தலைப்பு எதுவாக இருந்தாலும், ஸ்திதி மிக உயர்ந்ததாக இருக்க வேண்டும். ஸ்திதி மிக உயர்ந்ததாக இருந்தால், தலைப்பை எவ்வாறு வேண்டுமானாலும் திருப்ப முடியும். வெற்றியின் அடிப்படை உங்களுடைய பேச்சின் ஆதாரத்தில் இல்லை. ஸ்திதியின் ஆதாரத்தில்தான் அமையும். ஏன் என்றால், உரை நிகழ்த்துவதில், மொழியில் வல்லுநர்கள் இந்த உலகில் பலர் உள்ளனர் ஆனால் ஆத்மாவில் சக்தியை அனுபவம் செய்விப்பவர்கள் நீங்கள் தான். ஆகவே இப்போது இந்த புதுமையை நீங்கள் கொண்டு வர வேண்டும். எந்த ஒரு

காரியத்தை செய்ய முற்படும்போதும். முதலில் வாயுமண்டலத்தை அவ்யக்தமாகச் செய்வது மிக அவசியம் ஆகும். மேடையை அலங்கரிப்பதில் நீங்கள் மிகுந்த கவனம் செலுத்துவதைப் போன்றே இந்த முக்கியமான அலங்காரத்திலும் கவனம் செலுத்த வேண்டும் ஆனால் நடப்பது என்ன? போகப்போக அந்த நேரத்தில் வெளி நோக்குதல் (அகத்தை மறந்து) அதிகரித்து விடுகிறது. இதனால் வாயுமண்டலம் கடைத்தரமாக அமைத்து விடுவதால், நற்பலன் கிடைப்பதில்லை. இப்படி செய்வோம், அப்படி செய்வோம் என்று நீங்கள் மிகுதியாக சிந்திக்கிறீர்கள் ஆனால் இறுதி நேரத்தில் செய்யவேண்டிய மிகுந்த காரியங்களைப் பார்த்து வெளிநோக்கில் வந்து விடுகிறீர்கள். அந்த நேரத்தில் செவிமடுப்பவர்களும் இது சிறப்பாக உள்ளது என்றும் புகழ்கின்றனர். பிறகு உடனடியாக வெளிநோக்கில் வந்து விடுகின்றனர்! ஆகவே எவர் வந்தாலும், முதன்முதலில் அவ்யக்த ஸ்திதியின் பிரபாவத்தை அனுபவம் செய்யுமாறு உங்களுடைய நிகழ்ச்சிகளை அமைக்க வேண்டும். இதுவே சம்மேளனத்தின் (மாநாடு வெற்றிக்கு ஆதாரம் ஆகும். சில தினங்களுக்கு முன்பாகவே இந்த வாயுமண்டலத்தை உருவாக்க வேண்டும். விழா நாளன்று மட்டுமே அதை உருவாக்க வேண்டும் என்றிருக்கக் கூடாது. வாயுமண்டலத்தைத் தூய்மைப்படுத்தினால்தான் ஏதாவது ஒரு புதுமையைக் காண இயலும். சாகார சரீரத்திலும் (பிரம்மாபாபா) அலௌகீகத்தை தொலைவிலிருந்தே காண முடிந்தது அல்லவா? ஆகவே குழந்தைகளின் இந்த வியக்த சரீரத்திலும் அலௌகீகம் காணப்பட வேண்டும்.

பத்திரிகையாளர் கூட்டத்தின் முடிவும் நன்றாக இருக்குமானல், அதையும் நடத்துவதில் தவறு இல்லை ஆனால் முன் கூட்டியே அவர்களைச் சந்தித்து அவர்களை உங்களுக்கு உதவி செய்பவர்களாக மாற்ற வேண்டும். இது மிக அவசியமாகும். அவசியப்படும் நேரத்தில் மட்டும் அவர்களைச் சந்தித்து அவர்களுடைய உதவியை நாடுவதற்கும், முன்கூட்டியே அவர்களை சந்தித்து அவர்களை உதவியாளர்களாக செய்வதற்கும் இடையில் மிகுந்த வேறுபாடு இருக்கிறது. பொதுவாக காலத்தின் மீதே கவனம் செல்கிறது. இப்போது, உங்களுடைய புத்தியின் லைனை கிளியராக (தெளிவாக) வைத்திருந்தால், மற்ற அனைத்துமே தெளிவாகி விடும். உங்களுடைய கண்காட்சியில், பொத்தானை அழுத்தியவுடன் பதில் கிடைத்து விடுகிறது அல்லவா! அவ்வாறே, புருஷார்த்தத்தின்

லைன் தெளிவாக இருக்கும்போது. பொத்தானை அழுத்தியவுடன் பதில் கிடைத்து விடும். இத்தகைய அனுபவம் ஏற்படும்! இதற்கு வியர்த்த சங்கல்பங்களைக் கட்டுப்படுத்தும் சக்தி தேவை. வியர்த்த சங்கல்பங்கள் தொடர்வதின் காரணமாக, ஒரிஜினலாக வரும் பாப்தாதாவின் பிரேரணைகள் அல்லது சுத்தமான பதில் என்று கூறப்படுபவையில் கலப்படம் ஏற்பட்டு விடுகிறது. ஏன் என்றால் வியர்த்த சங்கல்பங்கள் மிகுதியாக வருகின்றன. வியர்த்த சங்கல்பங்களைக் கட்டுப்படுத்தும் சக்தி இருந்தால், பாப்தாதாவின் பதில் தெளிவாகக் காணப்படும். புத்தி டிரான்ஸ் லைட் போல இருந்தால், அதில் ஒவ்வொரு விஷயமும் தெளிவாகவும் யதார்த்தமாகவும் காணப்படும், கலப்படம் ஏற்படாது. எவரிடத்தில் வியர்த்த சங்கல்பங்கள் நடைபெறுவதில்லையோ, அவர் தமது அவ்யக்த ஸ்திதியை அதிகரிக்க முடியும். இத்துடன் சுத்த சங்கல்பங்களும் தொடர்ந்து எழ வேண்டும் ஆனால் இதையும் கட்டுப்படுத்தும் சக்தி தேவை. பெரும்பாலோரிடத்தில் வியர்த்த சங்கல்பங்களின் புயல் அடித்து வருகிறது!

யாராவது ஏதாவது ஒரு புதிய காரியத்தைத் துவங்கினால் அதற்கு ஒரு சேம்பிளை தயாரிக்கின்றனர். இங்கும் இந்த சம்மேளனத்தின் சேம்பிளை அனைவரின் முன்னிலையிலும் வைக்க வேண்டும். அவ்யக்த ஸ்திதி என்பது என்ன என்பதை அனைவரும் அனுபவம் செய்விக்க வேண்டும். உங்களுடைய நடவடிக்கைகளிலிருந்து மற்ற அனைவருக்கும் இந்த நேரத்தின் காலக்கடிகாரத்தைப் பார்க்க வேண்டும். காலத்தின் கடிகாரமாக நீங்கள் விளங்க வேண்டும். சாகார பிரம்மாபாபாவும் காலத்தின் கடிகாரமாக விளங்கினார் அல்லவா! அவ்வாறே நீங்களும், சரீரத்தில் இருந்து வருகின்ற போதிலும், அவ்யக்த ஸ்திதியின் மணியை அடிக்க வேண்டும். இந்த சேவை அனைத்திலும் சிறந்ததாகும். வியக்தத்தில் அவ்யக்த ஸ்திதியின் அனுபவம் எத்தகையது என்கிற பாடத்தை அனைவருக்கும் நடைமுறையில் கற்பிக்க வேண்டும். நல்லது!

பாப்தாதா மற்றும் தேவி (தெய்வீக) பரிவாரம் (குடும்பம்) ஆகிய அனைவரையும் அன்பு என்கிற நூலில் கோர்க்க வேண்டும். அன்பு என்கிற நூலில் கோர்க்கப்பட்டுள்ள மணி நான் என்கிற போதை இருக்க வேண்டும். மணிகளை எவ்வாறு போற்றிப் பராமரிக்கின்றனர்? மாலையின் மணிகளை மிகுந்த கவனத்துடன் பரிசுத்தமாக

வைக்கின்றனர். அதைக் கையில் எடுக்கும்போதும் மிகுந்த கவனத்துடன் எடுக்கின்றனர். நாமும் அத்தகைய மதிப்புமிக்க மணி என்று உணர வேண்டும். (ஒருவர் சேவைக்காக அறிவுரையைக் கேட்டார்) அவர்களுக்கு சேவை, பேச்சின் மூலமாக நடைபெறாது. உங்களுடைய வாழ்க்கையில் காணப்படும் உயர்ந்த மாற்றங்கள் தான் அவர்களை இங்கு இழுத்துவரும். அவர்களில் சிலரிடத்தில் அகங்காரம் இருக்கிறது. இதனால், பேசும்போது, உங்களுடைய பேச்சிற்கும் அவர்களுடைய பேச்சுக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிடுகிறது ஆனால் நடைமுறை வாழ்க்கையில் இத்தகைய முரண்பாடு ஏற்பட இடமில்லை. ஆகவே அத்தகைய மனிதர்களுக்கு உணர்த்துவதற்கு இதுவே வழியாகும். வாயுமண்டலத்தை அவ்யக்தமாக்குங்கள், எந்த ஒரு சேவைக்கேந்திரத்தையும், கவர்ந்தீர்க்கச் செய்யவேண்டும். இதனால், அவர்கள் அவ்யக்த வதனத்தை காண இயல வேண்டும். இந்த இல்லத்தின் நடுவில் ஏதோ ஒரு ஒளி காணப்படுகின்றது என்று அவர்கள் தொலைவிலிருந்தே உணர வேண்டும். ஒளி தூரத்திலிருந்தே பிரகாசத்தை அளிக்கின்றது. தன்பால் ஆகர்ஷணம் செய்கிறது. இத்தகைய ஒளி பிரகாசித்தால்தான் வெற்றி கிடைக்கும்.

அவ்யக்த பட்டிக்கு வந்ததால், அவ்யக்த ஸ்திதி அனுபவம் ஆகின்றதா? இப்போது இங்கு கிடைக்கின்ற அனுபவத்தின் மூலமாக நீங்கள் என்ன செய்வீர்கள்? அதை உங்களுடன் எடுத்துச் செல்வீர்களா அல்லது அதை இங்கேயே விட்டுவிட்டுச் சென்று விடுவீர்களா? இவ்வாறு உடன் இருக்கும் அவ்யக்த ஸ்திதியை துண்டிக்க வேறு எவர் முயன்றாலும் துண்டிக்க முடியாதவாறு அந்த ஸ்திதியை துணையாக வைத்திருக்க வேண்டும். லௌகீக குடும்பத்தை அலௌகீகமாக ஆக்கி விட்டீர்கள் அல்லவா? லௌகீகத்தன்மை சிறிதளவும் இருக்கக் கூடாது. ஒரு சரீரத்தை விடுத்து வேறு ஒரு சரீரத்தை அடைவதைப் போன்றே, அந்த பழைய பிறவியின் எந்த ஒரு விஷயமும் நினைவில் இருப்பதில்லை அல்லவா? ஆகவே இங்கும் உயிருடன் இருக்கும் போதே இறந்து விட்டவர்கள் அல்லவா நீங்கள்! ஆகவே பழைய பிறவியின் நினைவு மற்றும் திருஷ்டியும் அழிந்து விடவேண்டும். லௌகீகத்தில் அலௌகீகத்தை நிரப்புவதன் மூலமாகவே அலௌகீக சேவை நடைபெறுகிறது. எத்தகைய அலௌகீக சேவையை நீங்கள் செய்கிறீர்கள்? ஆத்மாவை பவர் ஹவுஸுடன் இணைக்கும் சேவையை செய்கிறீர்கள். ஒரு மின் கம்பியை மற்றதுடன்

இணைக்கும்போது ரப்பரை அகற்ற வேண்டியுள்ளது அல்லவா? இவ்வாறே உங்களை ஆத்மா என உணர்ந்து, சரீரத்தின் உணர்விலிருந்து விடுபட்டு தனியாக இருந்து, மற்றவர்களையும் தம் சரீரத்தின் உணர்விலிருந்து விடுபடச் செய்து தனிப்பட்டு இருக்குமாறு செய்யவேண்டும். இங்கு உள்ள பாடங்கள் எத்தனை, அவை யாவை? முக்கிய பாடங்கள் நான்கு. ஞானம், யோகம், தாரணை, மற்றும் சேவை. இவற்றிலும் முக்கியமானது எது? இங்கிருந்தே அக அமைதியின் ஸ்டாக்கை அதிகரித்திருத்து வருகிறீர்களா? ஆசீர்வாதம் எப்படி கிடைக்கிறது என்பது தெரியுமா? எவ்வளவுக்கெவ்வளவு ஆத்ம அபிமானியாகி வருகிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு நீங்கள் விரும்பாவிட்டாலும், கிடைத்துவரும். இங்கு ஸ்தூலத்தில் எவருக்கும் ஆசிர்வாதம் அளிப்பதில்லை, இங்கு தானாகவே கிடைக்கிறது. பாப்தாதாவின் ஆசீர்வாதம் இல்லையேல் இங்கு நீங்கள் எவ்வாறு வந்தடைய முடியும். ஒவ்வொரு வினாடியும் பாப்தாதா ஆசீர்வாதம் வழங்கி வருகின்றார் ஆனால் அதை அடைபவர்கள் தாம் பெறுவதற்கு ஏற்ப அதை நிரந்தரமாக வைத்திருக்கின்றனர். நல்லது

பார்ட்டிகளுடன் சந்திப்பு:

உங்களுக்கு வேறு ஒரு துணை இருக்கிறதா? உங்களுடன் உடன் இருக்கும் துணைவர் யார்? இங்கு சதா துணையாக பாபாவுடன் இருந்து வந்தால், அங்கும் துணையாக அவருடன் இணைந்து ராஜ்யம் நடத்துவீர்கள். ஆகவே துணைவரை ஒருபோதும் விலக்கக்கூடாது. சதுர்புஜ நிலை இணைந்த உருவில் விளங்குவதைப் போன்றே, இதுவும் இணைந்த உருவம்தான். சிவபாபாவை விட்டு ஒருபோதும் நீங்கள் விலகி தனிப்படக் கூடாது. 84-பிறவிகளில், 84-யுகல்களில், (ஜோடி) இப்படிப்பட்ட துணை உங்களுக்கு எப்போதாவது கிடைத்திருக்கிறதா? ஆகவே கல்பத்தில் ஒரே முறை கிடைப்பதை முழுமையாக உடன் வைத்திருக்க வேண்டும் அல்லவா? நாம் தம்பதிகள் என்பதை சதா நினைவில் வைத்திருக்க வேண்டும். தனிமையாக இருப்பதாக உணரக்கூடாது. உடலைப்பொருத்த அளவில் கடும் உழைப்பாளிகள் நீங்கள் என்பதைப் போன்றே, மனதைப் பொருத்த அளவிலும் நீங்கள் கடும் உழைப்பாளிகளா? எந்தச் சூழ்நிலையிலும் நீங்கள் உருகுவதில்லையே? கெட்டியான வஸ்து ஒருபோதும் உருகுவதில்லை. அவ்வாறே உங்களுடைய ஸ்திதி மற்றும் செயல் ஆகிய இரண்டும்

உறுதியானவையாக இருக்கட்டும். எதன் மீது அதிகமான அன்பு இருக்கிறதோ, அதை சதா உடன் வைத்திருப்பது ஒரு பழக்கம். ஆகவே நான் யுகல் மூர்த்தி என்று உங்களை நீங்கள் கருதி வருகிறீர்களா? துணைவர் உடன் இருந்து வரும்போது, மாயை அணுக முடியாது. யுகல் மூர்த்தி என்று கருதுவது ஒரு பெரிய யுக்தியாகும். ஒவ்வொரு அடியிலும் உடன் இருந்து வருவதால். தைரியம் ஏற்படுகிறது. சக்தியும் இருப்பதால், மாயை வரவே முடியாது.

நீங்கள் இறை மாணவர்கள். இரட்டை மாணவர் ஆன பிறகு வருங்காலத்திற்காக எந்த லட்சியத்தைக் கொள்ள வேண்டும்? எதை உயர்ந்த பதவி என்று கருதுகிறீர்கள்? லட்சுமி நாராயணன் ஆவீர்களா? இத்தகைய லட்சியத்துடன் இருக்கிறீர்கள் எனில், இந்த லட்சியத்துடன் எதை தாரணை செய்ய வேண்டும்? தெய்வீக குணங்களை தாரணை செய்ய வேண்டும். இவ்வளவு உயர்ந்த லட்சியத்துடன் இருந்தால், இத்தகைய உயர்ந்த தாரணையின் மீதும் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். சிறிய குமாரிகள் உயர்ந்த காரியங்களைச் செய்ய இயலும். உங்களுடைய உயர்ந்த ஸ்திதியில் இருந்து, எவருக்காவது ஞானத்தை வழங்கினால், அதன் பிரபாவம் ஒரு மூத்த சகோதரி கூறுவதைவிட அதிகமாக ஏற்படும். சிறியவரான நான் பெரிய காரியத்தை செய்து காட்ட வேண்டும் என்கிற லட்சியத்துடன் சதா இருந்து வர வேண்டும். சரீரம் சிறியதாக இருந்தாலும், ஆத்மாவின் சக்தி மிகப் பெரியதாகும். அதிகமான புருஷார்த்தம் (முயற்சி) செய்யும் விருப்பம் கொண்டிருப்பவருக்கு அதிகமான உதவியும் கிட்டும். உங்களுடைய விருப்பத்தைத் திடமாக வைத்திருந்தால் போதும். திடமான உதவியும் கிடைக்கும். மற்றவர் உங்களை அசைக்க எவ்வளவு முயற்சித்தாலும், இந்த சங்கல்பத்தை திடமானதாக வைத்திருக்க வேண்டும். சங்கல்பம் திடமானதாக இருந்தால், படைப்பும் திடமானதாகவே இருக்கும். உலகிய சேவையையும் செய்து வாருங்கள். இந்த உலகீய சேவையும் ஒரு சாதனமே ஆகும். இந்த சாதனத்தின் மூலமாகவும் சேவை செய்ய முடியும். இந்த சேவையின் சம்பந்தத்தில் எந்த ஒரு ஆத்மா வந்தாலும், அவருக்கு நற்செய்தியை அளிக்க இது ஒரு சாதனம் என்றே கருதுங்கள். உலகீய சேவையில் பல ஆத்மாக்கள் சம்பந்தத்தில் வருகின்றனர். ஆரம்பத்தில் இங்கு வந்தவர்களும் (ஆதிரத்தினங்கள்) லௌகீக சேவை செய்வதற்காக அவர்களுடைய வீட்டிற்கு அனுப்பப்பட்டனர் அல்லவா? அவ்வாறே

சேவைக்காகவே இந்த ஸ்தூல சேவையையும் நான் செய்து வருகின்றேன் என்று கருதுங்கள். இதனால் மனதும் உற்சாகம் அடையும். வருமானமும் அதிகரிக்கும். லௌகீகத்தையும் அலௌகீகம் என்றே கருதிச் செய்யுங்கள். இதனால் வேறு எந்த சூழ்நிலையும் உங்களை தன்வசப்படுத்தாது. அவ்யக்த ஸ்திதி அதிகரித்து வருவதற்கு ஏற்ப பேசுவதும் குறைந்து வரும். குறைவாகப் பேசுவதால், மிகுந்த லாபம் கிடைக்கும். பிறகு இந்த யோகத்தின் சக்தியின் மூலமாக சேவை செய்வீர்கள். யோக பலம் மற்றும் ஞான பலம் இரண்டும் இணைந்திருக்கும். இப்போது ஞான பலத்தின் மூலமாக சேவை நடந்து வருகிறது. யோக பலம் மறைவாக இருக்கிறது; ஆனால் எவ்வளவு யோக பலம் மற்றும் ஞான பலம் ஆக இரண்டும் சமமாக இருக்கிறதோ, அவ்வளவு வெற்றியும் கிடைக்கும். யோக பலம் எவ்வளவு இருந்தது, ஞான பலம் எவ்வளவு இருந்தது என்று நாள் முழுவதும் சோதனை செய்து வாருங்கள். இதில் எவ்வளவு வித்தியாசம் இருந்தது என்பது உங்களுக்குப் புலப்படும். சேவையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தால், விக்னங்கள், தடைகள் தாமாகவே அழிந்து விடும். திடமான நிச்சயத்தின் முன்னிலையில், எந்த இடையூறும் வர முடியாது. நீங்கள் சிறப்பாக முன்னேறி வருகிறீர்கள்.

சோர்வடையாமை மற்றும் ஏக்ரஸ் ஸ்திதி (ஒரே ஒருவரின் ரசனை) ஆகிய இரண்டும் நற்குணங்கள் ஆகும். சதா தந்தையைப் பின்பற்றி வாருங்கள். பிரம்மாபாபா சாகார உருவிலும் சோர்வின்றி, ஏக்ரஸ் ஸ்திதியில் நிலைத்திருந்து முன் உதாரணமாகத் திகழ்ந்தார். அவ்வாறே, நீங்களும் மற்றவர்களுக்கு முன் உதாரணமாக விளங்க வேண்டும். இதுவே சேவையாகும். சேவைக்கு அவகாசம் கிடைக்காவிட்டாலும், உங்களுடைய நடத்தையே சேவை செய்ய முடியும். (செயின்) வெறும் பேச்சின் மூலமாக சேவை நடைபெறாது. உங்களுடைய நடத்தை இந்த விசித்திரமான (உருவ மில்லா) தந்தையின் நினைவை நினைவூட்ட வேண்டும். இதுவும் சகஜமான சேவையே ஆகும். எவ்வாறு சிலர் தம் குருவின் அல்லது கணவரின் படத்தை லாக்கெட்டில் வைத்துக் கொள்கின்றனர் அல்லவா? இது அன்பின் அடையாளமாகும். ஆகவே உங்களுடைய நெற்றி இந்த விசித்திரமான தந்தையின் சத்திரத்தைக் (நடைமுறை ஒழுக்கம்) காட்ட வேண்டும். உங்களுடைய கண்கள் இந்த விசித்திரமான தந்தையின் சரித்திரத்தை காட்ட வேண்டும். இத்தகைய அழியாத லாக்கெட்டை

அணிந்து கொள்ளுங்கள். இதனால் உங்களுக்கும் தந்தையின் நினைவும் இருக்கும். சேவையும் நடைபெறும்.

மதுவனத்திற்கு வந்து முக்கியமான எந்தக் காரியத்தை செய்தீர்கள்? எவராவது ஒரு சுரங்கத்திற்குச் சென்றால் அங்கு அவர் என்ன செய்வார்? அந்த சுரங்கத்திலிருந்து எவ்வளவு எடுக்க முடியுமோ, அவ்வளவு எடுத்துக் கொள்வார். குறைந்த அளவு எடுத்துக் கொள்ளமாட்டார். அவ்வாறே இந்த மதுவனமும் சர்வ பிராப்திகள் அடங்கிய சுரங்கம். ஆகவே நீங்கள் சுரங்கத்தை நாடி வந்திருக்கிறீர்கள் அல்லவா? பாக்கியுள்ள சேவைக் கேந்திரங்கள் அனைத்தும் இந்த சுரங்கத்தின் கிளைகள். சுரங்கத்தை அணுகும்போது எவ்வளவு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதில் மிகுந்த கவனம் இருக்கும். ஆகவே இங்கும் எவ்வளவு எடுத்துக் கொள்ள வேண்டுமோ, அவ்வளவு எடுத்துக் கொள்ளலாம். இங்குள்ள ஒவ்வொரு வஸ்துவும், ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் மிகுந்த பாடம் மற்றும் சக்தியை வழங்கவல்லவை. இங்கு வருபவர்கள் அனைவரும் குறைந்த அளவையே எடுத்துக் கொள்ளாமல் மிகுதியாக எடுத்துச் செல்லவேண்டும் என்பதையே பாப்தாதா விரும்புகின்றார். குழந்தைகள் மீது பாப்தாதாவுக்கு மிகுந்த அன்பு இருக்கின்றது. ஆகவே, ஒவ்வொருவரையும் சம்பன்னம் ஆக்க விரும்புகின்றார். இங்கு எடுத்துக் கொள்வதில் எவ்வளவு சம்பன்னம் ஆகின்றனரோ, அவ்வளவு எதிர்காலத்திலும் ராஜ்யத்தை அடைவதிலும் சம்பன்னமாக இருப்பார்கள். ஆகவே இந்த மதிப்பு உயர்ந்த நாளின் ஒரு வினாடியைக்கூட வீணாக்கக்கூடாது. ஒவ்வொரு வினாடியும் கோடிக்கணக்கான மடங்கு பலனை அடைய முடியும். பன்மடங்கு சௌபாக்கியசாலியாக வேண்டும். இதனால்தான் இந்த பூமியை வந்தடைந்துள்ளீர்கள்! இந்த பத்மாபத சௌபாக்கியம் சதா நிலைத்திருப்பதற்காக, சம்பூர்ண ஸ்திதியை அடைவதற்கு சதா புருஷார்த்தம் செய்து வருவதில் கவனம் செலுத்தி வர வேண்டும். விதைக்கு ஏற்ப பலன் கிடைக்கும். ஆகவே, நீங்கள் அனைவரும் விதைகள். அஸ்திவாரம் பலமாக இருந்தால், கட்டிடமும் ஸ்திரமாக இருக்கும். ஆகவே நாம் அஸ்திவாரம், நமது ஆதாரத்தில் தான் முழு கட்டிடமும் நிலைத்திருக்கிறது என்பதை சதா நீங்கள் உணர்ந்திருக்க வேண்டும்.

# 1970 அவ்யக்த முரளி

உங்களுடைய நினைவுக்குப் பதில் கிடைக்கிறதா? பாப்தாதா உங்கள் அனைவருடனும் உடன் இருந்தே வருகின்றார். ஏன் என்றால், சாகாரத்தில் (உடலின் மூலம்) அவர் ஒரே இடத்தில்தான் உடன் இருக்க முடிந்தது ஆனால் (அவ்யக்த உடலில்) இப்போது அவர் அனைவருடனும் கூடவே இருக்க முடியும். ஒரே ஒரு இணைந்த கருத்தினால், நினைத்ததை செய்து முடிக்க முடியும் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும். இந்த குணத்தை நடைமுறையில் கொண்டு வர வேண்டும். எத்தகைய சூழ்நிலை ஏற்பட்டாலும், நீங்கள் உங்களை ஸ்திரமாக வைத்திருக்க வேண்டும். மற்றவர்களுக்கும் உங்களுடைய நற்குணங்களை தானம் செய்ய வேண்டும். தானம் செய்வதால் அதன் பலன் பிற்காலத்தில் கிடைக்கிறது அல்லவா? இந்த குணத்தை தானம் செய்வதாலும், எதிர் காலத்தில் மிகுந்த பலன் கிடைக்கும். ஒரே இணைந்த கருத்துடையவர்கள், அவரது அன்பிற்கு பாத்திரமாகிறார்கள். பாப்தாதா இருவர் என்றாலும் ஒருவர் தான் அல்லவா! அவ்வாறே குழுவில் எண்ணற்றவர்கள் இருப்பினும் அனைவரும் ஒருங்கிணைந்த கருத்துடன் இருந்து வர வேண்டும்.

தந்தையின் வீட்டிற்கு வந்தவுடன் முக்கியமான கஜானா கிடைத்திருக்கிறதா? தந்தையின் வீட்டில் பல்வேறு சிறப்புகள் நிறைந்துள்ளன அல்லவா? உங்களுடைய வீட்டில் உங்களுடைய உண்மையான சொரூபத்தில் நிலைத்திருக்க வந்திருக்கிறீர்கள். உங்களுடைய உண்மையான சொரூபம் மற்றும் உண்மையான ஸ்திதி என்ன என்பது நினைவுக்கு வருகிறதா? ஆத்மாவின் உண்மையான ஸ்திதி எது? முதன்முதலில் ஆத்மா பரந்தாமத்தில் வசிக்கும்போது, அது சர்வ குணங்கள் நிறைந்த (பிந்து) சொரூபமாகத் திகழ்ந்தது. அவ்வாறே, இங்கும். உங்களுடைய ஸ்திதியை அனுபவம் செய்வதற்காக நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். அந்த ஸ்திதியை சுவைப்பதற்காகவே நீங்கள் மதுவனத்திற்கு வந்திருக்கிறீர்கள். அதை சுவைத்த பிறகு அதை நிரந்தரமாக உங்களுடையதாக்கிக் கொள்ளவேண்டும். இதன் பெயரே மதுவனம். மது என்றால் இனிமை! அதாவது, அன்பு மற்றும் சக்தி ஆகிய இரண்டையும் வரதானத்தின் உருவில் பிராப்தியாக அடைய வேண்டும். இங்கு இந்த இரண்டும் வரதான உருவில் கிடைக்கின்றன ஆனால் பிறகு வெளியே சென்ற பிறகு இந்த இரு விஷயங்களுக்காகவும் மிகுந்த பிரயத்தனம் (முயற்சி) செய்ய வேண்டியிருக்கும். ஆகவே இங்கு வரதான

# 1970 அவ்யக்த முரளி

உருவில் பிராப்தி ஆகின்றவற்றை (கிடைத்தவற்றை) நிரந்தரமாக இருக்குமாறு பிராப்தி செய்து கொள்ள வேண்டும். வரதானத்தின் பிராப்தி ஆக்கக் கூடியவற்றை பிறகு அவற்றை ஏன் மிகுந்த பிரயத்தனம் செய்து அடைய முயற்சி செய்யவேண்டும்? குரு வரதானத்தை அளிக்கும்போது நீங்கள் என்ன செய்யவேண்டும்? நீங்கள் உங்களை அவருக்கு அர்ப்பணம் செய்து விடவேண்டும். அப்போது தான் வரதானம் கிடைக்கும். அவ்வாறே இங்கும், நீங்கள் எந்த அளவு உங்களை அர்ப்பணம் செய்து விடுகிறீர்களோ, அந்த அளவு வரதானமும் பிராப்தி ஆகும். அனைவருக்கும் வரதானம் கிடைக்கிறது ஆனால் எவர் தம்மை மிகுதியாக அர்ப்பணம் செய்கின்றாரோ அவர் அவ்வளவு அதிகமாக வரதானத்தை அடைய பாத்திரம் (தகுதி) ஆகின்றார். வரதானங்களின் மூலமாக உங்களுடைய மடி ஒருபோதும் காலியாகாதவாறு நிறைத்துக் கொள்ளுங்கள். எவ்வளவு நிறைத்துக் கொள்ளவேண்டுமோ, அவ்வளவு நிறைத்துக் கொள்ள முடியும். இந்த ஒரு சில தினங்களில், மிகுந்த லாபத்தை அடைய வேண்டும் என்று மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். ஒவ்வொரு வினாடியையும் சிறப்பாக உபயோகித்துக் கொள்வதற்கான நாள் ஆகும் இது. இங்குள்ள ஒவ்வொரு வினாடியும் மிகுந்த நன்மை அல்லது நஷ்டத்தை ஏற்படுத்த வல்லதாகும். ஒரே வினாடியில் ஒரு வருடத்தின் லாபத்தை கோட்டை விடுபவர்களும் உள்ளனர், இல்லையா? ஆகவே இங்குள்ள ஒரு வினாடிகூட அவ்வளவு மதிப்பானதாகும்.

தியாகத்தின் மூலமாகவே பாக்கியம் உருவாகிறது; ஆனால் தியாகம் செய்தபிறகு, அது பற்றிய சங்கல்பம்கூட மனதில் எழக் கூடாது. ஒருவர் பலி கொடுக்கும்போது அது (ஆடு) சிறிதளவு கத்தினாலோ, அல்லது கண்ணில் ஒரு சொட்டு கண்ணீர் வந்தாலும் அதை தேவியின் முன்னிலையில் பலியாக்க மாட்டார்கள். ஒரே வெட்டு என்பதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள் அல்லவா? ஒரு வஸ்துவை ஒரே வெட்டில் இரு துண்டுகள் ஆக்குவதற்கும், பல வெட்டுகள் வெட்ட வேண்டியதற்கும் இடையில் மிகுந்த வித்தியாசம் உள்ளது. அல்லவா? ஒரே வெட்டில் பலி கொடுப்பதே மிகச் சிறந்த பலி ஆகும். பாப்தாதாவும் எத்தகைய குழந்தைகளை சுவீகாரம் செய்கின்றார்? எவருக்கு மனதில் கூட (தியாகத்தின்) அந்த சங்கல்பம் வருவதில்லையோ அதையே மகாபலி என்று கூற முடியும். அத்தகைய மகாபலிக்கே மகா பலம் பிராப்தி

ஆகின்றது. சர்வ சக்திவானின் குழந்தைகள், இருப்பினும் சக்தி இல்லை! தந்தையின் சொத்துக்களுக்கு உரிமையை அடைய நீங்கள் விரும்புகிறீர்கள் அல்லவா? சர்வ சக்திவானான தந்தையின் சர்வ சக்திகள் என்கிற சொத்துக்கள் உங்களுடைய பிறப்புரிமை என்பதை சதா உங்களுடைய முன்னிலையில் வைத்திருங்கள். சர்வ சக்திவானின் முன்னிலையில் பலவீனம் நிற்க முடியுமா என்ன? இன்று முதல் உங்களுடைய பலவீனங்கள் முடிவடைந்து விட்டன.

நீங்கள் சர்வசக்திகளின் சொரூபம் அல்லவா? பாண்டவர்களும் சக்திகள் தான். ஒரு தீபத்தின் மூலம் பல தீபங்களை ஏற்றுகின்றனர். நீங்கள் இரட்டை ரண சிகிச்சை செய்கிறீர்களா? சரீரம் மற்றும் ஆத்மா என்று இரண்டை நீங்கள் கூறுவதால், இரட்டை சந்தர்ப்பம் கிடைக்கிறது. லௌகீக சேவையில் கிடைப்பதைப் போன்றே. இந்த ஈஸ்வரிய சேவையில் எத்தகைய சம்பளம் உங்களுக்குக் கிடைக்கிறது? (சுவர்கத்தின் ராஜ்யம் கிடைக்கிறது) அங்கோ கிடைக்கத்தான் செய்கிறது ஆனால் இங்கு என்ன கிடைக்கிறது? பிரத்யட்ச பலன் அனுபவம் ஆகின்றதா? எதிர்காலப் பலன் கிடைக்கவே செய்யும் ஆனால் இது எதிர்காலத்தின் பலனை விட பல மடங்கு உயர்ந்தது. அது இப்போதுதான் பிராப்தி ஆகின்றது. இப்போது உங்களுக்கு கிடைத்து வரும் ஈஸ்வரிய அத்தீந்திரிய சுகம் எதிர்காலத்தில் கிடைக்காது. இத்தகைய கஜானா இப்போது தந்தையின் மூலமாக கிடைக்கின்றது. அங்கு அனேக பிறவிகளில் இந்திரிய சுகம் இங்கு ஒரே வினாடியில் அத்தீந்திரிய சுகம் அனுபவம் ஆகின்றதா? சிவபாபாவை வாழ்க்கைத்துணை ஆக்கி விட்டீர்களா? அந்த தேகதாரியான வாழ்க்கைத்துணை சுகத்தின்போதுதான் துணையாகின்றார் ஆனால் இவர் துக்கத்தின்போதும் துணைவர் ஆகின்றார். இத்தகைய துணைவரை விட்டு ஒரு கணம்கூட பிரிந்திருக்கக் கூடாது. உடன் வைத்திருப்பது என்றால் சக்தி உருவம் ஆவது என்று பொருள். இந்த பிராமண குடும்பத்தைப் பார்த்தீர்களா? இவ்வளவு பெரிய பரிவாரம் எப்போது கிடைக்கின்றது? இந்த சங்கமயுகத்தில் மட்டுமே இத்தகைய பெரிய பரிவாரம் கிடைக்கின்றது. நாம் இவ்வளவு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற போதை இருக்கின்றதா? பெரிய பரிவாரத்திற்கு ஏற்ப அதிகமான குஷி ஏற்படுகிறது. இந்த முழு உலகிலேயே நம் ஒரு

சிலருக்கே இத்தகைய பெரிய குடும்பம் கிடைக்கிறது. ஆகவே அந்த நிச்சயம் மற்றும் போதை இருக்க வேண்டும்.

கோடிக்கணக்கானவர்களில் ஒரு சிலரான நாம்தான் புகழப்படுகிறோம் என்கிற போதை இருக்க வேண்டும். இத்தகைய சௌபாக்கியத்தை அடைவதற்கு நாம் என்ன செய்திருக்கிறோம் என்று ஒருபோதாவது சிந்தித்தீர்களா? திடீரென்று லாட்டரி கிடைத்தது. லாட்டரி கிடைத்தால் குஷி ஏற்படுகிறதல்லவா? மேலும் இது அவினாசியான லாட்டரி ஆகும். இது ஒருபோதும் அழிவதில்லை. இத்தகைய லாட்டரி ஆத்மாக்களாகிய நமக்கு கிடைத்திருக்கிறது என்கிற போதை இருக்கிறதா? மூலைமுடுக்கெல்லாம் தேடி நம்மை தேர்ந்தெடுத்திருக்கிறார் பாப்தாதா. தேடி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரத்தினங்களில் நீங்கள் மிகவும் விசேஷமானவர்கள். இது நினைவில் இருக்கின்றதா? பாப்தாதாவுக்கு எத்தகைய ரத்தினம் உகந்ததாக உள்ளது? சாதாரணமானவர்கள்! இந்த குஷி சதா நிரந்தரமாக இருக்கட்டும். தீபத்தை ஏற்றும்போது, அது சதா எரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்துகின்றனர். எண்ணை மற்றும் ஒளியின் மீது கவனம் செலுத்துகின்றனர். அவ்வாறே இங்கும், குஷி என்கிற தீபம் சதா எரிந்து கொண்டிருக்க, இரு விஷயங்களின் மீது கவனம் செலுத்த வேண்டும். ஞானம் என்கிற எண்ணை மற்றும் யோகம் என்கிற திரி. இந்த இரண்டும் சரியாக இருந்தால், குஷி என்கிற தீபம் அவினாசியாக இருக்கும். ஒருபோதும் அணைந்து விடாது.

15-நாட்கள் கூட இந்த சங்கம யுகத்தைப் பொருத்தவரையில் மிக அதிகமானதே ஆகும். நாம் 15-நாள் குழந்தைதான் என்று ஒருபோதும் உங்களைத் தாழ்வாகக் கருதக்கூடாது. ஏன் என்றால் இந்த சங்கம யுகத்தின் நாட்கள்கூட குறைவானதே ஆகும். இந்த குறைந்த கணக்குப்படி இந்த 15-நாட்கள்கூட அதிகமானதே ஆகும். ஆகவே இப்போது இறுதியாக வருபவர்கள் முதன்மையாக வர வேண்டும் என்றே நீங்கள் உங்களைக் கருத வேண்டும். இறுதியில் வருபவர்கள் வரும்போதே, தீவிர புருஷார்த்தத்தில் ஆழ்ந்து விடுகின்றனர். குழந்தைகள் தைரியம் கொள்கின்றனர்; தந்தை அதற்கு ஏற்ப உதவி செய்கின்றார். ஒரு குமாரி 100-பிராமணர்களைவிட உத்தமமானவராகக் கருதப்படுகிறார். ஒருவரிடத்தில் 100-மடங்கு சக்தி நிறையும் போது அவரால் எதைச் செய்ய

# 1970 அவ்யக்த முரளி

இயலாது! உங்களுடைய பாதங்களை உறுதியுடன் இருக்குமாறு செய்தால் போதும். மற்றவர் எவ்வளவு முயன்றாலும் அசைக்க முடியாதபடி அது இருக்க வேண்டும். அச்சல்கர் உங்களுடைய நினைவுச்சின்னம் ஆகும். அச்சல் என்றால், எவரும் அசைக்க முடியாதவர் என்று பொருள். மூன்று மாதங்களில் மூன்று ஆஸ்திகளை அடைந்தீர்களா? பாப்தாதா எந்த மூன்று ஆஸ்திகளை வழங்குகின்றார்? சுகம், சாந்தி மற்றும் சக்தி! இங்கு எவ்வளவு இந்த அதிகாரத்தை அடைகிறீர்களோ, அதே அளவு அங்கு ராஜ்ய அதிகாரி ஆவீர்கள். முழு (சம்பூர்ண) அதிகாரத்தை அடையும் லட்சியத்துடன் இருக்க வேண்டும். ஏன் என்றால் தந்தையும் சம்பூர்ணமானவர். துணைவர் இருந்தபோதிலும், நீங்கள் தனியாக இருக்கிறீர்களா? அல்லது இணைந்த சொரூபத்தில் இருக்கிறீர்களா? தனிப்பட்ட உருவம் எது? ஆத்மா தனியானது அல்லவா? திரும்பிப்போவதும் தனியாகத்தான். ஆகவே இணைந்த சொரூபத்தில் பாகத்தைச் செய்தாலும், ஆத்மீக ஸ்திதியில் இருக்க வேண்டும் அதாவது தனியாக இருக்க வேண்டும். பிறகு ஆன்மீக இணைந்தவர் ஆக வேண்டும். ஆகவே தந்தை மற்றும் குழந்தை என்கிற இணைந்த உருவம். உலகில் இருப்பது தேகம் சார்ந்த யுகல். ஆத்மா பரமாத்மா என்பது யுகல் தான். ஆத்மா சஜினி, (மணவாட்டி) சீதா எனப்படுகிறது. பரமாத்மா சாஜன், (மணவாளர்) ராம். ஆன்மீக யுகல் மூர்த்தி ஆக வேண்டும். அது போதும். தேகத்தின் யுகல் உருவம் அல்ல. தேகதாரியின் யுகல் உருவம் அழிந்து விட்டது. பல பிறவிகளாக தேகதாரிகளை யுகல் உருவில் பார்த்து வந்தீர்கள். இப்போது, ஆத்மா மற்றும் பரமாத்மா என்கிற யுகல் உருவத்தை உருவாக்க வேண்டும். இத்தகைய ஸ்திதியில் இருக்கிறீர்களா? இந்த புதுமையான யுகலின் முன்னிலையில் அந்த யுகல் ஒன்றுமே இல்லை. இதனால் தேகத்தின் பாவனை அழிந்து விடுகிறது. அனைத்திலும் பிரியமான வஸ்து எது? பிரியமான வஸ்து நன்றாக உள்ளது அல்லவா? ஆகவே இந்த பிரியமான வஸ்துவை விடுத்து வேறு ஒன்றை எவ்வாறு பிரியமான வஸ்துவாக்க முடியும்? ஆகவே தனித்தும் இருக்க வேண்டும். யுகலாகவும் இருக்க வேண்டும்.

வந்தவுடனேயே சிலருக்கு லாட்டரி கிடைத்து விடுகிறது! வேறு சிலருக்கு பிரயத்தனம் செய்வதன் மூலமாகவே லாட்டரி கிடைக்கிறது. இத்தகைய உயர்ந்த பாக்கியசாலியாக உங்களைக் கருதுகிறீர்களா? குமாரர்களுக்கு இது சரளமான வழியாகும். ஏன் என்றால் ஏறியுள்ள தலைகீழான

ஏணியிலிருந்து மற்றவர்கள் இறங்க வேண்டியிருக்கிறது. இதனால் குமார், குமாரிகளுக்கு, இது மேலும் சகஜமானதாகும். எவர் பந்தனமுக்தியில் (கர்மத்தளை) இருக்கிறாரோ, அவர் விரைவாக ஓட முடிகிறது. ஆகவே சகல விஷயங்களிலிலும் நிர்பந்தன ஸ்திதியில் இருக்க வேண்டும். எந்த விதமான சூழ்நிலையிலும் உங்களுடைய ஸ்திதியை உயர்ந்ததாக வைத்திருக்க வேண்டும். உயர்ந்த வாழ்க்கையை அடைய வேண்டும் என்கிற லட்சியத்திலிருந்து விலகி தூரமாகச் செல்லக் கூடாது. நல்லது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 24.01.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமணர்களின் முக்கிய தொழில் சமர்ப்பணம் செய்வது, செய்விப்பது!

உங்களுடைய வாழ்க்கைப் படகை எவரிடத்தில் கொடுத்து விட்டீர்கள்? (சிவபாபாவிடம்) முழுமையாக ஸ்ரீமத்படி நடந்து வருகிறீர்களா? ஸ்ரீமத்படி நடப்பது என்றால், ஒவ்வொரு காரியத்திலும் அலௌகீகத்தை கொண்டு வருவதாகும். சிவபாபாவின் ஆஸ்திக்கு முழு அதிகாரி என்று உங்களை உணருகிறீர்களா? எவர் ஆஸ்திக்கு அதிகாரி ஆகின்றாரோ, அவருக்கு அனைத்தின் மீதும் அதிகாரம் (உரிமை) இருக்கும். அவர் எந்த ஒரு விஷயத்திலும் அடிமை ஆகமாட்டார். மாறாக தேகம், தேகத்தின் சம்பந்திகளுக்கு அல்லது தேகத்தைச் சேர்ந்த ஏதாவது ஒரு வஸ்துவுக்கு அடிமையாகிறவர் ஒருபோதும் அதிகாரி ஆக முடியாது. அதிகாரி அடிமையாவதில்லை. சதா உங்களை அதிகாரி என்று உணர்ந்தால், மாயையின் எந்த உருவத்திற்கும் அடிமையாவதிலிருந்து தப்பிவிடுவீர்கள். அலௌகீக கர்மம் எவ்வளவு செய்தோம், லௌகீக கர்மம் எவ்வளவு செய்தோம் என்பதை சதா சோதனை செய்துவாருங்கள். அலௌகீக கர்மம் மற்றவர்களையும் அலௌகீகம் ஆவதற்கு பிரேரணை (தூண்டுதல்) அளிக்கும். உயர்ந்தவர்களிலும் உயர்ந்தவரான தந்தையின் குழந்தைகளான நாம் உயர்ந்ததிலும் உயர்ந்த ராஜ்ய பதவியை அடைவோம் என்கிற லட்சியத்துடன் நீங்கள் இருக்கிறீர்களா அல்லது கிடைத்தது போதும் என்று கருதுகிறீர்களா? எப்போது நீங்கள் உயர்ந்தவர்களிலும் உயர்ந்தவரான தந்தையின் குழந்தை ஆகி விட்டீர்களோ, அப்போது உங்களுடைய லட்சியமும் உயர்ந்ததாகவே இருக்க வேண்டும். எப்போது அவினாசியான ஆத்மீக ஸ்திதியில் இருக்கிறீர்களோ, அப்போதுதான் அவினாசியான குஷியையும் அடைய முடியும். ஆத்மா அவினாசியானது அல்லவா?

மதுவனத்திற்கு வந்த பிறகு, மதுவனத்தின் வரதானங்களை பிராப்தி செய்தீர்களா? எந்தவித பிரயத்தனமும் இன்றி சகஜமாக வரதானம்

பிராப்தி ஆகின்றது. அவ்யக்த ஸ்திதியில் அவ்யக்த ஆனந்தம், அவ்யக்த சினேகம், அவ்யக்த சக்தி ஆகிய இவை அனைத்தும் சகஜமான ரீதியில் பிராப்தி ஆகின்றன. இத்தகைய வரதானம் சதா நிலைத்திருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தவேண்டும். ஆகவே சதா வரதாதாவின் நினைவில் இருந்து வருவதன் மூலமாக இந்த வரதானமும் நிரந்தரமாக இருந்து வரும். மாறாக வரதாதாவை மறந்து விட்டால், வரதானமும் மறைந்து விடும். ஆகவே வரதாதாவை விட்டு ஒருபோதும் விலகி நிற்காதீர்கள்.

முழு உலகிலேயே உங்களுக்குப் பிரியமான வஸ்து எது? சிவபாபா! அவ்வாறென்றால், அவருடைய நினைவில் நீங்கள் இயற்கையாகவே நிலைத்திருக்க வேண்டும். மிகவும் பிரியமானவர் இவர் என்றால், அவரை நீங்கள் ஏன் மறந்து விடுகிறீர்கள்? வேறு ஏதோ ஒன்று நினைவுக்கு நிச்சயமாக வந்திருக்க வேண்டும். காரணம் ஏதும் இல்லாமல் எந்த ஒரு விஷயமும் இருக்க முடியாது. நினைவு இல்லாததற்கும் காரணம் இருக்க வேண்டும். நீங்கள் மறந்து விடுவதால், பிரியமான வஸ்து விலகி தொலைவில் சென்று விடுகிறது. மறந்து விடுவதற்கான காரணம் உங்களுடைய பலவீனம் தான்! உங்களுக்கு கிடைத்துள்ள ஸ்ரீமத்படி சரிவர நடந்து வராததால், பலவீனம் ஏற்பட்டுவிடுகிறது. பலவீனத்தினால், நினைவு மறந்து விடும் நிலை ஏற்பட்டு விடுகிறது. நினைவு இல்லாததால், பிரியமான வஸ்துவை மறந்து விடுகிறீர்கள். ஆகவே கர்மம் செய்வதற்கு முன்பாக ஸ்ரீமத்தை நினைவில் வைத்து பிறகு, ஒவ்வொரு கர்மமும் செய்யுங்கள். பிறகு அந்த கர்மம் (செயல்) சிரேஷ்டமானதாகி விடும். சிரேஷ்டமான கர்மத்தினால், வாழ்க்கையும் இயற்கையாகவே சிரேஷ்டமானதாகி விடுகிறது. ஆகவே ஒவ்வொரு கர்மத்திற்கும் முன்பாக சோதனை செய்யவேண்டும். கர்மம் செய்த பிறகு சோதனை செய்தால், ஏற்கனவே செய்யப்பட்ட தவறான கர்மம், விகர்மம் ஆகி விடுகிறது. ஆகவே முதலில் சோதனை செய்து பிறகே, கர்மம் செய்யுங்கள்.

ஈஸ்வரிய படிப்பை மற்றவர்களுக்கு சகஜமாக, சரள ரீதியில் அளிக்கும் வழி உங்களுக்குத் தெரியுமா? ஒரே வினாடியில் மற்றவருக்கு தந்தையின் அறிமுகத்தை அளிக்க முடியுமா? எந்த அளவு மற்றவர்களுக்கு அறிமுகத்தை அளிக்கின்றீர்களோ அந்த அளவு உங்களுக்கு எதிர்காலத்தில் நற்பலன் கிடைக்கும். இங்கு நீங்கள் அளிக்க வேண்டும்.

அங்கு நீங்கள் அடைய வேண்டும். அதாவது நீங்கள் அடைந்துகொண்டே இருக்க வேண்டும். எவ்வளவு அளிக்கிறீர்களோ, அவ்வளவு நாம் அடைந்து வருகிறோம் என்றே கருதவேண்டும். இந்த ஞானத்தின் இக்காலத்தின் பிரத்யட்ச பலன் மற்றும் வருங்காலத்தின் அனுபவம் செய்ய வேண்டும். இக்காலத்தின் பிராப்தியின் ஆதாரத்தில்தான் எதிர்காலத்தின் பலனை உணரமுடியும். இக்காலத்தின் அனுபவம் வருங்காலத்தைத் தெளிவாக உணர்த்துகிறது.

உங்களை எந்த உருவில் உணர்ந்து முன்னேறி வருகிறீர்கள்? நான் சக்தி, ஜெகத் மாதா இத்தகைய உணர்வு இருக்கின்றதா? ஜெகத் மாதா என்கிற உருவில் உலகிற்கு நன்மை புரிகின்ற தன்மை இருக்கும். சிவசக்தி உருவில் எந்த பலவீனமும் எதிரில் நிற்க முடியாது. ஆகவே நான் சக்தி, ஜெகத் மாதா என்கிற இரு உருவங்களையும் நினைவில் வைத்திருந்தால்தான், மாயாஜீத் ஆக முடியம். விஸ்வ கல்யாணம் என்கிற பாவனையின் காரணமாக ஏதாவது ஒரு ஆத்மாவுக்கு நன்மை ஏற்படுத்துவதற்கு நிமித்தம் ஆவீர்கள். உங்களுடைய சம்பந்தம் அல்லது உங்களுடைய சரீரத்துடன் நஷ்டோமோகா ஆகி விட்டீர்களா? நஷ்டோமோகாவின் இறுதி ஸ்திதி எந்த அளவு அமைந்திருக்கிறது? எந்த அளவு நஷ்டோமோகா ஆகிறீர்களோ அந்த அளவு ஸ்மிருதி சொரூபம் ஆவீர்கள். ஆகவே ஸ்மிருதியை சதா நினைவில் வைத்திருப்பதற்கான சாதனம் நஷ்டோமோகா ஆவது. நஷ்டோமோகா ஆவது சகஜமாக இருக்கிறதா அல்லது கடினமாக இருக்கிறதா? எப்போது நீங்களே உங்களை சமர்ப்பணம் செய்து விடுகிறீர்களோ, அப்போது அது எளிதாகி விடும். மாறாக சமர்ப்பணம் செய்யாமல் உங்களிடத்திலேயே வைத்திருந்தால், அது கடினமானதாக இருக்கும். நஷ்டோமோகா ஆவதை எளிதாகச் செய்வதற்கு முக்கிய சாதனமாவது சமர்ப்பணம் செய்து விடுவதே ஆகும். தந்தைக்கு எது தேவையோ, அதை உங்கள் மூலமாக செய்து விடுவார். தானியிங்கி யந்திரங்கள் மூலமாக தொழிற்சாலையின் சகல காரியங்களும் நடைபெறுகின்றன. யந்திரங்களின் வேலை தொழிற்சாலையை இயக்குவது. அவ்வாறே, நாம் நிமித்தமானவர்கள். செய்விப்பவர் எப்படித் தேவையோ, அப்படியே நம்மை செய்விக்கட்டும். இவ்வாறு உணரும்போது, எந்த ஒன்றும் கடினமானதாக இருக்காது. இந்த ஸ்திதியை நாளுக்கு நாள் பலமானதாக செய்து வர வேண்டும். இந்த முக்கியமான விஷயத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும். தந்தையின்

## 1970 அவ்யக்த முரளி

முன்னிலையில் எவ்வளவு உங்களை சமர்ப்பணம் செய்கிறீர்களோ, அந்த அளவு தந்தையும் குழந்தைகளின் முன்னிலையில் தம்மை சமர்ப்பணம் செய்து கொள்கிறார். அதாவது, தந்தையின் கஜானாக்கள், குழந்தைகளைச் சேர்ந்தவையாகி விடுகின்றன. உங்களுடைய குணங்களை மற்றவர்களுக்கு வழங்குவது ஏன் கடினமாக இருக்கிறது? சமர்ப்பணம் செய்வது மற்றும் செய்விப்பது; இதுவே பிராமணர்களின் தொழில் ஆகும்! பிராமணர்களின் தொழில் பிராமணர்களைத் தவிர வேறு எவருக்கு அது தெரியும்? தந்தை எவ்வாறு குறைவானதினால் திருப்தி அடைவதில்லையோ அவ்வாறே குழந்தைகளும் குறைந்தை அளவினால் திருப்தி அடைந்து விடக்கூடாது.

நிச்சயதன்மையின் அடையாளம் எது? வெற்றி! எவ்வளவு நிச்சயபுத்தி உள்ளதோ, அந்த அளவே சகல விஷயங்களிலும் வெற்றி காணப்படும். நிச்சயபுத்தி ஒருபோதும் தோல்வி அடைவதில்லை. தோல்வி ஏற்பட்டால், நிச்சயபுத்தி குறைவாக உள்ளது என்று உணர வேண்டும். நீங்கள் வெற்றி ரத்தினங்கள் என்று கருதவேண்டும். விக்னம் (தடைகள்) வரும். அதை முடிப்பதற்கான யுக்தியாவது, அதனை ஒரு சோதனைத் தாள் என்று கருதுவதே ஆகும். சோதனைத் தாளில் பல விதமான கேள்விகள் இருக்கும். சில மனதைப் பற்றி, வேறு சில உலகத்தில் நிலவும் கருத்து பற்றி, வேறு சில சம்பந்தம் பற்றி, வேறு சில தேசத தினரைப் பற்றி என்று அவை பலவகைப்பட்டதாக இருக்கும் ஆனால் இதைப் பற்றி அச்சம் அடையக்கூடாது. மாறாக அதன் ஆழத்தில் செல்லவேண்டும். மற்றவர்களை ஈர்த்து உங்களை அணுகச் செய்வது போன்ற சூழ்நிலையை அமைக்க வேண்டும். எந்த அளவு அவ்யக்த்த சூழ்நிலையை அமைக்கிறீர்களோ, அந்த அளவு, மற்ற அனைவரும் தாமாகவே உங்களை வந்து அணுகுவார்கள். பாதையில் நடந்து வரும்போது, ஏதாவது ஒரு நறுமணம் வீசினால், அங்கு சென்று அது என்ன என்று பார்க்க இதயம் விழைகிறது அல்லவா? அவ்வாறே அந்த அவ்யக்த நறுமணம் மற்றவர்கள் விரும்பாவிட்டாலும் தானாகவே அது அவர்களை ஈர்த்து விடும்.

நீங்கள் கொண்டுள்ள லட்சியத்திற்கு ஏற்ப உங்களுடைய நடவடிக்கைகளும் இருக்க வேண்டும் முயற்சி செய்வதில் கவனக்குறைவாக இருந்தால் நீங்கள் எவ்வாறு முன்னேற முடியும்?

பார்ப்போம் என்று கூறிவந்தால், பார்ப்போம் என்கிற வார்த்தையிலேயே நீங்கள் நின்று விடுவீர்கள். நிச்சயமாக செய்வோம் என்கிற குறிக்கோளுடன் இருக்க வேண்டும். பார்ப்போம் என்று கூறுவது பலவீனத்தின் அடையாளமாகும்! ஆகவே பலவீனத்தை அகற்றுவதற்கு பார்ப்போம் என்கிற சொல்லை விலக்கி விட வேண்டும். நிச்சயத்தின் மூலம் வெற்றி ஏற்படும். சந்தேகம் இருந்தால், சக்தி குறைந்து விடும். நிச்சயபுத்தி உடையவராக மாறினால் உதவியும் கிடைக்கும். என்னைத் தவிர வேறு எவரும் இதைச் செய்ய முடியாது என எந்த ஒரு காரியத்தைச் செய்யும் போதும் கருதினால், நீங்கள் அதில் வெற்றி காண்பீர்கள். இன்று முதல் பார்ப்போம் என்கிற வார்த்தையை அகற்றிவிடுங்கள். நான் சிவசக்தி. சிவசக்தி சகல காரியங்களையும் செய்து முடிக்கக் கூடியவர்கள். சக்தி சிங்கத்தின் மீது சவாரி செய்வதாக காட்டப்படுகின்றார். மாயை சிங்கத்தின் உருவில் வந்தாலும் அச்சம் அடையக்கூடாது. சிவசக்தி ஒருபோதும் தோல்வி அடைவதில்லை. இப்போது அவகாசமும் இல்லை. காலத்திற்கு முன்பாகவே உங்களை மாற்றிக்கொள்வதால், ஒன்றுக்கு லட்சம் மடங்கு பலம் கிடைக்கும். நாம் மாறியே ஆக வேண்டும் என்கிற உறுதியுடன் மாற வேண்டும். சென்ற கல்பத்திலும் நாம் ஆஸ்தியை அடைந்தோம் என்பது நினைவுக்கு வருகிறது. உங்களை பழையவர்கள் என்று கருதும்போது, சென்ற கல்பத்தின் நினைவு வருகிறது. இதனால் முயற்சி சகஜமாகி விடும். ஏன் என்றால், சென்ற கல்பத்திலும் நான் அடைந்திருந்தேன், இந்த கல்பத்திலும் நிச்சயமாக அடைந்தே தீருவேன். சென்ற கல்பத்தின் (ஸ்மிருதி) நினைவு சக்தி அளிக்கவல்லது. உங்களை புதியவர்கள் என்று கருதும்போது பலவீனமான சங்கல்பங்கள் தோன்றுகின்றன. அடைய முடியும் என்பது சரியல்ல. நான்தான் சென்ற கல்பத்திலும் அடைந்திருந்தேன் என்று உறுதியுடன் இருப்பதால் சக்தி கிடைக்கிறது.

சதா உங்களை தைரியம் உடையவர்களாகச் செய்ய வேண்டும். ஒருபோதும் தைரியத்தை இழக்கக்கூடாது. தைரியம் இருந்தால், உதவியும் கிடைக்கும். நாம் சர்வசக்திவானின் குழந்தைகள் என்று தந்தையை நினைவு செய்வதே தைரியம் ஆகும். தந்தையை நினைவு செய்வது சகஜமானதா அல்லது கடினமானதா? அதை சகஜமானதாக்கும் போது, அது சகஜமானதாகி விடுகிறது. இது எனது தொழில், இது எனது கடமை என்ன செய்வது! என்கிற பலஹீன சங்கல்பம் வந்தவுடன் அது

கடினமாகி விடுகிறது. இத்தகைய பலவீனமான சங்கல்பத்தை ஒருபோதும் இருக்க விடக்கூடாது. மனதில் பலவீனமாக சங்கல்பம் உற்பத்தி ஆகி விட்டால், அங்கேயே அதை அழித்து விட்டு சக்திசாலியான சங்கல்பத்தை உருவாக்க வேண்டும். மாறாக அவ்வாறு செய்வதற்கு இப்போதும் முயற்சி செய்துவந்தால், நீங்கள் எப்போது அவ்யக்த ஈர்ப்பை அனுபவம் செய்வீர்கள்? எதுவரை இத்தகைய பிரயத்தனம் (முயற்சி) செய்வதிலேயே இருக்கிறீர்களோ, அவ்யக்த்த ஈர்ப்பை உங்களுக்குள் கொண்டு வரமுடியாது. இந்த மொழியே (பேச்சே) பலவீனமானதாகும். சர்வ சக்திவான் தந்தையின் குழந்தை இவ்வாறு கூறலாகாது. அவருடைய எண்ணம், சொல் ஆகிய அனைத்தும் நிச்சயத்துடன் இருக்கும். இத்தகைய ஸ்திதியை உருவாக்க வேண்டும். சங்கல்பம் என்கிற அஸ்திவாரம் வலிமையுடன் இருக்கிறதா என்று சதா சோதனை செய்துவாருங்கள். தீவிர புருஷார்த்த்தம் செய்து வருபவருடைய சங்கல்பம், சொல், மற்றும் செயல் ஆகிய மூன்றுமே ஒன்றுபோலவே இருக்கும். சங்கல்பம் உயர்ந்ததாக இருந்து, செயல் பலவீனதாக இருந்தால், அவரை தீவிர புருஷார்த்தி என்று கூறமுடியாது. மூன்றுமே சமமாக இருக்க வேண்டும். நல்லது!

அவ்வப்போது, மாயை தனது உருவத்தைக் காட்டிவருவது நிரந்தரமாக விடைபெற்றுச் செல்வதற்காகவே என்பதை நீங்கள் உணர வேண்டும். அப்போது அதற்கு விடைகொடுத்து அனுப்பி வைப்பதற்கு மாறாக நீங்கள் அதற்கு வரவேற்பு அளித்து விடுகிறீர்கள்! ஒருபோதும் பிரியாமல், சதா சிவபாபாவுடன் இருந்து வந்தால், எதுவும் உங்களை ஏதும் செய்ய முடியாது. எவராவது தீவிரமாக ஒன்றில் ஈடுபட்டிருந்தால், மூன்றாமவர் யாரும் வந்து இடையூறு செய்யாமல் இருக்க இடையூறு செய்யாதீர்கள், என்கிற பெயர் அட்டையை மாட்டி விடுகின்றனார். அவ்வாறே நீங்களும் அத்தகைய போர்டை போடுங்கள். இதனால் மாயை உள்ளே வர இயலாது. அதற்கு உள்ளே வருவதற்கு வழியே இருக்காது. ஏதாவது நாற்காலி காலியாக இருந்தால் ஒருவர் வந்து அதில் அமர்ந்து விடுவார்.

தாய்மார்களுக்கு இது மிகவும் எளிதானது; தந்தையை நினைவு செய்தால் போதும்! தந்தையை நினைவு செய்வதால், ஞானம் தானாகவே வெளிவருகிறது. எவர் தந்தையை நினைவு செய்கிறாரோ, அவருக்கு ஒவ்வொரு காரியத்திலும், தந்தையின் உதவி கிடைக்கிறது. இங்கு

கிடைக்கின்ற அனுபவத்தை அங்கும் நினைவில் வைத்தால், அது (அழிவற்ற) அவினாசி ஆகி விடுகிறது. அவ்வளவு சக்தி நினைவில் இருக்கிறது. நாம் பரந்தாம நிவாசி, ஒரு கடமையைச் செய்ய இங்கு வந்திருக்கிறோம்.... பிறகு திரும்பிச் செல்லவேண்டும் என்கிற நினைவை அடிக்கடி புத்தியில் வையுங்கள். புத்தியை இந்த விஷயங்களில் தீவிரமாக ஈடுபடுத்தினால், அது வேறு எங்கும் அலையாது. ஞானத்தையும் மிகுந்த யுக்தியுடன்தான் மற்றவர்களுக்கு அளிக்க வேண்டும். நேரடியாக ஞானத்தை அளித்தால் புதியவர்கள் பயந்து விடுவார்கள். முதலில் ஈஸ்வரிய அன்பினால் அவர்களை கவர வேண்டும். சரீரதாரிக்கு வேண்டியது தனம், தந்தைக்கு வேண்டியது மனம்! ஆகவே மனதை எங்கு செலுத்தவேண்டுமோ, அங்கேயே செலுத்திவாருங்கள். வேறு எங்கும் அது செல்லக் கூடாது. யோகயுக்த் ஸ்திதியில் நிலைத்திருந்து இரு சொற்களைப் பேசுவதும் நீண்ட உரையாற்றுவதற்கு சமமாகும். ஒரு மணி நேரத்திற்கான பேச்சின் சாரத்தை இரு சொற்களின் மூலமாக விளக்க முடியும்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1. பிரதிதினமும் நீங்கள் முன்னேறிவருகிறீர்களா?** இன்னும் அவகாசம் இருக்கிறது. பிறகு முயற்சி செய்வோம் என வாளாவிருந்து விடக்கூடாது. காலத்திற்கு முன்னதாகவே தயாராகி விட்டு இந்த ஸ்திதியை அனுபவம் செய்யவேண்டும். மாறாக இறுதி நேரத்தில் மட்டுமே இந்த ஸ்திதியை அனுபவம் செய்ய முன்னிட்டால், காலமும் மாறிவிடும், ஸ்திதியும் மாறிவிடும். காலம் முடிந்து விட்டால், அவ்யக்த ஸ்திதியும் முடிந்து, பிறகு வேறு பார்ட் (பாகம்) துவங்கி விடும். இதனால் தான், முன்கூட்டியே இந்த அவ்யக்த ஸ்திதியை அனுபவம் செய்ய வேண்டும். குமாரிகள் வேகமாக ஓடி வரமுடியும். ஆகவே இந்த ஈஸ்வரிய ஓட்டத்திலும் வேகமாக ஓடவேண்டும். முதலில் வருபவர்களே முதலாமவருக்கு அருகாமையில் வரமுடியும். இவ்வாறு சாகார பிரம்மாபாபா புகழப்படுகிறார் அல்லவா? லட்சியம் உயர்ந்ததாக இருக்க வேண்டும். முழுமையான லட்சியம் இருந்தால், முயற்சியும் முழுமையாக இருக்கும். அப்போதுதான் சம்பூர்ண பதவியை அடைய முடியும். சம்பூர்ணமான புருஷார்த்தம் (முயற்சி) என்றால், சகல விஷயங்களிலும் உங்களை சம்பூர்ணமாக்க வேண்டும். இது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. அறிந்தவுடன் அதை நினைவு செய்வது கடினமானதா என்ன? அறிவதையே ஞானம் என்கிறோம்.

ஞானமானது லைட் (ஒளி) மைட்டாக (சக்தி) ஆகவில்லையேல், அந்த ஞானம் எதற்கும் உபயோகம் இல்லை என்பதாகிறது. இதனை ஞானம் என்று கூறுவதில்லை. இங்கு அறிவது, அதைச் செய்வது இரண்டும் ஒன்றுபோல இருக்க வேண்டும். மற்றவற்றில் அறிவது மற்றும் அவ்வாறு செய்வது என்பதில் வேறுபாடு இருக்கும். ஞானம் உங்களை ஞான சொரூபம் ஆக்கி விடுகிறது. ஈஸ்வரிய ஞானம் உங்களை எந்த உருவம் ஆக்கி விடுகிறது? ஈஸ்வரிய ஸ்திதி. ஆகவே ஈஸ்வரிய ஞானத்தை அடைபவர்கள் ஏன் ஈஸ்வரிய உருவத்தை அடைவதில்லை? சித்தாந்தம் (தியரி) என்பது வேறு விஷயம். அறிவது என்றால் அதை புத்தியில் தாரணை செய்வது என்பது வேறு விஷயம். தாரணையின் மூலமாக செயல்கள் தானாகவே நடைபெறுகிறது. தாரணை என்றால் அந்த விஷயங்களை புத்தியில் பதிப்பது ஆகும். எப்போது அது புத்தியில் பதிந்து விடுகிறதோ, அப்போது, புத்தியின் உத்திரவுக்கு ஏற்பவே கர்மேந்திரியங்களும் அதன்படி செயல்படும். ஞானக்கடலான தந்தையின் குழந்தைகள் நாம் மேலும் ஈஸ்வரிய ஞானத்தின் லைட், மைட் நம்மிடத்தில் உள்ளன. இவ்வாறு உணர்ந்து நடந்து வர வேண்டும். ஞானத்தைக் கேட்பது மட்டும் என்பது வேறு விஷயம். வெறும் கேட்பது மட்டும் அல்ல, அதை உணர்ந்து உள்ளூர பதித்துக் கொள்ளவேண்டும். உணவு உண்பது ஒன்று ஆனால் அதை ஜீரணம் செய்வது என்பது வேறு விஷயம். வெறும் உண்பதால் மட்டும் சக்தி கிடைக்காது. அதை ஜீரணம் செய்வதால்தான் சக்தி கிடைக்கிறது. சக்திவானின் குழந்தைகள் இதைச் செய்ய இயலாது என்பது அழகா? இல்லையேல் தந்தையின் பெயருக்கே இழுக்கு ஏற்படும். முன் உதாரணமாகத் திகழும் வண்ணம் நாம் செயலாற்ற வேண்டும் என்கிற லட்சியத்துடன் இருக்க வேண்டும். காலத்திற்காக காத்திருக்காமல், முன் உதாரணமாக மாற வேண்டும். தந்தை முன் உதாரணம் ஆனார் அல்லவா?

**2. உங்களுடைய இல்லத்திற்கு வந்திருக்கிறீர்கள் என நினைக்கிறீர்களா?** வெளியே சுற்றி அலைந்து விட்டு வீடு திரும்புபவருக்கு தம் இல்லத்தில் ஓய்வு கிட்டுகிறது. ஆகவே இங்கும் ஓய்வின் உணர்வு ஏற்படுகிறது. இங்கு வந்தவுடன் ஓய்வின் அனுபவம் ஆகிறது. சதா ஓய்வுடன் இருப்பதாக உணருங்கள். கடமையைச் செய்வதற்காக வெளியில் சென்றாலும் இந்த ஓய்வின் அனுபவத்தையும் உடன் எடுத்துச் செல்லுங்கள். இதை உடன் எடுத்துச் சென்றால் எவ்வளவு

பெரிய காரியத்தைச் செய்யும்போதும் ஓய்வையே உணருவீர்கள். ஓய்வின்போது, சாந்தி, மற்றும் சுகத்தின் அனுபவம் ஏற்படுகிறது. உங்களிடத்தில் சக்தி ஏற்பட்டுவிட்டால், சுற்றுப்புற சூழ்நிலையின் பிரபாவம் உங்கள் மீது ஏற்படாது. மாறாக நமது பிரபாவம் சுற்றுப்புற சூழ்நிலையின் மீது ஏற்படும். சர்வ சக்திவானின் குழந்தைகள் நீங்கள், இருப்பினும் சூழ்நிலை உங்களைவிட சக்திவாய்ந்ததாக ஏன் இருக்கிறது? உங்களுடைய சக்தியை மறந்து விடுவதாலேயே, சூழ்நிலையின் பிரபாவம் உங்கள் மீது ஏற்படுகிறது. நோயாளிகளைத் தொட்டு வைத்தியம் செய்யும் வைத்தியர் மீது அந்த நோயின் பிரபாவம் ஏற்படுவதில்லை. அவ்வாறே இத்தகைய உணர்வுடன் நீங்கள் சேவை செய்யவேண்டும். நாம் சூழ்நிலையை உருவாக்குபவர்கள்; சூழ்நிலை நம்மை உருவாக்குவதில்லை என்கிற சக்திமிக்க உணர்வுடன் நீங்கள் இருக்க வேண்டும்.

**3. நீங்கள் தம்பதிகளாக (யுகல்) இருந்தாலும், உங்களை ஒரு தனியான ஆத்மா நினைக்கிறீர்களா?** ஆத்மா தனியானது அல்லவா? ஏதாவது ஒரு ஆத்மாவின் சம்பந்தத்தில் வர வேண்டுமானால் எவருடன் சம்பந்தம் வைக்க வேண்டும். சர்வ சம்பந்தங்களும் எவரிடத்தில் கொள்ளவேண்டும்? பாபா ஒருவரிடத்தில்தான். இரண்டு வேண்டுமானால், தந்தை மற்றும் குழந்தைகள். மூன்றாவது சம்பந்தம் ஏதும் கிடையாது. சர்வ சம்பந்தங்களையும் ஒருவரிடத்தில்தான் வைக்க வேண்டும். ஒன்று ஆத்மா, இரண்டாவது சிவபாபா. இந்த ஸ்திதியையே உயர்ந்த ஸ்திதி என்று கருதப்படுகிறது. மூன்றாவதாக ஏதாவது ஒன்றைப் பார்த்தாலும், அதைப் பார்க்கக்கூடாது. பார்க்க வேண்டுமானால் அந்த ஒருவரைத் தான், பேசவேண்டுமானாலும் அவருடன்தான். இத்தகைய ஸ்திதி இருந்தால்தான் மாயாஜீத் ஆக முடியும். மாயாஜீத் ஆகிறவர்தான் ஜெகத்ஜீத் ஆகிறார். இந்த தூய்மையான அன்பு முழு கல்பத்திலும் ஒரே ஒரு முறைதான் கிடைக்கிறது. இத்தகைய அன்பை நாம் அடைகிறோம் என்பது சதா நினைவில் இருக்க வேண்டும். வேறு எவரும் அடைய முடியாததை நாம் அடைந்துள்ளோம். இந்த நஷா (போதை) மற்றும் நிச்சயத்துடன் இருக்க வேண்டும்.

**4. டில்லியில் எப்போது அதிசயத்தை நிகழ்த்திக் காட்டப்போகிறீர்கள்?** டில்லியின் சப்தம்தான் நாலா புறங்களிலும்

பரவுகிறது. டில்லியில் இந்த புகழ் ஏற்பட வேண்டும். முழு பாரதத்திலும் இந்த புகழ் ஏற்பட வேண்டும். இத்தகைய பொறுப்பை டில்லிவாசிகள் ஏற்க வேண்டும். காலம் குறைவாக உள்ளது ஆனால் மிகுதியான சேவை எஞ்சியுள்ளது. இந்த வேகத்துடன் சேவை செய்தால்தான் அனைவருக்கும் நற்செய்தி சென்றடையும். ஒருவர் செல்வந்தர் ஆவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதும் மகா தானம் ஆகும். மகா தானத்தின் பலனும் மிகுதியாக இருக்கும். சதா தந்தையை உடன் வைத்திருந்தால், இவருடன் சர்வ சக்திவான் உடனிருக்கிறார் என்பதைப் பார்த்து, மாயை ஓடிவிடும். உங்களைத் தனியாக காணும்போதுதான் உங்களை அணுகுவதற்கு மாயைக்கு தைரியம் வருகிறது. வேட்டையாடச் செல்லும்போது, விலங்கு ஏதும் வராதிருப்பதற்காக நெருப்பை ஏற்றி வைக்கின்றனர். அவ்வாறே நினைவு என்கிற அக்னி எரிந்துகொண்டிருந்தால், மாயை உங்களை அணுக முடியாது. இந்த ஆர்வம் என்கிற அக்னி ஒருபோதும் அணைந்து விடக்கூடாது. அதை உடன் வைத்திருப்பதனால், சக்தி தானாகவே வந்து விடும். பிறகு வெற்றிக்கு மேலே வெற்றி கிடைக்கும்.

**5. வயோதிக தாய்மார்கள் மீது பாபாவுக்கு பிரத்யேகமான அன்பு இருக்கிறது.** ஏன் என்றால், துக்கத்தினால் இவர்கள் மிகவும் களைத்துள்ளனர். ஆகவே களைத்துள்ள குழந்தைகளின் மீது பாபாவுக்கு மிகுந்த அன்பு ஏற்படுகிறது. இவ்வளவு அன்பை குழந்தைகளும் வைக்க வேண்டும். வீட்டில் இருந்தபோதிலும், நினைவு யாத்திரையில் வெற்றி பெற்றுவிட்டால், நீங்கள் முன்னேறி வரமுடியும். எவ்வளவு நினைவு யாத்திரை அதிகரித்து வருகிறதோ. அவ்வளவு மனதின் பாவனைகளும் தூய்மையாகி வரும். நீங்கள் அனைவரும் சேவையில் சகயோகிகளாக விளங்குகிறீர்களா? நீங்கள் எந்த அளவு நற்செய்தியை மற்றவர்களுக்கு அளிக்கிறீர்களோ, அந்த அளவு நீங்கள் சம்பூர்ணம் அடைந்து விட்டீர்கள் என்கிற செய்தி உங்களுக்குக் கிடைக்கும். ஏன் என்றால், மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதின் மூலமாக, நீங்கள் விரும்பாவிட்டாலும் கூட, நீங்கள் சம்பூர்ணம் அடைய வேண்டும் என்பதில் கவனம் தானாகவே செல்லும். இந்த சேவை செய்வதும் நீங்கள் சம்பூர்ணம் ஆவதற்கான இனிய பந்தனம் ஆகும். இந்த பந்தனத்தில் நீங்கள் எவ்வளவு இருக்கிறீர்களோ, அவ்வளவு மற்ற சம்பந்தங்களிலிருந்து விடுதலை பெறுவீர்கள். ஆகவே சர்வ பந்தனங்களிலிருந்தும் விடுபடுவதற்கான சாதனம் எது? ஒரு பந்தனத்தில் நீங்கள் கட்டுண்டிருப்பது. இந்த இனிய பந்தனமும்

இக்காலத்திற்கானதே ஆகும். பிறகு இது ஒருபோதும் கிடைக்காது. நீங்கள் அனைவரும் இந்த இனிய ஈஸ்வரிய பந்தனத்தில் கட்டுண்டிருக்கும் ஆத்மாக்கள்!

**6. சிரேஷ்டமான செயல்களைச் செய்வதால்தான் நீங்கள் உயர்ந்த பதவியை அடைய முடியும் மேலும் உயர்ந்தவர்களாகவும் ஆக முடியும்.** ஒரு உயர்ந்த காரியத்தின் மூலமாக, இக்காலத்திலும் மற்றும் வருங்காலத்திலும் நன்மை பெறுகிறீர்கள். இதனால் இரு காலங்களும் உயர்ந்ததாகச் செய்யவல்ல காரியங்களையே நீங்கள் செய்யவேண்டும். அகமதாபாத் மிகுதியான சேவை செய்ய வேண்டும். ஏன் எனில் அகமதாபாத், சகல சென்டர்களுக்கும் விதை ஆகும். விதையில் மிகுதியான சக்தி இருக்கும். ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்திருப்பவர்களும், உறக்கம் கலைந்து எழும் வண்ணம், உரத்த அறைகூவல் விடுங்கள். குமாரிகள் அதிசயங்களைச் செய்து காட்டமுடியும். சேவையில் மிகுந்த வெற்றி பெறும் அளவு குமாரிகளிடத்தில் சக்தி இருக்க வேண்டும். குமாரிகள் புருஷார்த்தம் மற்றும் சேவையில் தீவிரமாக ஈடுபடமுடியும். முன்னிலையில் யார் இருக்கின்றனர்? குமாரிகளா அல்லது பாண்டவர்களா? உங்களுக்கு நினைவுச்சின்னங்கள் உள்ளன. நீங்கள் சென்ற கல்பத்திலும் வெற்றி பெற்ற பாண்டவர்கள் ஆகிறீர்கள். நீங்கள் எண்ணற்ற முறை பாண்டவர்களாகி, வெற்றி பெற்றுள்ளவர்கள் என்பது நினைவில் இருக்கிறது அல்லவா? இது நினைவில் இருந்தால், ஒருபோதும் மறதி ஏற்படாது. சென்ற கல்பத்திலும் நாம்தான் வெற்றி பெற்றோம். இப்போதும் நாம் வெற்றி அடைவோம் என்கிற நஷா (போதை) மற்றும் நிச்சயம் இருக்க வேண்டும். நாம்தான் உயர்ந்தவர்களிலும் உயர்ந்தவரான தந்தையின் ஆஸ்திக்கு உரிமையுடையவர்கள் என்பது நினைவில் இருந்தால், சதா ஏக்ரஸ் ஸ்திதியில் இருந்து வருவீர்கள். ஒரே ஒன்றின் நினைவில் இருப்பதனால், ஏக்ரஸ் ஸ்திதி ஏற்படும்.

**7. அவ்யக்த உருவின் மூலம் சேவை எவ்வாறு நடைபெறுகிறது?** இந்த அனுபவம் ஏற்பட்டுவருகிறதா? பிரம்மாபாபா அவ்யக்த உருவில் சேவையில் எவ்வாறு உடன் இருந்து வருகிறார்? இந்த அனுபவமும் ஏற்படுகிறதா? அன்புடைய ஆத்மாக்களுடன் ஒவ்வொரு கணமும் உடன் இருந்து வருவேன் என்று அவர் வாக்குறுதி அளித்திருக்கிறார். இவ்வாறு அவர் உங்களுடன் இருந்து வருவதன் அனுபவம் ஏற்பட்டுவருகிறதா? அவருடைய உருவம்தான் மாறியுள்ளது ஆனால் அவருடைய அதே

செயல்தான் இப்போதும் நடைபெற்றுவருகிறது. அன்புடைய குழந்தைகளின் மீது பாதுகாப்புக் குடையின் உருவில் அவருடைய பார்வை இருந்து வருகிறது. அந்தக் குடைநிழலின் கீழ் சகல காரியங்களும் நடைபெற்று வருகின்றன. இத்தகைய உணர்வு ஏற்படுகிறதா! வியக்தத்திலிருந்து அவ்யக்தம் மற்றும் அவ்யக்தத்திலிருந்து வியக்தத்தில் வருவது; இந்த ஏணிப்படியில் ஏறுவது, இறங்குவது என்கிற பழக்கம் ஏற்பட்டுவிட்டது. இக்கணம் இங்கே, மறு கணமே அங்கே! எவருக்கு இத்தகைய ஸ்திதி ஏற்பட்டுவருகிறதோ, பயிற்சி பழகி விட்டதோ, அவருக்கு இந்த வியக்த தேசமும் அவ்யத்தமான ஒன்றாக உணர்வு ஏற்பட்டுவரும். ஸ்மிருதி மற்றும் திருஷ்டி மாறிவிடுகிறது.

**8. நீங்கள் அனைவரும் எப்போதும் தயார் நிலையில் (எவர் ரெடி) அமர்ந்திருக்கிறீர்களா?** தேகத்தின் கணக்கு வழக்குகளும் ஒருபொருட்டல்ல. சூட்சும உலகத்தில் ஒரு சமயம் பறவைகளின் விளையாட்டு காட்டப்பட்டது. அவை பறக்க விடப்பட்டன. அவ்வாறே இந்த ஆத்மாவும் ஒரு பறவையே; எப்போது வேண்டுமானாலும் பறக்கமுடியும். இதற்கான பயிற்சி இருந்தால்தான் பறக்க முடியும். நீங்களே பறக்கும் பறவை ஆகும்போது, மற்றவர்களையும் ஒரு வினாடியில் பறக்கச் செய்ய இயலும் ஆனால் இப்போது அதற்கு அவகாசம் பிடிகக்கிறது. சூட்சுமமாக ஒரு உதாரணம் கூறப்பட்டது. சூட்சும உருவில் எவ்வளவு நேரம் அவருடன் வதனத்தில் இருந்து வருகிறீர்கள்? இவ்வாறு இந்த நேரம் எவர் உடன் இருந்து வருகிறாரோ, அவர் வெளிநாட்டில் இருந்தபோதிலும், அவருடைய மனம் அதிகமாக சூட்சும உலகின்பால் தான் இருந்து வரும். எந்த தேசத்தில் உங்கள் மனம் இருக்கிறதோ, அந்த தேசவாசியாக நீங்கள் உங்களைக் கருதுகிறீர்களா? எப்படியிருந்தாலும் இப்போது நீங்கள் சூட்சும வதனவாசியாகவே வேண்டும். ஸ்தூல வதனத்தில் சூட்சும வதனத்தை எமர்ஜ் செய்கிறீர்களா அல்லது நீங்களே சூட்சும வதனவாசியாகி அவருடன் இருப்பதாக அனுபவம் செய்கிறீர்களா? எந்த அனுபவம் ஏற்படுகிறது? சூட்சும வதனவாசியான தந்தையை இங்கு எமர்ஜ் செய்கிறீர்களா அல்லது உங்களையே சூட்சும வதனவாசியாக்கிக் கொண்டு அவருடன் கூடவே இருக்கிறீர்களா? ஸ்தூல வதனத்தில் இருந்தபோதிலும், நீங்கள் சூட்சும வதனவாசியாகி விட்டதாகவே பாப்தாதாவும் கருதுகின்றார். எவர் அழைத்தாலும், சூட்சும வதனத்தின்

சூழ்நிலையிலேயே, சூட்சும உருவத்திடமிருந்து சேவையைப் பெற முடியும். அவ்யக்த ஸ்திதியில் நிலைத்திருந்து உதவியைப் பெறமுடியும். வியக்த உருவில் அவ்யக்த உதவியை அடைய முடியும். இப்போது மிகுதியான நேரம் உங்களை ஃபரிஸ்தா என்றே உணருங்கள். ஃபரிஸ்தா உலகில் வசிப்பதின் மூலமாக, சூட்சும வதனத்தையே, ஸ்தூல வதனத்திற்குக் கொண்டு வந்து விட்டதைப் போன்றே அதிகமாக பளுவற்றதன்மை அனுபவம் ஏற்படும். சூட்சும வதனம் மற்றும் ஸ்தூல வதனத்திற்கிடையில் வேறுபாடு ஏதும் காணப்படாது. அப்போதுதான் சம்பூர்ண ஸ்திதியிலும் வேறுபாடு காணப்படாது. பாப்தாதா வியக்தத்தில் வரும்போதும், அவ்யக்த உருவின் அவ்யக்த தேசத்தின் அவ்யக்த பிரபாவத்தில் இருந்து வருவதைப்போன்றே, இது வியக்த தேசம் என அவ்யக்த தேசத்தையும் நீங்கள் உணர்வீர்கள். சம்பூர்ண ஸ்திதி அருகாமையில் வந்து விடும். குழந்தைகளுக்கு இத்தகைய அனுபவத்தை அளிக்கவே அவர் இங்கு வருகிறார். இவ்வாறே நீங்கள் அனைவரும் உங்களுடைய அவ்யக்த ஸ்திதியின் அனுபவத்தை மற்றவர்களுக்கும் செய்வியுங்கள். எப்போது அவ்யக்த ஸ்திதியின் நிலை சம்பூர்ணம் ஆகிறதோ, அப்போதுதான் உங்களுடைய ராஜ்யத்திற்கு அவருடன் இணைந்து செல்ல முடியும். ஒரு கண்ணில் அவ்யக்த சம்பூர்ண ஸ்திதி, மறு கண்ணில் ராஜபதவி. சாகார உருவில் காணப்படுவதைப் போலவே, இக்காட்சி தெளிவாகக் காட்சி தரும். குழந்தைப் பருவத்தின் உருவம் மற்றும் சம்பூர்ணமான உருவம், ஆக இரண்டும் காட்சி தரும். இப்போது இவ்வாறு ஆகி, பிறகு அவ்வாறு ஆவோம். இந்த ஸ்மிருதி (உணர்வு) இருக்கிறது? எதிர்காலமும் தெளிவாகக் காட்சி தரும். எந்த அளவு ஃபரிஸ்தா வாழ்க்கை அருகாமையில் வருகிறதோ, அந்த அளவு ராஜபதவியும் எதிரில் காட்சி அளிக்கும். இரண்டும் முன்னிலையில் காணப்படும். இக்காலத்தில் ஒரு சிலருக்கு தமது கடந்த பிறவிகளின் நினைவு இருந்து வருவதைப் போலவே, உங்களுக்கும் நான் வருங்காலத்தில் இம்மாதிரி வருவேன் என உங்களுடைய எதிர்காலமும் தெளிவாகத் தெரியும். வருங்காலத்தின் சமஸ்காரம் எமர்ஜ் ஆகி வரும். மறைந்திருக்காது, வெளிப்படையாகத் தெரியும். நல்லது!

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 25.01.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நினைவுச்சின்னத்தை நிலையாக வைப்பதற்கான விதி!

அவ்யக்த ஸ்திதிதான் முக்கிய பாடம் ஆகும். வியக்தத்தில் இருந்து காரியம் செய்தாலும் அவ்யக்த நிலையில் இருக்க வேண்டும். இந்த பாடத்தில்தான் பாஸ் ஆக வேண்டும், தன்னுடைய புத்தியின் பாதை தெளிவாக இருக்க வேண்டும். எப்பொழுது பாதை தெளிவாக இருக்கின்றதோ அப்போது விரைவாக ஓடிச் சென்று குறிக்கோளை அடைய முடிகிறது. முயற்சியின் பாதையில் ஏதேனும் தடை ஏற்பட்டால் அதை நீக்கி பாதையை கிளியர் செய்ய வேண்டும், இந்த சாதனைதான் அவ்யக்த நிலையின் பிராப்தி ஆகும். மதுபனிற்கு வந்து ஏதாவது விசேஷ குணத்தை எல்லோருக்கும் கொடுக்க வேண்டும், இது தான் நினைவுச்சின்னம் ஆகும் ஆனால் அது (சிலைகள்) ஜடமான நினைவுச்சின்னமாகும்; ஆனால் தன்னுடைய குணத்தை நினைவுபடுத்துதல்தான் சைத்தன்ய நினைவுச்சின்னமாகும். எப்போதும் நினைவு இருந்து கொண்டே இருக்கட்டும், எப்பொழுது, எங்கே சென்றாலும் இந்த லட்சியம் இருக்க வேண்டும். எங்கே சென்றாலும் அங்கே நினைவுச்சின்னத்தை நிலையாக வைக்க வேண்டும். சிறந்த (அன்பு) சிநேகத்தை தனக்குள் நிரப்பிக் கொண்டே போவோமேயானால் அந்த அன்பு கல்லையும் தண்ணீர் ஆக்கி விடும், இந்த ஆன்மீக அன்பின் பரிசை உடன் எடுத்துப் போக வேண்டும், இதனால் யாரிடத்திலும் வெற்றி பெற முடியும். சமயம் நிறைய புரிய வைக்கிறதா அல்லது குறைவாகவா? ஆக இப்பொழுது குறைந்த சமயத்தில் 100% வரை அடைய முயற்சி செய்ய வேண்டும். எந்தளவிற்கு தன்னிடம் நம்பிக்கை இருக்கிறதோ அது முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு வினாடி கூட வீணாகக்கூடாது, அந்த அளவிற்கு கவனம் வைக்க வேண்டும். சங்கம யுகத்தில் ஒரு வினாடி எவ்வளவு பெரியது, தன்னுடைய சமயம் சங்கல்பம் இரண்டையும் வெற்றி கொள்ள வேண்டும், எந்த காரியம் பெரியவர்களால் செய்ய முடியவில்லையோ அந்த காரியத்தை

சிறியவர்களால் செய்ய முடியும், இப்பொழுது அந்த காரியம்தான் நடந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது வரை ஓடிக் கொண்டிருப்பதும் முடிந்து விட்டது, இப்பொழுது உயரமாய் தாண்டிச் செல்ல வேண்டும். அப்பொழுதுதான் லட்சியத்தைப் பெற முடியும், ஒரு விநாடியில் பல விஷயங்களை மாற்றம் செய்ய வேண்டும், இதுவே உயரம் தாண்டி இறத்தல், அந்தளவு துணிச்சல் இருக்கிறதா? எதைக் காதால் கேட்டீர்களோ அதை வாழ்க்கையில் கொண்டு வந்து காண்பிக்க வேண்டும். யாரிடத்தில் அன்பு இருக்கிறதோ அவர்கள் அவர்களைப்போல் ஆகிறார்கள். யாரிடத்தில் பாப்தாதாவின் குணம் இருக்கிறதோ தங்களிடத்தில் தாரணை செய்ய வேண்டும். இது தான் அன்பின் அடையாளம்! யாருக்கு பாபாவின் சிரேஷ்ட தன்மை இருக்கிறதோ -இதுதான் அன்பு, ஒரே ஒரு விசேஷத்தில் கூட குறைவாக இருக்க கூடாது. எப்போது சர்வ குணமும் தன்னிடத்தில் தாரணை ஆகுமோ அப்போது எதிர்காலத்தில் சர்வ குண சம்பன்ன தேவதா ஆவீர்கள், இதுதான் லட்சியமாக இருக்க வேண்டும். சர்வ குண சம்பன்னமாக ஆவதற்கு நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்று பாபாவின் குணங்களை முன் வைத்து சோதனை செய்ய வேண்டும். குறைந்த பர்சன்டேஜ் (சதவீதத்தில்) இருக்கக்கூடாது, சம்பூர்ண பர்சன்டேஜ் இருந்தால் தான் சம்பந்தத்தின் அருகில் வர முடியும், இப்பொழுது ஆத்மாவைத்தான் பார்க்க வேண்டும், சரீரத்தைப் பார்த்து பார்த்து களைப்பு அடைந்து விட்டது, ஆகையினால் இப்பொழுது ஆத்மாவைப் பார்க்க வேண்டும், சரீரத்தைப் பார்த்து பார்த்து என்ன கிடைத்தது? துக்கமடைந்தவர்களாகத்தான் ஆனீர்கள், இப்பொழுது ஆத்மாவைப் பார்த்தீர்களேயானால் அமைதி கிடைக்கிறது, வீரசூரன் தானே நீங்கள்! வீரசூரனின் அடையாளம் என்ன? அவர்களுக்கு எந்தவொரு விஷயத்திலும் கடந்து செல்வது கடினமாகத் தோன்றுவதில்லை, நேரமும் ஆவதில்லை. அவர்களுடைய சமயம் சேவைக்கே தவிர தன்னுடைய தடைகள் முதலியவற்றை நீக்குவதற்காக அல்ல, அவர்களே மகாவீரர் என்று அழைக்கப்படுகின்றனர். தன்னுடைய சமயம் தன்னுடைய தடைகளை நீக்குவதில் கழியக்கூடாது ஆனால் சேவையில் ஈடுபடுத்த வேண்டும். இப்பொழுது சமயம் கடந்து கொண்டே போய்க் கொண்டிருக்கிறது, இந்த கணக்கினால் இப்பொழுது வரை அந்த விஷயங்கள் குழந்தை பருவத்தினுடையதாக இருக்கிறது, சிறிய குழந்தைகள் நாசுக்காக இருக்கிறார்கள், பெரியவர்கள் தைரியசாலிகளாக இருக்கிறார்கள், அதனால் முயற்சியில்

குழந்தைத்தனம் இருக்கக்கூடாது, அப்படிப்பட்ட பலசாலியாக ஆக வேண்டும். எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருக்கட்டும், என்ன வேண்டுமானாலும் இருக்கட்டும், வாயுமண்டலம் எப்படிப்பட்டதாகவும் இருக்கட்டும், ஆனால் பலவீனமாக ஆகக்கூடாது, அவர்களுக்குத்தான் சூரவீரர் என்று சொல்லப்படுகிறது. சரீரம் பலவீனமாகிறது என்றால் கூட அதனுடைய பாதிப்பு ஏற்படுகிறது, ஆரோக்கியத்தின் பாதிப்பு இருப்பதில்லை, அதனால் இங்கு கூட வாயுமண்டலத்தின் பாதிப்பு இக்கட்டானதாக இருக்கிறது. வாயுமண்டலம் படைப்பவர் இல்லை, அது படைப்பு. படைப்பவர் உயர்ந்தவரா அல்லது படைப்பா? (படைப்பவர்), பிறகு படைப்பவர் படைப்பிற்கு அடிமையாக இருப்பது ஏன், இப்பொழுது சூரவீரர் ஆவதற்கு தன்னுடைய (ஸ்மிருதி திவஸ்) நினைவு நாளை நினைவு வைக்க வேண்டும். இந்த நினைவு மறக்கக்கூடாது, அப்படிப்பட்ட தன்னுடைய சம்பூர்ண தன்மைகளைக் காட்ட வேண்டும். தைரியம் இருக்கிறது என்றால் அவசியம் உதவி கிடைத்து விடும். இப்பொழுது இங்கு வந்து தளர்வான தன்மையில் வேகம் வந்திருக்கிறதா? இப்பொழுது முயற்சியில் தளர்ச்சியாக ஆகக் கூடாது. சம்பூர்ண உரிமையை எடுப்பதற்காக சம்பூர்ண ஆகுதியைக் கூட அர்ப்பிக்க வேண்டும். ஏதாவது யக்ஞம் படைக்கப்படுகிறது என்றால் முழுமையான வெற்றி எப்படி கிடைக்கிறது, ஆகுதி (அர்ப்பணம்) போடப்படுகிறது, ஆகுதி குறைவாக இருக்கிறது என்றால், வெற்றி முழுமையாக கிடைக்காது, இங்கும் கூட ஒவ்வொருவரும் இதைப் பார்க்க வேண்டும். ஆகுதி (அர்ப்பணம்) செய்திருக்கிறோமா, சிறிதளவு அர்ப்பணத்தில் குறையிருக்கிறது என்றாலும் சம்பூர்ண (முழு) வெற்றி கிடைக்காது. எவ்வளவு மற்றும் இவ்வளவு என்பதின் கணக்கு இருக்கிறது, கணக்கு வைப்பதில் தர்மராஜும் கூட இருக்கிறார், அவரிடம் எந்த கணக்கும் இருக்க முடியாது, அதனால் என்னவெல்லாம் அர்ப்பணம் செய்ய வேண்டுமோ அதை முழுமையாகக் கொடுத்து விட வேண்டும், பிறகு முழுமையாக எடுக்க வேண்டும். கொடுப்பதில் சம்பூர்ண தன்மை இல்லை என்றால் எடுப்பதில் கூட இருக்காது. எவ்வளவு கொடுப்பீர்களோ அவ்வளேவே எடுப்பீர்கள்! வெற்றி எதில் இருக்கிறது என்று எப்பொழுது தெரிய வந்து விட்டதோ, பிறகும் கூட பயன்படுத்தப்படவில்லை என்றால் என்ன ஆகும்? குறை என்பது இருந்து விடும். எனவே எங்காவது கொஞ்சமாவது இருந்து விடவில்லையே என்ற கவனம் எப்பொழுதும் வைக்க வேண்டும். மனதில் வார்த்தையில் கர்மத்தில் சிறிதளவு கூட

எங்கேயும் இருக்க வேண்டாம். ஏதாவது காரியத்தில் கூட, இறுதி நாள் என்றால், அந்த நேரத்தில் ஏதாவது இருந்து விடவில்லையே என்று நாலா புறமும் பார்க்கப்படுகிறது, அப்படியே இப்பொழுது கூட சமாப்திக்கான (கடைசி) நேரம், ஏதாவது சிறிது தங்கி விட்டது என்றால், அது அப்படியே இருந்து விடும். பிறகு அதனை ஏற்றுக் கொள்ள முடியாது, இதனை முழுமையான அர்ப்பணம் என்று சொல்ல முடியாது. ஆகையால் இந்தளவு கவனம் வைக்க வேண்டும். இப்பொழுது குறையை வைத்திருப்பதற்கான நேரம் முடிந்து விட்டது, இப்பொதுழுது நேரம் மிகவும் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. நேரம் வேகமாகச் சென்று விட்டது மேலும் தான் தளர்வாக இருந்து விட்டோம் என்றால் பிறகு என்ன ஆகும்? குறிக்கோளை சென்றடைய முடியுமா? பிறகு சத் யுகத்தின் குறிக்கோளை அடைவதற்குப் பதிலாக திரேதா யுகத்தில் செல்ல வேண்டியிருக்கும், எப்படி நேரம் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறதோ அப்படியே தானும் கூடவே ஓட வேண்டும், ஸ்தூலத்தில் கூட ஏதாவது வண்டியைப் பிடிக்க வேண்டும் என்றால், நேரத்தைப் பார்க்க வேண்டியிருக்கிறது, இல்லையேல் தங்கி விடுகிறார்கள். நேரம் சென்று கொண்டேயிருக்கிறது, யாருக்காகவும் நேரத்தை நிறுத்துவதில்லை, இப்பொழுது மெதுவாகச் செல்லும் நாட்கள் சென்று விட்டன, ஓடக்கூடிய நாட்களும் சென்று விட்டன. இப்பொழுது தாண்டி குதிப்பதற்கான நாள். ஏதாவது விஷயத்தின் குறை அனுபவம் ஆகிறது என்றால், அதனை ஒரு விநாடியில் மாற்றத்தில் கொண்டு வருவது, இதற்குத்தான் தாண்டுவது என்று சொல்லப்படுகிறது. பார்ப்பதற்கு உயர்ந்ததாக வருகிறது ஆனால் மிகவும் சகஜம், நிச்சயம் மற்றும் தைரியம் வேண்டும். நம்பிக்கை உடையவர்களுடைய வெற்றி கல்பத்திற்கு முன்பு கூட ஏற்பட்டிருந்தது, அது இப்பொழுது கூட ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது, அந்த அளவிற்கு தன்னை உறுதியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். விநாடிக்கு விநாடி மனம், வார்த்தை மற்றும் கர்மத்தைப் பார்க்க வேண்டும். பாப்தாதாவிற்கு இதைப் பார்ப்பதில் கடினம் எதுவும் இல்லை. இப்பொழுது பார்ப்பதற்காக எந்த ஆதாரத்தையும் எடுப்பதற்கான அவசியமில்லை. எங்கிருந்தாலும் பார்க்க முடியும். பழையவர்களை விட புதியவர்களுக்கு இன்னும் அதிகமாகவே ஊக்கம் இருக்கிறது. நாம் செய்தே காட்டுவோம். அப்படிப்பட்ட தீவிரமான மாணவர்களும்கூட இருக்கிறார்கள். புதியவர்கள்தான் அதிசயத்தைச் செய்ய முடியும். ஏனென்றால், அவர்களுக்கு சமயம் கூட பார்ப்பதற்கு தெளிவாக வந்து கொண்டிருக்கிறது. நேரத்தினுடைய சகயோகம் கூட

இருக்கிறது. சூழ்நிலைகளினுடைய சகயோகம் கூட இருக்கிறது. சூழ்நிலைகள் கூட இப்பொழுது தென்பட்டுக் கொண்டிருக்கிறது. புருஷார்த்தம் எப்படிச் செய்ய வேண்டும். சோதனைகள் ஆரம்பமாகி விட்டது என்றால் முயற்சி செய்ய முடியாது. பிறகு இறுதி தேர்வு ஆரம்பமாகி விடும். பரீட்சைக்கு முன்பு வந்து சேர்ந்து விட்டீர்கள். சரியான நேரத்தில் வந்து சேர்ந்து விட்டதைக் கூட தன்னுடைய சௌபாக்கியம் என்று புரிந்து கொள்ள வேண்டும். பேப்பர் (பரீட்சை) ஆரம்பமாகி விடுகிறது. பிறகு கேட் (வாசல்) மூடப்பட்டு விடும். யார் ஆரம்பத்தில் வந்து இருந்தார்களோ அவர்களுக்கு வைராக்கியம் கொடுக்கப்பட்டு இருந்தது. தற்காலத்தில் சூழ்நிலைகள்தான் வைராக்கியத்தை ஏற்படுத்துகின்றன.

ஞானத்தின் நிச்சயத்தின் விதையை உறுதியாக விதையுங்கள் மற்றும் பலன் தயாராகி விடும். இது அப்படிப்பட்ட விதையாக இருக்கிறது மிகவும் விரைவாகவே பலன் கொடுக்க முடிகிறது. விதை சக்திசாலியாக இருக்கிறது. மற்றபடி பாலனை செய்வது உங்களுடைய காரியம் ஆகும். பாபா சர்வ சக்திவான் மேலும் குழந்தைகளுக்கு எண்ணத்தை நிறுத்துவதற்கான சக்தி கூட இல்லை. பாபா சிருஷ்டியை மாற்றி விடுகிறார். குழந்தைகள் தன்னைக்கூட மாற்றிக் கொள்ள முடிவதில்லை. இதை சிந்தனை செய்யுங்கள். பாபா என்னவாக இருக்கிறார் மற்றும் நாம் என்னவாக இருக்கிறோம். அப்பொழுது தன்மீதே தனக்கு வெட்கம் வரும். தன்னுடைய நடத்தையை மாற்றத்தில் கொண்டு வர வேண்டும். வார்த்தைகளினால் இந்த அளவு புரிந்து கொள்வதில்லை. மாற்றத்தைப் பார்த்து தானே கேட்பார்கள். உங்களை அதுபோல் ஆக்கக் கூடியவர் யார்? சிலர் மாறிக் காட்டுகிறார்கள் என்றால் விரும்பாவிட்டாலும் கூட அவரிடம் கேட்கிறார்கள், என்ன ஆயிற்று? எப்படிச் செய்தீர்கள்? அப்பொழுது உங்களுடைய நடத்தையைப் பார்த்து அவர்கள் கவர்ந்து இழுக்கப்படுவார்கள்.

அப்பொழுது ஒரே ரசனை நிலையை உருவாக்குவதற்காக ஒருவரைத் தவிர மற்ற எதைப் பார்த்தாலும் கூட பார்க்கக்கூடாது. இங்கு எதைப் பார்க்கிறீர்களோ அதில் எந்தப் பொருளும் இருக்கக் கூடியதில்லை. கூடவே இருக்கக்கூடியவர் அழியாத தந்தை ஒருவர்தான். அந்த ஒருவருடைய நினைவில்தான் அனைத்து பிராப்திகளும் கிடைக்கின்றன.

பிற அனைவருடைய நினைவினால் பிராப்தி எதுவும் கிடைப்பதில்லை. அப்படியெனில் எந்த வியாபாரம் சிறந்தது?

இந்த அறிவு நமக்கு கிடைத்திருக்கிறது. இந்த மாயா நமக்கு சதா காலத்திற்கு விடை கொடுப்பதற்காக குறைவான நேரம் முகத்தை காட்டுகிறது. இப்பொழுது விடைபெற்றுக் கொள்வதற்காக வருகிறது. தோல்வி அடைய வைப்பதற்காக அல்ல. விடுமுறை (நிரந்தர) எடுப்பதற்காக வருகிறது. ஒருவேளை பயம் வருகிறது என்றால் அந்த பலவீனம் எங்கே செல்லும்? பலவீனத்தினால் பிறகு மாயாவுடன் சண்டை ஏற்படுகிறது. இப்பொழுது சக்தி கிடைத்திருக்கிறது. இல்லையா? சர்வ சக்திவான் கூடவே சம்மந்தம் இருக்கிறது என்றால், அவருடைய சக்திக்கு முன்னால் மாயையின் சக்தி என்ன இருக்கிறது? சர்சக்திவானுடைய குழந்தைகளாக இருக்கிறோம். இந்த போதையை ஒருபோதும் மறக்கக்கூடாது. மறப்பதினால்தான் மாயையுடன் சண்டை ஏற்படுகிறது. மயக்க மடைந்து விடக்கூடாது. யார் புத்திசாலிகளாக இருக்கிறார்களோ அவர்கள் சுயநிலையில் இருக்கிறார்கள். தற்காலத்தில் கொள்ளையர்கள் கூட ஏதேதோ பொருட்களினால் மயக்கமடைய வைக்கிறார்கள். இப்பொழுது மாயை கூட அதுபோல் செய்கிறது. யார் புத்திசாலிகளாக இருக்கிறார்களோ அவர்கள், இது மாயாவினுடைய வழிமுறை என்றுணர்ந்து முதலிலேயே எச்சரிக்கையாக இருக்கிறார்கள். தன்னுடைய சுயஉணர்வை இழப்பதில்லை. இந்த சஞ்சீவினி மூலிகையை எப்பொழுதும் கூடவே வைக்க வேண்டும்.

ஒரு மாதமானவர்கள் கூட வந்திருக்கிறார்கள். இது கூட மிகவும் நல்லது. ஒரு விநாடியில் கூட பரிவர்த்தனை (மாற்றம்) வரமுடியும். நாம் இப்பொழுது வந்திருக்கிறோம், புதியவர்களாக இருக்கிறோம் என்று இதுபோல் நினைக்கக்கூடாது. இது ஒரு விநாடியின் வியாபாரம் ஆகும். ஒரு விநாடியில் பிறப்புரிமையின் அதிகாரத்தைப் பெற முடியும். ஆகையினால் அப்படிப்பட்ட தீவிர முயற்சி செய்யுங்கள். இந்த யுக்தி கிடைக்கிறது. எந்த ஒரு விஷயம் முன்னால் வந்தாலும் இது ஒரு விநாடியில் மாறிவிடும் என்ற லட்சியம் இருக்க வேண்டும். முழு கல்பத்திலும் இதே நேரம்தான். இப்பொழுது இல்லை என்றால் எப்பொழுதும் இல்லை என்ற இந்த மந்திரத்தை நினைவில் வைக்க வேண்டும். பழைய சமஸ்காரம் மற்றும் பழைய இயல்புகளை மாற்றிக் கொண்டு ஈஸ்வரனுடைய குழந்தை ஆகி விடும்விட வேண்டும். எந்த

விதமான பழைய சமஸ்காரமோ, பழைய பழக்கவழக்கங்களோ இருக்கக் கூடாது. உங்களுடைய மாற்றத்தினால் பலர் திருப்தியாக இருப்பார்கள். எப்பொழுதும் இந்த முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய நடத்தை மூலமாக யாருக்கும் துக்கம் ஏற்படக்கூடாது. என்னுடைய நடத்தை, எண்ணம், வார்த்தைகள், ஒவ்வொன்றும் சுகத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இதுதான் பிராமண குலத்தின் பழக்கம்!

விடுபட்டவராகவும் (நியாரா) மற்றும் அன்பானவராகவும் (ப்யாரா) இருப்பது இதுவே முயற்சியாகும். மற்றவர்களைக் கூட அதுபோல் ஆக்க வேண்டும். ஆகுவது மற்றும் ஆக்குவது இந்த லட்சியம் இருக்க வேண்டும். யார் எந்தளவு ஆகிறார்களோ அவ்வளவு பிறரையும் ஆக்குகிறார்கள். தன்னுடைய வாழ்க்கையில் அலௌகிகத்தன்மை வேண்டும். உலகத்தினரிடமிருந்து விடுபட்டவராக தன்னை நினைக்கிறோமா என்று தன்னைத் தானே பார்க்க வேண்டும். நினைவு மறந்து போகிறது என்றால் புத்தி எங்கேயிருக்கிறது? ஒரு புறம் மறக்கிறீர்கள் என்றால் மற்றொரு பக்கம் (வேறு விஷயங்கள்) இருக்கிறது இல்லையா? அவ்யக்த நிலையிலிருந்து கீழே வருகிறீர்கள் என்றால் ஏதோ வியக்தத்தின் (தேகம்) பக்கம் புத்தி செல்கிறது. நிறைய விஷயங்கள் அப்படிப்பட்டதாக இருக்கிறது. பட்டத்தை உயரத்தில் பறக்க விடுவதற்காக தளர்வாக விட வேண்டியிருக்கிறது. தடைகளை நீக்குவதற்கான யுக்திகள் ஒருவேளை எப்பொழுதும் நினைவில் இருந்தால், முயற்சியில் தளர்வாக இருக்க மாட்டீர்கள். யுக்திகளை மறந்து விடுகிறீர்கள் என்றால், முயற்சி மந்தமாகி விடுகிறது. ஒவ்வொரு விஷயங்களுக்காக எவ்வளவு யுக்திகள் கிடைத்திருக்கிறது. பிராப்தி எவ்வளவு பெரியது மற்றும் வழி எவ்வளவு எளிதாக இருக்கிறது. அநேக பிறவிகள் முயற்சி செய்வதனால் கூட யாரும் அடைய முடியாது. அவர்களோ ஒரு பிறவியில் ஒரு சில மணிகள் மட்டுமே பிராப்தி செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தளவு போதை இருக்கிறது இல்லையா? இச்சா மாத்ரம் அவித்யா அப்படிப்பட்ட நிலையை பிராப்தி செய்வதற்கான வழியைக் கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட உயர்ந்த ஞானம் மற்றும் எவ்வளவு நுட்பமானது. வாழ்க்கையில் இவ்வளவு உயர்ந்த லட்சியம் யாரும் வைக்க முடியாது. நான் தேவதை ஆகிறேன். இதை எப்பொழுதாவது யோசித்தோமா நாம்தான் தேவதையாக இருந்தோம். என்ன சிந்தனை முன்பு இருந்தது மற்றும் தற்போது என்ன ஆகிறீர்கள்? கேட்காமலே அமுல்ய (விலைமதிப்பற்ற)

ரத்தினங்கள் கிடைத்து விடுகிறது. அப்படி தன்னை பல மடங்கு பாக்கியசாலி என்று நினைக்கிறீர்களா? ஜனாதிபதி போன்றவர்கள் கூட உங்களுக்கு முன்னால் என்ன! ஆக, இவ்வளவு உயர்ந்த பார்வை இவ்வளவு உயர்ந்த சுவமான் நினைவு இருக்கிறதா? எப்பொழுது மறந்து விடுகிறீர்களோ அப்போது நினைவு மற்றும் மறதி என்ற ஏணியில் இறங்கி ஏறுகிறீர்கள். அழுக்கிலிருந்து கொசுக்கள் போன்றவை உருவாகின்றன. இதனால் அவைகளை அழிக்க வேண்டியிருக்கிறது. அப்படியே தன்னுடைய பலவீனங்களினால் மாயையினுடைய புழுக்களைப் பிடித்து விடுகிறார்கள். பலவீனங்களை வரவே விடவில்லை என்றால், மாயா வருவதில்லை. சர்வ சக்திவான் கூட நம்முடைய சம்மந்தம் இருக்கிறது என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். பிறகு இன்னும் ஏன் இந்த பலவீனங்கள்? சர்வ சக்திவான் பாபாவினுடைய குழந்தைகளாக இருந்தும்கூட மாயையினுடைய சக்தியை அழிக்க முடிவதில்லை. சர்வ சக்திவான் என்னுடைய தந்தை என்ற ஒரு விஷயத்தை எப்பொழுதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். நாம் அனைவரும் சிரேஷ்டமான சூர்யவம்சிகளாக இருக்கிறோம். நம் மீது மாயா எப்படி சண்டையிட முடியும்! தன்னுடைய தந்தை தன்னுடைய வம்சம் இதை நினைவில் வைத்திருந்தீர்கள் என்றால், மாயா எதுவுமே செய்ய முடியாது. நினைவு சொரூபம் ஆக வேண்டும். இத்தனை ஜென்மம் மறந்த நிலையில் இருந்தும் பிறகும் கூட மறதி நன்றாக இருக்கிறதா? ஜென்மம் மறதியினால் ஏமாற்றத்தை அடைந்தோம். இப்பொழுது ஒரு ஜென்மம் தப்பிப்பது கஷ்டமாக இருக்கிறதா? அடிக்கடி பலவீனமாக ஆகிறீர்கள். சோதனை செய்வதில்லை என்றால், பிறகு உங்களது இயல்பே பலவீனமாக ஆகி விடுகிறது. நிலையை சோதனை செய்து தன்னை சக்திசாலி ஆக்கிக் கொள்ள வேண்டும். பலவீனத்தை மாற்றி சக்தியை கொண்டு வர வேண்டும். யார் இங்கு அமர்ந்திருக்கிறீர்களோ அனைவரும் தன்னை சூர்யவம்சத்தின் நட்சத்திரம் என்று நினைக்கிறீர்களா? சூர்யவம்ச நட்சத்திரங்களின் கடமை என்ன? சூர்யவம்ச நட்சத்திரங்கள் மாயைக்கு அடிமையாக இருக்க முடியுமா? அனைவரும் மாயாஜீத் ஆகியிருக்கிறீர்களா? ஆகி விட்டீர்களா அல்லது ஆக வேண்டுமா? மாயாஜீத் என்ற பட்டத்தை தாரணை (ஏற்று உணர்ந்துள்ளீர்களா) செய்திருக்கிறீர்களா? யுகல் ஆக இருப்பவர்களில்கூட ஒருவர் மாயாஜீத் ஆகிக் கொண்டிருக்கிறோம் என்றும் மற்றொருவர் ஆகி விட்டோம் என்றும்

சொல்கிறார்கள். படிப்பு ஒன்றுதான், கற்பிக்கக் கூடியவரும் ஒருவர் தான். பிறகும் கூட சிலர் வெற்றியாளராகி விடுகிறார்கள். சிலர் ஆகிக் கொண்டே இருக்கிறார்கள். இந்த வித்தியாசம் ஏன்? மற்றும் யார் இப்பொழுது முயற்சி செய்கிறார்களோ அவர்கள் சத்யுகத்தினராக ஆவார்கள். ஆரம்பத்திலிருந்தே முழுமையான பயிற்சி இருந்தது என்றால், அந்த பயிற்சி உதவி கொடுக்கும். சில நேரம் நினைவு மற்றும் சில நேரம் மறதி என்ற அப்படிப்பட்ட பயிற்சி இருந்தால் கடைசி நேரத்தில் கூட மறதி ஏற்பட முடியும். நீண்ட காலத்தினுடைய சன்ஸ்காரம் எதுவாக இருக்கிறதோ அதுதான் கடைசி நிலையாக இருக்கிறது. லௌகீக முறையில் சரீரத்தை விடுகிறார்கள் என்றால், ஏதாவது சன்ஸ்காரம் திடமாக இருக்கிறது. சாப்பிடுவது, குடிப்பது மற்றும் அணிவது போன்றவை இருந்தால் கடைசி நேரத்தில் கூட அந்த சன்ஸ்காரம் எதிரில் (நினைவில்) வருகிறது. ஆகையால் இப்பொழுதிலிருந்தே எப்பொழுதும் நினைவினுடைய சன்ஸ்காரத்தை நிரப்பிக் கொள்ளுங்கள். இறுதியில் வெற்றியாளராக இதுவே உதவி செய்யும். மாணவர்கள் நீண்ட காலமாக படிப்பை சரியாக படிக்கவில்லை என்றால், தேர்வில் சரியாக எழுத முடியாது. நீண்ட காலத்திற்கான பயிற்சி வேண்டும். அதனால் இப்பொழுது மறதியினுடைய அதாவது தோல்வி அடையக்கூடிய சன்ஸ்காரத்தை நீக்கி விட வேண்டும். இப்பொழுது அந்த நேரம் சென்று விட்டது. ஏனென்றால், சாகார ரூபத்தில் சம்பூர்ணத்தன்மையின் நிரூபணத்தைப் பார்த்தீர்கள். சாகாரத்தில் பாபா சம்பூர்ணத்தன்மை அடைந்து விட்டார். பிறகு நீங்கள் எப்பொழுது செய்வீர்கள். நேரத்தின் மணி அடிக்கப்பட்டுவிட்டது. மணி அடித்த பிறகு கூட முயற்சி செய்வீர்கள் என்றால், என்ன ஆகும்? ஆக முடியுமா? மூன்றாவதில் யார் இருந்து விடுகிறார்களோ அப்படியே இருந்து விடுவார்கள். இந்த அளவு குறைவான நேரம் தான் இருக்கிறது. பிறகு என்ன செய்ய வேண்டும்? மூன்றாவது மணியில் சன்ஸ்காரங்களை உள்ளடக்குவதை ஆரம்பிப்பீர்கள் என்றால் பின்னாலேயே இருந்து விடுவீர்கள். பெட்டி படுக்கை எப்படி இருக்க வேண்டும் என்று கூறியிருந்தோம் அல்லவா? வீணான எண்ணங்கள் வடிவ படுக்கை மற்றும் பல பிரச்சினைகள் எனும் பெட்டி இரண்டையுமே மூடி விட வேண்டும். எப்பொழுது இரண்டையுமே உள்ளடக்கி தயாராக ஆகிறீர்களோ அப்பொழுது தான் செல்ல முடியும். கொஞ்சம் தங்கி இருந்து விடுகிறது என்றால், புத்தியோகம் அவசியம் அந்த பக்கம் சென்று விடும். பிறகு சவாரி செய்ய முடியாது. அதாவது

வெற்றியாளர் ஆக முடியாது. அதனால் இப்பொழுது என்ன செய்ய வேண்டியிருக்கும்? எப்பொழுது செய்து விடுவீர்கள். இந்த எப்பொழுது என்ற வார்த்தையை நீக்கி விடுங்கள். இப்பொழுது என்ற வார்த்தையை தாரணை செய்யுங்கள். எப்பொழுது செய்வீர்கள். மெதுமெதுவாக செய்வீர்கள். அப்படி சிந்தனை செய்யக் கூடியவர்கள் தூரமாகவே இருந்து விடுவார்கள். அப்படிப்பட்ட நேரம் இப்பொழுது வந்து விட்டது. இதனால் பாப்தாதா கூறி விடுகிறார். பிறகு யாரும் புகார் கொடுக்கக்கூடாது. நேரத்தினுடையது கூட ஆதாரம் இருக்க வேண்டும். நேரத்தின் ஆதாரத்தில் இருக்கிறீர்கள் என்றால், பிராப்தி எதுவும் இருக்காது. நேரத்திற்கு முன்பே மாறும்போது தான் செய்திருப்பதற்கேற்ற பலன் கிடைக்கும். யார் செய்வார்களோ அவர்கள் அடைவார்கள். நேரத்திற்கு தகுந்தாற்போல செய்தோம் என்றால், அது நேரத்தின் ஆதாரத்தில் ஆகி விட்டது. தன்னுடைய முயற்சி செய்ய வேண்டும்.

பாபாவிற்கு குழந்தைகள் மீது அன்பு இருக்கிறது. அப்பொழுது அன்பினுடைய அடையாளம் சம்பூர்ணம் ஆவது. நடந்து கொண்டு இருக்கிறீர்கள் ஆனால் வேகத்தைக்கூட பார்க்க வேண்டும். இப்பொழுது சம்பூர்ணத்தன்மைக்கான லட்சியம் மட்டுமே வைக்க வேண்டும். அப்பொழுது முழுமையான ராஜ்யத்தில் வருவீர்கள். ஏதாவது குறை இருந்து விட்டது என்றால், சம்பூர்ண ராஜ்யத்தை அடைவதில்லை. எவ்வளவு அதிகமாக பிரஜைகளை உருவாக்குவீர்களோ அந்தளவு அருகாமையில் வருவீர்கள். தூரமாக இருப்பவர்கள் தூரமாகவே பார்ப்பதற்கு வருவார்கள். அருகாமையில் வரக்கூடியவர்கள் ஒவ்வொரு காரியத்திலும் கூடவே இருப்பார்கள். இதில் நம்பர்-1 சக்திகளா? அல்லது பாண்டவர்களா? மற்றவர்களை முன்னேற்றுவது என்பதுகூட தான் முன்னேறுவது ஆகும். முன்னேற்றக் கூடியவர்களின் பெயர் இருக்கும் இல்லையா? இடைஇடையே சோதனை கூட இருக்க வேண்டும். ஒவ்வொரு காரியமும் செய்வதற்கு முன்பு மற்றும் பிறகும் சோதனை செய்து கொண்டேயிருங்கள். எப்பொழுது காரியத்தை ஆரம்பிக்கிறீர்களோ அப்பொழுது பாருங்கள். அதே நிலையில் இருந்து கொண்டு இருக்கிறேன். பிறகு இடையில் கூட சோதனை செய்து கொண்டேயிருங்கள். எவ்வளவு நேரம் நினைவு இருந்தது. ஆரம்பத்தில் சோதனை செய்வதினால் அந்த வெற்றி கிடைக்கும். மேலும் ஸ்திதி கூட (ஒரே ரசனை) ஆக இருக்கும். இரவு மட்டும் சார்ட் சோதனை செய்கிறீர்கள்

என்றால், முழு நாள் அப்படியே கடந்து விடுகிறது; ஆனால் ஒவ்வொரு கர்மத்தையும் ஒவ்வொரு மணி நேரமும் அதைச் செய்யும் போது சோதனை ' வேண்டும். பயிற்சி (பழக்கம்) ஆகி விடுகிறது என்றால், பிறகு பயிற்சி அழியாததாக நிரந்தரமாகி விடுகிறது. தைரியம் வைப்பதினால் பிறகு சகஜமாஜ், விடும். கஷ்டத்தை சிந்தனை செய்தால் கஷ்டத்தை (உணருவீர்கள்) அனுபவம் செய்வீர்கள். பிறகு தன்னுடைய முயற்சியை எப்பொழுது வேகமாகச் செய்வீர்கள். இப்பொழுது நேரம் எங்கு இருக்கிறது?

முழு கல்பத்தின் அதிர்ஷ்டத்தை இந்த நேரம் உருவாக்க வேண்டும். அம்மாதிரி கவனம் கொடுத்து நடக்க வேண்டும். முழு கல்பத்திற்கான அதிர்ஷ்டத்தை உருவாக்குவதற்கான நேரம் இப்பொழுது இருக்கிறது. இந்த நேரத்தை விலைமதிக்க முடியாதது என்று புரிந்து கொண்டு பிரயோகம் செய்யுங்கள். அப்பொழுது சம்பூர்ணமாவீர்கள். ஒரு விநாடியில் பல மடங்கு வருமானம் செய்ய வேண்டும். ஒரு விநாடியை இழந்தீர்கள் என்றால், பல மடங்கு வருமானத்தை இழந்து விட்டீர்கள். இந்தளவு கவனம் வைத்தால் வெற்றி அடைவீர்கள். ஒரு விநாடி கூட வீணாக இழக்கக் கூடாது. சங்கம யுகத்தின் ஒரு விநாடி கூட மிகப் பெரியது. ஒரு விநாடியில் எதிலிருந்து என்னவாக ஆக முடியும். இவ்வளவு கணக்கு வைக்க வேண்டும். நல்லது

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 26.01.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நினைவு யாத்திரையின் சம்பூர்ண ஸ்திதி!

பாப்தாதாவும் இங்கு அமர்ந்திருக்கின்றனர்; நீங்களும் அமர்ந்திருக்கிறீர்கள் ஆனால் பாப்தாதாவுக்கும், உங்களுக்கும் இடையில் என்ன வேறுபாடு உள்ளது.? முன்னர், சாகார உருவத்தில் இங்கு அமர்ந்திருந்தனர் ஆனால், இப்போது அமரும் போது என்ன உணர்வு ஏற்படுகிறது? சாகார உருவத்தில் வரும் போது, தந்தை, அந்த உடலை கடனாகப் பெற்று வந்திருந்திருக்கிறார் என்று உணர்ந்தீர்கள். இப்போது அவர்கள் (இருவரும்) சமமாக இருக்கும் அனுபவம் ஏற்படுகிறது. இப்போது அவர்கள் விருந்தினராக வருகின்றனர். நீங்கள் அனைவரும் உங்களையும் விருந்தினர் என்றே உணர்கிறீர்கள் ஆனால், நீங்கள் உணர்வதற்கும், தந்தை உணர்வதற்கும் இடையில் வேறுபாடு உள்ளது. விருந்தினர் என்றால், அவர் வருவது திரும்பிச் செல்வதற்காகவே! அவர் இப்போது வந்து பிறகு திரும்பிச் சென்றுவிடுகிறார். அது புத்தியோகத்தினால் ஏற்படும் அனுபவம் ஆனால் உங்களது நடை முறையில், நேரடியான அனுபவம். இன்னொரு சரீரத்தில் பிரவேசம் செய்து எவ்வாறு ஒரு காரியத்தை செய்யவேண்டும் என்கிற அனுபவத்தை தந்தைக்குச் சமமாக செய்யவேண்டும். பிரதி தினமும், குழந்தை களான நீங்கள் இத்தகைய சமமான ஸ்திதியை அடைந்து வருவீர்கள். செயலாற்றுவதற்காக இந்த உடலை கடனாக அடைந்திருக்கிறோம் என்கிற அனுபவம் உங்களுக்கு ஏற்படும். எதுவரையில் நீங்கள் விருந்தாளி என்று நீங்கள் உங்களை உணரவில்லையோ, அதுவரையில், நீங்கள் பற்றற்ற நிலையை அடைய முடியாது. எவர் அதிகமான பற்றறற்ற நிலையில் இருக்கிறாரோ, அவருடைய ஸ்திதியில் (ஆத்மநிலை) எத்தகைய சிறப்பு காணப்படும்?. அவருடைய பேச்சு, நடத்தையிலிருந்து அவருடைய உப்ராம் (அப்பாற்பட்ட உயர்ந்த ஸ்திதி) ஸ்திதியை மற்றவர்களும் உணருவார்கள். எவ்வளவு உயர்ந்த ஸ்திதி இருக்கிறதோ, அவ்வளவு உப்ராம் ஸ்திதியும் இருந்து

வரும். இந்த உடலில் இருக்கின்றபோதிலும், அந்த உப்ராம் ஸ்திதியை அடைய வேண்டும். உடல் வேறு, ஆத்மா வேறு என்று உணர வேண்டும். இதனையே நினைவு யாத்திரையின் சம்பூர்ண ஸ்திதி, அல்லது, யோகத்தின் பிரக்டிகல் சித்தி (நடைமுறைப் பலன்) என்கிறோம். பேசிக் கொண்டிருக்கும்போதே, இந்த பற்றற்ற ஸ்திதி உங்களை ஈர்க்க வேண்டும். கேட்டு வரும்போதும், கேட்காத மாதிரியான உணர்வு இருக்கும். இத்தகைய உணர்வு மற்றவர்களுக்கும் ஏற்பட வேண்டும். இந்த நிலையையே, கர்மாதீத் ஸ்திதி என்கிறோம்.

கர்மாதீத் என்றால், உடலின் பந்தனத்திலிருந்தும் (விடுபட்ட) முக்தி. கர்மாவை செய்துவந்தபோதிலும், அந்த கர்மாவின் (செயல்) கணக்கு (பாதிப்பு) ஏற்படுவதில்லை. இவ்வாறு பற்றற்று இருக்க வேண்டும். எந்த பற்றும் இருக்கக்கூடாது. கர்மத்தை செய்பவர் வேறு. கர்மம் வேறு. இத்தகைய அனுபவம் நாளுக்கு நாள் அதிகரித்துவரும். இந்த ஸ்திதியில் இருக்கும்போது. அதிகமாக புத்தியை செலுத்த வேண்டிய அவசியமும் இல்லை. ஒரு சங்கல்பம் தோன்றியவுடன், எது நடைபெற வேண்டுமோ, அதுதானாகவே நடைபெறும். இத்தகைய ஸ்திதியை நீங்கள் அனைவரும் அடைவீர்கள்.

மூலவதனத்திற்குச் செல்லும் முன்பாக, சூட்சும வதனத்தில் வழியாகச் செல்வீர்கள். அங்கு அனைவரும் வந்து ஒருவரை யொருவர் சந்திக்க வேண்டும். பிறகு உங்களுடைய வீட்டிற் சென்று, பிறகு உங்களுடைய இராஜ்யத்திற்கு வருவீர்கள். இந்த சாகாரவதனத்தில் எவ்வாறு சந்தித்தீர்களோ, அவ்வாறே, சூட்சும வதனத்திலும் அது நிகழும். அந்த பரிஸ்தாக்களின் மேளா. (சந்திப்பு) வெகு சீக்கிரம் நடைபெறும். பரிஸ்தாக்கள் ஒருவரை யொருவர் சந்தித்தனர்; ஆத்மா, ஆத்மாவுடன் உரையாடின என்கிற கதைகள்கூட உள்ளன அல்லவா? அத்தகைய அனுபவம் ஏற்படும். கதைகளில் கூறப்பட்டவை, நடைமுறையில் அனுபவம் ஆகும். அந்த சந்திக்கும் நாட்களுக்காக அனைவரும் காத்திருக் கின்றனர்.

இப்போது நீங்கள் அனைவரும் சேவைக்கு நிமித்தமானவர்கள். நீங்கள் மற்ற அனைத்தையும் மறந்து இங்கு அமர்ந்திருக்கிறீர்கள். இந்த

# 1970 அவ்யக்த முரளி

அவ்யக்த ஸ்திதியில், மனமும் உடலும் வியக்த தேசத்தில் இருக்கின்றன. இவ்வாறு அனுபவம் ஏற்படுகிறதா? நல்லது!

உங்களை எந்த தேசவாசியாகக் கருதுகிறீர்கள்? பரந்தாம நிவாசி என்று உணர்கிறீர்களா? அது எவ்வளவு நேரம் நினைவில் இருக்கிறது? நாம் பரந்தாமநிவாசி ஆத்மா, இந்த வியக்த தேசத்தில் ஈஸ்வரிய காரிய நிமித்தமாக வந்திருக்கிறோம் என்கிற ஒரே ஒரு நினைவு மட்டும் இருக்கட்டும். மதுவனத்திற்கு வந்து முக்கியமாக எந்த நற்குணத்தை நீங்கள் அடைந்திருக்கிறீர்கள்? மதுவனத்தின் முக்கியமான குணமாவது, இனிமை. மது என்றால், மதுரத்தன்மை அதாவது இனிமை; அன்பு. எவ்வளவு அன்பு உள்ளதோ, அவ்வளவு எல்லையற்ற வைராக்கிய விருத்தி! (உணர்வு) மதுவனத் தின் விசேஷமான குணத்தை தாரணை செய்து சென்றீர்களானால், எளிதில் நீங்கள் சம்பூர்ண ஸ்திதியை (நிலை) அடைந்து விடுவீர்கள். இதன்பிறகு நீங்கள் ஆன்மீக ஆசிரியைகள் ஆகவிரும்பினால், முதன்மையான ஆசிரியைகள் ஆக முடியும். ஏனென்றால், நீங்கள் எவ்வாறு தாரணை செய்கிறீர்களோ, அவ்வாறே மற்றவர்களையும் அனுபவம் செய்விக்க முடியும். இந்த இரு நற்குணங்களையும் நீங்கள் உங்களிடத்தில் தாரணை செய்யவேண்டும். மதுவனத்தின் எல்லைக்கோட்டைத் தாண்டுவதற்கு முன்னதாகவே இவற்றை உங்களிடத்தில் நிறைத்துச் செல்லவேண்டும். அன்பு மற்றும் எல்லையற்ற வைராக்கியம் ஆகிய இரண்டின் மூலமாகவும் நீங்கள் எந்தச் சூழ்நிலையையும் எளிதாக எதிர்கொள்ளமுடியும். நீங்கள் வெற்றி நட்சத்திரங்களாவதற்காக, இந்த இரு குணங்களையும் மதுவனத்தின் அன்பளிப்பாக நீங்கள் எடுத்துச் செல்லவேண்டும். எங்காவது ஒரு புதிய இடத்திற்குச் செல்லும்போது, அங்கு எது விசேஷமானது என்று கேட்ட் வழக்கம். அங்கு பிரசித்தமானதாக நிச்சயமாக எடுத்துச் செல்வது வழக்கம். அவ்வாறே, மதுவனத்தின் இந்த இரு நற்குணங்களை உங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டும். பிறகு வெற்றிக்கு மல்வெ கிடைக்கும். தோல்வி என்பது உங்கள் வாழ்க்கையிலிருந்து மறைந்து விடும். வெற்றி நட்சத்திரம் உங்களுடைய நெற்றியில் ஜொலிப்பதை அனைவரும் காண்பார்கள்.

ஆகவே நீங்கள் வெற்றி நட்சத்திரங்களா அல்லது, முயற்சிக்கும் நட்சத்திரங்களா? என்ன நினைக்கிறீர்கள்? வெற்றி நட்சத்திரங்களா?

உங்களுடைய லட்சியத்திற்கு ஏற்ப உங்களுடைய லட்சணம் (நடவடிக்கை) இருக்கும். நாம் புருஷார்த்தி என நினைத்துவந்தால், உங்களுடைய சிறிய தவறுகளையும் மன்னித்து விடுவீர்கள். நாம் புருஷார்த்திதானே என்று கருதுகிறீர்கள். ஆகவே இப்போது புருஷார்த்திக்குப் பதிலாக வெற்றி சொரூபம் ஆக வேண்டும். இன்னும் எவ்வளவு காலம் புருஷார்த்தி என்கிற நிலையிலேயே இருப்பீர்கள்? நீங்கள் வெற்றி சொரூபம் அடைந்தால் தான், மற்ற ஆத்மாக்களுக்கும் வெற்றி அடையும் வழியைக் காட்ட முடியும். மாறாக நீங்களே புருஷார்த்தம் செய்துவந்தால், சங்கமயுகத்தின் பலனை எப்போது அனுபவம் செய்வீர்கள்? இந்த வாழ்க்கை முழுவதையுமே புருஷார்த்தம் செய்வதிலேயே கழித்து விடுவீர்களா? இந்த சங்கமயுகத்தின் பலனை தெளிவாக அனுபவம் செய்யமாட்டீர் களா? சங்கமயுகத்தின் புருஷார்த்தத்தின் பலன் என்ன? (வெற்றி) ஆகவே வெற்றி சொரூபத்தை நிச்சயப்படுத்தினால், வெற்றி ஏற்பட்டுவரும். நாம் வெற்றி நட்சத்திரங்கள் என்று கருதினால், தோல்வி எங்கிருந்து வரும்? சர்வசக்திவானான தந்தையின் குழந்தைகள் ஒருபோதும் தோல்வி அடைய முடியாது. உங்களுடைய நெற்றியில் வெற்றி நட்சத்திரத்தைப் பார்க்கிறீர்களா அல்லது பிறகுதான் பார்ப்பீர்களா? வெற்றி என்பது ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டுள்ளது அல்லவா? இப்போது காலம் மாறிவரு கிறது. காலம் மாறும்போது, உங்களுடைய புருஷார்த்தம்கூட மாறும் அல்லவா? இப்போது தந்தை தமது வெற்றி சொரூபத்தைக் காட்டிவிட்டார். ஆகவே, குழந்தைகளும் இந்த வியக்த தேகத்தில் இருந்த போதிலும் வெற்றி சொரூபத்தை காட்டமாட்டார்களா? உங்களை வெற்றி மூர்த்தி என்றே எப்போதும் கருதவேண்டும். நிச்சயம் என்றால் வெற்றி என்று அர்த்தம். ஆகவே உங்களுடைய நம்பிக்கைக்கு ஏற்பவே செயலும் அமையும். நம்பிக்கையில் குறைவு இருந்தால், செயலிலும் குறை இருக்கும். நினைவு சக்திசாலியாக இருந்தால், ஸ்திதி மற்றும் செயலும் சக்திசாலியாகி விடும். ஆகவே உங்களுடைய ஸ்மிருதியை (நினைவு) பலவீன மான தாக ஆக்காதீர்கள். சக்தி தளம் மற்றும் பாண்டவர்கள் எப்போதாவது தோல்வி அடைவார்களா என்ன! பாண்டவர்கள் சென்ற கல்பத்தில் என்ன செய்தார்கள் என்பது நினைவு இருக்கிறதா? வெற்றி பெற்றார்கள். ஆகவே இப்போது உங்களுடைய ஸ்மிருதியை உயர்ந்ததாகச் செய்யுங்கள். இப்போது இந்த சங்கமயுகத்தில் வெற்றித் திலகத்தையும் பிறகு இந்த வெற்றித் திலகத்தினால், இராஜ்ய

திலகத்தையும் அடைவீர்கள். இந்த வெற்றி திலகத்தை ஒருவரும் அழிக்கமுடியாது. அத்தகைய நிச்சயம் இருக்கிறதா? வெற்றி ரத்தினமாக இருப்பவருக்கு ஒவ்வொரு விஷயத்திலும் வெற்றிக்கு மேல் வெற்றி கிடைத்து வரும். அவர் ஒருபோதும் தோல்வி அடையவே முடியாது. பல பிறவிகளாக தோல்வியை அடைந்து வந்தீர்கள். இப்போது வெற்றி அடைந்த பிறகு ஏன் தோல்வி ஏற்படுகிறது? வெற்றி நமதே! இத்தகைய நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

(குழந்தை இந்த ஞானத்தை கடைப்பிடிக்க இயலவில்லையென்றால், என்ன செய்வது?) எவராவது இந்த ஞானமார்க்கத்தில் செல்லமுடியவில்லை என்றால், திருமணம் செய்யவேண்டி யிருக்கும். அவர்களுடைய பலவீனத்தையும் உங்களிடத்திலிருந்து அகற்றிவிட வேண்டும். இத்தகைய ஒரு கட்டாயமான சூழ்நிலையில், அவர் களுக்கு திருமணம் செய்துவைப்பது அவசியம் ஆகும். சாட்சியாக இருந்து செய்து விடுங்கள். அது உங்களுடைய கடமையும் ஆகும் ஆனால், அதில் ஆர்வம் இருக்கக்கூடாது. அதை ஒரு கடமையாகக் கருதவேண்டும். அவர்களுக்குத் திருமணம் செய்ய வேண்டும் என ஆர்வத்துடன் செய்வது ஒரு வகை. நிமித்தமாகி, கடமையை நிறை வேற்றுவது வேறு ஒரு வகை. சகல ஆத்மாக்களுக்கும் ஒரே நேரத்தில் இந்த பிறப்புரிமையை அடைவதற்கான பார்ட் (பாகம்) இல்லை. அவர்கள் தந்தையின் அறிமுகத்தை அடைவதும் முக்கியமே! அவர்கள் தந்தையை அறிந்து கொள்ளவும் வேண்டும் ஆனால், சிலருக்கு பார்ட் இப்போது இருக்கிறது; வேறு சிலருக்கு பின்னர் தான் பார்ட் இருக்கும். விதைகளிலும் சில உடனடியாக வளர்ந்து பலன் தருகின்றன. வேறு சில சிறிது காலம் தாழ்த்தி பலன் தருகின்றன. இவ்வாறே, இங்கும், ஒவ்வொருவருக்கும் தத்தம் பார்ட் உள்ளன. கடமை என்று கருதிச் செய்தால் (திருமணம்) மாயையின் வியாதி உங்களை பாதிக்காது. இல்லையேல்,வாயு மண்டத்தின் பாதிப்பு உங்களைத் தாக்கலாம். இதனால், கடமை என்று கருதிச் செய்யவேண்டும், கடமை மற்றும் விருப்பத்துடன் என்பதில் (இந்தியில்) ஒரு புள்ளிதான் வித்தியாசம் ஆனால், பிந்தி (ஆத்மா) சொரூபத்தில் இல்லாத காரணத்தால், கடமை வியாதியாகி விடுகிறது. பாபாவுக்கு உதவியாளராக இருப்பவருக்கு சதா உதவி கிடைத்து வருகிறது. ஒவ்வொரு காரியத்திலும் அவருக்கு பாபாவின் உதவி கிடைக்கிறது என்கிற அனுபவம் உங்களுக்கு ஏற்படுகிறதா? ஒருவர்

# 1970 அவ்யக்த முரளி

பிறரின் நற்குணத்தைப் பார்த்து அவர்களை முன்னிலையில் வைக்க வேண்டும். மற்றவரை முன்னிலையில் வைப்பது என்றால். உங்களையே முன்னேறச் செய்வதாகும்.

சிவஜெயந்தியின்போது, ஒலியைப் (செய்தி) பரப்புவது மிகவும் எளிது; எவ்வளவு தைரியம் இருக்கிறதோ, அவ்வளவு செய்யுங்கள். ஏனெனில், இந்த சேவையை செய்வதற்கும் சந்தர்ப்பம் குறைந்து விடும்படியான காலம் வரப்போகிறது. ஆகவே எவ்வளவு செய்ய முடியுமோ, அவ்வளவு செய்யுங்கள். தவறு ஏன் ஏற்படுகிறது என்பது பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்யுங்கள். இந்தத் தவறு ஏன் ஏற்பட்டது என்பதை அந்தர்முகியாகி யோசனை செய்யவேண்டும். இது மாயையின் உருவம். நான் படைப்பவரான தந்தையின் குழந்தை. இவ்வாறு ஏகாந்தமாக அமர்ந்து உள்ளூர உரையாடுங்கள். ஞானத்தைக் கடைவதற்கு முயற்சி செய்யுங்கள்.

எங்கு சென்றாலும், அங்கு ஒரு ஞாபகார்த்தத்தை விட்டுவர வேண்டும்; அங்கிருந்து ஒன்றைக் கொண்டு வர வேண்டும். ஆகவே மதுவனத்தின் எந்த ஞாபகார்த்தத்தை விட்டுச் செல்கிறீர்கள்? ஒவ்வொரு ஆத்மாவிடத்திலும், இந்த ஈஸ்வரிய அன்பு மற்றும் சகயோகம் ஆகிய ஞாபகார்த்தத்தை விட்டுச் செல்லவேண்டும். நீங்கள் எந்த அளவு ஒவ்வொருக்கொருவர் அன்பு நிறைந்த சகயோகி ஆகிறீர்களோ, அந்த அளவு, மாயையின் விக்னங்களை (தடைகள்) விலக்குவதற்கு சகயோகம் (உதவி) கிடைக்கும். சகயோகம் அளிப்பது என்றால், சகயோகத்தை அடைவதாகும். குடும்பத்திற்கு ஆன்மீக அன்பை அளிக்க வேண்டும்; மாயையை வெற்றி கொள்வதற்கு சகயோகத்தைப் பெற வேண்டும். இந்த கொடுக்கல் வாங்கலுக்கான கணக்கு சரியாக இருக்கும். இந்த சங்கமயுகத்தில் தான் அனேக பிறவிகளுக்கான சம்பந்தத்தை உருவாக்க வேண்டும். அன்புதான் சம்பந்தத்தை ஏற்படுத்து வதற்கான சாதனம் ஆகும். துணியைத் தைப்பதற்கு நூலை உபயோகிப்பதைப் போன்றே, எதிர்காலத்திற்கான சம்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான சாதனம் இந்த அன்பு என்கிற நூல். இங்கு எவ்வாறு உருவாக்குகிறீர்களோ, அவ்வாறு அங்கே ஏற்கனவே உருவாக்கப்பட்ட சம்பந்தம் கிடைக்கும். இதை உருவாக்குவதற்கான காலம் மற்றும் இடமும் இதுதான். மற்ற அனைவரிடத்திலும் உள்ள அன்பு துண்டிக்கப்படும்போதுதான், இந்த

ஈஸ்வரிய அன்பையும் ஏற்படுத்த முடியும். ஆகவே மற்ற அனைவரிடத்திலும் கொண்டுள்ள அன்பை அகற்றி, ஒரே ஒருவருடன் அன்பை ஏற்படுத்த வேண்டும். அந்த அனேகரிடத்தில் இருக்கும் அன்பு கஷ்டத்தை அளிக்கிறது. இந்த ஒரே ஒருவரின் மீது கொள்ளும் அன்பு, நிரந்தரமாக உங்களை பரிபக்குவம் ஆக்கவல்லதாகும். அனேகரிடத்தில் உள்ள அன்பைத் துண்டித்து, ஒரே ஒருவரிடத்தில் இணைக்க வேண்டும். துண்டிக்காமல், அதை இணைக்க முடியாது. இப்போது ஏதாவது ஒன்றில் குறைவு இருந்தால், அதை இப்போது நிறைவு செய்யமுடியும். பிறகு அந்தக் காலமும் முடிந்து விடும் இவ்வாறு உணர்ந்து ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்க வேண்டும்.

இப்போது நீங்கள் தீவிர புருஷார்த்தியா? அல்லது, சாதாரண புருஷார்த்தியா? தீவிர புருஷார்த்த்தி மனதின் சங்கல்பங்களிலும் தோல்வி அடையமாட்டார். இத்தகைய ஸ்திதியை உருவாக்க வேண்டும். சங்கல்பங்களிலும்கூட மாயையிடம் தோல்வி அடையக்கூடாது. இத்தகையவரே தீவிர புருஷார்த்தி எனப் படுகிறார். அவர் சுத்த சங்கல்பங்களால், முன்கூட்டியே மனதில் நிறைத்து விடுவதால், வேறு எந்த சங்கல்பமும் உருவாகு வதில்லை. முழுமையாக நிறைந்திருந்தால், ஒரு சொட்டுகூட அதிகமாக அதில் ஊற்றமுடியாது. இல்லையேல் அதுவும் அத்துடன் கலந்து விடும். ஆகவே இங்கும் வீண் எண்ணங்கள் வருவதற்கே இடமில்லாத வாறு, மனம் சுத்த சங்கல்பங்களால் நிறைந்திருக்க வேண்டும். இவ்வாறு நீங்கள் உங்களை பிசியாக வைத்திருங்கள். மனதை பிசியாக வைத்திருக்க எந்த யுக்திகள் அளிக்கப்படுகின்றனவோ, அவற்றை நீங்கள் முழுமையாக பிரயோகம் செய்வதில்லை. இதனால் தான், வீண் எண்ணங்கள் வந்து விடுகின்றன. ஒருபுறம் பிசியாக வைத்திருந்தால், மறுபுறம் வீண் எண்ணங்களிலிருந்து தப்பிவிடுவீர்கள்.

ஞானசிந்தனை செய்வதற்கு எண்ணற்ற கஜானாக்கள் உள்ளன. இவற்றால், மனதை பிசியாக வைத்திருக்க வேண்டும். காலம் விரைவாகச் சென்றுகொண்டிருக்கிறது. அவ்வாறே, உங்களுடைய புருஷார்த்தமும் விரைவாகச் செல்கின்றதா? காலம் விரைவாகச் செல்லும்போது, உங்களுடைய புருஷார்த்தம் தொய்வாக (மெத்தனமாக) இருந்தால், முடிவு என்னாகும்? காலம் முன்னேறிச் சென்றுவிடும். புருஷார்த்தி பின்தங்கி

விடுவார். காலம் என்கிற வண்டியைப் பிடிக்க முடியாது. சவாரி செய்யவேண்டியவர் பின்தங்கி விடுவார்!. காலத்தின் வேகம் எந்தளவு காணப்படுகிறது? காலத்தின் கடந்தவை, கடந்து சென்றவையாக மாற்றுவதில் தீவிர மாக காணப்படுகிறது. அதே விஷயங்களை காலம் எப்போதாவது திரும்ப கொண்டு வருகிறதா? ஆகவே புருஷார்த்தத் திலும் எந்தக் குறை இருந்தாலும், கடந்தவற்றை, கடந்து சென்று விட்டன என்று கருதி, ஒவ்வொரு வினாடியிலும் முன்னேறிச் சென்றால். காலத்திற்குச் சமமாக நீங்களும் விரைந்து செல்லமுடியும். காலம் படைப்பு அல்லவா? படைப்பில் இந்த குணம் இருந்தால், இதே குணம் படைப்பவரிடத்திலும் இருக்க வேண்டும். நாடகம் படைப்பு: ஆகவே, படைப்பவரின் குழந்தைகள் நீங்கள் தான் அல்லவா? ஆனால், படைப்பவரின் குழந்தைகள் படைப்பைவிட ஏன் பலவீனமாக இருக்கின்றனர்? இந்த நாடகத்தில், ஒவ்வொரு வினாடியும் அதாவது, எது கடந்து விட்டதோ, எந்த உருவத்தில் கடந்து விட்டதோ, அது மீண்டும் இந்தக் கல்பத்தில் வரமுடியாது; 5000-ஆண்டுகளுக்குப் பின்னர்தான் மீண்டும் வரும் என்கிற ஒரு விஷயத்தை மட்டும் கவனத்தில் வைத்திருங்கள். ஆகவே பலவீனங்களை ஏன் மீண்டும் மீண்டும் கொண்டு வருகிறீர்கள்? இந்த பலவீனங்கள் மீண்டும் வராவிட்டால், உங்களுடைய புருஷார்த்தம் தீவிரமாகும். பலவீனங்கள் அகன்றுவிட்டால், அந்த இடத்தை, சக்திகள் நிறைவு செய்யும். மாறாக பலவீனங்கள் மீண்டும் மீண்டும் வந்துகொண்டிருந்தால், அந்த சக்திகள் வருவதற்கு இடமிருக்காது. ஆகவே, நடந்தவற்றை நடந்து முடிந்த வைகளாகக் கருதுங்கள். பலவீனங்களால் ஏற்பட்ட விஷயங்கள் சங்கல்பங்களில்கூட வரக்கூடாது. அவை சங்கல்பத் தில் வந்தால், பிறகு, சொல், செயலிலும் வந்து விடும். அந்த பலவீனத்தை சங்கல்பத்திலேயே அழித்து விட்டால், சொல், செயலில் அது வராது. இதனால், எண்ணம், சொல், மற்றும் செயல் ஆகிய மூன்றும் சக்திசாலியாகி விடும். கெட்டவற்றை உடனேயே தூக்கி எறிந்து விடுவது வழக்கம். நல்லவற்றை உபயோகப்படுத்து கிறோம். இவ்வாறே கெட்ட விஷயங்களைத் தூக்கி வெளியே எறிந்து விடுங்கள். இவ்வாறானால், காலம், புருஷார்த்தத்தைவிட முந்திச் செல்லமுடியாது. காலத்திற்கு முன்பாகவே நாம் தயார் ஆகி விட வேண்டும். மாறாக, காலம் வரும்போது, நாம் முன்கூட்டியே தயாராக இருக்கவில்லையெனில், காலம் சிறிது தாமதித்தால் நன்றாயிருக்குமே என்று சிந்திக்க நேரிடும்.

பந்தனத்தில் இருப்பவர்களின் யோகம் அதி தீவிரமாக இருக்கும். ஏனெனில், எந்த விஷயத்தில் மற்றவர் தடுக்கிறாரோ. அந்த விஷயத்தின் மீதே புத்தி ஈடுபட்டிருக்கும். வீட்டில் இருந்தவாறே, பாபாவின் சரித்திரத்தை அனுபவம் செய்யமுடியும் ஆனால் அதற்கு மிகுந்த ஆர்வம் (லகன்) தேவை. இத்தகைய (நடைமுறை வாழ்வை) லகன் ஸ்திதியில் ஒருவர் இருந்தால், (தடையாக இருக்கும் குறிப்பிட்ட) அந்த பந்தனம் துண்டிக்கப்பட்டுவிடும். ஒரே ஒரு நினைவே அனேக பந்தனங்களை துண்டிக்க வல்லதாகும். ஒருவருடன் இணைக்க வேண்டும். அனேகவற்றிலிருந்து துண்டிக்க வேண்டும். ஒரே தந்தையைத் தவிர வேறு எவரும் இல்லை. இத்தகைய ஸ்திதி அமைந்து விட்டால், அனைத்து பந்தனங்களும் அழிந்து விடும். எந்த அளவு ஆழ்ந்த அன்பு இருக்கிறதோ, அந்த அளவு மிகுந்த சகயோகம் கிடைக்கும். சகயோகம் குறைவு என்றால், அதற்குக் காரணம் அன்பு குறைவாக இருப்பதே ஆகும். ஆகவே ஆழ்ந்த அன்பின் மூலமாக பாபாவிடமிருந்து மிகுந்த உதவியை அடையவேண்டும்.

சென்ற கல்பத்தைப் போன்றே இப்போதும் உங்களுடைய அதிகாரத்தை (உரிமையை) அடைவதற்காக இங்கு வந்தடைந்து. விட்டோம் என்று உணர்கிறீர்களா? நாம் தான் சென்ற கல்பத்தில் இருந்தோம், இப்போது மீண்டும் நாம் நிமித்தம் ஆகிறோம் என்கிற நினைவு வருகிறதா? எவரிடத்தில் இந்த போதை இருக்கிறதோ, அவருடைய முகத்தில், குஷி மற்றும் ஜோதிரூபம் விளங்கும். அவருடைய முகத்தில், அலௌகீக அவ்யக்த பிரகாசம் காணப்படும். அவருடைய கண்களில், உதடுகளில் சதா அளவற்ற குஷியைக் காணலாம். அதைக் காண்பவர்களும் தங்களுடைய துக்கத்தை மறந்து விடுவார்கள்!. துக்கத்தில் இருக்கும் ஒரு ஆத்மா தமக்கு குஷியை ஏற்படுத்த ஏதாவது ஒரு வழியைத் தேடுகின்றார் அல்லவா? ஆகவே உங்களுடைய முகம் அவருக்கு குஷியை அளிக்க வேண்டும். பேசாமலேயே, உங்களுடைய உதடுகள் அந்த சேவை செய்யவேண்டும். இக்காலத்தினர், நிலைக் கண்ணாடி யைப் பார்த்து தமது முகத்தை அலங்கரித்துக் கொள்கின்றனர் அல்லவா? அவ்வாறே, ஆத்மாக்களாகிய உங்களுடைய அலங்கரிக் கப்பட்ட உருவம் காணப்படட்டும். சர்வசக்திவானான தந்தையின் குழந்தைகளான உங்களிடத்தில் சக்திகள் இல்லையென்றால் எப்படி? அவ்வாறெனில், உங்களுடைய புத்தி என்கிற மின்கம்பி யில் ஏதோ, ஒரு குறை இருக்க

வேண்டும். மின்கம்பியை இணைக்க பல யுக்திகள் வழங்கப்பட்டுவருகின்றன. அவற்றை பயிற்சி செய்யுங்கள். அதை மற்றவற்றிலிருந்து துண்டிக்கா விட்டால், அதன் இணைப்பும் சரிவர இருக்காது. சிறிது காலத்திற்கே அது இணைந்து இருக்கும், பிறகு, அது துண்டிக்கப்பட்டுவிடும். ஆகவே அனேக பந்தனங்களை துண்டித்து ஒருவருடன் மட்டுமே இணைக்க வேண்டும். இதற்கு சகவாசமும் தேவை, கவனமும் தேவை. ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு சங்கல்பத்தின் மீதும் கவனம் செலுத்தவேண்டும். எந்த ஒருபு எண்ணம் எழும்போதும், அது சரியானதா அல்லது இல்லையை என்பதை சோதனை செய்யவேண்டும். இவ்வளவு கவனம் சங்கல்பத்தின் மீது இருந்தால், சொல்லும் சரியானதாக இருக்கும், செயலும் சரியானதாக இருக்கும். சங்கல்பம் மற்றும் சமயம் ஆகிய இரண்டும், சங்கமயுகத்தின் முக்கியமான கஜானாக்கள் ஆகும். இவற்றின் மூலமாக மிகுதியாக வருமானம் செய்யமுடியும். ஸ்தூல தனத்தை நன்கு சிந்தித்து ஒரு பைசாகூட விரயம் ஆக்கக்கூடாது என்று கவனத்துடன் உபயோகப் படுத்துவதைப் போலவே, இந்த சங்கமயுகத்தின் சங்கல்பம் மற்றும் சமயம் ஆகிய இரண்டும். வியர்த்தம் (வீண்) ஆகக்கூடாது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். சங்கல்பம் சக்திசாலியாக இருந்தால், இந்த சங்கல்பத்தின் ஆதாரத்தில், சத்யுகத்தின் உலகம் உங்களுக்குக் கிடைக்கும். மாறாக சங்கல்பம் பலவீனமானதாக இருந்தால், உங்களுக்கு திரேதாயுகத்தின் உலகம்தான் கிடைக்கும். முழு கல்பத்திலேயே இந்த கஜானாக்கள் வேறு ஒருபோதும் கிடைக்காது. ஆகவே மிகவும் சிரமப்பட்டு இந்த ஒரு நேரத்தில் மட்டுமே கிடைக்கும் இவற்றிற்கு எவ்வளவு மதிப்பு அளிக்க வேண்டும்! ஆகவே இப்போது எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்து விடவேண்டும் பிற்பாடு, ஏற்கனவே செய்யப்பட்ட ஒன்றைத்தான் பார்க்க முடியும்; எதையும் அப்போது செய்ய முடியாது. இப்போதுதான் செய்யமுடியும். அதற்கு இப்போது மிகக்குறுகிய அவகாசமே உள்ளது. மிகுந்த காலம் கழிந்து விட்டது. இப்போது மிகக்குறைவான காலமே எஞ்சியுள்ளது என்று நீங்கள் மற்றவர்களுக்குக் கூறுகிறீர்கள் ஆனால் அவ்வாறு நீங்கள் உணர்கிறீர்களா? மிகக்குறுகிய காலமே உள்ளது; ஆனால் செய்ய வேண்டியது அதிகம். இன்றைக்குப் பிறகு இந்த பலவீனமான விஷயங்கள் இருக்காது என்கிற திட சங்கல்பம் செய்யவேண்டும். இந்த சமஸ்காரம் மீண்டும் என்னிடத்தில் தோன்ற விட மாட்டேன். இந்த வீண் எண்ணம் மீண்டும் தோன்றுவதற்கு ஒருபோதும்

அனுமதிக்கமாட்டேன். எப்போது இத்தகைய திடமான உறுதி எடுக்கிறீர்களோ, அப்போதுதான் பிரத்யட்சமான (வெளிப்படை யான) பலன் கிடைக்கும். இப்போது காலம் மாறிவருகிறது. ஆகவே நீங்களும் மாற வேண்டும். இப்போது கவனக்குறைவான புருஷார்த்தம் செய்வதற்கான காலம் கடந்து விட்டது. தீவிரமான புருஷார்த்தம் செய்யவேண்டிய நேரத்தில் ஒருவர் மெத்தனமான புருஷார்த்தம் செய்தால் இதை என்னவென்று சொல்வது! ஆகவே இப்போது சுய உணர்வுக்கு வாருங்கள். அடிக்கடி மூர்ச்சை அடையாதீர்கள்! இந்த சஞ்ஜீவினி மூலிகையை சதா உடன் வைத்திருந்து சதா சுய உணர்வுடன் இருங்கள். செய்து விடுவோம். இது நடந்து விடும், பின்னர் பார்ப்போம் என்கிற வார்த்தைகள் இப்போது வெளிவரக்கூடாது. இந்த வார்த்தைகளை நெடுங்கால மாகக் கேட்டுவந்தோம்!. இப்போதே செய்துகாட்டுகிறோம் பாபா! என்பதையே பாப்தாதா கேட்க விரும்புகிறார்.

உங்களுடைய நடத்தையில் அலௌகீகத்தைக் கொண்டு வாருங்கள். அப்போது, நடத்தையின் ஈர்ப்பு. லௌகீக உறவினர்களைத் தானாகவே கவர்ந்து ஈர்க்கும். உறவினர்களிடத்தில் பேச்சு எடுபடாது. நடத்தைதான் ஈர்க்கவல்லதாகும். இப்போது நீங்கள் வெகு விரைவாக முன்னேற வேண்டும். அனைவரின் முன்னிலையிலும் நீங்கள் ஒரு முன் உதாரணமாகத் திகழுமாறு நீங்கள் மாறிக் காட்ட வேண்டும். இப்போது ஒரு வினாடியைக் கூட வீண் செய்யக்கூடாது. இவ்வாறு நீங்கள் சோதனை செய்யமுடியும். இப்போது மிகக் குறுகிய காலமே உள்ளது. காலமும் எல்லையற்ற வைராக்கிய விருத்தியை (உணர்வு) உருவாக்குகிறது ஆனால், காலத்திற்கு முன்னதாக, எவர், தன் சுய முயற்சியினால் வைராக்கியத்தை அடைகிறாரோ, அவருக்கு அதிகப்படியான பலன் கிடைக்கும். எவர் தாமாகவே வைராக்கியம் கொள்ளமுடிய வில்லையோ, அவருக்கு காலம் உதவி செய்யும் ஆனால் அதன் பலன் அவருக்குக் கிடைக்காது; காலத்திற்கே கிடைக்கும்.

எவ்வளவு முறை பாப்தாதாவை சந்தித்திருக்கிறீர்கள்? இந்த பிறப்புரிமை பலமுறை கிடைத்துள்ளது என்கிற நினைவு இருக்கிறதா? இது எவ்வளவு மகத்தான உரிமை! மற்றவர்கள் மிகுந்த பிரயத்தனம் செய்தாலும் கிடைக்காதது; அது இப்போது உங்களுக்கு சகஜமாக பிராப்தி. ஆககிடைத்துவருகிறது. இத்தகைய அனுபவம் ஏற்படுகிறதா? இன்னும்

எவ்வளவு நேரம் இருக்கிறது? புருஷார்த்தம் என்ன செய்திருக்கிறோம்? இந்த இரண்டையும் உணருகிறீர்களா? காலம் குறைவாக உள்ளது; மிகுந்த புருஷார்த்தம் செய்யவேண்டியுள்ளது. சில மாணவர்கள் இறுதி நேரத்தில் வந்து பரீட்சை எழுதவேண்டும் என்றால், அந்த குறைந்த நேரத்தில் எவ்வளவு தீவிர முயற்சி செய்யவேண்டியுள்ளது! காலம் விரைந்து செல்கிறது. அதற்கேற்ற புருஷார்த்தம் நடைபெறுகிறதா? எப்போதுச் என்கிற சொல்லை நீக்க வேண்டும். தீவிர புருஷார்த்தி எப்போது என்பதற்குப் பதிலாக இப்போதே! என்று கூறுவார். இப்போது முதலே செய்வேன் என்பார். இந்த சங்கமயுகத்தின் ஒரு வினாடி கூட எவ்வளவு மகத்தானது ஒரு வினாடி வீணானால், எவ்வளவு சம்பாத்தியம் வியர்த்தம் ஆகி விடுகிறது! முழு கல்பத்திற்கான அதிர்ஷ்டத்தை உருவாக்குவதற்கு இந்த குறுகிய காலமே உள்ளது. ஒரு வினாடி பன் மடங்கு சம்பாத்தியத்தை அளிக்க வல்லது; அந்த ஒரு வினாடி பல்லாயிரம் மடங்கு நஷ்டத்தை ஏற்படுத்த வல்லதும் ஆகும். இவ்வாறு காலத்தின் மகத்துவத்தை உணர்ந்து அடியெடுத்து வைப்பதை விரைவு படுத்துங்கள். பிரச்சனைகள் உருவாகி வரத்தான் செய்யும். பிரச்சனைகளை மாற்ற வல்லதாக உங்களுடைய ஸ்திதி சக்திமிக்கதாக இருக்க வேண்டும். பரஸ்திதியின் ஆதாரத்தில் உங்களுடைய ஸ்திதி அமையக்கூடாது. ஸ்திதி பரஸ்திதியை மாற்றவல்லது. ஏனென்றால், சர்வ சக்திவானான தந்தையின் குழந்தைகள் நீங்கள்! ஆகவே, ஈஸ்வரிய சக்தி பரஸ்திதியை மாற்ற முடியாதா என்ன! படைப்பவரின் குழந்தைகள் படைப்பை மாற்ற முடியாதா என்ன! படைப்பு அதிக சக்தியுடையதா அல்லது படைப்பவர் அதிக சக்தியுடையவரா? படைப்பவரின் குழந்தைகள் எவ்வாறு படைப்புக்கு அடிமை ஆக முடியும்? அதிகாரி ஆக வேண்டுமா அல்லது அடிமை ஆக வேண்டுமா? எவ்வளவு அதிகாரத்தை அடைகிறீர்களோ, அவ்வளவு பரஸ்திதியும் மாறிவிடும். மாறாக அதைப் பின் தொடர்ந்து வந்தால், அது மேலும் உங்களை எதிர்கொள்ளும். பரஸ்திதியின் பின்னால் செல்வது, ஒருவர் தன் நிழலைத் தன் கையாலேயே பிடிக்க முயற்சிப்பது போலாகும். அந்த நிழல் மேலும் விலகிப் போய்க் கொண்டேயிருக்கும். ஆகவே இவ்வாறு செய்வதை விட்டுவிடுங்கள். வாயுமண்டலத்தை மாற்றுவது மிக எளிது. ஒரு சிறிய அகர்பத்தி அல்லது நறுமணப் பொருள்கூட வாயுமண்டலத்தை மாற்றுகிறது. ஆகவே ஞானத்தின் சக்தியினால், தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். உலகினர் என்ன பேசினாலும்,

எந்த விஷயத்தில் உங்களுக்கு ஆர்வம் இல்லையோ, அதை கேட்டும் கேளாதவாறு இருக்க வேண்டும். உடல் அங்கு இருக்கலாம்: ஆனால் மனம் அங்கு இருக்கக்கூடாது. உடல் ஒரு இடத்தில் அமர்ந்திருந்தாலுர் அது அங்கு இல்லாத உணர்வு ஏற்படுகிறது. இத்தகைய அனுபவம் பலமுறை ஏற்படுகின்றன. உடல் மூலமாக மற்றவருடன் இருக்க வேண்டியிருக்கலாம் ஆனால் மனதின் மூலமாக அங்கு இருக்க வேண்டியதில்லை. இதற்காக சிறிது கவனம் செலுத்தினாலே போதும்.

தைரியத்துடன் அடியெடுத்து வைக்காவிட்டால், நாம் அடைய வேண்டிய இடம் மிக உயரத்தில் இருப்பதாக உணருவீர்கள். அடியெடுத்து வைத்து விட்டால், லிப்ட்டில் செல்வதைப் போல உடனடியாக அங்கு சென்றடைந்து விடுவீர்கள். தைரியம் கொண்டால், செங்குத்தான சிகரமும் ஒரு லிப்ட் போல ஆகி விடும். ஆகவே தைரியம் என்கிற அடியெடுத்துவையுங்கள். உலகத்தின் நியமங்களைத் தியாகம் செய்யுங்கள். தைரியம் கொண்டால் போதும். ஒவ்வொருக்கொருவர் உதவி செய்வதும் பெரிய லிப்ட் ஆகும். பிரச்சனைகள் வரவே செய்யும் ஆனால், உங்களுடைய ஸ்திதி சக்திசாலியானதாக இருக்க வேண்டும். அப்போது சூழ்நிலைக்கு ஏற்ப அதற்கான வழியும் உங்களுக்குத் தெரியவரும். சமயத்திற்கு ஏற்ற யுக்தி தெரியவில்லையெனில், உங்களுடைய யோகபலம் குறைவாக என்று உணர வேண்டும். யோகயுக்தி (பாபா நினைவு நிலை) இருந்தால், உதவியும் கிடைக்கும். யதார்த்தமான புருஷார்த்தியிடம் இத்தகைய சக்தி இருக்கும். அதிகமாக சிந்திக்க வேண்டியதும் இல்லை. அனேகரிடத்தில் உங்களுக்கு பற்று இருந்தால், மாயையின் அக்னியும் உங்களைப் பீடிக்கும். ஆகவே பற்று இருக்கக்கூடாது. கடமையை நிறைவேற்ற வேண்டும் ஆனால், அதில் பற்று இருக்கக்கூடாது. மற்றவர்களுக்கு ஒரு முன் உதாரணமாகத் திகழுமாறு நீங்கள் சக்தியுடன் விளங்க வேண்டும். சக்தியுடன் இருப்பவர் பரீட்சையில் வெற்றிபெறுவார். ஆகவே பரீட்சை எழுத, முன் உதாரணமாகிக் காட்டுங்கள். இவர் எவ்வளவு மாறிவிட்டார் என்று பார்ப்பவர்கள் வியக்க வேண்டும். அவ்வளவு சேவை நிறைந்தவராக ஆக வேண்டும். இதைப் பார்ப்பவர்களும் ஊக்கம் அடைவார்கள். ஆரம்பத்தில் வந்த சக்திகள், எவ்வளவு சக்திகளை (சகோதரிகள்) உருவாக்கினர். சக்திகளான நீங்கள் இப்போது உலகத்தையே மாற்ற வேண்டும். இவ்வளவு முன்னேற வேண்டும்!. சக்திகளான நாம் உலகத்தையே மாற்றிக் காட்டுவோம் என்கிற பாடலும்

இருக்கிறது அல்லவா? இந்த உலகத்தை யார் மாற்ற இயலும்? எவர் முதலில் தாமே மாறுகிறாரோ. சக்திகள் புலியின்மீது சவாரி செய்வதாக சித்தரித்துள்ளனர். எத்தகைய புலி? மாயை எப்போது புலிபோல எதிர்கொள்ளவருகிறதோ. அதை உங்களுக்கு அடிமையாக்கி, உங்களுடைய வாகனம் ஆக்க வேண்டும். அதாவது அதனுடைய சக்தியை அழித்து விட வேண்டும். புலியின் மீது சவாரி செய்வதாக காட்டப்பட்டிருக்கும் சக்திகள் நீங்கள்தாம் அல்லவா! அது உங்கள் அனைவரின் சித்திரம் ஆகும். அத்தகைய சக்திகள் ஒருபோதும் மாயையினால் அச்சம் அடையமாட்டார்கள். மாறாக மாயை இவர்களைக் கண்டு அச்சம் அடைகிறது! இத்தகைய மாயாஜீத் ஆகி விட்டீர்கள் அல்லவா? சக்தி இல்லையேல், பந்தனங்கள் துண்டிக்கப்படமாட்டா. ஒரே ஒரு தந்தை, வேறு எவரும் எனக்கு இல்லை என்பதே நினைவின் சக்தி ஆகும். இத்தகைய சௌபாக்கியம் கோடியில் ஒரு சிலருக்கே கிடைக்கிறது. இத்தகைய பத்மாபதம் பாக்கியசாலிகளாக நீங்கள் உங்களைக் கருதுகிறீர்களா? சக்திதளம் மிகுந்த அதிசயங்களை உருவாக்க வல்லது. இவ்வாறு எலும்புருக சேவை செய்பவர்களுக்கு, தந்தையும் உதவி செய்கிறார். அன்புடையவரின்மீது, தந்தையும் அன்புடையவராக விளங்குகிறார். அத்தகைய குழந்தைகளே தந்தையின் முன்னிலையில் இருக்கிறார்கள். அத்தகையவர் எவ்வளவு தொலைவில் இருப்பினும், பாப்தாதாவின் இதயத்திற்கு மிக அருகில் உள்ளனர்!.

உங்களுடைய முகத்தை சதா முகமலர்ச்சியுடன் இருக்கச் செய்வதே மிகச் சிறந்த அன்பளிப்பாகும். எந்த ஒரு குழப்பமும் காணப்படக்கூடாது. பூர்ண சந்திரன் எவ்வளவு அழகாக இருக் கிறது! இவ்வாறே, உங்களுடைய முகமும் சதா முகமலர்ச்சி யுடன் திகழட்டும். மற்றவர்களும் தங்களுடைய உருவத்தை காணும் படியாக உங்களுடைய முகம் பிரகாசமாக இருக்க வேண்டும். முகம் ஒரு நிலைக்கண்ணாடியாகி விட வேண்டும். அதில் அனேக ஆத்மாக்களுக்கு அவர்களுடைய முகம் தெரியவேண்டும். இப்போது பத்மாபதம் (பல்லாயிரம் மடங்கு) பாக்கியசாலி ஆக வேண்டும். மகாதானி ஆக வேண்டும். கருணை இதயமுடைய தந்தையின் குழந்தைகள், சகல ஆத்மாக்களின் மீதும் கருணை காட்ட வேண்டும். இந்த கருணை என்கிற பாவனையின் மூலமாக எத்தகைய ஆத்மாவையும் மாற்ற முடியும். எந்த அளவு கருணை உள்ளத்துடன் இருந்து வந்தோம், எத்தனை ஆத்மாக்களின் மீது கருணை காட்டினோம் என்பதை நாள்

முழுவதும் சோதனை செய்து வர வேண்டும். மற்றவர்களுக்கு சுகம் அளிக்கும்போது. உங்களுடைய சுகமும் அதிகரிக்கிறது. அளிப்பது என்றால் அடைவதாகும். மற்றவர்களுக்கு சுகம் அளிப்பதால். நீங்களும் சுக சொரூபம் ஆகி விடுகிறீர்கள். எந்த ஒரு விக்னமும் (தடை) வராது. தானம் செய்வதால், சக்தி கிடைக்கிறது. குருடருக்கு பார்வை அளிப்பது எவ்வளவு ஒரு மகத்தான காரியம்! அஞ்ஞானியான குருடர்களுக்கு, ஞான நேத்திரத்தை அளிப்பதே உங்கள் அனைவரின் கடமை ஆகும். மற்றும் உங்களுடைய ஸ்திதி சதா நிலையானதாக இருக்கட்டும். இந்த அசல்கர் (கோவில்) குழந்தை களான உங்களுடைய (உறுதியின்) நினைவுச்சின்னம் ஆகும். பாப்தாதா எவ்வாறு சதா ஏக்ரஸ் ஸ்திதியில் இருந்து வருகிறாரோ. அவ்வாறே, குழந்தைகளும் ஏக்ரஸ் ஸ்திதியில் இருந்து வர வேண்டும். நல்லது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 02.02.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக சக்தியை பகுத்தறிவது!

இன்று பாப்தாதா ஒவ்வொருவரின் புரெஜக்டர் ஷோவையும் பார்த்து வருகிறார். நீங்களும் புரெஜக்டர் ஷோவை காட்டி வருகிறீர்கள். சித்திரங்களைக் காட்டும் அந்த புரெஜக்டர் எது அது? உங்கள் ஒவ்வொருவரின் கண்களும் புரெஜக்டர் ஆகின்றன. இந்த புரெஜக்டர் மூலமாக உலகிற்கு எந்த சித்திரங்களைக் காட்ட முடிகிறது? அது விஞ்ஞானத்தின் புரெஜக்டர்; இது ஈஸ்வரிய சக்தியின் புரெஜக்டர். எவ்வளவு புரெஜக்டர் சக்தியுடையதாக இருக்கிறதோ, அவ்வளவு சித்திரங்களும் தெளிவாக இருக்கும். இவ்வாறே, குழந்தைகளான உங்களுடைய இந்த திவ்ய நேத்திரங்கள் எவ்வளவு தெளிவாக அதாவது ஆன்மீகம் நிறைந்துள்ளதாக இருக்கிறதோ, அவ்வளவே குழந்தைகளான உங்களுடைய கண்கள் மூலமாக சில சித்திரங்களைப் பார்க்க முடியும். புரெஜக்டர் மூலமாக எவ்வாறு தெளிவாகத் தெரிகிறதோ, அவ்வாறே இவை காட்சி தரும். ஆகவே இந்த கண்கள் மூலமாக, பாப்தாதா மற்றும், இந்தப் படைப்பின் ஸ்தூல, சூட்சும மற்றும் மூல வதனம் ஆகிய மூன்று உலகங்களையும் காட்ட முடியும். எவர் உங்கள் முன்னிலையில் வந்தாலும், உங்களுடைய இந்த கண்கள் மூலமாக சகல சாட்சாத்காரங்களையும் (தெய்வீக காட்சி) அடைய முடியும். எவ்வளவுக்கெவ்வளவு, லைட் பிரகாசமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு சித்திரங்களும் தெளிவாக இருக்கும். அந்த பல்ப் எத்தனை பவர், அதை பாப்தாதா எவ்வாறு பார்க்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்களுடைய பல்ப் எவ்வளவு பவர் உடையது என்பதைப் பார்த்தீர்களா? என்னுடைய ஒளியின் சதவிகிதம் எவவளவு, அது எந்த வகையானது? என்று அறிந்துள்ளவர்கள் கரத்தை உயர்த்தவும். நம்முடைய ஆத்மா எவ்வளவு சக்தியுடையது என்பதை எதன் மூலமாக அறியலாம்?

ஒளியின் சிறப்பு என்ன? எந்த ஒரு பொருளையும் உள்ளவாறு தெளிவாகக் காட்டுவதே ஒளியின் குணம். இருட்டில் எந்த ஒரு பொருளும்

தெளிவாகத் தெரியாது. ஆகவே தெளிவற்றதை, தெளிவுபடுத்துவது ஒளியின் குணமாகும். இவ்வாறே உங்களுடைய ஒளியின் சதவிகிதத்தை அறிய முடியும். ஒன்று, உங்களுடைய புருஷார்த்தத்தின் வழி தெளிவாகும், அதாவது லைன் கிளியர்; இரண்டாவது, உங்களுடைய எதிர்காலத்தின் அந்தஸ்து, பதவியையும் தெளிவாகக் காணலாம். மூன்றாவது, எவருக்கு சேவை செய்கிறீர்களோ, அவருடைய ஒளியும் சக்தியுடன் விளங்கும். இதனால், அவருக்கும் தமது பாதை எளிதாகவும், தெளிவாகவும் தெரியும். அவரும் தன்னுடைய புருஷார்த்தத்தில் சகஜமாக முன்னேறி வர முடியும். அவர் சென்றடைய வேண்டிய இடத்தையும் தெளிவாகப் பார்ப்பார். அவ்வளவு ஒளியின் சத விகிதம் அதிகமாக இருக்கும். இவ்வாறே சகல விஷயங்களையும் அவர் தெளிவாகக் காண முடியும். ஒளியின் சதவீதம் குறைவாக இருந்தால், அவருடைய புருஷார்த்தம் தெளிவாக இருக்காது; எவருக்கு பாதையைக் காட்டுகின்றாரோ, அவரும் தமது பாதை மற்றும் குறிக்கோளை அறிய முடியாது. எவருடைய ஒளி சக்தி மிக்கதாக இருக்கிறதோ, அவர் தாமும் குழப்பம் அடைய மாட்டார், மற்றவரையும் குழப்பத்திற்கு உள்ளாக்க மாட்டார். எவருக்கு நீங்கள் சேவை செய்கிறீர்களோ, அவருடைய புருஷார்த்தம் தெளிவாக இருப்பதிலிருந்து உங்களுடைய ஒளி எப்படிப்பட்டது என்பதை அறியலாம். பாதை தெளிவாக இல்லையேல், உங்களுடைய ஒளியின் சதவீதம் குறைவானது என்பது தெளிவாகிறது. சிலர் தாமும் ஒவ்வொரு அடியிலும் அடிவாங்குகின்றனர்; அவருடைய படைப்பும் அவ்வாறே காணப்படுகிறது. நாம் ஒவ்வொருவரும் மாஸ்டர் படைப்பவர். ஆகவே மாஸ்டர் படைப்பவர், தமது படைப்பிலிருந்தும் தமது ஒளியின் சக்தியை உணரலாம். விதைக்கு ஏற்ற பலன் கிடைக்கும். விதை சக்திசாலியாக இல்லையேல, சில மலர்களும், பழங்களும் உருவாகலாம் ஆனால் அவை ஏற்றுக் கொள்ளத் தகுதி வாய்ந்தவையாக இருக்காது. அழகான, நறுமணம் கமழும் மலர்களையே மற்றவர்கள் வாங்குவார்கள் இல்லையா? விதையே சக்தி மிக்கதாக இல்லையேல், அதிலிருந்து விளைபவை ஏற்றுக் கொள்ளத் தகுதியுடையதாக இருக்காது. ஆகவே உங்களுடைய ஒளியின் சதவீதத்தை அதிகரியுங்கள்.

உங்களுடைய புரெஜக்டர் ஷோ சேவை செய்து வருவதைப் போலவே, உங்களுடைய நெற்றியும் கண்களும் தினசரி சேவை செய்து வர வேண்டும். எவர் உங்கள் முன்னிலையில் வந்தாலும், சித்திங்களை

உங்களுடைய கண்களில் காண்பார். அந்த கண்களைப் பார்க்கும்போது, புத்தி யோகத்தின் மூலமாக அனேக சாட்சாத்காரங்கள் ஏற்படும். இத்தகைய சாட்சாத்கார மூர்த்தியாக உங்களை உருவாக்க வேண்டும். எவர் சதா சாட்சி ஸ்திதியில் நிலைத்திருக்கிறாரோ, அவர்தான் சாட்சாத்கார மூர்த்தியாக முடியும். அவருடைய கண்கள் புரெஜக்டர் ஷோவைப் போன்று செயலாற்றும். அவருடைய நெற்றி சதா பிரகாசத்துடன் காணப்படும். ஹோலி பண்டிகைக்குப் பிறகு சிலைகளை உருவாக்குகிறார்கள் அல்லவா? தேவதைகளை அலங்கரித்து, நெற்றியில் பல்ப் பிரகாசிக்கும்படி செய்கின்றனர். இவ்வாறு ஏன் செய்கின்றனர்? அது எக்காலத்தின் நினைவுச்சின்னம்? இக்காலத்திற்கானது. பிறகு உங்களுடைய நினைவுச்சின்னத்தை உருவாக்கி வருகின்றனர். ஆகவே ஒவ்வொருவரின் நெற்றியிலும் ஒளி காணப்பட வேண்டும்.

வினாச காலத்திலும் இந்த ஒளி உங்களுக்கு மிகுந்த உதவி செய்யும். கெட்ட எண்ணத்துடன் சிலர் உங்களை அணுகுவார்கள். அவர்கள் இந்த உடலைக் காணாமல், பிரகாசிக்கும் இந்த பல்பையே காண்பார்கள். மிகுந்த பிரகாசமான ஒளி கண் கூசச் செய்யும்போது, சிறிது நேரத்திற்கு வேறு எதையும் காணமுடியாது. அவ்வாறே, உங்கள் கண்கள் ஒளி மிகுந்த பிரகாசமாக இருந்தால், உங்களுடைய தேகத்தைப் பார்த்தாலும், அது அவர்களுடைய பார்வையில் படாது. தேகத்தையே காண முடியாவிட்டால், அவர்களுடைய தமோ குண திருஷ்டி மற்றும் மனோபாவம் அழிந்து விடும். இத்தகைய பரீட்சைகள் வரப்போகின்றன. சகலவிதமான பர ஸ்திதிகளையும் கடந்து செல்ல வேண்டும்.

இந்தக் குழுவிற்கும் வேடிக்கையான ஒரு பெயர் சூட்டப்பட்டுள்ளது! இந்த விஷயத்தின்மீது, இன்று சூட்சும வதனத்தில் ஒரு உரையாடல் நடைபெற்றது. மூத்த சகோதரிகள் பாப்தாதாவின் சிரங்கள்; இந்த ஆசிரியைகள் அவருடைய கால்கள் என்று விளையாட்டாக சிலர் குறிப்பிட்டனர். ஆகவே பாப்தாதா வேடிக்கையாக மூத்த சகோதரிகள் 'ஹெட்' (head) மற்றவர்கள் 'கைப்பிடி' (handle) எனக் குறிப்பிட்டார். ஒரு மோட்டார் இந்த 'கைப்பிடி' இல்லையேல் வேலை செய்யாது. 'கைப்பிடி' மூலமாகவே ஒரு மோட்டாரை ஸ்டார்ட் செய்ய முடியும். இவ்வாறே இந்த 'ஹெட்'டும் 'கைப்பிடி' மூலமாகவே சேவை செய்ய முடியும். ஆகவே இந்தக் குழு 'கைப்பிடி' குழுவாகும். இந்த 'கைப்பிடி' இல்லாமல் 'ஹெட்'

எக்காரியத்தையும் செய்ய முடியாது. முதல் முதலாக எவர் வந்தாலும், அவரை 'ஹேண்டில்' செய்வது இந்த 'ஹேண்டில்' தான். ஆகவே உங்களுக்கு இவ்வளவு பெரிய பொறுப்பு இருக்கிறது. 'கைப்பிடி' ஆகிய நீங்கள் இல்லையேல், சேவை நடைபெறாது ஆனால், இந்த 'கைப்பிடி' ஒருபோதும் 'ஹெட்'ஐ கட்டுப்படுத்த முயலக்கூடாது! 'ஹெட்'-க்கு கரங்களாகவே நீங்கள் இருந்து வர வேண்டும்.

பாப்தாதாவிற்கு வலது கரங்களும் உள்ளன; இடது கரங்களும் உள்ளன. வலது கரத்திற்கு அதிக பலம் இருந்தாலும், அது கரம் தான், சிரம் ஆவதில்லை. எவ்வாறு 'ஹேண்டில்' செய்ய வேண்டும், எவ்வாறு பாப்தாதாவிற்கு வலது கராம் ஆவது என்பதை அறிய நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். இக்குழுவில் உள்ள ஒவ்வொரு வரும் அதிசயத்தை நிகழ்த்த வல்லவர்கள். சேவையில் வெற்றியை ஏற்படுத்த முடியும்.

சேவையில் வெற்றி காண இரு விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும். நீங்கள் அனைத்திலும் சகயோகிகள் தான், இருப்பினும் சேவையில் வெற்றியை அடைவதற்கு நிமித்தமாக இருப்பது இந்தக் குழுதான். இதற்காக இரு விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் குறி மற்றும் நடை. இந்தக் குழுவில் இந்த இரு சிறப்புகளும் இருக்க வேண்டும். நீங்கள் குறி பார்ப்பது சரியாக இருந்தால், ஒரே அடியில் மற்றவரை உயிருடன் இறக்கச் செய்ய முடியும். ஒரு சிறந்த குறி பார்த்து சுடுபவர் ஒரே தோட்டாவினால் குறியை சரியாக வீழ்த்த முடியும் ஆனால் இதை அறியாதவர் பல முறை சுட வேண்டியிருக்கும். உங்களுடைய ஸ்திதியும், உங்களுடைய நடையும் சரிவர இருந்தால், நீங்கள் செய்ய வேண்டிய சேவையும் வெற்றிபெறும் ஆனால் சில நேரங்களில் நடை குறைந்து விடுகிறது; சில நேரங்களில் சேவையில் கவனம் குறைகிறது. அவ்வாறு இருக்கூடாது. இரண்டும் சரிவர இருக்க வேண்டும்.

நீங்கள் நன்கு சேவை செய்கிறீர்கள் ஆனால் இப்போது சேவையில் எந்த சிறப்பை கொண்டு வர வேண்டும்? ஒவ்வொரு வினாடியும், ஒவ்வொரு சங்கல்பமும் சேவையிலேயே அதாவது தனக்காகவோ அல்லது மற்றவருக்காகவோ, ஈடுபட்டிருந்தால்தான் அவர் சர்வீசபிள் (சேவை புரியும்) என்று கூற முடியும். ஆகவே சர்வீசுரிள் என்றால், சமயம் மற்றும்

சங்கல்பம் ஆகிய இரண்டும் சேவையில் தான் ஈடுபடுத்தப்பட வேண்டும். கட்டளைக்குக் கீழ்ப்படிகிறவர் என்றால், கட்டளைப்படி நடந்து வருபவர் என்று பொருள். ஆகவே முக்கியமான கட்டளையாவது -நிரந்தரமாக நினைவில் இருந்து வாருங்கள் என்பதே ஆகும். இந்த கட்டளைப்படி நடக்காவிட்டால் இதை என்னவென்பது! இந்தக் கட்டளையை எந்த அளவு நடைமுறைப்படுத்துகிறீர்களோ, அந்த அளவு பிரத்யட்சமான (தெளிவான) பலன் கிடைக்கும்.

புருஷார்த்தம் செய்து வரும்போது, நீங்கள் சம்பூர்ண ஸ்திதி அடைவதற்கு இடையூறாக எந்த விக்னம் வருகிறது? முக்கியமாக வீண் எண்ணங்கள். இதிலிருந்து தப்ப என்ன செய்ய வேண்டும்? மனம் மற்றும் உடல் மூலம் Rest எடுக்கக்கூடாது மேலும் Rest எடுக்கவில்லை என்றால், எதுவும் Watste ஆகாது. இரண்டாவது, உங்களை எப்போதும் Guest என்று கருதுங்கள். Guest என்று கருதினால், Rest எடுக்க மாட்டீர்கள் மற்றும் சமயம், சங்கல்பம் ஆகிய ஏதும் Waste ஆகாது. இதுவே மிக எளிய வழியாகும்.

பிறகு இறுதி நாளில் உங்கள் அனைவரின் நெற்றியில் உள்ள பல்ப் எவ்வளவு சக்தியுடன் இருக்கிறது என்பதைப் பார்ப்போம். சக்தியுடன் இருந்தால், மாயை இந்த சக்திக்கு முன்னிலையில் வருவதற்கு தைரியம் இருக்காது. இந்த சக்தி மிகுதியாக இருந்தால், எவரும் உங்களை எதிர்கொள்ள முடியாது. இத்தகைய சக்தியுடன் நீங்கள் விளங்க வேண்டும். நீங்கள் சர்வீசபிள் ஆனால் இப்போது சக்திமிக்கவர்களாக ஆக வேண்டும். நீங்கள் Active, இப்போது Accurate ஆகுங்கள்.

ஆகவே இந்தக்குழு எத்தகைய முத்திரையைப் பதிக்க வேண்டும்? Accurate! எண்ணம், சொல், செயல் இம்மூன்றும் Accurate ஆக வேண்டும். நல்லது! ஓம் சாந்தி!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 05.03.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஜலம் ஊற்றுவது எனில் உறுதிமொழி எடுப்பது! (சிவ ஜெயந்தி)

சிவஜெயந்தியைக் கொண்டாடுவதற்காக பாப்தாதாவை அழைத்திருக்கிறீர்கள். இதை எவ்வாறு கொண்டாட விரும்புகிறீர்கள்? சந்திப்பதே கொண்டாடுவது ஆகும். உலகினர் சந்திப்பதற்காகவே, கொண்டாடுகிறார்கள் ஆனால் நீங்களோ, சந்திப்பதையே கொண்டாடுவது என்று உணர்கிறீர்கள். ஆகவே சந்திப்பது என்றால், இதைக் கொண்டாடிவிட்டீர்கள் என்றாகிறது. ஆக இன்னும் என்ன பாக்கியுள்ளது? உங்களைப் பொருத்த அளவில், கொண்டாடுவது என்றால் சந்திப்பது; மற்றும் உங்களுக்குச் சமமாக மற்றவர்களை மாற்றுவது ஆகும். இன்று இந்த இரு காரியங்களையும் செய்ய வேண்டும். நீங்கள் சந்திப்பதை கொண்டாடி வருகிறீர்கள். ஆகவே எஞ்சியுள்ளது மற்றவர்களை உங்களுக்குச் சமமாக மாற்றுவது. ஆக இந்த இரு காரியங்களையும் செய்து விட்டீர்கள் எனில், சிவ ஜெயந்தியைக் கொண்டாடி விட்டீர்கள் என்று பொருள். பக்தர்கள் பலி கொடுக்கச் செல்லும்போதும், இடையில், பிராமணர் இருப்பார். அதை அவர் மூலமாக செய்கின்றனர். நீங்களும் பிராமணர்கள். பக்தர்கள் எவ்வாறு ஜலத்தைத் தெளிக்கின்றனரோ, அவ்வாறே குழந்தைகளாகிய நீங்களும், தந்தையின் மீது, ஆத்மாக்கள் என்கிற ஜலத்தை தெளிக்கின்றீர்கள். பக்தி மார்க்கத்தில் இவ்வாறு நீர் அல்லது பாலைத் தெளிக்கின்ற வழக்கம் எங்கிருந்து வந்தது? எந்த நேரத்தில் ஜலத்தை தெளிக்கின்றனரோ அப்போது அவர்களுடைய மனதில் எதை நினைக்கின்றனர் என்பது உங்களுக்குத் தெரியுமா? நீர் அல்லது பாலைத் தெளிப்பதன் பொருளாவது; எப்போதாவது ஒரு பிரதிக்ஞை செய்ய வேண்டி வரும்போது, கையில் நீரை ஏந்தி, சூரியனுக்கு அந்த நீரை அர்ப்பணித்தவாறே, பிரதிக்ஞை (உறுதிமொழி) செய்கின்றனர். அவ்வாறே உங்களை அணுகுபவர்களிடத்திலிருந்து முதன் முதலில், பிரதிக்ஞை என்கிற ஜலத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். இன்று முதல்,

ஒரே ஒரு சிவபாபாவை மட்டுமே சேர்ந்தவராக இருந்து வருவோம் என்று அவர்களை பிரதிக்ஞை செய்விக்கிறீர்கள் அல்லவா? இவ்வாறு முதன்முதலில், அவர்களை பிரதிக்ஞை செய்விக்கிறீர்கள். பக்தர்களும் முதன் முதலில், உள்ளூராக செய்த பிறகே, தேவதைகளின் முன்னிலையில் வந்து தங்களை குளித்துக் கொள்கின்றனர். உண்மையான பக்தர்கள், தேவதைகளின் முன்னிலையில் தம் சிரம் தாழ்த்தி வணங்குகின்றனர். அதாவது, தம்மை அர்ப்பணித்துக் கொள்கின்றனர். ஆகவே நீங்களும் அவர்களை பிரதிக்ஞை செய்விக்கிறீர்கள். அவர்கள் பக்கா (உறுதி) ஆன பிறகு அவர்களை சம்பூர்ண ஸ்வாஹா செய்விக்கிறீர்கள். இத்தகைய சேவை செய்யவேண்டும். முழுமையாக அர்ப்பணம் செய்விக்க வேண்டும். இவ்வாறு எத்தனை ஆத்மாக்களை செய்வித்தீர்கள்? நீங்கள் சுயம் எந்த அளவு சமர்ப்பணம் செய்திருக்கிறீர்களோ அந்த அளவே மற்றவர்களையும் அவ்வாறு செய்விக்க இயலும். மாறாக நீங்களே சம்பூர்ண சமர்ப்பணம் ஆகவில்லையெனில், மற்றவர்களையும் அந்த அளவே உங்களுக்குச் சமமாக மாற்ற முடியும். இப்போது இவ்வாறு சம்பூர்ண சமர்ப்பணம் செய்விப்பதற்கு அவகாசமும், முயற்சியும் தேவைப்படுகிறது ஆனால் இன்னும் சிறிது காலத்தில், சம்பூர்ண சமர்ப்பணம் செய்து கொள்பவர்களின் கியூ ஏற்பட்டுவிடும்!. இதன் நினைவுச்சின்னம் தான் காசி கல்வட். அங்கு தங்களைத் தாங்களே வெட்டிக்கொள்வதற்கு தயாராகி விடுகின்றனர். அவ்வாறே, இங்கும் அவர்கள் தயாராகி விடுவார்கள். அவர்களிடத்தில் இந்த ஆசையை ஏற்படுத்துவதற்கு நீங்கள் எந்த முயற்சியை யும் எடுக்க வேண்டியதில்லை. உயரம் தாண்டிக் குதிப்பதற்கு அவர்களே விரும்பி தயாராகி விடுவார்கள். இப்போது அந்த கியூ ஆரம்பம் ஆகவில்லை. இதற்குக் காரணம் இருக்கிறது. இப்போது குழந்தைகளிடையில் எத்தகைய கியூ காணப்படுகிறது. எப்போது இந்த கியூ முடிவடைகிறதோ, அப்போதுதான் அந்த கியூ தோன்றும். உங்களிடையில் எந்த கியூ காணப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? (சங்கல்பங்கள்) எத்தகைய சங்கல்பம் உங்களுடைய முயற்சிகளில் தளர்ச்சியை ஏற்படுத்துகின்றது? அது எது? வியர்த் சங்கல்பம்! வீண் சங்கல்பத்திற்கான மூல காரணம் என்ன? பழைய சமஸ்காரங்கள் எந்த உருவில் வருகின்றன? வியர்த்த சங்கல்பங்கள் வருவதற்கான காரணத்தை, சாரமாக ஒரே ஒரு வார்த்தையைக் கூறுங்கள். க்யூ (ஏன்)

என்பதே அச்சொல். இது ஏன் நடந்தது? என்கிற ஏன் என்கிற வார்த்தையின் மூலமாக, வியர்த்த சங்கல்பம், அல்லது விகல்ப சங்கல்பங்களின் கியூ ஏற்பட்டுவிடுகிறது. ஆங்கிலத்திலும் பாருங்கள்; ஏன் என்கிற கேள்விக்குறி வளைந்து காணப்படுகிறது. இந்த ஏன் என்கிற கியூ மிக நீளமானதாக இருக்கிறது. இந்த கேள்விக்குறி மறைந்த பிறகே சம்பூர்ண ஸ்திதி ஏற்படும். எப்போது இந்த ஏன் என்கிற சொல் மறைகிறதோ. அப்போது தான், டிராமா என்பதில் ஒரு நிலைப்பட்டு நிற்க முடியும். ஆகவே இப்போது, ஏன் என்கிற கியூவை அழிக்க வேண்டும். புரிந்ததா? ஏன் என்கிற ஒரு சொல்லின் மூலமாக எத்தனை சங்கல்பங்கள் உருவாகி விடுகின்றன! ஏன் என்பதினால் கற்பனை செய்வது துவங்கி விடுகிறது. எந்த ஒரு பிரதிக்ஞை செய்யும்போதும், நீரைத் தெளிப்பது வழக்கம். அவ்வாறே குழந்தைகள் இந்த ஏன் என்கிற கேள்வியை ஒருபோதும் எழுப்புவதில்லை என்கிற பிரதிக்ஞையை செய்விப்பதற்காகவே தந்தையும் வந்திருக்கின்றார்.

மதுவனத்தில் பாண்டவர்களுக்கே முக்கியமான பொறுப்பு உள்ளது. ஆகவே இந்தக் குழு சக்தியுடன் இருக்க வேண்டும். பாண்டவர்களின் குழு சக்தியுடன் இருந்தால், அசுர சம்பிரதாயம் என்ன, அசுர சங்கல்பம்கூட பாண்டவ பவனுக்குள் புக முடியாது. இவ்வளவு பாதுகாப்பு அளிக்க வேண்டும். உலகில் காணப்படும் பாதுகாப்பு அளிப்பது வெகு எளிது. எவ்வாறு இங்குள்ள கதவுக்கு பாரா (காவல் காப்பது) கொடுக்கிறீர்களோ, அவ்வாறே, மாயையின் கதவுக்கும் பாரா கொடுக்க வேண்டும். அசுர சமஸ்காரம் மற்றும் அசுர சங்கல்பங்களும் உட்புகாதவண்ணம் நீங்கள் பாரா கொடுக்கிறீர்களா? உங்களுக்குள் இத்தகைய பாரா கொடுத்தால்தான் இந்த பாண்டவ பவனில் இந்த வலிமையைக் கொண்டு வர இயலும். இத்தகைய பாரா கொடுக்கிறீர்களா? பாண்டவ சேனையாகிய நாம் பாண்டவ பவனுக்கு இத்தகைய பாதுகாப்பைத் தர வேண்டும் என்கிற தைரியத்துடன் யார் யார் உள்ளனர்? இவ்வாறு பாண்டவ பவனுக்கு பாதுகாப்பு அளித்தீர்கள் எனில் இந்த பாண்டவ பவன் ஒரு மாயமந்திர இல்லமாகி விடும். எத்தகைய ஆத்மா உள்ளே வந்தாலும், உள்ளே வரும்போதே அசுர சங்கல்பங்கள் மற்றும் வியர்த்த சங்கல்பங்களிலிருந்து முக்தி அடைந்து விடுவார். இத்தகைய நிர்விகல்ப நிலையை ஏற்படுத்த வல்ல மாயமந்திரம் பொருந்திய இல்லம் ஆகி விடும் இது. இத்தகைய சேவை செய்யும்போதுதான் பிரத்யட்சம் ஏற்படும்.

மற்றவர்கள் கூறுவதைக் கேட்டவுடனே அனைவரும் இங்கு ஓடி வருவது ஆரம்பமாகி விடும். துக்கமும் அசாந்தியும் அதிகரித்து விடுவதால், சுகம், அமைதியை அடைய வேண்டிய தாகத்துடன் பல ஆத்மாக்கள் தவிக்கும் காலமும் வெகு விரைவில் வரப்போகிறது. அவ்வாறு தாகத்துடன் தவிக்கும் ஆத்மாக்கள், பாண்டவ பவனுக்குள் வந்தவுடனேயே, ஒரு வினாடியில், அமைதி சுகத்தை அனுபவம் செய்வார்கள். அப்போதுதான் பாண்டவபவனின் பிரபாவம் நாலா புறங்களிலும் பரவும். நீங்கள் ஒவ்வொருவரும் சைதன்ய மூர்த்தி போல தரிசன மூர்த்தி ஆகி விடுவீர்கள். ஒவ்வொரு ரத்தினத்தையும் தரிசனம் செய்வதற்காக தாகத்துடன் உள்ள ஆத்மாக்கள் வெகு தொலைவிலுருந்து வருவார்கள் ஆனால் நீங்கள் எப்போது மேற்கூறியவாறு காவல் காப்பீர்களோ, அப்போதுதான் இது நடை பெறும். இப்போது உங்களிடத்தில், குழுவின் சக்தி உள்ளது; அன்பின் சக்தி உள்ளது; சகயோகத்தின் சக்தியும் உள்ளது ஆனால், இப்போது இன்னும் ஒரு சக்தியும் தேவைப்படுகிறது. அது இல்லாததால்தான் மாயை பிரவேசம் ஆகி விடுகிறது. அது சகிப்புத் தன்மை என்கிற சக்தியாகும். சகிப்புத்தன்மை என்கிற சக்தி இருந்தால், மாயை ஒருபோதும் உங்களுடன் போர் தொடுக்க இயலாது. ஆக இந்த நான்கு சக்திகளும் தேவை.

இன்று பாப்தாதாவின் ஜெயந்தியுடன், குழந்தைகளின் ஜெயந்தியும் ஆகும். ஆகவே, இந்த ஜெயந்தியன்று, இந்த நான்கு சக்திகளையும் உங்களிடத்தில் தாரணை செய்தால், பாண்டவபவன், இந்த முழு உலகிலேயே பார்ப்பதற்கும், அனுபவம் செய்வதற்கும் உரிய விசேஷமான ஸ்தானமாக கருதப்படும். இந்த பாண்டவ பவனின் மகத்துவம் முழு உலகிற்கும் தெரியவரும். இந்த மகத்துவத்தை அதிகரிக்க வல்லவர்கள் எவர்? பாண்டவ சேனை மற்றும் சக்தி சேனை! மதுவன் நிவாசிகள்தான் இந்த மகத்துவத்தை அதிகரிக்க வல்லவர்கள். ஒருபோதும் தம் வாக்குறுதியைக் கைவிடாதவர்கள் என்பது பாண்டவர்களின் பிரசித்தி ஆகும். இதில் ஒரு சதவீதம் குறைந்தாலும், எப்போதாவது என்றே கூறப்படும். ஆகவே பாண்டவ சேனை இதற்கு முன் உதாரணமாக விளங்க வேண்டும். இதனால் உங்களைப் பார்த்து இவ்வாறு இருக்க வேண்டும் என்று மற்றவர்களுக்கும் பிரேரணை ஏற்படும். எவர் மதுவனத்திற்கு வந்தாலும், இங்கு பலர் இருப்பினும், அனைவரும் ஒருவரேபோல விளங்குகின்றனர்; ஒரே ஒருவரின் நினைவில்

ஆழ்ந்துள்ளனர்! ஏக்ரஸ் ஸ்திதியில் நிலைத்துள்ளனர்!! என்று வியந்து கூற வேண்டும். இத்தகைய காட்சியைக் காணும்போதுதான், பிரத்யட்சத்தின் அடையாளம் காட்சி அளிக்கும். உங்கள் அனைவரின் பிரத்யட்சம்தான் பாபாவின் பிரத்யட்சத்தை அருகாமையில் கொண்டு வரும்.

ஆகவே இன்று, முதலில் பிரதிக்ஞையின் ஜலத்தைத் தெளிக்க வேண்டும். பிறகு அன்பளிப்பும் வழங்கப்படும். வில்வ இலையிலும் 3-சிறிய இலைகள் காணப்படுகின்றன. ஆகவே இன்று மூன்று பிரதிக்ஞைகள் செய்யவேண்டும். சகிப்புத்தன்மை என்கிற சக்தியை நீங்கள் உங்களிடத்தில் தாரணை செய்ய வேண்டும். ஏன்? என்பதை அழிக்க வேண்டும்; அசுர சமஸ்காரங்கள் உட்புகாவண்ணம் பாரா (காவல்) கொடுக்க வேண்டும். இந்த மூன்று பிரதிக்ஞைகளாகிய வில்வ இலையை தூவ வேண்டும். பக்தர்கள் மூடநம்பிக்கையுடன் விளையாடுகின்றனர்; ஆனால், ஞானம் நிறைந்த விளையாட்டை விளையாடவேண்டும் என்பதை குழந்தைகள்தாம் அறிவார்கள். இதனால், இக்காலத்திய சிவராத்திரியின் நினைவுச்சின்னமாக, பக்தியில் ஒரு பழக்கம் ஆகி விடுகிறது. ஞானத்துடன் முதலில் குழந்தைகள்தாம் இதைத் துவக்குகின்றனர். பிறகு பக்தர்கள் இதை மூடநம்பிக்கையுடன் இதைச் செய்கின்றனர். எப்போதாவது இது நடைபெற்றிருக்க வேண்டும். இதனால்தான் அது நினைவுச்சின்னமாகிறது.

வந்தே மாதரம் என்று தந்தை குழந்தைகளிடத்தில் கூறுகின்றார். இது எவ்வளவு வித்தியாசமானது! பிற்காலத்தில், பக்தர்கள் பலர் தந்தையை வணங்குகின்றனர் ஆனால் இப்போதோ, சுயம் தந்தையே குழந்தைகளுக்கு வந்தே மாதரம் என்று வணக்கம் தெரிவிக்கின்றார். இவ்வளவு நஷா உள்ளதா? இந்தக் குமாரிகளின் அடையாளம் என்ன? இவர்களுடைய கண்கள், முகம், நடத்தை, சொல் ஆகியவற்றில், ஆரம்பம் முதலே, மிகுந்த குஷி காணப்படும். அவர்களுடைய குஷியைப் பார்த்து மற்றவர்களின் துக்கம் மறைந்து விடும். சுயம் பாப்தாதாவே வந்தே மாதரம் என்று வணங்கும் அத்தகைய மாதாக்களின் அடையாளமாவது, குஷி. அவர்களுடைய முகமே அனேக ஆத்மாக்களை புன்முறுவலிக்கச் செய்யும். அஞ்ஞானி ஆத்மாக்கள் அதிகாலையில் அத்தகைய முகத்தைப் பார்த்ததால்தான் பல நன்மைகள் ஏற்பட்டன என்பார்கள். ஆகவே

முகத்தின் பிரபாவம் ஏற்படுகிறது. ஆகவே, ஆத்மாக்களாகிய உங்களுடைய மலர்ந்த முகத்தைப் பார்த்தவுடன் மற்ற அனைவரும் சந்தோஷம் அடைவார்கள். இத்தகைய காலம் வரப்போகிறது!. நல்லது! நீங்கள் எந்த அளவு உங்களை சுயசோதனை செய்கிறீர்களோ அந்த அளவு மாற்றம் ஏற்படும். ஒவ்வொரு அடியிலும், சங்கல்பம், செயல், காலம், சமஸ்காரம் ஆக இந்த நான்கையும் சோதனை செய்து வர வேண்டும். ஓம் சாந்தி!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 23.03.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உண்மையான ஹோலி கொண்டாடுவது என்றால் நடந்தவற்றை நடந்து முடிந்ததாகக் கருத வேண்டும்!

பாப்தாதா எதனைக் காண்கின்றார்? நீங்கள் அனைவரும் எதனைக் காண்கிறீர்கள்? நீங்கள் அனைவரும் பார்த்து வருகிறீர்கள்; பாப்தாதாவும் பார்த்து வருகின்றார் ஆனால் பாப்தாதா எதனைக் காண்கின்றார்? நீங்கள் அனைவரும் எதனைக் காண்கிறீர்கள்? இதில் வேறுபாடு உள்ளதா? அல்லது இரண்டும் ஒன்றுபோல இருக்கிறதா? இன்று ஆன்மீக குழந்தைகளிடத்தில் எதை முக்கியமாக பாப்தாதா பார்க்கின்றார்? ஒவ்வொரு நடவடிக்கையிலும் ஒரு சிறப்பு உள்ளதல்லவா! ஆகவே இன்றைய சந்திப்பில் எந்த சிறப்பை பாப்தாதா காண்கின்றார்? இன்று பாப்தாதா முக்கியமாக ஒன்றைப் பார்க்கின்றார். அதனைப் பார்த்து அவர் மகிழ்ச்சி அடைகின்றார். உங்கள் ஒவ்வொருவரின் முயற்சியின் வேகத்தைப் பார்க்கின்றார். அத்துடன், உங்களுடைய ஆர்வத்தையும் காண்கின்றார். உங்களுடைய ஆர்வத்திற்கு ஏற்ப உங்களுடைய வேகமும் அமைகிறது. ஆகவே பாப்தாதா இதைப் பார்த்து சந்தோஷம் அடைகின்றார். வேகம் அதிகரிக்கும்போது, சேவையில் வெற்றியும் அதிகரிக்கிறது.

இன்று ஹோலியை எவ்வாறு கொண்டாடினீர்கள்? (நாங்கள் சூட்சும வதனத்தில் கொண்டாடினோம்). சூட்சும வதனத்தில் எவ்வாறு கொண்டாடினீர்கள். சூட்சும வதனத்தில் மட்டும் கொண்டாடினீர்களா? அல்லது இங்கும்கூடவா? அவ்யக்த சொரூபத்தில் மட்டுமே கொண்டாடினீர்களா? ஹோலி கொண்டாடுவது என்றால், நடந்தது நடந்து முடிந்து விட்டது என்கிற பாடத்தில் இன்று முதல் உறுதியாக இருப்பது என்பதாகும். இதனைத்தான் ஹோலி கொண்டாடுவது என்கிறோம். நடந்தது நடந்துமுடிந்து விட்டது என நீங்கள் ஹோலியை

தெளிவுபடுத்துகிறீர்கள். நடந்தது நடந்து முடிந்து விட்டது என்று கருதி முன்னேறி வருவதே ஹோலியைக் கொண்டாடுவதாகும். அதாவது ஹோலியின் உட்பொருளை உங்களுடைய வாழ்வில் நடைமுறையில் கொண்டு வருவதாகும். உங்களுடைய முயற்சியை விரைவுபடுத்த ஏதாவது ஒரு குறிக்கோளை உங்கள் முன்னிலையில் வைத்திருங்கள். ஆகவே இந்த உறுதிமொழியை மேற்கொள்வதே ஹோலியைக் கொண்டாடுவதாகும். நடந்து முடிந்த ஒன்று, உங்களுடைய முற்பிறவியைச் சேர்ந்ததாக உணரப்பட வேண்டும். இத்தகைய அனுபவம் ஆக வேண்டும். உங்களுடைய ஸ்திதி இவ்வாறு மாறினால், உங்களுடைய முயற்சியின் விரைவும் அதிகரிக்கும். உங்களுடைய அல்லது மற்றவர்களின் கடந்த கால சம்பவங்களை நினைவு கூர்வதுதான். உங்களுடைய முயற்சியில் மெத்தனமாவதற்கான (தொய்வு) காரணம் ஆகும்.. ஒன்று அதை நினைவு கூர்வது, மற்றொன்று அதைப் பற்றி சிந்தித்துவருவது. ஆக இந்த இரண்டுமே உங்களுடைய இதயத்திலும் இருக்கக்கூடாது, அதைப் பற்றி சிந்திக்கவும் கூடாது. மூன்றாவது அதைப் பற்றி பேசுவது. இதுவும் தவறு.

ஆகவே இன்று பாப்தாதா ஹோலி கொண்டாட வந்திருக்கின்றார். ஹோலி கொண்டாடுவதற்காக நீங்கள் பாப்தாதாவை அழைத்திருக்கிறீர்கள். இந்த நிறம் நிரந்தரமானதாகச் செய்வது என்றால், ஹோலியை கொண்டாடுவதாகும். ஹோலி அன்று, வண்ணமாவுகளைத் தூவுகின்றனர். இரண்டாவதாக அவர்கள் என்ன செய்கின்றனர்? முதல் நாளில் அவர்கள் எரிக்கின்றனர். இரண்டாவது நாள் கொண்டாடுகின்றனர். எரித்தபிறகு கொண்டாடி பிறகு இனிப்புகளை சுவைக்கின்றனர். இங்கு நீங்கள் எத்தகைய இனிப்புகளை சுவைக்கின்றீர்கள்? எத்தகைய வண்ணங்களைப் பூசவேண்டும் என்பது பற்றி நீங்கள் ஏற்கனவே கேட்டிருக்கிறீர்கள். இப்போது இனிப்புகளை நீங்கள் ஏன் உட்கொள்கிறீர்கள்? இந்த நிறத்தை அணிந்தவுடன் இனிமையும் தானாகவே வந்து விடுகிறது. உங்களுடைய அல்லது மற்றவர்களின் கடந்தவற்றைப் பார்க்காதபோது, நீங்கள் இயற்கையாகவே எளிமையானவராகவும், சரள சுபாவமுடையவராகவும் மாறிவிடுகிறீர்கள். உங்களுடைய சரளத்தன்மையில் எந்த சிறப்பு காணப்படுகிறது? இனிமை. நீங்கள் அவர்களுடைய விழிகளில், அவர்களுடைய முகத்தில், அவர்களுடைய நடத்தையில் இனிமையை

பிரத்யட்சமாகக் காண்கிறீர்கள். ஆகவே இந்த நிறத்தின் மூலமாக இனிமை வந்து விடுகிறது. இதனால்தான் நீங்கள் இனிப்பை உட்கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறீர்கள்.

ஹோலியன்று வேறு என்ன செய்கின்றனர்? (இனிய சந்திப்பு). இந்த இனிய சந்திப்பின் உட்பொருள் என்ன? இங்கு எவ்வாறு அந்த மங்கல இனிய சந்திப்பை நிகழ்த்துகிறீர்கள்? இனிப்பை சுவைத்த பிறகு, அந்த மங்கல இனிய சந்திப்பு என்பது என்ன? சமஸ்காரங்களின் ஒற்றுமை. பலதரப்பட்ட சமஸ்காரங்களின் காரணமாக நீங்கள் ஒருவரை ஒருவர் விட்டுவிலகி நிற்கிறீர்கள். நீங்கள் இந்த நிறத்தை அணிந்து, இனிப்பை சுவைத்த பிறகு ஒற்றுமை ஏற்படுகிறது என்றால் அது என்ன? நீங்கள் அனைவரும் மாநாட்டை முடித்து விட்டு வந்திருக்கிறீர்கள் அல்லவா? சமஸ்காரங்களில் ஒற்றுமை ஏற்படுத்துவதற்காகவே பாப்தாதா இந்த பட்டியை உருவாக்கியுள்ளார். சமஸ்காரங்களில் ஒற்றுமை ஏற்பட்ட பிறகு, நீங்கள் அனைவரும் ஒருங்கிணையும்போது, இந்தக் குழுவின் பிரத்யட்சம் ஏற்படும். நீங்கள் மாநாடு (சம்மேளனம்) நடத்தினீர்கள்; பாப்தாதா உங்களுடைய சமஸ்காரங்களின் ஒற்றுமையை உருவாக்கி வருகின்றார். ஆகவே உலகில் நிகழும் இனிய சந்திப்பு இந்த சமஸ்காரங்களின் ஒற்றுமை என்கிற சந்திப்பின் நினைவுச்சின்னமே ஆகும். பாப்தாதா குழந்தைகளைச் சந்திக்கின்றார். இதைவிட உயர்ந்து உங்களுக்குள் உருவாகும் சமஸ்காரங்களின் சந்திப்பு அதாவது ஒற்றுமை. இவ்வாறு சமஸ்காரங்களின் சந்திப்பு நிகழும்போது, வெற்றியின் பேரொலி எழும். அனைவரையும் வெற்றி பெறச் செய்பவர்கள் சக்திகள் என்கிற புகழ் உள்ளது. ஒருவர் ஏதாவது ஒன்றில் வெற்றி அடைய வேண்டுமானால், அவர் எங்கு செல்கின்றார்? வெற்றி அடைவதற்கான வழியை எவர் தருவார்? சக்திகள். உங்களுடைய முயற்சி சரியானதாக அமையும்போது, நீங்கள் வெற்றி அடைகிறீர்கள். மனிதர்கள் தாம் வெற்றி பெற பாப்தாதாவை நாடுவதில்லை. அவர்கள் சக்திகளையே நாடி வருகின்றனர். அந்த சக்திகள் தாங்கள் வெற்றி அடைந்திருப்பதால்தான், மற்றவர்களும் வெற்றி பெறுவதற்கான சக்தியை அளிக்க இயலுகிறது. உங்களுடைய சமஸ்காரங்களில் ஒற்றுமை ஏற்படும்போதுதான், உங்களுடைய முயற்சியிலும் வெற்றி பெறுவீர்கள்.

பக்தர்களின் வரிசை எங்கு அதிகரித்துவருகிறது? (சக்திகளின் முன்னிலையில்). ஹனுமார் மற்றும் தேவிகளின் ஆலயங்களில், அதிகமான கூட்டம் காணப்படுகிறது. இது எதைத் தெளிவு படுத்துகிறது? இந்த திரளான கூட்டத்தை எவர் காண்பார்? பிரத்யட்சம் ஆன பிறகு இத்தகைய பெருங்கூட்டத்தை எவர் காண்பார்? பாப்தாதா மறைந்திருப்பார். குழந்தைகள்தாம் நடைமுறையில் இந்தக் கூட்டத்தைக் காண்பார்கள். இப்போது ஆலயங்களில் காணப்படும் பக்தர்களின் பெருங்கூட்டம், இனி வரப்போகும் காலத்தில் குழந்தைகளின் முன்னிலையில் உருவாகப்போகும் மனிதக் கூட்டத்தின் ஞாபகார்த்தமே ஆகும். அத்தகைய கூட்டம் எப்போது உருவாகும்? எங்களுடைய சமஸ்காரங்களில் ஒற்றுமை இல்லை என்று நீங்கள் இப்போது கூறி வருவது நிற்கும் போதுதான். இந்த பட்டியில், இறுதி ஸ்திதியை எவ்வாறு நடைமுறையில் பிரத்யட்சம் செய்வது என்பதை நீங்கள் கற்றால்போதும். வேறு எதையும் கற்க வேண்டியது இல்லை. உங்களுடைய சமஸ்காரங்களில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்காகவே நீங்கள் இப்போது இங்கு குழுமியிருக்கிறீர்கள். ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு இதயங்கள் சேர வேண்டும். இவ்வாறு இதயங்கள் ஒன்று சேரும்போது, சமஸ்காரங்களும் ஒருங்கிணைந்து விடும். சமஸ்காரங்களில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவற்கு. நீங்கள் சிலவற்றை மறக்க வேண்டும்; அழிக்க வேண்டும்; உங்களுக்குள் ஆழமாக புதைத்து விடவேண்டும். இந்த மூன்றையும் செய்ய வேண்டும். சிலவற்றை அழிக்க வேண்டும்; சிலவற்றை மறக்க வேண்டும்; சிலவற்றை உங்களுக்குள் ஆழ புதைத்து விட வேண்டும். அப்போதுதான் உங்களுடைய சமஸ்காரங்களில் ஒருங்கிணைப்பு ஏற்படும். இதுதான் உங்களுடைய இறுதி வெற்றியின் அடையாளமாகும். இப்போது உங்களுடைய இறுதி சம்பூர்ண ஸ்திதியை அருகாமையில் கொண்டு வர வேண்டும். மற்றவர்களின் கருத்துகளை ஏற்றுக் கொண்டு மரியாதை தர வேண்டும். நீங்கள் மற்றவர்கள் கூறுவதை ஏற்றுக் கொண்டு, மரியாதை தந்தால், சம்பூர்ண ஸ்திதி மற்றும் வெற்றி உங்களை நெருங்கி வரும். இந்த இரண்டின் மீது நீங்கள் கவனம் செலுத்தினால் போதும். மற்ற இரண்டும் தானாகவே உங்களை நெருங்கி வரும். ஒவ்வொருக்கொருவர் மரியாதை அளிப்பது என்றால், உங்களுடைய வருங்காலத்திற்கான அதிகாரத்தை அடைவதாகும்.

## 1970 அவ்யக்த முரளி

இந்த பட்டி எதற்காக நடைபெறுகிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? இந்த பட்டி என்னவென்று அழைக்கப்படுகிறது? நீங்கள் திலகத்தையும் அணிய வேண்டியதில்லை. திலகத்திற்குப் பதிலாக உங்களுக்கு நெற்றிச்சுட்டி வழங்கப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கு திலகம் அளிக்கப்படுகிறது. இந்தக் குழுவிற்கு நெற்றிச் சூடி அளிக்கப்பட வேண்டும். திலகம் சிறியது: சூடி பெரியது. முதிர்ச்சியின் அடையாளம் சூடி! குழந்தைகள்கூட திலகத்தை அணிந்து கொள்ளலாம் ஆனால் முதியவர்கள்தான் நெற்றிச் சூடியை அணிகின்றனர். பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் துணிவு வந்தவுடன் நீங்கள் நெற்றிச்சூடியை அணிகிறீர்கள். ஆகவே எது சிறப்பானது? திலகமா அல்லது நெற்றிச்சூடியா?

நீங்கள் அனைவரும் மற்ற அனைவரின்பாலும் தூய எண்ணத்தைக் கொண்டிருக்கிறீர்கள். மற்ற அனைவரின்பாலும் தூய எண்ணத்தைக் கொண்டிருப்பது என்றால் சேவாதாரி என்று பொருளாகும். ஆகவே மற்ற அனைவரின்பாலும் தூய எண்ணங்களுடைய இந்தக் குழுவின் அடையாளமாவது நெற்றிச்சூடி. இவர்கள் சுப சிந்தனையாளர்கள் எனப்படுகின்றனர். நீங்கள் நல்லெண்ணங்களுடன் இருந்தால், கவலைகள் மறைந்து விடும். தூய உயர்ந்த எண்ணங்களுடன் உள்ள நீங்கள் மற்ற அனைவரின் கவலைகளையும் போக்குகின்றீர்கள். இதன் சுலோகம் என்ன? உலகினர் ஆத்மாதான் பரமாத்மா என்று கூறுவதைப்போன்று, இந்தக் குழுவிற்கு சுலோகம் என்ன? குழந்தையே எஜமான்! -இந்த சுலோகம் இந்த குரூப்புக்கு பொருத்தமானது. இப்போது உங்களுக்கு பெயர், சுலோகம் மற்றும் கடமையும் கிடைத்து விட்டது. இன்னும் என்ன இந்த பட்டியில் நீங்கள் செய்ய வேண்டும்? எவ்வாறு சமஸ்கார ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது என்பது பற்றி நீங்கள் உரையாற்ற வேண்டும். இந்த பட்டியில், பலரை உங்களுக்கு சமமாக அதாவது உங்களுடைய சமஸ்காரமான சம்பூர்ண ஸ்திதி சமமாக மாற்றுகின்ற அதிசயத்தை நீங்கள் ஒவ்வொருவரும் நிகழ்த்திக் காட்ட வேண்டும். இவ்வாறு, நீங்கள் ஒவ்வொருவரும் பலரை சம்பூர்ண ஸ்திதி என்கிற சமஸ்காரத்தை அடையும்படி செய்தால் என்ன ஆகும்? முடிவு (வினாசம்) ஏற்படும். ஆகவே இந்தக் குழு முடிவை ஏற்படுத்தும். இந்தக் குழு ஸ்தாபனையையும் ஏற்படுத்தும். நீங்கள் எத்தகைய முடிவு, பாலனை மற்றும் ஸ்தாபனையை ஏற்படுத்தவேண்டும்? இவையாவற்றையும்

நீங்கள் இந்த பட்டியில் தெளிவு படுத்தவேண்டும். ஸ்தாபனை, பாலனை, அழிவு ஆகிய மூன்று காரியங்களையும் செய்வதால்தான் திரிமூர்த்தி நெற்றிச்சுட்டியை நீங்கள் அணிகிறீர்கள். வெறும் சொல்லளவில் இல்லாமல், நடைமுறையில் இவற்றை எவ்வாறு கொண்டு வருவது என்பது பற்றி நீங்கள் தெளிவுபடுத்துவதுடன், மற்றவர்களும் அவ்வாறு செயலாற்ற உதவவேண்டும். இவற்றை நீங்கள் தெளிவு படுத்தவேண்டும். நீங்கள் பிந்து சொரூபமாக மாறினால்தான், இந்த 3-கடமைகளும் வெற்றி பெறும். இதில் தான், உங்களுடைய கடமை, உங்களுடைய ஸ்மிருதி, உங்களுடைய ஸ்திதி என்பவற்றின் நினைவுச்சின்னமாக நெற்றிச்சூடி உங்களுக்கு வழங்கப்படுகிறது. விசேஷமான குழுவிற்கு விசேஷமான சிறப்புகள் இருக்கும்.

நீங்கள் அனைவரும் ஹோலி கொண்டாட வந்திருக்கிறீர்களா? அல்லது இக்குழுவின் அலங்காரத்தைக் காண வந்திருக்கிறீர்களா? இந்த நாடகத்தில் இத்தகைய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு அருகாமையில் வருவது என்பது உங்களுடைய அதிர்ஷ்டம் என்று கருதுங்கள். அலங்காரங்களைக் காண்பது என்றால் உங்களையே சிரேஷ்டமானவர்களாக மாற்றுவது என்று பொருள். இதுதான் அலங்காரம். ஸ்தூலத்தில் இந்தக் குழுவின் அருகாமையில் வருவதைப்போன்றே, இவர்களுடைய சம்பந்தத்திலும் நெருங்கி வர உங்களைத் தகுதி உடையவராகச் செய்யுங்கள். இந்த அலங்காரத்தைக் காண்பவர்களும் சாதாரணமானவர்கள் அல்லர். இதைப் பார்ப்பவர்களும், மிகவும் சிரேஷ்டமானவர்கள்; அருகாமையில் உள்ளவர்கள் ஆவர். பாப்தாதாவின் இதயத்தை மகிழ்விப்பவர்கள் நீங்கள்! எவர் முதன்மையாக வருபவர். நீங்கள் அனைவருமே ஒரே வேகத்தில் முன்னேறிவருபவர்கள். ஆகவே அவர் ஒன்று, இரண்டு என்று எண்ணிக்கையை எவருக்கும் அவர் குறிப்பிட முடியாது. இப்போது அனைவருமே ஒருவர் நினைவில் நம்பர்-1 ஆகவே இருக்கிறீர்கள்! நீங்கள் அனைவரும் எப்போது 'ஸ்பிரிட் மற்றும் ஸ்பீட்'ல் (ஆத்மா மற்றும் வேகம்) இந்த குழுவிற்கு அருகாமையில் வருவீர்களோ அப்போது உங்களுக்கும் விழா நடைபெறும்.

**பிரத்யேக சந்திப்பு: அனைத்திலும் மிக உயர்ந்த ரத்தினம் எது? யார் நெற்றி ரத்தினம் ஆவார்?** ஆத்மாவாக நெற்றிப் பொட்டில் (பிருகுட்டி)

என்கிற அரியாசனத்தில் சதா வீற்றிருப்பவர். ஒரு சிலரே இவ்வாறு உள்ளனர். முன்நெற்றியில் ஒரு சிலரே இருக்கின்றனர்; பலர் இதயத்தில் இருக்கின்றனர். உங்களுடைய பார்வை எங்கு செல்கிறது? (முன் நெற்றியின் மீது) ஆகவே நீங்கள் இத்தகைய முன்நெற்றி ரத்தினமாக ஆக வேண்டும். ஆஸ்தீகர்கள்தான் (எப்போதும் ஆமாம் என்று கூறி வருபவர்கள்) முன்நெற்றி ரத்தினமாக ஆக முடியும். இவர்கள் எப்போதும் ஆமாம் என்று கூறுகின்றனர். ஆஸ்தீகர்கள்தான் முன்நெற்றி ரத்தினமாக விளங்குகின்றனர். எந்த ஒரு சூழ்நிலையிலும், சங்கல்பத்தில்கூட முடியாது என்று கூறக்கூடாது. இத்தகைய சிறப்பு இருப்பவர்கள் முன்நெற்றி ரத்தினமாகின்றனர். யார் புகழுக்கு அருகதை உடையோர் ஆகின்றனர்? யார் பூஜைக்கு அருகதை ஆகின்றனர்? ஏதாவது ஒன்றின் அடிப்படையில் நீங்கள் இந்த இரண்டிற்கும் தகுதி பெறுகிறீர்களா? அல்லது இரண்டு சிறப்புகள் இந்த இரண்டிற்கும் தேவையா? சில தேவதைகள் அதிகமாகப் புகழப்படுகின்றனர் ஆனால் இவர்களுடைய பூஜை குறைந்தே காணப்படுகிறது! வேறு சில தேவதைகளுக்கு புகழும் மிகுதியாக உள்ளது, பூஜையும் சிறப்பாக உள்ளது! வேறு சில தேவதைகள் சில சமயங்களில்தான் பூஜிக்கப்படுகின்றனர். இன்னும் சில தேவதைகள் இடைவிடாது பூஜிக்கப்படுகின்றனர். சில சமயங்களில் என்கிற சொல் உங்களுடைய முயற்சியில் இடமிருக்ககூடாது. தீவிர முயற்சி செய்பவர்கள் ஒருபோதும் பிறகு என்று கூறாது, இப்போது, உடனே என்று கூறுவார்கள். எந்த ஒரு விஷயத்திலும் பிறகு பார்ப்போம் என்று ஒத்திப் போடக்கூடாது. இப்போதே செய்து காட்டுவோம் என்றால், நீங்கள் ஒரு தீவிர புருஷார்த்தி ஆவீர்கள். சம்பூர்ண ஸ்திதியில் நீங்கள் சர்வ நற்குணங்களிலும் நிறைந்திருப்பீர்கள். சர்வ சக்திகளிலும் நிறைந்திருந்தால், சர்வ குணங்களிலும் நீங்கள் நிறைந்திருப்பீர்கள். வருங்காலத்தில், நீங்கள் சர்வ குணங்களிலும் நீங்கள் நிறைந்திருப்பீர்கள் ஆனால், இப்போது, சர்வ சக்திகளிலும் நிறைந்திருக்க வேண்டும். சக்திகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பது உங்களுக்குத் தெரியுமா? 1. சினேகம் என்கிற சக்தி. 2. சம்பந்தத்தின் சக்தி. 3. சகயோகம் என்கிற சக்தி. 4. சகிப்பு சக்தி. இந்த நான்கு சக்திகளையும் உடையவர் சம்பந்தத்திலும் நெருங்கி இருப்பார். இந்த 4-சக்திகளும் சமமாக விளங்க வேண்டும். தைரிய சக்தி உயர்ந்ததா அல்லது சகிப்பு சக்தி உயர்ந்ததா? தைரியம் இருந்தால், அனைத்திலும் உதவி கிடைக்கும். எப்போதும் நீங்கள் தைரியத்துடன் இருக்க வேண்டும்.

அப்போது பாப்தாதாவிடமிருந்தும், குடும்பத்திடமிருந்தும், தானாகவே உதவி கிடைக்கும். நீங்கள் பிரேம (அன்பு) சொரூபமாக இருக்கிறீர்களா? நீங்கள் சக்தி சொரூபமாக விளங்குகின்றீர்களா? அன்பு மற்றும் சக்தி ஆக இரண்டுமே தேவை. சக்தி சொரூபமாகி, வெற்றி பெறவேண்டும். அன்பு சொரூபமாகி சம்பந்தத்தில் வர வேண்டும். உங்களிடத்தில் சக்தி இல்லையேல், மாயையை வெற்றி கொள்ள முடியாது. ஆகவே, சக்தி சொரூபமாகி, வெற்றிபெறுங்கள் மற்றும் அன்பு சொரூபத்தில் சம்பந்தத்தில் வாருங்கள். இரண்டுமே தேவை. சர்வ சக்திவான் என்றும், அன்புக்கடல் என்றும் தந்தை போற்றப்படுகிறார். ஆக, அன்பு மற்றும் சக்தி ஆகிய இரண்டுமே தேவை. நட்சத்திரங்கள் எத்தனை உள்ளன? நீங்கள் உங்களை எத்தகையவராகக் கருதுகிறீர்கள்? தந்தை உங்களுக்கு எந்தப் பெயரை சூட்டியுள்ளார்? அதிர்ஷ்ட நட்சத்திரங்கள். அதிர்ஷ்டசாலிகளாக உங்களை நீங்கள் கருதுகிறீர்களா? தந்தையைச் சேர்ந்தவர்களான உடன் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள் ஆகி விட்டீர்கள். இருப்பினும். அதிர்ஷ்டத்துடன், நீங்கள் வெற்றி நட்சத்திரமாகவும் ஆக வேண்டும். சிலர் அருகாமையில் இருக்கும் நட்சத்திரங்களாக விளங்குகின்றனர். வேறு சிலர் நம்பிக்கை நட்சத்திரங்களாக இருக்கின்றனர்! உங்கள் ஒவ்வொருவருக்கும் பிரத்யேகமான சிறப்பு உள்ளது. இப்போது நீங்கள் எத்தகையவர் என்பதை சிந்தித்துப் பாருங்கள். உங்களை வெற்றி நட்சத்திரங்களாகக் கருதுங்கள். உடனடியாக பலனுக்கு ஆசைப்படாதவர்கள்தான், வெற்றி பெறுவார்கள்.

**நீங்களும் எப்போது மனநிலையிலும் வேகத்திலும் இந்த குழுவிற்கு அருகில் வருவீர்களோ அப்போது உங்களுக்கும் விழா நடைபெறும்!**

**தாதி**: குழந்தைதான் எஜமானன், எனவே சிம்மாசனத்தில் சமமாக உட்கார வைக்கிறார்கள். ஸ்தூலத்தில் இந்த விழா கொண்டாடுகிறீர்கள் ஆனால் அவ்யக்த ரூபத்தில் இந்த விழா நடக்கிறது. குழந்தையை எஜமானன் ஆக்கினீர்கள், எனவே இப்பொழுதிலிருந்தே சிம்மாசனம் உருவாக்குகிறீர்கள். சாகாரத்தில் மன சிம்மாசனத்தில், இப்பொழுதே சேவையின் சிம்மாசனத்தில் மற்றும் எதிர்காலத்தில் ராஜ்ய சிம்மாசனத்தில் அமர்வீர்கள். சங்கம யுகத்தில் சிம்மாசனம் இப்போது உருவாகிறது. டிராமாவில் என்ன பாகம் உள்ளதோ அது எவ்வளவு ரகசியம் நிறைந்ததாக உள்ளது. இதை தினமும் தெளிவாகப் புரிந்து

கொண்டே செல்வீர்கள். அன்பினாலும் கடமை எங்கு பந்தனத்தில் பிணைக்கின்றது. எப்படி அன்பின் பந்தனம் உள்ளதோ அப்படியே கடமையின் பந்தனமும் உள்ளது. எனில் இது தான் கடமையின் பந்தனம். கடமையின் பந்தனம் அவ்யக்த ரூபத்தில் உள்ளது. அன்பின் பந்தனம் சாகார ரூபத்தில் இருந்தது.

**குமாரக்கா தாதி:** அவ்யக்த ரூபத்தில் சிம்மாசனதாரி ஆவேன் என கனவில் கூட நினைக்கவில்லையல்லவா. சிம்மாசனதாரியாக யாரால் ஆக முடியும்? யார் சதா பெருமிதத்தில் உள்ளாரோ மற்றும் அடையாளமும் மிகச் சரியாக துல்லியமாக உள்ளதோ, அவர்! பெருமிதம் மற்றும் அடையாளம், நினைவு (யோகம்) மற்றும் ஞானம்! இத்தகைய குழந்தைகளே மூன்று சிம்மாசனத்திற்கும் அதிகாரி ஆகிறார்கள். திரிமூர்த்தி சிம்மாசனமும் இருக்கிறது. ஒருவேளை ஒரு சிம்மாசனதாரி ஆனீர்கள் என்றால் மூன்று சிம்மாசனதாரியாகவும் ஆவீர்கள். தந்தை சிம்மாசனதாரிக் குழந்தைகளைப் பார்க்கிறார் எனில் என்ன ஆகிறது என்று? இப்படிப்பட தகுதியான குழந்தகளே என பாப்தாதாவிற்கும் போதை உண்டாகிறது.

**ஜானகி தாதி:** இதுவரையில் சொல்லின் மூர்த்தியாகி உள்ளீர்கள், பின்னர் சாட்சாத்கார் மூர்த்தி ஆவீர்கள். இப்போது வார்த்தைகள் மூலம் பிறருக்கு சாட்சாத்காரம் ஆகிறது ஆனால் பின்னர் அமைதியின் மூலம் சாட்சாத்காரம் ஆகும். எப்போது இப்படி ஆவீர்களோ அப்போது எல்லோர் வாயிலிருந்தும் என்ன வெளி வரும்? அனைத்துமே பரமாத்மாவின் ரூபங்கள் என்ற மகிமை உள்ளதல்லவா, இந்த மகிமை சங்கம யுகத்தில்தான் நடைமுறையில் ஆகிறது. பக்தி மார்க்கத்தில் எந்த விஷயங்களைக் கூறியுள்ளனரோ அதில் சங்கமத்தின் விஷயங்களை கலப்படம் செய்து விட்டனர். உங்களுடைய இறுதியில் இந்த நிலை வரும் -எல்லோரும் சாட்சாத் பாப்தாதாவின் உருவத்தை உணர்வார்கள். எல்லோருடைய வாயிலிருந்து இது தான் வெளிப்படும் -இதுவோ சாட்சாத் பாப்தாதாவின் உருவம் என. சாட்சாத் ரூபம் ஆகும் போது சாட்சாத்காரம் ஆகும் எனில் இந்த இறுதியினுடைய ரூபத்தை அனைவருள்ளும் பார்க்கிறார்கள், இதை கலப்படம் செய்து கூறி விட்டனர் - எல்லோருமே பரமாத்மாவின் ரூபம்தான் என்று. தந்தைக்குச் சமம் ஆனவரை பரமாத்மாவின் ரூபம் என கூறி விட்டனர். இந்த எல்லா விஷயங்களும்

இங்கிருந்து தான் சென்றுள்ளது எனில் சாட்சாத கார மூர்த்தி ஆவதற்கு சாட்சாத் பாப்தாதாவிற்குச் சமமாக ஆக வேண்டும். இப்போது என்ன சோதனை  செய்ய வேண்டும்? சமமான நிலையின் சோதனை, அந்த சோதனை இல்லை அதுவோ குழந்தை பருவத்தினுடையது. இப்போது இந்த சோதனை செய்ய வேண்டும். எந்தளவு சமநிலையோ அவ்வளவு சுவமான் கிடைக்கும். சமநிலை மூலம் தனது சுவமானத்தைத் தெரிந்து கொள்ள முடியும். சமநிலை எது வரை வந்துள்ளது, இன்னும் எது வரை செல்ல வேண்டும் என்பதை சோதனை செய்ய வேண்டும், செய்விக்கவும் வேண்டும். இதுவும் ஒரு தலைப்பு -எவ்வளவு எதில் சமநிலையைப் பார்க்கிறீர்களோ அந்தளவு அருகில் உள்ளோம் என புரிந்து கொள்ளுங்கள். சமீப ரத்தினங்களின் வித்தியாசமே சமநிலைதான்!

**சந்த்ரமணி தாதி:** நீங்கள் சூரியமணியா அல்லது சந்த்ரமணியா? சந்த்ரமணி மற்றும் சூரியமணி ஆகுபவர்களின் வசிப்பிடம் எது? நீங்கள் எந்த மணி? (இரண்டுமே). சக்தி ரூபமும் உள்ளது மற்றும் குளிர்ந்த (ஷீதல்) ரூபமும் உள்ளது. ஆதலால்தான் நான் சூரியமணி மற்றும் சந்த்ரமணி, இரண்டுமே என. இப்போது ஞானமோ வந்து விட்டது ஆனால் ஸ்திதி இல்லைதானே. ஞானத்தின் மூலம் பிரகாசம் (லைட்) வந்துள்ளது ஆனால் சக்தி (மைட்) வரவில்லை. எப்போது லைட்-மைட் இரண்டும் ஏக்ரஸ் ஆகும்போது தான் நம்பர் வெளியாகும். இப்போது மற்றவருக்கும் கூட ஞானத்தின் லைட் தர முடியும், மைட் தர முடியாது. எனவே வெற்றியும் இதைப் பொறுத்ததுதான். எல்லோருக்கும் லைட் அதாவது வெளிச்சம் வருகிறது என்றால் இந்த ஆத்மாவிற்கு எந்தளவு ஞானம் உள்ளது ஆனால் லைட்'ன் பிரபாவம் குறைவுதான், பாதி காரியம்தான் இப்போது முடிந்துள்ளது. சக்தி அளிப்பதில் இவர் நம்பர்-1 ஆக ஆவார். சிலருக்கு லைட் தருவதில், சிலர் மைட் தருவதில், சிலர் இரண்டும் தருவதில் முன் நம்பரில் இருப்பர். மூன்று விதங்கள். (பாப்தாதா மாலை அணிவிக்கும் போது அனைவரும் கை தட்டுகின்றனர்). சத்யுகத்திலோ ஷெஹ்னாய் (நாதஸ்வரம் போன்ற ஒரு சிறிய (ஊது) இசைக்கருவி) இசைப்பார்கள், இப்போது கைதட்டுகிறீர்கள்.

**நிர்மல் சாந்தா:** உடல நோய் மீது வெற்றி அடைந்து கொண்டு இருக்கிறீர்கள். சங்கமத்தில் கிரீடம், திலகம், சிம்மாசனம் மற்றும் தேனிலவு எல்லாம் கிடைக்கிறது. ஒரே சமயத்தில் எல்லா

பிராப்திகளையும் பாப்தாதா செய்விக்கிறார். ஒரு ஜென்மம் கொடுப்பது அநேக ஜென்மங்கள் நடக்கிறது. எப்படி குழந்தைகளுக்கு அநேக ஜென்மத்தின் கணக்கு வழக்கை ஒரு ஜென்மத்தில் முடிக்க வேண்டும். இது ஒரு ஜென்மத்துடையது பல ஜென்மங்கள் நடக்கிறது. அதுவோ பல ஜென்மத் துடையது ஒரு ஜென்மத்தில் முடிவடைகிறது ஆதலால் அது அதன் வலிமையான ரூபத்தை எடுத்து வருகிறது. பாப்தாதா இந்த யுத்தத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார், நீங்களும் தங்களது அல்லது பிறரதைப் பார்க்கிறீர்கள். எப்போது சாட்சியாகி பார்க்கிறீர்களோ அப்போது இந்த வியாதி விளையாட்டின் ரூபமாக மாறி விடுகிறது. பாப்தாதா சாட்சியாகிப் பார்த்து புன்முறுவல் செய்கிறார். கூடவே சகயோகியாகவும் ஆகிறார். களைப்படைவதில்லைதானே. (இல்லை). களைப்படையாத தந்தையின் குழந்தையும் களைப்படையாத வா மற்றும் அழியாதவர். இப்போது என்ன செய்ய வேண்டும் எனத் தெரியுமா? இப்போது இறுதியில் சாட்சாத்கார மூர்த்தி ஆக வேண்டும்; எந்தளவு சாட்சி நிலை உள்ளதோ அந்தளவு சாட்சாத்கார மூர்த்தி ஆகப் போகிறோம் என புரிந்து கொள்ளுங்கள். இப்போது இறுதி முயற்சியாக இது உள்ளது. சாட்சாத்கார மூர்த்தி ஆகி பாப்தாதாவின் சாட்சாத்காரம் மற்றும் தனது சாட்சாத்காரம் செய்விக்க வேண்டும்.

**சாந்தாமணி தாதி:** (சிரேஷ்டதா) மதிப்பிற்குரியவராக முக்கியமாக எந்த குணம் தேவை? எந்தளவு தெளிவாக இருப்பீர்களோ அந்தளவு சிரேஷ்டதா வரும். தெளிவாக உள்ளவர் எளிமையாகவும் முதன்மையாகவும் இருப்பார் மற்றும் அந்தளவு வெற்றியும் கிடைக்கும். வெற்றி பிறகு அந்தளவு அருகில் கொண்டு வரும். சமீப ரத்தினங்களின் அடையாளம் எதன் மூலம் தெரிய வரும்? இணையான நிலை மூலம். பாப்தாதாவுடைய சம்ஸ்காரங்களின் இணையான நிலை மூலம் அருகில் இருப்பது தெரிய வரும். எனில் இணையான நிலை என்பது அருகில் இருப்பதன் அடையாளம். ஆதி ரத்தினம் நீங்கள். ஆதி ஆகையால் அநாதி! யார் ஆதி ரத்தினமோ அவர் அநாதி மகிமைக்குத் தகுதியானவராகிறார். ஏனெனில் ஆதி தேவ் உடன் உதவி புரிபவர். ஆதி ரத்தினம் தான் படைப்பின் காரியத்திற்கு ஆதாரம் ஆவார்.

**ரத்தன்மோகினி தாதி:** சிநேகியா அல்லது சகயோகியா? (இரண்டுமே). சிநேகி, சகயோகி இரண்டிலும் சம நிலை, எந்தளவு சிநேகியோ அந்தளவு

சகயோகி ஆகிறார். சிநேகியால் சகயோகம் செய்யால் இருக்க முடியாது. எந்தளவு சிநேகியோ அந்தளவு சகயோகி. அந்தளவே சக்தி சொரூபமும். எப்போது சிநேகம், சகயோகம், சக்தி மூன்றும் சமமாக ஆகிறதோ அப்போது முடிவு ஆகி விடும். இந்த சமயம் இரட்டை கிரீடதாரியா அல்லது எதிர்காலத்தில் ஆவீர்களா? ஒன்று சிநேகத்தினுடையது, மற்றொன்று சேவையினுடையது. சேவையின் கிரீடம் என்றால் பொறுப்பின் கிரீடம். அது ஸ்தூலமானது, இது சூட்சுமமானது. சிநேகத்தின் கிரீடம் சூட்சுமமானது. யா இங்கு இரட்டை கிரீடதாரி ஆகிறாரோ அங்கும் அவர் இரட்டை கிரீடதாரியாக ஆகுவார். பாப்தாதா இரட்டை கிரீடங்களை த தருகிறார், நம்பர்வார் கீரிடம் கிடைக்கிறதல்லவா. இங்கும் நம்பர்வார் முயற்சியின்படி கிரீடதாரி ஆக பார்க்க முடிகிறது.

**மனோகர் தாதி:** எப்படி சாகாரத்தில் அவ்யக்த நிகழ்ச்சி நடக்கும்போது அலங்காரம் செய்து கொண்டு அமர்ந்தீர்கள். இன்று அதே அலங்காரத்தின் சித்திரத்தைப் பார்க்கிறோம். ஒவ்வொருவருடைய விசேஷமும் அவரவருடையது எனில் அந்த விசேஷம்தான் அருகில் கொண்டு வருகிறது. உங்களது விசேஷம் என்ன? எல்லோருடைய சிநேகியாகவும், சகயோகியாகவும் ஆவது! யார் எல்லோருடைய சிநேகியாக ஆகிறாரோ அவருக்கு எல்லோரிடமிருந்தும் சிநேகம் பிராப்தி ஆகிறது. எல்லோருக்கும் சிநேகியாக யார் ஆகிறார்கள்? யார் சர்வ தியாகியாக இருக்கிறாரோ அவரால்தான் ஆக முடியும்! யார் சர்வ தியாகி ஆகிறாரோ அவர்தான் அனைவருக்கும் சிநேகியாக, சகயோகியாக ஆகிறார். இத்தகைய சிரேஷ்ட சங்கல்பம் உடையவர்தான் சிரேஷ்ட பதவியின் அதிகாரி ஆகிறார். சங்கல்பத்தில் கூட அனைவர் மீதும் நன்மைக்கான பாவனை, தனக்காக மட்டுமில்லை. இப்படித்தான் சர்வ பிராப்திகளுக்கும் அதிகாரியாக ஆகிறார். அவர்களுக்குத்தான் சதா பாப்தாதா மற்றும் அனைவரிடமிருந்தும் மரியாதை கிடைக்கிறது. மரியாதையின் அதிகாரத்தைப் பெறுவது என்பதும் மிகப் பெரிய விஷயம். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 26.03.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மகாரதியின் சிறப்பு மற்றும் கடமை!

இன்று பேச விரும்புகிறீர்களா? அல்லது ஒலிக்கு அப்பால் செல்ல விரும்புகிறீர்களா? ஒலிக்கு அப்பால் இருக்கும் ஸ்திதியை விரும்புகிறீர்களா அல்லது ஒலிக்குள் (பேச விரும்புகிறீர்களா? (இரண்டும்) அதிகமாக எதனை விரும்புகிறீர்கள்? பேசும்போதே, ஒலிக்கு அப்பால் இருக்கும் ஸ்திதியில் இருக்கமுடியுமா? இரண்டுமே இணைந்திருக்க முடியுமா? அல்லது நீங்கள் பேசாதிருக்கும் போதுதான், ஒலிக்கு அப்பால் செல்லமுடியுமா? இது சாத்தியம் என்றால் இது எப்போது நிகழும்? இந்த ஸ்திதியில் நிலைத்திருக்க உங்களுக்கு எவ்வளவு அவகாசம் தேவைப்படும்? இது இப்போதே சாத்தியமா? அல்லது பல மாதங்கள் அல்லது பல வருடங்கள் தேவைப்படுமா? இப்போது இந்தப் பயிற்சியை நீங்கள் துவங்கமுடியுமா? நீங்கள் செயலாற்றி வரும்போதும் இதைப் பயிற்சி செய்யமுடியுமா? அல்லது இதைப் பயிற்சி செய்ய முடியவில்லையா? இதுவரை செய்ய இயலவில்லையென்றால். இப்போது முதல் இந்தப் பயிற்சியைத் துவங்கமுடியுமா?

பயிற்சி மற்றும் நடைமுறையில் பிரத்யட்சமாகக் கொண்டு வருவது ஆக இரண்டுமே! மகாரதி என்று அழைக்கப்படுபவரிடத்தில் காணப்படும். பயிற்சி செய்வதை உடனடியாக நடைமுறையில் கொண்டு வருவது மகாரதியின் அடையாளம். குதிரை வீரர்கள், தாம் பயிற்சி செய்வதை நடைமுறையில் சிறிது தாமதித்தே நடைமுறையில் கொண்டு வருவார்கள். காலாட்படையினர், எவ்வாறு பயிற்சி செய்யவேண்டும் என்பது பற்றி திட்டமிடுவதிலேயே காலத்தை கடத்திவருவார்கள்!. இதுதான் இவர்களிடையே காணப்படும் வேறுபாடு.

இதன்மீது நம் கவனம் உள்ளது அல்லது பிறகு நாம் பயிற்சி செய்வோம் என்கிற சொற்கள் குழந்தைகளின் வாயிலிருந்து வெளிப்படக்கூடாது. இப்போது நீங்கள் அந்த நிலையைக் கடந்து விட்டீர்கள். இப்போது நீங்கள்

நினைப்பது நடைமுறையில் செயல்களாகக் காணப்பட வேண்டும். உங்களுடைய எண்ணங்களுக்கும் செயலுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கக் கூடாது. முதலில் சிந்திப்பது, பிறகு திட்டமிடுவது, பிறகு சிறிது தாமதித்து அதை செயல்படுத்துவது ஆகிய இவை யாவும் குழந்தைத்தனமான விஷயங்கள். அதற்கான காலம் இது அல்ல. உங்கள் கல்வி எவ்வளவு முன்னேறி உள்ளது? இப்போது இறுதி நேரம் இது. இப்போது, மகாரதிகளின் நற்குணங்கள் மற்றும் கடமை என்ன என்பதில்தான் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

உங்களுக்கு இவை பற்றி எடுத்துரைக்கவும், உங்களுடைய இறுதி ஸ்திதியின் சொரூபத்தையும் சாட்சாத்காரம் செய்விப்பதற்காகவும்தான் இன்று பாப்தாதா வந்திருக்கின்றார். சேவை செய்யவல்ல ஆத்மா எதனை செய்யலாம். எதைச் செய்யக் கூடாது, எதைப் பேச வேண்டும், எதைப் பேசக்கூடாது என்பவற்றை இப்போதே தாரணை செய்தால்தான் நீங்கள் இறுதியில் மூர்த்தி ஆக முடியும். இதன் முன் உதாரணத்தை சாகார பிரம்மாவிடம் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். அவருடைய பயிற்சி மற்றும் அதை நடைமுறையில் அதே சமயத்தில் கொண்டுவந்தார். இந்த இரண்டிற்கும் இடையில் இடைவெளி இல்லை. அவருடைய எண்ணம் உடனடியாக செயலாக மாறியது. அவரைப் பின்பற்றுவது, அவருடைய அடி மீது அடி வைத்து நடப்பது குழந்தைகளின் கடமையாகும். ஒரு அடி எடுத்துவைப்பது என்றால், அடி மீது அடி எடுத்துவைப்பதாகும். தமக்குச் சமமாக இருப்பவரையே ஒருவர் பின்பற்றுவார். இத்தகைய ஸ்திதி எப்போது அமையும்?

பிறகு என்கிற வார்த்தையை மகாரதி ஒருபோதும் உபயோகிக்க மாட்டார். பிறகு செய்வீர்களா அல்லது இப்போதே நீங்கள் செய்வீர்களா? பிறகு என்கிற சொல் உங்களுக்குப் பொருந்தாது. பிறகு செய்வோம் என்று கூறினால் ஏதோ ஒரு பலவீனம் உள்ளது என்று பொருள். உடனடியாக செய்வது ஒரு வகை. ஆகட்டும், நான் நிச்சயமாக செய்வேன், இது பற்றி நான் சிந்திக்க வேண்டும் என்பது வேறுவகை. எனக்கு தைரியம் உள்ளது ஆனால் நம்பிக்கை இல்லை. நம்பிக்கை உள்ளவர் இவ்வாறு பேசமாட்டார். நம்பிக்கை உடையவர் என்றால், அவருடைய புத்தியில், எண்ணம், சொல், செயல் ஆகிய அனைத்திலும் நம்பிக்கை இருக்கும். இந்த ஞானம் மற்றும் பாபாவின் அறிமுகத்தில் மட்டும் நம்பிக்கை

இருந்தால் போதாது. சங்கல்பத்திலும் நம்பிக்கை இருக்கும், பேச்சிலும் நம்பிக்கை இருக்கும். அதைரியம் பேச்சிலும் இராது. இத்தகைய ஆத்மாதான் மகாரதி என்று போற்றப்படுகிறார். மகாரதி என்றால் மகான் ஆத்மா. உங்களுக்குள் எத்தகைய திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்கள்? புதிய உலகிற்கான திட்டத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்கான திட்டத்தை தீட்டியிருக்கிறீர்களா? புதிய உலகிற்கான திட்டத்தை நடைமுறையில் கொண்டு வருவது என்றால், பழைய உலகத்தைச் சேர்ந்த எந்த ஒன்றுமே தென்படக்கூடாது என்று பொருள். அனைவரும் இதுபற்றி நினைக்கின்றனர் அல்லது பேசுகின்றனர், பல திட்டங்கள் இதற்காக தீட்டப்பட்டுள்ளன. இவை எந்த அளவு நிறைவேற்றப்படுகின்றன என்பதைப் பார்த்து விடுவோம்! என்கிற எதிர்மறையான எண்ணத்தையும் விலக்குவதே மகாரதியின் கடமையாகும்.

மதுவனத்தின் விசேஷ ரத்தினங்களின் மீதே அனைவரின் பார்வையும் இப்போது செல்கிறது. ஆகவே அவர்கள் அனைவரும் உங்களுடைய பரிவர்த்தனை (மாற்றம்) அடைந்த சொரூபத்தையே காணுமாறு, நீங்கள் நிரந்தரமாக பரிவர்த்தனை ஆகி விடவேண்டும். உங்களுடைய பழைய திருஷ்டி, பழைய விருத்தி ஆகிய ஏதும் இருக்கக்கூடாது. அப்போதுதான், இறுதி முரசு முழங்கும். இது ஒரு சாதாரண குழு அல்ல, பல அதிசயங்களை சாதிக்கவல்ல குழு ஆகும். இங்கிருந்து செல்லும்போது, மற்ற அனைவரும் பாப்தாதாவின் அருள்வாக்குகளை உங்கள் மூலமாக நடைமுறையில் அனுபவம் செய்யுமாறு நீங்கள் அத்தகைய சொரூபமாகிச் செல்ல வேண்டும். உங்கள் அனைவரிடத்திலும் பாப்தாதாவின் சமஸ்காரங்களே காணப்பட வேண்டும்; உங்களுடைய சமஸ்காரங்கள் காணப்படக்கூடாது. உங்களுடைய பழைய சமஸ்காரங்களை நீக்கிய பிறகு எந்த சமஸ்காரங்களை உங்களுக்குள் நிறைத்துக் கொள்ள வேண்டும்? பாப்தாதாவின் சமஸ்காரங்கள்! ஆகவே நீங்கள் இங்கிருந்து வெளியேறும்போது, பாப்தாதாவுக்கு சமமானவர்களாக மாறிவிட்ட காட்சியை அனைவரும் காணவேண்டும். இவ்வாறு அனைவரும் மாறுமாறு நீங்கள் செய்யவேண்டும். உங்களுடைய பழைய சமஸ்காரம் எதுவும் சங்கல்பத்தில்கூட தோன்றக்கூடாது. இது பாப்தாதாவின் சமஸ்காரமா என்று சோதனை செய்யுங்கள். அது பாப்தாதாவின் சமஸ்காரம் அல்லவென்றால், அதைத் தீண்டக் கூடாது. ஒரு கட்டுப்பாட்டை மேற்கொண்டுவிட்டால், எத்தகைய சூழ்நிலை முன்னிலையில்

வந்தபோதும். அதை ஒருபோதும் கைவிடக்கூடாது. உங்களுடைய குறிக்கோள் இருப்பதால், நீங்கள் எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்கொள்வீர்கள். அவ்வாறே, பாப்தாதாவின் சமஸ்காரமாக அது இல்லையென்றால், நீங்கள் அந்த சமஸ்காரத்தை ஒருபோதும் தீண்டக்கூடாது. இவ்வாறு நீங்கள் கருத வேண்டும். நீங்கள் உடல் மற்றும் உடல் சம்பந்தங்களைக் கடந்து ஏணிப்படியில் ஏறிவிட்டீர்கள். இப்போது, உங்களுடைய சமஸ்காரங்கள் உங்களுடைய புத்தியில் கூட இருக்கக்கூடாது. உங்களுடைய சமஸ்காரத்திற்கு ஏற்ப உங்களுடைய சொரூபம் அமையும். சரளத்தன்மை மற்றும் இனிமை ஒருவருடைய சமஸ்காரமாக இருந்தால், அவை நடை முறையில் காணப்படும். உங்களுடைய சமஸ்காரங்கள் பாப்தாதாவின் சமஸ்காரங்களைப் போன்றே இருந்தால் பாப்தாதாவின் உருவத்தையே மற்ற அனைவரும் காண்பார்கள். பாப்தாதாவின் சமஸ்காரங்களைப் போன்றே, உங்களுடைய எண்ணம், சொல், செயல், குணங்கள் மற்றும் காரியம் விளங்கும். நீங்கள் அனைவரும் ஒன்று போல இருக்கிறீர்கள் என்கிற சொல் அனைவருடைய உதடுகளிலிருந்தும் வெளியாகும். அங்க லட்சணங்கள் வெவ்வேறாக இருப்பினும், குணம் ஒன்றுபோலவே இருக்கும் ஆனால் உங்களுடைய நற்குணங்கள் நடைமுறையிலும் காட்சி அளிக்க வேண்டும். குழந்தைகளிடத்தில் இத்தகைய நம்பிக்கையை பாப்தாதா வைத்திருக்கின்றார்!.

நீங்கள் அனவருமே, அன்பு நட்சத்திரங்கள், வெற்றி நட்சத்திரங்கள், முயற்சிக்கும் நட்சத்திரங்கள். சேவை செய்கின்ற குழந்தைகளின் முயற்சி வெற்றிபெறும். பெயரளவில் முயற்சி செய்தால்போதும் அவர்களின் வெற்றி ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டுள்ளது!. இப்போது நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பது புரிந்ததா? நீங்கள் எதை நினைக்கிறீர்களோ, என்ன கூறுகின்றீர்களோ, அதையே செய்யவேண்டும். இது பற்றி நான் யோசிக்க வேண்டும், பிறகு பார்ப்போம், இது என்னுடைய யோசனை என்கிற உங்களுடைய வார்த்தைகளைக் கேட்கும்போது, இப்போதும் இவ்வாறு இருப்பது அழகா? ஒரு முதியவர், பொம்மைகளுடன் விளையாடுவதைப் போன்று இருக்கிறதே! என்று பாப்தாதா நகைக்கின்றார். பொம்மை விளையாட்டு என்றால் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் ஒரு வாழ்க்கை சரித்திரத்தையே உருவாக்குகின்றனர். சிறிய பொம்மையை உருவாக்குகின்றனர்; அதற்கு

மணம் செய்விக்கின்றனர். இவ்வாறே, குழந்தைகளும், வீண் எண்ணங்களைப் படைத்து பிறகு அதற்கு உயிர் கொடுத்து வளரச் செய்த பிறகு அதனாலேயே துன்பமும் அடைகின்றனர். அவர்கள் பிறகு தம்மைப் பார்த்தே வியக்கின்றனர். ஆகவே இதுவும் ஒரு பொம்மை விளையாட்டுதான் இல்லையா! நீங்கள் இப்போது இத்தகைய படைப்புகளை உருவாக்கக்கூடாது. பாப்தாதா ஒருபோதும் வீணான ஒன்றை ஒருபோதும் படைப்பதில்லை ஆனால் குழந்தைகள் வியர்த்தமான ஒன்றைப் படைத்து வளர்த்து பிறகு அதை அழிக்க அல்லது அதை விட்டு அகல முயற்சிக்கின்றனர். ஆகவே நீங்கள் அத்தகைய படைப்புகளை இப்போது படைக்கக்கூடாது. சிறந்த படைப்புகளை நீங்கள் விரைவாக ஒரே வினாடியில் படைக்கிறீர்கள், அதே வேகத்தில் வியர்த்தமான படைப்புகளையும் படைக்கிறீர்கள்! ஒரு வினாடியில் எண்ணற்ற எண்ணங்கள் தோன்றுகின்றன. ஒன்றைப் படைத்து, வளர்த்து பிறகு அதையே அழிக்க முயற்சிப்பது தேவையா? இப்போது இத்தகைய வியர்த்த படைப்புகளை படைப்பதை தடை செய்ய வேண்டும். மனிதர்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்கின்றனர். இந்த வீண் எண்ணங்களும் படைப்புகள் அதாவது பிறவிதான். அங்கு உலக ஜனத்தொகை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இங்கு, எண்ணங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஆகவே நீங்கள் இதனை கட்டுப்படுத்தவேண்டும். முயற்சியில் பலவீனம் இருப்பதால், எண்ணங்கள் கட்டுப்பாடு இன்றி உருவாகுகின்றன. இப்போது அவை பெயர் உருவமே இல்லாதவண்ணம் அழிக்கப்பட வேண்டும். பழைய விஷயங்கள். பழைய சமஸ்காரங்கள் யாரைச் சேர்ந்தவை என்பதையே அறியாத அனுபவம் உங்களுக்கு ஏற்பட வேண்டும். இந்த அளவுக்கு அவற்றின் பெயர் உருவமே இல்லாதவாறு அழிக்கப்பட வேண்டும். உங்களுடைய மொழியும் இப்போது மாற வேண்டும். இறுதி ஸ்திதிக்கு தகுந்தவாறு இல்லாத பல சொற்கள் இப்போதும் வெளிப்படுகின்றன. ஆகவே உங்களுடை இறுதி நிலைக்கு உங்களுடைய எண்ணம், சொல், செயல் ஆகிய அனைத்தும் அமையவேண்டும்.

இந்த பட்டிக்குப் பிறகு, உங்களுடைய முகத்தில், சம்பூர்ண ஸ்திதியின் பேரொளியை அனைவரும் காணவேண்டும். உங்களுடைய சம்பூர்ண ஸ்திதியை இப்போது உங்களுக்கு அருகாமையில் கொண்டு வரும்போது, மற்ற அனைவரும் தத்தம் சம்பூர்ண ஸ்திதியை வரிசைக்கிரமத்தில்

தங்களுக்கு அருகாமையில் கொண்டு வருவார்கள். இறுதியில் நீங்கள் அந்த ஸ்திதியை உங்களிடத்தில் கொண்டுவர எத்தனித்தால், மற்றவர்கள் என்ன ஆவார்கள்? சாகார பிரம்மாபாபா சம்பூர்ண ஸ்திதியை சாகாரத்தில் கொண்டு வந்திருந்தார். அவருடைய சாகார உருவத்தையும். சம்பூர்ண ஸ்திதியின் உருவத்தையும் தனித்தனியாக நீங்கள் காண முடிந்தது. அவ்வாறே, உங்களுடைய சாகார உருவமும், சம்பூர்ண உருவமும் தனித்தனியாகக் காணப்பட வேண்டும். அவருடைய சம்பூர்ண ஸ்திதி அவரை அணுகி வருகின்றது என்பதை உங்களுக்கு உணர்த்த, அவருடைய சாகார உருவில் எந்த நற்குணம் தெளிவாகக் காணப்பட்டது? அவர் சாகார உருவில் இருந்தபோதிலும், அவ்யக்த ஸ்திதி அனுபவம் ஆகின்றது என்று அனைவரும் கூறுமாறு, எத்தகைய நற்குணம் அவரிடத்தில் காணப்பட்டது? அது எந்த நற்குணம்?

(ஒவ்வொருவரும் தத்தம் கருத்துக்களை தெரிவித்தனர்). நீங்கள் கூறியவை யாவும் சரியே ஆனால் அனைத்திற்கும் அப்பால் இருக்கும் ஸ்திதி (உப்ராம் ஸ்திதி) என அது அழைக்கப்படுகிறது. உங்களுடைய உடலுக்கும் அப்பால் ஒரு சாட்சியாக இருக்கும் ஸ்திதியாகும் அது. இவ்வாறு சாட்சியாக இருப்பவர்கள் ஒரு முன்னுதாரணமாவும் விளங்குவார்கள். புத்தியின் மூலமாக அப்பால் இருப்பது ஒருவகை ஆனால் உங்களுடைய சமஸ்காரங்களுக்கும் அப்பால் இருப்பதே சிறந்தது. இது எனது சமஸ்காரம். நான் என்பதற்கும் அப்பால், நான் இவ்வாறு கருதுகிறேன் என்பவற்றிக்கும் அப்பால் இருக்க வேண்டும். நான் என்பதற்குப் பதிலாக பாபாவின் ஸ்ரீமத் என்று கருதவேண்டும். புத்தி அளவிலேயே ஞானம் இருந்தால், நான் என்பது உருவாகிறது. இந்த நான் என்பது நஷ்டத்தை ஏற்படுத்தும். முதலில், நான் இந்த சரீரம் என்பதை தியாகம் செய்யவேண்டும். இரண்டாவதாக, நான் இவ்வாறு நினைக்கின்றேன். நான் ஞானி ஆத்மா, நான் புத்திசாலி, இத்தகைய நான் என்கிற உணர்வையும் தியாகம் செய்யவேண்டும்.. நான் என்கிற வார்த்தையை உபயோகிக்கும்போது, நீங்கள் பாப்தாதாவை நினைவு செய்யவேண்டும். உங்களுடைய புத்தியை உபயோகப்படுத்தும்போது, அது ஸ்ரீமத் என்று உணர வேண்டும். முதலில் நான் என்கிற உணர்வை அழிக்க வேண்டும். இரண்டாவதாக எனது என்கிற உணர்வையும் அழிக்க வேண்டும். இதுவும் உங்களைத் தாழ்த்திவிடுகிறது. நான், எனது, நீ, உன்னுடையது என்கிற 4-சொற்களையும் அழித்து விடவேண்டும். இந்த

4-சொற்கள்தான் உங்களை சம்பூர்ண ஸ்திதியிலிருந்து விலக்கி விடுகின்றன. இந்த 4-சொற்களின் உணர்வை முழுமையாக நீங்கள் அழிக்க வேண்டும். இறுதி நாட்களில் சாகார பாபாவின் ஸ்திதியைக் கேட்டிருக்கிறீர்களா? அவர் ஒவ்வொன்றிலும் என்ன கூறிவந்தார்? பாபா பாபா! சேவையில் வெற்றி இல்லாதபோது சேவையில் வெற்றி அடைவதற்காக எந்த வழியைக் கூறினார். பேசும்போது, பாபா பாபா என்று கூறுங்கள். உங்களுடைய அம்பு இலக்கை அடைந்து விடும் என்று அவர் கூறிவந்தார். நீங்கள் பாபா பாபா என்று கூறும்போது, நான், எனது, நீ, உனது ஆகிய அனைத்தும் அழிந்து விடும். உங்களுடைய ஸ்திதி எப்படி இருக்கும்?. அனைத்தும் தெளிவாகி விடுவதுடன், நீங்களும் தெளிவான நினைவுடன் இருக்கமுடியும். இப்போது நீங்கள் பிந்து ஸ்திதியில் நிலைத்திருக்க ஏன் மிகுந்த பிரயத்தனம் செய்ய வேண்டியுள்ளது? நாள் முழுவதும் காணப்படும் உங்களுடைய ஸ்திதி தெளிவானதாக இல்லை; உங்களால் தெளிவான நினைவில் நிலைத்திருக்க இயலுவதில்லை. அப்போது நான், எனது, நீ, உனது என்கிற உணர்வு வந்து விடுகிறது.

பொன் சங்கிலிகளும் (தளைகள்) சாதாரணமானவை அல்ல என்று ஆரம்பத்தில் உங்களுக்கு கூறப்பட்டது. இந்த சங்கிலிகள் (பந்தனங்கள்) உங்களை தம் வசப்படுத்திவிடுகின்றன. உங்களுடைய புத்தி இவை அனைத்தையும் கடந்து அப்பால் உள்ளதா, தெளிவாக இருக்கிறதா என்பதை நீங்கள் ஒவ்வொரு வரும் சோதனை செய்யவேண்டும். பாதை சீராக இருந்தால், உங்கள் இலக்கை அடைய எவ்வளவு அவகாசம் தேவைப்படுகிறது? அதே பாதையில் தடைகள் இருந்தால் எவ்வளவு தாமதம் ஆகிறது? தடைகள் இருந்தால், தெளிவான நினைவிலும் தடைகள் அமைகின்றன. இவற்றை நீங்கள் இப்போது நீக்க வேண்டும். நீங்கள் இவ்வாறு செய்யும்போது, உங்களைப் பார்த்து மற்றவர்களும் அவ்வாறே செய்வார்கள். இந்த ஸ்திதியை நீங்கள் வரிசைக்கிரமத்தில் அடையவேண்டும். நீங்கள் இந்த ஸ்திதியை அடைந்தவுடன்தான் மற்றவர்களும் அந்த ஸ்திதியை அடைவார்கள். இத்தகைய பொறுப்பு உங்களுக்கு உள்ளது. எண்ணம், சொல், செயல், சம்பந்தம், மற்றும் சேவையில் எல்லைக்குட்பட்ட உணர்வு இருந்தால். இந்த வரம்பு உங்களை பந்தனத்தில் ஆழ்த்திவிடுகிறது. எல்லையற்ற ஸ்திதி உங்களை எல்லையற்ற உருவத்தில் நிலைத்திருக்கச் செய்கிறது. இப்போது உங்களிடத்தில் உள்ள மாசை நீக்கி விட வேண்டும். மாசை நீக்கத் தான்

இந்த பட்டி நடைபெறுகிறது. பாப்தாதாவிற்கு சமமானவர்கள் அடங்கியவர்களின் குழு தான் கூடவேண்டும். இந்த சம்பூர்ண ஸ்திதி என்கிற முத்திரை குத்தப்பட வேண்டும். இப்போதிருந்தே இந்த சம்பூர்ண ஸ்திதி இருந்து வர வேண்டும். இதுவே மகாரதிகளின் கடமையாகும். இப்போது நீங்கள் வேறு என்ன செய்யவேண்டும்? ஸ்காலர்ஷிப் எவருக்கு கிடைக்கும்? ஸ்காலர்ஷிப் பெறுபவர்களை அனைவரும் காண்பார்கள். பாப்தாதா மறைந்திருப்பதால், நீங்களும் மறைந்திருப்பீர்கள் என்பது சரியல்ல. குழந்தைகள் மேடையில் காட்சி அளிப்பார்கள். குழந்தைகளின் சாட்சாத்காரம் ஆக வேண்டும். சேவை என்கிற மேடையில் எவர் காட்சியளிக்கின்றனர்? ஆகவே, நீங்களும், மேடையில், சம்பூர்ண ஸ்திதியை சாட்சாத்காரம் செய்விக்க வேண்டும். இறுதி வரை நீங்கள் மறைந்தே இருப்பீர்கள் என்று கருதுகிறீர்களா? மறைந்திருப்பது பாப்தாதாவின் பார்ட், குழந்தைகளின் பார்ட் அல்ல. ஆகவே இப்போது நீங்கள் அதை வெளிக் கொண்டு வர வேண்டும்.

இப்போது எத்தகைய சேவையை நீங்கள் செய்யவேண்டும் என்பது தெரியுமா? கருத்தரங்கை நடத்துவது மட்டுமே சேவையா? அத்துடன் எந்த சேவையையும் செய்ய வேண்டும்? உங்களுடைய விருத்தி (உள்ளுணர்வு) மற்றும் திருஷ்டியை மாற்றுகின்ற சேவையையும் செய்யவேண்டும். கடைவிழிப் பார்வை ஒருவரை அப்பால் கொண்டு செல்கிறது என்கிற பழமொழி ஒன்று உள்ளது. இந்த சேவையை நடைமுறையில் உங்களுடைய விருத்தி மற்றும் திருஷ்டியின் மூலம் செய்யவேண்டும். சொல்லின் மூலம் சேவை செய்வது சாதாரணமான விஷயம். ஒருவரை சம்பூர்ணமாக்குவதற்கு, சம்பந்தத்தில் கொண்டு வருவதற்கு, உங்களுடைய விருத்தி மற்றும் திருஷ்டியின் மூலமாக சேவை செய்யவேண்டும். ஒரு இடத்தில் இருந்தவாறே, ஒரே வினாடியில் நீங்கள் இந்த சேவையை பலருக்கு செய்யமுடியும். இப்போது பாபா இதனைக் காண விரும்புகின்றார். மற்ற ஒரு ஆத்மா எவ்வளவு தமோபிரதானமாக இருந்தாலும், உங்களுடைய விருத்தியின் மூலமாக பரிவர்த்தனையை அனுபவம் செய்விக்க இயலும். இந்த யக்ஞத்தின் ஆரம்பத்தில், நீங்கள் வீட்டில் இருக்கும்போதே பாப்தாதாவின் சாட்சாத்காரம் உங்களுக்கு ஏற்பட்டது. அவ்வாறே நீங்கள் வெகு தொலைவில் இருந்தபோதிலும், உங்களுடைய சக்திமிக்க விருத்தி, ஒருவரைக் கைப்பிடியாக அழைத்து வருவதைப் போன்ற ஒரு சாதனையை செய்யும். மற்ற ஆத்மா

நாஸ்தீகராக அல்லது தமோ குணியாக இருந்தபோதிலும், அவர் முழுமையாக பரிவர்த்தனை ஆகி விடுவதை நீங்கள் காண்பீர்கள். இத்தகைய சேவையை நீங்கள் இப்போது செய்யவேண்டும். உங்களுடைய விருத்தி சகலத்திலும் தெளிவாக இருந்தால்தான் இத்தகைய சேவையில் நீங்கள் வெற்றி பெற முடியும். இது உங்களுடைய கடமை என்று நீங்கள் அனைவரும் கருதவேண்டும். உங்களுக்கு தனிப்பட்ட சேவை இருந்தாலும், உங்களுடைய சேவை நிலையத்திற்கு செய்துவரும் சேவையைப் போன்றே, யக்ஞத்திற்கும் சேவை செய்வது உங்களுடைய கடமை ஆகும். சேவையில், உங்களை நீங்களே சமர்ப்பித்துக் கொள்ளவேண்டும். பேச்சில் காணப்படும் சக்தியுடன், மற்ற ஒருவரின் சமஸ்காரங்களை மிகக் குறுகிய நேரத்தில் பரிவர்த்தனை செய்யுமாறு, உங்களுடைய விருத்தி மற்றும் திருஷ்டியும் சக்தியுடன் விளங்க வேண்டும். உங்களுடைய விருத்தி மற்றும் திருஷ்டி, பேசும் சக்திக்கு சமமாக விளங்காவிட்டால், சேவையில் வெற்றி காண இயலாது. இதுதான் முக்கியமான சேவையாகும். இப்போது இந்த எல்லையற்ற சேவையின் மூலமாக உலகிலுள்ள எண்ணற்ற ஆத்மாக்களை வசீகரிக்க வேண்டும். இப்போது நீங்கள் சேவை என்று கருதும் சேவை பிரஜைகளை மட்டுமே உருவாக்கவல்லது. உங்களுடைய பிரஜைகளின் பிரஜைகளும் தாமாகவே உருவாகுவார்கள்; கண்காட்சிகளின் மூலமாகவும் உருவாகுகின்றனர். இப்போது நீங்கள் எல்லையற்ற அன்பை வழங்க வேண்டும். அப்போதுதான், முழு உலகே உங்களை சுகவள்ளல் என்று கருதும். நீங்கள் அவர்களுக்கு சுகத்தை வழங்கினால்தான், அவர்கள் உங்களை சுகவள்ளல் என்று ஏற்றுக் கொள்வார்கள். விஸ்வ மகாராஜாவை உலகம் உலக வள்ளல் என்று அழைக்கின்றனர். ஆகவே இப்போது அவர்களுக்கு சுகத்தை வழங்கினால்தான் அவர்கள் உங்களை சுகவள்ளல் என்று கருதுவார்கள். நீங்கள் சுகத்தை அளித்தால்தான் இதை ஏற்றுக்கொள்வார்கள். ஆகவே நீங்கள் இப்போது முன்னேற வேண்டும். ஒரே வினாடியில் நீங்கள் பலருக்கு சேவை செய்ய இயலும். மற்ற ஒருவரின் சமஸ்காரம், அல்லது மற்றவரின் தொடர்பு அல்லது சேவை ஆக ஏதோ ஒரு காரணமாக நீங்கள் உணர்ச்சி வசப்பட்டால், நீங்கள் தோல்வி காண்பீர்கள். பிறகு அந்த தோல்வி அதிகரிக்கும். இக்காலத்தில் 3-மாதங்களுக்கு ஒரு முறை செமஸ்டர் பரீட்சை வைக்கப்படுகிறது. இதன் மதிப்பெண்கள் இறுதி வெற்றி தோல்வியை நிர்ணயிக்கிறது. மீண்டும் மீண்டும் இந்த பரீட்சைகளில் தோல்வி அடைபவர் இறுதியிலும்

தோல்வியையே அடைவார். ஆகவே நீங்கள் முழுமையாக மாசில்லாதவர்களாக ஆக வேண்டும். மாசில்லாதவர்களாக நீங்கள் ஆகி விட்டால், நீங்கள் முழுமையாக வெற்றி பெற்று விட்டீர்கள் என்று கொள்ளலாம். ஏதாவது ஒரு குறை இருப்பின், நீங்கள் முழுமையாக வெற்றி பெற இயலாது. நல்லது!

✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷

## 02.04.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சம்பூர்ண ஸ்திதியின் அடையாளங்கள்!

பாபா கூறுவதை செவிமடுப்பதற்காக நீங்கள் அனைவரும் விரும்புகிறீர்கள் ஆனால் பாபா என்ன நினைக்கின்றார்? பாப்தாதா உங்களை செவிமடுப்பதற்கும், பேசுவதற்கும் அப்பால் கொண்டு செல்ல நினைக்கின்றார். ஒரே வினாடியில் ஒலிக்கு அப்பால் எப்படிச் செல்வது என்பது உங்களுக்குத் தெரியுமா? எளிதாக, துரிதமாக நீங்கள் பேச முடிகிறது. இவ்வாறே, எளிதாக, துரிதமாக நீங்கள் ஒலிக்கு அப்பால் செல்ல முடியுமா? நீங்கள் உங்களை எத்தகையவர் என்று கூறிக்கொள்கின்றீர்கள். மாஸ்டர் சர்வ சக்திவான். இச்சமயத்தில், மாஸ்டர் சர்வ சக்திவான் என்கிற போதை உங்களிடத்தில் மிகக் குறைவாகவே உள்ளது. ஒரே வினாடியில் ஒலிக்குள் வந்து, ஒரே வினாடியில் ஒலிக்கு அப்பால் செல்லக் கூடிய சக்தியின் பிரகாசம் உங்களுடைய முகத்தில் தென்படவில்லை. நீங்கள் அத்தகைய ஸ்திதியை அடையும்போது, ஒரே வினாடியில் ஒலிக்குள் வந்து மறு வினாடியே ஒலிக்கு அப்பால் செல்வீர்கள். இந்தப் பயிற்சி இயற்கையாக, எளிதானதாக அமையும் போது, சம்பூர்ண ஸ்திதியை நீங்கள் அடைந்து விட்டீர்கள் என்று நீங்கள் கருதலாம். இதுதான் சம்பூர்ண ஸ்திதியின் அடையாளம் ஆகும். சகல முயற்சிகளும் எளிதாகி விடும். சகலம் என்பதில் புருஷார்த்தமும் அடங்கும். நினைவு யாத்திரை மற்றும் சேவையும் இதில் அடங்கும். இந்த இரண்டும் எளிதானவையாக நீங்கள் அனுபவம் செய்யும்போது, நீங்கள் சம்பூர்ண ஸ்திதியை அடைய இருக்கிறீர்கள் என்று உணருவீர்கள்.

சம்பூர்ண ஸ்திதியில் இருப்பவர்கள் குறைவான முயற்சியின் மூலம் மிகுதியான வெற்றியை அடைவார்கள். இச்சமயத்தில், நீங்கள் மிகுந்த முயற்சி செய்தும் மிகக் குறைந்த பலனையே அடைகிறீர்கள். இன்று, முக்கியமாக ஒரு சிறப்பை உங்கள் ஒவ்வொருவரின் முகத்திலும் பாப்தாதா சோதனை செய்கிறார். பாப்தாதா எதனை சோதனை

செய்கிறார் என்பதன் டச்சிங் எவருக்கு கிடைக்கிறது என்பதை பாபா காண்கின்றார். உலகில் உள்ள எண்ணத்தை அறிகின்றவர்கள் சோதனை செய்ய இயலும்போது, மாஸ்டர் சர்வ சக்திவான்கள் அதைச் செய்ய இயலாதா என்ன? இந்த பட்டியில் இருந்தவர்களுக்கு சோதனைத்தாள் அளிக்கப்படவில்லை. ஆகவே இன்று பாபா அதை அளிக்கின்றார். நீங்கள் அனைவரும் பாஸ் ஆகி விட்டீர்கள். ஒன்று பாஸ், அடுத்தது பாஸ் வித் ஹானர். பாண்டவ சேனை சக்திகளைவிட முன்னணியில் நிற்கிறதா? அல்லது சிலர் முன்னணியிலும் வேறு சிலர் பின்தங்கியும் உள்ளனரா? (சகோதரர்களிடம் பேசுகையில்) நீங்கள் சக்திகளுக்கு முன்னால் இருக்கிறீர்களா அல்லது பின்னாலா? இந்த பந்தயத்தில் -யார் முதன்மையாக வர விரும்பினாலும் அவரை எவரும் தடுக்க முடியாது. உங்களுடைய தடைகளாலேயே நீங்கள் நிறுத்தப்படலாம் ஆனால் மற்ற எவரும் உங்களைத் தடுக்க முயன்றாலும், அவ்வாறு தடுக்க இயலாது. உண்மையில், பாண்டவர்களைப் பொறுத்தவரையில் பின்னால் இருப்பது என்றால், முன்னிலையில் இருப்பதாகும். ஏன் பின்னால் இருக்கிறீர்கள்? பாதுகாவலர்கள் பின்னால்தான் இருப்பார்கள். பாதுகாவலர்களான நீங்கள் முன்னால் இருக்கிறீர்களா அல்லது பின்னால் இருக்கிறீர்களா? எதனை நீங்கள் விரும்புகிறீர்கள்? பாதுகாவலர்கள் பின்னால் இருப்பார்கள்; வழிகாட்டிகள் முன்னால் இருப்பார்கள். ஆகவே வழிகாட்டிகள் முன்னால் இருக்கின்றனர். பாண்டவர்கள் பாதுகாவலர்களாக ஆக்கபட்டுள்ளனர். ஆகவே பாண்டவர்கள் பின்னால் இருந்து முன்னால் இருக்கும் சக்திகளை பாதுகாக்க வேண்டும். நீங்கள் வழிகாட்டிகள் ஆகக்கூடாது; பாதுகாவலர்கள் ஆக வேண்டும். பாண்டவர்கள் வழிகாட்டிகளானால் குழப்பம் ஏற்படும். ஆகவே பாண்டவர்கள் பாதுகாவலர்களாகவே இருக்க வேண்டும். நீங்கள் எந்த வகையான முயற்சி செய்பவர்களின் வரிசையில் நீங்கள் இருக்கிறீர்கள்? முயற்சி செய்பவர்களில் எத்தனை வகையான வரிசைகள் உள்ளன?

மாஸ்டர் சர்வ சக்திவான்களாக நீங்கள் மாறுவதற்கு இப்போது, பாப்தாதா கற்பித்து வருகின்றார். இதன் மூலம் நீங்கள் மற்ற ஒருவரின் ஸ்திதியை அல்லது அவர்களின் முகத்தின் மூலம் அவர்களின் எண்ணங்களையும் நீங்கள் தெளிவாக அறிந்து கொள்ளலாம், இதில் எந்த ஒரு சந்தேகமும் இருக்காது. அவற்றை நீங்கள் தெளிவாக அறியலாம். இதுதான் கல்வியின் இறுதி ஸ்திதி. (நிலை) சாகார பிரம்மாபாபாவின் மூலமாக

இந்த ஸ்திதி உங்களுக்கு ஓரளவு காட்டப்பட்டது, சாகார உருவில் பாபாவுடன் உடன் இருந்தவர்கள் இத்தகைய பல அரிய காட்சிகளைப் பார்த்திருந்தனர். அவ்வாறே, சகல குழந்தைகளும் வரிசைக்கிரமத்தில் இந்த ஸ்திதியை அடைவார்கள். நீங்கள் தொடர்ந்து இதே ஸ்திதியில் இருந்து வந்தால்தான், உங்களுடைய இறுதி சொரூபம் (ஃபரிஸ்தா) மற்றும் எதிர்கால சொரூபத்தை (தேவதை) மற்ற அனைவரும் தெளிவாக காண இயலும். உங்களுடைய சாகார உருவின் மூலமாக இத்தகைய சாட்சாத்கார மூர்த்தி ஆகாவிட்டால், சாட்சாத்காரமும் ஆகாது. இதனால்தான் அருகாமையில் உள்ள ரத்தினங்கள் சகல பாடங்களின் மீதும் கவனம் செலுத்துவது அவசியம் ஆகிறது. எந்த அளவு அருகில் இருக்கிறீர்களோ, அந்த அளவு நீங்கள் தெளிவாக காட்சி அளிப்பீர்கள், மற்றவர்களும் அந்த அளவு தெளிவாக உங்களுக்கு காட்சி அளிப்பார்கள். ஒவ்வொருவரின் முயற்சி தெளிவாகத் தெரியும் போது, அவரவரின் பலனும் தெளிவாகத் தெரியும். மற்றவர்களையும் தெளிவாக அறிந்து கொள்ளலாம். தெளிவு என்றால் திருப்தி. திருப்திக்கு ஏற்ப நீங்கள் தெளிவாக இருப்பீர்கள். தெளிவாக இருக்கும் குழந்தைகளைப் பற்றி சாகார பாபா என்ன கூறிவந்தார்? தூய்மை, நேர்மை! தூய்மையாகவும் நேர்மையாகவும் இருப்பவர்கள் தெளிவாகவும் இருப்பார்கள்! தூய்மை இருக்குமிடத்தில் அனைத்துமே தெளிவாக இருக்கும். இந்த பட்டியில் இதுவே இறுதிப் பாடம். நீங்கள் இதற்கு முன்னுதாரணமாக விளங்க வேண்டும். இவ்வாறு முன்னுதாரணமாக விளங்குபவர்கள் இந்தப் பரீட்சையில் சிறப்பு மதிப்பெண்களை அடைவார்கள்.

நான்கு பாடங்களின்மீது நீங்கள் விசேஷ கவனம் செலுத்தவேண்டும்: 1. நினைவு சக்தி, 2. அன்பு சக்தி, 3. சகயோகத்தின் சக்தி, 4. சகிப்பு சக்தி. இந்த பட்டியில் இந்த 4-பாடங்களும் மிக முக்கியமானவை ஆகும். இவற்றில் குழந்தைகளின் மதிப்பெண்களை பாப்தாதாவும் பார்த்தார். அது எவ்வாறு இருந்தது? இந்த 4-சக்திகளும் சரிசமமாக விளங்குவதில் 25 சதவீதம் குறைவாக இருந்தது. நீங்கள் 25% எடுத்து பாஸ் செய்து விட்டீர்கள் ஆனால் சமமாக விளங்குவதில் 25% குறைவாக இருந்தது. சிலரிடத்தில் ஒரு சக்தி குறைவாகவும், வேறு சிலரிடத்தில் வேறு ஒரு சக்தி குறைவாகவும் இருந்தது. இந்த 4-சக்திகளும் சரிசமமாக விளங்கும்போது, நீங்கள் சம்பூர்ண ஸ்திதியை அடைந்து விட்டீர்கள் என்பதை உணரலாம். நாங்கள் இந்த நிலையில் சரீரத்தை விட நேரிட்டால்,

எனது முடிவு எவ்வாறு இருக்கும்? இத்தகைய புருஷார்த்திகள் தைரியசாலிகளாகவாவது விளங்குகின்றனர். பாப்தாதாவும் குழந்தைகளுக்கு ஒரு வாக்குறுதி அளித்துள்ளார். அதாவது, தைரியசாலிகளாக விளங்கும் குழந்தைகளுக்கு பாப்தாதா நிச்சயமாக உதவி செய்வார். இப்போது தைரியத்துடன் இருந்து வரும் குழந்தைகள் இறுதி வரை தைரியத்துடன் இருந்து வந்தால், நிச்சயமாக உதவி பெறுவார்கள். மற்ற அனைவரின் நினைவை அகற்றி, ஒரே ஒருவரின் நினைவில் நிலைத்திருக்கும் முயற்சியில் பாப்தாதாவின் உதவியை அடைவதால், அவர்களுக்கு இது இறுதியில், மிகவும் எளிதாக இருக்கும்.

ஸ்காலர்ஷிப் அடைவதற்கு இறுதி வரை தைரியத்தைக் கடைப்பிடித்து வருவதே ஆதாரம் ஆகும். நீங்கள் தைரியத்துடன் இருந்து வரும் காலத்திற்கு ஏற்ப, நெடுங்காலமாக இடைவிடாத நினைவில் இருந்து வரும் காலத்திற்கு நீங்கள் விரைந்து முன்னேறுவீர்கள். இப்போதும்கூட ஏதாவது ஒரு காரணத்தினால், உங்களுடைய தைரியம் குறைந்தால், ஸ்காலர்ஷிப் அடைவது கடினமாகி விடும். நெடுங்காலமாக இடைவிடாத நினைவில் இறுதி வரை இருந்து வந்தால், இறுதியில் உங்களுக்கு பிரத்யேகமான உதவி கிடைக்கும். இதனால்தான், பாபா இறுதி பாடத்தை உறுதியானதாகச் செய்துவருகிறார்.

இப்போது எத்தகைய முடிவு காணப்படுகிறது? சேவையில் இன்சார்ஜ் எவ்வாறு ஆவது என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள் ஆனால் நினைவு என்கிற பேட்டரியை எவ்வாறு சார்ஜ் என்பது பற்றி மிகக் குறைவாகவே அறிந்திருக்கிறீர்கள்! புரிந்ததா? சாகார பிரம்மாவிடமிருந்து நீங்கள் இந்த அனுபவத்தை நீங்கள் அடைந்திருக்கிறீர்கள். சேவை அனைத்திலும் சாகார பிரம்மாவுக்கு மிகுந்த பொறுப்பு இருந்தது. குழந்தைகளுக்கு அவ்வளவு அதிகமான பொறுப்பு இருக்கவில்லை. குழந்தைகளுக்கு சேவையின் பொறுப்பு மட்டுமே இருந்தது ஆனால் சாகார பிரம்மாவுக்கு சகல பொறுப்புகளும் இருந்தன. அவர் சிந்தனைக் கடலாக விளங்கினார். தமது பொறுப்புகளைப் பற்றியே சதா சிந்தித்து வந்தார் ஆனால் அவர் அந்த சிந்தனை அலைகளில் மோதியவாறு இருந்தாரா அல்லது கடலின் அடியில் இருந்தாரா? அலைகளில் திளைத்திருப்பதை குழந்தைகள் அறிந்துள்ளனர் ஆனால் கடலின் அடியில் செல்வதற்குத் தெரியவில்லை. இதற்கு என்ன எனிய வழி? எவ்வாறு ஒரு வினாடியில் ஒலிக்குள்

வருவது? எவ்வாறு மறு வினாடியே மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகி, ஒலிக்கு அப்பால் செல்வது என்பது பற்றி உங்களுக்கு முன்பே கூறப்பட்டுள்ளது. ஒரே வினாடியில் இவ்வாறு ஆவதற்கு நீங்கள் இப்போது பயிற்சி செய்ய வேண்டும். எந்த ஒரு சூழ்நிலையில் நீங்கள் ஆழ்ந்திருந்தாலும், அதற்கிடையில் ஒரு வினாடியை ஒதுக்கி, இந்த பயிற்சியை செய்து வருவதற்கேற்ப, நீங்கள் இதை நடைமுறையில் கொண்டு வர இயலும். இப்போது இப்பயிற்சி குறைவாக இருந்து வருவதால், நடைமுறையில் இந்த ஸ்திதி கண்கூடாகத் தெரிவிப்பதில்லை; ஆனால் சில நேரங்களில், அலைகளில் திளைத்திருப்பதையும், மற்ற சமயங்களில், கடலின் அடியில் நிலைத்திருப்பதையும் நீங்கள் இப்போது பயிற்சி செய்து வர வேண்டும்.

குழந்தைகளிடத்தில் தைரியத்திற்கு ஏற்ப, சகிப்பு சக்தி உள்ளதா என்பதை இன்று பாப்தாதா பிரத்யேகமாக சோதனை செய்து வந்தார். உங்களிடத்தில், தைரிய சக்தி எவ்வளவு உள்ளது மற்றும் சகிப்பு சக்தி எவ்வளவு உள்ளது என்பதை சோதனை செய்தார். நீங்கள் எந்த அளவு உங்களுடைய முயற்சியில் திருப்தியுடனும், தெளிவாகவும் இருக்கிறீர்களோ, அந்த அளவு மற்றவர்கள் உங்கள் முன்னிலையில் தெளிவாகக் காணப்படுவார்கள். இப்போது உங்களுக்கு தேர்வுத் தாளும் வழங்கப்பட்டது, அதன் முடிவும் அறிவிக்கப்பட்டுவிட்டது ஆனால் இப்போது பாண்டவர்களைப் பற்றிய கேள்வியே எஞ்சியுள்ளது. பாப்தாதாவின் முன்னிலையில் முயற்சி செய்து வருபவர்களின் வரிசைகள் எத்தனை உள்ளன? மற்றவர்களைப் பார்க்காமல், உங்களுடைய வரிசையை மட்டுமே பார்க்க வேண்டும். அவ்வாறு நீங்கள் உங்களை மட்டுமே பார்த்து வந்து, நீங்கள் எந்த வரிசையில் இருக்கிறீர்கள் என்பதையே பார்ப்பதில்லையா! தீவிர முயற்சி செய்பவர்களின் வரிசை ஒன்று, இரண்டாவது வரிசை, சாதாரண முயற்சி செய்பவர்களின் வரிசை. மூன்றாவது, குப்தமான (வெளியே தெரியாது) முயற்சி செய்பவர்களின் வரிசை, நான்காவது, மிகக் குறைவான முயற்சி செய்பவர்களின் வரிசை. நீங்கள் இப்போது எந்த வரிசையில் இருக்கிறீர்கள் என்பதைக் கூறுங்கள். எனக்குத் தெரியாது என்று கூறி வரும் காலம் முடிவடைந்து வருகிறது. நாங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான்கள், நாங்கள் அனைத்தையும் அறிந்திருக்கிறோம், சகல சக்திகளும் சரிசமமாகும்போது, நாங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகி

விடுவோம் என்று நீங்கள் கூறும் காலம் மிக விரைவாக நெருங்கி வருகிறது!

இந்த அளவு நம்பிக்கை தந்தையிடம் உங்களுக்கு உள்ளது. உங்களிடத்தில் நிச்சய புத்தி உள்ளது ஆகவே வெற்றியும் நிச்சயம். உங்கள்மீதும், தந்தையின் மீதும் உங்களுக்கு நிச்சயம் உள்ளது. ஆகவே இது வெற்றி என்று கூறப்படுகிறது. நிச்சய புத்தி உடையவரை வெற்றி பின்பற்றி வருகிறது. இத்தகையவர்கள் வெற்றியை நாடிச் செல்வதில்லை ஆனால் வெற்றி இவர்களைத் தேடி வருகிறது! இவர்கள் நாம் வெற்றி அடையவேண்டும் என்கிற எண்ணத்தையும்கூட துறந்து விடுகிறார்கள்!॥ இவ்வாறு அனைத்தையும் மனதளவில் துறந்து விட்ட துறவிகளா நீங்கள்? உறவுகளை மட்டுமே துறந்தவர்களாக இல்லாமல், எண்ணங்களையும் சேர்த்து அனைத்தையும் துறந்து விட்ட துறவிகள் என்பது சம்பூர்ண ஸ்திதி ஆகும். பாப்தாதா எதனைக் காண்கின்றார். வெற்றி நட்சத்திரங்களை! ஆகவே நீங்கள் பாப்தாதாவின் வெற்றி நட்சத்திரங்களின் பட்டியலில் இருக்கிறீர்களா? ஒருவர் பேசுவதை நீங்கள் செவிமடுக்க இயலுமாறு நீங்கள் நெருங்கி வர வேண்டும். பாப்தாதா நிகழ்காலத்தை மட்டுமே காண்பதில்லை; நிகழ்காலத்துடன் எதிர்காலத்தையும் காண்கின்றார்.

**தாய்மார்களுடன் பேசுகையில்: துவக்கத்தில் உங்கள் குழுவில் இருந்தவர்கள் என்ன செய்து வருகின்றனர்?** எதற்காக இந்தக் குழு உருவாக்கப்பட்டது? இந்தக் குழுவில் இருப்பவர்கள் யக்ஞத்தைப் பாதுகாப்பதுடன், தங்களையும் பாதுகாத்து வருகின்றனரா? தங்களைப் பாதுகாத்துக் கொள்பவர்கள், யக்ஞத்தையும் பாதுக்காக்க இயலும். தங்களைப் பாதுகாத்துக் கொள்ள இயலாதவர்கள், யக்ஞத்தையும் பாதுக்காக்க இயலாது. உங்களுடைய குழு என்ன செய்யவேண்டும் என்பதை அறியாவிட்டால், உங்களுடைய தோழரை அழையுங்கள். பாப்தாதாவை நீங்கள் அழைத்தால் அவர் வருவார். பாப்தாதா வருவதற்கு அவகாசம் தேவையில்லை. உங்களுடைய குழுவை நீங்கள் பாதுகாத்து வருகிறீர்களா? பாண்டவர்களின் குழு, சக்திகளின் குழு மற்றும் சேவாதாரிகளின் குழு ஆனால் பாண்டவர்களின் நிலை என்ன? மாதாக்களின் நிலை என்ன? உங்களுடைய தலைமை சேவை நிலையத்தின் தொடர்பில் இருப்பதன் மூலமாக நீங்கள் இக்குழுக்களை

பராமரித்து வர இயலும். இக்குழு இந்த கடமையைச் செய்து வர வேண்டும். இவர்களுடைய கடமையை நினைவுபடுத்துங்கள், இறுதி வரை இக்கடமை இருந்து வரும். இது வெறும் 8-நாட்களுக்கான கடமை அல்ல,

(இக்குழுவின் முடிவு என்ன?) இந்த பட்டியின் முடிவுதான், இக்குழுவின் முடிவும் ஆகும். அதாவது, இந்த 4-சக்திகளும் சரிசமமாக விளங்குவதில், 25% குறைவாக உள்ளது. நல்லது!

நீங்கள் பாஸ் வித் ஹாளர் (மதிப்புடன் தேர்ச்சி பெறுதல்) ஆகி விட்டால், என்ன ஆகும் என்று நீங்கள் கூறமுடியாது. நீங்கள் அனைவரும் அருகாமையில் வந்து விடுவீர்கள். இப்போது நீங்கள் ஒலியை மட்டுமே உருவாக்கியிருக்கிறீர்கள். இன்னும் அறைகூவல் (பேரொலி) விடுக்கவில்லை. இந்த 4-சக்திகளையும் சரிசமமாகச் செய்வதே அதற்கான வழியாகும். சில நேரங்களில், ஒரு சக்தி அதிகமாக உள்ளது, பிற நேரங்களில், வேறு ஒரு சக்தி அதிகமாக உள்ளது; ஆனால் நீங்கள் சேவை செய்யும்போது இந்த 4-சக்திகளும் சரிசமமாக விளங்கும்போதுதான், நீங்கள் அறைகூவல் விடுக்க இயலும். இதில் குறை இருப்பதால்தான், நீங்கள் இப்போது அறைகூவல் விடுக்க இயலுவதில்லை, பாபா குழுவைப் பற்றி குறிப்பிடவில்லை, ஒலி எழுப்பப்பட்டுள்ளது ஆனால் அறைகூவல் விடுக்கப்படவில்லை. நீங்கள் இதுவரை ஒலியை மட்டுமே பரப்பியுள்ளீர்கள். ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்துள்ளவர்களை இதுவரை துயில் எழுப்பவில்லை. அவர்களை உறக்கத்தில் திரும்பிப் படுக்கவே செய்துள்ளீர்கள்!. நீங்கள் ஏன் அறைகூவல் விடுக்க இயலவில்லை? பதில் கூறுங்கள். நீங்கள் எதையும் ஏற்றுக்கொள்ளாதபோதுதான், நீங்கள் அறைகூவல் விடுக்க இயலும். இப்போது ஸ்தூலத்தில் அல்லது சூட்சுமத்தில் பலவற்றை ஏற்றுக்கொள்கிறீர்கள். எந்த சங்கல்பத்தையும் ஏற்றுக் கொள்ளாதபோதுதான், நீங்கள் அறைகூவல் விடுக்க இயலும். இப்போது இதில் கலப்படம் இருக்கிறது, அதனால்தான் இதன் பலனிலும் கலப்படம் காணப்படுகிறது. சென்ற கல்பத்தில் காணப்பட்ட முடிவு இதுவரை காணப்படவில்லை! எது ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள் ஆனால் இப்போது கலப்படமே காணப்படுகிறது. புரிந்ததா!

நான் இத்தகையவன், நான் சிறந்த சேவாதாரி, நான் மகாரதி, நான் இதைச் செய்கிறேன், அதைச் சாதித்துள்ளேன் என்கிற பலவகையான நான் என்கிற உணர்வை அற வே அகற்றிவிடுங்கள். நான் என்பதற்குப் பதிலாக பாபா என்கிற சொல் இருந்தால்தான், நீங்கள் அறைகூவல் விடுக்க இயலும், பரமாத்மாவிடம்தாள் மகத்தான சக்தி உள்ளது. ஆத்மாக்களிடத்தில் சாதாரண சக்திதான் உள்ளது. ஆகவே பாபா என்று கூறும்போது, அந்த மகத்தான சக்தியை அடைவீர்கள். நான் என்று கூறும்போது சாதாரண சக்தியை மட்டுமே நீங்கள் அடைவீர்கள். இதனால் இதன் பலனும் சாதா,ரணமானதாகவே உள்ளது. ஆகவே இப்போது உங்களுடைய பேச்சு மாற வேண்டும். சாகார பிரம்மா அனைத்தையும் நடைமுறையில் செய்து உங்களுக்குக் காட்டியுள்ளார். நான் செய்தேன், நான் சிறப்பாக முரளி படித்தேன் என்று எப்போதாவது கூறினாரா? நான் இந்த சேவை செய்தேன், குழந்தைகளுக்கு இந்த சக்தியை அளித்தேன் என்று கூறினாரா? ஆகவே நீங்கள் இப்போது இவ்வாறு புகழை ஏற்றுக்கொள்வதை நிறுத்தவேண்டும். நீங்கள் அளித்த உறுதிமொழியை இவ்வாறு நிறைவேற்ற வேண்டும். உங்களுக்காக நான் உயிரையும் கொடுப்பேன் என்று பாடுகிறீர்கள், இது நினைவுக்கு வருகிறதா? ஒருவருக்காக உயிரைக் கொடுப்பது என்றால் என்ன? நான் என்கிற உணர்வையும் அழிப்பதுதான் அதன் பொருள் ஆகும். நீங்கள் எதனையும் ஏற்றுக் கொள்ளாவிட்டால்தான் நீங்கள் அறைகூவல் விடுக்க முடியும். கீர்த்தி, அபகீர்த்தி ஏதும் இருக்கக்கூடாது. எனது, உனது என்கிற உணர்வும் இருக்கக்கூடாது. நீங்கள் எதனையும் ஏற்றுக்கொள்ளா விட்டால்தான் நீங்கள் அறைகூவல் விடுக்க முடியும். நீங்கள் உங்களுடைய மனதில் ஒரு எண்ணத்தை உருவாக்கியவுடன் அது பாபாவை உடனடியாக வந்தடைந்து விடுகிறது. அங்கு ஏன் முதலில் செல்கிறது என்பது பரம ரகசியம் ஆகும். அந்த எண்ணம் சிறிது அவகாசத்திற்குப் பிறகே உங்களுடைய மனதை அடைகிறது! அது ஏன் முதலில் பாபாவை சென்றடைகிறது என்றால், நீங்கள் சம்பூர்ண ஸ்திதியை அடையும்போது, இந்த நாடகத்தில் நிச்சயக்கப்பட்டுள்ள அனைத்தும் தெளிவாகும். இதனால்தான், உங்களுடைய எதிர்காலத்தைக் காண்பதற்கு முன்பாகவே, பாபா உங்களுக்கு அனைத்தையும் எடுத்துக் கூறுகிறார். முன்கூட்டியே அந்த எண்ணம் பாபாவை சென்றடைந்த பிறகே, உங்கள் பங்கை நீங்களும் செய்கிறீர்கள், பாபாவும் செய்கின்றார். நீங்கள் இதயப்பூர்வ உரையாடல்

நடத்துகிறீர்கள்; பாப்தாதா உங்களை செவிமடுக்கும் பங்கை நடித்து வருகின்றார். புரிந்ததா?

ஒருவர் தம்மையே சரிவர அறிந்திருக்காவிட்டாலும், பாப்தாதா அவரை நன்கு அறிந்துள்ளார். ஆகவே இப்போது நீங்கள் இந்த 4-சக்திகளையும் சரிசமமாக ஆக்குங்கள், பிறகு நீங்கள் (பிரம்மா) தந்தைக்குச் சமமாக மாறிவிடுவீர்கள். உங்களுடைய சமஸ்காரங்களை தந்தையின் சமஸ்காரங்களைப் போன்றதாக மாற்றிவிட்டால், தந்தைக்கு அருகாமையில் நீங்கள் வந்து விடுவீர்கள். எத்தகைய சுமஸ்காரம்? சாகார பிரம்மாவின் சமஸ்காரம். நீங்கள் அனைத்தையும் கடந்த நிலையில் இருந்து, பற்றற்று சாட்சியாக அனைத்தையும் காணவேண்டும். இவைதான், சம்பூர்ண பிரம்மாவின் சிறப்புகள். உங்களுடைய சமஸ்காரங்களை இவற்றிற்குச் சமமாக மாற்ற வேண்டும். இந்த நற்குணங்களின் மூலமாக நீங்கள் அனைவரின் இதயங்களையும் வெற்றி கொள்ளமுடியும். அனைவரின் இதயத்தையும் சங்கம யுகத்தில் வெல்பவர்தான், சத்யுகத்தில், விஸ்வ மகாராஜா ஆக முடியும். விஸ்வம் (உலகம்) என்றால், அதில் அனைத்தும் அடக்கம். ஆகவே இங்கு நீங்கள் விதையை விதைத்து எதிர்காலத்தில் அதை அறுவடை செய்யவேண்டும். நல்லது! ஓம் சாந்தி.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 05.04.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்து கருத்துகளின் சாரம் -பிந்து!

நீங்கள் முரளியைக் கேட்க விரும்புகிறீர்களா அல்லது சம்பூர்ணம் ஆக விரும்புகிறீர்களா? நீங்கள் சம்பூர்ணம் ஆன பிறகும் செவிமடுக்க வேண்டுமா? முதலில் நீங்கள் செவிமடுக்க வேண்டும், பிறகு நீங்கள் சம்பூர்ணம் ஆக வேண்டும். நீங்கள் பல ஆழ்ந்த கருத்துக்களைக் கேட்டிருக்கிறீர்கள். அவை அனைத்தின் சாரம் என்ன? அவை அனைத்தின் சாராம்சமாவது, பிந்து ஆவதுதான், ஆகவே நீங்கள் பிந்து ஆக வேண்டும். பிந்து என்பது மிகவும் சூட்சுமமானது, இதில் அனைத்துமே அடங்கி விடுகின்றன. இப்போது எத்தகைய முயற்சி செய்யவேண்டும்? இப்போது பிந்து ஆக வேண்டும். விஸ்தாரத்தை சுருக்க அறிந்தவர்கள் பாப்தாதாவுக்குச் சமம் ஆகி விடுகின்றனர். நீங்கள் அனைத்தையும் சுருக்கி, கட்டிவைக்க வேண்டும் என்று உங்களுக்கு ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. கட்டிவைப்பது எவ்வாறு என்பதை அறிந்தவர்களுக்கு, சுருக்கவும் தெரியும். விதையில் எந்த சக்தி உள்ளது? விருட்சத்தின் விஸ்தாரம் அதில் அடங்கியுள்ளது. ஆகவே இப்போது எத்தகைய முயற்சியை நீங்கள் செய்யவேண்டும்? அதாவது, விஸ்தாரத்தை சுருக்கி, விதை ஸ்திதியில் நிலைத்திருக்க வேண்டும். ஆகவே இதனை சோதனை செய்யுங்கள். விரிவாகச் செல்வது மிக எளிது. அவ்வாறே, விஸ்தாரத்தை சுருக்குவதும் எளிதாக உள்ளதா? இக்காலத்தில், விஞ்ஞானிகள் விஸ்தாரத்தை சுருக்குவதற்கு முயற்சி செய்து வருகின்றனர். உங்களிடத்தில் உள்ள அமைதி சக்தியை விஞ்ஞான சக்தி உடையவர்கள் காப்பி அடித்து வருகின்றனர். அமைதி சக்தி அடங்கிய சக்தி சேனை செய்துவரும் முயற்சியைப் போலவே விஞ்ஞான சக்தி உடையவர்களும் முயற்சி செய்து வருகின்றனர். அமைதி சக்தி நிறைந்த சக்தி சேனையினர் முதலில் ஒரு கண்டுபிடிப்பை உருவாக்கிய பிறகு, விஞ்ஞானிகள் அதையே தங்களுக்கு ஏற்ற உருவில் உருவாக்குகின்றனர். அது இங்கு சுத்திகரிக்கப்பட்டு வருவதைப் போன்றே, விஞ்ஞானமும் சுத்தீகரம் ஆகி வருகின்றது. இது வரையில்

அவர்கள் சாதிக்க முடியாது என்று கருதியவற்றையும் இப்போது சாதித்து வருகின்றனர். அவ்வாறே, அசாத்தியமானவை இப்போது, சாத்தியமானவையாகவும், எளிதானவையாகவும் மாறி வருகின்றன. இப்போது, உங்களை மற்ற அனைவருக்கும் அருகாமையில் கொண்டு வருவதற்கான முயற்சியை அவசியம் செய்யவேண்டும். ஒலிக்குள் வருவது எவ்வளவு எளிதாக இருக்கிறதோ, அவ்வளவு எளிதானதாக ஒலிக்கு அப்பால் செல்வதும் இருக்க வேண்டும். இதனையே சம்பூர்ண ஸ்திதிக்கு அருகாமையில் இருக்கும் ஸ்திதி என்கிறோம். இது எத்தகைய குழு? இக்குழுவில் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தனிச் சிறப்பு உள்ளது. இந்த சிறப்பின் காரணமாகவே, இந்த உலகின் சிறப்பான ஆத்மாக்களாகி விட்டீர்கள் நீங்கள். எப்படியிருப்பினும் நீங்கள் விசேஷ ஆத்மாக்கள்தான். இப்போது நீங்கள் என்ன செய்யவேண்டும்? நீங்கள் விசேஷ ஆத்மாக்கள். இப்போது சிரேஷ்ட ஆத்மாக்கள் ஆக வேண்டும். இவ்வாறு சிரேஷ்ட ஆத்மாக்கள் ஆவதற்காக இந்த பட்டியில் நீங்கள் என்ன செய்யவேண்டும்? மற்ற எந்தக் குழுவிலும் காணப்படாத ஒரு விசேஷம் இக்குழுவில் உள்ளது. அது எந்த விசேஷம்? உங்களுடைய விசேஷம் என்ன என்பது தெரியுமா? இக்குழுவில் உள்ள அனைவரின் முயற்சியும் ஒன்று போல இருக்கும் சிறப்பை பாப்தாதா காண்கின்றார். ஏதாவது ஒன்றை நடைமுறையில் கொண்டு வருவதற்கான உற்சாகம் உங்கள் ஒவ்வொருவரின் மனதிலும் உள்ளது. இதனால்தான், வருங்காலத்தில் தேவதை ஆகிறவர்களின் குழு, பாப்தாதாவின் நம்பிக்கையைப் பூர்த்தி செய்பவர்களின் குழு என்கிற பெயரை இக்குழுவிற்கு பாப்தாதா தருகின்றார். இக்குழு உலகிற்கு தமது ஆதி சொரூபத்தைக் காட்ட வல்ல குழு ஆகும். இந்த சேனை யுத்த மைதானத்தில் உள்ளது. நீங்கள் அனைவரும் முதுகு எலும்பு ஆகிறீர்கள். ஆகவே இவர்கள் தான் பாப்தாதாவின் கடமையை சாட்சாத்காரம் செய்யும் கரங்கள் ஆவர். கரங்களில் எத்தகைய ஆபரணங்கள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா? பாப்தாதாவின் கரங்கள் ஆபரணங்களைத் தரித்துள்ளன. இவ்வாறு ஆபரணங்களைக் கொண்டுள்ள கரம் தானா நான் என்று நீங்களே உங்களை கேட்டுக் கொள்ளுங்கள். யுத்த மைதானத்தில் இருக்கும்போது, எத்தகைய அலங்காரங்களை நீங்கள் கொண்டிருக்கிறீகள்? உங்களுடைய ஆபரணங்களை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? ஆகவே ஆபரணங்களைத் தாங்கியுள்ள கரங்கள் நீங்கள். ஆபரணங்களைத் தாங்கி வரும் சக்திகள் பாப்தாதாவை சாட்சாத்காரம்

செய்வார்கள். சக்திகளின் கரங்கள் ஒருபோதும் வெறுமையாக காட்டப்படுவதில்லை. நிரந்தரமாக இந்த ஆபரணங்களை உடன் கொண்டிருந்தால் தான் நீங்கள் அறைகூவல் விடமுடியும். ஆகவே பாப்தாதா இன்று எதனைப் பார்த்து வருகின்றார்? ஆபரணங்களை மற்றும் ஒவ்வொரு கரத்தின் வேகத்தையும் பார்க்கின்றார். இந்த பட்டியில் இக்குழு எதனைச் செய்யவேண்டும்? சக்திகளின் முக்கியமான விசேஷம் என்ன? அச்சமின்றி இருப்பதற்கும், ஒரே வினாடியில், விஸ்தாரத்தை சுருக்கி, சக்தி அடைவதற்கும், இக்குழு யுக்திகளை கற்றுக் கொள்ளவேண்டும். ஒற்றுமை, ஸ்திரத்தன்மை; எவ்வாறு பல வகைப்பட்ட சமஸ்காரங்களை, ஒரே ஒரு பரிசுத்தமான சமஸ்காரமாக மாற்றுவது என்பதையும் இந்த பட்டியில் அறிய வேண்டும். எந்த ஒன்றிலும் குறைவான நேரத்தையே செலவழிக்க வேண்டும். குறைவாகவே பேசவேண்டும். அத்துடன், அதிகமான வெற்றியும் இருக்க வேண்டும். இதற்கான வழியையும் நீங்கள் கற்க வேண்டும். ஒன்றை செவிமடுத்து அதன் சொரூபம் ஆக வேண்டும். மிக அதிகமாக செவிமடுத்து, மிக்க குறைவாக அதன் சொரூபமாக ஆவது என்பது சரியல்ல. நீங்கள் செவிமடுத்துக் கொண்டிருக்கும் போதே, அதன் சொரூபம் ஆக வேண்டும். இப்போது பேசும் மூர்த்தியாகாமல், சாட்சாத்கார மூர்த்தி ஆக வேண்டும். உங்களைக் காணும் எந்த ஒருவரும் உங்களை, சகல அலங்காரங்களையும் தரித்துள்ள சூட்சும ஃபரிஸ்தாவாகக் காணவேண்டும். உங்களுக்கு புத்தி கூர்மை உள்ளது. ஆகவே இப்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்? இப்போது ஞானத்தின் சாரத்திற்குள் இருக்க வேண்டும். சாராம்சத்தில் உங்களுடைய புத்தியை செலுத்த வேண்டும். இப்போது, நீங்கள் பாப்தாதாவின் நம்பிக்கையை நடைமுறையில் பூர்த்திசெய்து காட்ட வேண்டும். சாரம் என்ன என்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா? ஞானத்தின் முக்கியமான கருத்துக்களே சாரம் ஆகும். நீங்கள் இந்த அத்தியாவசியமான முக்கியமான கருத்துக்களை தாரணை செய்தால், உங்களுடைய சகல தேவைகளும் பூர்த்தி ஆகி விடும் இப்போது ஏதாவது ஒரிரண்டு தேவைகள் பூர்த்தியாகாமல் உள்ளன; ஆனால் இந்த தேவைகளை நிரந்தரமாக பூர்த்தி செய்துகொள்ள, மேற்கூறிய இரு முக்கியமான கருத்துக்களை நீங்கள் தாரணை செய்யவேண்டும். அதாவது, சகல அலங்காரங்களையும் தரித்துள்ள சூட்சும ஃபரிஸ்தாவாக நீங்கள் விளங்க வேண்டும். சகல அலங்காரங்களையும் தரித்துள்ள சூட்சும

## 1970 அவ்யக்த முரளி

ஃபரிஸ்தாவாக நீங்கள் விளங்க, நீங்கள் ஒரு சொல்லை தாரணை செய்தால் போதும். அது எந்த சொல் லைட்! லைட் என்பதன் பொருள், 1 ஜோதி. 2. சரளத்தன்மை. ஆக ஜோதி மற்றும் சரளத்தன்மை; சகல அலங்காரங்களையும் தரித்துள்ள சூட்சும ஃபரிஸ்தா; ஜோதி சொரூபம். ஒரு புறம் தீவிரமாக எரிந்து வரும் அக்னி, மறுபுறம் சரளத்தன்மை மற்றும் சூட்சுமம். ஆக லைட் என்கிற ஒரு சொல் இரண்டையும் குறிக்கிறது, உங்களுடைய கடமை இதில் அடங்கி விடுகிறது. உங்களுடைய கடமை என்ன? லைட் ஹவுஸ் ஆவது. லைட் என்பதில் உங்களுடைய சொரூபமும் அடங்கி விடுகிறது. உங்களுடைய கடமையும் இதில் அடங்கி விடுகிறது.

முதலில் உங்களுடைய சொரூபமான பிந்து அதாவது திலகம், பிறகு வருங்காலத்தின் ராஜ திலகம், இந்த இரண்டையும் உங்களுக்கு நினைவூட்ட, திலகம் அணிவிக்கப்படுகிறது. இந்த அடையாளத்தைப் பார்க்கும்போது உங்களுக்கு போதை ஏற்பட வேண்டும், நீங்கள் சதா காலத்திற்கும் போதையுடன் இருந்து வர வேண்டும் என்பதற்காக இந்த சின்னங்கள் அளிக்கப்படுகின்றன. மேஜிக் நிபுணர்கள் என்ன செய்கின்றனர்? ஒரு பெரிய பொருளை மிகச் சிறிய பேழையில் நிறைத்து உங்களை திகைக்க வைக்கின்றனர். உண்மையில் அது ஒரு பெரிய பேழைதான். அது ஒரு மேஜிக். அவ்வாறே, நீங்களும், விஸ்தாரத்தை, சுருக்குவதற்கு கற்க வேண்டும். நீங்கள் விஸ்தாரத்தில் செல்லும்போது, அதை அங்கேயே அப்போதே சுருக்கத்தில் கொண்டு வர வேண்டும். உங்களுடைய புத்தி விஸ்தாரத்தில் செல்வதை நீங்கள் காணும்போது, நீங்கள் என்ன செய்ய வேண்டும்? நான் இவை அனைத்தையும் சுருக்க முடிகிறதா? என்று சோதனை செய்யவேண்டும். அப்போதுதான் நீங்கள் பாப்சமான் ஆக முடியும். இத்தகைய மேஜிக்கை நீங்கள் செய்து காட்ட வேண்டும். அச்சா! பாப்தாதா டீச்சர்களை சந்திக்கும்போது, திலகம் ஏன் இடப்படுகிறது? நெற்றியில் திலகம் இடப்படுவதைப் போன்றே, பிந்து சொரூபம் ஆவதும் ஒரு திலகம் தான். இது நிரந்தரமாக இடப்பட்டிருக்க வேண்டும். இரண்டாவதாக, வருங்காலத்தின் ராஜதிலகமும் ஒரு திலகம்தான். இந்த இரண்டும் உங்களுடைய உணர்வில் இருக்க வேண்டும். இந்த சின்னம் சதா காலத்திற்காகவும் அளிக்கப்படுகிறது. பிந்து பற்றி கூறப்பட்டது, அவ்வாறே, இந்த திலகமும் பிந்து தான்.

மூட்டை கட்டி சுருக்க உங்களுக்குத் தெரியுமா? மூட்டை கட்டி சுருக்குவது ஒரு மேஜிக்! மேஜிக் நிபுணர், சிலவற்றை மூட்டை கட்டுகின்றார்; சிலவற்றை சுருக்குகின்றார். மிகப் பெரிய ஒன்றை மிகச் சிறிய ஒரு பேழையில் அடக்கிக் காட்டுகின்றார்! நீங்கள் இந்த மேஜிக்கை கற்க வேண்டும். இதைப் பயிற்சி செய்ய வேண்டும். விஸ்தாரத்தில் செல்லும்போது, அதை அப்போதே சுருக்க வேண்டும், உங்களுடைய புத்தி விஸ்தாரத்தில் செல்வதை நீங்கள் காணும் போது, நீங்கள் உடனடியாக இந்த பயிற்சியை செய்யவேண்டும். என்னால் விஸ்தாரத்தை சுருக்க முடிகிறதா என்று சோதனை செய்யவேண்டும். அப்போதுதான் நீங்கள் பாப்சமான் ஆக முடியும். மேஜிஷியண் (மந்திரவாதி) என்று பாபா போற்றப்படுகிறார்! ஆக குழந்தைகள் எப்படிப்பட்டவர்கள்? சீதள சொரூபம் மற்றும் ஒளி சொரூபம். இந்த இரண்டிலும், நீங்கள் சொரூபமாக நிலைத்திருக்க இயலுகிறதா? ஒரு கணம் சீதள சொரூபம், (லேசுத்தன்மை) மறுகணம் ஒளி சொரூபம். இந்த இரண்டிலும் நீங்கள் எவ்வாறு நிலைத்திருப்பது என்பதை அறியும்போது, நீங்கள் ஒரு நிலையான ஸ்திதியில் இருக்க முடியும். இவை இரண்டுமே சரிசமமாக விளங்க வேண்டும் என்பதே உங்களுடைய இப்போதைய முயற்சி. மலர் ஏன் வழங்கப்படுகிறது? நீங்கள் எண்ணற்ற பிறவிகளாக பூஜித்து வந்ததின் பிரதிபலனாக, பாப்தாதா இந்த ஒரு பிறவியில் உங்களுக்கு மலரை வழங்குகின்றார். பற்றற்று இருப்பவர் மிகவும் நேசிப்படுகிறார். மற்றவர்கள் அனைவரும் உங்களை நேசிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், நீங்கள் சகல விஷயங்களிலும் பற்றற்று இருந்தால், அனைவரும் அந்த அளவு நேசிப்பார்கள். அன்பு இருக்கும் அளவு பற்றற்ற (நியாரா) தன்மையும் இருக்க வேண்டும். இவ்வாறு பற்றற்றும் அன்புடனும் விளங்குபவர் பாப்தாதாவின் உதவியையும் அடைகின்றார். நீங்கள் பற்றற்றும், மற்றவர்களின் மீது அன்புடனும் தொடர்ந்து இருந்து வர வேண்டும். எந்த ஒரு ஆத்மாவாவது உங்கள் மீது அன்பு செலுத்தவில்லை என்றால் பற்றற்ற சமஸ்காரம் உங்களிடத்தில் இல்லை என்று பொருள். நீங்கள் மிகுதியாக பற்றற்றவராக உங்களை உணரும்போது, மற்றவர்களும் உங்கள் மீது மிக அதிகமாக அன்பு செலுத்துவார்கள். நீங்கள் மற்றவர்களின் அன்பை அடைய முயற்சி செய்யவேண்டியதில்லை! பற்றற்றவராக இருந்தால்போதும். பற்றற்று இருப்பதினால் மற்றவர்களின் அன்பு பரிசாகிறது. இப்பரிசு இக்காலத்திற்கே ஆனதாகும். அனைவரும் பாபாவின் மீது அன்பு

செலுத்துவதைப் போன்றே. உலகின் சகல ஆதமாக்களும் குழந்தைகள் உங்கள் மீது அன்பு செலுத்தவேண்டும். இதற்கு எந்த முயற்சி செய்யவேண்டும் என்பது உங்களுக்கு ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. பற்றற்று இருப்பது. இந்த உலகில் ஒப்பற்றவராக விளங்குவதற்காகவும், இந்த உலகே உங்கள் மீது அன்பு செலுத்துவதற்காகவும் இந்த் திலகம் வழங்கப்படுகிறது. இக்குழு மலர்ச்சியுடனும் இருக்கிறது. இந்த மலர்ச்சியுடன் எதனை சேர்க்க வேண்டும்? வசீகர மூர்த்தியாக நீங்கள் மாறுவதற்கு என்ன வழி? உங்களுடைய புத்தி எதனாலும் வசீகரிக்கப்படாமல், அப்பால் இருந்தால், நீங்கள் வசீகரமூர்த்தி ஆவீர்கள். உங்களுடைய புத்தி ஏதாவது ஒன்றினால் வசீகரிக்கப்பட்டால், நீங்கள் பிறரை வசீகரிக்க முடியாது. வசீகரமூர்த்தி ஆகிறவர் சூட்சும பரிஸ்தா ஆகின்றார். சூட்சுமமாக இருப்பினும், பாபா வசீகர மூர்த்தியாகத் திகழ்கின்றார். எந்த அளவு நீங்கள் சூட்சுமமாக இருக்கிறீர்களோ, அந்த அளவு நீங்கள் வசீகரிக்க இயலும். மனிதர்கள் இந்த பூமிக்கு அப்பால் விண்வெளியில் செல்லும் போது, இந்த உலகின் புவிஈர்ப்புக்கு அப்பால் செல்கின்றனர். ஆகவே, இந்த பழைய உலகின் ஈர்ப்புக்கு அப்பால் நீங்கள் செல்லும்போது, உங்களை அறியாமலேயே, நீங்கள் வசீகரமூர்த்தி ஆகி விடுகிறீர்கள். நீங்கள் சாகாரத்தில் இருக்கும்போதும், மற்ற அனைவரையும் சூட்சுமமான ஆத்மா என்றே காணவேண்டும். சேவையின் மூலமாக நீங்கள் மிகுதியான சக்தியை அடைகிறீர்கள். ஒன்று, உங்களுடைய சுய முயற்சியின் மூலமாக அடையும் சக்தி. மற்றொன்று, மற்றவர்களுக்கு சேவை செய்வதன் மூலமாக அடையும் சக்தி. ஆக நீங்கள் இந்த இரு சக்திகளையும் அடைகிறீர்கள். நீங்கள் எவ்வாறு பாபாவின் அன்பை அடைய முடியும்? உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் எந்த அளவுக்கு பாபாவின் காரியத்தில் சகயோகி ஆகிறீர்களோ, அந்த அளவு பாபாவின் அன்பை அடைகிறீர்கள். இந்த அனுபவம் உங்களுக்கு இருக்கிறதா? தேவைக்கு அதிகமாக நீங்கள் சகயோகம் அளிக்கும்போது, அந்த நாளில், மிகவும் அதிகமான பாபாவின் அன்பை, நீங்கள் அனுபவம் செய்கிறீர்கள்! ஆகவே சதா சகயோகியாக விளங்கி வந்து, சதா பாபாவின் அன்பை அடைந்து வாருங்கள்.

எவ்வாறு மரியாதையை அடைய முடியும்? எந்த அளவு பணிவுடன் அடக்கத்துடன் இருக்கிறீர்களோ, அந்த அளவு மரியாதயையும் அடைவீர்கள். எந்த அளவு பாப்தாதாவுக்கு சமமாக மாறுகிறிர்களனோ

அந்த அளவுக்கு மரியாதை உங்களுக்கு கிடைக்கும். நீங்கள் பணிவுடன் இருக்க வேண்டும்; பாப்தாதாவுக்கு சமமாக மாற வேண்டும். இதற்கு முயற்சி செய்யவேண்டும். உங்களுடைய பணிவில் மற்றும் பாப்தாதாவுக்கு சமமாக விளங்குவதில் எந்தக் குறையும் இருக்கக்கூடாது. அப்போதுதான் நீங்கள் அடையும் மரியாதையிலும் எந்தக் குறையும் இருக்காது. பாப்தாதாவுக்கு சமமாக மாறுவதிலிருந்து உங்களுடைய மரியாதையின் அளவை அறியலாம். உங்கள் மூலமாக பாப்தாதாவை சாட்சாத்காரம் செய்விப்பதற்காக நீங்கள் எவ்வாறு மாற வேண்டும்? எந்த ஒன்றையும் எவ்வாறு நீங்கள் சாட்சாத்காரம் செய்விக்க முடியும்? நிலைக்கண்ணாடியின் மூலமாக! ஆகவே நீங்கள் நிலைக் கண்ணாடி போன்று உங்களை மாற்றிக் கொள்ளவேண்டும். நீங்கள் முழுமையாக உங்களை அர்ப்பணித்துக் கொண்டால்தான் நீங்கள் நிலைக்கண்ணாடியாக மாற முடியும். முழுமையான சமர்ப்பணம் என்பது மிகவும் சிரேஷ்டமான நிலைக்கண்ணாடி. இதன்மூலமாக உங்களுக்கு தெளிவான சாட்சாத்காரம் கிடைக்கும். நீங்கள் ஏதோ ஓரளவே சமர்ப்பணம் செய்துகொண்டால், அந்த அளவு உங்களுடைய இந்த நிலைக்கண்ணாடியும் விளங்கும். சம்பூர்ண சமர்ப்பணம் என்றால், நான் என்கிற உங்களுடைய உணர்வையே அர்ப்பணம் செய்வதாகும். உங்களை நீங்கள் எவ்வாறு கருத வேண்டும்? குமாரிகளின் முக்கியமான கடமையாவது: அவர்களின் சொற்களின் மூலமாக மட்டுமல்லாது, தங்களின் முகத்தின் மூலமாகவும், பாப்தாதாவை சாட்சாத்காரம் செய்விப்பதாகும். சாகார பாபாவிடம் காணப்பட்ட சிறப்புகளை உங்களிடத்தில் கொண்டு வர வேண்டும். இது ஒரு விசேஷமான குழு! நீங்கள் அர்ஜுனன் போன்று அனைத்திலும் முன்னிலையில் நின்று, அல்லாவுக்குச் சமமாக மாற வேண்டும் என்று சாகார பாபா கூறிவந்தார். ஆகவே இக்குழு அல்லாவுக்குச் சமமாக மாற வேண்டும். நீங்கள் அல்லாவுக்கு சமமாக மாறி, அனைவருக்கும் காட்ட வேண்டும். உங்களுடைய நெற்றியில் திலகம் பிரகாசிப்பதைப் போன்று, இந்த உலகத்திலும் நீங்கள் பிரகாசிக்க வேண்டும். இத்தகைய குறிக்கோளுடன் நீங்கள் இருக்க வேண்டும். நீங்கள் சேவையில் சக யோகம் அளிப்பதால், பாப்தாதாவும் உங்கள் மீது அன்பு செலுத்துகின்றார். சகயோகம் மற்றும் அன்புடன் இப்போது, நீங்கள் சக்தி மிக்கவர்கள் ஆக வேண்டும். சக்தி சொரூபம் ஆக வேண்டும். சகல சக்திகளிலும் இக்குழு எந்த ஒரு பிரத்யேகமான சக்தி நிறைந்திருக்க வேண்டும்? சகிப்பு சக்தி! சகிப்பு

சக்தியில் குறை இருந்தால், சம்பூர்ண ஸ்திதியும் குறைவாகவே இருக்கும். ஆகவே இப்போது நீங்கள் இந்த சக்தியை தாரணை செய்து இதன் சொரூபம் ஆக வேண்டும். இவ்வாறு இந்த சக்தியை 'தம்முள் நிறைத்திருப்பவர்கள், அச்சமில்லாதவர்களாகவும். திருப்தியுடனும் விளங்குவார்கள். திருப்தியுடன் விளங்குபவர்கள், மற்றவர்களையும் திருப்தி செய்வதுடன், தாமும் சகல தெய்வீக குணங்களாலும் நிறைந்திருப்பார்கள். சக்தி சொரூபம் ஆவதற்கு ஏற்ப, உங்களுடைய பலவீனங்கள் அகன்றுவிடும். ஆகவே நீங்கள் திரும்பும்போது, சக்தி சொரூபம் ஆக மாறிச் செல்லவேண்டும். நீங்கள் வெறும் பிரம்மா குமாரி அல்ல; பிரம்மா குமாரி என்று உங்களைக் கருதினால், சில நேரங்களில், பலவீனம் ஏற்படும். சக்தி சொரூபம் அழிக்கும் சக்தியுடையது. சக்தி எப்போதும் வெற்றி அடைபவர். சக்திகளின் கழுத்தில் சதா வெற்றி மாலை இருந்து வரும். சக்தி சொரூபம் நீங்கள் என்பதை மறந்து விடும்போது, வெற்றியும் உங்களை விட்டு விலகிச் சென்றுவிடுகிறது. எனவே எப்போதும் உங்களை வெற்றி சொரூபம் என்றே கருதி வர வேண்டும். தந்தையை விட குழந்தைகள் மாயவித்தையில் தேர்ந்தவர்கள்! ஏன் என்றால், குழந்தைகள் தந்தையை தாம் விரும்பும் வண்ணம் மாற்றவல்லவர்கள்! தந்தை தாம் விரும்பும் எதையும் செய்ய வல்லவர் என்று புகழப்படுகிறார்; ஆனால் இறைவனையே தாம் விரும்பும்வண்ணம் மாற்றவல்லவர்கள் எவர்? குழந்தைகள்! சூட்சுமத்தில் இருக்கும் தந்தையை சாகாரத்தில் கொண்டு வருவது ஒரு மேஜிக் என்று கூறப்படுகிறது, சூட்சும ஃபரிஸ்தாவாக மாறும் நாள் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. சூட்சுமமாக உள்ளவரின் உதவியும் உங்களுக்குக் கிடைத்துள்ளது. ஞான சொரூபம் மற்றும் நினைவு சொரூபம் ஆகிய இரண்டிலும் சரிசமமாக நீங்கள் விளங்க வேண்டும். ஞான சொரூபம் ஆக வேண்டும்; நீங்கள் விரும்பும்போது, நினைவு சொரூபம் ஆக வேண்டும். நீங்கள் எந்த அளவு நினைவு சொரூபம் ஆகிறீர்களோ, அந்த அளவு மற்றவர்களையும் பாபாவை நினைவு கூறச் செய்ய இயலும். நீங்கள் நினைவு சொரூபம் ஆகி, மற்றவர்களையும் பாபாவை நினைவு செய்யுமாறு செய்யுங்கள். காலத்திற்காக நான் காத்துக் கொண்டிருக்கின்றேனா அல்லது காலம் எனக்காக காத்துக் கொண்டிருக்கிறதா? நீங்கள் காலத்திற்காக காத்துக் கொண்டிருக்ககூடாது. காலம் எச்சமயத்திலும் அணுகலாம். ஆகவே நீங்கள் எப்போதும் உங்களைத் தயார் நிலையில் வைத்திருக்க

வேண்டும். காத்திருப்பதை விலக்கி, தயாராக இருங்கள். நீங்கள் தயாராகி விட்டால், காத்திருக்க வேண்டி இருக்காது. இதைத் தான் எவர்ரெடி என்கிறோம். சேவையில் மட்டுமல்லாது, முயற்சியிலும் மற்றும் அனைத்திலும் எவரெடியாக இருக்க வேண்டும். உங்களுடைய சமஸ்காரங்களை தந்தைக்குச் சமமாக மாற்றுவதிலும் எவர்ரெடியாக இருக்க வேண்டும்.

உங்களுடைய அன்பு விசேஷமானது. ஆகவே உங்களை விசேஷ ஆத்மாவாக மாற்றுவதற்காக பாபா பல விஷயங்களை எடுத்துரைத்து வருகின்றார். மரத்தில் உள்ள மலர்களும் இலைகளும் எவ்வாறு காணப்படுகின்றன? முதலில் தோன்றியவை பழையவை ஆனால் சமீபத்தில் தோன்றியவை அழகாக உள்ளன. அவ்வாறே, நீங்கள் சற்று தாமதித்து வந்திருந்தபோதிலும், உங்கள் மீது மிகுதியான அன்பு செலுத்தப்படுகிறது. புதிய தளிர்கள் மிருதுவாக இருக்கின்றன. இங்கு மிருதுத்தன்மை எத்தகையது? மிருதுத்தன்மைக்கு ஏற்ப வெப்பமும் உள்ளது. வெறும் மிருதுத்தன்மை மட்டும் இருந்தால் எவராவது உங்களைப் பறித்துசென்று விடுவார். மிருதுவாக இருப்பதுடன் நீங்கள் அதிசயத்தையும் நிகழ்த்திக் காட்ட வேண்டும். இக்குழு அதிசயத்தை காட்டவல்லது, மூத்தவர்கள் கூறும்போது, நீங்கள் அதிசயத்தை காட்ட வேண்டும் என்கிற குறிக்கோளுடன் நீங்கள் இருக்க வேண்டும். அவர்கள் முதியவர்கள் ஆனால் இளைஞர்கள் அல்லாவுக்குச் சமமானவர்கள். உங்களுடைய செயலுக்கு ஏற்ப உங்களுடைய பெயர் அமையும். சிரேஷ்டமான மணி ஆவதற்கு, உங்களுடைய சகல செயல்களையும் சிரேஷ்டமானதாக மாற்ற வேண்டும். உங்களுடைய எண்ணம், சொல், செயலில், சரளத்தன்மை, எளிமை மற்றும் சகிப்புத்தன்மை இருந்தால், உங்களுடைய ஒவ்வொரு செயலும் சிரேஷ்டமானதாக மாறிவிடும். சரளத்தன்மை மற்றும் சகிப்புத்தன்மை ஆகிய இரண்டும் இணைந்திருக்க வேண்டும். சரளத்தன்மை இல்லாமல் சகிப்புத்தன்மை மட்டுமே இருந்தால், அது அறியாமை ஆகும். சரனத்தன்மையுடன் சகிப்புத்தன்மையும் இணைந்திருந்தால், அது சக்தி சொரூபம் ஆகும். சக்திகளிடத்தில், சரளத்தன்மை மற்றும் சகிப்புத்தன்மை ஆகிய இரண்டு நற்குணங்களும் இருக்க வேண்டும். சில நேரங்களில், சகிப்புத்தன்மை மிகுதியாகவும் வேறு சில நேரங்களில், சரளத்தன்மை, மிகுதியாகவும் இப்போது காணப்படுகிறது. இப்போது இந்த இரண்டும் சரிசமமாக

விளங்க வேண்டும். இனிமையும் இருக்க வேண்டும், சக்தியும் இருக்க வேண்டும். சக்திகளின் சித்திரங்களில் எந்த சிறப்பு காட்டப்பட்டுள்ளது? ஜ்வாலை சொரூபத்திற்குச் சமமாக சீதளத்தன்மை சித்தரிக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய தொழில் ஜூவாலை போன்று அழிப்பது; அவர்களுடைய முகம் சீதளமாக இருக்கிறது. இதுதான் இறுதி ஸ்திதி. வஸ்திரத்தை அணிவது மற்றும் நீக்குவது எவ்வளவு எளிதாக உள்ளதோ, அவ்வாறே, எளிதாக உடலை உணர வேண்டும், மறு கணமே அந்த உடலுக்கு அப்பால் செல்லவேண்டும். ஒரு கணம் உடல் என்கிற வஸ்திரத்தை அணியவேண்டும். மறுகணமே அதை அகற்றிவிட வேண்டும். இந்த முக்கியமான பயிற்சியை செய்ய நீங்கள் முயற்சி செய்யவேண்டும் இதில் வெற்றி பெற்றுவிட்டால், நீங்கள் அஷ்ட ரத்தினங்களில் ஒருவராகக் கருதப்படுவீர்கள். புள்ளி வைப்பது மிக எளிது. பிந்து வாக மாறுவது எளிதாக உள்ளதா அல்லது இது புத்தியில் பதியாது அகன்றுவிடுகிறதா? பிராமணர்களுக்கு இடையில் கொடுக்கல், வாங்கல் என்பது என்ன? அன்பை அளித்து, அன்பை அடைவதே ஆகும். அன்பை அளிப்பதன் மூலமாக அன்பைப் பெறுகிறீர்கள். இவ்வாறு அன்பை அடைவதால், தந்தையின் அன்பையும் அடைகிறீர்கள். இவ்வாறு அன்புடையவர்கள் தான் அருகாமையில் வர இயலும். அன்புடையவர்கள் உடல் ரீதியாக தொலைவில் இருந்தாலும், அவர்கள் அன்பின் காரணமாக அருகாமையில்தான் இருக்கின்றனர். பாப்தாதாவுக்கு அருகாமையில் வருவதற்காக, அன்பை அளித்தும் அடைந்தும் வர வேண்டும். இந்த கொடுக்கல் வாங்கலிலேயே நாள் முழுவதையும் நீங்கள் ஈடுபட்டிருக்க வேண்டும். இதுதான் பிராமணர்களின் கடமை மற்றும் குணமும் கூட. அன்பை அடைவதற்கு நீங்கள் என்ன செய்யவேண்டும்? ஒருவர் எந்த அளவுக்கு அசரீரியாக இருக்கின்றாரோ, அந்த அளவுக்கு அன்பையும் அடைவார். ஆகவே அசரீரி என்றால் (பாபாவின்) அன்பை அடையும் வழி ஆகும். ஏன் என்றால், தந்தையும் அசரீரிதான். சரீரத்தில் இருக்கும்போதும், அசரீரியாக விளங்குபவர் அனைவராலும் நேசிக்கப்படுகிறார். ஆகவே நீங்கள் எந்த அளவு அசரீரியாக மாறியிருக்கிறீர்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். இத்தகைய பாக்கியம் உங்களுக்கு கிடைக்கும் என்று கனவிலாவது எண்ணியிருக்கிறீர்களா? எவ்வாறு இந்த பாக்கியம் உங்களுடைய கனவிலும் இல்லாதிருந்ததோ, அவ்வாறே, உங்களுடைய பலவீனங்கள் உங்களுடைய கனவில் கூட தோன்றக் கூடாது. இத்தகைய தீவிர முயற்சி செய்யவேண்டும். அந்த பலவீனங்கள் உங்களுடைய

பழைய பிறவியைச் சேர்ந்தவை; இப்பிறவியில் சகல பலவீனங்களையும் அழிக்க வேண்டும் என்கிற குறிக்கோளுடன் இருங்கள். நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான்களா? சர்வ சக்திவானின் குழந்தைகளும் சர்வ சக்திவான்கள்தான்! நான் இதனைச் செய்ய இயலாது என்று ஒருபோதும் நீங்கள் கூறக்கூடாது. நீங்கள் எதனையும் சாதிக்கலாம். எதுவுமே அசாத்தியம் அல்ல. கடினமானவற்றை எளிதானவையாக நீங்கள் அனுபவம் செய்யவேண்டும். சகல சக்திகளுடனும் இருக்கின்ற மாஸ்டர் சர்வசக்திவான் என்றவாறு நீங்கள் ஆக வேண்டும். ஒரு சக்திகூட குறையக்கூடாது. நீங்கள் தனிமையில் இருக்கும்போது, உங்களுடன் பாபா இருக்கின்றார் என்று எப்போதும் கருதவேண்டும். நீங்கள் எங்காவது தனியாக செல்ல வேண்டியிருந்தால், சிவபாபா உங்களுடன் இருக்கின்றார் என்று கருதினால், நீங்கள் தனியாக இருந்தாலும் தனிமையை அனுபவம் செய்யமாட்டீர்கள். தனிமையில் இருக்கும்போதும் அவருடன் உடன் இருப்பதை பயிற்சி செய்யவேண்டும் நீங்கள் மற்றவர்களுடன் கூட இணைந்து இருக்கும் போதும், நீங்கள் தனிமையில் இருப்பதாக பயிற்சி செய்யவேண்டும், மற்றவர்களுடன் இணைந்து வாழ்ந்து வரும்போதும், தனிமையில் இருக்கும் பயிற்சி செய்ய வேண்டும். இரண்டு பயிற்சிகளும் அவசியம் தேவை. நீங்கள் மற்றவர்களுடன் வாழவேண்டும், தனிமையிலும் வாழவேண்டும். தனியாக இருப்பது என்றால், பற்றற்று இருப்பதாகும். பரிவாரத்தில் இருப்பது என்றால், அன்புடன் இருப்பதாகும். நீங்கள் பற்றற்றும், அன்புடனும் இருக்க வேண்டும். இரண்டையும் பயிற்சி செய்யவேண்டும். பாபா தனிமையாக இருந்தாரா அல்லது அனைவருடனும் சேர்ந்திருந்தாரா? தனியாக இருப்பது என்றால், பாபாவுடன் இருப்பதாகும், மற்ற மனிதர்களின் துணை கிடைக்கும்போது, தனிமையாக இருப்பதை மறந்து விடுகிறீகள். இருப்பினும் நீங்கள் தனிமையில் இருக்கும் போதும், பாபாவின் கூடவே இருக்க வேண்டும்.

எந்த மணி மிக சிரேஷ்டமானது2 நெற்றி மணி. யார் இவ்வாறு ஆக முடியும்? முன் நெற்றியில் வீற்றிருக்கும் ஆத்மா என்று நெடுங்காலமாக கருதி வருபவர்கள் மிகச் சிலரே. முன் நெற்றியில் இருப்பவர்கள் ஒரு சிலரே. இதயத்தில் பலர் உள்ளனர். அனைவருடைய பார்வையும் முதலில் முன் நெற்றியின் மீதே செல்கிறது. ஆகவே நீங்கள் அத்தகைய நெற்றி மணியாக வேண்டும். ஆஸ்தீகர்கள்தான் நெற்றி மணியாக முடியும்.

ஆஸ்தீகர்கள் அனைத்திற்கும் ஆமாம் என்று கூறி வருவார்கள். ஆஸ்தீகர்கள்தான் நெற்றி மணியாக முடியும். எந்த ஒன்றிற்கும் மாட்டேன் என்று கூறக்கூடாது. இத்தகைய சிறப்புடையவர்தான், -நெற்றி மணி ஆகின்றனர்; புகழுக்கும் அருகதை ஆகின்றனர். எவர் பூஜைக்கு உரியவர் ஆகின்றார்? ஒரே சிறப்பின் மூலமாக நீங்கள் இரண்டிற்கும் அருகதை ஆக முடியுமா? அல்லது ஒவ்வொன்றிற்கும் தனித்தனி சிறப்பு தேவையா? பல தேவதைகள் மிகுதியாக புகழப்படுகின்றனர் ஆனால் குறைவாகவே பூஜிக்கவும் படுகின்றனர் ஆனால் சில தேவதைகள் புகழவும் படுகிறார்கள், பூஜிக்கவும் படுகின்றனர். எவருடைய ஸ்திதி உயர்ந்தும் தாழ்ந்தும் மாறி மாறி இருக்கிறதோ, அவர் சாஸ்வதமாக (நிரந்தரமாக) பூஜிக்கப் படுவதில்லை. எவருடைய ஸ்திதி நிலையாக இருக்கிறதோ, அவர் நிரந்தரமாகப் பூஜிக்கப்படுகிறார். நிலையான ஸ்திதி உடையவர் நிரந்தரமாகப் பூஜிக்கப்படுகிறார். பிறகு பார்த்துக் கொள்வோம் என்று தீவிர முயற்சி செய்வர் ஒருபோதும் கூறமாட்டார். இப்போதே செய்வோம் என்பார். பிறகு பார்த்துக் கொள்வோம் என்று கூறுபவர்கள் குறைவாகவே பூஜிக்கப்படுவார். ஆகவே பிறகு பார்த்துக் கொள்வோம் என்று நீங்கள் கூறக்கூடாது. இப்போதே செய்து விடுவோம் என்றே கூற வேண்டும். இத்தகைய ஆத்மாவே, தீவிர முயற்சி செய்பவர் எனப்படுகிறார். வருங்காலத்தில் நீங்கள் சர்வ குண சம்பன்னர் ஆவது நிச்சயம் ஆனால் இப்போது சர்வ சக்திகளாலும் நீங்கள் நிறைந்திருக்க வேண்டும். சர்வ சக்திகளாலும் நீங்கள் எந்தளவு நிறைந்திருக்கிறீர்களோ, அந்த அளவே சர்வ குணங்களாலும் நிறைந்திருப்பீர்கள். எந்த சக்திகளில் நீங்கள் சரிசமமாக விளங்க வேண்டும்? 1. சினேக சக்தி, 2. சம்பந்தத்தின் சக்தி, 3. சகயோக சக்தி, 4. சகிப்பு சக்தி. இந்த 4-சக்திகளும் சரிசமமாக விளங்க வேண்டும். தைரியம் உயர்ந்ததா அல்லது சகிப்பு சக்தி உயர்ந்ததா? தைரியம் என்றால் தைரியம். தைரியமாய் இருப்பவருக்கு உதவி கிடைக்கும். உதவியை கேட்டுப் பெற முடியாது. தைரியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். சதா தைரியத்துடன் இருந்து வாருங்கள். அப்போதுதான், பாப்தாதாவிடமிருந்தும் பரிவாரத்திடமிருந்தும் உதவி கிடைக்கும். நீங்கள் அன்பு சொரூபமாகவும், சக்தி சொரூபமாகவும் இருக்க வேண்டும். அன்பு மற்றும் சக்தி ஆக இரண்டுமே அவசியம். சக்தி சொரூபத்தின் மூலமாக நீங்கள் வெற்றி அடைகிறீர்கள். அன்பு சொரூபத்தின் மூலமாக நீங்கள் மற்றவர்களுடன் சம்பந்தம் கொள்கிறீர்கள். சக்தி இல்லையேல், மாயையை நீங்கள் வெல்ல

முடியாது. பாபாவை சர்வ சக்திவான் மற்றும் அன்புக்கடல் என்று போற்றுவதைப் போன்றே, உங்களிடத்திலும் அன்பு மற்றும் சக்தியும் இருக்க வேண்டும். நீங்கள் அனைவரும் அதிர்ஷ்ட நட்சத்திரங்கள் ஆனால் இப்போது உங்களை வெற்றி நட்சத்திரங்களாகக் கருதவேண்டும். தாற்காலிக பலனை அடையும் ஆசை இல்லாதவரே வெற்றி பெறுவார் நல்லது! ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 14.05.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சமர்ப்பணத்தின் ஆழமான பொருள்!

சூட்சுமவதனத்திலிருந்து ஒரு பரிசை பாபா கொண்டு வந்திருக்கின்றார். எந்தப் பரிசை நான் கொண்டு வந்திருக்கின்றேன் என்பதை சொல்லுங்கள் பார்க்கலாம்! அவ்யக்த உருவில், பரிசும் அவ்யக்க மாகவே இருக்கும். சூட்சும வதனத்திவிருந்து நான் ஒரு நிலைக்கண்ணாடியை இன்று கொண்டு வந்திருக்கிறேன். நிலைக்கண்ணாடியை ஏன் பாபா கொண்டு வந்திருக்கிறார்? எத்தகைய முக்கிய நிகழ்ச்சிக்காக நீங்கள் அனைவரும் இங்கு வந்திருக்கிறீர்கள்? சமர்ப்பணம் ஆக வந்திருக்கிறீர்களா அல்லது நீங்கள் சம்பூர்ணம் ஆவதற்காக வந்திருக்கிறீர்களா? பாபா, சமர்ப்பணம் ஆகப்போகிறவர்களின் முகத்தைப் பார்க்கவும், மற்றவர்களுக்கு காட்டவும் தான் சூட்சும வதனத்திலிருந்து ஒரு நிலைக்கண்ணாடியை இன்று கொண்டு வந்திருக்கிறார். நீங்கள் ஏற்கனவே சமர்ப்பணம் ஆகி விட்டீர்களா? நீங்கள் அனைவருமே சமர்ப்பணம் ஆகி விட்டீர்களா? நாங்கள் ஏற்கனவே சமர்ப்பணம் ஆகி விட்டோம் என்று இக்குழுவில் கருதுபவர்கள் யார்? சமர்ப்பணம் என்றால் என்ன? உங்களுடைய உடல் உணர்வை சமர்ப்பணம் செய்து விட்டீர்களா? ஆமாம் அல்லது இல்லை என்று பதிலளியுங்கள். உங்களுடைய உடல் உணர்வை சம்பூரணமாக (முழுமை) சமர்ப்பணம் செய்து விட்டீர்களா? இதற்கு ஏன் ஆமாம் என்று நீங்கள் கூறுவதில்லை? உங்களுடைய சமஸ்காரத்தை சமர்ப்பணம் செய்து விட்டீர்களா? (இதற்கு முயற்சி தேவைப்படுகிறது). உங்களுடைய சமஸ்காரத்தை சமர்ப்பிக்கும் விழா எப்போது கொண்டாடுவீர்கள்? குமாரிகளின் சமர்ப்பண விழாவைக் கொண்டாடுவதற்காக நீங்கள் வந்திருக்கிறீர்கள் ஆனால் உங்களுடைய சமஸ்காரத்தை சமர்ப்பிக்கும் விழாவைக் கொண்டாட பாப்தாதா விரும்புகிறார். இதை எப்போது கொண்டாடுவீர்கள்? இதனால்தான் ஒரு நிலைக்கண்ணாடியை கொண்டு வந்திருக்கிறேன் என்று பாபா கூறினார். இந்த நிலைக்கண்ணாடியில் 3-விஷயங்களைப் பார்க்கின்றார்: 1. உங்களுடைய சமஸ்காரத்தின்

சமர்ப்பணம், 2. உங்களுடைய உடல் உணர்வின் சமர்ப்பணம், 3. உங்களுடைய சம்பந்தங்களின் சமர்ப்பணம். உடலை சமர்ப்பணம் செய்வதென்றால் கர்மேந்திரியங்களில் பற்றற்று இருப்பதாகும். நிலைக்கண்ணாடியில் பாபா இந்த மூன்றையும் காண்கின்றார். உங்களுடைய சமஸ்காரத்தின் சமர்ப்பணத்தின் விழாவைக் கொண்டாடும்போது, உங்களுடைய சம்பூர்ண ஸ்திதி சாட்சாத்காரம் ஆகும். வரதட்சணையாக நீங்கள் எதை அடைகிறீர்கள்? நீங்கள் சம்பூர்ண சுமங்கலி என்கிற பாக்கியத்தை அடையும்போது, சிரேஷ்டமான பாக்கியத்தைத் தானாகவே அடைவீர்கள். சம்பூர்ண சுமங்கலி என்கிற பாக்கியம் நிரந்தரமாசு இருந்து வரும்போது, உங்களுடைய பாக்கியமும் சதா காலத்திற்கும் இருந்து வரும். திருமணம் ஒரு பாக்கியம் என்று மனிதர்கள் கருதுகின்றனர். திருமணம் என்கிற பாக்கியம் நிரந்தரமாக இருந்து வருகிறது என்றால், பாக்கியமும் நிரந்தரமாக இருக்கிறது என்று பொருள். திருமண பாக்கியம் அதிகரிப்பதற்கு ஏற்ப சிரேஷ்ட பாக்கியமும் அதிகரிக்கும்.

திருமண பாக்கியத்தின் அடையாளம் பிந்தி, திலகம். சிந்தி (முன் நெற்றிச் சூடி) மற்றும் பிந்தியும் இருக்கும். ஆகவே நிரந்தரமாக சுமங்கலி பாக்கியத்துடன் இருப்பவர்கள், நிரந்தரமாக பிந்து வின் ஸ்மிருதியில் இருந்து வருவார்கள். நீங்கள் நிரந்தரமாக பிந்து ஸ்திதியில் இருந்து வந்தால், சுமங்கலி பாக்கியமும் நிரந்தரமாக இருந்து வரும். சுமங்கலி பாக்கியத்திற்கு ஏற்ப உங்களுடைய பாக்கியமும் உயர்ந்ததாக அமையும். சுமங்கலி பாக்கியம் நிரந்தரமாக இருந்து வருவதற்கு 4-அம்சங்கள் தேவை. எந்த 4-அம்சங்கள்? ஏதாவது ஒன்றையாவது பாபாவிடன் கூறுங்கள்! ஸ்தூல வரதட்சணையை இங்கு கொண்டு வருவதைப் போன்று, எந்த முயற்சி என்கிற வரதட்சணையை நீங்கள் கொண்டு வர வேண்டும்? 1. உங்களுடைய வாழ்க்கையின் குறிக்கோள் உங்களுக்கு முன் சதா இருந்து வர வேண்டும். 2. பாபாவின் ஸ்ரீமத் சதா உங்களுடைய எதிரிலேயே இருந்து வர வேண்டும். 3. பாபாவின் நற்செய்தி. 4. உங்களுடைய சாந்திதாமம் என்கிற வீட்டை முன்னிலையில் வைத்திருக்க வேண்டும். உங்களுடைய வாழ்க்கையின் குறிக்கோள் உங்களுக்கு முன்பு வைத்திருப்பதால், உங்களுடைய முயற்சி தீவிரமாகும். முயற்சி செய்யும்போது, பாபாவின் ஸ்ரீமத்தை உங்களுடைய உணர்வில் வைத்திருந்தால், உங்களுடைய முயற்சி வெற்றி பெறும். அனைவருக்கும்

நீங்கள் பாபாவின் நற்செய்தியை வழங்க வேண்டும். இது சேவை ஆகிறது.

வேறு எதை தற்போது நீங்கள் நினைவு கூர வேண்டும்? உங்களுடைய சொந்த வீடு. நாம் இப்போது வீட்டிற்குத் திரும்ப வேண்டும். வீடு திரும்பும் நேரம் இது, அந்த நேரம் இப்போ நெருங்கி விட்டது. மேற்கூறிய 4-அம்சங்களில் ஒன்று இல்லாவிட்டாலும், அந்த பலவீனம் உங்களை ஒரு சாதாரண முயற்சி செய்பவராகவே ஆக்கி விடும். ஆகவே பலவீனத்தை அகற்ற இந்த 4-அம்சங்களையும் உங்களுடைய முன்னிலையில் வையுங்கள்.

'லா மேகக்கர்' என்கிற புதிய பட்டத்தை பாப்தாதா குழந்தைகளுக்கு வழங்குகின்றார். 'பீஸ் மேக்கர்' என்கிற பட்டத்தை பல மனிதர்கள் வழங்குகின்றனர் ஆனால் இன்று பாப்தாதா உங்களுக்கு 'லா மேக்கர்' என்கிற புதிய பட்டத்தை வழங்குகின்றார். சத்யுகத்தில் இருக்கும் சட்டம் ஒழுங்கை நீங்கள் தான் உருவாக்குகின்றீர்கள். நீங்கள் தான் லா மேக்கர் என்கிற உணர்வு இருந்து வந்தால், எந்த ஒரு அடியை எடுத்துவைக்கும் முன்பும் நன்கு ஆலோசித்தே வைப்பீர்கள். தலைமை நீதிபதி தீர்மானிப்பதே சட்டம் ஆகிறது. ஆகவே இங்கு அமர்ந்திருக்கும் நீங்கள் அனைவருமே லா மேக்கர்! எனவே நீங்கள் எந்த ஒரு தவறான காரியத்தையும் செய்யக்கூடாது. நீங்கள் லா மேக்கர், ஆகவே நீங்கள் எத்தகைய எண்ணங்களை உருவாக்கினாலும், எந்த அடி எடுத்துவைத்தாலும், இந்த முழு உலகினரே உங்களைக் காணும்போது, அவர்கள் உங்களைப் பின்பற்றுவார்கள், உங்களுடைய பிரஜைகள் உங்களைப் பின்பற்றுவார்கள். நீங்கள் அனைவருமே லா மேக்கர் இருப்பினும் இதிலும் வரிசைக்கிரமம் உள்ளது.

இன்று இக்குழுவைப் பார்த்து பாப்தாதா எத்தனை லா மேக்கர் இங்கு உள்ளனர்! என்று வியந்து புன்முறுவல் செய்கின்றார். இவ்வாறு உங்களைக் கருதி நடந்து வருகிறீர்களா? இவ்வளவு பொறுப்பு உங்களுக்கு உள்ளது என்று கருதினால், சிறு சிறு விஷயங்கள் யாவும் மறைந்து விடும். நான் எதனைச் செய்கின்றோனோ, அதனை மற்றவர்களும் பார்த்து அவ்வாறே செய்வார்கள் என்கிற சுலோகமும் உங்களிடத்தில் உள்ளது. இந்த சுலோகம் நினைவில் இருந்தால், எந்த

ஒரு காரியத்தையும் நீங்கள் சரிவர செய்வீர்கள். நீங்கள் தனியாக இருப்பதாகக் கருதாதீர்கள். உங்கள் ஒவ்வொருவருக்கும் பின்னால் ஒரு ராஜ்யமே உள்ளது. அவர்கள் அனைவரும் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆகவே, நீங்கள் செய்யும் காரியங்களை மற்றவர்களும் பார்த்து அவ்வாறே செய்வார்கள் என்பதை சதா நினைவில் வைத்திருங்கள். இதனால், ஒவ்வொருவரின் சமஸ்காரத்தின் சமர்ப்பண விழா வெகு விரைவில் நடைபெறும். மேடையில் இந்த விழாவைக் கொண்டு வர நீங்கள் இப்போது தயார் செய்ய வேண்டும். நல்லது.

**இரு குமாரிகளின் சமர்ப்பண விழா:** இன்று எந்த காரியத்திற்காக அழைத்தீர்கள்? சங்கம யுகத்தில், தாயும் தந்தையும் உங்களை அரியாசனத்தில் அமர்த்துவார்கள். சங்கம யுகத்தில் எத்தகைய ராஜ்யத்தை அடையும் திலகத்தை நீங்கள் அடைகிறீர்கள்? சங்கம யுகத்தின் திலகத்தை அடைந்து விட்டீர்களா? அல்லது இனிமேல் தான் அடையவேண்டுமா? சங்கம யுகத்தின் சிம்மாசனத்தை அடைந்து விட்டீர்களா? சேவையின் பொறுப்பு என்கிற கிரீடம் உள்ளது ஆனால் சிம்மாசனம் எது? சங்கம யுகத்தின் சிம்மாசனத்தை அடைந்த பிறகுதான், சத்யுகத்தின் சிம்மாசனத்தை நீங்கள் அடைய முடியும். சகல ஆபரணங்களாலும் நீங்கள் அலங்கரிக்கப்பட்டிருக்கிறீர்களா அல்லது இப்போதும் அலங்கரிப்பதிலேயே ஈடுபட்டிருக்கிறீர்களா? இப்போது, ஆபரணங்களால், நீங்கள் அலங்கரிக்கப்பட்டிருக்கிறீர்கள். இந்த பழக்க வழக்கங்கள் சங்கம யுகத்தில் தான் ஆரம்பம் ஆகின்றன. ஏனெனில், சங்கம யுகம்தான் விதை விதைக்கும் தருணம் ஆகும். விதை விதைக்க ஒரு காலம் ஒதுக்கப்பட்டுள்ளதைப் போன்றே, சங்கம யுகம் தான் திவ்யமான பழக்க வழக்கங்களை உருவாக்கும் காலம் ஆகும். விதை உருவில் தான் அனைத்தும் விதைக்கப்படுகின்றன. விதையை விதைக்கும் நேரத்தில், நீங்கள் அனைவரும் விதையை விதைக்க உதவ வேண்டும். இன்றைய விழா சாதாரண விழா அல்ல. நீங்கள் லா மேக்கர் என்பது பற்றி ஏற்கனவே கூறியுள்ளோம்.

பழக்க வழக்கங்கங்களுக்கான விதையை விதைக்கும் நாள் இது. இத்தகைய போதை உங்களிடத்தில் இருக்கிறதா? சகல பழக்க வழக்கங்களும் பிராமணர்களால்தான் உருவாக்கப் படுகின்றன.

இத்தகைய மகத்தான (உலக மாற்றம்) காரியத்திற்கு நீங்கள் தான் ஆதாரம். எவ்வளவு நேரத்தில் இந்த உலகத்தை நீங்கள் மாற்றுவீர்கள்? இன்னும் எவ்வளவு நேரந்தில் நீங்கள் இதற்குத் தயார் ஆவீர்கள்? நீங்கள் எப்போதும் எவர் ரெடியாக இருக்கிறீர்களா? எந்த சொரூபத்தில் நீங்கள் உங்களை அனுபவம் செய்துவருகிறீர்கள்? நீங்கள் அனவரும் எந்த சொரூபத்தில் அமர்ந்திருக்கிறிர்கள்? நாளுக்கு ஏற்ப சொரூபம் அமையவேண்டும். சங்கம யுகத்தின் சபை, சத்யுகத்தின் சபையைவிட உயர்ந்தது!

சர்வ ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு நீங்கள் வருகிறீர்களா? அல்லது இந்த குமாரிகளை மட்டுமே பார்த்து வருகிறீர்களா? சங்கம யுகத்தின் ஒவ்வொரு அலங்காரமும், சத்யுகத்தின் அலங்காரத்தைவிட மிக சிரேஷ்டமானதாகும். பாப்தாதா இவ்வாறு அலங்கரிக்கப்பட்டுள்ள மூர்த்திகளைப் பார்த்துவருகின்றார். இங்குள்ள கிரீடத்தை ஒப்பிடும்போது, சத்யுகத்தின் கிரீடம் ஒன்றுமே இல்லை; சங்கம யுகத்தின் கிரீடத்தை நீங்கள் தரித்திருக்கிறீர்கள். இந்த கிரீடமும், சிம்மாசனமும், நிரந்தரமாக இருக்க நீங்கள் எத்தகைய முயற்சி செய்வீர்கள்? இதற்கு 3-அம்சங்களை நீங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும். இந்த சமர்ப்பண விழா மற்றும் முடிசூட்டும் விழாவின் பழக்க வழக்கங்கள் சங்கம யுகத்தில் ஏதாவது முறையில் நடந்து வருகின்றன.

இந்த உலகின் சம்பிரதாயம் என்ன என்பது உங்களுக்கு தெரியுமா? அவர்களிடத்தில் எத்தனை வகையான பழக்கவழக்கங்கள் (திருமணத்திற்கு) உள்ளன? 1. பிராமணர்களின் மூலமாக, 2. நீதி மன்றத்தின் மூலமாக (பதிவுத் திருமணம்). 3. கோவிலில் உள்ள குருக்களின் மூலமாக. இதற்கான விதை ஏதாவது ஒரு வழியில் இங்கு விதைக்கப்படுகிறது. மதுவனம் ஒரு கோவில், சைத்தன்யமான கோவில். ஆத்மா பரமாத்மாவை திருமணம் செய்யும் விழா இந்த கோவிலில் நடைபெறுகிறது. இத்துடன் நீதி மன்றத்தின் சம்பிரதாயமும் இங்குதான் ஆரம்பம் ஆகிறது. நீங்கள் தான் லா மேக்கர் என்று கூறியிருக்கிறோம். உங்கள் முன்னிலையில் அவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்கின்றனர் அல்லவா? ஆகவே இது ஒரு நீதிமன்றம் ஆகி விடுகிறது. இந்த 3-பழக்கங்களும் இந்த சங்கம யுகத்தில் அலௌகீக முறையில் நடைபெறுகின்றன. இவற்றின் நினைவுச்சின்னங்கள் ஸ்தூலத்தில்

பிறகு மற்ற யுகங்களில் தொடர்கின்றன. நல்லது! எந்த 3-அம்சங்களை நீங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும்? 1. உங்களை விஸ்வ கல்யாணகாரிகளாக கருதி நடந்து வர வேண்டும். 2. ஆணவம் இல்லாதிருக்க வேண்டும். 3. உரிமை உடையவர்களாக உங்களைக் கருதவேண்டும். உங்களுடைய உரிமையையும் முன்னிலையில் வைத்திருக்க வேண்டும் மற்றும் பணிவு என்கிற நற்குணத்தையும் முன்னிலையில் வைத்திருக்க வேண்டும். அத்துடன், விஸ்வ கல்யாணம் என்கிற உங்களுடைய கடமையையும் எதிரில் வைத்திருக்க வேண்டும். இந்த மூன்று கருத்துக்களையும் நீங்கள் சதா நினைவில் வைத்திருக்க வேண்டும். மற்ற ஒருவர் உங்களுக்கு அவமரியாதை செய்தாலும், அவருக்கும் நன்மை ஏற்பட வேண்டும் என்கிறவாறே உங்களுடைய திருஷ்டி மற்றும் விருத்தி அமைந்திருக்க வேண்டும். உங்களுக்கு உரிமை உள்ளது என்கிற உணர்வுடன் நடந்து வரும் போதும் பணிவுடன் இருக்க வேண்டும். உங்களுடைய உரிமைக்குச் சரிசமமாக பணிவும் இணைந்திருக்க வேண்டும். அப்போதுதான், இந்த கிரீடமும், சிம்மாசனமும் நிரந்தரமானவையாக இருக்கும். நல்லது.

**கேள்வி: எத்தகைய குழந்தைகளை மாயை ஒருபோதும் துன்புறுத்த இயலாது?**

பதில்: சதா பாபாவுடன் இணைந்துள்ள குழந்தைகளை மாயை ஒருபோதும் துன்புறுத்த இயலாது. நீங்கள் எப்போதும் பாபாவுடன் இணைந்திருந்தால், மாயை உங்களைத் துன்புறுத்த இயலாது. நீங்கள் தனிமைப் படுத்தப்பட்டுவிட்டால், உடன் மாயை உங்களுடன் போர் தொடுக்கும். உங்களைத் தோற்கடிப்பதற்காக மாயை முதலில் பாபாவிடமிருந்து உங்களை விலக்குகிறது. பிறகு உங்கள் மீது போர் தொடுக்கிறது. ஆகவே இப்போது உங்களுக்கு மாயையின் யுக்தி தெரிந்து விட்டது. நீங்கள் புத்திசாலி ஆகி விட்டீர்கள். ஆகவே மாயை இப்போது உங்களை ஏமாற்ற முடியாது.

**கேள்வி: நிலையான ஸ்திதியை அடைவதற்கு எது ஆதாரம்? இவ்வாறு நிலையான ஸ்திதியில் இருந்துவரும் குழந்தைகளின் அடையாளம் என்ன?**

பதில்: நிலையான ஸ்திதிக்கு ஆதாரம் ஒரே ஒரு தந்தையின் நினைவுதான். பலரின் நினைவு இருந்தால், நிலையான ஸ்திதி

இருக்காது. மாறாக மாறி மாறி நிலை மாறிவரும் ஸ்திதிதான் இருக்கும். சர்வ சம்பந்தங்களின் இனிமையின் அனுபவம் மற்றும் அந்த ஒரு பாபாவிடமிருந்து அடைந்துவரும் சர்வ பிராப்திகளின் அனுபவம் இருந்துவரும்போது, புத்தி வேறு ஒரு திசையில் செல்ல முடியாது. பாபா ஒருவரைத் தவிர வேறு ஒருவர் இல்லையென்றால, புத்தி விஷமம் செய்ய இயலாது. இறைவனின் அன்பை அடைந்துள்ளவர்களின் மீது உலகிலுள்ள மற்ற அனைவருமே அன்பு செலுத்துவார்கள். ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 21.05.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## வேறுபாடுகளை அகற்றுவதற்கான வழி!

இன்று, பாப்தாதா ஒவ்வொரு குழந்தையிடத்திலும் இரு அம்சங்களைப் பார்த்துவருகின்றார். பாப்தாதா எந்த இரு அம்சங்களைப் பார்த்துவருகின்றார்? பாப்தாதா உங்களைப் பார்ப்பதை நீங்களும் காணமுடிகிறதா? மற்றவர்களின் எண்ணங்களை, அவர் நேரில் பேசுவதைப் போன்றே நீங்கள் உணரக்கூடிய ஸ்திதி வெகு விரைவில் வரப்போகிறது. மாஸ்டர் ஜானி ஜானன்ஹார் (அனைத்தையும் அறிபவர்) என்கிற பட்டத்தை உங்களுடைய தகுதி மற்றும் சக்திக்கு ஏற்ப நீங்கள் நிச்சயமாக அடைவீர்கள். ஆகவே, இன்று பாப்தாதா எதனைப் பார்த்து வருகின்றார்? முயற்சி செய்து வருபவர்களின் முயற்சியில் எந்த அளவு பாக்கியுள்ளது? இந்த பாக்கியையும் பாபா பார்க்கின்றார். உங்கள் ஒவ்வொருவரின் சக்தியையும் பார்க்கின்றார். இன்னும் பாக்கி எவ்வளவு உள்ளது? சக்தி எவ்வளவு உள்ளது? இரண்டிற்கும் இடையில் தொடர்பு உள்ளது. முயற்சியின் குறைக்கு ஏற்பு சக்தியும் குறைவாக உள்ளது. ஆகவே ஒவ்வொரு புருஷார்த்தியின் சக்தி மற்றும் முயற்சியில் காணப்படும் குறை ஆகிய இரண்டையும் பார்த்து வருகின்றார். சிலர் இலக்கிற்கு அருகாமையில் உள்ளனர். மற்றும் பலர் வெகுதொலைவில் உள்ளனர். இவ்வாறு பலதரப்பட்ட புருஷார்த்திகளின் பலவகையான ஸ்திதியைப் பார்த்து பாப்தாதா என்ன நினைக்கின்றார்? இந்த வித்தியாசத்தைப் பார்த்து பாப்தாதா என்ன நினைக்கின்றார்?

மாஸ்டர் ஞானம் நிறைந்தவர்களாக உங்களைச் செய்வதற்கு பாப்தாதா கற்பித்து வருகின்றார். சாகாரத்தில் நீங்கள் எந்த அளவுக்கு நடைமுறையில் பகவானுக்கு அருகாமையில் இருந்து வருகிறீர்களோ, அந்த அளவு முயற்சி செய்வதிலும் அருகாமையில் இருப்பீர்கள். உங்களுடைய முயற்சி மற்றும் மற்றவர்களின் முயற்சி ஆகியவற்றை நீங்கள் காணும்போது நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? விதை அழியாத

ஒன்று. இந்த சாசுவதமான விதைக்கு பாபாவின் தோழமை என்கிற நீரை அளிக்க வேண்டும் அப்போதுதான் பழம் உற்பத்தி ஆகும். ஆகவே இப்போது நீங்கள் பழ சொரூபத்தைக் காட்ட வேண்டும். விருட்சத்திற்கு போஷாக்கு அளிப்பதன் மூலமாக நல்ல பழங்களை அடையலாம். ஆகவே இந்த ஞானம் என்கிற போஷாக்கு அளிக்கப்பட்டுவருவதால் நீங்கள் இப்போது அதன் பலனாக, பழ சொரூபமாக நீங்கள் மாற வேண்டும். ஆகவே இப்போது காணப்படும் வித்தியாசத்தை எவ்வாறு அகற்றுவீர்கள்? அதற்கு எது சுலபமான வழி? இறுதி வரை இந்த வித்தியாசம் இருந்து வருமா? அல்லது இது மாறி விடுமா? சம்பூர்ண ஸ்திதியை அடைந்த பிறகும், இப்போது புருஷார்த்தத்தில் காணப்படும் வேறுபாடு தெரியுமா?

இப்போது காணப்படும் வேற்றுமையை ஒற்றுமையாக நீங்கள் மாற்ற வேண்டும். ஒற்றுமையை ஏற்படுத்த இப்போது காணப்படும் வேற்றுமையை அகற்ற வேண்டும். வேற்றுமையைப் பார்த்து வரும்போதும், பாப்தாதா ஒற்றுமையையே காண்கின்றார். ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான வழியாவது -ஒரே ஒருவரை மட்டுமே நினைவு செய்வது; அந்த ஒருவரின் பேரிலேயே அனைத்தையும் செய்வது; மற்றும் எக்கானமி. எதில் சிக்கனம் இருக்க வேண்டும்?. எண்ணங்களிலும் சிக்கனம் இருக்க வேண்டும். சிக்கனத்தை சகல விஷயங்களிலும் நீங்கள் கையாண்டால், என்னவாகும்? நான் என்கிற உணர்வு மறைந்து விடும். சகல வேற்றுமைகளும் ஒரே ஒரு பாபா என்பதில் மறைந்து விடும். ஆக, நீங்கள் அந்த ஒருவருடன் கலந்து விடுவதற்கு உங்களுக்கு சக்தி தேவை. புரிந்ததா? இந்த முயற்சியில் மெத்தனம் காணப்பட்டால், இதில் சுறுசுறுப்பை ஏற்படுத்த வேண்டும். எந்த ஒரு சேவையிலும் எனது என்கிற உணர்வு இருக்கக்கூடாது. இது பாபாவுடையது என்கிற உணர்வே இருக்க வேண்டும். அப்போது என்ன ஆகும்? பாபா பாபா என்று நீங்கள் கூறும்போது, மாயை ஓடிவிடும். நான் நான் என்று நீங்கள் கூறும்போது, மாயை உங்களைக் கொன்றுவிடும். உங்களுடைய மொழியை இப்போது மாற்றிக் கொள்ளவேண்டும் என முன்பு ஒரு முறை கூட கூறியுள்னோம். இத்துடன் சிக்கனமும் இருந்தால், வீண் எண்ணங்கள் இருக்காது, வீண் எண்ணங்களால் விளையும் கருத்து வேறுபாடுகளும் இருக்காது. இது தெளிவான விளக்கம்! நல்லது!

இப்போது, இங்குள்ளவர்கள் வீடு திரும்பும் முன்பு என்ன செய்ய வேண்டும்? ஒருவர் ஒரு இடத்தை விட்டுச் செல்லும்போது ஒரு நினைவுச்சின்னத்தை ஏற்படுத்திவிட்டுச் செல்கின்றார். ஆகவே நீங்கள் அனைவரும் ஏதாவது ஒரு சிறப்பான நினைவுச்சின்னத்தை உருவாக்கி விட்டே செல்ல வேண்டும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 28.05.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தாவி முன்னேறிச் செல்வதற்கு ஒளியாக (லேசாக) ஆகுங்கள்!

எந்த மாதிரி சமர்ப்பணம்? சமர்ப்பண விழா இல்லை தானே? இந்த விழாவின் பெயர் என்ன? இது குமாரிகள் தங்களுடைய வாழ்க்கை பற்றிய முடிவெடுப்பதற்கான விழா. இன்னும் நீங்கள் முடிவெடுக்கவில்லை. இனிமேல் தான் எடுக்கப் போகிறீர்கள், நீங்கள் இப்போது ஒப்பந்தம் (agreement) செய்து கொள்ள வேண்டும். பிறகு அதை நடைமுறைப்படுத்துவதில் (engagement) ஈடுபட வேண்டும். அதன் பிறகு சம்பூர்ணமாவதற்கான விழா நடைபெறும். நீங்கள் இப்போது முதல் இருக்கிறீர்கள். இப்போது ஒப்பந்தம் செய்ய வேண்டும். அதற்காக அனைவரும் வந்திருக்கிறீர்கள் இல்லையா? வாழ்க்கையைப் பற்றி ஒரு முடிவெடுப்பதற்காக வந்திருக்கிறீர்களா, இல்லையா? பாப்தாதாவும் ஒவ்வொருவரின் தைரியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார், இப்போது ஏதேனும் ஒரு விஷயத்தில் தைரியம் வைக்கிறீர்கள் என்றால், தைரியத்தோடு கூடவே இன்னொன்றையும் நீங்கள் செய்ய வேண்டும். அநேக விஷயங்கள் எதிர்கொள்வதற்காக வருகின்றன. நீங்கள் தைரியம் வைத்ததுமே மாயா உங்களை எதிர்க்கத் தொடங்கும். ஆகவே எந்த எதிர்ப்பையும் எதிர்கொள்வதற்கு நீங்கள் முன்கூட்டியே தைரியத்தை மேற்கொள்ள வேண்டியதிருக்கும். நீங்கள் அனைவரும் எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்குத் தயாராக இருக்கிறீர்களா? ஏதாவது பரீட்சை எந்த ஒரு வடிவத்தில் உங்கள் முன் வந்தாலும், அதில் (பாஸ்) வெற்றி அடைவதற்காக, தாவிச் செல்லும் (high jump) பயிற்சி உங்களுக்கு இருக்குமானால் எந்த ஒரு பரீட்சையையும் பாஸ் செய்து விடுவீர்கள். ஆக, இது தாவி முன்னேறும் குரூப். தாவி முன்னேறிச் செல்ல முடியும் என்பவர்கள் கை உயர்த்துங்கள். இவர்களோ அனைவரும் தைரியம் வைப்பதில் நம்பர் ஒன்னாக உள்ளனர். தாவிச் சென்று முன்னேறுவது என்றால் என்னவென்று இவர்களுக்குச் சொல்லுங்கள். இவர்களின் முதல் தகுதி (qualification) என்னவாக இருக்கும்? இவர்கள்

உள்ளும் புறமும் லேசான தன்மையை அனுபவம் செய்வார்கள். ஒன்று, உள்ளுக்குள் தங்கள் அவஸ்தாவின் (மனோ நிலையில்) லேசான தன்மை. இன்னொன்று, வெளிப்புறத்தின் லேசான தன்மை. வெளியில் அனைவரின் தொடர்பில் வர வேண்டியுள்ளது. வெளியில் நீங்கள் பிறரது சம்மந்தம்-தொடர்பில் வர வேண்டியதிருக்கும் என்பதால் உள்ளேயும் லேசான தன்மை, வெளியிலும் லேசான தன்மை வேண்டும். லேசான தன்மை இருந்தால் நீங்கள் தாவிச் செல்ல முடியும். இந்த குரூப்பை அந்த அளவுக்கு லேசான தன்மை உள்ளவர்களாக ஆக்க வேண்டும்; அவர்கள் எங்கே சென்றாலும் அனைவரோடும் நல்லிணக்கத்துடன் செல்லக் கூடியவர்களாக ஆக வேண்டும். அந்த அளவு தைரியம் உள்ளதா? இத்தனை குமாரிகள் அனைவரும் சமர்ப்பணமாகி விட்டால் என்னவாகும்?

இந்த பட்டியிலிருந்து வெளிவரும்போது, யார் எப்படி இருந்தாலும், எங்கே இருந்தாலும், சூழ்நிலை எத்தகையதாக இருந்தாலும் அனைத்தையும் எதிர்கொள்ளக் கூடியவர்களாக ஆகியிருக்க வேண்டும். ஏனென்றால், பிரச்சினைகளைத் தீர்ப்பவராகி இங்கிருந்து வெளிப்பட வேண்டும். நீங்களே ஒரு பிரச்சினையாக ஆகி விடக் கூடாது. சிலரோ பிரச்சினைகளைத் தீர்ப்பவராக இருக்கின்றனர். இன்னும் சிலர் தாங்களே பிரச்சினையாக ஆகி விடுகின்றனர். ஆகவே நீங்களே பிரச்சினையாக ஆகி விடாதீர்கள் ஆனால் பிரச்சினையைத் தீர்ப்பவராக ஆக வேண்டும். பிறகு பாப்தாதா இந்த குரூப்பிற்கு என்ன பெயர் வைப்பார்? ஒரு காரியத்தைச் செய்வதற்கு முன்பே உங்களுக்குப் பெயர் தரப்படுகிறது -நீங்கள் பெயருக்குத் தகுந்தவாறு அந்தக் காரியத்தை நிச்சயமாக முடித்துக் காட்டுவீர்கள் என்பதற்காக. அந்த அளவு நம்பிக்கையை நிறைவேற்றுபவர் தானே நீங்கள்? சொல்கின்றனர் இல்லையா -மூத்தவர்கள், மூத்தவர்கள் தாம், சிறியவர்கள் இறை மனம் படைத்தோர் என்று! இந்த குரூப்பும் கூட மிகவும். பிரியமானவர்கள் -பாப்தாதாவின் நம்பிக்கையைப் பூர்த்தி செய்யக் கூடியவர்கள். உங்கள் தைரியத்தைப் பார்த்து பாப்தாதா இந்த குரூப்புக்குப் பெயர் வைக்கிறார் -சூரவீர குருப்! பெயர் எப்படியோ, அதே போல் எப்போதும் ஒவ்வொரு காரியத்தையும் சூரவீரனுக்குச் சமமாகச் செய்ய வேண்டும். ஒருபோதும் கோழையாகி விடக் கூடாது. பலவீனத்தைக் காட்டுபவராக இருக்கக்கூடாது. காளியின் பூஜையைப் பார்த்திருக்கிறீர்களா? காளி சேனை உள்ளது இல்லையா?

அதைப் போல் இந்த குரூப் காளியின் சேனையாக ஆக வேண்டும். ஒவ்வொருவரும் எப்போது காளி ரூபமாக ஆகிறீர்களோ, அப்போது பிரச்னைகளை எதிர்கொள்பவராக ஆவீர்கள். விசேஷமாக, குமாரிகள் சீத்தளா (குளிர்ந்தவர்களாக) இருக்கக் கூடாது. காளி ஆக வேண்டும். சீத்தளாவாகவும் எந்த ரூபத்தில் இருக்க வேண்டும் என்ற அர்த்தத்தையும் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்; ஆனால் சேவையில் இருக்கும்போது, கடமையைச் செய்து முடிக்கும்போது நீங்கள் காளி ரூபத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். காளி ரூபம் இருக்குமானால் ஒருபோதும் யார் மீதும் பலியாக மாட்டீர்கள் ஆனால் அநேகரை உங்கள் மீது பலியாகச் செய்வீர்கள். யார் மீதும் சுயம் பலியாகக் கூடாது ஆனால் அவர்களை உங்கள் முன் சமர்ப்பணமாகுமாறு செய்வது என்றால், நீங்கள் யார் மீது (பாபா) சமர்ப்பணமாகி இருக்கிறீர்களோ, அவருக்கு முன் அவர்களை சமர்ப்பணமாகுமாறு செய்வதாகும். அத்தகைய காளியாக நீங்கள் ஆவீர்களானால் அநேகரின் பிரச்சினைகளுக்கு உங்களால் தீர்வு காண முடியும், மிகவும் கடுமையான (உறுதியான) ரூபம் எடுக்க வேண்டும், அப்போது தான் மாயாவின் எந்த ஒரு தடையும் முன்னால் வருவதற்கான தைரியம் வைக்க முடியாது. குமாரிகள் காளி ரூபத்தை எடுக்கும்போது சேவையில் வெற்றி இருக்கும். ஆகவே இவர்கள் அனைவருக்கும் காளி ஆவதற்கான தகுதிகள் என்னவென்பதைச் சொல்ல வேண்டும். சதா ஏக்ரஸ் ஸ்திதி இருக்க வேண்டும் மற்றும் தடைகளை அழிக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். இதற்காக சதா இரண்டு விஷயங்களைத் தனக்கு முன்னால் வைக்க வேண்டும். எப்படி ஒரு கண்ணில் முக்தி, இன்னொரு கண்ணில் ஜீவன்முக்தியை வைப்பீர்களோ, அது போல் ஒரு பக்கம் அழிவிற்கான முரசை முன்னால் வையுங்கள், இன்னொரு பக்கம் தனது ராஜ்யத்தின் காட்சியை முன்னால் வையுங்கள். இரண்டையும் ஒன்றாக புத்தியில் வையுங்கள் -விநாசமும் ஸ்தாபனையும், வெற்றி முரசின் காட்சியையும். அப்போது எந்த ஒரு தடையையும் சுலபமாகக் கடந்து செல்ல முடியும்.

வேறு எந்த ஒரு குரூப்பும் செய்யாத ஒரு காரியத்தை இந்த குரூப் -நீங்கள் செய்து காட்ட வேண்டும். அற்புதம் செய்து காட்ட வேண்டும். சதா ஒருவருக்கொருவர் உதவி மற்றும் சகயோகம் தருபவராக இருந்தால் வெற்றி நட்சத்திரம் உங்கள் நெற்றியின் மீது ஒளி வீசத் தோன்றும். அன்பும் ஒத்துழைப்பும் கொடுப்பதில் உங்களிடம் எந்த ஒரு குறையும்

இருக்கக் கூடாது. அன்பும் ஒத்துழைப்பும் உங்களிடம் சேர்ந்து வரும்போது சக்தி பிராப்தியாகும். அந்த சக்தி மூலம் பிறகு வெற்றி பெறுவீர்கள் ஆகவே இந்த இரண்டு விஷயங்கள் மீது கவனம் வைக்க வேண்டும். தேவிகள் ஒரு பார்வையிலேயே அசுரர்களை சம்ஹாரம் செய்து விட்டனர் என்று உங்கள் ஜட சித்திரங்கள் (விக்ரகங்கள்) பற்றிய மகிமையின் பாடல் உள்ளது. அது போல் ஒரு விநாடியில் தீய சம்ஸ்காரங்களை அழிக்கும் சம்ஹார மூர்த்தியாக நீங்கள் ஆக வேண்டும். இப்போது இந்த விஷயத்தைப் பார்க்க வேண்டும் -அதாவது எங்கே சம்ஹாரம் செய்ய வேண்டுமோ, அங்கே புதிதாகப் படைத்து விடக் கூடாது மேலும் எங்கே படைப்பைப் படைக்க வேண்டுமோ, அங்கே அழிக்கும் காரியத்தைச் செய்து விடக் கூடாது. எங்கே மாஸ்டர் பிரம்மா ஆக வேண்டுமோ, அங்கே மாஸ்டர் சங்கர் ஆகி விடக் கூடாது. எங்கே மாஸ்டர் பிரம்மா ஆக வேண்டும், எங்கே மாஸ்டர் சங்கர் ஆக வேண்டும் என்ற ஞானம் புத்தியில் இருக்க வேண்டும். படைப்பதற்குப் பதிலாக அழித்து விட்டாலும் தவறாகி விடும். அழிப்பதற்குப் பதிலாகப் படைத்தாலும் தவறாகி விடும். கதை கேட்டிருக்கிறீர்கள் இல்லையா, எப்படி ஒரு தவறான செயல் மூலம் தேளும் கரப்பானும் உருவாயின என்று? ஆக இங்கேயும் அழிப்பதற்குப் பதிலாக தலைகீழான படைப்பைப் படைப்பது என்றால் வீண் சங்கல்பங்கள் என்ற தேள்-கரப்பான் பூச்சிகள் உருவாகி விடும். ஆக, உங்களையும் மற்றவர்களையும் தேன் போல் கொட்டுகிற அந்த மாதிரிப் படைப்புகளைப் படைக்கக் கூடாது. அத்தகைய சிருஷ்டியைப் படைப்பது பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எந்தச் சமயத்தில் எந்தக் காரியம் அவசியமாக உள்ளதோ, அந்தச் சமயம் அந்தக் காரியத்தை மட்டுமே செய்ய வேண்டும். சமயம் முடிந்து போனால் பிறகு சம்பூர்ணமாக ஆக முடியாது. ஆக, இந்த குரூப் மிக-மிக விரைவாக ஒப்பந்தம் (agreement) செய்யவும், அதன் பிறகு அதை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை (engagement) மேற்கொள்ளவும் வேண்டும். சேவாகேந்திரங்களில் தன்னை சேவையில் ஈடுபடுத்திக் கொள்வது தான் நடவடிக்கை (engagement). அதன் பிறகு சேவையில் முழு வெற்றி பெறுவீர்களானால் சம்பூர்ண சம்பன்னமாவதற்கான மூன்றாவது விழாவைக் கொண்டாட வேண்டும், மூன்று விழாக்களையும் மிக விரைவாக நிறைவேற்றிக் காட்ட வேண்டும். சிறியவர்கள் அதிக விரைவாகச் செல்ல முடியும், தேடிக் கண்டெடுக்கப்பட்டவர்களாகவும் செல்லமானவர்களாகவும் சிறியவர்கள் தாம் உள்ளனர் இல்லையா? ஆகவே இந்த குரூப் நடைமுறையில் செய்து

காட்ட வேண்டும். தைரியம் உள்ளது இல்லையா? தைரியத்துடன் கூடவே உற்காசமும் வைக்க வேண்டும். ஒருபோதும் தோல்வியடையக் கூடாது ஆனால் தன்னை மாலையாக்கிக் கொண்டு பாப்தாதாவின் கழுத்தின் மாலையாக ஆகி விட வேண்டும். கழுத்து மாலை ஆகி விட்டீர்களானால் பிறகு ஒருபோதும் தோல்விடைய மாட்டீர்கள். எப்போதாவது தோல்விடைவதற்கான சந்தர்ப்பம் வருமானால் இதை நினைவு வைக்க வேண்டும் -அதாவது நாம் தோல்விடைபவரல்ல ஆனால் பாப்தாதாவின் கழுத்து மாலையாக ஆகிறவர்கள். சின்னச்சின்ன மென்மையான இலைகளைப் பறவைகள் அதிகம் தின்று விடுகின்றன. ஏனென்றால், மென்மையாக இருந்தால் தின்பதற்கு நன்றாக இருக்கும். அதனால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எப்போது உங்களை நீங்களே ஒருவருக்கு முன்னால் அர்ப்பணம் செய்து விட்டீர்களோ, அப்போது வேறு யாருக்கு முன்பாகவும் சங்கல்பத்தில் கூட அர்ப்பணமாகக் கூடாது. சங்கல்பமும் அதிகம் ஏமாற்றக் கூடியது, மிக அன்பான குழந்தைகள் என்றால் என்ன செய்கின்றனர்? கறுப்பு நிறத்தில் பொட்டு வைத்து விடுகின்றனர். ஆகவே இந்த குரூப்புக்கும் திலகமிட வேண்டும். அவர்கள் மீது யாருடைய கண்ணும் பட்டுவிடக் கூடாது என்பதற்காக. திலகத்தின் அர்த்தத்தையோ புரிந்திருக்கிறீர்கள். எப்படி திலகம் நெற்றியில் இடப்படுகிறதோ, அது போல் வெளிவரும் அனைத்து விஷயங்களிலும் உங்களுடைய ஸ்திதியில் நிலைத்திருக்க வேண்டும். அதற்காகத் தான் இந்தத் திலகம். இந்த அனைத்து விஷயங்களும் ஸ்திதியில் நிலைத்து விடுமானால் அப்போது ராஜதிலகம் கிடைத்து விடும். எந்த மாதிரி ஸ்திதி இருக்க வேண்டும்? அதைப் புரிந்திருக்கிறீர்கள் இல்லையா? இந்த குரூப் இந்த சுலோகனை நினைவு வைக்க வேண்டும் -வெற்றி நமது பிறப்புரிமை. தோல்வி அல்ல. வெற்றிக்குத் தான் அலங்காரம் செய்ய வேண்டும். கண்களிலும் சரி, முகத்தின் மூலமும், நெற்றியின் மூலமும் வெற்றியின் சொரூபம் தென்பட வேண்டும். சங்கல்பமும் வெற்றியைப் பற்றியதாக இருக்க வேண்டும். மேலும் என்னென்ன காரியங்கள் உள்ளனவோ, அவையனைத்திலும் வெற்றி இருக்க வேண்டும், வெற்றி தான் பிறப்புரிமையாக இருக்க வேண்டும். இது தான் இந்த குரூப்பின் சுலோகன். பட்டியில் இடப்படுவதால் அனைத்தும் மாறி விடுகின்றன. அனைவரிலும் சிறியவர்கள் இன்னும் ஷோ (சாம்பிள் ஆகி), உதாரணமானவர்களாக உள்ளனர் (பூனம் சகோதரி பாப்தாதாவுக்கு முன்னிலையில் அமர்ந்துள்ளார்). யாரிடம் எந்த ஒரு நம்பிக்கையும்

இல்லையோ, அவர்கள் இன்னும் நம்பிக்கைக்குரியவராகிக் காட்டுகின்றனர். இவர் அற்புதம் செய்து காட்டுவார். பால பவனின் ஒரே ஞாபகார்த்தம். ஞாபகார்த்தத்தை எப்போதும் காட்சிப் பெட்டகத்தில் (ஷோ கேஸ்) வைப்பார்கள். ஆக, தன்னை எப்போதும் ஷோ கேஸில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு சிறு குழந்தை அற்புதம் செய்து காட்டினால் இந்த முழு குரூப்புக்கும் பெயர் கிடைக்கும்.

இப்போது சொல்லப்பட்ட சுலோகனின் பிரகாரம் செய்து காட்ட வேண்டும். சிறியவர்கள் பெரிய காரியத்தைச் செய்து காட்ட வேண்டும். இவர்கள் அனைவரிடம் இருந்தும் ஒப்பந்தம் எழுதி வாங்க வேண்டும் -எந்த ஒரு காரணம் வந்தாலும், எத்தகைய பிரச்சினை வந்தாலும் வேறு யார் மீதும் பலியாக மாட்டோம். உண்மையான பக்கா உறுதிமொழி இல்லையா? எப்படி விதையை விதைத்த பிறகு நீர் ஊற்றப்படுகிறது, அப்போது விருட்ச ரூபத்தில் பலனளிக்கிறது. இதே போல் இவர்கள் உறுதிமொழி கொடுக்கின்றனர் என்றால் பிறகு எந்த மாதிரி நீரை அதற்கு ஊற்ற வேண்டும்? உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு துணையும் வேண்டும். அதனுடன் கூடவே தனது தைரியமும் இருக்க வேண்டும். துணை மற்றும் தைரியம் இரண்டின் ஆதாரத்தில் கடந்து சென்று விடுவீர்கள். அந்த மாதிரி பக்காவாக முத்திரையிட வேண்டும் -பரந்தாமம் வழியாக சொர்க்கத்திற்குச் செல்வது தவிர வேறெங்கும் சென்றுவிடக் கூடாது. எப்படி அரசாங்கத்தில் சீல் (முத்திரை) வைக்கின்றனர் என்றால் அதை யாராலும் திறக்க முடியாது. அது போல் இந்த சர்வ சக்திவான் அரசாங்கத்தின் சீலை ஒவ்வொருவருக்கும் இட வேண்டும். இந்த குரூப்பில் உள்ளவர்களில் யாராவது பலவீனமாகி விட்டால் இவர்கள் அனைவரிடமிருந்தும் கடிதம் வரும். புரிந்ததா? நல்லது.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 29.05.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சமீப ரத்தினங்களின் அடையாளங்கள்!

சமயம் எவ்வளவு சமீபமாகச் சென்றடைந்து கொண்டிருக்கிறது என்ற கணக்கை உங்களால் வெளிக் கொண்டு வர முடியுமா? வருங்கால லட்சணத்துடன் கூடவே சொரூபத்தின் லட்சியமும் கூட முன்னால் உள்ளதா? சமீபத்தின் லட்சணம் என்னவாக இருக்கும்? எப்படி யாராவது சரீரத்தை விடப் போகிறார் என்றால் அநேகருக்குத் தெரிந்து விடுகிறது. நீங்களும் இந்த சரீரம் தனியாகி விட்டது போல அனுபவம் செய்வீர்கள். இதை நாம் தாரணை செய்து நடத்திக் கொண்டிருக்கிறோம். சமீப ரத்தினங்கள் சமீபமாக வருவதற்கான அடையாளம் இதுவாகத் தான் இருக்கும். சதா தன்னுடைய ஆகாரி (ஃபரிஸ்தா) ரூபம் மற்றும் வருங்கால (தேவதா) ரூபத்தை முன்னால் பார்த்துக் கொண்டே இருப்பீர்கள். இது நடைமுறையில் அனுபவமாகும். ஒளியின் ஃபரிஸ்தா சொரூபம் முன்னால் காணப்படும், அதாவது இது போல் ஆக வேண்டும் மற்றும் வருங்கால ரூபமும் தென்படும். இப்போது இதை விட்டோம், அதை எடுத்துக் கொண்டோம்; எப்போது இது போன்ற அனுபவம் ஏற்படுகிறதோ, அப்போது நாம் சம்பூர்ண நிலையின் சமீபமாக இருக்கிறோம் எனப் புரிந்து கொள்ளுங்கள். ஒரு கண்ணில் சம்பூர்ண சொரூபம் மற்றும் இன்னொரு கண்ணில் வருங்கால சொரூபம். இது போல் பிரத்யட்சமாகக் காணப்படும். தன்னுடைய இந்த சொரூபம் பிரத்யட்சமாக இருப்பது போல் அனுபவமாகும். அமர்ந்திருக்கும் போதே இது போல் அனுபவம் செய்வீர்கள், அதாவது நாம் இங்கே இல்லை ஆனால் அந்த சம்பூர்ண சொரூபத்தில் அமர்ந்திருப்பது போல் அனுபவமாகும்.

இந்தப் புருஷார்த்தி சரீரம் முற்றிலும் உள்ளடங்கி விடும். அந்த இரண்டும் வெளிப்படும். ஒரு பக்கம் அவ்யக்த சரீரம், இன்னொரு பக்கம் வருங்கால சரீரம். எப்போது முதலில் நீங்கள் அத்தகைய அனுபவம் செய்கிறீர்களோ, அப்போது மற்றவர்களுக்கும் இது அனுபவமாகும். எப்படி ஒரு ஆடையை விட்டு வேறொரு ஆடை அணிந்து கொள்கிறோமோ, அது போல

அனுபவம் செய்வீர்கள். இது உள்ளடங்கி விடும், அது வெளிப்படும். இது மறந்து கொண்டே போகும். இந்த நிலையில் மனோபலமும் (will power) உள்ளது. எப்படி உயில் எழுதி வைக்கின்றனர் இல்லையா? ஆக, உயில் எழுதிய பிறகு என்னுடையது என்று இருந்த அனைத்தும் முடிந்து விட்டதாக அனுபவமாகும். பொறுப்பு இறங்கி விட்டது. மனோபலம் கூடுகின்ற இதுவும் அனுபவமாகும் -அனைத்தையுமே உயிலெழுதி விட்டோம். சங்கல்பங்களோடு கூடவே அனைத்தும் உயில் ஆகி விட வேண்டும். சரீர உணர்வை விடுவது மற்றும் அப்போதே சங்கல்பங்கள் அனைத்தையும் உயிலாக்கி விடுவது -இது தான் சக்தி. பிறகு சமநிலையின் அனுபவம் ஆகும். சமநிலை மற்றும் சம்பூர்ண நிலை இரண்டும் ஒன்று தான். இப்போது இந்தச் சார்ட் வைக்க வேண்டும். அந்தச் சார்ட்டோ பொதுவானது. இந்த 5-தத்துவங்களின் சரீரம் இருந்த போதும் கூட ஒளி சொரூபத்தின் அனுபவம் செய்வீர்கள். கேட்டீர்கள் இல்லையா, ஒளி என்ற சொல்லின் அர்த்தத்திலும் கூட வேறுபாடு உள்ளது. ஒளி என்றால் லேசான தன்மை என்பதும் உள்ளது மேலும் ஒளி என்றால் ஜோதி என்றும் சொல்லப்படுகிறது. முற்றிலும் லேசான தன்மை, அதாவது ஒளி ரூபமாகிச் சென்று கொண்டிருக்கிறோம், நாமோ நிமித்தமாக இருக்கிறோம். அவ்யக்த ரூபத்திலோ ஒவ்வொரு விஷயத்திலும் உதவி கிடைக்கிறது. நல்லது.

**பார்ட்டிகளுடன்: 1. அனைவரின் புருஷார்த்தம் சரியாகச் சென்று கொண்டிருக்கிறதா?** எந்த நம்பருக்கான லட்சியம் வைத்திருக்கிறீர்கள்? (முதல் நம்பர்) முதல் நம்பரை அடைய என்ன செய்ய வேண்டும் எனத் தெரியுமா? முதல் (first) நம்பர் பெறுவதற்காக விசேஷ விரதம் (fast) வைக்க வேண்டும். 'ஃபாஸ்ட்' என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன. ஒரு 'ஃபாஸ்ட்' விரதம் என்றும் சொல்லப்படுகிறது. ஆக, விசேஷமாக எந்த மாதிரி விரதம் வைக்க வேண்டும்? (தூய்மை). இந்த விரதமோ பொதுவானதாகும். இந்த விரதத்தை அனைவரும் மேற்கொள்கின்றனர். 'ஃபர்ஸ்ட்' வருவதற்காக விசேஷ விரதம் வைக்க வேண்டும் -அதாவது ஒரு பாபாவைத் தவிர வேறு யாரும் இல்லை. ஒவ்வொரு விஷயத்திலும் ஒருவரின் நினைவு மட்டுமே வர வேண்டும். எப்போது இந்த 'ஃபாஸ்ட்' (விரதம்) வைக்கிறீர்களோ, அப்போது 'ஃபர்ஸ்ட்' (முதலில்) வந்து விடுவீர்கள். இரண்டாவது விரைவாகச் செல்வதற்கும் 'ஃபாஸ்ட்' என்று சொல்லப்படுகிறது. அதாவது தீவிரப் புருஷார்த்தம்.

யார் சதா மாயா மீது வெற்றி கொள்கின்றனரோ, அவர்களே மகாரதி எனச் சொல்லப்படுகின்றனர். மாயாவுக்கு சதா காலத்திற்கும் விடை கொடுத்து விட வேண்டும். விக்னங்களை (தடை) அழிப்பதற்கான முழுமையான ஞானம் உள்ளதா? சர்வ சக்திவான் குழந்தைகள் மாஸ்டர் சர்வ சக்திவான் நீங்கள். ஆகவே ஞானத்தின் ஆதாரத்தில் விக்னங்களை அழித்து சதா மூழ்கிய நிலையில் இருக்க வேண்டும். விக்னங்கள் அழியவில்லை என்றால் நிச்சயமாக சக்திகளை அடைவதில் குறைபாடு உள்ளது, ஞானத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் அதை உள்ளே நிறைத்துக் கொள்ளவில்லை. ஞானத்தை நிறைத்துக் கொள்வது என்றால் சொரூபமாக ஆவது. புரிதலோடு கர்மம் செய்யப்படுமானால் அதன் பலனாக வெற்றி அவசியம் வெளிப்படும்.

**2. தீவிரப் புருஷார்த்தியின் லட்சணங்கள் என்னவாக இருக்கும்?**

புரிய வைக்கப்பட்டது இல்லையா, கட்டளைப்படி நடப்பவர் என்று யார் சொல்லப்படுகிறார்? யாருடைய சங்கல்பம் கூட கட்டளையின்படி இல்லாமல் நடைபெறுவதில்லையோ அப்படிப்பட்ட கட்டளைப்படி நடப்பவர் தான் தீவிரப் புருஷார்த்தி எனச் சொல்லப்படுகிறார். சர்வ சக்திவான் தந்தையின் சக்திவான் குழந்தைகள் முன்னால் மாயாவும் கூட தூரத்திலிருந்தே சலாம் வைத்து விடை பெற்றுக் கொள்ளும். வல்லபாச்சாரி எனச் சொல்லப்படுபவர்கள் தங்களின் சீடர்களையும் கூடத் தொடவிட மாட்டார்கள். தொடக் கூடாதவர்கள் தொட்டு விட்டால் குளித்து சுத்தம் செய்து கொள்வார்கள். இங்கேயும் கூட ஞான ஸ்நானம் செய்து அந்த மாதிரி சக்தியை தாரணை செய்யுங்கள் -தொடக் கூடாதவர்கள் பக்கத்திலேயே வரக் கூடாது. மாயா என்பதும் என்ன? தீண்டத்தகாதது! நல்லது.

✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹

# 07.06.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# திவ்ய மூர்த்தி ஆவதற்கான விதி!

கண்கள் மூலமாக எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் அனைவரும் கூட கண்களால் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், பாப்தாதாவும் கண்களை ஆதாரமாக எடுத்துக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதா எதைப் பார்க்கிறார்? நீங்கள் அனைவரும் எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா, அல்லது பார்த்தும் பார்க்காமல் இருக்கிறீர்களா? என்ன ஸ்திதி உள்ளது? பாப்தாதா எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறாரோ, அதையே நீங்களும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? சங்கல்பங்களைக் 'கேச்' (catch) செய்யும் பயிற்சி இருக்குமானால் சங்கல்பங்களில் இருந்து சகஜமாக விடுபட முடியும். எப்போது யாருடைய சங்கல்பத்தையாவது கண்டறிய இயலாமல் போகிறதோ, அப்போது அதிக சங்கல்பங்களை நடத்த வேண்டி உள்ளது; ஆனால் ஒவ்வொருவரின் சங்கல்பங்களை அறிந்து கொள்வதற்கான பயிற்சி இருக்குமானால் வீண் சங்கல்பங்கள் அதிகம் எழாது மேலும் ஒரே சங்கல்பத்தில் ஒரே சீரான ஸ்திதியில் ஒரு விநாடியில் நிலைத்து விடுவீர்கள். ஆக, சங்கல்பங்களை அறிந்து கொள்வதும் கூட சம்பூர்ண நிலையின் ஓர் அடையாளமாகும். எவ்வளவுக்கெவ்வளவு அவ்யக்த உணர்வில் நிலைத்து விடுவீர்களோ, அந்த அளவு ஒவ்வொருவரின் உணர்வுகளைப் புரிந்து கொள்வீர்கள். ஒருவர் மற்றவரின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாததற்கான காரணம் அவ்யக்த உணர்வின் குறைபாடு தான். அவ்யக்த ஸ்திதி என்பது ஒரு கண்ணாடி. எப்போது நீங்கள் அவ்யக்த ஸ்திதியில் நிலைத்திருக்கிறீர்களோ, அப்போது எந்த ஒரு மனிதரின் உணர்வும் அவ்யக்த ஸ்திதி என்ற கண்ணாடியில் முற்றிலும் தெளிவாகத் தென்படும். பிறகு முயற்சி செய்ய வேண்டியது இருக்காது. யாருடைய உணர்வையும் புரிந்து கொள்வதற்கு என்று கண்ணாடி முயற்சி செய்ய வேண்டியது இருக்காது. எவ்வளவுக்கெவ்வளவு அவ்யக்த ஸ்திதி உள்ளதோ, அந்தக் கண்ணாடி சுத்தமாகவும் சக்திசாலியாகவும் இருக்கும்.

இவ்வளவு மிகச் சுலபமாக ஒருவர் மற்றவரின் உணர்வுகளைத் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள். அவ்யக்த ஸ்திதி என்ற கண்ணாடியை சுத்தமானதாக, தெளிவானதாக ஆக்குவதற்கு மூன்று விஷயங்கள் அவசியம். அந்த மூன்று விஷயங்களில் ஏதேனும் ஒரு விஷயத்தையாவது சொல்லுங்கள். (ஒவ்வொருவரும் சொன்னார்கள்). இன்று ஒவ்வொருவரின் சரளத்தன்மை, சிரேஷ்டநிலை மற்றும் சகிப்புத்தன்மை. இந்த மூன்றையும் ஒவ்வொருவரிடம் பார்த்துக் கொண்டிருந்தோம். இந்த மூன்று விஷயங்களில் ஏதேனும் ஒன்றாவது சரியானபடி தாரணை ஆகியிருக்குமானால் கண்ணாடி தெனிவாக இருக்கும். ஒரு விஷயத்தின் குறைபாடு இருந்தாலும் கூட கண்ணாடியில குறையின் கறையானது காணப்படும். ஆகவே எந்த ஒரு காரியம் செய்தாலும் ஒவ்வொரு காரியத்திலும் மூன்று விஷயங்களைச் சோதித்துப் பாருங்கள். அனைத்து விதங்களிலும் சரளத் தன்மையும் இருக்க வேண்டும், சகிப்புத் தன்மையும் இருக்க வேண்டும் மற்றும் சிரேஷ்டமானதாவும் இருக்க வேண்டும், சாதாரணத் தன்மை இருக்கக் கூடாது. இப்போது எங்காவது சிரேஷ்ட ஸ்திக்குப் பதிலாக சாதாரணத் தன்மை காணப்படுகிறது, சாதாரணத் தன்மையை சிரேஷ்டமானதாக மாற்றி விடுங்கள் மற்றும் ஒவ்வொரு காரியத்திலும் சகிப்புத் தன்மையை முன்னால் வையுங்கள் மேலும் தனது முகத்தில், பேச்சில் சரளத் தன்மையை தாரணை செய்யுங்கள். பிறகு பாருங்கள், சேவை அல்லது காரியத்தின் வெற்றி எவ்வளவு சிரேஷ்டமாக உள்ளது என்று. இது வரையிலும் காரியத்தின் பலனாக என்ன காணப்படுகிறது? திட்டமிடல் மற்றும் நடைமுறையில் எவ்வளவு வேறுபாடு உள்ளது?

வேறுபாட்டிற்கான காரணம் என்ன? மூன்று ரூபங்களிலும் இப்போது முழுமையாக திட்டமிடப்படவில்லை. நினைவிலும் திட்டம், பேச்சிலும் திட்டம் இருக்க வேண்டும். எங்கேயும் எந்த ஒரு பழைய சம்ஸ்காரத்தின் கறை எதுவும் இருக்கக் கூடாது மேலும் கர்மத்திலும் கூட திட்டம், அதாவது சிரேஷ்டநிலை. திட்டமிடப்பட்டு விட்டால் பிறகு திட்டம் மற்றும் நடைமுறை ஒன்றாகி விடும். பிறகு வெற்றி விமானத்தைப் போல் பறக்கும். எனவே ஒவ்வொரு விஷயத்திலும் மனம், சொல், செயல் மற்றும் சின்ன விஷயங்களிலும் கூட எச்சரிக்கை வேண்டும். மனம், சொல், செயலோ நடக்கவே செய்யும் ஆனால் அதனுடன் கூடவே அலௌகிக சம்மந்தத்திலும் கூட திட்டம் இருக்குமானால் சேவையின் வெற்றி

உங்களனனைவரின் நெற்றி மீது நட்சத்திர வடிவத்தில் ஜொலிக்கும். பிறகு ஒவ்வொருவரும் உங்கள் ஒவ்வொருவரையும் வெற்றி நட்சத்திரமாகப் பார்ப்பார்கள். எந்த சுலோகனை நினைவு வைக்க வேண்டும் எனக் கேட்டீர்கள் இல்லையா? வெற்றி நமது பிறப்புரிமை! பிறகு உங்களை யாராவது பார்த்தால் அவர்களுக்கு தூரத்திலிருந்தே திவ்ய மூர்த்தியாகக் காணப்படுவீர்கள். சாதாரண மூர்த்தி அல்ல ஆனால் திவ்ய மூர்த்தி! தற்போது அதிகமாக சேவையில் பிஸியாக இருக்கிறீர்கள். என்னென்ன செய்தீர்களோ, மிக நன்றாகவே செய்திருக்கிறீர்கள். இனி வரும் காலத்திலும் வெற்றியை சமீபத்தில் கொண்டு வாருங்கள். எவ்வளவுக்கெவ்வளவு ஒருவர் மற்றவருக்கு அருகில் வருவீர்களோ, அந்த அளவு வெற்றியானது அருகில் வரும். ஒருவர் மற்றவருக்கு சமீபம் என்றால் சம்ஸ்காரங்களுக்கு சமீபம். அப்போது எந்த ஒரு மகாநாடும் வெற்றி பெறும். எப்படி சமயம் அருகில் வந்து கொண்டிருக்கிறதோ, அதே போல் அனைவரும் அருகில் வந்து கொண்டிருக்கின்றனர் ஆனால் இப்போது அத்தகைய சமீபத்தில் எதை நிரப்ப வேண்டும்? எவ்வளவு சமீபமோ, அவ்வளவு மற்றவர்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். எவ்வளவு தூரம் பிறருக்கு மதிப்பளிப்பீர்களோ, அவ்வளவு முழு உலகமும் உங்கள் அனைவருக்கும் மதிப்பளிக்கும். மதிப்புக் கொடுப்பதால் மதிப்புக் கிடைக்கும். கொடுப்பதால் கிடைக்குமே அல்லாது பெறுவதால் அல்ல. சில பொருட்கள் பெறுவதால் கிடைக்கும் மற்றும் சில பொருட்கள் கொடுப்பதால் கிடைக்கும். ஆக, யாருக்காவது மதிப்பளிப்பது என்பது அனைவரின் மதிப்பையும் பெறுவதாகும் மேலும் மொழியிலும் மாற்றம் வேண்டும். இன்று சேவாதாரிகள் அனைவரும் அமர்ந்திருக்கிறீர்கள் இல்லையா? அதனால் வருங்காலத்தின் சமிக்ஞை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். யாராவது ஒருவரின் சிந்தனை தெளிவாக இல்லை என்றால், ஒரு போதும் கூடாது-முடியாது என்று சொல்லக்கூடாது. எப்போதுமே சரி, அல்லது ஆம், என்ற சொல்லே வர வேண்டும். இங்கே சரி என்று சொல்வீர்களானால் அங்கே சத்யுகத்திலும் கூட உங்களின் பிரஜைகள் அந்த அளவு சரி, சரி எனச் சொல்வார்கள். இங்கேயே நீங்கள் இல்லை-முடியாது எனச் சொல்வீர்களானால் அங்கேயும் பிரஜைகள் தூரத்திலிருந்தே வணக்கம் சொல்வார்கள். ஆகவே முடியாது என்ற சொல்லை நீக்கி விட வேண்டும்.

எந்த ஒரு பிரச்சினையானாலும் முதலில் சரி, எனச் சொல்லுங்கள். சரி, சரி எனச் சொல்வது தான் மற்றவர்களின் சம்ஸ்காரங்களை சரளமாக்குவதற்கான சாதனமாகும். புரிந்ததா? தற்காலத்தில் எத்தகைய கர்மம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதைக் கேட்டீர்கள். உங்கள் அனைவருடைய இப்போதைய கர்மம் வருங்காலத்திற்கான சட்டமாகும். சட்டத்தை உருவாக்குபவர்கள் யோசித்து உணர்ந்து தங்களின் ஒவ்வொரு சொல்லையும் வெளிப்படுத்துவார்கள். ஏனென்றால் அவர்களின் ஒவ்வொரு சொல்லும் வருங்காலத்திற்கான சட்டமாக ஆகின்றது. அனைவருடைட ஒவ்வொரு சங்கல்பமும் வருங்காலத்திற்கான சட்டமாக உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே எவ்வளவு கவனம் செலுத்த வேண்டும்! இது வரை ஒரு விஷயத்தைப் பிடித்துக் கொள்கின்றனர் என்றால் இன்னொன்று விடுபட்டு விடுகின்றது ஆனால் இரண்டு விஷயங்களுமே நினைவிருக்க வேண்டும். சில சமயம் விதியைப் பிடித்துக் கொள்கின்றனர் என்றால் சட்டத்தை விட்டு விடுகின்றனர். எப்போது சட்டத்தை எடுக்கின்றனரே, அப்போது விதியை விட்டு விடுகின்றனர் ஆனால் சட்டத்தை உருவாக்குபவர் மறந்து போகிறார் என்றால் ஒரு பொருள் விடுபட்டு விடுகிறது. சட்டத்தை உருவாக்குபவரின் நினைவு இருப்பதன் மூலம் விதி (method) மற்றும் சட்டம் (law) இரண்டும் கூடவே இருக்கும்போது வெற்றி உங்கள் கழுத்து மாலையாகி விடும். நல்லது. இன்று அதிக அறிவுரை தரப்பட்டு விட்டது. இது சிநேகம். (அன்பினால் சொல்லப்படுவது). ஏனென்றால், பாப்தாதா குழந்தைகளைத் தமக்கு சமமாக ஆக்க விரும்புகிறார். சமமாக ஆக்குவதற்கான சாதனமாக சிநேகம் தான் ஆகிறது இல்லையா?

குமாரிகள் இப்போது பரீட்சையை எதிர்கொள்ள வேண்டும். சாகஸத்தை (முயற்சி) வெளியே தெளிவாகக் கொண்டு வருவதற்காக சாகஸத்தில் அதிக சக்தியை நிரப்ப வேண்டும். இப்போது எவ்வளவு சக்தியை நிரப்பியிருக்கிறீர்களோ, அதற்கான பரீட்சை வரும்.

**பார்ட்டிகளோடு பாப்தாவின் உரையாடல்: 1. எவ்வளவுக்கெவ்வளவு தன்னை சேவையின் பந்தனத்தில் கட்டிப் போடுகிறீர்களோ, அந்த அளவுக்கு மற்ற பந்தனங்கள் விடுபட்டுக் கொண்டே போகும்!** இந்த பந்தனம் விட்டால் சேவையில் ஈடுபட்டு விடலாம் என்று அந்த மாதிரி நீங்கள் யோசிக்க வேண்டாம். அது போல் நடக்காது. சேவை செய்து

கொண்டே இருங்கள். பந்தனம் இருந்தாலும் தன்னை சேவையின் பந்தனத்தில் இணைத்துக் கொண்டே செல்லுங்கள். இந்த இணைப்பது தான் விடுவதாகும். விட்டதற்குப் பிறகு இணைப்பு நடப்பதில்லை. எவ்வளவு இணைக்கிறீர்களோ, அவ்வளவு தான் விடுபடும். எவ்வளவு தன்னை சேவையில் சகயோகி ஆக்கிக் கொள்வீரகளோ, அவ்வளவு பிரஜைகள் உங்கள் சகயோகி (உதவியாளர்கள்) ஆவார்கள். ஏதேனும் காரணம் இருக்குமானால் அதை லேசாக விட்டுவிட்டு முதலில் சேவையின் வாய்ப்பை முன்னால் வையுங்கள். கடமையை முதலில் வைக்க வேண்டியுள்ளது. காரணங்கள் இருந்து கொண்டே தானிருக்கும் ஆனால் கடமையின் பலத்தினால் காரணங்கள் மந்தமாகி (பலமிழந்து) விடும்.

**2. இப்போது மாதாக்களின் குழு உருவாகியுள்ளது. அதில் இணைந்து கொள்ளுங்கள்.** உறுப்பினராவதன் மூலம் பிறகு அநேகரைத் தங்களுக்குச் சமமாக ஆக்குவதற்கான வாய்ப்பு கிடைக்கும். தொடர்பில் வருவதன் மூலம் தான் வாய்ப்பு கிடைக்கும். இப்போது மாதாக்களின் அமைப்புகளில் உங்களுக்குப் பெயர் வரவில்லை. முதலில் குப்த (மறைவான) வேடத்தில் கால் பதியுங்கள். பிறகு அவர்கள் உங்களுடையவர்களாகி விடுவார்கள். அலைந்து கொண்டிருக்கும் மாதாக்களுக்கு வழி சொல்ல வேண்டும். பிறகு கஷ்டங்களை சகித்துக் கொண்டிருக்கும் மாதாக்கள் பாவம், அவர்களையும் கூட நீங்கள் பாதுகாக்க முடியும். அநேக மாதாக்கள் ஆதரவை விரும்புகின்றனர். அவர்களுக்கு உதவி கிடைத்து விடும். ஆக, இந்த சேவை செய்து அற்புதத்தைச் செய்து காட்டுங்கள். பிறகு பாருங்கள் எவ்வளவு (ஒத்துழைக்கும்) கைகள் கிடைக்கின்றன என்று! நீண்ட காலத்திற்கு இவ்விஷயத்தை நடைமுறையில் கொண்டு வர வேண்டும். எப்படி அவர்கள் அடைக்கலம் தருகின்றனர் இல்லையா? அது அநாதை ஆசிரமம். இதுவோ பிரபுவின் அன்பிற்குரியவர்களின் ஆசிரமம். நல்லது.

**3. அவ்யக்த ஸ்திதியின் அனுபவம் செய்கிறீர்களா?** ஒரு விநாடி கூட அவ்யக்த ஸ்திதியின் அனுபவம் ஏற்படுமானால் அதன் பிரபாவம் அதிக நேரம் வரை இருக்கும். அவ்யக்த ஸ்திதியின் அனுபவம் சக்தி வாய்ந்ததாக இருக்கும். எவ்வளவு முடியுமோ, அவ்வளவு தன்னுடைய சமயத்தை சரீர உணர்விலிருந்து விடுபட்டு அவ்யக்த ஸ்திதியில்

இருப்பதற்காகப் பயன்படுத்த வேண்டும். அவ்யக்த ஸ்திதியினால் அனைத்து சங்கல்பங்களும் ஸித்தியாகும். இதில் முயற்சி குறைவு, பிராப்தி அதிகம். மேலும் வ்யக்த ஸ்திதியில் (சரீர உணர்வு) நிலைத்திருந்து புருஷார்த்தம் செய்வதால் முயற்சி அதிகமாகவும் பிராப்தி குறைவாகவும் இருக்கும். பிறகு போகப்போகக் குழப்பமும் அவநம்பிக்கையும் வந்து விடும். ஆகவே அவய்க்த ஸ்திதி மூலம் அனைத்துப் பிராப்திகளின் அனுபவத்தை அதிகப்படுத்துங்கள். அவ்யக்த மூர்த்தியை முன்னால் பார்த்து அதற்கு சமம் ஆவதற்கான முயற்சி செய்ய வேண்டும். எப்படி தந்தையோ அப்படியே குழந்தைகளும்! இந்த சுலோகனை நினைவில் வையுங்கள், வித்தியாசம் இருக்கக் கூடாது. வித்தியாசத்தை உள்முகநோக்கில் இருப்பதன் மூலம் அகற்றிவிட வேண்டும். தந்தை எப்போதாவது அவநம்பிக்கை கொள்கிறாரா? பரஸ்திதிகளில் பயப்படுகிறாரா? அப்போது குழந்தைகள் ஏன் பயப்படுகிறார்கள்? அதிகம் பரஸ்திதிகளை (பிரச்சனைகள்) எதிர்கொள்வதற்கான உதாரணத்தை சாகார் பிரம்மாபாபாவிடம் பார்த்தீர்கள். எப்போதாவது அவருடைய மனம் கலங்கிய ரூபத்தைப் பார்த்திருக்கிறீர்களா? கேட்டீர்கள் இல்லையா -சதா இதை நினைவில் வையுங்கள், அதாவது அன்பில் சம்பூர்ணமாக வேண்டும். எந்த ஒரு கஷ்டமும் இல்லை. சிநேகிக்குத் தன் உணர்வு இருக்குமா? எப்போது தன்னைத் தானே அழித்துக் கொண்ட (இறந்து விட்ட) பிறகு இது ஏன் கஷ்டமாக உள்ளது? இறந்து விட்டீர்கள் இல்லையா? யார் இறந்து விடுகிறார்களோ, அவர்கள் எரிந்து விடுகிறார்கள். எவ்வளவு தன்னைத் தான் (தேக உணர்விலிருந்து) அழித்துக் கொள்கிறீர்களோ, அந்தளவு அவ்யக்த ரூபத்தில் சந்திப்பும் ஏற்படும். அழிவது குறைவு என்றால, சந்திப்பதும் குறைவு. சந்திப்பின் திருவிழாவிலும் கூட யாராவது சந்திப்பைக் கொண்டாடவில்லை என்றால் திருவிழா முடிந்து போகும். பிறகு எப்போது சந்திப்பு நிகழும்? சிநேகத்தை சமநிலையாக மாற்றிவிட வேண்டும். சிநேகத்தை குப்தமாகவும் சமநிலையைப் பிரத்யட்சமாகவும் ஆக்குங்கள். அனைத்தும் உள்ளடங்கியுள்ளது. பிரத்யட்சம் மட்டுமே செய்ய வேண்டும். தன்னுடைய கல்பத்திற்கு முந்தைய உள்ளடங்கிய சம்ஸ்காரங்களைப் பிரத்யட்சம் செய்ய வேண்டும். கல்பத்திற்கு முந்தைய தன்னுடைய வெற்றி சொரூபம் நினைவு வருகிறது இல்லையா? இப்போது உள்ளடங்கியுள்ளவற்றை நடைமுறைப் பிரத்யட்ச ரூபத்தில் (வெளியே) கொண்டு வாருங்கள். சதா தன்னுடைய சம்பூர்ண நிலையின்

சொரூபம் மற்றும் வருங்கால 21-பிறவிகளின் ரூபத்தை முன்னால் வையுங்கள். அநேகர் தங்களின் வீடுகளை அலங்கரிப்பதற்காக தங்களின் குழந்தைப் பருவம் தொடங்கி தங்களுடைய வெவ்வேறு ரூபங்களின் நினைவுச்சின்னங்களை வைக்கின்றனர். ஆக, நீங்கள் உங்களுடைய மனம் எனும் கோவிலில் தங்களின் சம்பூர்ண சொரூபத்தின் மூர்த்தியை, வருங்கால அநேக பிறவிகளின் மூர்த்திகளைத் தெளிவான ரூபத்தில் முன்னால் வையுங்கள். பிறகு வேறு எந்தப் பக்கமும் சங்கல்பம் செல்லாது.

**சமீப ரத்தினத்தின் லட்சணங்கள் என்ன?** ஒருவர் எவ்வளவு இன்னொருவரின் சமீபமாக இருக்கிறாரோ, அவ்வளவு சம்ஸ்காரங்களில் கூட சமநிலை இருக்கும். ஆக, பாப்தாதாவின் சமீபமாக, அதாவது லட்சணங்களின் அருகில் வாருங்கள். எவ்வளவு சோதித்துப் பார்ப்பீர்களோ, அவ்வளவு விரைவாக மாற்றமடைவீர்கள். ஆதி சொரூபத்தை ஸ்மிருதியில் வையுங்கள். சத்யுக ஆரம்பத்தினுடைய மற்றும் மர்ஜீவா வாழ்க்கையின் ஆரம்ப ரூபத்தை ஸ்மிருதியில் (நினைவு) வைப்பதால் மத்தியிலுள்ளது உள்ளடங்கி விடும்.

**சிநேகியாகவும் சகயோகியாகவும் இருக்கிறீர்களா?** யார் மீது சிநேகம் உள்ளதோ, அவருக்குப் பிரதிபலனாக என்ன கொடுக்கப்படுகிறது? சிநேகத்திற்கான பிரதிபலன் சகயோகம். இதை எப்போது கொடுப்பீர்கள்? எப்படி தந்தை சர்வ சக்திவானாக உள்ளாரோ, அப்போது குழந்தைகளும் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆக வேண்டும். விநாசத்திற்கு முன்பு சிநேகத்துடன் கூடவே சகயோகி ஆவீர்களானால் ஆஸ்திக்கு அதிகாரி ஆவீர்கள். விநாசத்தின் சமயம் அனைத்து ஆத்மாக்களுமே அறிந்து கொள்வார்கள் என்றாலும், ஆஸ்தியை அவர்களால் அடைய முடியாது. ஏனென்றால் சகயோகியாக அவர்களால் ஆக முடியாது.

**4. கர்ம பந்தனம் சக்திசாலியா அல்லது இந்த ஈஸ்வரிய பந்தனமா?**
ஈஸ்வரிய பந்தனங்களை விரைவு படுத்துவீர்களானால் கர்ம பந்தனங்கள் தாமாகவே மந்தமாகி விடும். பந்தனத்தினால் தான் பந்தனம் நீங்கும். எவ்வளவு ஈஸ்வரிய பந்தனத்தில் கட்டுண்டு விடுகிறீர்களோ, அவ்வளவு கர்மபந்தனத்தில் இருந்து விடுபடுவீர்கள். எவ்வளவு அந்தக் கர்ம பந்தனம்

பக்காவாக உள்ளதோ, அவ்வளவு இந்த ஈஸ்வரிய பந்தனத்தையும் பக்கா ஆக்குவீர்களானால் அந்த பந்தனம் விரைவாக நீங்கும்.

**5. பிந்து ரூபத்தில் அதிகம் நிலைத்திருக்க முடியவில்லை என்றால், இதற்குப் பின்னால் போய் சமயத்தை வீணாக்காதீர்கள்.** எப்போது முதலில் சுத்த சங்கல்பத்தின் அப்பியாசம் ஆகிறதோ, அப்போது பிந்து ரூபத்தில் நிலைத்திருக்க முடியும். அசுத்த சங்கல்பங்களை சுத்த சங்கல்பங்களால் நீக்குங்கள். ஏதாவது விபத்து நேர்ந்து விடும் சூழ்நிலை ஏற்படுகிறது, பிரேக் (brake) பிடிக்கவில்லை என்றால் வண்டியைத் திருப்ப வேண்டி உள்ளது. பிந்து ரூபம் என்பது பிரேக். அது வேலை செய்யவில்லை என்றால் வீண் சங்கல்பங்களில் இருந்து புத்தியைத் திருப்பி, சுத்த சங்கல்பங்களில் ஈடுபடுத்துங்கள். சில நேரம் அந்த மாதிரி சந்தர்ப்பம் வருகிறது; பாதுகாப்பிற்காக பிரேக் போடாமல் திருப்ப வேண்டி உள்ளது. முயற்சி செய்யுங்கள், நாள் முழுவதும் சுத்த சங்கல்பங்கள் தவிர வேறு எந்த வீண் சங்கல்பங்களும் எழக்கூடாது. எப்போது இந்தப் பாடத்தில் தேர்ச்சி பெறுவீர்களே, பிறகு பிந்து ரூப ஸ்திதி சகஜமாகி விடும்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 11.06.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உலகத் தலைவர் ஆவதற்கான சாதனம்!

இன்று சத்குருவார் நாளில் விசேஷமாக எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்? இன்று குமாரிகளுக்கு எத்தகைய நாள்? (நிறைவு விழா) நிறைவு விழா இல்லை ஆனால் இன்றைய சத்குருவார் தினம் உலகத் தலைவர் (விஷ்வபதி) ஆவதற்கான சுப அவிநாசி தசா (அழிவற்ற வழி) அமர்வதற்கான தினம். புரிந்ததா? ஆக, இன்று பாப்தாதா விஷ்வபதி ஆக்குவதற்காக என்ன சாதனங்கள் கொண்டு வந்திருப்பார்? ஏதேனும் விழா நடத்தப்படுகிறது என்றால் அதில் சாதனங்களும் இருக்கும். ஆக, இன்று விஷ்வபதி ஆக்குவதற்கான விழாவில் விசேஷமாக என்ன சாதனங்கள் கொண்டு வந்திருக்கிறார்? கிரீடம், சிம்மாசனம் மற்றும் திலகம்! பிறகு இந்த மூன்றையும் அணிந்து கொள்வதற்கான தைரியம் உள்ளதா? கிரீடத்தை அணிந்து கொள்வதற்காக சிம்மாசனத்தில் அமர்வதற்காக மற்றும் திலகத்தை அணிந்து கொள்வதற்காக என்ன செய்ய வேண்டும்? ஒன்று தியாகம், இரண்டாவது தபஸ்யா மற்றும் சேவை. திலகத்தை அணிந்து கொள்வதற்காக தபஸ்யா மற்றும் கிரீடத்தை அணிந்து கொள்வதற்காக தியாகம் மற்றும் சிம்மாசனத்தில் அமர்வதற்காக எவ்வளவு சேவை செய்வீர்களோ, அவ்வளவு இப்போதும் சிம்மாசனத்திற்குத் தகுதியுள்ளவராக மற்றும் வருங்காலத்திலும் கூட சிம்மாசனத்தில் அமரக் கூடியவர்கள் ஆவீர்கள். இந்த மூன்று விஷயங்களிலிருந்தும் மூன்று பொருட்களை தாரணை செய்ய முடியும். ஒரு தாரணை குறைவாக இருந்தாலும் கூட பிறகு விஷ்வபதி ஆக முடியாது. புரிந்ததா? ஆக, இந்த மூன்று குணங்களையும் தனக்குள் சம்பூர்ண தாரணை செய்திருக்கிறீர்களா? மூன்றில் ஒன்று கூட விடுபட்டுவிடக் கூடாது, அப்போது தான் சூரவீரன் என்று எப்படிப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளதோ, அது காரியம் செய்யும். மூன்றின் உறுதிமொழியையும் எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? எதைத் தியாகம் செய்வீர்கள்? அனைத்திலும் பெரியதிலும் பெரிய தியாகம் எது? இப்போது சேவையில்

ஈடுபட்டிருக்கிறிர்கள் என்றால் அதற்காக முக்கியமாக இதே தாரணை செய்ய வேண்டும், அதாவது நான் என்பதின் தியாகம். நான் செய்தேன், நான் தான் இதை அறிவேன், நான் இதைச் செய்ய முடியும் -இந்த நான் என்பதின் அபிமானத்தைத் தியாகம் செய்து விட வேண்டும். நான் என்பதற்குப் பதிலாக பாப்தாதா சொல்லியுள்ள ஞான விஷயங்களை வர்ணனை செய்யுங்கள். எனக்கு இது தெரியும் என்பதல்ல, பாப்தாதாவிடமிருந்து இதைத் தெரிந்து கொண்டேன். ஞானத்தில் வந்த பிறகு வரக்கூடிய சுய அபிமானத்தையும் தியாகம் செய்து விட வேண்டும். எப்போது இந்த அளவு தியாக விருத்தி மற்றும் திருஷ்டி உள்ளதோ, அப்போது சதா ஸ்மிருதியில் பாபா மற்றும் தாதா (சிவபாபா மற்றும் பிரம்மாபாபா) மட்டுமே இருப்பார்கள் மேலும் வாயிலும் இதே வார்த்தை தான் இருக்கும். புரிந்ததா? அப்போது விஷ்வபதி ஆக முடியும். உலக சேவை செய்ய முடியும்.

தனது தாரணையை அவிநாசி ஆக்குவதற்கு அல்லது சதா நிலையாக வைத்திருப்பதற்கு இரண்டு விஷயங்களை நினைவு வைக்க வேண்டும். எவை? விசேஷமாகக் கன்னியர்கள்! ஒன்று, அனைத்து விஷயங்களிலும் எளிமையாக (simple) இருக்க வேண்டும் மற்றும் தன்னை உதாரணமாக (sample) உணர்ந்திருக்க வேண்டும். எப்படி நீங்கள் சாம்பிள் ஆகிக் காட்டுகிறீர்களோ, அதே போல் அநேக ஆத்மாக்களும் கூட இந்த வியாபாரம் செய்வதற்குத் தகுதியுள்ளவர்களாக ஆவார்கள். அதனால் இந்த இரண்டு விஷயங்களை நினைவில் வையுங்கள். தன்னை அந்த மாதிரி சிரேஷ்ட சாம்பிள் ஆக்கிக் கொண்டிருக்கிறிர்களா? நல்ல சாம்பிளாக வெளிவந்தால் அதற்கு முத்திரையும் குத்தப்படுகிறது. நீங்கள் எந்த முத்திரை இட்டுக் கொண்டு செல்வீர்கள் -ஒருபோதும் அழியாத தாக? சிவசக்திகள் மற்றும் பிரம்மா குமாரிகள்! சாகாரத்தில் நிமித்தமாக ஆகியிருக்கும் இரண்டு பெரிய அத்தாரிட்டியாக இந்த முத்திரை இடப்படுகிறது. ஆகவே இதை நினைவில் வைக்க வேண்டும் -அழிந்து போகலாம், (அதாவது எங்களை நாங்களே தியாகம் செய்து கொள்வோம்) ஆனால் தோற்கடிக்கப் பட மாட்டோம்! சம்ஸ்காரங்களில், சேவையில், சம்மந்தத்தில் அனைத்து விஷயங்களிலும் தன்னைத் தியாகம் செய்வோம்; ஆனால் தோற்றுப்போக மாட்டோம் -விலகிச் சென்றுவிட மாட்டோம். விலகுவது என்பது பலவீனமானவர்களின் காரியம். சிவசக்திகள் தங்களை அழித்துக் கொள்வார்கள் (sacrifice) ஆனால்

தோற்கடிக்கப் படமாட்டார்கள். ஆக, இந்த விஷயங்களை நினைவில் வைக்க வேண்டும். பிறகு இந்த குரூப்புக்கு நடைமுறைப் பரீட்சை எப்போது இருக்கும்? இப்போதைய ரிசல்ட் இறுதியானதல்ல. இப்போதோ பரிட்சைக்காகச் சென்று கொண்டிருக்கிறீர்கள். பிறகு இதன் முடிவைப் பார்ப்போம். இந்த குருப் முன்னால் அடி எடுத்து வைத்து முன்னேறிச் செல்ல முடியும். பாப்தாதா அந்த மாதிரி நம்பிக்கை வைக்கிறார். ஆகவே இப்போது அந்த மாதிரி புரிந்து கொள்ளுங்கள் -என்னென்ன கர்மபந்தனங்கள் உள்ளனவோ, அவற்றை மிக விரைவாக நீக்கி விட்டுப் பிறகு மதுபனில் சம்பூர்ண சமர்ப்பணத்தின் விழாவைக் கொண்டாடுவதற்காக வர வேண்டும். இந்த லட்சியத்தோடு செல்ல வேண்டும். பிறகு இந்த குருப்பிலிருந்து எத்தனைப் பேருக்கு சம்பூர்ண சமர்ப்பணத்தின் விழா நடைபெறுகிறது எனப் பார்க்கலாம். இன்றோ மகாபலி ஆவதற்கான விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளன. பிறகு மகாபலி ஆவதற்காக வருவீர்களானால் பாப்தாதா நன்றாக அலங்கரிப்பார். அலங்கரித்துப் பிறகு ஸ்வாஹா (அர்ப்பணம்) செய்ய வேண்டி உள்ளது. எவ்வளவு பாப்தாதாவின் சிநேகியோ, அவ்வளவு சகயோகியாகவும் ஆக வேண்டும். எப்போது தனக்குள் சர்வ சக்திகளையும் தாரணை செய்வீர்களோ, அப்போது சகயோகி ஆவீர்கள். பிறகு ஸ்வாஹா ஆவது என்பது சகஜமாகி விடும். எந்த ஒரு சக்தி குறைவாக இருந்தாலும் அதை இன்றைய தினமே தனக்குள் நிரப்பிக் கொண்டு செல்ல வேண்டும். எந்த ஒரு குறையையும் தன்னுடன் எடுத்துச் செல்லக் கூடாது. இப்போது கணக்கு-வழக்கை முடிப்பதற்காக மட்டுமே செல்கிறீர்கள். சர்வ சக்திகளைத் தனக்குள் நிரப்பிக் கொண்டு செல்லும்போது தான் கணக்கை முடிக்க முடியும் இல்லையா? ஆக, இப்போது கடைசிப் பேப்பரின் நம்பர்கள், எப்போது நடைமுறையில் செய்து காட்டுவீர்களோ, அப்போது வெளியாகும். நல்லது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 18.06.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விருத்திக்கான கால அட்டவணையின் விதி!

பாப்தாதா ஒரு விநாடியில் அவ்யக்தத்தில் இருந்து வ்யக்தத்தில் வந்து விட்டார். அதே போல் குழந்தைகளும் ஒர விநாடியில் வ்யக்தத்தில் இருந்து அவ்யக்தமாக முடியுமா? எப்படி, எப்போது விரும்புகிற்ரகளோ, அப்போது வாயினால் பேசுகிறீர்கள், எப்போது விரும்புகிறீர்களோ அப்போது வாயை மூடிக் கொள்கிறீர்கள். அவ்வாறு நடக்கிறது இல்லையா? அதே போலவே புத்தியையும் எப்போது விரும்புகிறீர்களோ அப்போது நடத்த வேண்டும், எப்போது விரும்பவில்லையோ அப்போது நடத்தாமல் இருக்க வேண்டும். இது போல் தனது அப்பியாசத்தைப் புரிந்து கொள்கிறீர்களா? வாயின் உறுப்பு கொஞ்சம் ஸ்தூலமானது, புத்தி வாயைக் காட்டிலும் சூட்சுமமானது ஆனால் வாயைப் போலவே புத்தியை எப்போது விரும்புகிறீர்களோ, அப்போது உபயோகியுங்கள், எப்போது விரும்புகிறீர்களோ அப்போது உபயோகிக்காமல் இருங்கள். அந்த மாதிரி அப்பியாசம் இருக்கிறதா? இந்த டிரில் பற்றி அறிவீர்களா? இந்த விஷயத்தின் அப்பியாசம் உறுதியாகி விடுமானால் தனது ஸ்திதியையும் உறுதியாக்க முடியும். இது தான் தனது ஸ்திதியின் விருத்திக்கான விதி. அநேகக் குழந்தைகளின் சங்கல்பம் விருத்தியை எப்படி ஏற்படுத்துவது என்பதாக உள்ளது. விருத்தி விதி மூலம் நடைபெறுகிறது. விதியை அறிந்திருக்கவில்லை என்றால் விருத்தியும் ஆகாது. இன்று பாப்தாதா ஒவ்வொருவரின் விருத்தி மற்றும் விதி இரண்டையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். அப்போது என்ன காட்சியைப் பார்த்திருப்பார்? ஒவ்வொருவரும் தன்னைத் தான் கேளுங்கள் மற்றும் விருத்தி ஆகிக் கொண்டிருக்கிறதா எனப்பாருங்கள். (அநேகர் கை உயர்த்தினர்). பெரும்பாலானவர்கள் தங்கள் விருத்தியில் திருப்தியாக உள்ளனர்.

நல்லது. நாள் முழுவதும் அவ்யக்த ஸ்திதி எவ்வளவு நேரம் இருக்கிறது? பாப்தாதா உங்களுடைய சம்பூர்ண ஸ்டேஷை (நிலை) முன்னால்

வைத்துக் கொண்டு கேட்கிறார்; நீங்கள் உங்கள் கடந்த காலப் புருஷார்த்தத்தை முன்னால் வைத்து யோசிக்கிறீர்கள், எவ்வளவு வித்தியாசம் ஆகி விட்டது! தற்சமயம் படிப்பின் முக்கியப் பாடம் (சப்ஜெக்ட்) என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? அதிகத்திலும் அதிகமாக அவ்யக்த ஸ்திதியை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற முக்கிய சப்ஜெக்ட்டைப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள். முக்கிய சப்ஜெக்ட்டில் முடிவு (ரிசல்ட்) குறைவாக உள்ளது. நிரந்தர நினைவில் இருப்பதற்கான சம்பூர்ண ஸ்டேஜூக்கு முன்னால் ஒரு மணி நேரம் என்பது என்ன? இதைவிட அதிகமாகத் தனது அவ்யக்த ஸ்திதியை அமைத்துக் கொள்வதற்கான விதி புத்தியில் இருக்கிறதா? விதி இருக்குமானால் விருத்தி ஏன் ஏற்படவில்லை? காரணமென்ன? விதி பற்றிய ஞானம் முழுவதும் தெளிவாக புத்தியில் வருகிறது ஆனால் ஒரு விஷயம் வருவதில்லை, அதன் காரணத்தால் விதி பற்றித் தெரிந்திருந்தும் விருத்தி ஏற்படவில்லை. அது எந்த விஷயம்? நல்லது, இன்று விருத்தி எப்படி ஏற்படும் என்பது பற்றிச் சொல்கிறோம். ஒரு விஷயம் வருவதில்லை, அதாவது விஸ்தாரமாக்குவது மற்றும் விஸ்தாரத்தில் செல்வதற்கு வருகிறது ஆனால் விஸ்தாரத்தை எப்போது விரும்புகிறீர்களோ, அப்போது ஒருங்கிணைப்பது மற்றும் உள்ளடக்குவதற்கான பயிற்சி குறைவு. ஞானத்தின் விஸ்தாரத்தில் வருவது பற்றியும் அறிவீர்கள்; ஆனால் ஞானத்தின் விஸ்தாரத்தைச் சுருக்கி ஞான சொரூபமாகி விடுவது, விதை வடிவமாக ஆகி விடுவது -இதனுடைய பயிற்சி குறைவு. விஸ்தாரத்தில் செல்வதால் நேரம் அதிகம் வீணாகிறது மேலும் சங்கல்பமும் கூட வீணாகிறது. எனவே எந்த சக்தி சேமிப்பாக வேண்டுமோ அது ஆவதில்லை. இதற்காக என்ன திட்டத்தை உருவாக்குவது என்பது பற்றி இன்று சொல்கிறோம்.

முழு உலகத்திலும் பெரியவரிலும் மிகப் பெரியவர்கள் யார்? (நாம் சங்கம யுக பிராமணர்கள்) பெரியவரிலும் பெரிய மனிதர்கள் என்ன செய்கின்றனர்? இன்றைய பெரிய மனிதர்கள் எந்த சாதனங்களைக் கைக்கொள்கின்றனர், அதன் மூலம் பெரிய பெரிய காரியங்களில் வெற்றி பெறுகின்றனர்? அவர்கள் முதலில் தங்களின் சமயத்தை நிர்ணயம் (செட்) செய்கின்றனர். தங்களுடைய கால அட்டவணையைத் தயார் செய்கின்றனர். எவ்வளவு சுறுசுறுப்பாக (பிஸியாக) உள்ளனரோ, அந்த அளவு ஒவ்வொரு மணி நேரத்திற்கும் அட்டவணை தயார்

செய்கின்றனர். கால அட்டவணை இல்லை என்றால் நேரத்தைப் பயனுள்ளதாக்கிக் கொள்ள முடியாது. நேரத்தைப் பயனுள்ளதாக ஆக்கவில்லை என்றால் காரியமும் வெற்றி பெறாது. அதனால் இன்றைய பெரிய மனிதர்கள் ஒவ்வொரு நேரத்தின் கால அட்டவணையையும் தயார் செய்கின்றனர். தங்களுடைய நாட்குறிப்பில் குறித்து வைக்கின்றனர். பிராமணர்கள் நீங்கள் பெரியவரிலும் பெரியவர்கள் என்றால் நீங்கள் உங்களுடைய கால அட்டவணையை வைக்கிறீர்களா? இது ஒரு விதியாகும். எப்படி அந்த மனிதர்கள் தினம் காலை வேளை ஆரம்பமானதுமே கால அட்டவணையை தயார் செய்கின்றனர். இதே போல் நீங்கள் ஒவ்வொருவரும் அமிர்த வேளையில் இருந்தே கால அட்டவணையைத் தயார் செய்யுங்கள் -அதாவது இன்றைய நாளில் என்னென்ன செய்ய வேண்டும்? எப்படி சரீரத்தின் காரியங்களுக்கான கால அட்டவணையை தயார் செய்கிறீர்களோ, அதே போல் ஆத்மாவின் முன்னேற்றத்திற்காகவும் கால அட்டவணை தயார் செய்யுங்கள் புரிந்ததா? எப்படி அந்த மனிதர்கள் தங்களின் திட்டத்தை உருவாக்குகின்றனர், இன்றைய நாளில் இத்தனைக் காரியங்களை முடிக்க வேண்டும் என்று. இதே போல் இன்றைய நாளில் அவ்யக்த ஸ்திதியின் இத்தனை சதவீதத்தை இவ்வளவு சமயம் வெளிப்படுத்த வேண்டும். நேரத்தின் பிரமாணம் செல்வதால் ஒரே நாளில் அநேகக் காரியங்களைச் செய்ய முடியும். கால அட்டவணை இல்லையென்றால் அநேகக் காரியங்கள் செய்ய முடியாது. ஆக, தனது டயரியைத் தயார் செய்யுங்கள். எப்படி ஒரு மணி நேரத்தின் ஸ்தூல காரியம் உருவாக்கப்பட்டுள்ளதோ, அதே போல் ஆத்மாவின் முன்னேற்றத்திற்கான காரியங்களைக் குறித்து வையுங்கள். திட்டத்தை உருவாக்குங்கள். பிறகு எப்படி ஸ்தூல காரியம் செய்த பிறகு அதன் மீது டிக் மார்க் செய்கிறீர்கள் இல்லையா? இது முடிந்தது, இது முடியவில்லை. முடியாததற்கான காரணம், அதோடு அதன் நிவாரணத்திற்கான சாதனம் என்ன என்பதை யோசித்து முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். இன்றைய தினம் இதைச் செய்தே தீருவேன். இப்படி இப்படி முதலிலேயே உறுதிமொழி எடுத்துக் கொள்ளுங்கள். எந்த ஒரு காரியத்திற்காகவும் முதலில் உறுதிமொழி எடுக்கப்படுகிறது, பிறகு திட்டம் வகுக்கப்படுகிறது, அதன் பிறகு திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது. நடைமுறைக்குப் பிறகு வருவது செக்கிங் -அதாவது இது நடந்தது, இது நடக்கவில்லை. சோதித்துப் பார்த்த பிறகு நடந்ததை நடந்து முடிந்ததாக முற்றுப்புள்ளி

வைத்து விடுவது. இனி எப்படி முன்னேறுவது என்பதற்கான சாதனங்களை வைக்கின்றனர். எப்படி நீங்கள் புதிய மாணவர்களுக்காக ஒரு வார பாடமுறை தயார் செய்திருக்கிறீர்கள் இல்லையா? ஆக, ஆத்மாவின் முன்னேற்றத்திற்காகவும் ஒரு வார திட்டத்தை உருவாக்க முடியும். எப்படி இங்கே மதுபனுக்கு வருகிறீர்கள் என்றால் எதையாவது (வேண்டாததை) விட்டுச் செல்கிறீர்கள். கொஞ்சத்தை நிரப்பிக் கொண்டு செல்கிறீர்கள். இதே போல் கொஞ்சத்தை விட்டு விடுங்கள், கொஞ்சத்தை நிரப்பிக் கொள்ளுங்கள். இவ்வளவு கவனம் வைப்பீர்களானால் சமயத்திற்கு முன்பாகவே சம்பூர்ணமாகி விடுவீர்கள். சமயத்தின் அனுசாரம் சம்பூர்ணமாவீர்களானால் அப்போது இவ்வளவு பிராப்தி இருக்காது. சமயத்திற்கு முன்பாகவே சம்பூர்ணமாக வேண்டும். சம்பூர்ண நிலை என்பதென்ன? அதன் அனுபவத்தை எப்போது செய்வீர்கள்? நிரந்தர ஈஸ்வரிய அதீந்திரிய சுகம் என்னவாக இருக்கும் என்பதை இங்கேயே தான் அனுபவம் செய்ய வேண்டும். இப்போது பார்ப்பீர்கள், விதிமுறைப்படி எப்படி தங்களின் கால அட்டவணை அல்லது ஒரு வார செயல்பாட்டை உருவாக்குகிறீர்கள் என்று.

எந்த அளவு ஒருவர் புத்திசாலியாக இருப்பாரோ, அவர் இது போன்ற காரியத்தை யதார்த்த ரீதியில் செய்து முடிக்க முடியும். அனைவரை விடவும் புத்திசாலிகள் பிராமணர்கள். எவ்வளவு புத்திசாலி ஆகியிருக்கிறீர்கள் என்பதை இதிலிருந்து கண்டறிய முடியும். புத்திசாலித்தனத்துடன் (sense) கூடவே எப்படி சாரத்தை (essence) வெளிப்படுத்துவது என்பது பற்றியும் கற்றுக் கொள்ள வேண்டும். சாரம் (எசன்ஸ்) மிகக் குறைவாகத் தான் இருக்கும். எதிலிருந்து சாரத்தை வெளிப்படுத்துகின்றனரோ, அது மிகவும் விஸ்தாரமாக ஆகும். ஆக, புத்தியும் நல்லதாக இருக்க வேண்டும், சாரத்தை (எசன்ஸ்) வெளிப்படுத்துவதற்கும் வர வேண்டும். சிலரிடம் சென்ஸ் அதிகமாக உள்ளது ஆனால் எசன்ஸில் நிலைத்திருப்பதற்கு வருவதில்லை. ஆக, இரண்டு அப்பியாசங்களும் வேண்டும். நீங்கள் இயற்கைச் சிகிச்சை மேற்கொள்பவர்கள் என்று உங்களுக்குச் சொல்லப்பட்டுள்ளது. இயற்கை (நேச்சர்) என்றால் சம்ஸ்காரங்கள். உங்களால் முயற்சி செய்ய இயலாமற்போனால் நீங்கள் இயற்கையைக் குறை சொல்கிறீர்கள். எனது இயற்கையே இது போல் உள்ளது என்று சொல்கிறீர்கள். உங்கள் இயற்கை மீது பழி போட்டு விட்டு நீங்கள் தப்பித்துக் கொள்கிறீர்கள்

ஆனால் அப்படி இல்லை! நீங்கள் அனைவருமே உங்கள் இயற்கையைக் குணப்படுத்த வேண்டும். இயற்கை சிகிச்சை செய்யும் அந்த மனிதர்கள் உங்களை உண்ணா நோன்பு (fast) இருக்கச் சொல்கின்றனர். ஆக, இப்போது நீங்கள் அனைவரும் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் வேகமாக செல்ல (fast) வேண்டும். கடைசியில் (last) பின்தங்கி விடக் கூடாது. வேகமாகச் செல்ல வேண்டுமானால் நீங்கள் ஒரு வீரத்தில் இருக்க வேண்டும். எந்த விரதத்தை நீங்கள் மேற்கொள்ள வேண்டும்? கால அட்டவணை ஒன்றை உருவாக்குங்கள். அதாவது இன்று மூதல் நீங்கள் ஒரு குறிப்பிட்ட விஷயத்திற்காக விரதம் இருக்க வேண்டும். உறுதிமொழி எடுத்துக் கொள்ளுங்கள். எப்படி அந்த மனிதர்கள் விரதம் இருக்கின்றனரோ, அது போல் நீங்கள் உங்கள் பலவீனங்களில் ஒன்றை தினந்தோறும் குறித்து வைக்க வேண்டும். அந்த மனிதர்கள் அவர்களுக்குத் தீமை (கஷ்ட நஷ்டங்கள்) செய்யும் விஷயங்களுக்காக விரதம் மேற்கொள்கின்றனர். ஆக, புருஷார்த்தத்தில் என்னென்ன நஷ்டத்தை ஏற்படுத்தும் விஷயங்கள் உள்ளனவோ, அவற்றின் விரதம் மேற் கொள்ளுங்கள். பிறகு அதைச் சோதித்துப் பாருங்கள். அநேகர் விரதம் இருக்கின்றனர், உபவாசம் இருக்கின்றனர் ஆனால் முடியவில்லை என்றால் இடையில் சாப்பிட்டு விடவும் செய்கின்றனர். இங்கேயும் அது போல் செய்கின்றனர். எப்படி பக்தி மார்க்கத்தின் பழக்கம் உள்ளது, அது போல. காலையில் உறுதிமொழி எடுத்துக் கொள்கின்றனர், அதாவது இதைச் செய்ய மாட்டேன் என்பதாக. நாள் ஆரம்பமானதும் அது முடிந்தது. இங்கேயும் அது போல் காலையில் உறுதிமொழி எடுக்கின்றனர், பிறகு சொல்லி விடுகின்றனர் -பிரச்சினை இந்த மாதிரி வந்து விட்டது. பிரச்சினை முடிந்து போன பிறகு செய்வேன். இப்போது அந்த சம்ஸ்காரத்தை முடித்து விடுங்கள். ஒருங்கிணைப்பதையும் உள்ளடக்குவதையும் கற்றுக் கொள்ளுங்கள். பழைய சம்ஸ்காரங்களை உள்ளடக்க வேண்டும். அதற்கு உறுதிமொழி எடுத்துக் கொள்ளுங்கள் அல்லது விரதம் இருங்கள். பெரிய மனிதர்களுக்கு முதலில் இருந்தே நிகழ்ச்சி நிரல் (அன்றாடக் கடமைகள்) நிர்ணயிக்கப் பட்டு விடுகிறது இல்லையா? நீங்களோ அனைவரை விடவும் பெரியவர்கள். ஆக, தங்களின் நிகழ்ச்சி நிரலையும் ஆறு மாதங்களுக்குத் தீர்மானம் ' செய்யுங்கள். இந்தக் காரியத்தைச் செய்தே தீருவேன், ஆகியே தீருவேன். எப்போது இவ்வளவு நிச்சயபுத்தி உள்ளவராக ஆகிறீர்களோ, அப்போது வெற்றியாளராக ஆவீர்கள். பாபா மீதோ நிச்சயம் உள்ளது ஆனால் தன்

மீதும் கூட நிச்சயபுத்தி உள்ளவராகிக் காரியம் செய்யுங்கள். பிறகு வெற்றி மேல் வெற்றி தான். வெற்றிக்கு முன்னால் பிரச்சினை என்பது ஒரு பொருட்டே கிடையாது. பிறகு அது பிரச்சினையாகத் தோன்றாது ஆனால் விளையாட்டாகத் தோன்றும். விளையாட்டு குஷியோடு விளையாடப்படுகிறது.

ஏதேனும் காரியம் சுலபமாக இருந்தால் நீங்கள் சொல்கிறீர்கள் இல்லையா, இதுவோ இடது கையின் விளையாட்டு அதாவது சுலபமானது என்று! ஆக, இதுவும் புத்தியின் விளையாட்டு ஆகிறது. விளையாட்டில் பயப்பட மாட்டார்கள். நீங்கள் பெரியவரிலும் பெரியவர்கள் என்றால், பெரியதிலும் பெரிய ஸ்திதியை அமைத்துக் கொள்ளுங்கள். பெரிய மனிதர்கள் அநேகர் அது போல் உள்ளனர், அவர்கள் தங்களின் பெரிய மனிதர் என்ற தன்மையில் நிலையாக நிற்பதில்லை. நீங்கள் அது போல் ஆகக் கூடாது. எவ்வளவு பெரியவர்களாக இருக்கிறீர்களோ, அவ்வளவு பெரிய ஸ்திதியையும் காட்டுங்கள். குறைந்தது எட்டு மணி நேரத்திற்கான லட்சியம் வைக்க வேண்டும். அவ்யக்த ஸ்திதி பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அவ்யக்த ஸ்திதியை எட்டு மணி நேரம் அமைத்துக் கொள்வதென்பது பெரிய விஷயமே இல்லை. அவ்யக்த ஸ்மிருதி (awareness) என்றால் அவ்யக்த ஸ்திதி (stage). பாபாவின் நினைவு 2-மணி நேரம் என்பது ஏன்? 2-மணி நேரம் பாபா நினைவு இருந்தது என்றால் மீதி நேரம் என்ன செய்தீர்கள்? நீங்கள் பாபாவின் சிநேகியா, மாயாவின் சிநேகியா? யாரிடம் சிநேகம் உள்ளதோ, சிநேகம் என்றால் தொடர்பு, யாரிடம் தொடர்பு உள்ளதோ, அவரைப் போலவே சம்ஸ்காரங்களை அவசியம் நிரப்பிக் கொள்வார்கள். சம்ஸ்கார இணக்கத்தின் (harmony) ஆதாரத்தில் தான் தொடர்பு உருவாகிறது இல்லையா? ஆக, பாபாவின் சிநேகி எனில் அவரோடு தொடர்பும் உள்ளதென்றால், அவரது சம்ஸ்காரங்களோடு ஏன் இணங்கிப் போவதில்லை? பிறகு பாப்தாதா சொல்வார், நீங்கள் மாயாவின் சிநேகி. 2-மணி நேரம் பாபாவின் சிநேகி, மீதி 22-மணி நேரம் மாயாவின் சிநேகியாக இருக்கிறீர்கள் என்றால் என்ன சொல்வார்கள்? சேவை செய்யும் போதும் சிநேகத்தை, தொடர்பை விட்டுவிடாதீர்கள். சம்பூர்ண ஸ்டேஜ் என்பது பாபாவின் நெருக்கத்தில் இருப்பதால் தான் உருவாகும். ஒரு பாடல் கூட உள்ளது இல்லையா -அவரும் நம்மைப் பிரிய மாட்டார், நாமும் கவலை கொள்ள மாட்டோம்! ஒருவர் மற்றவரைப் பிரியவே மாட்டீர்கள் எனும்போது சிநேகம்

மனதிலிருந்து எப்படி நீங்கும்? ஆக, அது நிரந்தரமாக இருக்க வேண்டும் ஆனால் புருஷார்த்தி என்பதால் பிறகும் நேரம் தருகிறார், ஆக குறைந்தது 8-மணி நேரத்திற்கான லட்சியம் வைத்து டைரி தயார் செய்யுங்கள், கால அட்டவணையை உருவாக்குங்கள். பிறகு ரிசல்ட்டையும் பார்ப்போம். ஒவ்வொரு வாரத்தின் ரிசல்ட்டையும் தங்கள் டீச்சர் மூலம் 'செக்' பண்ணி கொள்ளுங்கள் மேலும் ஒவ்வொரு வாரத்தின் ரிசல்ட்டை ஒன்று சேர்த்து மதுபனுக்கு அனுப்பி வைக்க வேண்டும். பிராமணிகள் இந்தக் காரியம் செய்ய வேண்டும். ஒவ்வொருவரின் ஒவ்வொடி வாரத்தின் டைரியையும் செக் பண்ணுங்கள். கால அட்டவளை தயார் செய்திருக்கிறார்களா? அதில் எது வரை வெற்றி கிடைத்தது? பிறகு சுருக்கமாக ஒரு மாதத்தின் ரிசல்ட்டை மதுபனுக்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்போது கவனக்குறைவின் நேரம் கிடையாது. அதிக காலமாக கவனக்குறைவின் புருஷார்த்தம் செய்து விட்டீர்கள். இப்போது என்ன செய்தீர்களோ, அதைச் செய்தாயிற்று. பிறகு இந்த சுலோகனை நினைவு படுத்துவோம். நீங்கள் மற்றவர்களுக்குச் சொல்வது இப்போது இல்லையேல் எப்போதுமே இல்லை. இப்போது செய்யவில்லை என்றால் பிறகு எப்போது செய்வீர்கள்? பிறகு எப்போதுமே நடைபெற முடியாது. ஆகவே சுலோகனையும் நினைவு வைக்க வேண்டும். ஒவ்வொரு நாளுக்கும் தனித்தனியாக தனக்காக சுலோகனையும் முன்னால் வைத்துக் கொள்ளலாம். எப்படி இந்த சுலோகன் உள்ளது -எந்த மாதிரி கர்மத்தை நான் செய்கிறேனோ, என்னைப் பார்த்து மற்றவர்களும் செய்வார்கள். இதே போல் அடுத்த நாள் வேறொரு சுலோகனை முன்னால் வையுங்கள். எப்படி பாப்தாதா சொல்லியிருக்கிறார் -வெற்றி நமது பிறப்புரிமை. இதையும் சொல்லியிருக்கிறார், அதாவது செத்துப் போவோம் ஆனால் தோற்றுப்போக மாட்டோம். இது போல் பலவிதமான சுலோகன்களை ஒவ்வொரு நாளும் உங்கள் முன்னால் வையுங்கள். அதை நடைமுறையில் கொண்டு வாருங்கள். பிறகு பாருங்கள், எவ்வளவு விரைவாக அவ்யக்த ஸ்திதி உங்களுக்குள் அமைந்து விடுகிறது என்று!

ஃபரிஸ்தாக்களை ஒருபோதும் பூமி கவர்ந்திழுக்க முடியாது. அவர்கள் அவ்வப்போது வருவார்கள், செல்வார்கள். காரியம் முடிந்தால் மேற்கொண்டு இங்கே இருக்க மாட்டார்கள். நீங்களும் கூட காரியம் செய்வதற்காக சரீரத்தின் ஆதாரத்தை எடுத்தீர்கள், காரியம் முடிந்ததும் பிறகு ஒரு விநாடியில் அவ்யக்தமாகி விட வேண்டும். இது

நடைமுறையாகி விடுமானால் பிறகு நீங்கள் ஃபரிஸ்தா என அழைக்கப்படுவீர்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 19.06.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# திரிமூர்த்தி ஒளிகளின் சாட்சாத்காரம்!

பிராமணர்களைத் திரிமூர்த்தி சிவவம்சி என சொல்கிறீர்கள் இல்லையா? திரிமூர்த்தி தந்தையின் குழந்தைகள் தாங்களும் திரிமுர்த்திகள் தாம். எப்படி தந்தை திரிமூர்த்தியாக இருக்கிறாரோ, அது போல் நீங்களும் திரிமூர்த்திகளாக இருக்கிறீர்களா? சாட்சாத்காரத்தின் மூன்று விதமான ஒளிகள் வருகின்றனவா? பிராமணர்களின் மூன்று விதமான ஒளிகள் சாட்சாத்காரம் ஆகிக் கொண்டே இருக்கின்றன, அவை என்ன என்பதை அறிவீர்களா? உங்களிடமிருந்து ஒளியின் சாட்சாத்காரம் ஆகிக் கொண்டிருப்பது தெரிகிறதா? திரிமூர்த்தி வம்சி திரிமூர்த்தி குழந்தைகளிடமிருந்து மூன்று விதமான ஒளியின் சாட்சாத்காரம் ஆகிறது. அவை எந்த மாதிரி ஒளிகள்? ஒன்று, ஒளியின் சாட்சாத்காரம் கண்கள் மூலமாக ஆகின்றது. கண்களின் ஜோதி எனச் சொல்கின்றனர் இல்லையா? கண்கள் அந்த மாதிரி தென்படும், கண்களில் இரண்டு பல்புகள் எரிந்து கொண்டிருப்பது போல்; இரண்டாவது, நெற்றியின் மூலம் வரும் ஒளி; மூன்றாவது தலை மீது உள்ள ஒளிக்கிரீடம். இப்போது மூன்று ஒனிகளையும் சாட்சாத்காரம் செய்விப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். யாராவது முன்னால் வந்தால் அவர்களுக்கு இந்தக் கண்கள் பல்பு போல் காணப்பட வேண்டும். ஜோதியே ஜோதியாகக் காணப்பட வேண்டும். எப்படி இருளில் உண்மையான வைரம் ஜொலிக்கின்றது இல்லையா? எப்படி செர்ச் லைட் (search light) உள்ளது, மிக வேகமாக, நன்றாக ஒளியைப் பரப்புகிறது -இதே போல் நெற்றியின் ஒளி சாட்சாத்காரம் ஆகும் மேலும் தலை மீது ஒளிக்கிரீடம் உள்ளது. அது பற்றியோ புரிந்து கொண்டிருக்கிறிர்கள். இது போல் திரிமூர்த்தி ஒளியின் சாட்சாத்காரம் ஒவ்வொருவரிடமிருந்தும் ஆக வேண்டும். அப்போது தான் இவர்களோ ஃபரிஸ்தாக்கள் போல் உள்ளனர் எனச் சொல்வார்கள். சாகாரத்தில் கண்கள், நெற்றி மற்றும் தலைக் கிரீடத்தின் சாட்சாத்காரம் தெளிவாக இருக்கும்.

கண்களின் பக்கம் பார்க்கப் பார்க்க ஒளியைப் பார்ப்பார்கள். உங்களுடைய ஒளியைப் பார்த்து மற்றவர்களும் லேசாகி விடுவார்கள். எவ்வளவு தான் மனதால் அல்லது ஸ்திதியில் பாரமாக இருந்தாலும் வந்ததுமே லேசாக ஆகி விட வேண்டும். அந்த மாதிரி ஸ்டேஜை இப்போது பிடித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், உங்களைப் பார்த்து மற்ற அனைவரும் கூட இது போல் செய்வார்கள். இப்போதிருந்தே உங்களின் மகிமையின் பாடலைத் கேட்பீர்கள். துவாபர யுகத்தின் பாடல் ஒன்றும் பெரிய விஷயம் கிடையாது ஆனால் அப்படிப்பட்ட சாட்சாத்கார மூர்த்தி மற்றும் சாட்சாத் மூர்த்தி ஆவதன் மூலம் இப்போதைய உங்களுடைய பாடலைக் கேட்பீர்கள். உங்கள் முன்னால் வருவதால் ஒளியே ஒளியாகக் காணப்படும். இது போல் நடக்கப் போகிறது. மதுபனே ஒளியின் வீடாகி விடும். இந்த (ஸ்தூல) தீபங்கள் முதலியவற்றைப் பார்த்தாலும் பார்க்காதவர்களாகி விடுவார்கள். எப்படி சூட்சும வதனத்தில் ஒளியே ஒளியாகக் காணப்படுகிறது, அது போல் இந்த ஸ்தூல வதனம் ஒளியின் வீடாக ஆகி விடும். எப்போது நீங்கள் சைத்தன்ய லைட்ஹவுஸ் ஆகி விடுவீர்களோ, அப்போது இந்த மதுபனும் கூட லைட் ஹவுஸாக ஆகி விடும். இப்போது இது கடைசிப் படிப்பின் கடைசிப் பாடம் -நடைமுறையில். தியரி கோர்ஸ் (புத்தகக் கல்வி) இப்போது முடிவடைந்தது. இந்தக் கோர்ஸின் கடைசிப் பாடம் பிராக்டிகல் (நடைமுறை). இந்தக் கடைசிப் பாடத்தில் மிக வேகமான புருஷார்த்தம் செய்ய வேண்டியதிருக்கும். இந்த ஸ்டேஜுக்குத் தான் மகிமை பாடப்பட்டுள்ளது.

பாப்தாதாவிடமிருந்து ஒரு போதும் விடைபெறுவதில்லை, மாயாவிடமிருந்து விடை பெறுவீர்கள். பாப்தாதாவுடனோ சந்திப்பு நடைபெறும். இந்தக் கொஞ்ச நேரத்தின் சந்திப்பு சதா காலத்திற்குமான சந்திப்பிற்கு நிமித்தமாகி விடுகிறது. பாபாவுடன் கூடவே குணங்கள் மற்றும் காரியங்களும் ஒன்றாக ஆவது தான் சந்திப்பாகும். இதே முயற்சியை சதா செய்து கொண்டே இருக்க வேண்டும். நல்லது. சங்கல்பங்களை நிறுத்துவதற்கான முக்கிய சாதனம் என்ன, தெரியுமா? காரியம் செய்கிறீர்கள் என்றால், செய்வதற்கு முன்பு யோசித்துப் பிறகு காரியத்தைத் தொடங்குங்கள். எந்தக் காரியத்தைச் செய்வதற்காகச் செல்கிறேனோ, அது பாப்தாதாவின் காரியம். நான் நிமித்தமாக இருக்கிறேன். எப்போது காரியத்தை முடிக்கிறீர்களோ, அப்போது எப்படி யக்ஞம் படைக்கப்படுகிறது என்றால், அது முடியும் சமயத்தில் ஆகுதி

போடப்படுகிறது. இதே போல் என்ன காரியம் செய்தீர்களோ மேலும் அந்தக் காரியம் முடிவடைந்தது என்றால் ஸ்வாஹா செய்தாயிற்று. பிறகு என்ன சங்கல்பம் செய்வீர்கள்? எப்படி நெருப்பில் ஒரு பொருள் போடப்படுகிறது என்றால் பிறகு பெயர் அடையாளம் இருப்பதில்லை. அது போல் ஒவ்வொரு பொருளின் முடிவிலும் சம்பூர்ண ஸ்வாஹா செய்ய வேண்டும். பிறகு உங்கள் பொறுப்பு கிடையாது. யாருக்கு அர்ப்பணம் செய்யப்பட்டதோ, அவர் பிறகு பொறுப்பாகி விடுகிறார். பிறகு அதைப் பற்றிய சங்கல்பம் எதற்காக? எப்படி வீட்டில் யாராவது பெரியவர்கள் இருந்தால் எந்த ஒரு காரியம் செய்தாலும் பெரியவர்களுக்குச் சொல்லி விட்டு ஃப்ரியாகி விடுவார்கள். அதே போல் என்ன காரியம் செய்தீர்களோ, அதைப் பற்றிய தகவலைக் கொடுத்தீர்கள், அவ்வளவு தான். அவ்யக்த ரூபத்தை முன்னால் வைத்து இதைச் செய்து பாருங்கள். எவ்வளவு ஒருவர் சகயோகி ஆகிறாரோ, அவருக்கு அதிகப்படியான சகயோகம் தர வேண்டியுள்ளது. எப்படி தனது ஆத்மாவின் முன்னேற்றத்திற்காக யோசிக்கின்றனர் -இந்த மாதிரி சுத்த பாவனை, சுப சிந்தனையாளர் மற்றும் சுப சிந்தனையின் ரூபத்தில் அதிகப்படியான உதவி, இரண்டு ரூபங்களிலும் எந்த ஒரு ஆத்மாவிற்கும் விசேஷ சகயோகம் கொடுக்க முடியும், கொடுக்க வேண்டும். இதனால் உதவி கிடைக்கிறது. எப்படி ஒரு ஏழைக்குத் திடீரென்று எதிர்பாராத விதமாக முயற்சி எதுவும் இல்லாமல் பிராப்தி (செல்வம்) கிடைக்கிறது என்றால் அதே ரீதியில் எவரேனும் ஒரு ஆத்மாவுக்காவது அதிகப்படியான சகயோகம் கொடுக்கப்படுகிறது என்றால், அந்த ஆத்மாவும் உணர்கிறது -நமக்கு விசேஷ உதவி கிடைத்துள்ளது. சாகார ரூபத்திலும் (பிரம்மாபாபா) அதிகப்படியாக யாராவது ஆத்மாவுக்கு சகயோகம் தருவதற்கான நிலையை நிரூபித்துக் காட்டினார் இல்லையா? சுயம் அந்த ஆத்மாவுக்கு அனுபவம் ஆகவும் செய்தது. இந்த சேவையைச் செய்து காட்ட வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு நீங்கள் சூட்சுமமாக ஆகிக் கொண்டே செல்வீர்களோ, அவ்வளவு இந்த சூட்சும சேவையும் விருத்தியாகிக் கொண்டே செல்லும். ஸ்தூலத்துடன் கூடவே சூட்சுமத்தின் பிரபாவம் சீக்கிரமாகப் படுகிறது மற்றும் சதா காலத்திற்கும். பாப்தாதாவும் விசேஷ சகயோகம் கொடுக்கிறார். அதிகப்படியான உதவியின் அனுபவம் ஆகும். முயற்சி குறைவு, பிராப்தி அதிகம். நல்லது.

# 1970 அவ்யக்த முரளி

பாப்தாதா குழந்தைகள் மீது எவ்வளவு அன்பு செலுத்துகிறாரோ, அவ்வளவு பாப்தாதா மீது குழந்தைகள் அழியாத அன்பு வைக்கின்றனரா? இந்த அழியாத அன்பு என்ற கயிறு தான் 21-பிறவிகளின் பந்தனத்தை இணைக்கிறது. அதுவும் உடையாத அன்பு. எவ்வளவு உறுதியான கயிறாக உள்ளதோ, அவ்வளவு அதிக சமயம் நிலைத்திருக்கும். இந்த சங்கமத்தின் சமயடி 21-பிறவிகளை இணைக்கின்றது. இந்த சங்கம யுகத்தின் ஒவ்வொரு சங்கல்பம், ஒவ்வொரு கர்மம் 21-பிறவிகளின் பேங்க்கில் சேமிப்பாகிறது. இவ்வளவு கவனம் வைத்துப் பிறகு சங்கல்பமும் செய்ய வேண்டும். என்ன செய்கிறேனோ, அது சேமிப்பாகும். ஆக எவ்வளவு சேமிப்பாகும்? ஒரு சங்கல்பம் கூட வீணாகக் கூடாது, ஒரு சங்கல்பமாவது வீணாகுமானால் சேமிப்பில் குறைவாகி விடும். ஆக, எப்போது சேமிக்க வேண்டி உள்ளதோ, அப்போது ஒரு சிறிதும் வீணாகி விடக் கூடாது. எவ்வளவு புருஷார்த்தம் செய்ய வேண்டும்! சங்கல்பமும் வீணாகக் கூடாது. சமயத்தையோ விடுங்கள். இப்போது புருஷார்த்தம் இந்த எல்லையை வந்தடைந்து கொண்டுள்ளது. எப்படி படிப்பு நாளுக்கு நாள் உயர்ந்ததாகிக் கொண்டே செல்கிறதோ, இதுவும் அதுபோலத் தான். பெரிய வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 25.06.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வியக்த மற்றும் அவ்யக்த வதனத்தின் மொழியில் வேறுபாடு!

வியக்த உலகில் இருந்தவாறே அவ்யக்த வதனத்தின் மொழியை உங்களால் அறிந்து கொள்ள முடியுமா? அவ்யக்த உலகின் மொழி என்னவாக உள்ளது? எப்போதாவது அவ்யக்த வதனத்தின் மொழியைக் கேட்டிருக்கிறீர்களா? இப்போதோ அவ்யக்தமாக இருப்பவர் வியக்த உலகத்தின் நிவாசிகளுக்காக வியக்தத்தின் ஆதாரத்தை (பிரம்மா) எடுத்து வியக்த தேசத்தின் ரீதியைப் போல் பேச வேண்டி உள்ளது. அங்கே அவ்யக்த வதனத்திலோ ஒரு விநாடியில் அநேக ரகசியங்கள் தெளிவாகி விடுகின்றன. இங்கே உங்களது உலகில் நிறைய பேசிய பிறகு தான் தெளிவாகின்றது. இது தான் வித்தியாசம் -வியக்த மொழி மற்றும் அவ்யக்த பாப்தாதாவின் சமிக்ஞைகள் மூலம் உங்களால் இதைப் புரிந்து கொள்ள முடிகிறதா, அதாவது இன்று பாப்தாதா என்ன பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று? எப்படி விஞ்ஞானத்தின் மூலம் எங்கெங்கோ உள்ள விஷயங்கள், எங்கெங்கோ உள்ள காட்சிகளைக் 'கேச்' (catch) பண்ண முடிகிறது. அதே போல் நீங்கள் அவ்யக்த ஸ்திதியின் ஆதாரத்தில் முன்னால் உள்ள விஷயங்களைக் கேச் பண்ண முடியாதா? மூன்று விஷயங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவை என்ன விஷயங்கள்? பாப்தாதா இன்று இதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார் -அதாவது ஒவ்வொருவரும் எதுவரை சோதிப்பவராக (checker) ஆவதோடு உருவாக்குபவராகவும் (maker) ஆகியிருக்கிறார்? எவ்வளவு ஒருவர் சோதிப்பவராக இருப்பாரோ, அந்த அளவு உருவாக்குபவராகவும் இருக்க முடியும். இச்சமயம் நீங்கள் சட்டத்தை உருவாக்குபவராகவும் (law-makers) இருக்கிறீர்கள் மற்றும் புது உலகத்தை உருவாக்குபவராகவும் இருக்கிறீர்கள் மேலும் அமைதியை உருவாக்குபவராகவும் இருக்கிறீர்கள்; ஆனால் உருவாக்குபவர் என்பதோடு கூடவே சோதிப்பவராகவும் அவசியம் ஆக வேண்டும். விசேஷமாக எதைச் சோதிக்க வேண்டும்? இந்தச் சேவை தான் இப்போது

மிச்சம் உள்ளது. இதன் மூலம் உங்கள் பெயர் விளங்க வேண்டும். அந்த சோதிப்பவர்கள் எதைச் சோதிக்கின்றனர்? கலப்படம் மற்றும் லஞ்ச ஊழல். ஆக இந்த சேவை தான் இப்போது மிஞ்சியிருக்கிறது. லஞ்ச ஊழல் மற்றும் கலப்படம் செய்பவர்களிடம் சர்வ சக்திவான் அரசாங்கத்தின் சோதிப்பவர் ஆகிச் செல்லுங்கள். எப்படி அந்த அரசாங்கத்தின் சோதிப்பவர்கள் அல்லது ஆய்வாளர்கள் யாரிடமாவது செல்கின்றனர் என்றால், அவர்கள் தாங்கள் இன்னார் எனத் தெரியப்படுத்துவதில்லை. இதே ரீதியில் பாண்டவ அரசாங்கத்தின் அத்தாரிட்டியோடு சோதிப்பவர் ஆகிச் செல்லுங்கள், அப்போது அவர்கள் பார்த்ததுமே, தங்களின் ஊழல், கலப்படதினால் பயந்து விடுவார்கள் மற்றும் தலையைத் தொங்கப் போட்டு விடுவார்கள். இப்போது இந்த சேவை மிச்சம் உள்ளது. இதனால் தான் நீங்கள் பெயர் பெற வேண்டும். ஒருவர் தலைவணங்கினாலும் அதைத் தொடர்ந்து அநேகர் தலைவணங்கி விடுவார்கள். பாண்டவ அரசாங்கத்தின் அத்தாரிட்டி ஆகிச் செல்ல வேண்டும் மற்றும் சவால் விட வேண்டும். இப்போது புரிந்ததா? தன்னைத் தான் சோதிப்பவராகவும் ஆக வேண்டும் மற்றும் சேவையிலும் கூட இருக்க வேண்டும். ஒருவர் எவ்வளவு சோதிப்பவராகவும் உருவாக்குபவராகவும் இருக்கிறாரோ, அவர் தான் பிறகு அரசாள்பவராகவும் ஆகிறார். ஆக, எதுவரை சோதிப்பவராக ஆகியிருக்கின்றனர் மற்றும் எதுவரை உருவாக்குபவராக ஆகியிருக்கின்றனர் மற்றும் எதுவரை அரசாள்பவராக ஆகியிருக்கின்றனர்? ஒவ்வொருவரிடமும் இந்த விஷயங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

எப்போது தன்னை இந்த மூன்று விஷயங்களிலும் நிலை நிறுத்துவீர்களோ, பிறகு சிறு-சிறு விஷயங்களில் சமயம் வீணாகாது. எப்போது மற்றவர்களுடைய ஊழல், கலப்படத்தையும் கூட சோதிப்பவர்கள் என்றால் பிறகு தன்னிடம் ஊழல், கலப்படம் இருக்க முடியுமா? ஆக, இந்த நஷா இருக்க வேண்டும் -நாம் இந்த மூன்று ஸ்திதிகளிலும் எதுவரை நிலைத்திருக்க முடியும்? ஆட்சியாளர்கள் உள்ளனர் என்றால், அவர்கள் யாருக்கும் அடிமையாக இருப்பதில்லை. அதிகாரியாக இருப்பார்கள். அவர்கள் ஒருபோதும் யாருக்கும் அடிமை ஆக முடியாது. ஆக, பிறகு மாயாவின் அடிமையாக எப்படி இருப்பார்கள்? அதிகாரத்தை மறப்பதால் அதிகாரி எனப்ப புரிந்து கொள்ள மாட்டார்கள்.

அதிகாரி எனப்ப புரிந்து கொள்ளாததால் அடிமை ஆகி விடுகின்றனர். எவ்வளவு தன்னை அதிகாரி எனப் புரிந்து கொள்வார்களோ, அவ்வளவு விசால மனம் படைத்தவர்களாக அவசியம் ஆவார்கள். எவ்வளவு விசால மனம் உள்ளவராக ஆகின்றனரோ, அந்த அளவுக்கு அவர்கள் அநேகருக்கு உதாரணமானவர்களாக ஆகின்றனர். பரந்த மனம் உள்ளவராக ஆவதற்கு அதிகாரி ஆக வேண்டும். அதிகாரி என்பதன் அர்த்தமே அதிகாரம் சதா நினைவில் இருக்க வேண்டும். ஆகவே பிறகு உதாரணமானவர்களாக ஆவார்கள். பரந்த மனம் உள்ளவர்கள் உதாரணமாகவும் ஆவார்கள் மற்றும் அநேகருக்கு விமோசனமும் அளிக்க முடியும். புரிந்ததா?

யாருக்குள்ளாவது மாயா பிரவேசமாகிறது என்றால் முதலில் மாயா எந்த ரூபத்தில் வருகிறது? (ஒவ்வொருவரும் அவரவர் கருத்தைச் சொன்னார்கள்) முதலில் மாயா பல வித ரூபங்களில் சோம்பலாகத் தான் வருகிறது. தேக அபிமானத்திலும் கூட முதலில் சோம்பலின் ரூபத்தையே தாரணை செய்கிறது. அந்தச் சமயத்தில் ஸ்ரீமத் பெற்றுக் கொண்டு, சரி பார்ப்பதற்கான சோம்பலின் காரியத்தைச் செய்கின்றனர். பிறகு தேக அபிமானம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. மற்ற அனைத்து விஷயங்களிலும் பல வித ரூபங்களில் முதலில் சோம்பல் ரூபம் வருகிறது. சோம்பல் மற்றும் விரக்தி ஈஸ்வரிய சம்மந்தத்தில் இருந்து தூரத்தில் கொண்டு சென்று விடும். சாகார சம்மந்தத்தில் இருந்து மற்றும் புத்தியின் சம்மந்தத்தில் இருந்து மற்றும் சகயோகம் பெறுவதற்கான சம்மந்தத்தில் இருந்து விலகச் செய்து விடும். இந்தச் சோம்பல் வந்த பிறகு பயங்கர ரூபம் என்னவாக ஆகிறது? தேக அகங்காரத்தில் பிரத்யட்ச ரூபத்தில் வந்து விடுகின்றனர். முதலில் ஆறாவது விகாரத்திலிருந்து தொடங்குகின்றனர். ஞானம் நிறைந்த ஆத்மாக்களுக்குள் கடைசி நம்பர், அதாவது சோம்பலின் ரூபத்தில் ஆரம்பமாகிறது. சோம்பலில் பிறகு எத்தகைய சங்கல்பங்கள் எழும்? தற்சமயம் இந்த ரூபத்தில் தான் மாயாவின் பிரவேசம் நடைபெறுகிறது. இதன் மீது மிகவும் கவனம் வைக்க வேண்டும். இந்த ஆறாவது ரூபத்தில் மாயா பல விதங்களில் வருவதற்கு முயற்சி செய்யும். சோம்பலுக்கு பல வித ரூபங்கள் உள்ளன. சரீரம், மனம் இரண்டு சம்மந்தத்திலும் கூட மாயா வர முடியும். அநேகர் யோசிக்கின்றனர், வாருங்கள், இப்போது இல்லையென்றால் பிறகு எப்போதாவது செய்து கொள்ளலாம். சீக்கிரம் செய்ய வேண்டும் என்று என்ன அவசியம்? இப்படியெல்லாம் மிகவும் ராயல் ரூபத்தில் மாயா

வருகிறது. அநேகர் இதையும் யோசிக்கின்றனர், அதாவது அவ்யக்த ஸ்திதி இந்தப் புருஷார்த்தி வாழ்க்கையில் 9-7 மணி நேரம் இருப்பதென்பது முடியாத காரியம், இதுவோ கடைசியில் தான் நடக்கும். இதுவும் கூட சோம்பலின் ராயல் ரூபமாகும். பிறகு செய்யலாம், யோசிக்கலாம், பார்க்கலாம் -இவையனைத்தும் சோம்பல். இதைச் சோதிப்பவராக ஆகுங்கள், உங்களில் யாரையாவது ராயல் ரூபத்தில் மாயா பின்தொடர்வதில்லையே? இல்லறத்தின் பாலனையோ செய்து தான் ஆக வேண்டும்; ஆனால் இல்லறத்தில் இருந்து கொண்டே வைராக்கிய விருத்தியில் இருக்க வேண்டும் -இது மறந்து போகிறது. பாதி விஷயம் நினைவுள்ளது, பாதி விஷயத்தை விட்டு விடுகின்றனர். மிகவும் சூட்சுமமான சங்கல்பங்களின் ரூபத்தில் முதலில் சோம்பல் பிரவேசமாகிறது. இதற்குப் பிறகு பெரிய ரூபத்தை எடுத்துக் கொள்கிறது.

அந்த நேரத்திலேயே அதை வெளியேற்றி விடுவீர்களானால் அதிக நேரம் அதை எதிர்கொள்ள வேண்டியது இருக்காது. ஆக, இப்போது இதைச் சோதித்துப் பார்க்க வேண்டும், அதாவது தீவிரப் புருஷார்த்தி ஆவதில் அல்லது ஹைஜம்ப் பண்ணுவதில் (உயரம் தாண்டிச் செல்வதில்) எந்த ரூபத்தில் மாயா சோம்பேறியாக ஆக்குகிறது? மாயாவின் வெளிப்படையான ரூபத்தையோ சோதிக்கிறீர்கள் ஆனால் இந்த (சூட்சும) ரூபத்தையும் சோதிக்க வேண்டும். அநேகர் இதையும் யோசிக்கின்றனர், அதாவது முடிவான இருக்கைகளே குறைவு தானே என்று. ஆக, மற்றவர்கள் புருஷார்த்தத்தில் முன்னால் செல்வதைப் பார்த்து தன்னுடைய புத்தியில் நினைக்கின்றனர், அவ்வளவு முன்னால் நம்மால் போக முடியாது, இவ்வளவு போனாலே போதும். இதுவும் சோம்பலின் ரூபம் தான். ஆக, இந்த அனைத்து விஷயங்களிலும் தன்னைத் தான் மாற்றிக் கொள்ள வேண்டும். அப்போது தான் சட்டத்தை உருவாக்குபவர்கள் அல்லது அமைதியை உருவாக்குபவர்களாக ஆக முடியும் மேலும் புது உலகத்தினை உருவாக்குபவர்களாக ஆக முடியும். முதலில் தன்னையே புதியவராக ஆக்கிச் கொள்ளவில்லை என்றால, புது உலகத்தை உருவாக்குபவராக எப்படி ஆவீர்கள்? முதலிலோ தன்னைத் தான் ஆக்கிக் கொள்ள வேண்டும் இல்லையா? புருஷார்த்தத்தில் தீவிரத் தன்மையைச் கொண்டு வருவதற்கான வழிமுறை தெரியும் இல்லையா? பிறர் அதில் ஏன் நிலைத்திருப்பதில்லை? எது வரை தனக்குத் தான் எந்த ஒரு உறுதிமொழியும் எடுத்துக் கொள்ளவில்லையோ, அது வரை

பரிபக்குவத் தன்மை வர முடியாது. எது வரை இங்கே முடிவு செய்யவில்லையோ, அது வரை அங்கே இருக்கைகள் (பதவி) முடிவாகாது. ஆக, இப்போது சொல்லுங்கள், புருஷார்த்தத்தில் தீவிரத் தன்மையை எப்போது கொண்டு வருவீர்கள்! (இப்போதிருந்து) மியூசியம் அல்லது கண்காட்சியில் இந்த சுலோகனை அனைவருக்கும் சொல்கிறீர்கள் இல்லையா -இப்போது இல்லையேல் இனி எப்போதுமே இல்லை என்று? அதைத் தனக்காகவும் நினைவு வையுங்கள். எப்போதாவது செய்து விடுவோம் என்பதாக யோசிக்காதீர்கள். இப்போது ஆகிக் காட்டுவோம் என்று அந்தப் பரிபக்குவத் தன்மை அல்லது தைரியம் வரும் என்றால் பிறகு சகயோகமும் கிடைக்கும்.

நீங்கள் பழையவர்கள், அதனால் உங்களை முன்னால் வைத்துப் புரிய வைத்துக் கொண்டிருக்கிறோம். முன்னால் யார் அமர்த்தப்படுகிறார்கள்? சிநேகியாக இருப்பவர்கள். சிநேகிகளுக்கு சொல்வதில் ஒருபோதும் சங்கோஜம் வருவதில்லை. ஒவ்வொருவரும் அந்த மாதிரி சிநேகிகள். அனைவரும் யோசிக்கின்றனர், பாபா மிகவும் சப்தமாக ஏன் பேசுவதில்லை? ஆனால் நீண்ட கால சம்ஸ்காரத்தினால் அவயக்த ரூபத்தில் இருந்து வியக்தத்தில் வருகிறார் என்றால் சப்தமாகப் பேசுவது பிடிக்காது. நீங்களும் கூட கொஞ்சம்-கொஞ்சமாக சப்தத்திலிருந்து அப்பாற்பட்டு சமிக்ஞைகளின்படி காரியங்களை நடத்த வேண்டும். புரிந்ததா? பாப்தாதா புத்தியின் டிரில் செய்விப்பதற்காக வருகிறார். இதன் மூலம் கண்டறிவதற்கான மற்றும் தொலைநோக்குப் பார்வை உள்ளவராக ஆவதற்கான தகுதி இமர்ஜ் ரூபத்தில் வந்து விடும். ஏனென்றால், இன்னும் போகப்போக இது போன்ற சேவை நடைபெறும். இதில் தொலைநோக்கு புத்தி மற்றும் நிர்ணயசக்தி அதிகம் வேண்டும். அதனால் இந்த டிரில் செய்ய வைத்துக் கொண்டிருக்கிறோம். பிறகு சக்திசாலி ஆகி விடும். டிரில் மூலம் சரீரமும் பலவான் ஆகி விடும். ஆக, இந்த புத்தியின் டிரில் மூலம் புத்தி சக்திசாலி ஆகும். எவ்வளவுக்கெவ்வளவு தனது இருக்கையை முடிவு செய்வீர்களோ, சமயத்தையும் முடிவு செய்வீர்களோ அவ்வளவு தன்னுடைய இல்லறத்தின் காரியங்களையும் தீர்மானிக்க முடியும். இரண்டு வித லாபமும் கிடைக்கும். எவ்வளவு புத்தி முடிவானதாக உள்ளதோ, அப்போது திட்டங்கள் அனைத்தும் கூட தீர்மானிக்கப்பட்டதாக இருக்கும். திட்டம் (program) முடிவானால் முன்னேற்றமும் (progress) தீர்மானிக்கப்பட்டதாக

இருக்கும். முன்னேற்றம் ஆகிறது என்றால் திட்டமும் ஆட்டம் கண்டு விடும். இப்போது முடிவு செய்வதைக் கற்றுக் கொள்ளுங்கள். சம்பூர்ணமாகி மற்றவர்களையும் சம்பூர்ணமாக்க வேண்டியது பாக்கி உள்ளது. யார் ஆகின்றனரோ, அவர்கள் பிறகு நிரூபித்தும் காண்பிக்கின்றனர். தற்போது மற்றவர்களை ஆக்குவதற்கான நிருபணத்தைக் காட்ட வேண்டும். மற்றபடி இந்தக் காரியத்திற்காக வியக்த (ஸ்தூல) தேசத்தில் இருக்க வேண்டும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 26.06.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## காமதேனு என்பதன் அர்த்தம்!

தன்னை சாட்சாத்கார மூர்த்தி என உணர்ந்திருக்கிறீர்களா? (ஜட) மூர்த்திகளுக்கு (சிலை) முன்னால் பக்தர்கள் எதற்காகச் செல்கின்றனர்? தங்களின் மனதின் ஆசைகளை நிறைவேற்றுவதற்காக. எந்த ஓர் ஆத்மாவிடமும் எந்த விதமான ஆசை இருந்தாலும் அதைப் பூர்த்தி செய்ய முடியும் என்று அந்த மாதிரி சாட்சாத்கார மூர்த்தியாக ஆகியிருக்கிறீர்களா? அற்ப காலத்தின் ஆசைகள் அல்ல, சதா காலத்தின் ஆசைகளை நிறைவேற்ற முடியுமா? காமதேனு என்று மாதாக்கள் சொல்லப்படுகின்றனர் இல்லையா? காமதேனு என்பதன் அர்த்தமே -அனைவரின் ஆசைகளை நிறைவேற்றுபவர். யாருக்குத் தங்களின் ஆசைகள் அனைத்தும் முடிவடைந்திருக்குமோ, அவர்கள் தாம் மற்றவர்களின் ஆசைகளையும் நிறைவேற்ற முடியும். சதா இதே லட்சியம் வையுங்கள் -அதாவது நாம் அனைவரின் ஆசைகளை நிறைவேற்றக் கூடிய மூர்த்தி ஆக வேண்டும். அனைவரின் ஆசைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவர்கள் சுயம் இச்சா மாத்ரம் அவித்யா (ஆசை என்றால் என்னவென்றே அறியாத) நிலையில் இருப்பார்கள். அந்த மாதிரி அப்பியாசம் செய்ய வேண்டும். பிராப்தி சொரூபம் ஆவதால் மற்றவர்களுக்குப் பிராப்தி செய்விக்க முடியும். ஆக, சதா தன்னை வள்ளல் அல்லது மகாதானி என உணர வேண்டும். மகாஞானி ஆன பிறகு மகாதானியின் காரியம் நடை பெறுகின்றது. மகாதானி ஆவதன் மூலம் மகாஞானி என அடையாளம் காணப்படுவார்கள். சுற்றி வருவது பிடித்திருக்கிறது. யாருக்குச் சற்றி வரக்கூடிய பழக்கம் உள்ளதோ, அவர்கள் சதா சுற்றி வருவார்கள். இங்கும் அது போலத் தான். எவ்வளவு சுயம் சுற்றி வருவார்களோ, அவ்வளவு மற்றவர்களையும் புத்தியோகத்தின் மூலம் சுற்றி வரச் செய்வார்கள். உங்கள் மூலமாக சாட்சாத்காரம் ஏற்பட வேண்டும். எப்படி (பிரம்மாபாபாவின்) சாகார ரூபத்தின் முன்னால் வந்தபோது ஒவ்வொருவருக்கும் பாவனையின் அனுசாரம் சாட்சாத்காரத்தின் அனுபவம் ஏற்பட்டது. அதே போல் உங்கள்

மூலமாகவும் விநாடிக்கு விநாடி அனுபவம் அல்லது சாட்சாத்காரம் ஆகும். எப்போது அவ்யக்த தோற்றத்தின் ரூபத்தைக் காட்டுவீர்களோ, அப்போது அது போன்ற காட்சி கொடுக்கும் மூர்த்தி அல்லது சாட்சாத்கார மூர்த்தி ஆவீர்கள். யாராவது முன்னால் வந்தால் சரீரம் தென்படக்கூடாது, ஆனால் சூட்சும வதனத்தில் பிரகாசமய ரூபம் காணப்ப வேண்டும். வெறும் நெற்றியின் ஒளி மட்டுமல்ல ஆனால் சரீரம் முழுவதிலிருந்தும் ஒளியின் சாட்சாத்காரம் ஆகும். எப்போது உங்களை ஒளியே ஒளியாகப் பார்ப்பார்களோ, அப்போது தாங்களும் ஒளி ரூபம் ஆகி விடுவார்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 29.06.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சமர்ப்பணத்தின் விசால ரூபம்!

நீங்கள் அனைவரும் தங்களின் நான்கு மூர்த்திகளையும் அறிந்திருக்கிறீர்களா? இன்று பாப்தாதா ஒவ்வொருவரின் சங்கம சமயத்தின் (வருங்காலத்தினுடையதல்ல) நான்கு மூர்த்திகளைத் தான் ஒவ்வொருவரிடமும் பார்த்துக் கொண்டிருக்கிறார். அந்த நான்கு மூர்த்திகள் என்னென்ன? தங்களின் மூர்த்திகளை அறிவீர்களா? (சிலர் பதில் சொன்னார்கள்) அனைவரும் என்ன வர்ணனை செய்தீர்களோ, அந்த மாதிரி மூர்த்தியாக இப்போது ஆகவில்லையா அல்லது ஆகி விட்டீர்களா? எப்போது ஆவீர்கள்? கடைசியில் வந்தாலும் முதலில் (லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட்) போய் விடுவோம் என்று அது போல் யோசித்திருக்கிறீர்கள் ஆனால் கடைசி சமயத்தில் வேகமாகச் செல்ல முடியுமா? எந்த அளவு நீண்ட காலமாகத் தன்னை வெற்றி மூர்த்தியாக ஆக்குவீர்களோ, அவ்வளவு அதிக காலம் அங்கே (சத்யுகத்தில்) சம்பூர்ண ராஜ்யத்தின் அதிகாரி ஆவீர்கள். யாராவது நீண்ட காலத்திற்கு வெற்றி மூர்த்தி ஆகவில்லை என்றால் அதே அனுசாரம் ராஜ்யத்தின் அதிகாரமும் கூட கொஞ்ச காலத்திற்குத் தான் கிடைக்கும், முழு சமயமும் கிடைக்காது. யார் நீண்ட காலமாக சம்பூர்ணமாவதற்கான புருஷார்த்தத்தில் ஈடுபட்டு இருக்கின்றனரோ, அவர்கள் தாம் முழு சமயமும் ராஜ்யத்தின் அதிகாரி ஆகின்றனர். எந்த நான்கு மூர்த்திகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்? இதுவும் கூட சம்பூர்ணமாவதற்கான லட்சியமாகும். ஒன்று, ஞான மூர்த்தி, 2. குணமூர்த்தி, 3. தானமூர்த்தி மற்றும் 4. சம்பூர்ண வெற்றிமூர்த்தி. கேட்டீர்கள் இல்லையா, சேவை செய்வது என்றால், மகாதானி ஆவது. ஆக, ஒவ்வொருவரின் இந்த நான்கு மூர்த்திகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். நான்கு முகங்களுக்கும் பாடல் உள்ளது இல்லையா? ஒரு மூர்த்தியில் நான்கு மூர்த்திகளின் சாட்சாத்காரம் செய்விக்க வேண்டும் -அனைவருக்கும். ஒரு மூர்த்தி குறைவு என்றாலும் அங்கேயும் (சத்யுகத்தில்) இவ்வளவு குறைவு ஏற்பட்டு விடும். எப்படி இங்கே உடன் எடுத்துச் செல்வதற்கான பொருளை 'புக்'

பண்ணி வைத்தால் அங்கே கிடைத்து விடுகிறது. அது போல் இதுவும் 'புக்கிங் ஆஃபீஸ்' தான். எவ்வளவு இங்கே புக் பண்ணுவீர்களோ, அவ்வளவு அங்கே பிராப்தி கிடைக்கும். இதையே யோசித்துப் பாருங்கள், நான்கு மூர்த்திகளாக ஆகியிருக்கிறீர்களா? நான்கு முகத்தவராகி இருக்கிறீர்களா? எந்தளவு இங்கே தங்களின் மூர்த்தியில் அனைத்து விஷயங்களையும் தாரணை செய்வீர்களோ, அவ்வளவேதான் வருங்கால ராஜ்யமும் கிடைக்கும் ஆனால் துவாபர யுகத்தில் உங்களுடைய ஜடமூர்த்திகள் உருவாகும் என்றால், அதுவும் இந் சங்கம யுக மூர்த்தியின் பிரமாணம் தான் உருவாகும். புரிந்ததா? இப்போது சம்பூர்ண மூர்த்தி ஆவதற்கு என்ன லட்சியத்தை முன்னால் வைப்பீர்கள்? எப்படி பக்தி செய்பவர்களுக்குச் சொல்கிறீர்கள் இல்லையா, சித்திரத்தைப் பார்த்து அவர்கள் எப்படி, எந்த புருஷார்த்தத்தின் மூலம் அது போல் ஆனார்கள் எளப் புரிந்து கொள்ளுங்கள். ஆக, நீங்கள் சம்பூர்ண மூர்த்தி ஆவதற்காக என்ன லட்சியத்தை முன்னால் வைப்பீர்கள்? அவர்கள் என்ன லட்சியம் வைத்தார்கள்? சாகாரத்தில் (பிரம்மாவின்) சம்பூர்ண லட்சியமோ ஒன்று தான் இல்லையா? அவர் கர்மாதீத் ஆவதற்காக என்ன லட்சியம் வைத்தார்? எந்த விஷயங்களில் சம்பூர்ணமானார்? சம்பூர்ணம் என்ற சொல்லை எவ்வளவு விசாலமாக தாரணை செய்தார் என்று தெரியுமா? சொல்லோ சம்பூர்ணம் என்ற ஒன்று தான்! ஆனால் எவ்வளவு விசால ரூபத்தில் தாரணை செய்து அப்படி ஆனார்? சர்வ சமர்ப்பணம் என்ற லட்சியத்தின் மூலம் தான் சம்பூர்ணமானார்.

எவ்வளவு சமர்ப்பணமோ அவ்வளவு சம்பூர்ணம் ஆனால் சமர்ப்பணத்திலும் விசால ரூபம் என்ன? எவ்வளவு விசால ரூபத்தில் இதை தாரணை செய்வீர்களோ, அவ்வளவு விசால புத்தி உள்ளவராகவும் ஆவீர்கள் மேலும் உலகத்தின் அதிகாரியாகவும் ஆவீர்கள். அந்த விசாலத்தன்மை என்னவாக இருந்தது? இதிலும் நான்கு விஷயங்கள் உள்ளன. ஒன்று, தன்னுடைய ஒவ்வொரு சங்கல்பமும் சமர்ப்பணம், இரண்டாவது ஓவ்வொரு விநாடியும் சமர்ப்பணம், அதாவது சமயம் சமர்ப்பணம், மூன்றாவது, கர்மமும் சமர்ப்பணம், நாலாவது சம்மந்தம் மற்றும் செல்வம் என்ன உள்ளதோ, அதுவும் சமர்ப்பணம். சர்வ சம்மந்தத்தின் சமர்ப்பணமும் கூட வேண்டும். அந்த சம்மந்தத்தில் லௌகிக சம்மந்தமும் வந்து விடுகிறது ஆனால் இந்த ஆத்மா மற்றும் சரீரத்தின் சம்மந்தம் என்ன உள்ளதோ, அதுவும் சமர்ப்பணம். இந்த

அளவுக்கு சம்மந்தத்தை சமர்ப்பணம் செய்து விட்டீர்களா? அழியக்கூடிய செல்வமோ ஒன்றும் பெரிய விஷயமே கிடையாது; ஆனால் அழியாத செல்வமாகிய சுகம், சாந்தி, தூய்மை, அன்பு ஆனந்தத்தின் பிராப்தி கிடைப்பதே பிறப்புரிமையினால் தான். அதையும் கூட மற்ற ஆத்மாக்களின் சேவையில் சமர்ப்பணம் செய்தாயிற்று. (பிரம்மாபாபா) குழந்தைகளின் சாந்தியில் தான் தம்முடைய சாந்தி உள்ளதெனப் புரிந்து கொண்டார். ஆக, ஆத்மாக்களுக்கு சாந்தி கொடுப்பதில் தான் தமது சாந்தி இருக்கிறது எனப் புரிந்து கொண்டார். இது லௌகிக் செல்வம் மற்றும் அதன் கூடவே ஈஸ்வரிய செல்வத்தையும் கூட சமர்ப்பணம் செய்து தனது சாட்சி நிலையில் இருப்பதாகும். ஆக, சமர்ப்பணம் என்ற சொல்லுக்கு இவ்வளவு பெரிய விசாலமான ரகசியம் உள்ளது. புரிந்ததா? அந்த மாதிரி விசால ரூபத்தில் தாரணை செய்பவர்கள் தாம் சம்பூர்ண மூர்த்தி மற்றும் வெற்றி மூர்த்தி ஆவார்கள். ஆக, சமர்ப்பணம் என்ற சொல்லை ஒன்றும் சாதாரண அர்த்தத்தில் புரிந்து கொள்ளக் கூடாது. லௌகிகத்தை சமர்ப்பணம் செய்வது சுலபம் ஆனால் ஈஸ்வரிய பிராப்தி என்ன உள்ளதோ, அதையும் கூட சமர்ப்பணம் செய்ய வேண்டும், அதாவது மகாதானி ஆக வேண்டும் மற்றும் மற்றவர்களின் சுபசிந்தனையாளர் ஆக வேண்டும். இது நம்பர்வார் தகுதிக்கேற்றவாறு, சக்திக்கேற்றவாறு நடைபெறுகின்றது. இந்த அளவுக்கு சமர்ப்பணம் ஆகிறவர்கள் சம்பூர்ண சமர்ப்பணமானவர் எனச் அழைக்கப்படுகின்றனர். அத்தகைய சம்பூர்ண-மூர்த்தி, சமர்ப்பண-மூர்த்தி ஆகியிருக்கிறீர்களா? தன்னுடையது (எனது) என்பது முற்றிலும் உள்ளடங்கி விட வேண்டும். எப்போது ஒரு பொருள் யாரிடமாவது உள்ளடங்கி விடுகிறதோ, அப்போது சமமாகி விடுகிறது. உள்ளடங்கி விடுவது என்றாலே சமமாகி விடுவதாகும். தன்னுடையதை எவ்வளவு உள்ளடக்கி விடுவீர்களோ, அவ்வளவு சமமான மூர்த்தி ஆகி விடுவீர்கள். நீங்கள் மற்ற ஆத்மாக்களுக்கு சேவை செய்யும் போது என்ன லட்சியாம் வைத்துச் செய்கிறீர்கள்? (தங்களைப் போல் ஆக்குவதற்காக) தங்களைப் போல் (ஆப் சமான்) கூட இல்லை ஆனால் பாபாவுக்குச் சமமாக (பாப் சமான்) ஆக்க வேண்டும். தங்களைப் போல் ஆக்குவீர்களானால் தங்களிடம் உள்ள குறைகள் அவர்களிடமும் வந்து விடும். ஆகவே சம்பூர்ணமாக வேண்டுமானால் தங்களைப் போலவும் இல்லை ஆனால் பாப் சமான் ஆக்க வேண்டும். எப்படி பாபா தம்மை விடவும் உயர்ந்தவர்களாக ஆக்குகிறார் இல்லையா? பாப் சமான் ஆக்குவீர்களானால் தந்தையைப் பின்பற்றுவதாகி விடும். எப்படி பாபா

தம்மைக் காட்டிலும் உயர்ந்தவர்களாக ஆக்கினாரோ, அது போல் தங்களை விடவும் உயர்ந்த பாப் சமான் ஆக்குவீர்களானால் நீங்கள் தந்தையைப் பின்பற்றியதாக ௦ஆகின்றது. ஆகவே இப்போது தங்களைப் போல் கூட அல்ல, பாப் சமான் ஆக்க வேண்டும். லட்சியமே தங்களைப் போல் ஆக்க வேண்டும் என வைப்பீர்களானால் அவர்களிடம் (உங்களது) குறைபாடு இருந்து விடும். ஏனென்றால் லட்சியமே நீங்கள் அவ்வளவு தான் வைத்தீர்கள். ஆகவே லட்சியம் எப்போதுமே சம்பூர்ண நிலை அடைவதற்காக வைக்க வேண்டும் யார் சம்பூர்ண மூர்த்தி பிரத்யட்ச, பிரசித்தி பெற்றவராகி விட்டனரோ, அவர்களுக்காக லட்சியம் வைக்க வேண்டியதில்லை. யார் இப்போது குப்தமாக (மறைவாக) உள்ளனரோ. வெளிப்படையாக வரவில்லையோ, அவர்களுக்கும் லட்சியம் வைக்க முடியாது. ஏனென்றால் நோக்கம் எப்படியோ அது போல் குறிக்கோள் வைக்க வேண்டியுள்ளது. ஆக, நோக்கத்தை சிரேஷ்டமானதாக வைப்பீர்களானால் பிராப்தியும் சிரேஷ்டமானதாக இருக்கும். இப்போது மூன்றாவது கண் எப்போதும் மேலே இலக்கின் மீது நன்கு பற்றிக் கொண்டதாக இருக்க வேண்டும். எப்படி யாராவது மூழ்கிய அவஸ்தாவில் இருப்பார்களானால் அவர்களின் கண்கள் ஒரே நிலையில் நிலைத்திருக்கும் இல்லையா? அது போல் இந்த மூன்றாவது கண், திவ்ய புத்தியின் இந்தக் கண்ணும் கூட சதா ஒரே நிலையாக, ஒரே ரசனையில் இருக்கும். ஒரே நிலையில் என்றால் ஒருவரிடமே நிலைத்து, மூழ்கி இருக்கும் ரூபம் காணப்படும். மூன்றாவது கண்ணின் சாட்சாத்காரம் எப்படி ஏற்படும்? நெற்றியின் மூலம். நெற்றியில் ஜொலிப்பு, கண்களில் பொலிவு காணப்படும். இதிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம் -இவருடைய மூன்றாவது கண் மூழ்கிய நிலையில் உள்ளதா அல்லது யுத்த மைதானத்தில் உள்ளதா என்று. எப்போது கண் கொஞ்சம் சரியில்லாமல் உள்ளதோ, அப்போது கண் இமைகள் அதிகமாக மேலே கீழே படபடத்துக் கொண்டிருக்கும். இதுவும் மூன்றாவது கண் யதார்த்த ரீதியில் சரியாக இருக்குமானால், அதாவது திவ்ய திருஷ்டி யதார்த்த ரீதியில் சுத்தமாக இருக்குமானால் ஒரே நிலையில் இருக்கும். கண்ணில் ஏதாவது தூசி விழுந்து விடுமானால் என்னவாகும்? இமைகள் படபடக்கத் தொடங்கும். குப்பையின் அடையாளம் படபடப்பு அல்லது ஆட்டம் காண்பது. யதார்த்த ஆரோக்கியத்தின் அடையாளம் ஸ்திரமாக இருப்பது. அவ்வாறு இந்த மூன்றாவது கண் எப்போதும் ஒரு நிலையில் நிலைத்திருக்க வேண்டும். இந்த சாட்சாத்காரம் உங்கள் நெற்றியின்

மூலமாக ஏற்படும். கண்கள் மூலம் ஆனால் சோதித்துப் பாருங்கள், நமது மூன்றாவது கண் வெகு விரைவில் மூடிக் கொள்வதும் திறப்பதுமாக இருக்கிறதா? அல்லது சதா திறந்திருக்கிறதா? யாராவது நினைவில் மூழ்கி விடுவார்களானால் கூட கண்கள் ஒரே நிலையில் நிலைத்து விடும். ஆக, இங்கேயும் கூட யார் ஒருவருடைய நினைவிலேயே மூழ்கி இருக்கின்றனரோ, அவர்கள் தாம் சம்பூர்ண ஸ்திதியில் நிலைக்க முடியும். இல்லையென்றால் கண்களைப் போல் மூடுவதும் திறப்பதுமாக இருக்கும். ஒரே நிலையில் இருக்காது. குப்பை ஏதேனும் இருக்குமானால் விரைவாக நீக்கி விடுங்கள். இல்லையென்றால், சிரிப்பாக ஒரு விஷயத்தைச் சொல்லவா? யாராவது உங்களை சாட்சாத்காரமாகப் பார்க்கின்றனர் என்றால், உங்கள் மூர்த்தி மேலே கீழே அசைந்து கொண்டிருக்குமானால் என்ன சாட்சாத்காரம் செய்வார்கள்? எப்படி போட்டோ எடுக்கும்போது அசையாமல் இருக்கச் சொல்கின்றனர் இல்லையா? அசைந்து விட்டால் போட்டோ கெட்டுப் போகும். அதே போல் உங்கள் அவஸ்தா ஆடுகிறது என்றால் என்ன சாட்சாத்காரம் ஆகும்ர எப்படி போட்டோ எடுக்கும்போது தன்னை எவ்வளவு ஸ்திரமாக்கிக் கொள்கிறீர்களோ, அதே போல் நம்முடைய பக்தர்கள் ஒவ்வொரு சமயமும் நமது சாட்சாத்காரம் செய்து கொண்டிருக்கின்றனர் என்று புரிந்து கொள்ளுங்கள். ஆக, சாட்சாத்கார மூர்த்தி, அதாவது ஸ்திர மூர்த்தியாக இருப்பீர்கள். இல்லையென்றால் பக்தர்களுக்கு சாட்சாத்காரம் தெளிவாக ஆகாது. தெளிவான சாட்சாத்காரம் செய்விப்பதற்காக ஸ்திர புத்தி, ஒரே நிலையில் நிலைக்கும் ஸ்திதி அவசியமாகும். புரிந்ததா? இப்போதிருந்தே பக்தர்கள் ஒவ்வொரு வரையும் சாட்சாத்காரமாகப் பார்ப்பார்கள். அந்தப் பொருள், அதாவது சம்ஸ்காரம் அந்த பக்தர்களின் ஆத்மாவில் நிரம்பும். பிறகு அந்த சம்ஸ்காரம் (மர்ஜ்) உள்ளடங்கி விடும். பிறகு துவாபர யுகத்தில் அதே சம்ஸ்காரம் இமர்ஜ் (வெளிப்படும்) ஆகும். எப்படி நீங்கள் புரிய வைக்கிறீர்கள் இல்லையா, தர்ம ஸ்தாபகர்கள் இங்கிருந்து செய்தியைப் பெற்று, சம்ஸ்காரத்தை நிரப்பிக் கொண்டு செல்வார்கள். அது தான் பிறகு (துவாபர யுகத்தில் தொடங்கி) வெளி வரும். அதே போல் உங்களனைவரின் அவரவருடைய பக்தர்கள் மற்றும் பிரஜைகள் சம்ஸ்காரத்தை எடுத்துச் செல்வார்கள். பிறகு அதன் பிரமாணம் தான் இமர்ஜ் ஆகும். பக்தர்களுக்கு முன்னால் தெளிவான மூர்த்தியாகக் காணப்படவில்லை என்றால், அவர்களிடம் அந்த சம்ஸ்காரம் எப்படி நிரம்பும்? இந்தக் காரியத்தையும் செய்ய வேண்டும். பிரஜையை

உருவாக்கினால் மட்டும் போதாது அதனுடன் கூடவே பக்தர்களுக்குள்ளும் அந்த சம்ஸ்காரத்தை நிரப்ப வேண்டும். எத்தனைப் பிரஜைகள் உருவாகியுள்ளனர், எத்தனை பக்தர்கள் உருவாகியுள்ளனர் என்பதும் தெரிய வரும். பக்தர்களின் மாலை மற்றும் பிரஜைகளின் மாலை இரண்டும் பிரத்யட்சமாகும். ஒவ்வொருவருக்கும் அவரவருடைய இரண்டு மாலைகளும் சாட்சாத்காரமாகும் -நான் மாலையில் எந்த இடத்தில் சுற்றப்பட்டிருக்கிறேன். இதுவும் மிக ரகசியமாகும், அதாவது யாருடைய பக்தர்கள் அதிகமாக உள்ளனர், யாருக்குப் பிரஜைகள் அதிகமாக உருவாகின்றனர் என்று. எப்படி சிலருடைய ராஜதானி பெரிதாக இருந்தாலும் செல்வம் குறைவாக இருக்கும், சிலருக்கு ராஜதானி சிறியதாக இருந்தாலும் செல்வம் அதிகம் இருக்கும். இதுவும் கூட குப்தமான ரகசியமாகும். இது எப்போதாவது வெளிப்படலாம். இப்போதோ லட்சியம் வையுங்கள் பிரஜைகளை உருவாக்குவதற்காக. பக்தர்களோ கடைசி நேரத்தில் 'மினிட் மோட்டர்' போல் உருவாவார்கள். இங்கேயும் பக்தர்கள் வணக்கம் செய்வார்கள். பூஜை அல்ல. மகிமை பாடுவார்கள், பூஜை பிறகு அங்கே செய்வார்கள். இவையனைத்தும் பின்னால் தெரிய வரும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 02.07.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அமைதி பலத்தின் பிரயோகம்!

அன்பு மற்றும் சக்தியின் ரூபமாக தன்னை உணருகின்றீர்களா? சக்திகளின் காரியம் என்னவாக இருக்கும் என்று தெரியுமா? சக்திகளுக்கு முக்கியமாக இரண்டு குணங்கள் பாடப்படுகின்றன. அவைகள் எது? உங்களது நினைவுச் சின்னத்தில் விசேஷமாக என்ன காண்பிக்கின்றனர்? சக்திகளின் மூர்த்தியில் முக்கியமாக என்ன விசேஷம் என்ன இருக்கும்? சுயம் சக்திகளாக இருக்கின்றீர்கள் மற்றும் தனது விசேஷதாவை அறியாமல் இருக்கின்றீர்கள். சக்திகளின் விசேஷதா என்னவெனில் எந்த அளவிற்கு அன்பான மூர்த்திகளாக இருக்கின்றார்களோ அந்த அளவிற்கு சம்ஹார மூர்த்திகளாகவும் இருப்பர். சக்திகளின் கண்கள் எப்பொழுதும் அன்பானதாக இருக்கும் ஆனால் எந்த அளவிற்கு அன்பான மூர்த்திகளாக உள்ளனரோ அந்த அளவிற்கு விகாரால் ரூபமாகவும் இருப்பர். ஒரு விநாடியில் யாரையும் அன்பான மூர்த்திகளாக ஆக்கவும் முடியும், ஒரே விநாடியில் யாரையும் விநாசமும் செய்ய முடியும். ஆக இப்படிப்பட்ட இரு குணங்களையும் தனக்குள் பார்க்கின்றார்களா? இரண்டு குணங்களும் பிரத்க்ஷ்ய ரூபத்தில் இருக்கின்றதா? அல்லது குப்தமாக இருக்கின்றதா? அன்பான ரூபம் வெளிப்படையாகவும் சக்தி ரூபம் ரகசியமாக இருக்கின்றது. பிறகு அந்த பயங்கர ரூபத்தை எப்பொழுது வெளிப்படுத்தப் போகின்றீர்கள்? தெரியுமா? இன்றைய நாட்களில் பாப்தாதா விசேஷமாக என்ன சுலோகன் கொடுக்கின்றார்? எப்பொழுது என்பது கிடையாது ஆனால் இப்பொழுது செய்ய வேண்டும். எப்பொழுது என்ற சப்தம் பலவீனமானவர்கள் பேசுவார்கள். தைரியம் நிறைந்த சக்திகள் இப்பொழுது என்று கூறுவார்கள். நீங்கள் சுயம் அழிவற்றவர்களாக இருக்கின்றீர்கள். அதுபோல் இந்த மாயையில் மாட்டிக் கொண்டு விநாசம் ஆவது என்பது அவர்களால் முடியாத காரியமாகும். அழிவற்றவர்களாக இருக்கக் கூடியவர்களுக்கு மாயையின் எந்த அலைகளிலும் வருவதும் முடியாது காரியமாகும். பாப்தாதாவிற்கு கூறுவது போன்று அழிவற்ற நிலையில்

இருக்கக் கூடியவர்களுக்கு, மாயையின் எந்த சொரூபத்திற்கும் அடிமையாவது என்பது முடியாத காரியமாகும். யார் சுயம் அடிமைத்தனத்தில் வந்து விடுகின்றார்களோ அவர்களின் முன்பு மற்றவர்கள் எப்படி தலை வணங்குவார்கள்? முழு உலகையும் தன் முன் தலைவணங்க வைக்கக் கூடியவர்கள் அல்லவா! சிங்கத்தைப் போன்ற சக்திகளின் ஒரு எண்ணமும் அல்லது ஒரு பேச்சும் வீண் ஆக முடியாது. எதை கூறுகின்றார்களோ அதனை செய்வார்கள். சங்கல்பம் மற்றும் செயலில் வித்தியாசம் இருக்காது. ஏனெனில் சங்கல்பமும் வாழ்க்கையில் விலைமதிப்பற்ற பொக்கிசமாகும். ஸ்தூல பொக்கி சங்களை வீணாக்குவது கிடையாது. அது போன்று இரண்டு குணங்களும் பிரத்க்ஷக்ஷ்ச ரூபத்தில் இருக்கக் கூடிய சிவசக்திகளின் ஒரு சங்கல்பம் கூட வீண் ஆவது கிடையாது. ஒவ்வொரு சங்கல்பத்தின் மூலம் சுயத்திற்கும் மற்றும் அனைவருக்கும் நன்மை ஏற்படுகின்றது. ஒரு விநாடியில் ஒரே சங்கல்பத்தின் மூலமாகவும் நன்மை செய்ய முடியும். ஆகையால் தான் சக்திகளை கல்யாணி என்றும் கூறுகின்றனர். பாப்தாதா கல்யாணகாரியாக இருப்பது போன்று குழந்தைகளும் கல்யாணகாரி என்ற பெயரில் பிரசித்தமாக இருக்கின்றீர்கள். இப்பொழுது அந்த அளவிற்கு கணக்கு பார்க்க வேண்டும். எவ்வளவு நேரங்களில் எனது எவ்வளவு எண்ணங்கள் வெற்றியடைந்தாக ஆனது? மற்றும் எவ்வளவு வெற்றியடையாமல் இருந்தன? ஒரு இடத்தில் அமர்ந்து தங்களது ஆயுதத்தின் மூலம் ஒரு விநாடியில் எங்கு வேண்டு மானாலும் விநாசம் செய்யுமளவிற்கு இன்றைய நாட்களில் விஞ்ஞானம் மிகவும் முன்னேறியிருக்கின்றது. ஆக சக்திகளாலும் இந்த அமைதி பலத்தின் மூலம் எங்கு அமர்ந்திருந்தாலும் ஒரு விநாடியில் காரியம் செய்ய முடியாதா? அவர்கள் எங்கும் செல்ல வேண்டிய அல்லது வர வேண்டிய அவசியம் இல்லை. தனது தூய எண்ணங்களின் மூலம் ஆத்மாக்களை கவர்ந்திழுத்து முன்னால் கொண்டு வருவர். முயற்சி செய்ய வேண்டிய அவசியமில்லை. இப்பொழுது இப்படிப்பட்ட பிரபாவத்தைப் பார்ப்பீர்கள். நீங்கள் அம்பை அப்படித் தொடுக்க வேண்டும் அதாவது அம்புடன் அந்த பறவை வந்து விடவேண்டும் என்று சாகாரத்ததில் கூறிக் கொண்டு வந்தார். இது தங்களது மனோபலத்ததின் மூலமாக தான் ஏற்படும்.

மிகவும் அதிகமான தூரத்திற்கு எந்த ஒளி செல்கின்றது? கலங்கரை விளக்கத்தின் ஒளி. ஆக இப்பொழுது கலங்கரை விளக்காகவும், சர்ச்

லைட்டாகவும் ஆக வேண்டும். சாதாரண பல்பாகக் கிடையாது. யார் சுய தேடுதல் (search) செய்கின்றார்களோ அவர்களே சர்ச் லைட்டாக ஆக முடியும். எந்த அளவிற்கு சுயத்தில் தேடுதல் செய்கின்றீர்களோ அந்த அளவிற்கு சர்ச் லைட்டாக ஆவீர்கள். ஒருவேளை சுய தேடுதல் செய்யவில்லையெனில் சர்ச் லைட்டாக ஆக முடியாது. இப்பொழுது அந்த நேரம் வந்து விட்டது. இப்பொழுது பவர்புல்லாக மட்டுமின்றி மனோபலம் (வில்பவர்) உள்ளவர்களாகவும் ஆக வேண்டும். வில்பவர் மற்றும் எல்லையற்ற (wide) சக்தி வேண்டும். வில்பவர் மற்றும் எல்லையற்றதின் பக்கம் திருஷ்டி செல்ல வேண்டும். ஆக இப்பொழுது எதை சேர்த்துக் கொள்ளப் போகின்றீர்கள்? சக்தி இருக்கின்றது தான் ஆனால் இப்பொழுது வில்பவர் மற்றும் எல்லையற்ற சக்தி தேவை. இன்று பாப்தாதா எந்த ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கின்றார்? நம்பிக்கை நட்சத்திரங்களை. இப்பொழுது நம்பிக்கை நட்சத்திரம், பிறகு வெற்றி நட்சத்திரம். ஆக நிகழ்காலத்தையும் பார்க்கின்றார் மற்றும் எதிர்காலத்தையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார். வெற்றி என்பது உங்களது கழுத்து மாலையாகும். தனது கழுத்தில் வெற்றி மாலை தென்படுகின்றதா? சங்கமத்தில் என்ன அலங்காரம் இருக்கின்றது? வெற்றி மாலை என்பது தகுதியின் அடிப்படையில் ஒவ்வொரு கழுத்திலும் விழுத்திருக்கின்றது. ஆக பாப்தாதா குழந்தைகளின் அலங்காரத்தை பார்க்கின்றார். அலங்கரிக்கப்பட்ட குழந்தைகள் பிடிக்கும். பாப்தாதாவிற்கு இப்பொழுது எந்த சங்கல்பம் நடந்து கொண்டிருக்கின்றது? பாப்தாதா உங்களிடம் என்ன பேச போகின்றார்? என்பதை தெரிந்து கொள்ள முடிகின்றதா? இன்றைய நாட்களில் தந்தை புத்திக்கான டிரில் செய்விப்பதற்காக வருகின்றார். இப்பொழுது மைதானத்தில் வெளிப்பட வேண்டும். இப்பொழுது ரகசியமாக இருப்பதற்கான நேரம் கிடையாது. எந்த அளவிற்கு வெளிப்படுகின்றீர்களோ அந்த அளவிற்கு பாப்தாதாவை வெளிப் படுத்துவீர்கள். எல்லையற்றதில் சுற்றி வந்து சக்கரவர்த்திகளாக ஆகிக் கொண்டிருக்கின்றீர்களா? யார் ஒரே இடத்தில் அமர்ந்திருக்கின்றார்களோ அவர்கள் எப்படி அழைக்கப்படுகின்றனர்? பல இடங்களுக்குச் செல்லாமல் ஒரே இடத்தில் அமர்ந்து சேவை செய்து கொண்டிருக்கக் கூடியவர்கள் எதிர்காலத்தில் அவர்களுக்கு ஒரு தனிப்பட்ட ராஜ்யம் கிடைத்து விடும். தந்தையும் அனைவருக்கும் உதவியாளராக ஆகியிருக்கின்றார் அல்லவா! யார் உலகிலுள்ள

# 1970 அவ்யக்த முரளி

ஒவ்வொரு ஆத்மாவிடத்தில் சம்பந்தம் வைத்து மற்றும் உதவியாளராக ஆகின்றார்களோ அவர்களே உலகிற்கு எஜமானர்களாக ஆவார்கள். எப்படி பாப்தாதா உலகத்தினருக்கு பிடித்தமானவராகவும், உதவியாளராகவும் ஆகியிருக்கின்றாரோ அதே போன்று குழந்தைகளும் தந்தையை பின்பற்ற வேண்டும். அப்பொழுது தான் உலக மாகாராஜன் என்ற பதவியில் வருவதற்கு அதிகாரியாக ஆக முடியும். கணக்கு இருக்கின்றதல்லவா! எப்படி மற்றும் எந்த அளவிற்கோ அப்படி மற்றும் அந்த அளவிற்கு தான் கிடைக்கும். இப்பொழுது உறுதிமொழி எடுத்துக் கொண்டு விசேமாக பிரத்டசம் ஆக வேண்டும். மற்றவர்களை புகழாதீர்கள். தந்தையை வெளிப்படுத்துங்கள். பிரத்யம் ஏற்படும் பொழுது புகழும் ஏற்படும். விஷ்வ அதிகாரியாக ஆக வேண்டும் என்ற லட்சியம் வைத்தருக்கின்றீர்கள் அல்லவா! இப்பொழுது இந்த தீவிர முயற்சி தான் செய்ய வேண்டும். இந்த பழைய உலகில் சகஜமாக எல்லையற்ற வைராக்கியம் ஏற்படுவதற்கான சாதனம் என்ன? (சிலர் சில கருத்துக்களை கூறினர்) யாரெல்லாம் என்ன கருத்துக்களை கூறினீர்களோ அது எளிது தான் என்று புரிந்து கொண்டு தானே கூறினீர்கள். எளிமையெனில் எல்லையற்ற வைராக்கியம் உடையவர்களாக எளிமையாக ஆகி விடு வீர்கள். தன் மீதே பயன்படுத்த முடியவில்லையெனில் மற்றவர்கள் மீது எப்படி பயன்படுத்துவீர்கள்? எல்லையற்ற வைராக்கியம் என்று கூறுகின்றீர்கள். வைராக்கியம் உடையவர்கள் எங்கு வசிப்பார்கள்? எல்லையற்ற வைராக்கியமுடையவர்களாக ஆக வேண்டுமெனில் சதா தன்னை மதுபன் நிவாசி என்று நினையுங்கள் என்ற எளிய யுக்தியை கூறுகின்றார் ஆனால் மதுவனத்தை வெறும் மதுவனமாக மட்டுமே பார்க்காதீர்கள். மதுவனத்தில் மதுசூதனன் இருப்பதாக பாருங்கள். ஆக மதுவனம் நினைவிற்கு வருவதன் மூலம் பாப்தாதா, தெய்வீக பரிவாரம், தியாகம், தபஸ்யா மற்றும் சேவையும் நினைவிற்கு வந்து விடும். மதுவனம் தபஸ்யா பூமியாகவும் இருக்கின்றது. ஒரே விநாடியில் மதுவனம் தியாகம் செய்ய வைத்து விடும். இங்கு எல்லையற்ற வைராக்கியம் உடையவர்களாக ஆகி விட்டீர்கள் அல்லவா! ஆக மதுவனம் என்பது தியாம். வைராக்கியம் ஏற்படுத்தக் கூடியதாகும். எப்பொழுது எல்லையற்ற வைராக்கியம் உடையவர்களாக ஆவீர்களோ அப்பொழுது தான் எல்லையற்ற சேவை செய்ய முடியும். எங்கும் பற்று இருக்கக் கூடாது. தன் மீது தானே வைராக்கியம் வைக்கவும் கூடாது எனில்

மற்றவர்களின் விசயத்தைப் பற்றி பேசவே வேண்டாம்! இன்று பாப்தாதா தங்களுக்குள் உரையாடல் செய்து கொண்டிருந்தனர். ஒவ்வொரு ஆத்மாவும் எந்த அளவிற்கு கட்டுப்பட்டு இருக்கின்றன? மற்றும் ஒவ்வொருவரின் பந்தனம் எந்த அளவிற்கு நீங்கியிருக்கின்றது? என்ற காட்சியை இன்று அதிகாலையில் வதனத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார். எந்த அளவிற்கு இன்னும் நீங்காமல் இருக்கின்றது? சிலருக்கு பெரிய கயிறாகவும் இருக்கின்றது. சிலருக்கு குறைவாக இருக்கின்றது. சிலருக்கு பலவீனமான கயிறாகவும் இருக்கின்றது. யாருடைய கயிறு பலவீனமாக இருக்கின்றது? யாருடைய கயிறு பெரியதாக இருக்கின்றது? யாருடைய கயிறு மெல்லியதாக இருக்கின்றது? என்ற காட்சியை பார்த்துக் கொண்டிருந்தார். இருப்பினும் பந்தனம் என்று தானே கூற வேண்டும். ஏதாவது ஒரு பலவீனம் அல்லது உறுதியான நூலாக இருக்கின்றது. பலவீன நூல் என்றாலும் பந்தனம் என்று தான் கூற வேண்டும். அவர்களுக்கு தாமதம் ஆகாது. பெரிய கயிறு உடையவர்களுக்கு தாமதமும் ஏற்படுகின்றது மற்றும் உழைப்பும் ஏற்படுகின்றது. ஆக இன்று வதனத்தில் இந்த காட்சியை பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொருவரும் தன்னைத்தான் அறிந்து கொள்ள முடியும். பெரிய கயிறா? அல்லது மெல்லியதா? பலவீனமான கயிறா? அல்லது உறுதியானதா? பந்தனத்தில் இருக்கின்றேனா? அல்லது சுதந்திரமாக இருக்கின்றேனா? சுதந்திரத்தின் பொருள் என்னவெனில் தெளிவாக இருப்பதாகும். இருப்பினும் பாப்தாதா புன்முறுவல் செய்கின்றார். அதிசயம் செய்கின்றீர்கள் ஆனால் பாப்தாதா அதை விட மேலே பார்க்க விரும்புகின்றார். எந்த அளவிற்கு உங்களது வாயில் பாப்தாதாவின் பெயர் இருக்கின்றதோ அந்த அளவிற்கே அனைவரின் வாயிலும் உங்களது பெயர் இருக்கும், மதுவனம் என்றாலே மாறக்கூடிய (பரிவர்தன்) பூமியாகும். ஆக என்ன மாற்றம் செய்து செல்ல வேண்டும்? என்பதை அறிந்திருக்கின்றீர்கள் அல்லவா! நல்லது.

**வரதானம்: உனது, எனது என்ற குழப்பங்களை சமாப்தி செய்து கருணை பாவனையை வெளிப்படுத்தக் கூடிய கருணை நிறைந்தவர்களாக ஆகுக!**

நாளுக்கு நாள் எத்தனையோ ஆத்மாக்கள் துக்கத்தின் அலைகளில் வருகின்றனர். இயற்கையின் பிரச்சனைகள் சிறிது ஏற்பட்டதும்,

ஆபத்துக்கள் வந்ததும் அநேக ஆத்மாக்கள் அலைகின்றனர். கருணை, இரக்கம் கேட்கின்றனர். ஆக இப்படிப்பட்ட ஆத்மாக்களின் அழைப்பை கேட்டு கருணை பாவனையை வெளிப்படுத்துங்கள். பூஜ்ய சொரூபம், கருணையை தாரணை செய்யுங்கள். தன்னை சம்பன்னமாக ஆக்கிக் கொண்டால் இந்த துக்கமான உலகம் சம்பன்னம் ஆகி விடும். இப்பொழுது மாற்றத்திற்கான சுபபாவனையின் அலையை தீவிர வேகத்தில் பரப்புங்கள். அப்பொழுது உனது, எனது என்ற குழப்பங்கள் சமாப்தி ஆகி விடும்.

**சுலோகன்: தேகம், தேகத்தின் பழைய உலகம் மற்றும் சம்பந்தங்களிலிருந்து மேலே பறக்கக் கூடியவர்களே இந்திரபிரஸ்த நிவாசிகள் ஆவர்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 11.07.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கமயுகத்தின் டிகிரி (பட்டம்) மற்றும் எதிர்காலத்தின் பிராப்தி!

இன்று பாப்தாதா அனைத்து மாணவர்களும் படிப்பிற்குப் பிறகு என்னென்ன டிகிரி பட்டம்) அடைந்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார். இந்தப் படிப்பின் டிகிரியாக என்ன கிடைக்கிறது? டிகிரி கிடைத்து விட்டதா? அல்லது கிடைக்க வேண்டுமா? படிப்பிற்குப் பிறகு டிகிரி கிடைக்கிறது இல்லையா? அப்படி இந்த சங்கமயுகத்தில் உங்களுக்கு என்ன கிடைக்கும்? சம்பூர்ண பரிஷ்தா (முழுமையடைந்து) அல்லது அவ்யக்த பரிஷ்தா. இது தான் சங்கமயுகத்தின் டிகிரி ஆகும். மேலும் தேவதை பதவி எதிர்காலத் தின் பிராப்தி (பலன்) ஆகும். அப்படி உங்களுடைய டிகிரி சம்பூர்ண அவ்யக்த பரிஷ்தா என்பதாகும். இந்த டிகிரிக்கான முக்கியமான தகுதிகள் என்னென்ன இருக்கிறது? மேலும் ஒவ்வொரு மாணவரும் இதில் எவ்வளவு தகுதியாக ஆகியிருக்கிறார் என்ற இதையும் பார்த்துக் கொண்டிருந்தோம். எவ்வளவு ஒருவர் தகுதியானவராக இருப்பாரோ அவ்வளவே மற்றவர்களையும் தகுதியானவர்களாக ஆக்குவார். தகுதியானவராக இருப்பவர் தரமானதை உருவாக்குவார். மேலும் யார் அப்படி இல்லையோ அவர் எண்ணிக்கையை உருவாக்குவார். அப்படி இன்று அனைவரின் தகுதிகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம். எந்த எந்த தகுதியில் தகுதியானவராக ஆகியிருக்கிறார் என்று பார்க்கப்படுகிறது இல்லையா. அப்படி இங்கு முக்கியமான தகுதிகளில் ஒன்று எவ்வளவு ஞானம் நிறைந்தவராக ஆகியிருக்கிறார் என்று பார்த்துக் கொண்டிருந்தோம். ஞானம் நிறைந்ததின் கூடவே நம்பிக்கை நிறைந்தவராக, வெற்றி நிறைந்தவராக, சக்தி நிறைந்தவராக மேலும் சேவைக்குத் தகுதியானவராக எதுவரை ஆகியிருக்கிறார்? இவ்வளவு தகுதிகள் ஒருவேளை யாரிடமாவது வந்து விட்டது என்றால் டிகிரி கிடைத்து விடும். எனவே இந்த தகுதிகளில் எந்தெந்த தகுதிகள் என்னிடம் தாரணை ஆகியிருக்கின்றன என்று ஒவ்வொருவரும் பார்க்க வேண்டும். ஞானம்

நிறைந்தவர் என்றால் புத்தியில் முழு ஞானமும் தாரணை ஆகியிருப்பது எவ்வளவு ஞானம் நிறைந்தவராக இருப்பாரோ அவ்வளவே வெற்றி நிறைந்தவராக இருப்பார். ஒருவேளை வெற்றி குறைவாக இருக்கிறது என்றால் ஞானத்தின் குறை இருக்கிறது என்று புரிந்து கொள்வோம். வெற்றி நிறைந்தவராக இல்லாமல் இருப்பதற்கான காரணம் என்ன? நம்பிக்கையுள்ளவராக இருப்பதில் குறை இருக்கிறது. நம்பிக்கையுள்ளவர் என்றால் நிச்சயபுத்தி ஒன்று தன் மேல் நம்பிக்கை, இரண்டாவது பாப்தாதா மேல் மற்றும் மூன்றாவது குடும்பத்தின் அனைத்து ஆத்மாக்களின் மேல் நம்பிக்கை உள்ளவராக இருக்க வேண்டியதாக இருக்கிறது. எவ்வளவு நம்பிக்கையுள்ளவராகி நிச்சயபுத்தியுடன் ஏதாவது காரியம் செய்தீர்கள் என்றால் நிச்சயபுத்தியுடையவரின் வெற்றி அதாவது நம்பிக்கை யுள்ளவராக இருப்பதினால் வெற்றி நிறைந்தவராக ஆகியே விடுகிறார்.அவரின் ஒவ்வொரு காரியம், ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு வார்த்தையும் சக்தி நிறைந்ததாக இருக்கும். அந்த மாதிரி குவாலிபைட் அதாவது தகுதியானவருக்குத் தான் இந்த டிகிரி கிடைக்க முடியும். ஒருவேளை டிகிரி கிடைக்கவில்லை என்றால் என்ன ஆகிறது தெரியுமா? கோர்ட் மூலமாக என்ன அனுப்பப்படுகிறது? டிக்கிரி (நோட்டீஸ்). அப்படி ஒன்று டிகிரி (பட்டம்) கிடைக்கும் அல்லது டிக்கிரி (நோட்டீஸ்) வரும். தர்மராஜ் புரியில் அடைபடுவதற்கான டிக்கிரி வெளியாகும். எனவே முயற்சி செய்து டிகிரியை வாங்க வேண்டும். டிக்கிரி (கோர்ட் நோட்டீஸ் வரக் கூடாது. யார் மேல் டிக்கிரி வெளியாகிறதோ அவர்கள் வெட்கத்தில் தலைநிமிர முடியாதவர்களாக ஆகி விடுகிறார்கள். எனவே எவ்வளவு தகுதியானவராக ஆகியிருக்கிறேன்? என்று எப்பொழுதும் சோதனை செய்யுங்கள். அப்படி இந்த முக்கியமான தகுதிகளைக் கூறினோம் ஆனால் பட்டியலோ மிகப் பெரியது. ஒவ்வொரு தகுதிக்குப் பின்னால் ஃபுல் (நிறைவு) என்ற வார்த்தையும் இருக்கிறது பெயித்ஃபுல், பவர்ஃபுல் அப்படி இந்த வகையில் எப்பொழுது அனைத்து குணங்களிலும் ஃபுல்லாக இருப்பீர்களோ அப்பொழுது டிகிரி கிடைக்கும். அனைவரும் வெற்றியடைபவராக ஆகத்தான் செய்கிறார்கள் ஆனால் வெற்றி நிறைந்தவரா?. சக்தி நிறைந்தவரா? அல்லது குறைவாக இருக்கிறதா? என்று பார்க்க வேண்டும். யார் இந்த அனைத்து குணங்களிலும் ஃபுல்லாக அதாவது முழுமையாக இருப்பாரோ அவருக்குத் தான் சம்பூர்ண அவ்யக்த பரிஷ்தாவின் டிகிரி கிடைக்கிறது. அனைவரும் இந்த இலட்சியத்தை

வைத்திருக்கிறீர்கள் தான் இல்லையா? இப்பொழுது நடக்கும் நேரம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? இப்பொழுதைய நேரம் நாசுக் (மென்மையானது ஆனது, இப்பொழுது போதையோடு செல்வதற்கான நேரம் இல்லை. அது குழந்தைப் பருவத்தில் இருந்தது. ஒருவேளை மென்மையான நேரத்தில் கூட யாராவது போதையோடு நடந்து கொண்டார்கள் என்றால் முடிவில் நஷ்டம் தான் இருக்கும். எனவே இப்பொழுது சம்ஹாரமூர்த்தி (வதை செய்யும்) ஆக வேண்டும். பயங்கரமான ரூபம் உடையவராக ஆக வேண்டும். இப்பொழுது நாளுக்கு நாள் மென்மையான நேரம் ஆகும் காரணத்தினால் சம்ஹார மூர்த்தி ஆக வேண்டும். எதை சம்ஹாரம் (அழிக்க) செய்ய வேண்டும்? தன்னுடைய சம்ஸ்காரங்களை. தன்னுடைய பாவங்களின் மேல் மற்றும் பாவ ஆத்மாக்கள் யார் இந்த நேரம் இருக்கிறார்களோ அவர்கள் மேல் பயங்கர ரூபம் இப்பொழுது தாரணை செய்து ஒரு நொடியில் பஸ்மம் ஆக்க வேண்டும். சங்கரைப் பற்றி ஒரு நொடியில் கண் திறந்தது மற்றும் விநாசம் ஏற்பட்டது என்று கூறுகிறார்கள் இல்லையா? இது சம்ஹார மூர்த்தியின் காரியத்தின் அடையாளம் ஆகும். பயங்கர ரூபமாகி யார் மேலேயும் திருஷ்டி கொடுத்து மேலும் அவர்களின் பாவ சம்ஸ்காரங்களை பஸ்மம் ஆக்கி விட வேண்டும். அப்படி பாவங்கள் மற்றும் வீணான செயல்கள், பாவிகளின் மேல் இப்பொழுது பயங்கர ரூபம் தாரணை செய்ய வேண்டும். இப்பொழுது அன்பு நிறைந்த மூர்த்தி கூட இல்லை, இப்பொழுதோ காளி ரூபம் தேவையாக இருக்கிறது. பயங்கர சம்ஹாரி ரூபம் தேவையாக இருக்கிறது. இப்பொழுது கடைசி நேரம் ஆகும். இதுவரை ஒருவேளை பயங்கர ரூபம் உடையவராக ஆகவில்லை என்றால் தன்னுடைய பாவங்கள் மற்றும் பாவிகளை எதிர்நோக்க முடியாது. இப்பொழுது உள்ளடக்கும் விஷயம் இல்லை, பாவங்களை, வீணான எண்ணங்களை மற்றும் பாவிகளின் பாவ நடத்தையை இப்பொழுது உள்ளடக்க வேண்டியது இல்லை ஆனால் சம்ஹாரம் (அழிக்க) செய்ய வேண்டும். இப்பொழுது அன்பை உள்ளடக்க வேண்டும். சக்தி ரூபத்தை பிரத்யக்ஷம் செய்ய வேண்டும். சக்திகளுக்கு ஒரே நேரத்தில் மூன்று விஷயங்களை தாரணை செய்ய வேண்டும். ஒன்றோ நெற்றியில் தாய்மை அன்பின் குணம், ரூபத்தில் ஆன்மீகத்தன்மை மற்றும் வார்த்தைகளில் சக்தி இருக்க வேண்டும். ஒவ்வொரு வார்த்தையும் பாவங்களை மற்றும் பாவிகளை அழிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். எப்பொழுது இந்த மூன்று விஷயங்களும் ஒன்றாக

தாரணை ஆகிறது என்றால் என்னவாகும்? பாவம் மற்றும் பாவிகள் பஸ்மம் ஆகி விடுவார்கள். சக்திகளின் பார்வையால் பாவி ஆத்மாக்கள் நடுநடுங்கிப் போய் விடுவார்கள். எதன் மேல்? தான் செய்த பாவங்கள் மேல். எனவே இப்பொழுது சம்ஹாரம் செய்பவர்களாக ஆகுங்கள் மேலும் விரைவாக சம்ஹாரம் செய்யுங்கள். சில இடங்களில் அலங்கரித்துக் கொண்டிருக்கும் போதே சம்ஹாரத்தை மறந்து விடுகிறார்கள். அலங்காரமோ அதிகமாக செய்திருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது சம்ஹாரம் செய்யுங்கள். மாஸ்டர் பிரம்மாவாகவும் ஆனீர்கள், பாலனை செய்தீர்கள், அலங்காரம் செய்தீர்கள் ஆனால் இப்பொழுது சம்ஹாரம் செய்வதற்கான பங்கு ஆகும். சக்திகளின் அலங்காரம் மற்றும் சக்திகளின் சவால் விடுவது மற்றும் சக்திகளின் எந்த காரியத்திற்கு மஹிமை பாடப்பட்டிருக்கிறது? சலங்கை ஒலிக்கு சலங்கை கட்டிக் கொண்டு அசுரர்கள் மேல் நடனமாட வேண்டும். நடனமாடுவதினால் என்னவாகும்? எந்த பொருள் இருந்தாலும் அது அழுத்தப் பட்டு அழிந்து விடும். இந்த சலங்கை ஒலி பயமின்மை மற்றும் விநாஷத்தின் அடையாளம் ஆகும். பாண்டவர்கள் செய்யவில்லை என்பதில்லை. பாண்டவர்களும் சக்தி ரூபம் தான். சக்தி ரூபத்தில் இருவரும் வந்து விடுகிறார்கள். அப்படி இந்த மூன்று காரியங்களும் நடைமுறையில் மற்றும் பிரத்யக்ஷ ரூபத்தில் நடந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது பலஹீனமானவரின் காரியம் வேண்டாம். மைதானத்தில் பலஹீனமானவர் வருவதில்லை. மாவீரன் வருகிறார். அப்படி இப்பொழுது மைதானத்தில் பிரத்யக்ஷமாகும் நேரம் ஆகும். மாவீரனாகி. சக்தி ரூபமாகி பிரத்யக்ஷ ரூபத்தில் எதிரில் வாருங்கள். எப்பொழுது இந்த ரூபத்தில் பிரத்யக்ஷம் ஆவீர்களோ அப்பொழுது என்னவாகும்? பிரத்யக்ஷதா ஆகும். தந்தை மற்றும் குழந்தைகளின் பிரத்யக்ஷதா ஏற்படும். எவ்வளவு பிரத்யக்ஷம் ஆவீர்களோ அவ்வளவு பிரத்யக்ஷதா ஏற்படும். எனவே தந்தை வெளிப்படுவதற்காக பிரத்யக்ஷம் ஆக வேண்டியதாக இருக்கிறது. இதுவரை தன்னுடைய பலஹீனங்களுக்கு விடை கொடுக்கவில்லை என்றால் உலகத்தின் நன்மை செய்பவர்களாக எப்படி ஆவீர்கள். எனவே தன்னுடைய பலஹீனங்களுக்கு இப்பொழுது விடை கொடுங்கள். அப்பொழுது தான் உலகத்தின் நன்மை செய்பவராக ஆக முடியும். நல்லது.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1 தற்சமயம் அனைவரும் என்ன விசேஷ முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள்?** செய்தி கொடுப்பது இதுவோ சாதாரண விஷயம். விசேஷ ஆத்மாவாக ஆவதற்காக விசேஷ காரியமும் செய்ய வேண்டும். இன்றைய நாட்களில் உலகத்திலிருக்கும் விசேஷ ஆத்மாக்கள் மேல் விசேஷ கவனம் கொடுக்க வேண்டும். ஒரு விசேஷ ஆத்மா மேல் கவனம் கொடுப்பதினால் அனேகர்களின் கவனம் இயல்பாகவே இழுக்கப் பட்டுவிடும். விசேஷ ஆத்மா மேல் கவனம் கொடுப்பதினால் விசேஷமாக அவர்கள் இல்லை நீங்கள் விசேஷமாக ஆவீர்கள். விசேஷ கவனத்தினால் எந்தவொரு வீணான எண்ணம். செயல் மற்றும் நேரம் செல்வதில்லை. ஒருவேளை சக்தி சேமிப்பாகி விடுகிறது என்றால் விசேஷ சேவையும் சுலடமாகி விடும். எனவே இப்பொழுது பழைய கணக்கு வழக்குகளை முடித்து விட்டு புதிய கணக்கைத் தொடங்க வேண்டும். யார் எவ்வளவு தகுதியுள்ளவராக இருக்கிறாரோ அவ்வளவே அவருடைய மதிப்பும் இருக்கிறது. மதிப்புள்ள பொருளை ஒருபொழுதும் சாதாரண இடத்தில் வைக்கப்படுவதில்லை. அதற்கு விசேஷ கவனம் கொடுக்கப் படுகிறது. எனவே தகுதிகளை எதிரில் வைத்து நான் எத்தனை சதவிகிதம் ஆகியிருக்கிறேன் என்று குறித்துக் கொண்டே இருங்கள். எப்பொழுது நூறு சதவிகிதமாக ஆகி விடுவீர்களோ அப்பொழுது இந்த சாதுக்கள் சன்னியாசிகள் கூட உங்கள் எதிரில் தலைவணங்குவார்கள். மேலும் அவர்கள் தலைவணங்கு வதினால் அந்த ஒலி வெகுதொலைவு வரை அனேகர்களின் காதுகளில் போய்ச் சேரும். சரியான முயற்சியின் அர்த்தமே அங்கேயே முயற்சி மற்றும் அங்கேயே பிராப்தி என்பதாகும். உடனடி பலனைப் பிராப்தி செய்வதற்காக இந்த சங்கமயுகத்திற்கு விசேஷ வரதானம் இருக்கிறது. முயற்சி குறைவாகவும் பிராப்தி அதிகமாகவும் இருக்கும் அளவிற்கு பலன் இருக்கிறது எனவே நேரத்தின் முக்கியத்துவத்தைத் தெரிந்து தன்னுள் விசேஷங்களை நிரப்ப வேண்டும் ஒருவேளை குறை இருந்து விட்டது என்றால் பிறகு குறையின் அடையாளமாக என்னவாக இருக்கும். கம் ஆன் (விடாதீர்கள். முயற்சி செய்யுங்கள்). ஒருவேளை கமால் (அதிசயம்) செய்யவில்லை என்றால் கம் ஆன் கிடைக்கும். ஒரு விநாடியின் பலனைக் கூட ஒருவேளை அடையவில்லை என்றால் ஃபுல் (முழுமை) ஆக மாட்டீர்கள். ஃபெயிலின் லிஸ்டில் (தோல்வி அடைந்தவர் பட்டியலில்) வந்து விடுவீர்கள்.

**2 தில்லியை பாப்தாதாவின் தில் (இதயம்) என்று கூறுகிறார்கள்.** எப்படி இதயத்துடிப்பின் மூலம் ஆரோக்கியம் தெரிய வருகிறது. அதே போல் தில்லியில் எழும் சப்தத்தின் மூலம் முடிவுக்கான சப்தத்தைக் கேட்டார்கள். தில்லி தான் கண்ணாடி என்றால் தில்லியைச் சேர்ந்தவர்களுக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறது. எவ்வளவு பெரிய பொறுப்பின் கிரீடமோ அவ்வளவே சத்யுகத்திலும் பெரிய கிரீடம் கிடைக்கும். இதைத் தான் எல்லைக்கப்பாற்பட்ட பொறுப்பு என்று கூறப்படுகிறது. தந்தையும் மதுபன்னில் இருந்து கொண்டு எல்லைக்கப்பாற்பட்ட சேவை செய்தார் இல்லையா. அப்படி ஒவ்வொருவருக்கும் எல்லைக்கப் பாற்பட்ட பொறுப்பு இருக்கிறது. எல்லைக்கப்பாற்பட்ட புத்தி எப்படி இருக்கும்? எல்லைக்கப்பாற்பட்ட விஷயத்தை யோசிப்பது, எல்லைக்கப்பாற்பட்ட குடும்பத்துடன் அன்பு மற்றும் சம்மந்தம் வைத்துக் கொள்வது. மேலும் அனைத்து இடங்களும் தன்னுடைய இடம் என்று நினைப்பது. அப்படிப்பட்டவரை எல்லைக்கப்பாற்ப்பட்ட சேவைக்குத் தகுதியானவர் என்று கூறப்படுகசிறது. எல்லைக்குட்பட்ட சேவை செய்பவரை சேவைக்குத் தகுதியானவர் என்று கூற முடியாது.

**3. மதுபன்னை சேஃப் (பாதுகாப்பு பெட்டகம்) என்று கூறுகிறார்கள்,** மதுபன்னில் இருப்பவர்கள் பாதுகாப்பு பெட்டகத்தில் இருக்கிறார்கள். பாதுகாப்பு பெட்டகத்தில் இருப்பவர்கள் எப்படிப்பட்ட மணிகளாக இருக்கிறீர்கள்? அனைத்தையும் விட நல்ல மணியாக நெற்றியின் மணி இருக்கிறது. நெற்றி மணி குறைவாக இருக்கிறது. இதய மணிகள் அதிகமாக இருக்கின்றன. யார் அதிகமாக பாதுகாப்பு பெட்டகத்தில் இருக்கிறார் களோ அவர்கள் நெற்றி மணிகள். யோகயுக்த்தாக மற்றும் நிச்சயபுத்தி உடையவராக ஆகி காரியம் செய்வதினால் வெற்றி கிடைத்தேவிடுகிறது. முதலிலிருந்தே ஒருவேளை செய்கிறோம் ஆனால் கிடைப்பது கடினம் என்ற எண்ணம் புத்தியில் இருக்கிறது என்றால் இந்த எண்ணம் கூட நிச்சயத்தின் சதவிகிதத்தைக் குறைத்து விடுகிறது. நிச்சபடத்தி உடையவராகி செய்தார் என்றால் தோல்வி அடைய மாட்டார். பிரச்சனைகளை எதிர்கொள்வதினால் வெற்றி கிடைக்கிறது. தடைகளோ வரும் ஆனால் ஈடுபாட்டின் அக்னியில் தடைகள் பஸ்மம் ஆகி விடும். நல்லது.

# 1970 அவ்யக்த முரளி

**வரதானம்: அன்பின் பிரதி உபகாரமாக தன்னை மாற்றி தந்தைக்குச் சமமாக ஆகக்கூடிய சம்பன்னம் மற்றும் சம்பூர்ணமானவர் ஆகுக!**

அன்பின் அடையாளம் அன்பிற்குரியவரின் குறையை அவரால் பார்க்க முடியாது. அன்பிற்குரியவரின் தவறை தன்னுடைய தவறு என்று புரிந்து கொள்வார். தந்தை குழந்தைகளின் ஏதாவது விஷயத்தைக் கேட்கும் பொழுது இது தன்னுடைய விஷயம் என்று புரிந்து கொள்கிறார். தந்தை குழந்தைகளைத் தனக்குச் சமமாக சம்பன்னம் மற்றும் சம்பூர்ணமானவராக பார்க்க விரும்புகிறார். இந்த அன்பின் பிரதி உபகாரமாக தன்னை மாற்றிக் கொள்ளுங்கள். பக்தர்களோ தலையை வெட்டி வைப்பதற்குக் கூட தயாராகி விடுகிறார்கள். நீங்கள் உடலில் உள்ள தலையை அல்ல, ராவணனுடைய தலையை வெட்டி வையுங்கள்.

**சுலோகன்: தன்னுடைய ஆன்மீக எண்ண அதிர்வலைகள் மூலமாக சக்திசாலியான வாயுமண்டலத்தை உருவாக்கக்கூடிய சேவை செய்வது அனைத்தையும் விட உயர்ந்த சேவையாகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 24.07.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிந்து ரூப ஸ்திதி (நிலை) எளிதாக எப்படி ஆவது?

எல்லோரும் இப்போது எந்த ஸ்திதியில் (நிலையில்) அமர்ந்திருக்கிறீர்கள். அதை எந்த ஸ்திதி என்று சொல்லலாம்? வியக்தத்தில் (ஸ்தூலத்தில்) அவ்யக்த ஸ்திதி இருக்கிறதா? பாப்தாதாவை சந்திக்கும் சமயத்தில் பிந்து ரூப ஸ்திதியில் நிலைத்திருக்க முடிகிறதா? (ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய கருத்தைக் கூறினார்கள்). பிந்து ரூப ஸ்திதி விசேஷமாக எந்த சமயத்தில் உண்டாகிறது? எப்போது ஏகாந்தமாக அமர்கிறீர்களோ அப்போதா அல்லது இங்குமங்கும் சென்று கொண்டிருக்கும்போதும் இருக்க முடிகிறதா? கடைசி முயற்சி (புருஷார்த்தம்) நினைவு பற்றியதாக இருக்கிறது. ஆதலால் நினைவினுடைய அனுபவ நிலை மற்றும் அனுபவத்தையும் கூட புத்தியில் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. பிந்து ரூப ஸ்திதி என்பது என்ன? மற்றும் அவ்யக்த ஸ்திதி என்பது என்ன? இரண்டுக்கும் உள்ள அனுபவம் எப்படி, எப்படி இருக்கிறது? ஏனெனில் பெயர் இரண்டு விதமாகக் கூறுகின்றார்கள். என்றால் இரண்டுக்குமான அனுபவத்திலும் வித்தியாசம் இருக்கும். இங்கு மங்கும் சென்று கொண்டிருக்கும் போது, பிந்து ரூப ஸ்திதி இந்த சமயத்தில் குறைவாகத்தான் இருக்கிறது என்பதல்ல, இல்லவே இல்லை என்றே சொல்லலாம். இதையும் கூட அப்பியாசம் (பயிற்சி) செய்ய வேண்டும். இடையிடையே ஓரிரண்டு நிமிடமாவது எடுத்துக் கொண்டு இந்த பிந்து ரூப ஸ்திதியை பயிற்சி செய்ய வேண்டும் எப்படி அனுசரிக்க வேண்டிய ஒரு நாள் இருக்கிறதென்றால். இங்குமங்கும் சென்று கொண்டிருக்கும் எல்லா போக்குவரத்தையும் நிறுத்தி மூன்று நிமிடம் அமைதியில் இருக்கும்படியாகச் செய்து விடுகிறார்கள். நடந்து கொண்டிருக்கின்ற எல்லா காரியங்களையும் கூட நிறுத்திவிடுகிறார்கள். நீங்களும் கூட ஏதாவது காரியம் செய்து கொண்டிருந்தால், பேசிக் கொண்டிருந்தால்

இடையிடையே சங்கல்பத்தின் ஓட்டத்தை நிறுத்தி விட வேண்டும். ஒரு நிமிடமாவது மனதில் ஓடிக் கொண்டிருக்கின்ற எண்ணங்களை சரீரம் மூலமாகச் செய்து கொண்டிருக்கின்ற காரியத்தை (கர்மம்) இடையில் நிறுத்தி அப்பியாசம் செய்ய வேண்டும். இம்மாதிரி பயிற்சி செய்யவில்லையெனில் பிந்து ரூபத்தின் சக்திசாலியான நிலையை எப்படி மற்றும் எப்போது கொண்டு வர முடியும்? ஆதலால் இந்த பயிற்சி அவசியமாக இருக்கிறது. இடையிடையே இந்தப் பயிற்சியை நடை முறையில் கொண்டு வந்து கொண்டேயிருந்தால் இன்று கடினமாக இருக்கும் இந்த பிந்து ரூப ஸ்திதி அவ்வளவு எளிதாகி விடும். எப்படி இப்போது அதிகமானோருக்கு அவ்யக்த ஸ்திதி எளிதாக இருக்கிறது. முதலில் அதாவது இந்த பயிற்சியை ஆரம்பித்த போது, வியக்தத்தில் அவ்யக்த ஸ்திதியில் இருப்பது கூட கஷ்டமாக இருந்தது. இப்போது அவ்யக்த ஸ்திதியில் இருந்து காரியம் செய்வது சரளமாக ஆகிக் கொண்டிருக்கிறது. அதே போலவே இந்த பிந்து ரூப ஸ்திதியும் கூட எளிதானதாக ஆகி விடும். இப்போது மகாரதிகள் இந்த பயிற்சி செய்ய வேண்டும். புரிந்ததா?.

ஃபரிஷ்தா ரூப ஸ்திதி என்றால், அவ்யக்த ஸ்திதி யாருக்கு இது எப்போதும் (சதாகாலம்) இருக்கிறதோ, அவர்கள் பிந்து ரூபத்திலும் கூட எளிதாக நிலைத்திருக்க முடியும். ஒருவேளை அவ்யக்த ஸ்திதி இல்லை என்றால் பிந்து ரூபத்தில் நிலைத்திருப்பதும் கூட கடினமாதாகவே இருக்கும், ஆதலால், இப்போது இதையும் கூட அப்பியாசம் செய்யுங்கள். ஏகாந்தத்தில் அமர்ந்து வலுக்கட்டாயமாக முயற்சி செய்ய வேண்டியதாக இருந்தது. அதே போலவே. இந்த முடிவான நிலையும் கூட பயிற்சி மூலம் இடையிடையே நேரம் எடுத்துக் கொண்டு செய்ய வேண்டும் இதுதான் கடைசி நிலை. பலனுக்கான நிலை. இந்த ஸ்திதியை அடைவதற்காக ஒரு விஷயத்தில் விசேஷ கவனம் வைக்க வேண்டியதாயிருக்கும் தற்காலத்தில் அரசும் கூட எந்த திட்டம் எ போடுகிறார்கள்? அவர்களுடைய திட்டமும் கூட எப்போது வெற்றி அடைகிறதென்றால், எப்போது முதன் முதலில் எல்லா விஷயங்களிலும் முடிந்த அளவு செலவினத்தை குறைக்க வேண்டும் என்ற லக்ஷியம் வைக்கிறார்களோ, அப்போதுதான். சேமிப்புக்கான திட்டமும் கூட செய்கிறீர்கள் அல்லவா? நேரம் வீணாகி விடக்கூடாது. பணத்தையும் சேமிக்க வேண்டும். சக்தியையும் சேமிக்க வேண்டும் என நினைக்கிறார்கள். குறைவான சக்தியை உபயோகித்து,

அதிகமான காரியம் செய்ய வேண்டும் என்பது எல்லா விதமாகவும் சேமிக்க வேண்டும் என்று திட்டம் தீட்டுகிறார்கள். ஆகவே இப்போது பாண்டவ அரசாங்கம் எப்படிப்பட்ட திட்டம் போட வேண்டியதாயிருக்கும்? இதற்கு முன்பு கூறப்பட்டதல்லவா, பிந்து ரூபத்தின் சம்பூரண சித்தி அனுபவ நிலையை அடைவதற்காக முயற்சி செய்ய வேண்டும் என்பது இப்போது எந்த ரீதியில் நடந்து கொண்டிருக்கிறீர்களோ, அந்தக் கணக்குப்படி பார்த்தால், எல்லோரும் இப்படித்தான் கூறுகிறார்கள். அதாவது மிகவும் அதிகமான வேலையில் மூழ்கியிருக்கிறோம் என்கிறார்கள். ஏகாந்தமாக இருப்பதற்கு நேரம் குறைவாகவே இருக்கிறது. தங்களுடைய மனனத்திற்கான நேரமும் கூட குறைவாகத்தான் கிடைக்கிறது ஆனால் நேரம் எங்கிருந்து வரும்? நாளுக்கு நாள் சேவையும் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. மேலும் பிரச்சனைகளும் அதிகமாகிக் கொண்டேதான் இருக்கிறது. மேலும் சங்கல்பத்தின் வேகம் இருக்கிறதே. அதுவும் கூட நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டேதான் இருக்கும் இப்போது ஒரு வினாடியில், பத்து எண்ணங்கள் வருகிறதென்றால். இது இரண்டு மடங்கு, மூன்று மடங்கு வேகம் அதிகமாகத்தான் செய்யும். எப்படி தற்காலத்தில் மக்கள் தொகை கணக்கு எடுத்தோமானால், ஒரு நாளில் எவ்வளவு விருத்தியாகிக் கொண்டிருக்கிறது. இங்கு மீண்டும் இந்த சங்கல்பத்தின் வேகம் தீவிரமடையும். ஒரு பக்கம் சங்கல்பம், இன்னொரு பக்கம் துர்தேவதை (பிறவி எடுக்காமல் அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்கள்) களின் எண்ணிக்கையும் கூடுதலாகும் ஆனால் இதற்காக ஒரு விசேஷ கவனம் செலுத்த வேண்டியதாயிருக்கும். இதன் மூலமாக எல்லா விஷயங்களையும் எதிர் கொள்ள முடியும். இது என்னவென்றால் எந்த ஒரு விஷயம் நடந்தாலும், அதை தெளிவாகப் புரிந்து கொள்வதற்காக இரண்டு வார்த்தைகளை நினைவில் வைத்திருக்க வேண்டும். ஒன்று அந்த்தர் (வித்தியாசம்) இரண்டாவது மந்தர் (தீர்மானம்) எந்த ஒரு விஷயமானாலும் அதை ஆராய்ந்து பாருங்கள். இது யதார்த்தமானதா (உண்மையானதா அல்லது உண்மையானதில்லையா? பாப்தாதாவுக்கு சமானமானதா?. அல்லது இல்லையா? ஒன்று ஒவ்வொரு நேரத்திலும் ஒப்பிட்டுப் பார்த்து ஒரு வினாடியில் இல்லை அல்லது சரி (முற்றுப்புள்ளி). தீர்மானித்து விட வேண்டும். (முடிவெடுக்க வேண்டும்). (செய்யக் கூடாது என்றால் முற்றுப் புள்ளி வைத்து விட வேண்டும். ஒருவேளை செய்யலாம் என்றால், செயலில் ஈடுபடுத்திக் கொள்ளலாம். இது போல நாட் அல்லது

டாட் என்பதையும் கூட நினைவில் வைக்க வேண்டும். அந்த்தர் அல்லது மந்தர் என்ற இந்த இரண்டும் நடை முறையில் இருக்க வேண்டும். இந்த இரண்டையும் மறந்து விடக்கூடாது. அப்போது எந்த ஒரு பிரச்சனை அல்லது ஏதாவதொரு தீய சக்தி எதிர்க்க முடியாது. ஒரு வினாடியில் பிரச்சனை பஸ்மம் ஆகி விடும். ஈவில் ஸ்பிரிட் உங்களை எதிர்த்து நிற்க முடியாது. ஆதலால் இதற்காக புருஷார்த்தம் (முயற்சி) செய்ய வேண்டியதாயிருக்கும் புரிந்ததா!

(**ஈவில் ஸ்பிரிட்ஸ்-இதன் ரூபம் எப்படி இருக்கும்**) இதனுடைய தெளிவான ரூபம், ஏதாவதொரு ஆத்மாவில் பிரவேசம் செய்வது ஆனால் ஈவில் ஸ்பிரிட்டுக்கு, கொஞ்சம் மறைமுக ரூபமும் இருக்கிறது. இங்குமங்கும் சென்று கொண்டிருக்கும் போது சிலரில் விசேஷமாக, ஏதாவதொரு கெட்ட சம்ஸ்காரம் மிக அதிக பிரபாவசாலியான ரூபத்தில் தென்படும். இதன் பாதிப்பு எப்படிப்பட்டதாக இருக்குமென்றால், இவர்களுடைய புத்தியானது. ஒரு விஷயத்தைப் பேசுவார்கள். உடனே அதை வேறு விதமாகப் பேசுவார்கள், இதையும் கூட வற்புறுத்தி உரக்கப் பேசுவார்கள். இவர்களுடைய ஸ்திதியும் கூட ஓரிடத்தில் நிலையாக நிலைத்து நிற்காது. இவர்கள் தன்னையும் குழப்பி, மற்றவர்களையும் குழப்பத்திற்குள்ளாக்குவார்கள். தெளிவாக கூற வேண்டுமானால், ஈவில் ஸ்பிரிட் வந்தால், அதைப் புரிந்து, அதிலிருந்து விலக்கிக் கொள்வது சுலபமானது தான் ஆனால் உங்களுக்கு எதிரில் தெளிவான ரூபத்தில் குறைவாகவே வரும் ஆனால் மறைமுகமாக அதிகம் வரும். இதை நீங்கள் சாதாரண வார்த்தையில் புரியவில்லை ஏதோ பைத்தியம் பிடித்ததுப் போல் தெரிகிறது என்று கூறுகிறார்கள் ஆனால் அந்த சமயத்தில் அவரிடம் இந்த ஈவில் தீய) அதாவது கெட்ட சம்ஸ்காரத்தின் ஆவேசம் ஈவில் ஸ்பிரிட்டுக்குச் சமானமாகவே இருக்கும். அது எப்படி துன்புறுத்துமோ அப்படியே இவரும் துன்புறுத்துவார். இப்படி நிறைய நடக்கும். ஆகவேதான் கூறினேனல்லவா. இப்போது நேரத்தின் சேமிப்பு சங்கல்பத்தின் சேமிப்பு தன்னுடைய சக்தியின் சேமிப்பு, இதன் திட்டம் தயாரித்து இடையிடையே அந்த பிந்து ரூப ஸ்திதியை அதிகப்படுத்துங்கள் எவ்வளவு பிந்து ரூப ஸ்திதி இருக்குமோ, அவ்வளவு எந்த ஒரு ஈவில் ஸ்பிரிட் மற்றும் ஈவில் சம்ஸ்காரத்தின் சக்தி உங்களோடு போராடாது மேலும் உங்களுடைய சக்தி ரூபம்தான் அவர்களுக்கு முக்தி அளிக்கும் இந்த சேவையும் செய்ய வேண்டும். ஈவில் ஸ்பிரிட்டுக்கும்

முக்தி அளிக்க வேண்டும். ஏனென்றால், இப்போது கடைசியிலும் கடைசி நேரம். ஆகவே ஈவில் ஸ்பிரிட் மற்றும் ஈவில் சம்ஸ்காரம் கூட உச்ச நிலை அடைந்து, பிறகு முடிவாகும். குப்பை முழுவதும் வெளியேறி பஸ்மம் ஆகி விடும். ஆதலால் அதனை எதிர்கொள்வதற்காக, ஒருவேளை தன்னுடைய பிரச்சனைகளிலிருந்தே விடுபடாமல் இருந்தால், இந்தப் பிரச்சனைகளை எப்படி எதிர் கொள்ள முடியும் ஆகையால், சேமிப்புத் திட்டம் தயார் செய்யுங்கள். பிறகு நடை முறையில் கொண்டுவாருங்கள். அப்போது தான் தன்னையும் மற்றும் எல்லா ஆத்மாக்களையும் பாதுகாத்துக் கொள்ள முடியும். பிரசங்கம் செய்தல். விளக்கம் கூறுதல் போன்ற சேவை போதாது இப்போதோ சேவையின் ரூபமும் அதிக சூட்சுமமாகிக் கொண்டே இருக்கும். ஆதலால் தன்னுடைய சூட்சும சொரூபத்தின் ஸ்திதியையும் கூட அதிகப்படுத்துங்கள். இவை எல்லாம் பிரத்யக்க்ஷமாகி பிறகு மறைந்து விடும் மறைந்து போவதற்கு முன்பாக பிரத்யக்ஷமாகி மறைந்துபோகும். சேவை இவ்வளவு அதிகமாகப் போகிறது. அதாவது ஒவ்வொருவரும் பத்து மடங்கு காரியங்களை செய்ய வேண்டியதாயிருக்கும்.

சக்திகளுக்கு எத்தனை கைகள் (புஜங்கள்) காட்டியிருக்கிறார்கள்? இந்த கைகளின் விளக்கம் என்ன வென்றால் இவ்வளவு சேவையில் உதவியாளராக ஆக வேண்டியதிருக்கும் பாண்டவர்கள் நினைக்கிறார்கள் இவை சக்திகளின் கைகள்தானே என்று. பாண்டவர்களுக்கு என்ன காட்டியிருக்கிறார்கள்? தெரியுமா? உயரமாக காட்டியிருக்கிறார்கள். இதுவும் கூட பாண்டவர்களும் இவ்வளவு அதிகமாக உதவியாளர் ஆவதற்கான அடையாளம் சரீரம் உயரமானது என்பதல்ல. புத்தி உயரமானது. இவைகளின் முன்னால் ஒடுவது என்பது சக்திகள் முன்னே ஓட வேண்டும் என்பதாகும். சக்திகளை முன்னிறுத்துவது என்பதுதான் இவர்களின் ஒட்டத்தின் அடையாளம் நல்லது.

**வரதானம்: பாலக் ஸோ மாலிக் பன் (குழந்தை மற்றும் எஜமான்) எனும் நினைவின் மூலமாக எல்லா பொக்கிஷங்களையும் தன்னுடையதாக்கிக் கொள்ளக் கூடிய சுய ராஜ்ய அதிகாரி ஆகுக!**

# 1970 அவ்யக்த முரளி

இந்த சமயத்தில் குழந்தைகளாகிய நீங்கள் குழந்தைகள் மட்டுமல்ல: ஆனால் குழந்தை மற்றும் எஜமான் ஆக இருக்கின்றீர்கள். ஒன்று சுய ராஜ்ய அதிகாரி எஜமான். அடுத்து தந்தையின் ஆஸ்திக்கு எஜமான். எப்போது சுய ராஜ்ய அதிகாரியாக இருக்கின்றீர்கள் என்றால் தன்னுடைய கர்மேந்திரியங்கள் நியமப்படி (ஆர்டர் பிரமாணமாக) இருக்க வேண்டும் ஆனால் அவ்வப்போது எஜமான் என்ற நினைவை மறக்கச் செய்து வசப்படுத்துவது மனம் ஆகவேதான் தந்தையின் மந்திரம் மன்மனாபவ என்பதாக இருக்கிறது. மன்மனாபவ ஸ்திதியில் இருக்கும் போது எந்த ஒரு வீணான விஷயத்தின் பிரபாவம் இருக்காது. மேலும் எல்லா பொக்கிஷங்களும் தன்னுடைய அனுபவத்தில் இருக்கும்.

**சுலோகன்: பரமாத்ம அன்பு எனும் ஊஞ்சலில் பறக்கும் கலையின் ஆனந்த அனுபவத்தில் இருக்க வேண்டும். இதுதான் எல்லாவற்றிலும் சிரேஷ்ட பாக்கியம்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 27.07.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அவ்யக்தம் ஆவதற்கான முக்கியமான சக்திகளின் தாரணை!

இன்று பாப்தாதா எந்த ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார்? ஒவ்வொருவரின் முகத்தினுள்ளும் என்ன பார்த்துக் கொண்டிருந்தார்? தெரிந்து கொள்ள முடியுமா? ஒவ்வொருவரும் எவ்வளவு அவ்யக்த மூர்த்தி, ஆகர்ஷண மூர்த்தி, அலௌகீக மூர்த்தி மற்றும் ஹர்ஷித் (முகம் மலர்ந்த) மூர்த்தியாக ஆகியிருக்கிறார்கள்? என்று இதைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார் நான்கு இலட்சணங்களும் இந்த் மூகம் மூலமாகத் தென்படுகின்றன, யார், யார், எதுவரை ஆகியிருக்கிறார்கள் என்று அதை ஒவ்வொருவரின் முகம் சாட்சாத்காரம் செய்விக்கிறது. எப்படி கண்ணாடியில் ஸ்தூல முகத்தைப் பார்க்கிறீர்களோ அதேபோல் கண்ணாடியில் இந்த இலட்சணத்தையும் பார்க்கிறீர்களா? பார்ப்பதினால் தன்னுடைய என்ன சாட்சாத்காரம் ஏற்படுகிறது? நான்கு இலட்சணங்களிலிருந்து விசேஷமாக எந்த இலட்சணத்தைத் தன்னில் பார்க்கிறீர்கள்? தன்னைத்தானே பார்க்கும் பயிற்சி ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். கடைசி நிலை அந்த மாதிரி இருக்கும் அதில் ஒவ்வொருவரின் முகத்தில் இந்த அனைத்து இலட்சணங்களும் பிரசித்த ரூபத்தில் தென்படும். இப்பொழுது சில குப்தமாக இருக்கிறது, சில பிரத்யக்ஷமாக இருக்கிறது. சில குணம் விசேஷமாக இருக்கிறது. சில அதைவிடக்குறைவாக இருக்கிறது ஆனால் நிறைவான நிலையில் இந்த அனைத்து இலட்சணங்களும் சமமான ரூபத்தில் மேலும் பிரத்யக்ஷ ரூபத்தில் தென்படும் அதன் மூலம் அனைவருக்கும் விரிசைக்கிரமமாக பிரத்யக்ஷதா (வெளிப்பாடு) ஏற்படும். எவ்வளவிற்கு எவ்வளவு ஒருவரில் பிரத்யட்ச ரூபத்தில் குணம் வந்து கொண்டேயிருக்குமோ அவ்வளவிற்கு பிரத்யட்சதா ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இன்று முக்கியமாக எந்தக் காரியத்திற்காக வந்து இருக்கிறோம்? பாண்டவ சேனைக்காக, பாண்டவர்களின் (யோக) பட்டி ஆரம்பம் ஆகிறது.

தன்னில் என்ன புதுமை கொண்டு வர வேண்டும் என்று தெரியுமா? விசேஷ பட்டியில் வந்திருக்கிறீர்கள் என்றால் விசேஷமாக என்ன தாரணை செய்வீர்கள்? (ஒவ்வொருவரும் அவரவர்களின் இலட்சியத்தைக் கூறினார்கள்), சகோதரிகள் (ஆசிரியர்கள்) நீங்கள் கூறுங்கள். இந்த பாண்டவ சேனை மூலம் என்னென்ன செய்விக்க வேண்டும். இவர்கள் முதலிலேயே கேட்ட உடனேயே தன்னுள் அனைத்து விஷயங்ளை நிரப்ப முயற்சி செய்வார்கள். பின்பு நீங்கள் கடின உழைப்புச் செய்ய வேண்டியதிருக்காது, நீங்கள் இவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள்? இவர்கள் ஒரு நொடியில் தன்னை மாற்ற முடியும் கடினம் என்று எதுவுமே இருக்க முடியாது மேலும் யார் பொறுப்பில் இருக்கிறார்களோ அவர்களுடைய உதவியும் மிக நன்றாகக் கிடைக்கிறது. பாண்டவ சேனையோ சென்ற கல்பத்திலும் பிரசித்தி ஆனதே தான், பாண்டவர்கள் செய்த காரியத்தின் நினைவுச் சின்னமோ பிரசித்தி பெற்றது தான். கல்பத்திற்கு முன்பு என்ன நடந்ததோ அதை மீண்டும் செய்ய வேண்டும். அவ்யக்தம் ஆவதற்காகவும் யார் யார் என்னென்ன இலட்சியங்கள் கூறினார்களோ அதை நிறைவேற்றுவதற்காகத் தன்னுள் என்னென்ன தாரணை செய்ய வேண்டும் என்பதை இன்று கூறுகிறோம். அனைத்து பாண்டவர்களும் தன்னை என்னவென்று கூறுகிறீர்கள்? சர்வ சக்திவான் தந்தையின குழந்தை என்று கூறுகிறீர்கள் தான் இல்லையா? அப்படியானால் அவ்யக்தமாவதற்கு முக்கியமாக எந்த சக்திகளைத் தன்னுள் தாரணை செய்ய வேண்டும்? அப்பொழுது தான் என்ன இலட்சியம் வைத்திருக்கிறீர்களோ அது நிறைவேற முடியும். பட்டியில் முக்கியமாக என்ன சக்திகளை தாரணை செய்து செல்ல வேண்டும் என்பதைக் கூறுகிறோம். அதிகம் இருக்கின்றன ஆனால் முக்கியமாக ஒன்று சகித்துக் கொள்ளும் சக்தி வேண்டும். பகுத்திறியும் சக்தி வேண்டும் விஸ்தாரத்தைச் சிறியதாக்குவதற்கும், சிறியதைப் பெரியதாக்குவதற்கும் சக்தி தேவையாக இருக்கிறது. சில நேரம் விஸ்தாரத்தைக் குறைக்க வேண்டியதாக இருக்கிறது. மேலும் சில நேரம் விஸ்தாரமும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. சுருக்கத்தில் கொண்டு வருவதற்கான சக்தி, உள்ளடக்கும் சக்தி எதிர்நோக்கும் சக்தி மற்றும் நிர்ணயம் செய்வதற்கான சக்தியும் தேவையாக இருக்கிறது. இவை அனைத்தின் கூடவே அனைவரையும் அன்பிற்குரிய மற்றும் சகயோகி ஆக ஆக்குவதின் அதாவது அனைவரையும் ஒன்றாகச் சேர்ப்பதற்கும் சக்தி தேவையாக

இருக்கிறது. அப்படி இந்த அனைத்து சக்திகளையும் தாரணை செய்ய வேண்டியதாக இருக்கிறது அப்பொழுது தான் அனைத்து இலட்சணங்களும் நிறைவேற முடியும் முடியும் என்பது கூடயில்லை ஆனால் ஆகவே தான் வேண்டும்; செய்து விட்டுத்தான் போக வேண்டும். இது நிச்சய புத்தியுடையவர்களின் வார்த்தை ஆகும். இதற்காக முக்கியமாக ஆன்மீகத்தன்மையையும் தாரணை செய்ய வேண்டும். கூடவே ஈஸ்வரிய அன்பும் இருக்கட்டும். இந்த இரண்டு விஷயங்களையும் தாரணை செய்ய வேண்டும் மற்றும் ஒரு விஷயத்தை விடவேண்டும். அது எந்த விஷயம்? (சிலர் அடக்கி வைக்கும் தன்மையை விடவேண்டும், சிலர் தாழ்வு மனப்பான்மையை விட வேண்டும் என்று கூறினார்கள்). இது சரி தான். அவ்வப்போது தன் மேலேயே நம்பிக்கை இல்லாத காரணத்தினால் நிறைய காரியங்களில் வெற்றியடைய முடிவதில்லை. எனவே தாழ்வு மனப்பான்மையை விட வேண்டும் என்று கூறுகிறார்கள். அடக்கி ஆளும் தன்மையையும் விட வேண்டும். இன்னுமொன்று விதவிதமான ரூபத்தை மாற்றுகிறார்கள் இல்லையா? சில நேரம் அப்படி மற்றும் சில நேரம் இப்படி என்று அந்த விதவிதமான ரூபம் மாற்றுவதை விட்டுவிட்டு ஒரு அவ்யக்த மற்றும் அலௌகிக ரூபத்தை பட்டியில் தாரணை செய்து செல்ல வேண்டும் நல்லது. திலகமோ இடப்பட்டிருக்கிறது தான் இல்லையா? இப்பொழுது பட்டியின் அன்பளிப்பு மட்டும் கொடுக்க வேண்டும். அது என்ன கொடுப்போம்? திலகம் இடப்பட்டிருக்கிறது. கிரீடம் அணிந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். அல்லது கிரீடம் கொடுக்க வேண்டுமா? ஒருவேளை இப்பொழுது சிறிய கிரீடத்தை அணிந்தீர்கள் என்றால் எதிர்காலத்திலும் குறைவு ஏற்பட்டு விடும். உலக மகாராஜன் ஆவதற்காக பட்டியில் வந்திருக்கிறீர்கள், அனைத்தையும் விட பெரியதிலும் பெரிய கீரிடம் உலக மகாராஜனுடையது தான். அவருக்கு என்னென்ன பொறுப்புக்கள் இருக்கின்றன என்ற அந்தப் பாடத்தையும் படிக்க வேண்டியதாக இருக்கும்.

இதுவும் ஒரு நல்ல ஒன்றாகக் கூடுதல் தான். உங்களுடைய டீச்சர் (சந்திரமணி தாதி) மிகவும் மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார். ஏனென்றால் தன்னுடைய அனைத்து மாணவர்களும் உலக மகாராஜன் ஆவார்கள் என்று பார்க்கிறார். இந்த குரூப்பின் பெயர் என்ன? ஒவ்வொருவரிடமும் விசேஷ குணம் இருக்கிறது. எனவே இது விசேஷ ஆத்மாக்களின் குரூப் ஆகும். தன்னை விசேஷ ஆத்மா என்று

நினைக்கிறீர்களா? இந்த கீ செயின் (சாவி கொள்ளுதல்) பரிசாகக் கொடுக்கிறோம். இந்த இலட்சியத்தைப் பார்த்து அந்த மாதிரி இலட்சணம் தாரணை செய்ய வேண்டும். ஒருவர் இன்னொருவரின் சம்ஸ்காரத்தை ஒத்துப்போக வைக்க வேண்டும். மேலும் கூடவே சாவியின் அடையாளமாக என்ன கொடுத்திருக்கிறோமோ அதாவது என்னென்ன அனைத்து சக்திகள் கூறியிருக்கிறோமோ அதன் சாவியை எடுத்துச் செல்லவே தான் வேண்டும் ஆனால் இந்த இரண்டு விஷயங்களும், எப்பொழுது படைப்பவர் மற்றும் படைப்பவரின் சரியான ஞானம் நினைவில் இருக்குமோ அப்பொழுது தான் நிலைத்திருக்கும். இதற்காக அதன் நினைவாக இந்தப் பரிசு கொடுக்கிறோம். தன்னை வெற்றி மூர்த்தி என்று நினைக்கிறீர்களா? வெற்றி என்றால் முழுமையாக குணத்தை தாரணை செய்வது, ஒருவேளை அனைத்து விஷயங்களில் வெற்றி இருக்கிறது என்றால் அவருடைய பெயரே சம்பூர்ண மூர்த்தி ஆகும். நான் வெற்றி நட்சத்திரம் என்ற நினைவில் இருந்து காரியம் செய்வதினால் தான் வெற்றியின் அதிகாரம் பிராப்தி ஆகிறது. வெற்றி நட்சத்திரம ஆவதினால் எதிர்கொள்ளும் சக்தி வருகிறது. வெற்றியை எதிரில் வைப்பதினால் பிரச்சனையும் மாறிவிடுகிறது. மேலும் நடைமுறையில் வெற்றி ஏற்பட்டும் விடுகிறது. நெருங்கிய நட்சத்திரங்களின் அடையாளமாக என்ன இருக்கிறது? யாரின் நெருக்கத்தில் இருக்கிறீர்களோ அவரின் சமமாக வேண்டும். நெருக்கமான நட்சத்திரங்களில் பாப்தாதாவின் குணம் மற்றும் காரியம் பிரத்யட்சமாகத் தென்படும். எவ்வளவு நெருக்கமோ அவ்வளவு சமநிலையைப் பார்ப்பீர்கள். அவருடைய முகம் பாப்தாதாவைச் சாட்சாத்காரம் செய்விக்கும் கண்ணாடியாக இருக்கும். அவருக்கு பாப்தாதாவின் அறிமுகம் கொடுக்கும் முயற்சி குறைவாகச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால் சுயம் அவரே அறிமுகம் கொடுக்கும் மூர்த்தியாக இருக்கிறார். அவரைப் பார்த்ததுமே பாப்தாதாவின் அறிமுகம் கிடைத்து விடுகிறது. சேவையில் அந்த மாதிரி நிரூபணத்தை பிரத்யட்சமாகப் பார்ப்பீர்கள். பார்ப்பது என்னவோ உங்களைத்தான் பார்ப்பார்க்ள், ஆனால் கவர்ச்சியோ பாப்தாதா பக்கம் இருக்கும். இதைத்தான் மகன் மகன் தந்தையை வெளிப்படுத்துகிறார் என்று கூறுவது அன்பு நெருக்கத்தில் கொண்டு வருகிறது. உங்களுடைய அன்பின் மூர்த்தியைத் தெரிந்திருக்கிறீர்களா? அன்பு ஒரு பொழுதும் ரகசியமாக இருக்க முடியாது. அன்பானவரின் ஒவ்வொரு அடியிலும், யார்

மேல் அன்பு இருக்கிறதோ அவரின் முத்திரையைப் பார்க்கத் தென்படும். எவ்வளவு மகிழ்ச்சி நிறைந்த மூர்த்தியோ அவ்வளவு கவர்ந்திழுக்கும் மூர்த்தியாக வேண்டும். எப்பொழுதும் கவர்ந்து இழுக்கும் மூர்த்தியாக இருப்பதற்கு ஒளிவடிவ ரூபமுடையவராகி சாகார காரியத்தில் வர வேண்டும் உள்நோக்கு முகமுடையவர் மற்றும் ஏகாந்தவாசி ஆகிய இந்த இலட்சணத்தை தாரணை செய்வதினால் என்ன இலட்சியம் வைக்கப்பட்டிருக்கிறதோ அதனுடைய சகஜமான பிராப்தி ஆகி விடுகிறது. சாதனம் மூலமாக சித்தி ஏற்படுகிறது தான் இல்லையா?

சேவையில் எப்பொழுதும் முழுமையான வெற்றிக்காக முக்கியமாக எந்த குணத்தை எதிரில் வைக்க வேண்டியதாக இருக்கிறது. சாகார ரூபத்தில் (பிரம்மாபாபா) விசேஷமாக எந்த குணம் இருந்த காரணத்தினால் வெற்றி கிடைத்தது? (நன்மையே நினைப்பது) எவ்வளவு நன்மை நினைப்பவராக இருப்பாரோ அவ்வளவு அனைவருக்கும் நன்மை செய்வதற்க பொறுப்பாளராக முடியும். நல்லதையே நினைப்பவர்ஆன காரணத்தினால் உதவி பெறுவதற்கு உரியவர் ஆகி விடுகிறார்கள். நான் அனைத்து ஆத்மாக்களுக்கும் நன்மை செய்வதற்குப் பொறுப்பாளராக இருக்கிறேன் என்று அப்படி நினைக்க வேண்டும். எனவே ஒவ்வொரு விஷயத்திலும் நன்மையே நினைப்பது மனதில். வார்த்தைகளில் செயலில் மற்றும் நெருக்கத்தில் நன்மையே நினைப்பவராக ஆக வேண்டும். ஆகிக் கொண்டேயிருக்கிறீர்கள் மேலும் ஆகவே தான் வேண்டும். எவ்வளவிற்கு ஒருவர் நன்மை நினைப்பவராக ஆகிறாரோ அவ்வளவு அவர் ஆகர்ஷண மூர்த்தியாகவும் இருக்கிறார். எனவே இந்த முயற்சியில் முன்னேற்றம் அடைந்து பிரத்யட்சதாவில் கொண்டு வர வேண்டும், மதுபன்னில் இருக்கும்பொழுது இனிமை மற்றும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள் உணர்வை தாரணை செய்ய வேண்டும். இது தான் மதுபனின் முக்கிய இலட்சணம் ஆகும். இதைதான் மதுபன் என்று கூறப்படுகிறது. வெளியில் இருந்தபோதிலும் ஒருவேளை இந்த இலட்சியம் இருக்கிறது என்றால் மதுபன் நிவாசி என்பதே ஆகும். எவ்வளவு இங்கு பொறுப்பை எடுத்துக் கொள்கிறார்களோ அவ்வளவு அங்கு பிரஜைகள் மூலமாக மரியாதை கிடைக்கும்; உதவியைப் பெறுவதற்காக அன்பானவராக வேண்டும். அனைவரின் அன்பிற்குரியவர். அனைவரின் சகயோகி எவ்வளவிற்கு எவ்வளவு சக்கரவர்த்தி ஆவீர்களோ அவ்வளவு அனைவரின் சம்பந்தத்தில்

வரமுடியும். இந்த குரூப்பிற்கு விசேஷமாக சக்கரவர்த்தி ஆக வேண்டும். ஏனென்றால் அனைவரின் சம்பந்தத்தில் வருவதினால் அனைவருக்கும் சகயோகம் (உதவி செய்வது கொடுக்கவும் முடியும் மேலும் அனைவரின் சகயோகத்தைப் பெறவும் முடியும். ஒவ்வொரு ஆத்மாவின் விசேஷத்தை பார்த்து, கேட்டு, நெருக்கத்தில் வந்து அந்த விசேஷங்கள் தன்னுள் வந்து விடுகின்றன. எனவே நடைமுறையில் அனைவருக்கும் சகயோகி ஆக வேண்டும். இதற்காக பாண்டவ சேனைக்கு சக்கரவர்த்தி ஆக வேண்டும். யோக அக்னி எப்பொழுதும் எரிந்து கொண்டே இருப்பதற்காக மனம், சொல், செயல் மற்றும் சம்பந்தம் இந்த நான்கு விஷயங்களின் பாதுகாவல் செய்ய வேண்டும். பிறகு இந்த அக்னி அழியாததாக இருக்கும். அடிக்கடி அனைத்து மேலும் எரிய வைத்தீர்கள் என்றால் நேரம் வீணாகி விடும். மேலும் பதவியும் குறைந்து விடும். எவ்வளவு அன்போ அவ்வளவு சக்தியும் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு நொடியில் ஆகாரி மற்றும் ஒரு நொடியில் சாகாரி ஆக முடியுமா? இது கூட அவசியமான சேவையாகும். எப்படி சேவைக்காக அனேக சாதனங்கள் இருக்கின்றன. அதேபோல் இந்தப் பயிற்சி கூட அனேக ஆத்மாக்களின் நன்மைக்காக ஒரு சாதனமாகும். இந்த சேவை மூலம் எந்த ஒரு ஆத்மாவையும் கவர முடியும். இதில் எந்த செலவும் கூட இல்லை, குறைந்த செலவில் நிறைந்த பலன்கள் மாதிரி திட்டங்களையும் உருவாக்குங்கள். இப்பொழுது ஒவ்வொருவரிடமும் ஏதாவது ஒரு விசேஷ சக்தி இருக்கிறது ஆனால் அனைத்து சக்திகளும் வந்து விட்டது என்றால் என்ன ஆகி விடுவீர்கள்? மாஸ்டர் சர்வ சக்திவான். அனைத்து குணங்களின் உயர்ந்தவராக வேண்டும். இஷ்ட தேவதைகளில் அனைத்து சக்திகளும் சமமான ரூபத்தில் இருக்கின்றன. அப்படி இந்த முயற்சி செய்ய வேண்டும் நல்லது.

**வரதானம்: வள்ளலின் கொடுத்தலை நினைவில் வைத்து அனைத்து பற்றுதல்களிலிருந்து விடுபட்டு இருக்கக்கூடிய ஆகர்ஷணத்திலிருந்து விடுபட்டவர்!**

இவர் மேல் எனக்கு பற்றுதல் இல்லை ஆனால் இவரின் இந்த குணம் மிக நன்றாக இருக்கிறது அல்லது இவரில் சேவையின் விசேஷத்தன்மை மிக அதிகமாக இருக்கிறது என்று அனேக் குழந்தைகள் கூறுகிறார்கள் ஆனால் எந்த ப மேலோ அல்லது பொருட்கள் மேலோ அடிக்கடி எண்ணம் செல்வது கூட ஆகர்ஷணம் தான். யாருடைய விசேஷத்தையும் பார்த்து,

குணங்களை சேவையைப் பார்த்து கொடுப்பவரை மறந்து விடாதீர்கள். இவை அனைத்தும் வள்ளலால் கொடுக்கப்பட்டவை -இந்த நினைவு பற்றுதலிலிருந்து ஆகர்ஷணத்திலிருந்து விடுபட்டவர் ஆக்கி விடும். யார் மேலேயும் பிரபாவம் அடைய மாட்டார்கள்.

**சுலோகன்: அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு ஒரு இருப்பிடத்தைக் கொடுத்து, பகவானோடு சந்திக்க வைக்கும் அளவிற்கு ஆன்மீக சமூக சேவாதாரி ஆகுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 30.07.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மகாரதி என்றால் மகான் நிலை!

இன்று பாண்டவ சேனைக்கான பட்டியின் நிறைவு நாளா? அல்லது இன்று ஆரம்பிக்கிறீர்களா? (நெருக்கம் ஆரம்பமாகியிருக்கிறது). விசேஷமாக என்ன முன்னேற்றம் அடைந்திருக்கிறீர்கள்? அதற்கு விசேஷமாக என்ன சங்கல்பம் செய்திருக்கிறீர்கள்? மாற்றம் ஆரம்பமாகி விட்டதா? அல்லது எற்படுமா? சங்பல்பத்தின் ரூபத்தில் எடுத்திருக்கிறீர்களா? அல்லது சமஸ்காரமாக்கி விட்டீர்களா? (ஒவ்வொருவரும் அவரவர்களது விசயத்தைக் கூறினர்) இது பாண்டவ சேனையின் பட்டிக்கான சோதனைத் தாளாகும். இந்த ஒரு சோதனைத்தாளின் மூலம் அனைத்து கேள்விகளும் வந்து விட்டன. தற்சமயம் சங்கல்பம் மற்றும் செயல் இரண்டும் ஒன்றாக இருப்பது அவசியமானதாகும். இப்போது சங்கல்பம் செய்கிறீர்கள், அதை உடனே செயலில் கொண்டு வந்து விடுகிறீர்கள். சங்கல்பம் மற்றும் செயலில் மகான் வேறுபாடு இருக்கக் கூடாது. மகாரதி என்பதன் பொருளே மகான் நிலையாகும். ஆக மகான் நிலை என்பது சங்கல்பத்தில் மட்டுமின்றி அனைத்திலும் மகான் நிலை. இது மகாரதிகளின் அடையாளம். சங்கல்பத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சிந்தனையில் நேரம் ஆவதில்லை. ஏனெனில், மகாரதிகளின் சங்கல்பமே அவ்வாறு இருக்கும், அந்த சங்கல்பம் நடைமுறையில் சம்பவமாகி விடும். இதைச் செய்யவா? வேண்டாமா? எப்படிச் செய்வது? என்ன நடக்கும்? என்று சிந்திக்க வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இருக்காது. அப்படிப்பட்ட சங்கல்பங்களே வரும், சங்கல்பம் வந்ததும் நடந்து விடும். இதைக் கொண்டு தனது நிலையைக் கண்டறிந்து கொள்ள முடியும். யோகத்தில் வெற்றி பெறுவது தான் கடைசி நிலையாகும். அதாவது, செயல்களில் வெற்றி பெறுவதாகும். அனைத்திலும் வெற்றி பெறுவதற்கு முக்கியமாக எந்த சக்தியை தாரணை செய்ய வேண்டும்? சங்கல்பம், வார்த்தை, செயல் அனைத்தும் வெற்றியுடையதாக ஆக வேண்டும், அதற்கு எந்த சக்தி தேவை? அனைவரும் எந்த சக்தியைப் பற்றி கூறினீர்களோ, அது

அவசியமானதுதான் ஆனால் அதிலும் முதலில் கட்டுப்படுத்தும் சக்தி விசேஷமாக தேவை. ஒருவேளை கட்டுப்படுத்தும் சக்தி இல்லையெனில் வீணானவை கலப்படம் ஆகின்ற காரணத்தினால் வெற்றியடைய முடியாது. உண்மையான (யதார்த்த) சங்கல்பம் செய்தால், உண்மையான வார்த்தைகள் பேசினால், உண்மையான காரியங்களைச் செய்தால் வெற்றி கிடைக்கவில்லை என்று கூறவே முடியாது ஆனால் வீணானவைகள் கலப்படம் ஆகின்ற காரணத்தினால் வெற்றி கிடைப்பது கிடையாது. உண்மைக்கு வெற்றி கிடைக்கும். வீணானவைகளுக்குக் கிடைக்காது, வீணானவைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. அதற்கு அவசியம் கட்டுப்படுத்தும் சக்தி தேவை. கட்டுப்படுத்தும் சக்தி குறைவாக இருப்பதற்குக் காரணம் ஏதாவது ஒரு பலவீனமாகும். ஏன் பலவீனம் ஏற்படுகிறது? தனது சன்ஸ்காரங்களை அழிக்க முடிவதில்லை. இந்த சங்கல்பம் உண்மையானது அல்லது வீணானது என்று புரிந்திருந்தும் கட்டுப்படுத்தும் சக்தி கிடையாது, கட்டுப்படுத்தும் போதுதான் அதற்குப் பதிலாக மற்ற சம்ஸ்காரத்தை தனக்குள் சேமிக்க முடியும். கட்டுப்படுத்தும் சக்தியில் குறையிருக்கின்ற காரணத்தினால் தன்னையே கட்டுப்படுத்த முடிவதில்லை. தனது படைப்புகளின் படைப்பாளர் ஆவதற்கு வருகிறதா? எந்த படைப்பை படைக்க வேண்டும்? உண்மையான படைப்புகளை படைப்பதில் குறை இருக்கிறது. அப்படிப்பட்ட படைப்புகளை படைத்து விடுகிறீர்கள். அதாவது தனது படைப்பின் மூலம் தானே குழப்பமடைந்து விடுகிறீர்கள். இப்போது பாண்டவ சேனைகள் நடைமுறையில் என்ன நிரூபணத்தை காண்பிக்க வேண்டும்? பலவீன வார்த்தைகள், பலவீன செயல்களுக்கு நிறைவு விழா கொண்டாட வேண்டும். பட்டிக்கான நிறைவு நாள் கிடையாது. பலவீனத்தின் நிறைவு மேலும் ஒவ்வொரு சங்கல்பமும் அதிசயம் செய்யக்கூடிய அளவிற்கு சக்தி நிறைந்த சங்கல்பத்தை உருவாக்க வேண்டும். ஆக பலவீனத்தின் இடத்தில் அதிசயத்தை நிரப்ப வேண்டும். பலவீனம் என்ற வார்த்தை இப்போது சோபிப்பது கிடையாது. உலகின் ஆதாரம் ஆத்மாக்களாகிய உங்கள் மீது இருக்கிறது. ஆக யார் உலகிற்கு ஆதாரமாகவும், முன்னேற்றக் கூடியவர்களாகவும் இருக்கிறார்களோ, இப்படிப்பட்ட மூர்த்திகளின் வாயில் பலவீன வார்த்தைகள் சோபிப்பது கிடையாது. இப்போது ஒவ்வொரு மூர்த்தியிடத்திலும் அனைவருக்கும் என்ன சாட்சாத்காரம் கிடைக்கும்? பாப்தாதாவின் சாட்சாத்காரம். அனைத்து மூர்த்திகளிடமும் ஆன்மீக ஒளி தென்பட வேண்டும், யார் அந்த ஒளியைப் பார்த்தாலும்

பலியாகி விட வேண்டும். அனைவரையும் பலியாக்க முடியும். சிலருக்கு முக்திதாமம், சிலருக்கு ஜீவன்முக்திதாமம். உங்களிடமிருந்து தங்களது உண்மையான பாகத்திற்கான உரிமையை யாரும் எடுத்துக் கொள்ளாமல் இருந்து விடக் கூடாது. அனைத்து ஆத்மாக்களுக்கும் உங்கள் மூலமாக அவரவர்களது உண்மையான பாகம் மற்றும் தந்தையிடமிருந்து ஆஸ்தி அவசியம் அடைய வேண்டும். யாரும் தங்களது ஆஸ்தியை அடைவதிலிருந்து வஞ்சிக்கப்பட்டு, இருந்து விடக் கூடாது, அந்த அளவிற்கு உங்களது மூர்த்தியிடத்தில் ஒளி இருக்க வேண்டும். இவ்வாறு தன்னை வள்ளலின் குழந்தை வள்ளலாக இருக்கிறேன் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். கொடுப்பவர்களிடத்தில் ஆர்வம் மற்றும் ஒளி இருக்கும். இப்போது அது மறைந்திருக்கிறது. அந்த சம்ஸ்காரங்களை இப்போது வெளிப்படுத்துங்கள். அந்த சம்ஸ்காரங்கள் இன்று வரை வெளி வராத அளவிற்கு எந்த விசயத்தில் பிசியாக இருக்கிறீர்கள்? பலவீனங்களை அழிப்பதில் பிசியாக இருக்கிறீர்கள். (கணக்குகளை) முடித்தே ஆக வேண்டும் ஆனால் ஒன்று விரைவில் முடிப்பது, அதே கணக்கிற்கு சிலர் 5-நிமிடமும், சிலர் அரை மணி நேரமும் எடுத்துக் கொள்கின்றனர். சிலருக்கு முழு நாள் சிந்தித்தாலும் கணக்கு எடுக்க முடிவதில்லை. இவர்கள் அனைவரும் விசேஷ ஆத்மாக்கள், ஆக ஒவ்வொரு சங்கல்பம், ஒவ்வொரு காரியமும் விசேஷமானதாக இருக்க வேண்டும். இதன் மூலம் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் முன்னேற வேண்டும் என்ற தூண்டுதல் கிடைக்க வேண்டும். ஏனெனில், நீங்கள் அனைவரும் ஆதாரமூர்த்திகளாக இருக்கிறீர்கள். ஒருவேளை ஆதாரமே இவ்வாறு இருந்தால் மற்றவர்கள் என்ன செய்வர்? விசேஷ ஆத்மாக்கள் விசேஷ கவனம் கொடுத்தே ஆக வேண்டும். இப்போது கடந்து முடிந்தவைகளை சங்கல்பத்திலும் கொண்டு வரக் கூடாது. மறதியாகவும் பழைய சம்ஸ்காரங்கள் என்ற விஷம் வெளிப்பட்டு விட்டால், இது மிகவும் பழைய பிறவிக்கான சம்ஸ்காரம், இப்போதையது அல்ல என்பதாகப் புரிந்து கொள்ளுங்கள். கடந்து போன பழைய விசயங்களை அடிக்கடி யாராவது வர்ணனை செய்தால் இது தான் வீணானவை என்று கூறப்படுகிறது. இந்த பாண்டவ சேனை முதலில் தனது குடும்பத்திற்கு முன் ஒரு உதாரணமாக இருந்து காண்பிக்க வேண்டும். சாகார ரூபத்தில் (பிரம்மா) உதாரணமாக இருந்தார் அல்லவா! இவ்வாறு தந்தையைப் பின்பற்றுங்கள். ஆக இன்றைய நாளை பழைய சன்ஸ்காரம் மற்றும் சங்கல்பத்தை சமாப்தி செய்யுங்கள் நாள் என்று கூறலாம். புரிந்ததா!

# 1970 அவ்யக்த முரளி

இந்த குழுவின் பெயர் என்ன? பெயர் கொடுக்கப்படுகிறது எனில், எதன் ஆதாரத்தில் கொடுக்கப்படுகிறது? இன்று எப்படிப்பட்ட நாள்? குரு நாளாகும். குருதிசை என்றால் வெற்றி. ஆக இந்த குழு அனைவருக்கும் உதவி செய்பவர்கள், வெற்றி மூர்த்திகளுக்கான குழுவாகும்! யாருக்காவது, ஏதாவது ஒரு வகையில் உதவி தேவைப்படுகிறது எனில், வள்ளலின் குழந்தைகள் எப்போதும் கொடுக்கக் கூடியவர்களாக இருப்பர். அவர்களது கைகள் ஒருபோதும் கொடுப்பதை நிறுத்திவிடாது. அனைவருக்கும் பிரியமானவர்களாக ஆகும் போதுதான் அனைவருக்கும் உதவியாளர்கள் ஆக முடியும். பிரியமானவர்களாக ஆகவில்லையெனில், அனைவருக்கும் உதவியாளர்களாகவும் ஆக முடியாது. ஆகையால் இந்த குழுவினர் மனம், சொல், செயல் மற்றும் சம்பந்தங்களிலும் உதவியாளர்களாக ஆக வேண்டும் மற்றும் வெற்றிமூர்த்திகளாகவும் ஆக வேண்டும். அதனால் தான் அனைவருக்கும் உதவி செய்யும் வெற்றிமூர்த்திகளின் குழு என்று கூறினோம், புரிந்ததா!

அனைவருக்கும் உதவியாளர்களாக ஆவதற்கு தன்னையே அழித்துக் கொள்ள வேண்டியிருக்கும். இந்த காரியத்திலிருந்து விலகி விடக் கூடாது. தன்னை அழித்துக் கொள்வது என்றால் தனது பழைய சன்ஸ்காரங்களை அழிக்க வேண்டும். பழைய சன்ஸ்காரம் தான் அனைவருக்கும் உதவி செய்வதில் தடையாக இருக்கிறது. ஆக தனது பழைய சன்ஸ்காரங்களை அழிக்க வேண்டும். மற்றவர்களது சன்ஸ்காரங்களை அழிப்பதற்காகச் செய்யவில்லை. தனது சன்ஸ்காரங்களை அழித்து விட்டால் மற்றவர்கள் உங்களைத் தானாகவே பின்பற்றுவார்கள். ஒன்று நான், மற்றொன்று தந்தை. மூன்றாவது, பார்த்தாலும் பார்க்காது இருப்பது. மூன்றாவது விசயங்கள் வரத்தான் செய்யும் ஆனால் தன்னை மற்றும் தந்தையை மட்டும் பாருங்கள். இந்த சுலோகனைத் தான் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் -அழிப்போம் ஆனால் அனைவருக்கும் உதவியாளர்களாக ஆவோம். கல்பத்திற்கு முந்தைய உங்களது நினைவுச்சின்னம் நினைவிருக்கிறதா? கோவர்தன மலையின் நினைவுச்சின்னமாக எதில் உருவாக்குகின்றனர்? என்றாவது பார்த்திருக்கிறீர்களா? இன்றைய நாட்களில் பக்தி மார்க்கத்தில் கோவர்தன மலையை பூஜை செய்யும் போது எதில் உருவாக்குகின்றனர்? (மாட்டுச் சாணத்தினால்) மலைக்கு விரல் கொடுப்பது என்றால, பழைய சம்ஸ்காரங்களை அழிப்பதில் விரல்

கொடுப்பதாகும். முதலில் இந்த மலையை நீக்க வேண்டும். அப்போது தான் இந்த கலியுக உலகம் மாறி புது உலகம் உருவாகும். எந்த சுலோகனாக இருந்தாலும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இதுவும் நல்லதாகும் ஆனால் சுலோகனின் சொரூபமாக ஆகியே தீர வேண்டும். இது ஒரு சாதனமாகும் ஆனால் சாதனத்திலிருந்து சொரூபமாக ஆவது நல்லதாகும். எந்த விசேஷத்தினால் மாலையில் மணியாக ஆக முடியும்? மணிகளின் விசேஷம் என்னவெனில், ஒரே வழிப்படி நடந்து ஒரே நூலில் கோர்க்கப்பட்டு இருப்பதாகும். ஓரே ஒருவரிடத்தில் ஈடுபாடு ஏக்ரஸ் ஸ்திதி மற்றும் ஒரே வழியுடன் இருக்கும் போது அனைவரும் ஒன்றோடு ஒன்றாக இணக்கமாக இருப்போம். ஒரே மாதிரியான மணியாக இருக்கிறது எனில் ஒரே நூலில் கோர்க்கப்படுவர் அல்லவா! ஆக ஒரே ஒரு வழிப்படி நடக்கக் கூடியவர்கள் மற்றும் தங்களுக்குள்ளும் ஒரே வழியுடன் இருக்க வேண்டும். சங்கல்பமும் ஒன்றாக இருக்க வேண்டும். இரண்டு வழிகளாக இருப்பவர்கள் இரண்டாவது, அதாவது 16,000-மணிகளின் மாலையில் வருவர். ஒரே வழிக்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். தனக்குள் ஏற்றுக் கொள்ளும் சக்தி இருந்தால் தான் சூழ்நிலையை உருவாக்க முடியும். ஏதாவது ஒரு விசயத்தில் கருத்து வேறுபாடு வந்து விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், ஏனெனில், எந்த அளவிற்கு தகுதியிருக்கிறதோ அந்த அளவிற்கு தான் சக்தி இருக்கும் அல்லவா! ஆக அந்த வேறுபாட்டை கரைத்து விடுங்கள். கரைத்து விடும் சக்தி தேவை. ஆக இவ்வாறு தங்களுக்குள் உள்ள ஒற்றுமையினால் தான் நெருக்கத்தில் வருவீர்கள். அனைவரின் முன் உதாரணமானவர்களாகி விடுவீர்கள். அனைவரிடத்திலும் அவரவர்களுக்கான விசேஷம் இருக்கிறது. யாராக இருந்தாலும் அவர்களது விசேஷத்தைப் பார்த்தால் விசேஷ ஆத்மா ஆகி விடுவீர்கள். குறைகளை முற்றிலும் பார்க்கவே கூடாது. சந்திரனுக்கோ அல்லது சூரியனுக்கோ கிரஹச்சாரம் பற்றிக் கொள்ளும்போது பார்க்கக் கூடாது என்று கூறுவர் அல்லவா! இல்லையெனில் கிரஹச்சாரம் வந்து விடும். ஆக பிறரது குறைகளும் கிரஹணம் ஆகும். தவறுதலாகக் கூட யாராவது பார்த்து விட்டால் புரிந்து கொள்ளுங்கள் கிரஹச்சாரம் வந்து விடும். ஆக உண்மையான தங்கமாக ஆக வேண்டும். சிறிது கறையிருந்தாலும் அதுவே தென்படும். விசேஷங்களை உள்ளடக்கி விடும். மற்றவர்கள் மீது பிரபாவம் ஏற்படுத்தும் அளவிற்கு தன்னை மாற்றிக் கொள்ளுங்கள். வியக்கத்தக்க வகையில் மாற வேண்டும். முற்றிலும் விடுபட்டவர்களாக

ஆகின்றபொழுது மற்றவர்களின் பற்றுதலும் தானாகவே துண்டிக்கப்பட்டு விடும். நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 06.08.1970-1 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பந்தன்முக்த் ஆத்மாவின் அடையாளங்கள்!

இப்பொழுது அவ்யக்த நிலையில் நிலைத்திருந்து வியக்தமான உடலை ஆதாரமாக எடுத்து பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்ற இந்த அனுபவம் செய்கிறீர்களா? எப்படி ஏதாவது ஸ்தூலமான இடத்தில் நுழைகிறீர்களோ, அதே போல் இந்த ஸ்தூலமான உடலில் பிரவேசமாகி இந்தக் காரியம் செய்து கொண்டிருக் கிறோம் என்ற அந்த அனுபவம் ஆகுகிறதா? எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது பிரவேசம் (நுழைவது) ஆவது மற்றும் எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது விலகி விடுவது, அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? ஒரு நொடியில் தாரணை செய்வது மற்றும் ஒரு நொடியில் விட்டு விடுவது என்று இந்த மாதிரி பயிற்சி இருக்கிறதா? எப்படி மற்ற ஸ்தூல பொருட்களை எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது எடுக்கிறீர்கள்; மேலும் எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது விட முடிகிறது இல்லையா? அதே போல் இந்த தேக உணர்வையும் எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது விட்டு விட்டு ஆத்ம அபிமானியாக ஆகி விடுவது -இந்தப் பயிற்சி எப்படி மற்ற ஸ்தூலமான பொருட்கள் விஷயத்தில் சுலபமாக இருக்கிறதோ அதே போல் அவ்வளவு சுலபமாக இருக்கிறதா? படைப்பவர் எப்பொழுது விரும்புகிறாரோ அப்பொழுது படைப்பின் ஆதாரத்தை எடுத்துக் கொள்வது மேலும் எப்பொழுது விரும்புகிறாரோ அப்பொழுது படைப்பின் ஆதாரத்தை விட்டு விடுவது அந்த மாதிரி படைப்பவராக ஆகியிருக்கிறீர்களா? எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது விலகியிருப்பவராக எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது அன்பானவராக ஆகி விடுவது அந்த மாதிரி பந்தனமுக்த் (தளைகளிலிருந்து விடுபட்ட ஆனவராக ஆகி விட்டீர்களா? இந்த உடலின் பந்தனமும் இருக்கிறது. உடல் தன்னுடைய பந்தனத்தில் கட்டிப் போடுகிறது. ஒருவேளை உடல் பந்தனத்தில் இருந்து விடுபட்டு விட்டீர்கள் என்றால் இந்த உடல், பந்தனத்தை ஏற்படுத்தாது ஆனால் காரியம்

செய்வதற்கான ஆதாரம் என்று புரிந்து ஆதாரத்தை எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது எடுத்துக் கொள்ள முடியும் என்ற மாதிரியான பயிற்சி நடந்து கொண்டே இருக்கிறதா? உடல் உணர்வை விடுவது மற்றும் அதிலிருந்து விலகுவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கிறது? ஒரு விநாடி எடுக்கிறதா? எப்பொழுதும் ஒரு விநாடி எடுக்கப்படுகிறதா? அல்லது சில நேரம் அதிகமாகவும், சில நேரம் குறைவாகவும் இருக்கிறதா? (சில நேரம் ஒரு மாதிரியும், சில நேரம் வேறு மாதிரியும்) இதிலிருந்து இன்னும் அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபடவில்லை என்று நிரூபணம் ஆகிறது. எவ்வளவு பந்தனமுக்த் ஆக இருக்கிறாரோ அந்த அளவே யோகயுக்த் ஆக இருப்பார். மேலும் எவ்வளவு யோகயுக்த்தாக இருப்பாரோ அந்த அளவே ஜீவன் முக்தியில் (சொர்க்கத்தில்) உயர்ந்த பதவி பிராப்தியாகுகிறது. ஒருவேளை பந்தனமுக்த் இல்லை என்றால் யோகயுக்த்தும் இல்லை. அவரை மாஸ்டர் சர்வசக்திவான் என்று கூற முடியுமா? உடலின் சம்மந்தம் மற்றும் உடலின் பொருட்கள் மேல் உள்ள பற்றுதலை நீக்குவது சுலபம், ஆனால் உடலின் பற்றுதலிலிருந்து விடுபடுவது கடினமான காரியமாகும். இப்பொழுது எந்த பந்தனம் இன்னும் இருக்கிறது? இதே. இந்த உடலின் பற்றுதலிலிருந்து விடுபட வேண்டும். எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது உடலில் வருவது. அந்த மாதிரி பயிற்சியை இப்பொழுது மிகக் கடினமாகச் செய்ய வேண்டும். எப்படி தந்தை இப்பொழுது உடலை ஆதாரமாக எடுத்து பேசிக் கொண்டிருக்கிறாரோ அதே போல் நாமும் உடலின் ஆதாரத்தை எடுத்து காரியம் செய்து கொண்டிருக்கிறோம் என்று அந்த மாதிரியே புரிந்து கொள்ள வேண்டும். இந்த விலகியிருக்கும் நிலையின்படி தான் அன்பிற்குரியவராக ஆக வேண்டும். எவ்வளவு இந்த விலகியிருக்கும் பயிற்சியில் முன்னேறிச் செல்வீர்களோ அவ்வளவே உலகிற்கு அன்பானவராக ஆவதில் முன்னேறிச் செல்வீர்கள். அனைவரின் அன்பிற்குரியவராக ஆவதற்காக முதலில் விலகியவராக ஆக வேண்டும் சேவை செய்து கொண்டே, எண்ணத்தை உருவாக்கிக் கொண்டே கூட தனக்கும், மற்றவர்களுக்கும் இவர் விலகியவர் மற்றும் மிகவும் அன்பிற்குரியவர் என்ற உணர்வு ஏற்பட வேண்டும். எவ்வளவு ஒருவர் தான் விலகியவராக இருப்பாரோ அவ்வளவு மற்றவர்களையும் தந்தையின் அன்பிற்குரியவராக ஆக்க முடியும்.

சேவையின் வெற்றிக்கான சொரூபம் என்ன? (விதவிதமான கருத்துக்கள் அனைவரிடம் இருந்து வந்தது). அனைத்து ஆத்மாக்களையும் தந்தையின் அன்பிற்குரியவராக மற்றும் தந்தையின் காரியங்களில் உதவி செய்பவராக மற்றும் முயற்சி செய்வதில் அந்த ஆத்மாக்களை சக்தி ரூபமாக ஆக்குவது இது தான் சேவையின் வெற்றிக்கான சொரூபம் ஆகும். எந்த ஆத்மாக்களுக்கு சேவை செய்கிறீர்களோ அந்த ஆத்மாக்களில் இந்த மூன்று தகுதிகளும் பிரத்யக்ஷ ரூபமாக பார்க்கத் தென்பட வேண்டும். ஒருவேளை மூன்றில் ஏதாவது ஒரு குணத்தின் குறை இருக்கிறது என்றால் சேவையின் வெற்றியிலும் குறை இருக்கிறது. இந்த வெற்றியின் சொரூபத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்காக முக்கியமாக எந்த விஷயத்தை கலனம் வைக்க வேண்டும் மற்றும் காரியம் செய்யும் போது தாரணை செய்ய வேண்டும்? அது எந்த விஷயம்? மிகவும் சுலபமானது. கடினமான விஷயத்தை கவனம் கொடுத்து தாரணை செய்கிறார்கள் மற்றும் சுலபமான விஷயத்தை விட்டு விடுவதினால் சுலபமானதின் தாரணை காலதாமதமாக ஏற்படுகிறது. இது தெரியுமா? இது ஒன்றும் பெரிய விஷயமில்லை. ஆகி விடும் என்று புரிய வைக்கப்படுகிறது. பிறகு என்ன நடக்கிறது? ஆகி விடும். ஆகி விடும் என்று சொல்லி, சொல்லி கவனத்திலிருந்து விலகிச் சென்று விடுகிறது. எனவே தாரணை ரூபத்திலும் வருவதில்லை. அப்படியானால் அது எந்த ஒரு விஷயம்? ஒருவேளை அந்த விஷயத்தை தாரணை செய்து விட்டீர்கள் என்றால் வெற்றி சொரூபமாக ஆக முடியும் (சாட்சி நிலை ஆம் இது சரி தான். இன்று பாப்தாதாவும் சாட்சி நிலையின் இராக்கி கட்டுவதற்காக வந்திருக்கிறார். ஒருவேளை இந்த காட்சி நிலையின் இராக்கி எப்பொழுதும் கட்டப்பட்டு இருக்கிறது என்றால் சேவையின் வெற்றி வெகு விரைவில் வெளிப்படும். இப்பொழுது எந்தக் காரியத்தில் ஒரு மாதம் கூட எடுக்கிறதோ அந்தக் காரியம் செய்வதில் ஒரு மணி நேரம் கூட ஆகாது. இந்த சாட்சி நிலையின் இராக்கியை கட்டிக் கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கோ தூய்மையின் இராக்கியை கட்டி விடுகிறீர்கள் ஆனால் பாப்தாதா இன்று இந்த சாட்சி நிலையின் இராக்கியை கட்டி விடுகிறார். எவ்வளவு சாட்சியாக இருப்பீர்களோ அவ்வளவு சாட்சாத்கார மூர்த்தி மற்றும் சாட்சாத் (அப்படியே மூர்த்தி ஆவீர்கள். சாட்சி நிலையின் குறை இருக்கும் காரணத்தினால் சாட்சாத் மற்றும் சாட்சாத்காரமூர்த்தியும் குறைவாக ஆகியிருக்கிறீர்கள். எனவே இந்தப் பயிற்சியை செய்யுங்கள். எந்தப் பயிற்சி? இப்பொழுது

ஆதாரத்தை எடுத்தீர்கள், அடுத்த நேரம் விலகியவராக ஆகி விட்டீர்கள். இந்தப் பயிற்சியை அதிகரிப்பது என்றால் சம்பூர்ண நிலை மற்றும் நேரத்தை அருகில் கொண்டு வருவது ஆகும். அப்படியானால் இப்பொழுது என்ன முயற்சி செய்ய வேண்டும். நேரம் மற்றும் சம்பூர்ண நிலையை அருகில் கொண்டு வாருங்கள். இன்னும் ஒரு கவனம் கொடுக்க வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால், தன்னுடைய ரிக்கார்டை (பதிவேட்டை சரியாக வைத்துக் கொள்வதற்காக அனைவருக்கும் ரிகார்ட் (மரியாதை) கொடுங்கள். எவ்வளவு ஒருவர் அனைவருக்கும் மரியாதை கொடுக்கிறாரோ அந்த அளவே தன்னுடைய பதிவேட்டை சரியாக வைத்துக் கொள்ள முடியும். மற்றவர்களுக்கு மரியாதை கொடுப்பது என்றால் தன்னுடைய பதிவேட்டை உருவாக்குவது ஆகும். ஒருவேளை மரியாதையும் குறைவாக கொடுத்தீர்கள் என்றால் தன்னுடைய பதிவேட்டில் குறைவை ஏற்படுத்துகிறீர்கள். எனவே இந்த முக்கிய விஷயத்தின் அவசியம் இருக்கிறது. புரிந்ததா? எப்படி யக்ஞத்தின் உதவியாளர் ஆவது தான் உதவியைப் பெறுவது என்பதோ. அதே போல் மரியாதை கொடுப்பது தான் மரியாதை பெறுவது ஆகும். பெறுவதற்காக கொடுக்கிறீர்கள். ஒரு தடவை கொடுப்பதால் அனேக தடவை பெறுவதற்கான உரிமையுள்ளவர் ஆகி விடுகிறீர்கள். சிறியவர்களுக்கு அன்பும். பெரியவர்களுக்கு மரியாதையும் கொடுக்க வேண்டும் என்று கூறுகிறார்கள் ஆனால் அனைவரையும் பெரியவர்கள் என்று நினைத்து மரியாதை கொடுப்பது தான் அனைவரது அன்பையும் பெறுவதற்கான சாதனம் ஆகும். இந்த விஷயம் கூட முக்கியமான கவனம் கொடுப்பதற்குத் தகுதியானதாகும். ஒவ்வொரு விஷயத்திலும் முதலில் நீங்கள் இதை உள்உணர்வில். பார்வையில், வார்த்தையில் மற்றும் காரியத்தில் கொண்டு வர வேண்டும். எவ்வளவு முதலில் நீங்கள் என்று கூறுவீர்களோ அவ்வளவே உலகின் தந்தையின் சமமானவராக ஆக முடியும்.

உலகின் தந்தைக்கு சமமானவரின் அர்த்தம் என்ன? ஒன்று உலகத் தந்தைக்கு சமமாக ஆவது. இரண்டாவது எப்பொழுது உலக இராஜா ஆவீர்களோ அப்பொழுது கூட உலகின் தந்தை என்று தான் கூறப்படுவார் இல்லையா? உலகின் இராஜா உலகின் தந்தை தான் இல்லையா? அப்படி உலகின் தந்தையாகவும் ஆவீர்கள்; மேலும் உலகின் தந்தையின் சமமானவர்களாகவும் ஆவீர்கள். எதில்? முதலில் நீங்கள் என்று

சொல்வதினால், புரிந்ததா? பணிவானவராக ஆவதினால் எடுத்துக்காட்டாக ஆக முடியும். பணிவானவராக ஆவதினால் உலகின் படைப்புக் காரியத்தை செய்ய முடியும். புரிந்ததா? அந்த மாதிரி நிலையை தாரணை செய்வதற்காக சாட்சி நிலையின் இராக்கி கட்ட வேண்டும். முதலிலேயே சாட்சி நிலையின் இராக்கியைக் கட்டிக் கொண்டு சென்றீர்கள் என்றால் இராக்கியின் சேவை வெற்றி நிறைந்ததாக இருக்கும். புரிந்ததா?

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: சம்மேளனம் நடத்துகிறீர்கள், சம்மேளனத்தின் அர்த்தம் என்ன?** அனைத்து ஆத்மாக்களின் மிலன் அதாவது சந்திப்பு அனைத்து ஆத்மாக்களை யாருடன் சந்திக்க வைப்பீர்கள்? தந்தையுடன், தற்சமயம் நடக்கும் நேரம் எது? சம்பூர்ணத்தின் நேரத்தை அருகில் கொண்டு வருவதற்கானது என்றால் தற்சமயத்திற்கு ஏற்றபடி வெற்றி கண்டிப்பாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. எப்படி சென்ற கல்பத்திலும் முயற்சியை நிமித்த மாத்திரம் தான் செய்வித்தோம். இன்று முயற்சி செய்தால் பின்பு பிராப்தி ஏற்பட்டு விடும் என்று அப்படியும் இல்லை. இப்பொழுது முயற்சி செய்வது உடன் இப்பொழுதே பிராப்தியையும் அடைவது. அந்த மாதிரியான முயற்சி இருக்கிறதா? எப்பொழுது சுயம் பிராப்தி சொரூபம் ஆவீர்களோ அப்பொழுது பிற அனேக ஆத்மாக்களுக்கு பிராப்தி செய்விக்க முடியும், ஒருவேளை சுயம் பிராப்தி சொரூபமாக இல்லை என்றால் மற்றவர்களுக்கு எப்படி பிராப்தி செய்விக்க முடியும்? இப்பொழுது செய்விக்கவில்லை என்றால் எப்பொழுது செய்விப்பீர்கள். எப்பொழுது' என்ற வார்த்தையும் முடிந்து விட வேண்டும் என்று கூறியிருந்தோம் இல்லையா? ஒவ்வொரு விஷயத்திலும் 'இப்பொழுது' என்பது இருக்கட்டும் அவ்வளவு மாற்றத்தை எண்ணம், சொல், செயலில் கொண்டு வர வேண்டும். எப்பொழுதாவது செய்து விடலாம் அல்லது எப்பொழுதாவது ஆகி விடும் என்பது கூட எண்ணத்தின் அளவிலும் வர வேண்டாம். இப்பொழுது ஆகியே விடும். அந்த மாதிரி மாற்றம் செய்ய வேண்டும் அப்பொழுது தான் சேவையின் வெற்றி கிடைக்கும். ஒருவேளை உங்களிலேயே எப்பொழுதாவது நடந்து விடும் என்று இருக்கிறது என்றால் உங்களுடைய பிரஜைகளும் மிக நன்றாக இருக்கிறது பின்பு எப்பொழுதாவது செய்து விடலாம் அல்லது ஆகி விடும் என்று கூறுவார்கள். எப்பொழு தாவது நடந்து விடும் என்று விட்டுவிடுபவர்கள் பின்னால் வரும் பிரஜைகளாக இருப்பார்கள். அப்படி

# 1970 அவ்யக்த முரளி

இப்பொழுது நெருக்கத்தில் உள்ள பிரஜைகளை உருவாக்க வேண்டும் நெருக்கத்தின் பிரஜைகளை உருவாக்குவதற்காக மென்மையான தன்மையை விட வேண்டியதாக இருக்கும். அலட்சியம் மென்மைத் தன்மை உடையதாக இருக்கிறது. எவ்வளவிற்கு எவ்வளவு இரகசியம் தெரிந்து நடப்பவர்களாக இருப்பீர்களோ அவ்வளவிற்கு அவ்வளவு மென்மைத்தன்மை விடுபட்டு கொண்டே இருக்கும். ஆன்மீகத் தன்மையின் ஒரே மாதிரியான ரூபம் எப்பொழுதும் இருக்கிறதா? ரூபத்தை மாற்றுவதற்குப் பதிலாக இந்த உடலின் பற்றுதலை விட வேண்டும் என்ற இந்தப் பயிற்சியும் இருக்க வேண்டும். உடலை விடுவதற்கான பயிற்சி இருக்கும் என்றால் ரூபத்தை மாற்றுவது விடுபட்டு விடும் படிப்பிலும் தவறாதவராக இருப்பது கூட முக்கியமான விஷயம் ஆகும். வருவதில் மட்டும் தவறாதவராக இல்லை ஆனால் ஒவ்வொரு விஷயத்திலும் தவறாதவராக இருக்க வேண்டும். எவ்வளவு தவறாதவரோ அவ்வளவு ஆளுபவராகவும் இருப்பார். அப்படியானால் என்ன செய்ய வேண்டும்? அனைத்து விஷயங்களிலும் தவறாதவராக இருக்க வேண்டும் அமிர்தவேளை எழுவதிலிருந்து ஒவ்வொரு காரியத்திலும், ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு வார்த்தையிலும் தவறாதவராக இருக்க வேண்டும். ஒரு வார்த்தை கூட வீணானவை வெளிவர வேண்டாம். இந்த உலகத்திலுள்ள பெரிய மனிதர்கள் சொற்பொழிவு நிகழ்த்தும் பொழுது அவர்கள் பேச வேண்டிய வார்த்தைகள் கூட நிர்ணயம் செய்யப்பட்டு விடுகிறது. நீங்களும் பெரியதிலும் பெரிய மனிதர்கள் தான் இல்லையா? எனவே உங்களுடைய வார்த்தைகள் கூட நிர்ணயம் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். மாயாவின் நிர்ணயம் செய்யப்பட்டதாக இருக்க வேண்டாம். அந்த மாதிரி தவறாதவர் ஆகுபவரின் சேவையின் வெற்றி நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. சம்மேளனத்தின் ஒவ்வொரு காரியத்தை செய்து கொண்டும் நாம் உலகின் எதிரில் சாட்சாத்காரமூர்த்தியாக இருக்கிறோம் என்பதை ஒருபொழுதும் மறக்க வேண்டாம். சாட்சாத்கார மூர்த்தியாக ஆவதினால் உங்கள் மூலமாக பாப்தாதாவின் சாட்சாத்காரம் தானாகவே ஏற்படும். அதை எப்பொழுது செய்ய முடியும் என்றால் எப்பொழுது தன்னை ஞானம், யோகத்தின் எடுத்துக்காட்டாக ஆக்குவீர்களோ அப்பொழுது தான். எவ்வளவு தன்னை எடுத்துக்காட்டாக ஆக்குவீர்களோ அவ்வளவு தந்தையை பிரத்யக்ஷம் செய்ய முடியும். நல்லது.

**வரதானம்: தன்னுடைய சூட்சும பலஹீனங்களை சிந்தனை செய்து மாற்றம் செய்யக்கூடிய சுய சிந்தனையாளர் ஆகுக!**

ஞானத்தின் துளிகளை மீண்டும் நினைப்பது கேட்பது மற்றும் சொல்வது மட்டும் சுயசிந்தனை இல்லை ஆனால் சுயசிந்தனை என்றால் தன்னுடைய சூட்சும பலஹீனங்களை, தன்னுடைய சிறு சிறு தவறுகளை சிந்தனை செய்து நீக்குவது, மாற்றம் செய்வது -இது தான் சுயசிந்தனையாளர் ஆவது ஆகும். ஞானத்தை சிந்தனை செய்வதோ அனைத்துக் குழந்தைகளும் மிக நன்றாகச் செய்கிறார்கள் ஆனால் ஞானத்தை தனக்காக உபயோகித்து தாரணை சொரூபம் ஆவது, தன்னை மாற்றம் செய்வது இதற்குத் தான் கடைசி முடிவில் மதிப்பெண்கள் கிடைக்கிறது.

**சுலோகன்: ஒவ்வொரு நேரமும் செய்பவர் செய்விப்பவர் பாபாவின் நினைவு இருக்கிறது என்றால் நான், எனது என்ற அபிமானம் வர முடியாது.**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 06.08.1970-2 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# திருஷ்டி மூலமாக சிருஷ்டியின் படைப்பு! (டீச்சர்ஸ் டிரைனிங் வகுப்பு -தொடக்க விழா)

அனைவரும் அவ்யக்த நிலையில் நிலைத்திருந்து யக்ஞத்தின் காரியத்தை செய்கிறீர்களா? எப்படி தந்தை அவ்யக்தமாக இருந்தும் வியக்தத்தில் பிரவேசமாகி காரியம் செய்கிறாரோ அதே போல் தந்தைக்குச் சமமானவராக ஆகி விட்டீர்களா? தந்தைக்குச் சமமானவராக ஆனீர்கள் என்றால் தான் மற்றவர்களையும் தந்தைக்குச் சமமானவர்களாக ஆக்க முடியும். திருஷ்டி (பார்வை) தந்தைக்குச் சமமானதாக ஆகி விட்டதா? என்று உங்களை நீங்களே கேளுங்கள். வார்த்தைகள் தந்தைக்குச் சமமானதாக ஆகி விட்டதா? எண்ணம் தந்தைக்குச் சமமானதாக ஆகி விட்டதா? தந்தைக்கு நினைவில் என்ன இருக்கிறது? தெரிந்திருக்கிறீர்களா? தந்தையின் நினைவில் எப்பொழுதும் என்ன இருக்கிறது மற்றும் உங்களின் நினைவில் எப்பொழுதும் என்ன இருக்கிறது? வித்தியாசம் இருக்கிறதா? (ஆம்), என்ன வித்தியாசம்? சமமான நினைவு இருக்கிறதா? ஏதாவது நினைவு இருக்கிறதா? அல்லது எந்த நினைவும் இருப்பதில்லையா? நினைவு இருக்கிறதா? அல்லது நினைவிலிருந்தும் விலகியிருக்கிறீர்களா? ஏதாவது விஷயத்தில் உங்களுடைய நினைவு தந்தைக்குச் சமமானதாக இருக்கிறதா? அது எந்த நினைவு? (குணங்களின் நினைவு). வேறு ஏதாவது தந்தைக்குச் சமமான நினைவு இருக்கிறதா? (காரியங்களின்), நல்லது. குணங்களின் சமநிலை இருக்கிறதா? (இல்லை). கடைசியில் நினைவில் சமநிலை வந்து விடுமா? (வரிசைக்கிரமமாக). முதல் குழந்தை மற்றும் தந்தையில் வித்தியாசம் இருக்குமா? பாப்தாதாவிடம் வித்தியாசம் இருக்குமா? சமநிலை வந்து விடுமா? எப்படி தந்தை எல்லைக்கப் பாற்பட்ட தந்தையாக இருக்கிறார் மற்றும் தாதாவும் (பிரம்மாபாபாவும்) எல்லைக்கப்பாற்பட்ட தந்தையாக இருக்கிறார். பாப்தாதாவின்

நெருங்கிய சமநிலை இருக்க வேண்டும். எவ்வளவிற்கு எவ்வளவு நெருக்கமோ அவ்வளவு சமநிலை. கடைசியில் குழந்தைகள் நீங்களும் தன்னுடைய படைப்பின் படைப்பவராகி நடைமுறையில் அனுபவம் செய்வீர்கள். எப்படி தந்தைக்கு படைப்பைப் பார்த்து படைப்பவரின் சொரூபத்தின் நினைவு தானாக இருக்கிறது. அந்த மாதிரியான நிலை வரிசைக்கிரமமாக குழந்தைகளிடமும் வர வேண்டும். நல்லது.

(ஜானகி தாதியைப் பார்த்து). திருஷ்டி மூலம் சிருஷ்டியைப் படைக்க வருகிறதா? உங்களுடைய படைப்பு எப்படிப்பட்டது? வாய்மூலமாகவா? அல்லது கண்கள் மூலமாகவா? வாய்மூலமாக படைப்பது (இதுவரை அப்படித்தான் நடந்து வருகிறது) வருங்காலங்களில் கவனம் வைப்பீர்கள். பார்வை மூலம் படைப்பைப் படைப்பீர்களா? திருஷ்டி மூலம் சிருஷ்டி என்று இந்த பழமொழி இருக்கிறது அல்லவா? எப்படி சத்யுகத்தில் யோக பலத்தினால் படைப்பு படைக்கப்படுகிறதோ அதே போல் கடைசியில் உங்கள் அனைவரின் திருஷ்டியினால் சிருஷ்டி உருவாகும். அப்படிப்பட்ட திருஷ்டி மூலம் சிருஷ்டி மாறிவிடட்டும், அந்த மாதிரி தன்னுடைய திருஷ்டியில் தெய்வீகத்தன்மையை அனுபவம் செய்து கொண்டே இருக்கிறீர்களா? பார்வை ஏமாற்றத்தையும் கொடுக்கிறது மற்றும் பார்வை தூய்மை யில்லாதவர்களைத் தூய்மையும் படுத்துகிறது. திருஷ்டி மாறுவதினால் சிருஷ்டியும் மாறிவிடுகிறது. அப்படியானால் திருஷ்டி எவ்வளவு மாறியிருக்கிறது? திருஷ்டியில் என்ன மாற வேண்டும் என்று தெரியுமா? ஆன்மீக திருஷ்டியாக ஆக்க வேண்டும். ஆன்மீக திருஷ்டி மற்றும் தெய்வீக திருஷ்டி மேலும் அலௌகீக திருஷ்டி உருவாகியிருக்கிறதா? எங்கு பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும் ஆத்மீக சொரூபம் மட்டும் தென்படட்டும். அந்த மாதிரி திருஷ்டி மாறியிருக்கிறதா? ஆகியிருக்கிறதா? எப்பொழுது திருஷ்டியில் அதாவது கண்களில் ஏதாவது குறை இருக்கிறது என்றால் ஒரே நேரத்தில் ஒவ்வொன்றும் இரண்டு இரண்டாகத் தென்படும். அப்படி திருஷ்டி முழுமையாக மாறவில்லை என்றால் இங்கும் இரண்டு இரண்டு பொருட்கள் தென்படும். உடல் மற்றும் ஆத்மா. சில நேரம் அதுவும், சில நேரம் இதுவும் தென்படும், அப்படியிருக்கும் இல்லையா? சில நேரம் உடலைப் பார்க்கிறீர்கள். சில நேரம் ஆத்மாவைப் பார்க்கிறீர்கள். எப்பொழுது கண்கள் முற்றிலும் சரியாகி விட்டது என்றால், எந்த பொருள் எப்படி இருக்கிறதோ அப்படியே சரியான ரூபத்தில் தென்படும். அந்த மாதிரி இந்த திருஷ்டியும்

எப்பொழுது மாறிவிடுகிறதோ யதார்த்த ரூபம் என்னவாக இருக்கிறதோ அது தெரியும். சரி. யதார்த்த ரூபம் என்ன? ஆத்மாவா அல்லது உடலா? அப்படி எது யதார்த்த ரூபமோ அது மட்டும் தென்படட்டும் அப்பொழுது புரிந்து கொள்ளுங்கள் திருஷ்டி சரியாக இருக்கிறது என்று. திருஷ்டியின் மேல் மிகுந்த கவனம் கொடுக்க வேண்டும். திருஷ்டி மாறிவிட்டது என்றால் ஒருபொழுதும் ஏமாற்றம் கொடுக்காது,

சாட்சாத்காரத்தை திருஷ்டி மூலம் பார்ப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் திருஷ்டியில் தன்னுடைய யதார்த்த ரூபம் மற்றும் யதார்த்த வீடு மற்றும் இராஜ்யத்தைப் பார்ப்பார்கள். அந்த அளவிற்கு திருஷ்டியில் சக்தி இருக்கிறது ஆனால் திருஷ்டி சரியாக இருக்கிறது என்றால் தான். எனவே இப்பொழுது யாராவது எதிரில் வந்தால் திருஷ்டி மூலமாக என்ன சாட்சாத்காரம் செய்வீப்பீர்கள்? எது உங்களுடைய உள் உணர்வில் இருக்குமோ மற்றவர்களும் உங்களுடைய திருஷ்டி மூலம் பார்க்க முடியும். ஒருவேளை உள்உணர்வு தேக அபிமானத்தினதாக இருக்கிறது என்றால். சஞ்சலப்படுகிறது என்றால் உங்களுடைய திருஷ்டியினால் சாட்சாத்காரமும் அந்த மாதிரியே ஏற்படும். மற்றவர்களின் திருஷ்டியும், உள்உணர்வும் சஞ்சலப்படும். சரியான சாட்சாத்காரத்தைக் காண்பிக்க முடியாது. புரிந்து கொண்டீர்களா? இவர்களுக்கு பயிற்சி நடந்து கொண்டிருக்கிறது தான் இல்லையா? இந்த குரூப்பிற்கான முக்கியமான விஷயம் என்னவென்றால் தன்னுடைய விருத்தியின் மாற்றம் மூலமாக தன்னுடைய திருஷ்டியை தெய்வீகமாக ஆக்க வேண்டும். எவ்வளவு ஆகியிருக்கிறது, ஏன் ஆகவில்லை இதன் மேல் இவர்களுக்கு தெளிவாக புரிய வைக்க வேண்டும் (ஜானகி தாதியைப் பார்த்து கையை காண்பித்து புரிந்ததா. சிருஷ்டி மாறாமல் இருப்பதற்கான காரணம் என்ன? திருஷ்டி மாறவில்லை திருஷ்டி மாறாமல் இருட்டதற்கான காரணம் என்ன? விருத்தி உள்உணர்வு மாறவில்லை. திருஷ்டி மாறிவிட்டது என்றால் சிருஷ்டியும் மாறிவிடும்.

தற்சமயம் அனைத்துக் குழந்தைகளுக்காக பாப்தாதாவின் விசேஷ சைகை, உங்களுடைய திருஷ்டியை மாற்றுங்கள் என்பது தான். சாட்சாத்கார மூர்த்தி ஆகுங்கள். பார்ப்பவர்கள் இது கண்கள் இல்லை, இது மந்திர சக்தி அடங்கிய சிறிய பெட்டகங்கள் என்று அனுபவம் செய்யட்டும் எப்படி மந்திர பெட்டகத்தில் விதவிதமான காட்சிகளைப்

பார்க்கிறீர்கள் அதேபோல் உங்களுடைய கண்களில் தெய்வீகக் காட்சிகளைப் பார்க்கட்டும். கண்கள் சாட்சாத்காரம் அளிக்கும் சாதனம் ஆகி விடட்டும் புரிந்ததா. இந்த குரூப் என்ன குரூப் என்று தெரியுமா? இவர்களில் என்ன சிறப்புக்கள் இருக்கின்றன? ஒவ்வொரு குரூப்பிற்கும் அவரவர்களின் சிறப்புக்கள் இருக்கின்றன. ஏன்? முழு உலகத்திலும் விசேஷ ஆத்மாக்கள் நீங்கள் தான். நாம் சாதாரணமானவர்கள் என்று அப்படி நினைப்பதில்லையே? அந்த மாதிரி ஒருபொழுதும் நினைக்காதீர்கள். முழு உலகத்திலும் உ விசேஷ ஆத்மாக்கள் யார்? ஒருவேளை நீங்கள் விசேஷ ஆத்மாக்களாக இருக்கவில்லை என்றால் தந்தை உங்களை தன்னுடையவர்களாக ஏன் ஆக்கினார்? தன்னை விசேஷ ஆத்மா என்று புரிந்து கொள்வதினால் விசேஷங்களைக் கொண்டு வர முடியும். ஒருவேளை சாதாரணம் என்று நினைத்தீர்கள் என்றால் காரியங்களும் சாதாரணமானதாகச் செய்வீர்கள் ஆனால் அப்படி இல்லை. ஒவ்வொரு ஆத்மாவும் தன்னை விசேஷமானவர் என்று புரிந்து மற்றவர்களிலும் விசேஷத்தைக் கொண்டு வர வேண்டும் அப்படி குழந்தைகள் நீங்கள் விசேஷ ஆத்மாக்கள் ஆவீர்கள். இந்த போதை ஈஸ்வரிய போதை ஆகும். தேக உணர்வின் போதை இல்லை. ஈஸ்வரிய போதை எப்பொழுதும் கண்கள் மூலமாகத் தென்படட்டும். அப்படியானால் இந்த குரூப்பின் விசேஷங்கள் என்ன? நீங்கள் உங்களுடைய குரூப்பின் விசேஷங்களைத் தெரிந்திருக்கிறீர்களா? என்ன அது? (இவர்களின் மனதில் உற்சாகம் இருக்கிறது, கிரகித்துக் கொள்வதின் பாவனை இருக்கிறது. கற்றுக்கொள்வதின் ஊக்கம் இருக்கிறது. வெற்றுக் காகிதம் போல் இருக்கிறார்கள்). இந்த குரூப்பின் டைட்டில்களோ (பட்டங்களோ) மிக நீளமானது. உங்களுடைய விசேஷங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களா? பயிற்சி முடிந்த பிறகு இந்த குணங்கள் நிலைத்திருக்கட்டும். இந்த பயிற்சியும் தேவையாக இருக்கிறது. புரிந்ததா?

இப்பொழுதோ விசேஷங்களை மிக நன்றாக சொல்லிக் கொண்டிருந்தார்கள். வெற்றுக் காகிதத்தில் என்ன எழுதினாலும் அது மிகத் தெளிவாக இருக்கும். எவ்வளவு தெளிவோ அவ்வளவு உயர்ந்த நிலை. ஒருவேளை தெளிவில் குறை இருக்கிறது என்றால் உயர்ந்த நிலையிலும் குறை இருக்கும். மற்றதைக் கலக்காதீர்கள். சிலர் மிக அதிகமாகக் கலக்குகிறார்கள். இதனால் சரியான ரூபமும்

சரியில்லாததாக ஆகி விடுகிறது. அதே ஞானத்தின் விஷயங்கள் மாயாவின் ரூபம் ஆகி விடுகிறது. எனவே இந்த குரூப் எப்பொழுதும் தெளிவானதாகவும், உயர்ந்ததாகவும் இருந்தது என்று இந்த குரூப்பின் விசேஷம் உலகில் தென்படட்டும். எப்பொழுதும் தன்னுடைய சரியான ரூபத்தில் இருக்க வேண்டும். எந்த விஷயம் எப்படி இருக்கிறதோ அதை அதே ரூபத்தில் தெரிந்து, தாரணை செய்ய வேண்டும்; மேலும் நடந்து கொள்ள வேண்டும், இது தான் தெளிவுத்தன்மை ஆகும். இந்த குரூப்பிற்கு பாப்தாதா என்ன பட்டம் கொடுக்கிறார்? எப்படி குழந்தையும், தெய்வமும் ஒன்று என்ற பழமொழி இருக்கிறது இல்லையா? ஆனால் பாப்தாதா சிறு குழந்தைகளை தந்தைக்குச் சமமானவர்கள் என்று கூறுகிறார். அனைத்து விஷயங்களிலும் ஒவ்வொரு அடியிலும் சமநிலையை வையுங்கள் ஆனால் சமநிலை எப்படி வரும்? சமநிலைக்காக இரண்டு விஷயங்களைக் கவனத்தில் வைக்க வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது தான் சமநிலை வரும். அது எந்த இரண்டு விஷயங்கள் கவனத்தில் வைக்க வேண்டியதாக இருக்கிறது. பாப்தாதாவுக்கு சமமாக வேண்டும் என்றால், புத்தியில் என்ன வைத்துக் கொள்ள வேண்டும்? (யாப்தாதாவைத் தான் வைக்க வேண்டும். என்ன வைக்க வேண்டும் என்று ஏற்கனவே கூறியிருக்கிறோம். சமமானவர்களாக எப்படி ஆவீர்கள்? சாகார பாபாவிடம் என்ன விசேஷங்கள் இருந்தன. ஒன்று எப்பொழுதும் தன்னை ஆதாரமூர்த்தி என்று புரிந்து கொள்ளுங்கள். முழு உலகத்தின் ஆதாரமூர்த்தி என்றால் இதனால் என்னவாகும்? என்ன காரியம் செய்தாலும் பொறுப்புணர்வோடு செய்வீர்கள். தனிமை உணர்வு இருக்காது. எப்படி பாப்தாதா அனைவரின் ஆதாரமூர்த்தியாக இருக்கிறாரோ அதே போல் ஒவ்வொரு குழந்தையும் உலகத்தின் ஆதாரமூர்த்தி ஆவார். என்ன காரியம் நீங்கள் செய்வீர்களோ அதே போல் அனைவரும் செய்வார்கள். சங்கமயுகத்தில் என்னென்ன பழக்கவழக்கங்கள் சரியான முறையில் நடந்து கொண்டிருக்கின்றனவோ அவைகள் பக்தி மார்க்கத்தில் மாறி நடந்து கொண்டிருக் கின்றன. அப்படி முழு உலகத்திற்கும் நீங்கள் ஆதாரமூர்த்தியாக இருக்கிறீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் தன்னை ஆதாரமூர்த்தி என்று புரிந்து கொள்ள வேண்டும் மற்றும் இன்னொன்று நன்மை செய்யும் மூர்த்தி ஆக வேண்டும். எவ்வளவு தனக்கு நன்மை செய்வீர்களோ அவ்வளவு மற்றவர்களுக்கும் நன்மை செய்வீர்கள். எவ்வளவு மற்றவர்களுக்கு நன்மை செய்வீர்களோ அவ்வளவு தனக்கும் நன்மை செய்வீர்கள். தனக்கு

நன்மை செய்யவில்லை என்றால் மற்றவர்களுக்கு எப்படி செய்வீர்கள். எப்பொழுது நீங்கள் ஆதாரமூர்த்தி ஆவீர்களோ அப்பொழுது தான் மற்றவர்களுக்கு நன்மை செய்வீர்கள்.
சிறிய குழந்தைகளாக இருந்த போதும் காரியங்கள் தந்தைக்குச் சமமானதாகச் செய்ய வேண்டும். இதை நினைவில் வைத்துக் கொள்வதினால் சமநிலை வரும். பின்பு இந்த குரூப்பிற்கு என்ன பட்டம் கொடுத்திருந்தோமோ 'சிறியவர்கள் தந்தைக்குச் சமமானவர்கள்' என்பது வெளிப்படையாகத் தென்படும். இதை மறந்து விடாதீர்கள். நல்லது. இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? (திலகமிட வேண்டும்) இந்த திலகம் கூட சாதாரணமானதில்லை. திலகம் ஏன் இடுகிறார்கள் என்று தெரியுமா? சௌபாக்கியத்தின் அடையாளம் ஆகும். என்னென்ன விஷயங்கள் கேட்டீர்களோ அந்த அனைத்து விஷயங்களிலும் நிலைத்திருப்பதற்கான அடையாளம் தான் திலகம். திலகமும் நெற்றியில் நிலைத்திருந்து விடுகிறது. அப்படி புத்தியில் இந்த அனைத்து விஷயங்களும் நிலைத்திருந்து விட வேண்டும். அதற்காகத்தான் இந்த திலகம் இடப்படுகிறது. வேறு எதற்காக மற்றும் ஏன் திலகம் இடுகிறார்கள்? (புள்ளி ரூப நிலையின் அடையாளம், இராஜதிலகம், வெற்றியின் திலகம், பொறுப்பின் திலகம் என்று அப்படி விதவிதமான கருத்துக்களைக் கூறினார்கள்).

பாப்தாதா கூறுவதோ முற்றிலும் வேறு. நெற்றியில் இடுவதைத் திலகம் என்றோ கூறுகிறார்கள் ஆனால் வேறு ஏதாவதும் இருக்கிறதா? (இன்ஜக்ஷன்). இந்த திலகம் எப்பொழுதும் மாயாவின் நோய் களிலிருந்து விடுபட்டிருப்பதற்கான திலகம் ஆகும். எப்பொழுதும் ஆரோக்கியமாக இருப்பதற்குமான திலகம் ஆகும். ஒரு திலகம், நீங்கள் அனைவரும் கூறியது. மேலும் இதுவும் இருக்கிறது. இரண்டு திலகங்களையும் இட வேண்டும். ஒன்று சக்திசாலியாக ஆவதற்கு மற்றும் இரண்டாவது எப்பொழுதும் சுமங்கலியாக மற்றும் பாக்கியம் நிறைந்து இருப்பதற்காக, இரண்டு திலகங்களையும் பாப்தாதா இடுகிறார். அடையாளம் ஒன்று தான், இரகசியங்கள் இரண்டு இருக்கின்றன. அடையாளமோ ஸ்தூலமானது ஆனால் இரகசியம் இரண்டு இருக்கிறது. எனவே அப்படியே திலகம் இட்டுக்கொள்ளாதீர்கள். திலகம் இடுவது என்றால் நிரந்தரமாக உறுதிமொழி எடுப்பது என்ன உறுதிமொழி எடுப்பது? இந்த திலகம் ஒரு உறுதிமொழியின் அடையாளமாகும். எப்பொழுதும்

ஒவ்வொரு விஷயத்திலும் கௌரவமாகத் தேர்ச்சி பெறுவோம் -இந்த உறுதிமொழிக்கான திலகம் ஆகும். அவ்வளவு தைரியம் இருக்கிறதா? தேர்ச்சி பெறுவது மட்டும் இல்லை; ஆனால் கௌரவமாகத் தேர்ச்சி பெறுவது அதாவது மனதில் கூட எண்ணங்களினால் தண்டனை அடையாதது. தர்மராஜின் தண்டனைகளின் விஷயம் பின்னால் இருக்கிறது ஆனால் தன்னுடைய எண்ணங்களினால் குழப்பம் மற்றும் தண்டனைகளிலிருந்து விலகியிருக்க வேண்டும். இதைத் தான் கௌரவமாகத் தேர்ச்சி பெறுவது என்று கூறுவது, தன்னுடைய தவறினால் தனக்கே தண்டனை கொடுத்து குழப்பம் அடைகிறார்கள். கூக்குரல் கொடுக்கிறார்கள். வேதனை அடைகிறார்கள் இவற்றிலிருந்தும் விலகிய நிலை. இதைத் தான் கௌரவமாகத் தேர்ச்சி பெறுவது என்று கூறுவது. அந்த மாதிரி உறுதிமொழி எடுப்பதற்காகத் தயாராக இருங்கள், எண்ணங்களில் கூட வேதனை வேண்டாம். சொல் செயல், உறவு நெருக்கத்தின் விஷயத்தையோ விட்டு விடுங்கள். அவை பெரிய விஷயங்கள். அந்த மாதிரி உறுதி எடுக்கும் குரூப்பாக இருக்கிறீர்களா? தைரியம் உள்ளவர்கள் தான். தைரியம் நிலைத்திருக்கும் என்றால் அனைவருக்கும் உதவி செய்பவர்களாக இருப்பீர்கள். உதவியாளர்களாக ஆனீர்கள் என்றால் அன்பு கிடைத்துக் கொண்டே இருக்கும். எப்படி மரத்தில் மென்மையான சிறு சிறு இலைகள் வெளி வருகின்றன அவைகள் மிகவும் பிரியமானவைகளாக இருக்கும் ஆனால் குருவிகளும் மென்மையான இலைகளைத்தான் புசிக்கின்றன. புரிந்து கொள்கிறீர்களா? யாருடைய பிரியமானவர்களாக மட்டும் இருக்க வேண்டும்? பாப்தாதாவினுடைய பிரியமானவர்களாக அன்றி, மாயா ரூப குருவி களினுடையவர்களாக அல்ல. அப்படி இவர்களும் மென்மையான இலைகள். மென்மையான இலைகள் அதிசயம் செய்ய வேண்டும். என்ன அதிசயம் செய்ய வேண்டும். தன்னுடைய ஈஸ்வரிய சரித்திரத்தின் (நடைமுறை ஒழுக்கம் மேல் அனைவரையும் கவர வேண்டும். தன் மேல் இல்லாமல் நடைமுறை யின் வாயிலாக மேல் கவர வேண்டும், இந்த குரூப்பின் மேல் (பாபாவுக்கு முழு கவனம் இருக்கிறது. புரிந்ததா. எனவே இந்த குரூப் தன் மேல் கூட அவ்வளவு கவனம் வைக்க வேண்டும். நல்லது.

**வரதானம்: எண்ணம், சொல் மற்றும் செயலின் வீணானவைகளை சக்திசாலியானதாக மாற்றம் செய்யக்கூடிய புனித அன்னப்பறவை ஆகுக!**

புனித அன்னப்பறவை என்றால் எண்ணம், சொல் மற்றும் செயலின் வீணானவைகளை சக்தி சாலியானதாக மாற்றம் செய்பவர்கள். ஏனென்றால் வீணானது என்பது கல் போன்றது. கல்லிற்கு மதிப்பு கிடையாது, இரத்தினத்திற்கு மதிப்பு இருக்கிறது. புனித அன்னப்பறவையானது, இது உபயோகமானது, இது உபயோகமற்றது என்று உடனே பகுத்தறிந்து கொள்ளும். காரியம் செய்து கொண்டிருக்கும்பொழுது நாம் இராஜயோகி ஞானம் நிறைந்த ஆத்மாக்கள் ஆளுமை மற்றும் கட்டுப்படுத்தும் சக்தி உள்ளவர்கள் என்ற நினைவு வெளிப்படையாக இருக்கிறது என்றால் எதுவும் வீணானவைகளாக போய்விடாது. இந்த நினைவு புனித அன்னப்பறவையாக ஆக்கி விடுகிறது.

**சுலோகன்: யார் தன்னை இந்த உடல் என்ற வீட்டில் விருந்தினர் என்று புரிந்து கொள்கிறாரோ, அவர் தான் பற்றற்றவராய் (நிர்மோகி) இருக்க முடியும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 22.10.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# (full) முழுமையின் அடையாளம் (flawless) குறையில்லாத நிலை!

மாஸ்டர் அனைத்தையும் தெரிந்தவர் ஆக ஆகியிருக்கிறீர்களா? மாஸ்டர் ஞானம் நிறைந்தவராக ஆகியிருக்கிறீர்களா? மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் ஆனதினால் அனைத்து ஞானத்தையும் தெரிந்து கொண்டு விட்டீர்களா? மாஸ்டர் ஞானம் நிறைந்தவராக, மாஸ்டர் அனைத்தையும் தெரிந்தவராக ஆகி விட்டீர்களா? அல்லது ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? இன்னும் ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? ஞானம் நிறைந்தவராக ஆகி விட்டீர்களா? அல்லது ஞானம் நிறைந்தவராக ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? ஞானம் நிறைந்தவராக ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? அல்லது ஆனந்தம் நிறைந்தவராக ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? அல்லது ஆகி விட்டீர்களா? (ஆகிக் கொண்டிருக்கிறோம்). எதுவரை சாகார ரூபத்தில் கடைசி நிலையைப் பார்த்தீர்களோ அதுவரை ஞானம் நிறைந்தவராக, அனைத்தையும் தெரிந்தவராக ஆகி விட்டீர்களா? சாகார தந்தைக்கு சமமாக ஆவதில் வித்தியாசம் இருக்கிறது, எனவே முழுமை என்று நீங்கள் கூறுவதில்லை. எவ்வளவு முழுமையாக வேண்டும் என்பதின் உதாரணம் தெளிவாக இருக்கிறது தான் இல்லையா? அதிகமாக மாஸ்டர் படைப்பவரின் போதையில் இருக்கிறீர்களா? அல்லது படைப்பின் போதையிலா? எந்த போதையில் அதிக நேரம் இருக்கிறீர்கள். இன்று இந்தக் கேள்வியை ஏன் கேட்டோம்? இன்று அனைத்து இரத்தினங்களையும் பார்த்து இவர்கள் எவ்வளவு குறையில்லாதவர்களாக அதாவது முழுமையானவர்களாக ஆகியிருக்கிறார்கள் என்பதைப் பகுத்தறிந்து கொண்டிருந்தோம். ஒருவேளை முழுமையில்லை என்றால் தோல்வி என்பதாகும். அப்படி இன்று முழுமை மற்றும் தோல்வியின் அளவுகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம். எனவே தான் முழுமையாக ஆகியிருக்கிறீர்களா என்ற கேள்வியைக் கேட்டோம். எப்படி தந்தையின் மகிமையாக அனைத்து

விஷயங்களிலும் முழுமையாக இருக்கிறார் என்று இருக்கிறது இல்லையா? எனவே குழந்தைகளுக்கும் மாஸ்டர் ஞானம் நிறைந்தவராக ஆகவே தான் வேண்டும். ஞானத்தில் மட்டுமின்றி மாஸ்டர் ஞானம் நிறைந்தவராக ஆக வேண்டும். எனவே தான் மாஸ்டர் ஞானம் நிறைந்தவராக ஆகியிருக்கிறீர்களா என்ற கேள்வியைக் கேட்டோம், மாஸ்டராக இருக்கிறீர்கள் தான் இல்லையா? மாஸ்டர் ஞானம் நிறைந்ததிலும் இல்லாமல் இருக்க முடியுமா என்ன? ஒருவேளை உங்களுடைய இரண்டு கணக்கு இருக்கிறது என்றால் பாப்தாதாவிற்கும் இரண்டு இரகசியம் இருக்கிறது. இன்று ஒவ்வொருவரிலும் மூன்று விஷயங்களை முக்கியமான ரூபத்தில் பார்த்துக் கொண்டிருந்தோம் இன்று என்ன பார்த்தோம் என்று அமிர்தவேளையின் நடவடிக்கைகளைக் கூறிக் கொண்டிருக்கிறோம். இன்று பாப்தாதா ஒவ்வொரு இரத்தினத்திலும் மூன்று விஷயங்களைப் பார்த்தார். அவை யாவை? இதைக் கேட்பதினாலும் ஒரு டிரில் (பயிற்சி) செய்விக்கிறார். இன்று மூன்று விஷயங்களைப் பார்த்துக் கொண்டிருந்தோம் ஒன்றோ ஒவ்வொருவரின் லைட் (ஒளி) லேசான நிலை). இரண்டாவது மைட் (சக்தி) மற்றும் மூன்றாவது ரைட் ரைட் என்ற வார்த்தைக்கு இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. ஒன்று சரியானதைக் கூறுவது இரண்டாவது அதிகாரத்தைக் கூறுவது. அதிகாரியாகவும் எவ்வளவு பேர் ஆகியிருக்கிறார்கள் மற்றும் கூடவே சரியான ரூபத்தில் எவ்வளவு ஆகியிருக்கிறார்கள்? அப்படி லைட் மைட் மற்றும் ரைட் இந்த மூன்று விஷயங்களையும் பார்த்துக் கொண்டிருந்தோம். ரிசல்ட்டாக (முடிவாக) என்ன கிடைத்தது என்பதையும் கூறுகிறோம். இப்பொழுது சேவை அதிகமாகச் செய்தீர்கள் தான் இல்லையா? எனவே அந்த ரிசல்ட்டையும் பார்த்துக் கொண்டிருந்தோம். இதுவரை செய்தியைப் பரப்புவதற்கான ரிசல்ட்டாகத் தான் இருக்கிறது. செய்தியைப் பரப்புவதில் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள் ஆனால் ஆத்மாக்களை தந்தையின் அருகில் கொண்டு வரும் ஆவாஹனம் வரவேற்பது) இன்னும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. செய்தியைப் பரப்பியிருக்கிறீர்கள் ஆனால் ஆத்மாக்களை ஆவாஹனம் செய்ய வேண்டும். ஆவாஹனம் செய்வது மற்றும் தந்தையின் அருகில் கொண்டு வருவது என்ற இந்த முயற்சி இன்னும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால் சுயம் நீங்களே சப்தத்திலிருந்து விலகியிருப்பதில் விருப்பமுள்ளவர்களாக இருக்கிறீர்கள். பயிற்சி உள்ளவர்களாக இல்லை. எனவே சப்தத்தோடு

சப்தம் பரவிக் கொண்டிருக்கிறது ஆனால் எவ்வளவு சுயம் தானே சப்தத்திலிருந்து விலகியிருந்து சம்பூர்ண நிலையின் ஆவாஹனத்தை தன்னுள் செய்வீர்களோ அவ்வளவு ஆத்மாக்களை ஆவாஹனம் செய்ய முடியும். இப்பொழுது ஆவாஹனம் செய்யத் தான் செய்கிறீர்கள் ஆனால் ரிசல்ட்டில் வருவதும் போவதுமாக இருக்கிறது. வரவும் செய்கிறார்கள். போகவும் செய்கிறார்கள் ஆனால் ஆவாஹனத்திற்குப் பிறகு அவர்கள் ஆகுதியாகி விட வேண்டும் பலியாகி விட வேண்டும்), என்ற இந்த வேலை இன்னும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஞானத்தின் பக்கம் கவரப்படுகிறார்கள் ஆனால் ஞானம் நிறைந்தவரின் மேல் (பாபா) கவரப்பட்டவராக ஆக்க வேண்டும். இதுவரை மாஸ்டர் படைப்பவர் அங்கங்கே படைப்பின் கவர்ச்சியில் கவரப்பட்டு விடுகிறார்கள். எனவே யார் எவ்வளவு மற்றும் எப்படி சுயம் அவர் இருக்கிறாரோ அவ்வளவே மற்றும் அப்படியே நிரூபணமாக ரிசல்ட்டும் கொடுக்கிறார்கள். இதுவரை சக்தி ரூபம் மற்றும் மாவீரத்தன்மையின் சொரூபம் கண்களில் மற்றும் நடத்தையில் இல்லை. சக்தி மற்றும் மாவீரத்தன்மை உள்ளவரின் முகம், அசுர இலட்சணம் உடையவர்கள் தைரியம் வைக்க முடியாத அளவிற்கு தென்பட வேண்டும் ஆனால் இதுவரை அசுரலட்சணத்தின் கூடவே அசுர லட்சணம் உடையவர்கள் அங்கங்கே கவர்ந்து விடவும் செய்கிறார்கள். இதைத் தான் சூழ்நிலையே அப்படி இருந்தது என்று ராயல் மாயாவின் ரூபத்தில் நீங்கள் கூறுகிறீர்கள். வைப்ரேஷன் (எண்ண அதிர்வலைகள்), அப்படி இருந்தது மற்றும் பிரச்சனையும் அப்படி இருந்தது. எனவே தோல்வி ஏற்பட்டு விட்டது என்று கூறுகிறீர்கள், காரணம் சொல்வது என்றால் தன்னை சிறைக்குள் அடைத்துக் கொள்வது என்பதாகும். இப்பொழுது நேரம் கடந்து விட்டது. காரணத்தைக் கேட்க மாட்டோம். அதிக காலமாகக் காரணத்தை கேட்டுக் கொண்டே வந்திருக்கிறோம் ஆனால் பிரத்யக்ஷமாக இப்பொழுது காரியத்தைப் பார்க்க வேண்டுமா அல்லது காரணத்தையா? இப்பொழுது கொஞ்ச காலத்திற்குள் தர்மராஜின் ரூபத்தை பிரத்யக்ஷமாக அனுபவம் செய்வீர்கள், ஏனென்றால் இப்பொழுது கடைசி நேரம் ஆகும். இவ்வளவு காலம் தந்தையின் ரூபத்தில் காரணமும் கேட்டார், அன்பும் கொடுத்தார், இரக்கமும் காட்டினார், சலுகைகளும் அதிகமாகக் கொடுத்தார் ஆனால் இப்பொழுது அந்த நாட்கள் மிகக் குறைவாகத் தான் இருக்கிறது என்ற அனுபவம் செய்வீர்கள். பிறகு ஒரு எண்ணத்தின் தவறுக்காக ஒன்றின் நூறு மடங்கு தண்டனை எப்படி கிடைக்கிறது என்பதை அனுபவம் செய்வீர்கள்.

இப்பொழுது செய்தீர்கள் மற்றும் உடனே அதன் பலன் அல்லது தண்டனையை பிரத்யக்ஷ ரூபத்தில் அனுபவம் செய்வீர்கள். அந்த நேரம் வெகுவிரைவில் வரப்போகிறது. எனவே பாப்தாதா தகவல் தருகிறார். ஏனென்றால் பாப்தாதா குழந்தைகளின் அன்பிற்குரியவர் இல்லையா! இப்பொழுது மாஸ்டர் படைப்பவரின் போதையை தாரணை செய்து படைப்பின் அனைத்து கவர்ச்சியிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டே செல்லுங்கள். தந்தையின் எதிரில் நீங்கள் படைப்பு ஆனால் யார் மாஸ்டர் படைப்பவர், மாஸ்டர் ஞானம் நிறைந்தவராகி அந்த கவர்ச்சிகரமான சக்தி நிறைந்த நிலையில் நிலைத்திருக்கவில்லை என்றால் படைப்பு இன்னும் விதவிதமான வண்ணம் மற்றும் ரூபத்தைப் படைக்கும் என்ற அந்த நேரமும் இப்பொழுது வரப்போகிறது. எனவே ஃபுல் (முழுமை) ஆவதற்காக நிலையில் முழுமையாக நிலைத்து விட்டீர்கள் என்றால் பிறகு எங்கும் ஃபெயில் (தோல்வி) ஆக மாட்டீர்கள். இப்பொழுது குழந்தைப் பருவத்தின் தவறுகள், கவனக்குறைவின் தவறுகள், சோம்பேறித்தனத்தின் தவறுகள். பொறுப்பற்ற நிலையின் தவறுகள் ஆகியவை இன்னும் மாற்றட்டாமல் இருக்கின்றன. இந்த நான்கு விதமான தவறுகளையும் எப்படி சத்யுக உலகத்தில் முற்றிலும் மறந்து விடுவீர்களோ அந்த மாதிரி மறந்து விடுங்கள். அப்படி சக்திசாலியான சக்தி சொரூபம், ஆயுதங்கள் ஏந்திய சொரூபம், எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் ஜோதி சொரூபம் ஆகிய தன்னுடைய சொரூபத்தை பிரத்யக்ஷ ரூபத்தில் காண்பியுங்கள். இப்பொழுது உங்களுடைய அவரவர்களின் பக்தர்கள் குப்தமாக வேஷம் அணிந்து இருக்கும் தேவதைகள் உங்களை மீண்டும் அடைவதற்காக துடித்துக் கொண்டிருக்கிறார்கள். எப்பொழுது உங்களுடைய சம்பூர்ண மூர்த்தி பிரத்யக்ஷமாகுமோ அப்பொழுது தான் உங்களுடைய பக்தர்கள் பிரத்யக்ஷ ரூபத்தில் தன்னுடைய இஷ்ட தேவதையை அடைய முடியும். இப்பொழுதோ அனேக விதமானவர்களாக இருக்கிறார்கள். சப்தத்தைக் கேட்பார்கள் ஆனால் ஒரு பக்கம் அசுர ஆத்மாக்களின் சப்தம் இன்னும் கவர்ச்சி நிறைந்ததாக மற்றும் முழுமையான சக்தியுடன் இருக்கும் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது பிரத்யக்ஷ ரூபத்தில் என்ன கொண்டு வர வேண்டும் மற்றும் எதைக் கொண்டு வரக் கூடாது என்பதை பகுத்தறிவது கூட புத்தியின் வேலை ஆகும். எனவே இப்பொழுது சலுகைகளின் நேரம் சென்று விட்டது, இப்பொழுது ஆன்மீகமாக இருக்கும் நேரம் ஆகும். ஒருவேளை ஆன்மீகம் இல்லை என்றால் பலவிதமான மாயாவின் வர்ண ருடங்கள் வந்து விடும்.

எனவே இன்று பாப்தாதா மீண்டும் அறிவிப்புக் கொடுக்கிறார். எப்படி ராணுவத்தில் மார்ஷல் முதலில் ஒரு விசில் கொடுப்பார். பிறகு முடிவாக கடைசி விசில் இருக்கும். அப்படி இன்று மென்மையான நேரத்தின் அறிவிப்பு என்ற முதல் விசில் கொடுக்கிறோம். தயாராகி விடட்டுமே என்பதற்காக விசில் கொடுக்கப்படுகிறது. எனவே இப்பொழுது சோதனைகளின் கேள்வித்தாள் எழுதுவதற்காக தயாராகி விடுங்கள். பாப்தாதாவோ அவ்யக்தமாக இருக்கிறார், வியக்தத்தில் நாம் என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம் என்று அப்படி நினைக்காதீர்கள். ஒவ்வொருவரின் ஒவ்வொரு விநாடியின் எண்ணத்தின் படம் அவ்யக்த வதனத்தில் தெளிவாகிக் கொண்டே இருக்கிறது. எனவே முக்கியத்துவம் தராது இருந்து விடாதீர்கள், ஈஸ்வரிய மரியாதைகளில் அலட்சியமாய் இருந்து விட வேண்டாம். அசுர மரியாதைகளையும், மாயாவையும் அலட்சியப்படுத்துங்கள். ஈஸ்வரிய மரியாதைகளை அல்ல? இந்த சிற்சில அலட்சியப் போக்கின் பிரபாவம் வதனம் வரை வந்து சேர்கிறது. எனவே இன்று பாப்தாதா மீண்டும் நினைவு கூறுகிறார். முழுமை நிலையை அருகில் கொண்டு வர வேண்டும். பிரச்சனைகளைத் தூரமாக விரட்ட வேண்டும் மற்றும் முழுமை நிலையை அருகில் கொண்டு வர வேண்டும். சில இடங்களில் முழுமை நிலைக்குப் பதிலாக பிரச்சனைகளை அதிகமாக முன்னுக்கு வைக்கிறார்கள். பிரச்சனைகளை எதிர்நோக்கினீர்கள் என்றால் பிரச்சனைகள் முடிவடைந்து விடும். எதிர்நோக்கத் தெரியவில்லை என்றால் ஒரு பிரச்சனையிலிருந்து அனேக பிரச்சனைகள் வந்து விடுகின்றன. உருவானது மற்றும் அங்கேயே அழித்து விட்டீர்கள் என்றால் வளராது. பிரச்சனைகளை உடனே அழித்து விட்டீர்கள் என்றால் அதன் வம்சம் உருவாகவே ஆகாது. அம்சம் இருக்கிறது என்றால் வம்சமும் உருவாகும். அம்சத்தையே அழித்து விட்டீர்கள் என்றால் வம்சம் எங்கிருந்து வரும்? அப்படி பிரச்சனைகளின் குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? இப்பொழுது சைகை (இஷாரா) மூலமாகக் கூறிக் கொண்டிருக்கிறோம் பிறகு அனைத்தையும் பிரத்யக்ஷ ரூபத்தில் உங்களுடைய நிலை கூறும். மறைத்து வைக்க முடியாது. எப்படி நாரதரின் முகம் சபையின் நடுவில் மறைத்து வைக்க முடிந்ததா? இப்பொழுதோ தந்தை ரகசியமாக வைக்கிறார் ஆனால் கொஞ்ச காலத்திற்கு பிறகு ரகசியமாக இருக்க முடியாது அவருடைய முகம், நடத்தையை பிரத்யக்ஷம் செய்யும். எப்படி அறிவியலில் தற்சமயம் எந்தவொரு ரசியமான பொருளும் தானாக

பிரத்யக்ஷம் ஆகி விடும் அளவிற்கு கண்டுபிடிப்புகளை செய்து கொண்டிருக்கிறார்கள். அதே போல் அமைதி சக்திக்கும் கூட தானாகவே பிரத்யக்ஷ ரூபம் ஆகி விடும். சொல்வதினால், செய்வதினால் ஏற்படாது. புரிந்ததா?

ஆக வரும் காலத்தின் அறிவிப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே இப்பொழுது மென்மையான நேரத்தை எதிர்கொள்வதற்காக மென்மைத் தன்மையை (உஷார் இல்லாத அப்பாவி விட வேண்டும். அப்பொழுது தான் மென்மையான நேரத்தை (விநாசகாலம்) எதிர்கொள்ள முடியும். நல்லது. புன்முறுவலுற்ற முகமாக இருக்கும் குணம் முயற்சி செய்வதில் மிகுந்த உதவி செய்ய முடியும். எப்படி முகம் புன்முறுவலுற்று இருக்கிறதோ அதே போல் ஆத்மாவும் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்து புன்முறுவலோடு இருக்கட்டும். இந்த இயற்கையான குணத்தை ஆத்மாவில் கொண்டு வர வேண்டும். எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருந்தீர்கள் என்றால் மாயாவின் எந்த கவர்ச்சியும் இருக்காது. இது தந்தையின் உத்திரவாதம் ஆகும் ஆனால் அது எப்பொழுது ஆத்மா மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கிறதோ அப்பொழுது தான் இருக்கும். பிறகு மாயாவின் கவர்ச்சியிலிருந்து தூரத்தில் விலக்கி வைப்பது தந்தையின் வேலை ஆகும். இந்த உத்திரவாதத்தை தந்தை உங்களிடம் விசேஷமாகக் கொடுக்கிறார். அனைவருக்கும் கொடுப்பதில்லை ஏனென்றால் ஆதிரத்தினமாக இருப்பவர்கள் மேல் ஆதிதேவின் விசேஷ அன்பு இருக்கிறது. எனவே ஆதியை அனாதியாக ஆக்குங்கள். எப்பொழுது அனாதி ஆகி விடுமோ பிறகு மாயாவின் கவர்ச்சி இருக்காது. பிரச்சனைகள் எதிரில் வராது ப்பொழுது தந்தையின் அன்பு நினைவில் இருக்கிறது என்றால் சர்வ சக்திவானின் அன்பின் எதிரில் பிரச்சனை என்ன பெரிய விஷயமா? எங்கே அந்த அன்பு மேலும் எங்கே பிரச்சனை? அது மலை இது கடுகு அவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. அப்படி அனாதி இரத்தினமாக ஆவதற்காக சர்வ சக்திவானின் சக்தி மற்றும் அன்பை எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்ள வேண்டும். தன்னை தனியாக இருப்பவராக ஒருபொழுதும் நினைக்காதீர்கள். துணைவன் இல்லாமல் வாழ்க்கையின் ஒரு விநாடி கூட இருக்க வேண்டாம். யார் அன்பிற்குரிய துணைவனாக இருப்பாரோ அவர் தனியாக இருக்க முடியாது. துணைவனை துணையாக வைக்காததினால், தனியாக இருப்பதினால் மாயா வெற்றி அடைந்து விடுகிறது. நல்லது.

**வரதானம்: அன்பின் விமானம் மூலமாக எப்பொழுதும் நெருக்கத்தை அனுபவம் செய்யக்கூடிய அன்பான மூர்த்தி ஆகுக!**

அனைத்து குழந்தைகளில் பாப்தாதாவின் அன்பு நிரம்பி இருக்கிறது. அன்பின் சக்தியினால் அனைவரும் முன்னேறி பறந்து சென்று கொண்டிருக்கிறீர்கள். அன்பின் விமானம் உடல், மனம், உள்ளத்தினால் தந்தையின் அருகில் கொண்டு வருகிறது. ஞானம், யோகத்தின் தாரணையில் அனைவரும் சக்திக்கேற்றபடி வரிசைக் கிரமமாக இருக்கத்தான் செய்கிறார்கள் ஆனால் அன்பில் ஒவ்வொருவரும் நம்பர்ஒன் ஆக இருக்கிறார்கள். இந்த அன்பு தான் பிராமண வாழ்க்கையை அடைவதற்கான மூல ஆதாரமாகும். அன்பின் அர்த்தமே அருகில் இருப்பது, தேர்ச்சி பெறுவது மற்றும் ஒவ்வொரு சூழ்நிலையையும் மிகவும் சுலபமாக கடந்து செல்வது.

**சுலோகன்: தன்னுடைய பார்வையில் தந்தையை நிரப்பி விட்டீர்கள் என்றால் மாயாவின் பார்வையிலிருந்து பாதுகாக்கப்பட்டு விடுவீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 23.10.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மஹாரதி ஆவதற்கான புருஷார்த்தம்!

ஆன்மீக டிரில் (பயிற்சி) தெரியுமா? டிரில்லில் என்ன செய்ய வேண்டி உள்ளது? டிரில் அதாவது பயிற்சி என்றால் உடலை எங்கு விரும்புகிறீர்களோ அங்கு வளைக்க முடிவது மற்றும் ஆன்மீக டிரில் என்றால் ஆத்மாவை எங்கு, எப்படி மற்றும் எப்பொழுது விரும்பினாலும் அங்கு நிலைத்திருக்கச் செய்வது அதாவது, தன்னுடைய மனநிலையை எப்படி விரும்புகிறீர்களோ அப்படி உருவாக்குவது இதைத் தான் ஆன்மீக டிரில் என்று கூறுகிறோம். படையின் தளபதி மற்றும் டிரில் மாஸ்டர் எப்படி சைகை காண்பிக்கிறார்களோ அப்படியே செய்கிறார்கள். அதே போல் சுயம் தானே மாஸ்டர் மற்றும் தளபதியாகி எங்கு தன்னை நிலைத்திருக்கச் செய்ய விரும்புகிறீர்களோ அங்கு நிலைக்க முடிய வேண்டும். அந்த மாதிரி தனக்குத் தானே டிரில் மாஸ்டராக ஆகியிருக்கிறீர்களா? மாஸ்டர் கையை கீழே போடுங்கள் என்று கூறுகிறார் மற்றும் மாணவர்கள் கையை மேலே தூக்குகிறார்கள் என்று அப்படி இல்லையே? தளபதி கூறுகிறார் ரைட் (வலது) மற்றும் சேனைகள் லெப்ட் (இடது) என்று செய்யவில்லையே. அப்படிப் பட்ட மாணவர்களையும் சேனையிலிருப்பவர்களையும் என்ன என்று கூறுவது? டிஸ்மிஸ் (வெளியேற்றப் படுவார்கள்). அதே போல் இங்கேயும் அவர்களாகவே தன்னுடைய அதிகாரத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களாக ஆகி விடுகிறார்கள். ஒரு நொடியில் தன்னுடைய நிலையை எங்கு விரும்புகிறீர்களோ அங்கு நிலைத்திருக்கச் செய்ய முடிய வேண்டும். அந்த மாதிரி பயிற்சி இருக்க வேண்டும். ஏனென்றால் இப்பொழுது யுத்த மைதானத்தில் இருக்கிறீர்கள். யுத்த மைதானத்தில் சேனை ஒருவேளை ஒருநொடியில் கட்டளையை அமல்படுத்தவில்லை என்றால் அவரை என்னவென்று கூறுவது? இந்த ஆன்மீக யுத்தத்தில் கூட தன்னுடைய நிலையை நிலைத்திருக்கச் செய்வதில் நேரம் எடுத்துக் கொள்வார்கள் என்றால் அந்த சேனைகளை என்னவென்று கூறுவது? இன்று பாப்தாதா புருஷார்த்தி (முயற்சி செய்யும்), மஹாரதி குழந்தைகளைப் பார்த்துக்

கொண்டிருக்கிறார். தன்னை யார் மஹாரதி என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள் (வெகு சிலர் கையை உயர்த்தினார்கள்). யார் மஹாரதியாக இல்லையோ அவர்கள் தன்னை என்னவென்று நினைக்கிறார்கள்? தன்னை குதிரைப் படையைச் சேர்ந்தவர்கள் என்று நினைப்பவர்கள் கையை உயர்த்துங்கள். யார் மஹாரதி என்பதில் கையை உயர்த்தவில்லையோ அவர்களிடம் பாப்தாதா ஒரு கேள்வி கேட்கிறார். தன்னை பாப்தாதாவின் வாரிசு என்று நினைக்கிறீர்களா? யார் தன்னை குதிரைப்படையைச் சேர்ந்தவர்கள் என்று நினைக்கிறார்களோ அவர்கள் தன்னை வாரிசு என்று நினைக்கிறார்களா? வாரிசுக்கு முழுமையான அதிகாரத்தை எடுக்க வேண்டுமா? அல்லது இல்லையா? லட்சியமே முழுமையான ஆஸ்தி அடைவதற்காக இருக்கும்போது, பிறகு குதிரைப்படையைச் சேர்ந்தவர்கள் என்று ஏன்? ஒருவேளை குதிரைப்படையைச் சேர்ந்தவர்கள் என்றால் உங்களுடைய வரிசை எண் எங்கு செல்லும் என்று தெரியுமா? இரண்டாம் நிலையில் உள்ளவர்கள் எங்கு வருவார்கள். இவ்வளவு வளர்ப்பைப் பெற்றதற்குப் பிறகும் கூட இரண்டாவது நிலை. ஒருவேளை வெகுகாலமாக இரண்டாம் நிலை முயற்சியே இருக்கிறது என்றால் ஆஸ்தியும் வெகுகாலத்திற்கு இரண்டாம் நிலையானது கிடைக்கும். மற்றபடி கொஞ்ச காலம் மட்டும் முதல் நிலையில் அனுபவம் செய்வார்கள். சர்வ சக்திவான் தந்தையின் குழந்தைகள் என்று கூறிக்கொள்பவர்கள், மேலும் சாகார மற்றும் அவ்யக்த தந்தையின் பாலனையை எடுத்தவர்கள் கூட இரண்டாம் நிலையா? இந்த மாதிரி வாயால் சொல்வது கூட அழகே இல்லை. இல்லையென்றால் இன்றிலிருந்து சர்வ சக்திவானின் குழந்தை என்று தன்னைக் கூறிக்கொள்ளாதீர்கள். பாப்தாதா அந்த மாதிரி முயற்சி செய்வர்களைக் குழந்தை என்று கூறாமல் என்னவென்று கூறுகிறார்? தெரியுமா? பச்சே (குழந்தைகள்) இல்லை கச்சே (முதிர்ச்சியடையாதோர்) இதுவரை கூட அந்த மாதிரி முயற்சி செய்யும் குழந்தைகளின் சுவமானத் தகுதி கூட தென்படுவதில்லை. இருந்தபோதிலும் நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும். அதை முற்றுப்புள்ளி வையுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். இப்பொழுதிலிருந்து தன்னை மாற்றிக் கொள்ளுங்கள். மஹாரதியாக ஆவதற்காக இரண்டு விஷயங்களை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அது என்ன? ஒன்று. தன்னை எப்பொழுதும் (சாத்தியின்) துணைவனின் (சாத்) கூடவே வைத்துக் கொள்ளுங்கள். சாத்தி (துணைவன்) மற்றும் சாரதி (ஓட்டுநர்-ஆத்மா), அவர் தான்

மஹாரதி. முயற்சி செய்யும்போது பலஹீனமாவதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. தந்தையின் அன்பிற்குரியவராக ஆகியிருக்கிறீர்கள் ஆனால் தந்தையை துணைவனாக ஆக்கிக் கொள்ளவில்லை, ஒருவேளை பாப்தாதாவை எப்பொழுதும் உங்களுடைய துணைவனாக ஆக்கிக் கொண்டீர்கள் என்றால் எங்கு பாப்தாதாவின் துணை இருக்கிறதோ அங்கு மாயா தூரத்திலிருந்தே மயக்கம் அடைந்து விடுகிறது. பாப்தாதாவை கொஞ்ச நேரத்திற்காக துணைவனாக ஆக்குகிறார்கள். எனவே சக்தியின் பிராப்தி அவ்வளவு ஏற்படுவதில்லை. எப்பொழுதும் பாப்தாதா உடன் இருக்கிறார் என்றால் எப்பொழுதும் பாப்தாதாவின் சந்திப்பிலேயே மூழ்கியிருக்கட்டும். மேலும் யார் மூழ்கியிருக்கிறாரோ அவருடைய ஈடுபாடு வேறு எந்த பக்கமும் செல்ல முடியாது. ஆரம்ப காலத்தில் தந்தையிடம் குழந்தைகள் என்ன உறுதிமொழி கொடுத்திருந்தார்கள். உங்களுடனேயே சாப்பிடுவேன், உங்களுடனேயே அமர்ந்திருப்பேன், உங்களுடனேயே ஆத்மாவை மகிழ்ச்சியடையச் செய்வேன். இந்த உங்களுடைய உறுதிமொழியை மறந்து விடுகிறீர்கள். ஒருவேளை முழு நாளும் ஒவ்வொரு காரியத்தையும் தந்தையுடன் செய்வீர்கள் என்றால் மாயாவால் இடையூறு செய்ய முடியுமா என்ன? தந்தையுடன் இருந்தீர்கள் என்றால் மாயா இடையூறு செய்யாது. மாயா அழிந்து போய் விடும். அப்படி தந்தையின் அன்பிற்குரியவர்களாக என்னவோ ஆகியிருக்கிறீர்கள் ஆனால் தந்தையை துணைவனாக ஆக்கவில்லை. கையைப் பிடித்திருக்கிறீர்கள், துணையை எடுத்துக் கொள்ளவில்லை. எனவே மாயா மூலமாக வதை செய்யப்பட்டு விடுகிறீர்கள். தவறுகளின் காரணம் கவனக்குறைவு. கவனக்குறைவு தவறுகளை செய்விக்கிறது. ஒருவேளை ஆத்மாவைப் பார்க்காமல் உருவத்தின் பக்கம் கவர்ச்சிக்கப்படுகிறார்கள் என்றால் பிணத்தின் மேல் அன்பு செய்கிறார்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். பிணத்தின் மேல் அன்பு வைப்பவர்கள் நம்முடைய எதிர்காலம் சுடுகாட்டில் வேலை செய்வதற்கானது என்று புரிந்து கொள்ள வேண்டும். எந்த நேரம் அந்த எண்ணம் கூட வருகிறது என்றால் சுடுகாட்டின் பாடத்தைப் புரிந்து கொள்ளுங்கள். லட்சியம் மற்றும் நோக்கத்தை எதிரில் வைத்துக் கொள்ளுங்கள் என்று அனைவருக்கும் கூறுகிறீர்கள் இல்லையா? எனவே என்ன காரியம் செய்தாலும், என்ன எண்ணத்தை உருவாக்கினாலும் அதற்காகக் கூட லட்சியம் மற்றும் பிராப்தி அதாவது அடையப் போவதை எதிரில் வையுங்கள். சர்வ சக்திவான் தந்தை வரம் அளிப்பவரிடமிருந்து

தன்னுடைய ஒவ்வொரு கல்பத்திற்கும் இந்த பாகத்தை ஏற்று நடிப்பதற்கான ஆஸ்தியை அடைவதற்காகவா வந்திருக்கிறீர்கள்? பிணத்தை உயிர் பெறச் செய்பவர்கள் சுடுகாட்டில் தன்னுடைய பாகத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காகவா வந்திருக்கிறார்கள்? உங்களையே கேளுங்கள். எந்தக் குழந்தையும் தன்னுடைய தவறுகளை ஒரு தடவை தந்தை எதிரில் வைக்கிறார். தந்தை எதிரில் தன்னுடைய குறைகளை வைத்ததற்கு பிறகு ஒருவேளை இரண்டாம் முறை செய்து விட்டார் என்றால் மன்னிக்கும் கடலின் கூடவே நூறு மடங்கு தண்டனையும் நாடகப்படி தானாக கிடைத்து விடுகிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். தன்னை நூறு மடங்கு தண்டனையிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக எப்பொழுதும் பாப்தாதாவை தன்னுடைய எதிரில் வையுங்கள். ஒவ்வொரு அடியிலும் பாப்தாதாவைப் பின்பற்றி நடந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு எண்ணத்தையும், ஒவ்வொரு காரியத்தையும் அவ்யக்த பலம் மூலமாக அவ்யக்த ரூபம் மூலமாக சரிபார்த்துக் கொள்ளுங்கள். எப்படி சாகார பாபா உடன் இருக்கிறார் என்றால் அவரிடம் சரிபார்த்தப் பிறகு நடைமுறையில் வருகிறார்கள். அதேபோல் பாப்தாதாவை அவ்யக்த ரூபத்தில் எப்பொழுதும் எதிரில் மற்றும் உடன் வைப்பதோடு ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு காரியத்தையும் சரிபார்த்த பிறகு செய்யும்போது எந்தவொரு வீணான பாவமும் நிகழாது. யார் மூலமாவது ஏதாவது விஷயத்தை கேட்கிறீர்கள் என்றால் விஷயத்தின் சுதியில் செல்லாமல் ரகசியத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். இரகசியத்தை விட்டு விட்டு சுதியைக் கேட்பதினால் மென்மைத்தன்மை வந்து விடுகிறது. இன்னார் இப்படி கூறுகிறார், அதனால் இப்படி ஆகிறது என்று ஒருபொழுதும் நினைக்காதீர்கள் ஆனால் யார் செய்கிறார்களோ அதன் பலனை அவசியம் அடைவார். இந்த விஷயத்தை எதிரில் வையுங்கள். மற்றவர்களின் வருமானத்தை தன்னுடைய ஆதாரமாக எடுத்துக் கொள்ளாதீர்கள். மற்றவர்களின் வருமானத்தில் பார்வையும் செல்லக் கூடாது, இந்த காரணத்தினால் தான் பொறாமையும் ஏற்படுகிறது. இதற்காக தந்தையின் இந்த சுலோகன் 'தான் அசை போட்டால் தான் போதை ஏற்படும்' என்பதை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். மற்றவரின் போதையை தன்னுடைய குறிக்கோளாக ஆக்காதீர்கள் ஆனால் பாப்தாதாவின் குணம் மற்றும் காரியங்களைத் தன்னுடைய குறிக்கோளாக ஆக்கிக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பாப்தாதாவின் காரியத்தில் பாப்தாதாவுடன் நானும்

## 1970 அவ்யக்த முரளி

அதர்மத்தின் விநாசத்திற்கு மற்றும் சத்திய தர்மத்தின் ஸ்தாபனை காரியத்திற்கு பொறுப்பாளராக ஆகியிருக்கிறேன் என்ற நினைவு வைத்துக் கொள்ளுங்கள். யார் அதர்மத்தின் விநாஷத்திற்காக பொறுப்பாளராக இருக்கிறாரோ அவர் சுயம் அதர்மத்தின் காரியம் மற்றும் தெய்வீக மரியாதைகளை உடைக்கும் காரியத்தை எப்படி செய்ய முடியும்? நான் மாஸ்டர் மரியாதா புருஷோத்தமன் ஆவேன். அப்படி மரியாதைகளை உடைக்க முடியாது. அந்த மாதிரி நினைவு வைப்பதினால் சமமான மற்றும் சம்பூர்ண நிலை ஏற்பட்டு விடும். புரிந்ததா? குறைவாக யோசியுங்கள், காரியம் அதிகம் செய்ய வேண்டும். யோசிப்பதின் அர்த்தம் நேரத்தை இழக்கக் கூடாது. படைப்பின் முடிவிற்கு முன்பு பலஹீனங்கள் மற்றும் குறைகளின் முடிவை ஏற்படுத்துங்கள்.

பட்டியில் இருப்பவர்கள் பட்டியில் தன்னுடைய உருவம், வர்ணம் மற்றும் நடத்தைகளை மாற்றியிருக்கிறார்களா? அனேக உருவம் மாற்றுவதை நீக்கி விட்டீர்களா? நிரந்தரமாக ஆன்மீக ரூபம் தென்பட வேண்டும் அந்த மாதிரி தன்னை மாற்றியாகி விட்டதா? குழப்பத்தின் பெயர், அடையாளமே இருக்க வேண்டாம். அந்த மாதிரி தன்னை மாற்றியாகி விட்டதா? அற்பகாலத்திற்காக உறுதிமொழி எடுத்து இருக்கிறீர்களா? அல்லது கடைசி காலம் வரைக்கான உறுதிமொழி எடுத்திருக்கிறீர்களா? தன்னுடைய பழைய விஷயங்களை, பழைய சம்ஸ்காரங்களை அந்த மாதிரி மாற்றத்தில் கொண்டு வர வேண்டும். எப்படி ஜென்மம் மாறிய பிறகு பழைய ஜென்மத்தின் விஷயங்கள் மறந்து விடுகிறதோ, அந்த மாதிரி பழைய சம்ஸ்காரங்களை பஸ்மம் (எரித்து) ஆக்கி விட்டீர்களா? அல்லது அஸ்திகளை (சாம்பல்) வைத்திருக்கிறீர்களா? அஸ்திகளில் மீண்டும் பூதம் பிரவேசம் ஆகி விடும். எனவே அஸ்திகளை சம்பூர்ண நிலை என்ற கடலில் கரைத்து விட்டுச் செல்ல வேண்டும். எங்கும் மறைத்து எடுத்து செல்ல வேண்டாம். இல்லையென்றால் அஸ்தி தன்னுடைய நிலையை தொந்தரவு செய்து கொண்டே இருக்கும். எண்ணங்களின் முடிவு கட்ட வேண்டும். நல்லது.

நீங்கள் ஒவ்வொரு குழந்தைகளும் சிம்மாசனதாரி ஆவதற்காக முயற்சி செய்ய வேண்டுமேயன்றி சிம்மாசனத்தின் எதிரில் இருப்பதற்காக அல்ல. இப்பொழுது நெருக்கமானவர்களாக ஆனீர்கள் என்றால் தான் சிம்மாசனதாரியாக ஆக முடியும். எவ்வளவிற்கு ஒருவர் நெருக்கத்தில்

இருப்பாரோ அவ்வளவு சமநிலையில் இருட்டார். குழந்தைகள் உங்களின் கண்களை யாராவது பார்த்தார்கள் என்றால் அவர்களுக்கு முக்தி, ஜீவன் முக்தியின் வழி தென்படட்டும். அந்த மாதிரி கண்களில் மந்திர சக்தி இருக்கட்டும். அப்படியானால் உங்களுடைய கண்கள் எவ்வளவு சேவை செய்யும். கண்களும் சேவை செய்யும் என்றால் நெற்றியும் சேவை செய்யும். ஆத்மாக்களுக்கு நெற்றி எதைக் காண்பிக்கும்? தந்தையை. உங்களின் நெற்றி மூலமாக தந்தையின் அறிமுகம் ஆக வேண்டும். அந்த மாதிரி சேவை செய்ய வேண்டும் அப்பொழுது தான் நெருக்கமான நட்சத்திரமாக ஆவீர்கள். சாகார பாபாவின் நெற்றி மற்றும் கண்கள் சேவை செய்ததைப் பார்த்திருக்கிறீர்கள். நெற்றியில் ஜோதி பிந்து இருந்தது. கண்களில் பிரகாசமான திரிமூர்த்தியின் நினைவு இருந்தது. அந்த மாதிரி சமமானவராக ஆக வேண்டும். சமமனாவராக ஆவதால் தான் நெருக்கமானவராக ஆவீர்கள். எப்பொழுது சுயம் நீங்கள் அந்த மாதிரி நிலையில் இருப்பீர்கள் என்றால் மாயா என்ன செய்யும்? மாயா அதுவாகவே அழிந்து விடும். குழந்தைகள் நீங்கள் ரெகுலர் (முறையோடு நடப்பவர்கள்) ஆக வேண்டும். ரெகுலர் என்று பாப்தாதா யாரைக் கூறுகிறார்? யார் காலையில் இருந்து இரவு வரை என்ன காரியம் செய்தாலும் அதை ஸ்ரீமத் படி செய்கிறாரோ, அவரைத் தான் ரெகுலர் என்று கூறுவது. அனைத்திலும் ரெகுலராக இருக்க வேண்டும். எண்ணத்தில், சொல்லில், செயலில், நடந்துகொள்வதில், தூங்குவதில், அனைத்திலும் ரெகுலர். ரெகுலரான பொருள் நல்லதாக இருக்கும். எவ்வளவு ஒருவர் ரெகுலராக இருப்பாரோ அவ்வளவு மற்றவர்களுக்கு சேவை சரியாகச் செய்ய முடியும். சேவை செய்யக்கூடியவர் என்றால் ஒரு எண்ணம் கூட சேவையின்றி இல்லாமல் இருப்பது. அந்த மாதிரி சேவை செய்யக்கூடியவர்கள் இன்னும் வேறு நிரூபணம் கூட கொடுக்க முடியும். சேவை என்றால் வாயினால் செய்வது மட்டும் இல்லை, ஆனால் அனைத்து கர்ம இந்திரியங்களும் சேவையில் ஈடுபட்டிருக்கட்டும். எப்படி வாய் பிஸியாக இருக்கிறது. அதே போல் நெற்றி, கண்கள் சேவையில் பிஸியாக இருக்கட்டும். அனைத்து விதமான சேவைகளையும் செய்து, சேவை செய்ததின் ரிசல்ட்டைக் கொடுக்க வேண்டும். ஒரே விதமான சேவை மூலமாக ரிசல்ட் வெளிவருவது இல்லை, பாராட்ட மட்டும் செய்வார்கள். ரிசல்ட் தேவையாக இருக்கிறது. அதற்காக அனைத்து விதமான சேவையிலும் ஈடுபட வேண்டும். எவ்வளவு சேவை

நிறைந்தவராக இருப்பாரோ அவ்வாறே பிறரையும் தனக்குச் சமமாக ஆக்குவார். பிறகு தந்தைக்குச் சமமாக ஆக்குவார். நல்லது.

**வரதானம்: அழியாத பிராப்தியின் ஆதாரத்தில் எப்பொழுதும் நிறைந்த நிலையை அனுபவம் செய்யக்கூடிய மகிழ்ச்சி நிறைந்தவர் ஆகுக!**

சங்கமயுகத்தில் நேரடியாக பரமாத்மா பிராப்தி இருக்கிறது. நிகழ்காலத்திற்கு முன்னால் எதிர்காலம் ஒன்றுமே இல்லை. எனவே உங்களுடைய பாடல் 'எதை அடைய வேண்டுமோ அதை அடைந்தாகி விட்டது.' 'இல்லை என்ற பொருள் பிராமணர்களின் பொக்கிஷத்தில் இல்லவே இல்லை' என்பது தற்காலத்தின் மகிமையாகும். இவை அழியாத பிராப்திகள் ஆகும். இந்த பிராப்திகளினால் நிறைந்தவராக இருந்தீர்கள் என்றால் நடத்தை மற்றும் முகம் மூலமாக எப்பொழுதும் மகிழ்ச்சி மற்றும் நிறைவின் விசேஷத்தன்மை தென்படும். என்ன ஆனாலும் சரி, அனைத்து பிராப்திகளையும் அடையப் பெற்றவர் தனது மகிழ்ச்சியை இழக்க முடியாது.

**சுலோகன்: பரமாத்மா அன்பின் அனுபவி ஆனீர்கள் என்றால் எந்தவொரு தடையும் (உங்களை) தடுத்து நிறுத்த முடியாது!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 29.10.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தீப மாலையின் (தீபாவளி) உண்மையான ரகசியம்!

இன்று பாப்தாதா தீப மாலையை பார்த்துக் கொண்டிருக்கின்றார். இது தீபங்களின் மாலை அல்லவா! உலகத்தினர் தீபாவளி கொண்டாடுகின்றனர், பாப்தாதா தீப மாலையை பார்த்துக் கொண்டிருக்கின்றார். எந்த தீபம் மிகவும் பிடித்தமானதாக இருக்கும்? எந்த தீபம் தொடர்ந்து மற்றும் நிலையாக எரிகிறதோ. எந்த தீபத்தின் திரி குறையாமல் இருக்கிறதோ அது தான் தொடர்ந்து எரிந்து கொண்டே இருக்கும். தன்னை இப்பபடிப்பட்ட தீபம் என்று நினைக்கிறீர்களா? இந்த தீபங்களின் நினைவுச்சின்னம் தான் மாலை (தீபாவளி) ஆகும். தன்னை மாலையின் நடுவில் ஜொலிக்கும் தீபம் என்று நினைக்கிறீர்களா? நமது நினைவார்த்தமாகத்தான் இன்று தீபாவளி கொண்டாடப்படுகிறது என்ற நினைக்கிறீர்களா? தீபாவளியன்று இரண்டு விசயங்களை விசேஷமாக கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. தீபாவளியன்று எந்த விசயங்களில் கவனம் செலுத்துவர்? (சுத்தமாக வைத்துக் கொள்வர், புது கணக்கு எழுதுவர்) ஆனால் என்ன லட்சியம் இருக்கும்? வருமானம். அந்த லட்சியத்துடன் சுத்தமும் செய்கின்றனர். அனைத்து வகையான சுத்தமும் செய்ய வேண்டும் மற்றும் வருமானத்திற்கான லட்சியமும் புத்தியில் வைத்துக் கொள்ள வேண்டும். சுத்தம் மற்றும் வருமானம் இந்த இரண்டு காரியங்களையும் நீங்கள் அனைவரும் செய்திருக்கிறீர்களா? தனக்குத் தானே திருப்தியாக இருக்கிறீர்களா? வருமானம் இருக்கிறது எனில், தூய்மையும் கண்டிப்பாக இருக்கும் அல்லவா! இந்த இரண்டு விசயங்களிலும் திருப்தியாக இருப்பது அவசியமாகும் ஆனால் யார் சதா தெய்வீக குணங்களை தனக்குள் கொண்டு வருகிறார்களோ அவர்களிடத்தில் தான் இந்த திருப்தி என்பது இருக்கும். எந்த அளவிற்கு யார் தனக்குள் இதைக் கொண்டு வருகிறார்களோ அந்த அளவிற்கு இந்த இரண்டு விசயங்களிலும் திருப்தியாக இருப்பார்கள். தெய்வீக குணங்களைக் கொண்டு வர வர அவகுணங்கள் அர்ப்பணமாகி அழிந்து

போய் விடும். பிறகு என்ன நடக்கும்? புது சன்ஸ்காரங்கள் என்ற புது ஆடையை தாரணை செய்வீர்கள். இப்போது ஆத்மாவானது புது சம்ஸ்காரங்கள் என்ற புது ஆடையை அணிந்திருக்கிறதா? அல்லது அவ்வப்போது பழைய ஆடையின் மீது அன்பு இருக்கின்ற காரணத்தினால் அதையும் அணிந்து கொள்கிறீர்களா? மறு பிறவி எடுத்த பின்பு, புது பிறப்பு, புது சன்ஸ்காரங்களை தாரணை செய்திருக்கிறீர்கள். பிறகு மீண்டும் பழைய சம்ஸ்காரம் என்ற ஆடையை ஏன் தாணை செய்து விடுகிறீர்கள்? பழைய ஆடை மிகவும் பிடித்தமானதாக இருக்கிறதா என்ன? எந்த பொருள் தந்தைக்குப் பிரியமானதாக இல்லையோ அது குழந்தைகளுக்குப் பிரியமானதாக ஏன் இருக்கிறது? இன்று வரை இருக்கக்கூடிய பலவீனம், குறைகள், பலமற்ற நிலை, மிருதுவான நிலை போன்ற அனைத்து பழைய கணக்குகளும் இன்றே முடித்து விட வேண்டும். இதுவே தீபாவளி கொண்டாடுவதாகும். அல்ப காலத்திற்காக கிடையாது. சதா காலத்திற்காக மற்றும் அனைத்து ரூபங்களிலும் முடித்து விட வேண்டும், இதுவே தீபாவளி கொண்டாடுவதாகும். தீபாவளியை முடிசூட்டும் விழா என்றும் கூறுவர். இன்று நீங்கள் அனைவரும் எந்த முடிசூட்டு விழா கொண்டாடி யிருக்கிறீர்கள்? முடிசூட்டு விழா அன்று என்ன செய்வார்கள்? ராஜ அரியணைக்கான விழாவை என்றாவது பார்த்திருக்கிறீர்களா? நினைவு வருகிறதா? எத்தனை முறை பார்த்திருப்பீர்கள்? பல முறை. இந்த அனுபவம் இந்த பிறவியில் பார்த்த விசயங்கள் தெளிவான முறையில் நினைவில் இருப்பது போன்று நாளுக்கு நாள் அனுபவம் செய்வீர்கள். ஆத்மாவில் பதிவாகியிருக்கும் எதிர்கால ராஜ்ய சன்ஸ்காரம் நேற்று பார்த்த விசயம் போன்று தோன்றும். இவ்வாறு அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள். இவ்வாறு வெளிப்படையான முறையில் அனுபவம் செய்வீர்கள். இதன் மூலம் நாம் இப்போது நமது சம்பூர்ண நிலை மற்றும் நமது ராஜ்யத்தின் நெருக்கத்தில் வந்து விட்டோம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். சத்யுக சன்ஸ்காரங்களை சிந்திப்பதால் அல்லது நினைப்பதால் வராது ஆனால் தானாகவே மற்றும் தெளிவான முறையில் வாழ்க்கையில் வந்து கொண்டே இருக்கும். இந்த உலகில் இருந்தாலும் கூட கண்களில் சத்யுக காட்சிகள் தென்படும். இது மட்டுமல்ல, எந்த சொரூபத்தை நான் எதிர்காலத்தில் தாரணை செய்ய இருக்கிறேனோ, அதுவும் கண்களில் அடிக்கடி தெளிவாகத் தென்படும். ஆம், இப்பொழுதோ இதை விடுத்து அந்த அலங்கரிக்கப்பட்ட ஆடையை தாரணை செய்ய வேண்டும் என்ற

அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள். இந்த சங்கம யுகத்திலேயே சத்யுக சொரூபத்தை அனுபவம் செய்வீர்கள். முயற்சி மற்றும் பிராப்தி இரண்டு ரூபத்தையும் ஒவ்வொருவரிடத்தில் தெளிவாக பார்ப்பிர்கள். ஆக இன்று தீபாவளியன்று தெய்வீக குணங்களைக் கொண்டு வர வேண்டும். கல்பத்திற்கு முன்பும் இவ்வாறு செய்திருப்போம் என்று வாயில் வெளிப்படுகிறது ஆனால் பின் நாளில் இந்த வார்த்தை மாறி விடும். இந்த கல்பத்திற்கான விசயமாக ஆகி விடும். 5000–ஆண்டிற்கான விசயம் நேற்றைய விசயம் போன்று தெளிவாக நினைவிற்கு வரும். விஞ்ஞான சாதனத்தின் மூலம் தூரத்திலிருக்கும் பொருள் நெருக்கத்தில் மற்றும் தெளிவாகப் தென்படுவது போன்று! இதையே தொலை நோக்கி என்று கூறுகிறோம். ஆக உங்களது மூன்றாவது கண் கல்பத்திற்கு முந்தைய விசயங்களை நெருக்கத்தில் மற்றும் தெளிவாகப் பார்க்கும் அல்லது அனுபவம் செய்யும். பழைய சன்ஸ்காரங்களின் கணக்கை மீண்டும் தவறுதலாகக் கூட பார்த்து விடக்கூடாது. பழைய சம்ஸ் காரங்கள் என்ற ஆடையை மீண்டும் மீண்டும் அணிந்து கொள்ளக் கூடாது. புதுமையை தாரணை செய்ய வேண்டும். இதுவே இன்றைய நாளின் மந்திரம். ரத்தினம் பதித்த ஆடையை விடுத்து இற்றுப் போன ஆடையின் மீது அன்பு செலுத்தாதீர்கள். புத்தியில் சதா பாப்தாதாவின் நினைவு அல்லது லட்சியம் மற்றும் வரக்கூடிய ராஜ்யத்தின் காட்சிகள், கண்கள் மற்றும் வாயில் சதா பாப்தாதாவின் பெயர் இருக்க வேண்டும். இவர்கள் தான் பாப்தாதாவின் மிகப் பிரியமான மற்றும் நெருங்கிய ரத்தினம் என்று கூறப்படுகின்றனர். அனைவரும் சிரேஷ்ட மற்றும் நெருங்கிய ரத்தினம் ஆவதற்கான பகடைகள் வெற்றி பெறச் செய்து விட்டீர்களா அல்லது எது கிடைத்தாலும் நன்று என்று நினைக்கிறீர்களா? ஒருவேளை இந்த விசயத்தில் திருப்தியடைந்து விட்டால் சம்பூர்ணம் ஆக முடியாது. ஆகையால் நான் வெற்றி மற்றும் சம்பூர்ணம் ஆகி காட்டுவேன் என்ற பகடையைப் போடுங்கள். பலவீன சப்தங்களை முடித்து விட வேண்டும் -செய்வேன், ஆகி விடும், முயற்சி செய்து கொண்டிருக்கிறேன் போன்ற சப்தங்கள் வெளிப்படக் கூடாது. செய்து காட்டுவேன், ஆகி காட்டுவேன் -இது நிச்சயபுத்தி வெற்றி ரத்தினங்களின் வார்த்தையாகும். அது பெயரளவிற்கு குழந்தைகளாக இருப்பவர்களின் வார்த்தை. ஆக வேண்டியது சுயதரிசன சக்கரதாரி ஆனால் பெயரளவிற்கு குழந்தைகளாகி விடுகின்றனர். யாராவது அந்த நிலையும் அடைய வேண்டும் அல்லவா என்று சிலர் நினைக்கின்றனர். இந்த விசயத்தில்

கருணை உள்ளமுடையவர்களாக ஆகக் கூடாது. யாராவது ஆவார்கள் ஆகையால் நான் ஆகி விடுகிறேன், இவ்வாறு ஆகக் கூடியவர்கள் பலர் இருக்கின்றனர். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 01.11.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## தந்தைக்குச் சமமாக ஆவதற்கான வழிகள்!

தைரியமுள்ள குழந்தைகளுக்குத் தந்தையின் உதவி கிடைக்கிறது என்பதின் பிரத்யக்ஷ நிரூபணத்தை இன்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். மகிமையாக பாடப்பட்டதின் சாகார ரூபத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். குழந்தைகள் ஒரு அடி முன்னுக்கு வருகிறார்கள் தந்தையும் ஆயிரம் மடங்கு அதிகமான தூரத்திலிருந்து எதிரில் வருகிறார். நீங்கள் எத்தனை மைல்கள் தூரத்தில் இருந்து வந்திருக்கிறீர்கள்? பாப்தாதா எவ்வளவு தூரத்திலிருந்து வந்திருக்கிறார்? அதிக அன்பானவர் யார்? குழந்தைகளா அல்லது தந்தையா? இதில் கூட தந்தை குழந்தைகளை முன்னுக்கு வைக்கிறார். இப்பொழுது கூட இந்தப் பழைய உலகத்தில் தந்தையை விட அதிகமாகக் கவர்ச்சிக்கக்கூடிய பொருள் எது? இது பழைய உலகம் மற்றும் அனைத்து உறவுகள், அனைத்து செல்வங்கள், அனைத்துப் பொருட்கள், அற்ப காலத்திற்கானது மற்றும் வெறும் பகட்டிற்கானவை என்று தெரிந்த பிறகும் ஏன் ஏமாற்றம் அடைகிறீர்கள்? ஏன் அவற்றில் ஒட்டிப்போய் விடுகிறீர்கள்? தன்னுடைய ரகசிய (குப்தம்) சொரூபம் மற்றும் தந்தையின் ரகசிய சொரூபத்தை பிரத்யக்ஷம் செய்யுங்கள்; அப்பொழுது தந்தையின் ரகசிய காரியத்தை பிரத்யக்ஷம் செய்ய முடியும். உங்களுடைய சக்தி சொரூபம் வெளிப்பட்டுவிடும். இப்பொழுது ரகசியமாக இருக்கிறது. ஒரு வார்த்தையை மட்டும் நினைவு வைத்துக் கொண்டீர்கள் என்றால் தன்னுடைய குப்த ரூபத்தை நடைமுறையில் கொண்டு வர முடியும். அது எந்த ஒரு வார்த்தை? அந்தர் (வித்தியாசம்) என்ற வார்த்தை மட்டும் தான். இந்த வார்த்தையில் இரண்டு இரகசியங்களும் வந்து விடுகின்றன. அந்தர் வித்தியாசத்தையும் குறிப்பிடுகிறது மற்றும் உள்ளே இருப்பதையும் குறிப்பிடுகிறது. எப்படி அந்தர்முக் மற்றும் அந்தர்யாமி (உள்நோக்குமுகம் உள்ளேஇருப்பதை தெரிந்து கொள்வது) என்று கூறுகிறீர்கள். அப்படி அந்தர் என்ற வார்த்தைக்கு இரண்டு அர்த்தம்

இருக்கிறது. அந்தர் என்ற வார்த்தை நினைவு வருவதினால் ஒன்று ஒவ்வொரு விஷயத்திலும் இது உயர்ந்ததா? அல்லது இல்லையா? என்ற வித்தியாசத்தைப் பார்ப்பீர்கள், இரண்டாவது உள்நிலையில் இருப்பதினால் அல்லது உள்சொரூபத்தில் நிலைத்திருப்பதினால் உங்களுடைய ரகசிய சொரூபம் பிரத்யக்ஷம் ஆகி விடும். ஒரு வார்த்தையை நினைவு வைத்துக் கொள்வதினால் வாழ்க்கையை மாற்ற முடியும். இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் நேரத்தின் வேகத்தின்படி உங்களுடைய கால்கள் பூமியில் இருக்கக் கூடாது. எந்த கால்கள்? எதன் மூலமாக நினைவு யாத்திரை செய்கிறீர்கள்? பரிஷ்தாக்களின் கால்கள் பூமியில் படுவதில்லை என்ற பழமொழி இருக்கிறது இல்லையா? அப்படி இந்த புத்தி, பூமி அதாவது இயற்கையின் கவர்ச்சியிலிருந்து இப்பொழுது விலகிச் சென்று விட்டது என்றால் பிறகு எந்தவொரு பொருளும் கீழே இழுத்துக் கொண்டு வர முடியாது. பிறகு இயற்கையை அடிமையாக்குபவர்களாக ஆகி விடுவீர்கள். இயற்கையின் அடிமை ஆகுபவர்களாக ஆக மாட்டீர்கள். விஞ்ஞானிகள் பூமியிலிருந்து உயரே அதன் ஈர்ப்பிலிருந்து விலகிச் செல்வதற்காக முயற்சி செய்கிறார்கள். அதே போல் அமைதியின் சக்தி மூலமாக இந்த இயற்கையின் கவர்ச்சியிலிருந்து விலகி, எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது ஆதாரமாக எடுத்துக் கொள்வது அப்படியிருக்கட்டுமேயன்றி இயற்கை எப்பொழுது விரும்புகிறதோ அப்பொழுது அடிமையாக்க வேண்டாம். எனவே அந்த மாதிரியான நிலை எவ்வளவு ஆகியிருக்கிறது? இப்பொழுது உடன் செல்வதற்காக பாப்தாதா சூட்சும வதனத்தில் தன்னுடைய காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார் ஆனால் இதுவும் எதுவரை? நம்முடைய வீட்டிற்குத் தான் செல்ல வேண்டும் இல்லையா? எனவே இப்பொழுது விரைவாக தன்னை உயர்ந்த நிலையில் நிலைத்திருக்கச் செய்வதற்கான முயற்சி செய்யுங்கள். உடன் செல்ல வேண்டும். உடன் இருக்க வேண்டும். மேலும் பின்பு உடன் இராஜ்யம் செய்ய வேண்டும் இல்லையா? உடன் இருப்பது எப்படி ஏற்படும்? சமமாக ஆவதினால். சமமாக ஆகவில்லை என்றால் உடன் இருப்பது எப்படி முடியும்? இப்பொழுது உடன் பறக்க வேண்டும், உடன் இருக்க வேண்டும். இதை நினைவில் வைத்தீர்கள் என்றால் விரைவாக தன்னைச் சமமாக்க முடியும். இல்லையென்றால் கொஞ்சம் இடைவெளி ஏற்பட்டு விடும். உடன் இருப்போம், உடன் செல்வோம், மேலும் கூடவே இராஜ்யம் செய்வோம் என்பது உங்களுடைய உறுதிமொழி தான் இல்லையா. இராஜ்யம்

செய்யும் சமயத்தில் மட்டும் தந்தை மறைந்து விடுகிறார். அதனால் உடன் எப்படி இருப்பீர்கள்? சமம் ஆவதினால். சமநிலை எப்படி வரும்? சாகார தந்தையின் சமமாக ஆவதினால். இப்பொழுது பாப்தாதா என்று கூறுகிறீர்கள் தான் இல்லையா? அவர்களில் சமநிலை எப்படி வந்தது? சமர்ப்பணத்தினால் ஒருநொடியில் சமநிலை வந்தது. அந்த மாதிரி சமர்ப்பணம் செய்வதற்கான சக்தி தேவையாக இருக்கிறது. எப்பொழுது சமர்ப்பணம் செய்து விடுவீர்களோ பிறகு தன்னுடைய மற்றும் மற்றவர்களின் அதிகாரம் முடிவடைந்து விடுகிறது. எப்படி யாருக்காவது ஏதாவது பொருள் கொடுக்கப்பட்டு விடுகிறது என்றால் அதன் மீது தன்னுடைய அதிகாரம் மற்றும் மற்றவரின் அதிகாரம் முடிவடைந்து விடுகிறது. ஒருவேளை மற்றவர்கள் ஏதாவது அதிகாரம் வைத்தாலும் கூட அதை என்னவென்று கூறுவது. இதை தான் நான் சமர்ப்பணம் செய்து விட்டேன் என்று கூறுவார். அதே போல் ஒவ்வொரு பொருளும் முழுமையான சமர்ப்பணம் செய்த பிறகு தன்னுடைய மற்றும் மற்றவர்களின் அதிகாரம் எப்படி இருக்க முடியும். இதுவரை தன்னுடைய மற்றும் மற்றவர்களின் அதிகாரம் இருக்கிறது என்றால் இதனால் அனைத்து சமர்ப்பணத்தின் குறை இருக்கிறது என்று நிரூபணம் ஆகிறது. எனவே சமநிலை வருவதில்லை. யார் யோசித்து யோசித்து சமர்ப்பணம் ஆகுகிறார்களோ அதன் விளைவாக இப்பொழுதும் முயற்சி செய்வதில் அதே யோசனை அதாவது வீணான எண்ணம் தடை ரூபம் ஆகிறது. புரிந்ததா!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 05.11.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# காலதாமதம் செய்வது ஆபத்தானது!

ஒவ்வொருவரும் தங்களின் ஒளி மற்றும் சக்தியைப் பார்த்துக் கண்டறிய முடியுமா? தன்னைத் தான் கண்டறிவதற்கான சக்தியைத் தனக்குள் அனுபவம் செய்கிறீர்களா? அல்லது அது கடைசி நிலை என நினைக்கிறீர்களா? தன்னை இது வரையிலும் புருஷார்த்தி மூர்த்தி எனப் புரிந்து கொண்டிருக்கிறீர்களா, அல்லது சாட்சாத் மற்றும் சாட்சாத்கார மூர்த்தி என்றும் புரிந்திருக்கிறீர்களா, அல்லது அனுபவம் செய்கிறீர்களா? அல்லது இது கடைசி ஸ்டேஜ் எனப் புரிந்து கொண்டிருக்கிறீர்களா? அவ்வப்போது உங்கள் பக்தர்கள் உங்கள் முன்னால் வருவார்களானால் உங்கள் தோற்றத்தின் மூலம் அவர்களுக்கு எந்த மூர்த்தியின் சாட்சாத்காரம் ஆகும்? எந்த மாதிரி சாட்சாத்காரம் ஆகும்? சாட்சாத்கார மூர்த்தி எப்போதுமே சம்பூர்ண ஸ்திதியின் சாட்சாத்காரத்தையே செய்விப் பார்கள் ஆனால் இப்போது உங்கள் முன்னால் யாராவது வருவார் களானால் அந்த மாதிரி சாட்சாத்காரம் செய்விக்க முடியுமா? உங்கள் புருஷார்த்தத்தின் தாழ்ச்சி, உயர்ச்சியின் சாட்சாத்காரம் அவர்களுக்கு ஆகிக் கொண்டே இருக்கிறது என்று இருக்கக் கூடாது. ஃபோட்டோ எடுக்கும் போது ஏதேனும் அசைவு இருக்குமானால் ஃபோட்டோ சரியாக வருமா? அதே போல் ஒவ்வொரு விநாடியும் நமது ஃபோட்டோ எடுக்கப்படுகிறது எனப் நினையுங்கள். ஃபோட்டோ எடுக்கும் போது அனைத்து விதமான கவனமும் வைக்கப்படுகின்றது. அது போல் தன் மீது எப்போதுமே கவனம் வைக்க வேண்டும். ஒவ்வொரு விநாடியும் இந்த சர்வோத்தம அல்லது புருஷோத்தம சங்கம யுகத்தின் டிராமா என்ற கேமராவில் உங்கள் அனைவரின் ஃபோட்டோ எடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. இதே சித்திரம் பிறகு சரித்திர ரூபத்தில் புகழ் பாடப்படும். இப்போதைய விதவிதமான நிலைகளின் சித்திரங்கள் விதவிதமான ரூபத்தில் பூஜிக்கப் படும். ஒவ்வொரு சமயமும் இந்த ஸ்மிருதி வையுங்கள் -அதாவது என்னுடைய சித்திரத்தை டிராமா ரூப கேமராவில் எடுத்துக் கொண்டே இருக்கிறேன். இப்போதைய ஒவ்வொரு சித்திரமும்

மகிமை மற்றும் பூஜைக்குரியதாக ஆகும். எப்படி இங்கேயும் கூட நீங்கள் ஏதேனும் டிராமா ஸ்டேஜ் மீது நடத்துகிறீர்கள் மற்றும் சாட்சாத்காரம் செய்கிறீர்கள் என்றால் எவ்வளவு கவனம் வைக்கிறீர்கள்! அதே போல் எல்லையற்ற மேடைக்கு நடுவில் எனது பாகத்தை நடித்துக் கொண்டிருக்கிறேன் எனப் புரிந்து கொள்ளுங்கள். முழு உலகத்தின் ஆத்மாக்கள் அனைவரின் பார்வையும் என் மீது உள்ளது. இதுபோல் நினைத்து வந்தால் சம்பூர்ண நிலையை விரைவாக நீங்கள் அடைய முடியும், புரிந்ததா? ஒரு சுலோகளை சதா நினைவு வையுங்கள் அதன் மூலம் சகஜமாகவே வெகு விரைவில் சம்பூர்ணம் ஆக முடியும். எந்த ஸ்லோகனை நினைவில் வைப்பீர்கள்? (போக வேண்டும் மற்றும் வர வேண்டும்) இதுவோ சரி தான் ஆனால் எப்படிச் செல்ல வேண்டும்? சம்பூர்ணமாகிச் செல்ல வேண்டுமா, அல்லது இப்படியே செல்ல வேண்டுமா? இதற்காக எதை நினைவில் வைக்க வேண்டும்? காலதாமதம் செய்வது ஆபத்தாகும் (Delay is Danger)! எந்த ஒரு விஷயத்திலாவது தாமதமானால் ராஜ்ய பாக்கியத்தின் அதிகாரத்திலும் கூட அவ்வளவு கால தாமதம் ஆகி விடும். ஆகவே இதை சதா நினைவில் வையுங்கள் இப்போதைய சமயத்தின் பிரமாணம் ஒரு விநாடி கூடத் தாமதம் செய்யலாகாது. இப்போது கம்ப்ளீட், அதாவது சம்பூர்ண கர்மாதீத் ஆவதற்காகப் புருஷார்த்தம் செய்து செய்து முக்கியமாக ஒரு புகார் ஒவ்வொரு சமயமும் அனைரிடமிருந்தும் வெளிவருகிறது. சம்பூர்ணம் ஆக வேண்டும் என விரும்புகின்றனர் ஆனால் அது அவர்களை சம்பூர்ணமாக ஆக விடுவதில்லை. அது என்ன புகார்? வீண் சங்கல்பங்களின் புகார்! இப்போது சம்பூர்ணம் ஆவதில் வீண் சங்கல்பங்களின் புயல் விக்னங்களை ஏற்படுத்துகிறது. இது பெரும்பான்மையினரின் புகார். இப்போது இதை நீக்குவதற்காக யுக்திகள் சொல்கிறார். மனதின் வீண் சங்கல்பங்களின் குறை எப்படி முடிவுக்கு வரும்? நினைவு யாத்திரையோ முக்கியமான விஷயம் ஆனால் இதற்காக விதவிதமான யுத்திகள் உள்ளன. அது என்ன? பெரிய மனிதர்கள் என்றால் அவர்களின் ஒவ்வொரு நேரத்தின் அப்பாயின்ட்மென்ட்டுக்கான டைரி தயார் செய்யப்பட்டிருக்கும் இல்லையா? ஒவ்வொரு மணி நேரமும் நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது. அது போல் நீங்களும் பெரியவரிலும் பெரியவர்கள் இல்லையா? ஆகவே தினந்தோறும் அமிர்தவேளையில் முழு நாளின் உங்களுடைய டைரியை உருவாக்குங்கள். தனது மனதை ஒவ்வொரு நேரமும்

அப்பாயின்ட்மென்ட்டில் பிஸியாக வைத்திருப்பீர்களானால் இடையில் வீண் சங்கல்பங்கள் நேரத்தை எடுத்துக் கொள்ள முடியாது. அப்பாயின்ட்மெண்ட் இல்லாமல் சுதந்திரமாக இருக்கும்போது வீண் சங்கல்பங்கள் உங்கள் நேரத்தை எடுத்துக் கொள்கின்றன. ஆக, சமயத்தை 'புக்' செய்வதற்கான வழிமுறையைக் கற்றுக் கொள்ளுங்கள். தன்னுடைய அப்பாயின்ட்மென்ட்டைத் தானே உருவாக்குங்கள் -இன்று நாள் முழுவதிலும் என்னென்ன செய்ய வேண்டும் என்று. பிறகு காலம் (உங்களை) வெற்றி பெற்று விடும். மனதை எதில் அப்பாயின்ட் செய்ய வேண்டும்? இதற்காக நான்கு விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளன: 1. சந்திப்பு 2. வர்ணனை 3. மூழ்குதல் 4. ஈடுபாடு. ஈடுபாடு வைப்பதிலும் சமயம் அதிகம் செல்கிறது இல்லையா? ஆக, மூழ்கியிருக்கும் நிலையில் குறைவாக இருக்கிறீர்கள். ஆகவே ஈடுபாடு. மூழ்கியிருத்தல், சந்திப்பு மற்றும் வர்ணனை. வர்ணனை என்பது சேவை, சந்திப்பு என்பது ஆன்மிக உரையாடல் (ரூரிஹான்) செய்வது. பாப்தாதாவுடன் சந்திக்கிறீர்கள் இல்லையா? ஆக, இந்த நான்கு விஷயங்களில் தனது நேரத்தை நிர்ணயம் செய்யுங்கள். தனது அன்றாட நடவடிக்கைகளை நிர்ணயம் செய்வதற்காக அப்பாயின்ட்மென்ட் முழு நேரத்திற்குமாக நிர்ணயம் செய்யப்பட்டு விடுமானால் இடையில் வீண் சங்கல்பங்களுக்குத் தொந்தரவு செய்வதற்கான நேரமே கிடைக்காது. எப்படி யாராவது பெரிய மனிதர்கள் இருக்கின்றனர் என்றால் பிஸியாக இருக்கும் காரணத்தால் வேறு வீண் விஷயங்களின் பக்கம் கவனம் மற்றும் சமயம் கொடுக்க முடியாது. இது போல் தன்னுடைய அன்றாட நடவடிக்கைகளில் சமயத்தை நிர்ணயம் செய்யுங்கள். இவ்வளவு நேரம் இந்த விஷயத்தில், இவ்வளவு நேரம் இந்த விஷயத்தில் என்று ஈடுபடுத்த வேண்டும். அத்தகைய அப்பாயின்ட்மென்ட்டைத் தனக்காக உறுதிப்படுத்துங்கள். அப்போது இந்தப் புகார் முடிந்து போகும். பிறகு கம்ப்ளீட் (முழுமை) ஆகி விடுவீர்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 30.11.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வொர்க்கர்ஸின் (கடமையாற்றுபவர்களின்) அதிசயமான சர்க்கஸ்!

மாஸ்டர் சர்வ சக்திவானாக ஆகி விட்டீர்களா? இந்த அதர் குமாரர்களின் குரூப்பில் அனைவரும் மாஸ்டர் சர்வ சக்திவானாக ஆகியிருக்கிறார்களா? அல்லது ஆவதற்காக வந்திருக்கிறார்களா? ஆவதற்காக வந்திருக்கிறோம் என்று யார் நினைக்கிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள், ஆகியிருக்கும் மீதம் உள்ளவர்கள் எதிரில் வாருங்கள். மாஸ்டர் சர்வ சக்திவானாக இருக்கிறீர்கள் என்றால் தேர்ச்சி பெற்றவரே தான். ஒருபொழுதும் தோல்வி அடைவதில்லை. ஒருபொழுதும் எந்த விஷயத்திலும் தோல்வி அடைய மாட்டார்கள். சரி நல்லது எப்பொழுதாவது ஃபீலிங் (உணர்ச்சி வசப்படுதல்) வருகிறதா? பொறுப்பிலி ருக்கும் டீச்சரிடமிருந்து உணர்வுகளால் பாதிக்கப்படாத நிலை உள்ளவர் என்ற சான்றிதழ் கிடைத்திருக்கிறதா? தற்காலத்தில் இந்த விஷயங்கள் ஒன்றும் சாதாரணமானவை அல்ல. தற்கால முயற்சி செய்வதற்கேற்றபடி சாதாரண விஷயம் கூட மிகப் பெரியதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. எவ்வளவு பெரிய மனிதராக இருப்பாரோ, எவ்வளவு பெரும் செல்வந்தனாக இருப்பாரோ அவ்வளவு சிறிய தீய காரியம் மற்றும் தவறுக்காக மிகச்சிறிய (அளவு) ஒரு பைசாவிற்கான, தண்டனை கூட அவரைப் பொறுத்தவரை மிகப் பெரியதாக இருக்கும். அதேபோல் தற்கால சாதாரணமானவை கூட பெரியவைகளின் பட்டியலில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மாஸ்டர் சர்வ சக்திவான் என்றால் ஃபீலிங் (உணர்வுகள்) கிலிருந்து விலகியிருப்பவர். அனைத்து விஷயங்களிலும் எவ்வளவு ஃபுல் (நிரம்பியவர்), ஞானம் நிறைந்தவர். அனைத்து வார்த்தைகளின் கடைசியில் ஃபுல் வருகிறது. அப்படி எவ்வளவு ஃபுல் ஆகிக் கொண்டே இருப்பாரோ அவ்வளவு உணர்வின் ஃப்லா (மாசு) மற்றும் ஃப்ளு (காய்ச்சல்) முடிவடைந்து விடுகிறது. மாசற்றவர் ஃபுல்

என்று கூறப்படுகிறார். அனைவரும் மாஸ்டர் சர்வ சக்திவானாக ஆகியிருக்கிறீர்களா? யார் கையை உயர்த்தவில்லையோ அவர்களும் மாஸ்டர் சர்வ சக்திவான் தான். ஏனென்றால் சர்வ சக்திவானாகிய தந்தையை தன்னுடையவராக ஆக்கி விட்டார்கள். சர்வ சக்திவான் தந்தையை அனைத்து உறவுகளில் தன்னுடையவராக ஆக்கியிருக்கிறார்கள். இது தான் மாஸ்டர் சர்வ சக்திவானின் சக்தி ஆகும். சர்வ சக்திவானை அனைத்து உறவுகளில் தன்னுடையவராக ஆக்கியிருக்கிறீர்களா? இவ்வளவு பெரிய நிரூபணம் எதிரிலேயே இருக்கிறது என்றால் பிறகு ஏன் தன்னைத் தெரிந்து கொள்வதில்லை மற்றும் ஏற்றுக் கொள்வதிலாலை? இந்த நிரூபணம் எப்பொழுதும் எதிரில் இருக்கிறது என்றால் மிகச் சுலபமாக மாயாவை வென்றவராக ஆக முடியும். புரிந்ததா? அனைத்து உறவுகளும் ஒருவருடன் இணைந்து விட்டது என்றால் வேறு விஷயம் என்ன இருக்கிறது? எப்பொழுது ஒன்றுமே இருப்பதில்லை என்றால் புத்தி எங்கே செல்லும்? ஒருவேளை புத்தி அங்கிங்கு செல்கிறது என்றால், அனைத்து உறவுகளையும் ஒருவருடன் இணைக்கவில்லை என்று நிரூபணம் ஆகிறது. இணைப்பதில் அடையாளம் அனேகத்திலிருந்து அறுபடுவது புத்தியில் எந்த இடமுமே இல்லை என்றால் புத்தி எங்கே செல்லும். மற்ற அனைத்து இடங்களும் (விஷயங்களும்) விலகிப் போய் விடுகின்றன. ஒரே ஒருவருடன் இணைக்கப்பட்டு விடுகின்றன. பிறகு புத்தி இங்கு அங்கு ஓடுகிறது என்ற புகார் முடிவடைந்து விடும். நல்லது.

வந்திருக்கும் இவர்கள் பட்டியில் வந்திருக்கிறோம் என்று நினைக்கிறார்கள். ஏற்கனவே பட்டியில் இருக்கிறார்கள் என்ற பிறகு விசேஷமாக (மெனக்கிட்டு) ஏன் வந்திருக்கிறீர்கள்? அல்லது பட்டியில் தான் இருக்கிறோம் ஆனால் பேட்டரி (ஆத்மா) எவ்வளவு சார்ஜ் ஆகியிருக்கிறது என்று சோதிப்பதற்காக வந்திருக்கிறோம் என்று கூறுங்கள். சார்ஜ் செய்வதற்காக வந்திருக்கிறீர்களா? அல்லது சோதனை செய்வதற்காக வந்திருக்கிறீர்களா? (இரண்டிற்காகவும்). இவர்கள் அனைவரும் மதிப்புள்ள சேவைக்குத் தகுதியான வொர்க்கர்ஸ் (கடமையாற்றுபவர்கள்) குரூப் ஆகும். இந்த குரூப்பின் டைட்டிலையோ (பட்டம்) கேட்டீர்கள் தான் இல்லையா? இந்த டைட்டிலைக் கேட்டு அனைவரும் குஷி அடைகிறார்கள். இருந்தாலும் இதில் ஆனாலும் என்பது இருக்கிறது. இது இலட்சியமும் தான். இந்த இலட்சியத்தில்

வாருங்காலத்திற்காக பட்டியில் சமமாகிச் செல்வோம் என்றுகூறுகிறார்கள். வொர்க்கர்ஸ் குரூப் தான் ஆனால் வொர்க்கர்ஸ்சுக்குப் பதிலாக எப்பொழுதாவது என்ன செய்து விடுகிறீர்கள் என்ற தெரியுமா? சில நேரம் மிக விசித்திரமான சர்க்கஸ் செய்கிறார்கள். எப்படி சர்க்கஸின் விதவிதமான வித்தைகளைக் காண்பிக்கிறார்களோ அதேபோல் இவர்களும் அவரவர்களின் சர்க்கஸைக் காண்பிக்கிறார்கள். அந்த சர்க்கஸில் என்னென்ன செய்கிறார்களோ அவை பார்ப்பதற்கு தகுதியானவைகளாக இருக்கும். சில நேரம் வொர்க்கர்ஸ் தன்னுடைய பயங்கரமான ரூபத்தையும் காண்பித்து விடுகிறார்கள். தன்னுடைய குறைகள் மேல் பயங்கரமான ரூபத்தை தாரணை செய்வதற்குப் பதிலாக மற்றவர்கள் மேல் பயங்கர ரூபத்தின் சர்க்கஸைக் காண்பிக்கிறார்கள். இன்னும் ஒரு சர்க்கஸ் கூட சில நேரங்களில் வீணான எண்ணங்களின் ஊஞ்சலில் ஆடுவதையும் காண்பிக்கிறார்கள். உண்மையிலேயே அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆட வேண்டும் ஆனால் வீணான எண்ணங்களின் ஊஞ்சலில் ஆடுகிறார்கள். மூன்றாவது சர்க்கஸாக எதைக் காண்பிக்கிறார்கள். நிலையை மாற்றும் சர்க்கஸைக் காண்பிக்கிறார்கள். ரூபம் மற்றும் நிலை மாற்றுவதற்கான பங்கை அதிகமானவர்கள் காண்பிக்கிறார்கள். இவ்வாறான சர்க்கஸ் நடப்பதை பாப்தாதா வதனத்தில் அமர்ந்து கொண்டு பார்க்கின்றார். முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள் (புருஷார்த்தி) மிக நல்லவர்கள் தான் ஆனால் முயற்சி செய்வது நல்லவிதமாகச் செய்த பிறகு அந்த முயற்சி செய்ததின் வருங்கால பாக்கியத்தை இங்கேயே அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பம் உடையவர்களாக இருக்கிறார்கள். இப்படி இச்சையும் இருக்கிறது. நல்லவர்களாகவும் இருக்கிறார்கள். பாக்கியத்தையும் சேமிக்க வேண்டும் ஆனால் சிலசமயம் தங்களுடைய முயற்சி செய்ததின் பலானகிய வருங்கால பாக்யித்தை இங்கேயே அனுபவித்து விட வேண்டும் என்று விரும்புவதால் தங்களுடைய சேமிப்பைக் குறைத்துக் கொள்கிறார்கள். புரிந்ததா? ஆகவே இந்த விஷயத்தை முடிவு கட்டி விட்டுச் செல்ல வேண்டும். பாக்கியத்தை (பிராலப்த்) இப்போதே அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பத்தை விட்டுவிட்டு நல்ல முயற்சி மட்டுமே செய்யுங்கள். இச்சை என்ற வார்த்தைக்குப் பதிலாக அச்சா (நல்லது) என்ற வார்த்தையை நினைவில் வையுங்கள். புரிந்த்தா? இச்சை தூய்மையைக் கெடுத்து விடுகிறது. இல்லாமல் செய்து விடுகிறது. மேலும்

தூய்மையுடன் இருப்பதற்குப் பதிலாக பலவித சிந்தனையில் மூழ்கி விடுகிறார்கள். இது தான் இப்போயை ரிசல்ட் கடமை செய்பவர்கள் (வொர்க்கர்ஸ்) என்பதின் பொருள் செய்பவர்கள், சிந்திப்பவர்கள் அல்ல. பாப்தாதாவுக்குத் தெரியும். இந்த குரூப் நம்பிக்கைக்குரிய ரத்தினங்களின் குரூப் நம்பிக்கைக்குரியவர்கள் மற்றும் தைரியசாலிகளும் தான். ஒரே ஒரு வார்த்தையை மட்டும் சேர்க்க வேண்டும். சகித்துக் கொள்ளும் சக்தி உடைவயர் ஆக வேண்டும். பிறகு நம்பிக்கைக்குக் பாத்திரமுள்ள மூர்த்திகளாக இருக்கிறீர்கள். இதில் ஒரு வார்த்தையைச் சேர்த்துக் கொள்வதன் மூலமாக வெற்றி மூர்த்திகளாக ஆகி விடுவீர்கள். சம்பூரண நிலையை நெருங்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதன் அடையாளம் வெற்றி. எவ்வளவுக்கெவ்வளவு வெற்றி அடைந்து கொண்டேயிருப்பிர்களோ, அவ்வளவு சம்பூரண நிலையை நெருங்கி விட்டீர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். இந்த குரூப் வெற்றி மூர்த்திகள் ஆவதற்கு என்ன சுலோகன் நினைவில் வைத்துக் கொள்வீர்கள்? சுலோகன் இது தான். தூய்மை தான் சங்கமயுகத்தின் செலுமையாகும். தூய்மை தான் சங்கமயுகத்தின் நல்ல அதிர்ஷ்டம். இது தான் சுலோகன், தூய்மை என்பது மிக விஸ்தாரமானது. தூய்மை என்றால் என்ன? மேலும் எந்த யுக்தி மூலமாக தாரணையில் கொண்டு வரலாம் என்பது பற்றி இந்த தலைப்பில் டீச்சர்ஸ் வகுப்பு நடத்துவார்கள். பாப்தாதா தலைப்பை மட்டும் தருகின்றார். தூய்மையின் விளக்கத்தை (விஸ்தாரம்) புரிய வைக்க வேண்டும். சம்பூரணத் தூய்மை என்று எதைக் கூறமுடியும்? தூய்மை தான் வளமை. இது தான் இந்த குரூப்பினுடைய சிரேஷ்டமான சுலோகன். பட்டி முடிவடையும் தருணத்தில் சம்பூரண நிலையின் பரீட்சை இருக்கும். கேள்வித்தாள் எப்படி இருக்கும் என்பதைப்பற்ற முன்கூட்டியே கூறிவிடுகிறோம். பிறகு இதில் வெற்றி அடைவது சுலபம் தானே! சம்பூரண நிலை என்றால் என்ன? இதில் முக்கியமாக நான்கு விஷயங்களில் பரீட்சிக்கப்படுவீர்கள். இந்த நான்கு விஷயங்கள் என்ன என்பது பற்றி கூற மட்டோம். நல்லது.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 03.12.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மாயாவை எதிர்கொள்ள ஆசைகளை தியாகம்!

இன்று பாப்தாதா ஒவ்வொருவருக்கும் அவ்யக்த ஸ்திதியின் அனுபவம் செய்வித்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரும் அவரவர் சக்திக்கேற்ப அனுபவம் செய்து கொண்டுள்ளனர். எது வரை ஒவ்வொருவரும் நிராகாரி மற்றும் அலங்காரி ஆகியுள்ளனர் என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். இரண்டுமே அவசியம். அலங்காரி ஒருபோதும் தேக அகங்காரி ஆக முடியாது. ஆகவே சதா தன்னைத் தான் பாருங்கள், நிராகாரி மற்றும் அலங்காரியாக இருக்கிறேனா? இது தான் மன்மனாபவ, மத்யாஜீபவ. சுய ஸ்திதி மாஸ்டர் சர்வசக்திவான் எனச் சொல்லப்படுகின்றது. ஆக, மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகி இருக்கிறீர்கள் இல்லையா? இந்த ஸ்திதியில் அனைத்துப் பர ஸ்திதிகளையும் கடந்து சென்று விடுகிறீர்கள். இந்த ஸ்திதியில் சுபாவம், அதாவது அனைவரிடமும் சுயத்தின் பாவம் (feeling) உணர்வு அனுபவம் ஆகும் மேலும் அநேக பழைய சுபாவங்கள் முடிந்து போகும். சுபாவம் என்றால் சுயம் ஆத்மாவின் பாவத்தைப் (உணர்வு) பாருங்கள், பிறகு இந்த பாவ-சுபாவ விஷயங்கள் முடிந்து போகும். எதிர்கொள்வதற்கான சர்வ சக்திகளை (power to face) அடைந்து விடுவீர்கள். எது வரை எந்த ஒரு சூட்சும அல்லது ஸ்தூல ஆசை உள்ளதோ, அது வரை எதிர்கொள்வதற்கான சக்தி வராது. ஆசை எதிர்கொள்ள விடாது. ஆகவே பிராமணர்களின் கடைசி சம்பூர்ண சொரூபம் ஏன் பாடப்படுகிறது, தெரியுமா? இந்த ஸ்திதியின் வர்ணனை தான் -இச்சா மாத்ரம் அவித்யா! (ஆசை என்றாலே என்னவென்று அறியாத நிலை). இப்போது தன்னைத் தான் கேளுங்கள், இச்சா மாத்ரம் அவித்யா -அந்த மாதிரி ஸ்திதி பிராமணர்களாகிய நமக்கு அமைந்திருக்கிறதா? எப்போது அத்தகைய ஸ்திதி அமையுமோ அப்போது வாழ்க! வாழ்க! என்ற வெற்றி முழக்கம் மற்றும் ஐயோ ஐயோ என்ற கூக்குரலும் கேட்கும். இது உங்கள் அனைவரின் கடைசி சொரூபம். சதா தனது சம்பூர்ண மற்றும் வருங்கால

சொரூபம் அந்த மாதிரி தெளிவாகக் காணப்பட வேண்டும் -எப்படி சரீரத்தை விடுபவர்களுக்கு புத்தியில் தெளிவாக உள்ளது இப்போதே இந்த சரீரத்தை விட்டுப் புதிய சரீரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று, அது போல் சதா புத்தியில் இருக்க வேண்டும். அதாவது இப்போது நாம் இந்த சம்பூர்ண சொரூபத்தை தாரணை செய்ய வேண்டும். எப்படி ஸ்தூல ஆடையை மிக விரைவாக அணிந்து கொள்கிறீர்கள். அது போல் இந்த சம்பூர்ண சொரூபத்தை தாரணை செய்யுங்கள். மிக அழகிய மற்றும் உயர்ந்த ஆடையை முன்னால் பார்த்த பிறகு பழைய ஆடையை விட்டு, அந்தப் புதிய ஆடையை அணிந்து கொள்வது கஷ்டமாக உள்ளதா என்ன? அதே போல் எப்போது உங்களுடைய சிரேஷ்ட சம்பூர்ண சொரூபம் மற்றும் ஸ்திதியை அறிந்திருக்கிறீர்களோ, முன்னால் உள்ளது என்றால் பிறகு அந்த சம்பூர்ண சிரேஷ்ட சொரூபத்தை தாரணை செய்வதில் ஏன் தாமதம்? எந்த ஒரு அகங்காரம் இருந்தாலும் அது அலங்காரம் அற்றவராக்கி விடும். ஆகவே நிரகங்காரி மற்றும் நிராகாரி, பிறகு அலங்காரி! இந்த ஸ்திதியில் நிலைத்திருந்து அனைத்து ஆத்மாக்களின் கல்யாண்காரி (நன்மை செய்பவர்) ஆகக்கூடியவர்கள் தாம் உலக ராஜ்ய அதிகாரி ஆகின்றனர். எப்போது கல்யாண்காரி ஆகிறீர்களோ, அப்போது அனைவருக்கும் கல்யாண்காரி ஆகிறவர்கள் தனக்குத் தானே அகல்யாண்காரி (தீமை செய்பவர்) ஆக முடியுமா? சதா தன்னை வெற்றி ரத்தினம் என உணர்ந்து ஒவ்வொரு சங்கல்பம் மற்றும் கர்மம் செய்யுங்கள். மாஸ்டர் சர்வ சக்திவான் ஒரு போதும் தோல்வியடைய முடியாது. தோல்வியடைபவர்கள், தோல்வி மட்டுமல்ல, தர்மராஜரின் அடியையும் வாங்க நேரிடும்! தோல்வியும் அடியும் கிடைத்தால் சரியா? எப்போது தோல்வியடைகிறீர்களோ, தோல்விக்கு முன்பாக அடி வாங்குவதை முன்னால் பாருங்கள். அடி வாங்குவதில் இருந்து தப்பிக்க, பூதமும் கூட ஓடி விடும். ஆக, அடி விழப்போகிறது என்பதை முன்னால் பார்த்தால் பூதமும் ஓடி விடும். இது வரைகூட தோல்வியடைவது யாருடைய வேலை? மாஸ்டர் சர்வ சக்திவானுடையதல்ல. அதனால் அதே பழைய விஷயங்கள், பழைய நடத்தை இப்போது மாஸ்டர் சர்வ சக்திவான்களுக்கு அழகல்ல. ஆகவே சம்பூர்ண சொரூபத்தை அவ்வப்போது தாரணை செய்வதற்கான உறுதிமொழியைத் தனக்குத்தானே எடுத்துக் கொள்ளுங்கள். முயற்சி மற்றும் உறுதிமொழிக்கிடையில் அதிக வேறுபாடு உள்ளது. உறுதிமொழி ஒரு விநாடியில் செய்யப்படுகின்றது. முயற்சி செய்வதில் நேரம் பிடிக்கின்றது.

ஆகவே இப்போது முயற்சிக்கான நேரமும் முடிந்தது; இப்போதோ உறுதிமொழி மற்றும் சம்பூர்ண ரூபத்தின் பிரத்யட்சதாவைச் செய்ய வேண்டும். சாட்சாத் தந்தைக்கு சமமான சாட்சாத்கார மூர்த்தி ஆக வேண்டும். இது போல் தன்னை சாட்சாத்கார மூர்த்தி என உணர்வதன் மூலம் ஒருபோதும் தோல்வியடைய மாட்டீர்கள். இப்போது உறுதிமொழியின் நேரம் தானே தவிர தோல்வியடைவதற்கான நேரம் இல்லை. அடிக்கடி தோல்வியடைந்து கொண்டே இருந்தால் அவர்களின் எதிர்காலம் கூட என்னவாகும்? மிக உயர்ந்த பதவியோ பெற முடியாது. அடிக்கடி தோல்வியடைபவர்கள் தேவதைகளுக்கு மாலை தயார் செய்பவர்களாக ஆக வேண்டியதிருக்கும். எவ்வளவு அடிக்கடி தோல்வியடைந்து கொண்டே இருக்கின்றனரோ, அவ்வளவு அடிக்கடி மாலைகளைத் தயார் செய்ய வேண்டியதிருக்கும். ரத்தினங்கள் பதித்த மாலைகள் உருவாகின்றன இல்லையா? பிறகு துவாபர யுகத்திலிருந்தும் கூட எப்போது பக்தர்களாக ஆகின்றனரோ, அப்போது அநேக மூர்த்திகளுக்கு அடிக்கடி மாலை அணிவிக்க வேண்டியதிருக்கும், ஆகவே தோல்வியடையக் கூடாது. இங்கே யாராவது தோல்வியடைபவர்கள் இருக்கிறார்களா என்ன? தோல்வியடையவில்லை என்றால் சமர்ப்பணமாகி (பலிஹார்) விடுவார்கள். இப்போது பலி ஆவதற்குத் தயாராகி கொண்டிருக்கிறீர்கள். முடிவின் சமயத்தில் இனிமேல் பலியாக வேண்டுமா அல்லது பலியாகி விட்டீர்களா? யார் பலியாகி விட்டீர்களோ? அவர்களுக்குப் பரீட்சை வைக்கப்படும். இவ்வளவு பேரிடமிருந்தும் இன்று முதல் எந்த ஒரு புகாரும் வராது. எப்போது. தோல்வியடைய மாட்டீர்களோ, அப்போது புகார் எங்கிருந்து வரும்? உங்களுடைய பரீட்சைக்கான பேப்பர் வதனத்தில் தயாராகிக் கொண்டிருக்கிறது. ஓம் சாந்தி.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 05.12.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உறுதி மொழி கொடுப்பவர்களுக்கு மாயாவின் சவால்!

சப்தத்திலிருந்து விலகிச் செல்ல மற்றும் சப்தத்தில் வரத் தெரியுமா? எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது சப்தத்தில் வரவும் மற்றும் எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது சப்தத்திலிருந்து விலகிச் செல்லவும், அந்த மாதிரி சுலபமான பயிற்சி பெற்றவர் ஆகி விட்டீர்களா? இந்தப் பாடத்தை உறுதியாக்கியிருக்கிறீர்களா? வெற்றி இரத்தினமாக ஆகி விட்டீர்களா? எதன் மீது வெற்றியடைந்தவர் ஆகியிருக்கிறீர்கள்? அனைவரின் இதயத்தின் மீது வெற்றி அடைய முடியுமா? எப்படி பாப்தாதாவின் இந்தக் காரியத்தின் குணத்தின் நினைவுச்சின்னம் இங்கு இருக்கிறது அல்லவா. அதே போல் தந்தைக்குச் சமமாக வெற்றி அடைந்தவர் ஆகி விட்டீர்களா? அனைவரின் மீதும் வெற்றி அடைந்து விட்டீர்களா? உங்கள் மீது வேறு யாராவது வெற்றி அடைய முடியுமா? அந்த மாதிரியான நிலையை பட்டியில் உருவாக்கினீர்களா? பட்டியில் இருந்து சென்ற பிறகு நடைமுறையில் சோதனை இருக்கும். கௌரவமாகத் தேர்ச்சி பெறுவது என்றால் எண்ணத்தில் கூட தோல்வி அடையாத நிலை, அந்த மாதிரி ஆகியிருக்கிறீர்களா? "ஜீ ஹா" (சரி ஐயா) என்ற கோஷத்தை நேற்று நன்றாக போட்டீர்கள் என்ற செய்தியைக் கேட்டோம். அந்த மாதிரி உறுதி செய்பவர்கள் கௌரவமாகத் தேர்ச்சி பெற வேண்டும். உறுதிமொழி செய்பவர்களையே நடைமுறையில் மிக அதிகமாக சோதிக்க வேண்டும் என்று மாயாவின் சவால் இருக்கிறது. எதிர்கொள்வதற்கான சக்தியை எப்பொழுதும் தன்னுள் தக்க வைத்துக் கொள்ளுங்கள். யாரெல்லாம் அஷ்டசக்திகள் சொன்னீர்களோ அவைகள் அனைத்தையும் தாரணை செய்தீர்களா? ஞானமூர்த்தி, குணமூர்த்தி அப்படி இரண்டுமாக ஆகி விட்டீர்களா? மாயாவை மிகவும் நல்ல முறையில் நிரந்தரமாக விடை கொடுத்து அனுப்பிவிட்டீர்களா? உங்களுடைய ஸ்தூல விடை அளிப்பிற்கு முன்பு மாயாவிற்கு விடை கொடுக்க வேண்டும். மாயாவும் மிகவும் சாதுர்யமானது

(புத்திசாலியானது). எப்படி சிலர் சரீரம் விடும்பொழுது எப்பொழுதாவது மூச்சு மறைந்து உள்ளேயே இருந்து விடுகிறது. இவர் இறந்து விட்டார் என்று அனைவரும் நினைப்பார்கள் ஆனால் மறைந்திருந்த மூச்சு மீண்டும் இயங்க ஆரம்பித்தும் விடும். அதைப்போல் மாயா தன்னுடைய மிக சூட்சுமமான ரூபத்தையும் தாரணை செய்கிறது. எனவே எப்படி டாக்டர்கள் இறந்தவரிடம் மூச்சு எங்காவது மறைந்திருக்கவில்லையே என்று நன்றாக சோதனை செய்கிறார்களோ அப்படி மூன்றாவது கண் மூலமாக தன்னை மிகவும் நன்றாகச் சோதனை செய்ய வேண்டும். பின்பு இந்த விஷயம் எனக்கு இப்பொழுது தான் தெரியும் என்ற வார்த்தை ஒருபொழுதும் வராது. எனவே பாப்தாதா முதலிலேயே எச்சரிக்கையுள்ளவராகவும் புத்திசாலியாகவும் ஆக்குகிறார். ஏனென்றால் உறுதிமொழி எடுத்து இருக்கிறீர்கள். எந்த இடத்தில் உறுதிமொழி எடுத்தீர்கள்? யாருக்கு எதிரில் எடுத்தீர்கள்? இந்த அனைத்து விஷயங்களையும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். பிராப்தியோ செய்தீர்கள் ஆனால் பிராப்தியின் கூடவே என்ன செய்ய வேண்டியதாக இருக்கிறது? பிராப்தி அடைந்தீர்கள் ஆனால் அனைத்தும் திருப்தியாகும் அளவிற்கு பிராப்தி அடைந்தோம் என்று இருக்கட்டும். எவ்வளவு திருப்தியாவீர்களோ அவ்வளவு ஆசையென்றால் என்னவென்று அறியாத நிலை உள்ளவராக ஆவீர்கள். ஆசைக்குப் பதிலாக எதிர்கொள்ளும் சக்தி வந்து விடும். பழைய உள்ளுணர்வுகளில் இருந்து துறவு ஏற்பது -இவை அனைத்தும் பரீட்சையின் கேள்விகள், அந்த கேள்வித்தாள் நடைமுறையில் நடக்கும். தன்னை முற்றிலும் தெளிவாக மற்றும் பொருட்படுத்தாதவர் ஆக்குவதற்கான சக்தியை தன்னுள் தாரணை செய்தீர்களா? சுயம் மற்றும் சமயம் இரண்டைப் பற்றி தெரிந்திருப்பது மிகவும் தெளிவாக தெரிய வந்ததா? இவை அனைத்தையும் செய்தீர்களா அல்லது ஏதாவது பாக்கி இருக்கிறதா? யார் அனைத்து விஷயங்களையும் பிராப்தி செய்து திருப்தியான ஆத்மாவாகி பரீட்சை ஹாலில் செல்வதற்கான துணிச்சலுள்ள மற்றும் சக்தி நிறைந்தவனாக ஆகி விட்டேன் என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். அனைத்து விஷயங்களிலும் பரீட்சை எழுதுவதற்கும் மற்றும் கௌரவமாகத் தேர்ச்சி பெறுவதற்குமான தைரியம் நிறைந்தவர்களாகவும், சக்தி நிறைந்தவர்களாகவும் யார் ஆகியிருக்கிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். நல்லது இப்பொழுது நடைமுறையில் சோதனைத் தாளின் முடிவைப் பார்ப்போம்.

# 1970 அவ்யக்த முரளி

யார் இந்த மாதம் கௌரவமாகத் தேர்ச்சி பெற்றோம் என்ற ரிஸல்ட் கொடுப்பார்களோ அவர்களுக்கு பாப்தாதா விசேஷமான நினைவுப் பரிசு கொடுப்பார் ஆனால் கௌரவமாகத் தேர்ச்சி பெற்றவர்களுக்குத் தான். சாதாரணமாகத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இல்லை. அவரவர்கள் தன்னுடைய ரிஸல்ட்டை எழுதி அனுப்புங்கள். இவ்வளவு பெரிய குரூப்பிலிருந்து எத்தனை பேர் கௌரவமாகத் தேர்ச்சி பெற்றார்கள் என்று பின்பு பார்க்கலாம் ஆனால் உங்களுடைய டீச்சர் மற்றும் உங்களுடன் இருப்பவர்கள் அவர்களிடமிருந்தும் எப்பொழுது சர்டிபிகேட் வாங்குவீர்களோ அப்பொழுது தான் நினைவுப் பரிசு கொடுப்போம். சுலபம் தான் இல்லையா? எப்பொழுது தைரியம் நிறைந்தவர்களோ அவர்களுக்கு இது என்ன கஷ்டமாக இருக்கப்போகிறது. நான் வெற்றி மாலையின் வெற்றி இரத்தினம் என்று எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். இந்த நினைவில் இருப்பதினால் ஒருபொழுதும் தோல்வி ஏற்படாது. நல்லது.

நிறைவு நாளன்று முழுமையாக பலியாகியே விடுவோம் என்று அனைவரும் கூறினீர்கள் இல்லையா. அப்படியானால் முழுமையாக பலியாகி விட்டீர்களா? மஹாபலியாகிச் சென்று கொண்டிருக்கிறீர்களா? அல்லது இன்னும் கூட கொஞ்சம் இறக்க வேண்டியதாக இருக்கிறதா? மஹாபலியின் எதிரில் மாயாவின் எந்த பலமும் செல்லாது. அந்த மாதிரியான நிச்சயத்தை தன்னில் தாரணை செய்து சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா. ரிசல்ட்டைப் பார்ப்போம் பின்பு பாப்தாதா அந்த மாதிரியான வெற்றி நட்சத்திரங்களுக்கு ஒரு ஆன்மீக மாலையை அணிவிப்பார். நல்லது.

# 09.12.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முயற்சியின் முக்கிய ஆதாரம் கேட்சிங் பவர்!

இன்று ஒவ்வொருவரின் இரண்டு விஷயங்களைப் பார்த்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொருவரும் எவ்வளவு ஞானம் நிறைந்தவராகவும் மேலும் எவ்வளவு சக்தி நிறைந்தவராகவும் ஆகியிருக்கிறார்கள். அதிலேயும் கூட முக்கியமாக ஒவ்வொருவரின் கேட்சிங் பவர் எவ்வளவு சக்திசாலியாக இருக்கிறது என்று பார்த்துக் கொண்டிருந்தோம். முயற்சியின் முக்கிய ஆதாரம் கேட்சிங் பவர் மேல் இருக்கிறது. எப்படி இன்றைய நாட்களில் விஞ்ஞானிகள் சப்தத்தை கேட்ச் பண்ணுவதற்கும் முயற்சி செய்கிறார்கள் ஆனால் அமைதியின் சக்தி மூலமாக நீங்கள் என்ன கேட்ச் செய்கிறீர்கள்? எப்படி அவர்கள் மிகபழமையான சப்தத்தை கேட்ச் செய்கிறார்கள். அப்படி நீங்கள் என்ன கேட்ச் செய்கிறீர்கள்? தன்னுடைய 5000- வருடங்களுக்கு முந்தைய தெய்வீக சம்ஸ்காரத்தை கேட்ச் செய்ய முடியுமா? அந்த அளவு கேட்ச்சிங் பவர் வந்திருக்கிறதா? அவர்களோ மற்றவர்களின் சப்தத்தைக் கேட்ச் செய்ய முடியும். நீங்கள் உங்களுடைய மூல சம்ஸ்காரங்களை கேட்ச்சிங் மட்டும் செய்வதில்லை, ஆனால் உங்களுடைய நடைமுறை சொரூபமாக ஆக்குகிறீர்கள். நான் இதுவாகத் தான் இருந்தேன் மேலும் மீண்டும் அப்படி ஆகிக் கொண்டிருக் கிறேன் என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். எவ்வளவிற்கு எவ்வளவு அந்த சம்ஸ்காரங்களை கேட்ச் செய்ய முடியுமோ அவ்வளவு சொரூபமாக ஆக முடியும். தன்னுடைய நினைவைச் சக்திசாலியாக ஆக்குங்கள் அதாவது உயர்ந்ததாகவும் தெளிவானதாகவும் ஆக்குங்கள். எப்படி தன்னுடைய நிகழ்கால சொரூபம், நிகழ்கால சம்ஸ்காரங்கள் தெளிவாக அனுபவம் ஆகிறது அதே போல் தன்னுடைய ஆதி சொரூபங்கள் மற்றும் சம்ஸ்காரங்களும் கூட இவ்வளவு தெளிவாக அனுபவம் ஆகட்டும். புரிந்ததா. அந்த அளவு கேட்ச்சிங் பவர் வேண்டும். எப்படி இந்த நேரத்தில் தன்னுடைய நடத்தை மற்றும் காரியம் தெளிவாகவும் சுலபமாகவும் நினைவில் இருக்கிறது. அதே போல்

தன்னுடைய மூல நடத்தை சுலபமாகவும் தெளிவாகவும் நினைவில் இருக்கட்டும். நான் தான் இதுவாக இருந்தேன் என்று எப்பொழுதும் திடமான எண்ணம் இருக்கட்டும். 5000- வருடங்களுக்கு முந்தைய விஷயம் நேற்று நடந்த விஷயம் மாதிரி மிகவும் தெளிவாக அனுபவம் ஆகட்டும். இதைத் தான் கேட்சிங் பவர் என்று கூறுவது. தன்னுடைய நினைவை இவ்வளவு உயர்ந்ததாகவும் தெளிவாகவும் ஆக்கி விட்டுச் செல்லுங்கள். பட்டியில் வந்திருக்கிறீர்கள் இல்லையா. எப்பொழுதும் தன்னுடைய ஆதி சொரூபம் மற்றும் ஆதி சம்ஸ்காரம் எதிரில் தென்படட்டும். தன்னுடைய நினைவை சக்திசாலியாக ஆக்குவதினால் உள்உணர்வு மற்றும் பார்வை தானாகவே சக்திசாலியாகி விடும். பின்பு இந்த குமாரர்களின் குரூப் என்னவாகி விடும்? அனுகுமார் அதாவது அனோகா (முற்றிலும் தனிப்பட்டது). ஒவ்வொருவரின் இரண்டு கண்கள் மூலமாக இரண்டு சொரூபத்தின் சாட்சாத்காரம் ஏற்படும். எந்த இரண்டு சொரூபம். நிராகாரி மற்றும் திவ்ய குணமுடையவர் என்று ஏற்கனவே கூறியிருந்தோம் அல்லவா. பரிஷ்தா ரூபம் மற்றும் தேவி ரூபம். ஒவ்வொருவரும் அந்த மாதிரி அனுபவம் செய்தீர்கள் மற்றும் ஒவ்வொருவர் மூலமாகவும் நடிமாடிக் கொண்டிருக்கும் லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் ஆக அனுபவம் ஆகும். அந்த மாதிரி தன்னுடைய சொரூபத்தின் சாட்சாத்காரம் ஏற்படுகிறதா? எப்பொழுது 5000--வருடங்களின் விஷயங்களை கேட்ச் பண்ண முடியும், அனுபவம் செய்ய முடியும் என்றால் இந்த கடைசி சொரூபத்தின் அனுபவம் ஆகவில்லையா? இப்பொழுது என்னென்ன குறை இருந்து விட்டனவோ அவைகளை நிரப்பி அனுபவிமூர்த்தி ஆகிச் செல்லுங்கள். ஒருபொழுதும் ஏதாவது குறை இருந்து விடாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். பட்டியில் அந்த மாதிரி மாற்றம் செய்து செல்லுங்கள், எப்படி எப்பொழுதாவது சத்யுக ஆத்மாக்கள் எப்பொழுது பிரவேசம் ஆகிறார்களோ அப்பொழுது அவர்களுக்கு இந்த முயற்சி செய்யும் வாழ்க்கையின் ஞானம் முற்றிலும் இருப்பதில்லை. அந்த மாதிரி உங்களுடைய பலஹீனங்கள் மற்றும் குறைகளின் ஞானமுமே உள்ளடங்கி போய்விடட்டும். இதற்காக விசேஷமாக இந்த குழுவிற்கு இரண்டு விஷயங்கள் நினைவு வைக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த இரண்டு விஷயங்கள் இரண்டு வார்த்தைகளிலேயே இருக்கிறது. ஒன்று கெஸ்ட் ஹவுஸ் (விருந்தினர் மாளிகை), இரண்டாவது கெட் அவுட் அதாவது வெளியேற்ற வேண்டும் மேலும் இனிமேல் உள்ளே வர விடக்கூடாது. இந்த பழைய உலகத்தை எப்பொழுதும் கெஸ்ட் ஹவுஸ்

என்று புரிந்து கொள்ளுங்கள் பின்பு ஒருபொழுதும் பலஹீனம் மற்றும் குறையின் அனுபவம் செய்ய மாட்டீர்கள். எளிதான முயற்சி தான் இல்லையா, இந்த குழுவிற்கு அதிசயம் செய்து காண்பிக்க வேண்டும். எனவே இப்பொழுது ஒரு விநாடி கூட மனம், சொல், செயலின் சேவையில் ரெஸ்ட் (ஓய்வு) எடுக்கக் கூடாது என்ற லட்சியத்தை எப்பொழுதும் வைக்க வேண்டும். அப்பொழுது தான் பெஸ்ட் (நல்லதாக) ஆவீர்கள் மேலும் பின்பு 21-ஜென்மங்கள் வரை ரெஸ்ட் எடுப்பீர்கள். புரிந்ததா. ஏனென்றால் இது கடுமையாக வேலை செய்பவர்களின் குழு. கடுமையாக வேலை செய்யும் குழு ஒருபொழுதும் ரெஸ்ட் எடுப்பதில்லை மற்றும் வேஸ்ட் செய்வதுமில்லை. எனவே இந்த கடுமையான வேலை செய்யும் குழு மற்றும் ஆன்மீக சேவாதாரி குழுவிற்கு சேவையைத் தவிர வேறெதுவும் ஏற்றதாகவே இருக்காது. இது தான் பெயர் பெறுவதற்கான வேலை. மேலும் சேவைக்காக தானே முன் வர வேண்டும். அப்பொழுது தான் பாப்தாதாவிடமிருந்து வாழ்த்துக்கள் கிடைக்கும் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உள்ளடக்குவது மற்றும் எதிர்கொள்வது என்பது தான் நமது இலக்கு என்ற சுலோகனை கடுமையாக வேலை செய்யும் மற்றும் ஆன்மீக சேவாதாரி குழுவிற்கு எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இது தான் இந்த குரூப்பின் சுலோகன் ஆகும். மாயாவை எதிர்கொள்ள வேண்டுமேயன்றி தெய்வீக குடும்பத்தை அல்ல. உள்ளடக்குவது என்றால் என்ன, தன்னுடைய பழைய சம்ஸ்காரங்களை உள்ளடக்க வேண்டும். ஞானம் நிறைந்தவரின் கூடவே சக்தி நிறைந்தவராகவும் ஆக வேண்டும். அப்பொழுது தான் சேவைக்குத் தகுதியானவராக ஆவீர்கள். நல்லது,

திலகம் இடும் நிகழ்ச்சியைப் பார்த்து இராஜ திலக நிகழ்ச்சி நினைவில் வருகிறதா? இந்த திலகம் சம்பூர்ண நிலையில் இருப்பதற்காக இடப்பட்டு இருக்கிறது. பின்பு இராஜதிலகம் கிடைக்கும். இந்த திலகம் உறுதிமொழி மற்றும் பிரத்யட்சத்தாவின் திலகம் ஆகும். அவ்வளவு சக்தி இருக்கிறதா? ஆன்மீக சேவாதாரி குரூப்பிற்காக முக்கியமாக இந்த அறிவுரையைக் கூறுகிறோம். தன்னை எவ்வளவு அதிகாரி யாக நினைக்கிறீர்களோ அந்தளவே மரியாதை கொடுப்பவர்களாகவும் ஆகுங்கள். முதலில் மரியாதை கொடுக்க வேண்டும் பின்பு அதிகாரம் எடுக்க வேண்டும். மரியாதை மற்றும் அதிகாரம் இரண்டும் சேர்ந்தே இருக்கட்டும். ஒருவேளை மரியாதையை விட்டுவிட்டு அதிகாரம் மட்டும் எடுத்தீர்கள்

என்றால் என்னவாகி விடும். என்னென்ன செய்திருந்தீர்களோ அவை அனைத்தும் கெட்டுப்போய்விடும். எனவே இரண்டு விஷயங்களையும் சேர்த்தே வைத்துக் கொள்ளுங்கள். நல்லது.

**வரதானம்: நேரத்திற்கு தகுந்தபடி ஒவ்வொரு சக்தியின் அனுபவத்தை நடைமுறை சொரூபத்தில் செய்யக்கூடிய மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகுக!**

மாஸ்டரின் அர்த்தமே எந்த சக்தியை எந்த நேரம் அழைக்கிறீர்களோ அதே நேரம் அந்த சக்தி நடைமுறை சொரூபத்தில் அனுபவம் ஆக வேண்டும். ஆணையிட்டீர்கள் மற்றும் வந்து சேர்ந்தது என்று அப்படி இருக்க வேண்டும். நீங்கள் சகித்துக் கொள்ளும் சக்திக்கு ஆணையிடுகிறீர்கள் மற்றும் எதிர்நோக்கும் சக்தி வந்தது என்று அப்படி இருக்க வேண்டாம். அவரை மாஸ்டர் என்று கூற முடியாது. எனவே எந்த நேரம் எந்த சக்தி அவசியமாக இருக்கிறதோ அந்த நேரம் அதே சக்தி காரியத்தில் வருகிறதா என்று முயற்சித்துப் பாருங்கள். ஒரு விநாடிக்கான வித்தியாசம் ஏற்பட்டால் கூட வெற்றிக்குப் பதிலாக தோல்வி ஏற்பட்டு விடும்.

**சுலோகன்: புத்தியில் எவ்வளவு ஈஸ்வரிய போதை இருக்கிறதோ, அந்தளவு காரியத்தில் பணிவு இருக்கட்டும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 31.12.1970 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அமிர்தவேளையில் இருந்து பரிவர்த்தனை சக்தியின் பிரயோகம்!

இன்று பாப்தாதா நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் இரண்டு காலங்களின் ராஜ்ய அதிகாரி அதாவது உலகிற்கு நன்மை செய்பவர் மற்றும் உலகத்தின் ராஜ்ய அதிகாரி என்று இரண்டு ரூபங்களிலும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். எவ்வளவுக்கு எவ்வளவு உலகிற்கு நன்மை செய்பவரோ அவ்வளவே உலக ராஜ்ய அதிகாரி ஆகிறார்கள். இந்த இரண்டு அதிகாரங்களையும் அடைவதற்காக முக்கியமாக சுய மாற்றம் செய்யும் சக்தி தேவையாக இருக்கிறது. அமிர்தவேளையிலிருந்து இரவு வரை பரிவர்த்தனை சக்தியை எப்படி காரியத்தில் ஈடுபடுத்துவது என்று முன்பொரு நாளில் கூட கூறியிருந்தோம்.

முதல் மாற்றம்: கண்கள் திறந்தவுடனேயே நான் உடல் அல்ல ஆத்மா ஆவேன், இது தான் நாளின் ஆரம்ப காலத்தின் முதல் எண்ண மாற்றம், இந்த முதல் எண்ணமே முழு நாளின் நடவடிக் கைகளுக்கு ஆதாரமாக இருக்கிறது. ஒருவேளை முதல் எண்ணத்தில் மாற்றம் ஏற்படவில்லை என்றால் முழு நாளும் சுய இராஜ்யம் மற்றும் உலக நன்மை காரியத்தில் வெற்றி ஏற்பட முடியாது. ஆரம்ப நேரத்தில் இருந்து பரிவர்த்தனை சக்தியை காரியத்தில் கொண்டு வாருங்கள். எப்படி படைப்பின் தொடக்கத்தில் பிரம்ம தத்துவத்திலிருந்து தேவ ஆத்மாக்கள் சதோபிரதான ஆத்மாக்கள் உலக நாடகத்தில் வருவார்களோ அதே போல் ஒவ்வொரு நாளும் அமிர்தவேளை ஆரம்ப காலமாகும். எனவே இந்த ஆரம்ப கால நேரத்திலும் எழுந்தவுடன் முதல் எண்ணத்தில் நினைவில் தந்தையுடன் சந்திப்பை ஏற்படுத்துவதற்காக பிராமண ஆத்மாக்கள் வருகிறார்கள். இந்த சக்திசாலியான எண்ணம், உயர்ந்த எண்ணம், உயர்ந்த வார்த்தை, உயர்ந்த செயலுக்கான ஆதாரமாகி விடும். முதல் மாற்றம் -நான் யார்! அப்படி இந்த அஸ்திவாரம் பரிவர்த்தனை செய்யும்

சக்தியின் ஆதாரம் ஆகும். இதற்குப் பிறகு இரண்டாவது மாற்றம் -நான் யாருடையவன்! அனைத்து உறவுகளும் யாருடன் இருக்கிறது. முதலில் உடலின் மாற்றம் பின்பு உடலின் உறவுகளின் மாற்றம், பின்பு சம்பந்தத்தின் ஆதாரத்தில் பிராப்திகளில் மாற்றம் -இந்த மாற்றத்தைத் தான் எளிதான நினைவு என்று கூறப்படுகிறது. அப்படியெனில் ஆரம்பத்திலிருந்து மாற்றம் செய்யும் சக்தியின் ஆதாரத்தில் அதிகாரி ஆக முடியும்.

அமிர்தவேளைக்குப் பிறகு தன்னுடைய உடல் சம்மந்தப்பட்ட காரியங்கள் செய்து கொண்டே நிரந்தர சகஜயோகி ஆவதற்காக எந்த மாற்றத்தின் அவசியம் இருக்கிறது? அதற்காக எப்பொழுதும் நான் மிக உயர்ந்த மூர்த்தியாவேன் மேலும் இது எனது கோவில், சைத்தன்ய மூர்த்தியின் இந்த உடல் சைத்தன்ய கோவில். கோவிலை அலங்காரம் செய்து கொண்டிருக்கிறேன். இந்த கோவிலின் உள்ளே சுயம் பாப்தாதாவின் பிரியமான மூர்த்தி அமர்ந்திருக்கிறது. எந்த மூர்த்தியின் குணங்களின் மாலையை சுயம் பாப்தாதா நினைவு செய்கிறார், எந்த மூர்த்தியின் மகிமையை சுயம் தந்தை பாடுகிறார். அந்த மாதிரி விசேஷமான மூர்த்தியின் சைத்தன்ய விசேஷமான கோவிலாகும்' என்ற எண்ணத்தை வையுங்கள். எவ்வளவு மூர்த்தி மதிப்புள்ளதாக இருக்குமோ, மூர்த்தியின் ஆதாரத்தில் கோவிலின் மதிப்பும் இருக்கிறது. அப்படியானால் மாற்றம் என்ன செய்ய வேண்டும்? என்னுடைய உடல் அல்ல ஆனால் பாப்தாதாவின் மிகவும் மதிப்புள்ள மூர்த்தியின் கோவில் இதுவாகும். சுயம் தானே மூர்த்தி, சுயம் தானே கோவிலின் டிரஸ்டி ஆகி கோவிலை அலங்கரித்துக் கொண்டே இருங்கள். இந்த மாற்றம் செய்யப்பட்ட எண்ணத்தின் ஆதாரத்தில் என்னுடையது அதாவது தேகப்பற்றுதலில் மாற்றம் ஏற்பட்டுவிடும். இதற்குப் பிறகு தன்னுடைய இறை மாணவ ரூபம் எப்பொழுதும் நினைவில் இருக்கட்டும். இதில் முக்கியமாக மாற்றப்பட்ட எண்ணம் எது தேவையாக இருக்கிறது, அதன் மூலம் ஒரு நொடியில் படிப்பின் ஒவ்வொரு விலைமதிக்க முடியாத வார்த்தைகளின் தாரணை மூலமாக ஒவ்வொரு நொடியும் நிகழ்கால மற்றும் எதிர்காலத்தின் உயர்ந்த பிராப்தி ஆகி விடட்டும். இதில் எப்பொழுதும் நான் சாதாரண மாணவன் இல்லை, சாதாரண படிப்பு இல்லை ஆனால் தந்தை தினந்தோறும் தூர தேசத்திலிருந்து எங்களுக்கு நேரடியாக படிப்பிப்பதற்காக வருகிறார். பகவானின் வாக்கியங்கள் எங்களுடைய

படிப்பு ஸ்ரீ ஸ்ரீ யின் (உயர்ந்ததிலும் உயர்ந்தவரின்) ஸ்ரீமத் எங்களுடைய படிப்பாகும், இந்த படிப்பின் ஒவ்வொரு வார்த்தைகளும் பலகோடி மடங்கு வருமானத்தை சேமிக்கக் கூடியது. ஒருவேளை ஒரு வார்த்தையைக் கூட தாரணை செய்யவில்லை என்றால் வார்த்தைகளை இழக்கவில்லை ஆனால் பலகோடி மடங்கு வருமானம் அனேக ஜென்மங்களின் உயர்ந்த பிராப்தி மற்றும் உயர்ந்த பதவியின் பிராப்தியைக் குறைத்துக் கொண்டீர்கள். அந்த மாதிரி மாற்றப்பட்ட எண்ணம் பகவான் சொல்லிக் கொண்டிருக்கிறார்: நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். எனக்காக தந்தை ஆசிரியராகி வந்திருக்கிறார். நான் விசேஷமான செல்ல மாணவனாவேன் எனவே எனக்காக வந்திருக்கிறார். எங்கிருந்து வந்திருக்கிறார், யார் வந்திருக்கிறார். மேலும் என்ன படிப்பித்துக் கொண்டிருக்கிறார்? இந்த மாறிய உயர்ந்த எண்ணம் தினந்தோறும் வகுப்பின் நேரத்தில் தாரணை செய்து படிப்பை படியுங்கள். வியக்தத்தில் அவ்யக்த தந்தை மற்றும் நிராகார தந்தையைப் பாருங்கள். அப்படி என்ன மாற்றம் செய்ய வேண்டும் என்று புரிந்ததா? இன்னும் போங்கள் படிப்பும் படித்தாகி விட்டது இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? இப்பொழுது சேவையின் பங்கு வந்து விட்டது. சேவையில் எந்த விதமான சேவையானாலும் குடும்பத்தின், தொழிலின், ஈஸ்வரிய சேவையின், குடும்பத்தின் லௌகீக உறவானாலும், கர்ம பந்தனத்தின் ஆதாரத்தில் உறவு இருந்தாலும் ஆனால் குடும்பத்தில் சேவை செய்து கொண்டே மாற்றப்பட்ட எண்ணம் -உயிரோடு இருந்தே இறந்த ஜென்மம் கிடைத்திருக் கிறது என்பதை வையுங்கள். அதாவது லௌகீக கர்ம பந்தனம் முடிந்து விட்டது. கர்ம பந்தனம் என்று நினைத்து நடக்காதீர்கள். கர்ம பந்தனம், கர்ம பந்தனம் என்று நினைப்பது மற்றும் கூறுவதினாலேயே பந்தனத்தில் வந்து விடுகிறீர்கள் ஆனால் இந்த லௌகீக கர்ம பந்தனத்தின் சம்மந்தம் இப்பொழுது உயிரோடு இருந்தே இறந்து எடுத்த ஜென்மத்தின் காரணமாக ஸ்ரீமத்தின் ஆதாரத்தில் சேவையின் சம்பந்தத்திற்கான ஆதாரம் ஆகும். கர்ம பந்தனம் இல்லை, சேவையின் சம்பந்தம். சேவையின் சம்பந்தத்தில் விதவிதமான ஆத்மாக்களைப் புரிந்து சேவையின் சம்பந்தம் என்று உணர்ந்து நடந்து கொண்டீர்கள் என்றால் பந்தனத்தில் மனமுடைந்து போக மாட்டீர்கள் ஆனால் மிக அதிக பாவ ஆத்மா, மிக மோசமான அபகாரி ஆத்மா, கொக்கு மாதிரி இருக்கும் ஆத்மாக்களின் மீது மேலும் வெறுப்பு வேண்டாம். இவர்கள் தேவையில்லை என்பதும் வேண்டாம் ஆனால் உலக நன்மை

செய்பவரின் நிலையில் நிலைத்திருந்து இரக்க மனமுடையவராகி, கருணை உடையவராகி சேவைக்கான சம்பந்தம் என்று புரிந்து சேவை செய்தீர்கள் மற்றும் முற்றிலும் நம்பிக்கை இழந்தவருக்கும் சேவை செய்தீர்கள் என்றால் அந்தளவே பரிசுக்குரியவராக ஆகி விடுவீர்கள். புகழ்பெற்ற உலக நன்மை செய்பவராக பாடப்படுவீர்கள். பீஸ்மேக்கர் (அமைதியை உருவாக்குபவர்) பரிசு வாங்குவீர்கள். அப்படி குடும்பத்தில் கர்ம பந்தனத்திற்கு பதிலாக சேவையின் சம்பந்தம் இருக்கிறது -இந்த மாற்றப்பட்ட எண்ணத்தை வையுங்கள் ஆனால் சேவை செய்து கொண்டே அட்டாச்மென்டில் (பற்றுதலில்) வந்து விடாதீர்கள். சில நேரம் டாக்டர்கள் கூட நோயாளிகளின் அட்டாச்மென்டில் வந்து விடுகிறார்கள். சேவையின் சம்பந்தம் என்றால் தியாகம் மற்றும் தபஸ்வியின் ரூபம். உண்மையான சேவையின் இலட்சணம் இந்த தியாகம் மற்றும் தபஸ்யா தான். அதேபோல் தொழிலிலும் கூட சொன்னபடி உடல் நிர்வாகத்திற்காக மட்டும் செய்கிறேன் ஆனால் மூல ஆதாரம் ஆத்மாவின் நிர்வாகம், உடல் நிர்வாகத்தின் பின்னால் ஆத்ம நிர்வாகத்தை மறந்து விடக்கூடாது. தொழில் செய்து கொண்டே உடல் நிர்வாகம் மற்றும் ஆத்ம நிர்வாகம் இரண்டின் சமநிலை இருக்கட்டும். இல்லையென்றால் தொழில் மாய வலை ஆகி விடும். எவ்வளவுக்கு எவ்வளவு அதிகரிப்பீர்களோ அவ்வளவிற்கு அதில் மாட்டிக் கொண்டே இருப்பீர்கள் என்ற மாதிரி வலையாகி விடும். செல்வத்தை பெருக்கிக் கொண்டே நினைவு செய்வதற்கான விதியை மறந்து விடக்கூடாது. நினைவின் விதி மற்றும் செல்வத்தின் பெருக்கம் இரண்டும் சேர்ந்தே இருக்க வேண்டும். செல்வத்தின் பெருக்கத்தின் பின்னால் விதியை விட்டு விடக்கூடாது. இதைத் தான் லௌகீக ஸ்தூல காரியத்தையும் கர்ம யோகியின் நிலையில் மாற்றம் செய்யுங்கள் என்று கூறுவது. காரியம் செய்பவராக மட்டும் இல்லாமல் கர்ம யோகியாக இருங்கள். கர்மம் (காரியம்) என்றால் தொழில், யோகா என்றால் உயர்ந்த பலனுக்காக. உயர்ந்த பலனுக்காக என்றால் பரமபிதாவின் சேவைக்காக செய்து கொண்டிருக்கிறேன். அப்படி தொழில் மற்றும் உயர்ந்த பலனுக்காக இரண்டும் சேர்ந்தே இருக்கட்டும். இதைத் தான் ஸ்ரீமத்படி நடந்து கொள்ளும் கர்மயோகி என்று சொல்வது. தொழில் செய்யும் நேரத்தில் என்ன மாற்றம் செய்ய வேண்டும். நான் தொழில் செய்பவன் மட்டும் அல்ல ஆனால் தொழில் செய்பவன் மேலும் பரமாத்விற்காக செய்பவன் அதாவது என்ன செய்து கொண்டிருக்கிறேனோ அது ஈஸ்வரிய சேவைக்காகச் செய்து

கொண்டிருக்கிறேன். அப்படி தொழில் செய்பவன் மற்றும் உயர்ந்த பலனுக்காக செய்பவன் என்று சேர்ந்தே இருக்கட்டும். இந்த மாற்றம் செய்யப்பட்ட எண்ணம் எப்பொழுதும் நினைவில் இருக்கிறது என்றால் மனம் மற்றும் உடல் இரட்டை வருமானம் செய்து கொண்டே இருக்கும். ஸ்தூலமான செல்வமும் வந்து கொண்டே இருக்கும். மேலும் மனம் மூலமாக அழியாத செல்வமும் சேமிப்பாகிக் கொண்டே இருக்கும். ஒரே உடல் மூலமாக ஒரே நேரத்தில் மனம் மற்றும் செல்வத்தின் இரட்டை வருமானம் ஆகிக் கொண்டே இருக்கும். எனவே நான் இரட்டை வருமானம் செய்பவன் என்பது எப்பொழுதும் நினைவிலிருக்கட்டும். இந்த ஈஸ்வரிய சேவையில் எப்பொழுதும் கருவியாக மட்டும் இருக்கிறேன் என்ற மந்திரம் மற்றும் செய்விப்பவரின் நினைவின் எண்ணம் எப்பொழுதும் நினைவிலிருக்கட்டும். செய்விப்பவரை மறக்க வேண்டாம். அப்பொழுது சேவையில் எப்பொழுதும் படைத்தல் காரியமே செய்து கொண்டிருப்பீர்கள். நல்லது.

இன்னும் மேலே செல்லுங்கள். மேலும் அனேக விதமான நபர்கள் மற்றும் பொருட்கள் மற்றும் சாதனங்களின் நெருக்கத்தில் வருகிறீர்கள். இதில் கூட எப்பொழுதும் ஒருவரின் மேல் தனிப்பட்ட அக்கரை வைப்பதற்குப் பதிலாக ஆத்மீக உணர்வை கடைபிடியுங்கள். பொருட்கள் மற்றும் சாதனங்கள் மேல் ஆசையற்ற உணர்வைக் கடைபிடித்தீர்கள் என்றால் பொருட்கள் மற்றும் சாதனங்கள் ஆசையற்றவரின் முன்பு வேலைக்காரர்களின் ரூபத்தில் இருக்கும் மற்றும் ஆசையுள்ள உணர்வு உள்ளவரின் எதிரில் காந்தம் போல் இழுக்கக் கூடியதாக இருக்கும். அவர், அதை விட விரும்பினாலும் விட முடியாது. எனவே நபர் மற்றும் சாதனத்தில் ஆத்ம உணர்வு மற்றும் ஆசையற்ற உணர்வில் மாற்றம் செய்யுங்கள்.

இன்னும் மேலே செல்லுங்கள் எந்தவிதமான பழைய உலகத்தின் கவர்ச்சிகரமான காட்சி, அற்பகால சுகம் கொடுக்கும் சாதனங்களை உபயோகிக்கிறீர்கள் மற்றும் பார்க்கிறீர்கள் என்றால் அந்த சாதனங்கள் மற்றும் காட்சியைப் பார்த்து சில சில சந்தர்ப்பங்களில் சாதனை (முறையான பயிற்சி) மறந்து சாதனத்தில் வந்து விடுகிறீர்கள். சாதனங்களின் வசமாகி விடுகிறீர்கள். ஒருவேளை உங்களுடைய சாதனை சாதனங்களின் ஆதாரத்தில் இருக்கிறது என்றால் மணல்

## 1970 அவ்யக்த முரளி

அஸ்திவாரத்தின் மேல் கட்டிடம் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். அதற்கு (கட்டிடத்திற்கு) என்ன நிலைமை ஆகும்? அடிக்கடி இங்கும் அங்கும் ஆடும். இதோ இப்பொழுதே விழுந்து விடும் என்ற நிலை இருக்கும். எனவே சாதனம் அழியக்கூடியது மற்றும் சாதனை அழியாதது என்ற மாற்றத்தை செய்யுங்கள். அழியும் சாதனத்தின் ஆதாரத்தில் அழியாத சாதனை இருக்க முடியாது. சாதனம் ஒரு தேவைக்காகத் தான் இருக்கிறது, சாதனை படைப்பிற்கான ஆதாரம் ஆகும். அப்படி சாதனத்திற்கு மகத்துவம் கொடுக்காதீர்கள், சாதனைக்கு மகத்துவம் கொடுங்கள். எனவே நான் சித்தி சொரூபமானவனேயன்றி சாதன சொரூபமானவன் அல்ல என்று எப்பொழுதும் புரிந்து கொள்ளுங்கள். சாதனை சித்தியை பிராப்தி செய்விக்கும். சாதனங்களின் கவர்ச்சியில் சித்தி சொரூபத்தை மறந்து விடாதீர்கள். ஒவ்வொரு லௌகீகப் பொருட்களை பார்த்து, லௌகீக விஷயங்களைக் கேட்டு, லௌகீகக் காட்சிகளைப் பார்த்து லௌகீகத்தை அலௌகீகமாக மாற்றம் செய்யுங்கள். அதாவது ஞான சொரூபமாகி ஒவ்வொரு விஷயத்திலும் ஞானம் எடுங்கள். விஷயத்தில் செல்லாதீர்கள், ஞானத்தில் செல்லுங்கள். புரிந்ததா, என்ன மாற்றம் செய்ய வேண்டும் என்று. நல்லது.

இன்னும் மேலே செல்லுங்கள் வேறென்ன இருக்கிறது. இப்பொழுது தூங்க வேண்டியது மிச்சமிருக்கிறது. தூங்குவது என்றால் பொன்னான உலகில் தூங்குவது தூக்கத்தையும் கூட மாற்றம் செய்யுங்கள். படுக்கையில் தூங்காதீர்கள் ஆனால் எங்கே தூங்குவீர்கள். தந்தையின் நினைவு என்ற மடியில் தூங்குங்கள். கனவில் பரிஷ்தாக்களின் உலகில் சுற்றி வாருங்கள் அப்படி கனவையும் மாற்றம் செய்யுங்கள், தூக்கத்தையும் மாற்றம் செய்யுங்கள். எப்படி பரிவர்த்தனை சக்தியை உபயோகிப்பது என்று புரிந்ததா.

இந்த புது வருடத்தின் பரிசு பரிவர்த்தனை சக்தியின் பரிசாகும். சுயமாற்றம் மற்றும் உலக மாற்றம் இந்த பரிசின் லிஃப்ட் மூலமாக உலக மாற்றத்தின் நேரத்தை அருகில் கொண்டு வாருங்கள். புது வருடத்தின் வாழ்த்துக்களையோ அனைவரும் கொடுக்கிறார்கள் ஆனால் பாப்தாதா புதுவருடத்தில் எப்பொழுதும் தீவிர முயற்சியாளர் ஆவதற்கான புதுமைக்காக முன்கூட்டியே பாராட்டுக்கள் தெரிவிக்கிறார். புது வருடம்,

புதிய சம்ஸ்காரம், புதிய சுபாவம், புதிய ஊக்கம் உற்சாகம், உலகை புதியதாக்குவதற்கான உயர்ந்த எண்ணம், அனைவருக்கும் முக்தி ஜீவன்முக்தியின் வரதானம் கொடுப்பதற்கான எப்பொழுதும் உயர்ந்த எண்ணம் அப்படி புதுமைக்கான வாழ்த்துக்கள், பாராட்டுக்கள் உரித்தாகுக. பழைய சம்ஸ்காரங்கள், பழைய நடத்தை, பழையவைக்கு விடை கொடுத்ததற்கான பாராட்டுக்கள் உரித்தாகுக. நல்லது.

அந்த மாதிரி ஒவ்வொரு காரியத்திலும் மாற்றும் சக்தியின் மூலமாக சுயமாற்றம் மற்றும் உலகமாற்றம் செய்யக்கூடிய ஒவ்வொரு விநாடி ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு செயல் புதியது அதாவது பொன்னாகச் செய்யக்கூடிய உயர்ந்த அதாவது சதோபிரதானம் ஆக்கக்கூடிய புது வருடத்தில் தன்னிலும் மற்றும் உலகத்திலும் புதிய அதிசயம் செய்து காண்பிக்கக்கூடிய எதை இது வரை தனக்காகவும் மற்றும் உலகத்திற்காகவும் அசம்பவம் என்று நினைத்துக் கொண்டிருந்தார்களோ அதை சுலபமாக சம்பவம் ஆக்கக்கூடிய, அவ்வாறு எப்பொழுதும் வெற்றி மூர்த்தி உயர்ந்த சித்தி சொரூப ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் மற்றும் நமஸ்காரமும்.

**வரதானம்: பணிவு என்ற குணத்தை தாரணை செய்து அனைவருக்கும் சுகம் கொடுக்கக்கூடிய சுகதேவன், சுகசொரூபமானவர் ஆகுக!**

மகான் ஆத்மாக்களாகிய உங்களுடைய அடையாளம் பணிவு ஆகும். எவ்வளவு பணிவானவராக ஆவீர்களோ அவ்வளவு அனைவர் மூலமாக மரியாதை கிடைக்கும். யார் பணிவானவரோ அவர் அனைவருக்கும் சுகம் கொடுப்பார். அவர் எங்கு சென்றாலும், என்ன செய்தாலும் சுகம் கொடுப்பதாக இருக்கும். யார் தொடர்பு, சம்பந்தத்தில் வந்தாலும் அவர் சுகத்தை அனுபவம் செய்வார். எனவே பிராமண ஆத்மாக்கள் உங்களுடைய மகிமையாக சுகக்கடலின் குழந்தைகள் சுகசொரூபமானவர்கள், சுகதேவர்கள் என்று பாடப்பட்டிருக்கிறது. எனவே அனைவருக்கும் சுகம் கொடுத்துக் கொண்டே மற்றும் சுகத்தை எடுத்துக் கொண்டே செல்லுங்கள். யாராவது உங்களுக்கு துக்கம் கொடுத்தார்கள் என்றால் எடுக்கக்கூடாது.

**சுலோகன்: யார் ஆத்ம அபிமானியாக இருக்கிறாரோ அவர் தான் அனைவரையும் விட பெரிய ஞானி ஆவார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம் - 40

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂